கணபதிதுணை

மறைஞானசம்பந்தநாயனார்

அருளிச்செய்த

சிவதருமோத்தரம்

மூலமுமுரையும்

இவை

திருநெல்வேலி

சாலிவாடீசுரஓதுவாமூர்த்திகளால்

பலபுத்தகங்களைக்கொண்டுபரிசோதித்து

திருநெல்வேலி

அம்பலவாணன்கவிராஜரவர்கள்

கு சிவராமமுதலியாரவர்கள்

புதூர் வள்ளிநாயகம்பிள்ளையவர்கள்

இவர்களது

முத்தமிழாகர

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டன

பிரபவஹூ மார்கழிமீ

கஅசுஎ ம் ஹூ டிசம்பர் மீ

2-5

உ

சிவமயம்

திருநெல்வேலி

சாலிவாடீசுரவோதுவாமூர்த்திகளால்

இயற்றிய

நிலைமண்டிலவாசிரியம்.

திருவளர்கமலத் துருவளர்பொகுட்டினில்
வீற்றிருந் துயிர்களைத்தோற்றல்செய்வேதனுஞ்
சக்கரம்விரும்பித்தாணாசாத்துமெட்
டக்கரத்தமைந்தவச்சுதமூர்த்தியும்
வேண்டியபொருளைவிரும்பிக்கொடுக்குஞ்
சேண்டிகழ்கற்பகச்செழுநிழற்கோவு
முப்பான்மூன்றுகோடிமுதல்வருந்
துப்பார்முனிவருமொப்பில்சித்தரு
மிருக்குமுதலாவிருக்குநான்மறைகளுங்
காமிகமுதலாத்தோமிலாகமமு
மந்திரமுதலாத்தந்தவாறங்கமுஞ்
சைவமாதிமெய்வருபுராணமும்
பன்னுளருச்சனைபதிதொறும்பயின்று
நன்னுமத்தைநாவாலோதியு
மிந்நாள்காறுமியற்கையிஃதென்
றுள்ளந்தாலுவாலுள்ளியோதற்
கெள்ளளவேனுமியையாதென்றுங்
குணமுங்குறியுங்குறிக்கக்குறிபடா
வணமடியிடைமுடிமருவுதலின்றி
யொப்புமுயர்வுமொருவியொளிருஞ்
செப்பருஞ்சோதிச்சின்மயவடிவாய்ப்
புராதனபூரணபுண்ணியபுனித

நிராமயமாகியநிட்களசிவமே
விண்ணுலகத்துமவிரிநீர்சூழ்ந்த
மண்ணுலகத்துமற்றெவ்வுலகத்து
மன்னியமெய்ம்மையடியவர்தமக்கு
மென்னிலடங்காவிச்சைகாரணத்தாற்
கன்னியகாமக்குரோதலோப
மோகமதமாச்சரியமுழ்கி
யூகங்குறைந்துநல்லொழுக்கந்தவிர்ந்து
மையுண்கண்ணியர்வலையிற்பட்டு
நைவுண்டுகிடக்குநாயினுஞ்சிறிய
வென்போலியர்க்குமின்னருள்புரிந்து
பொன்போகமுதலாப்பொருந்துபயன்கள்
வேண்டுவார்வேண்டுவதாண்டாண்டுதவி
யிருவினையகற்றியிணையிலாவின்ப
மருவியபேரானந்தவாழ்வினை
யருளுதற்காகத்திருவுளங்கொண்டு
சகளமுநிட்களசகளமுமாகிப்
பாண்டிநாடேபழம்பதியென்னுங்
காண்டற்குரியகன்னிநாட்டிற்
புத்தியுஞ்சித்தியுநித்தியமுதவிக்
கருணைபெருகியபொருநைநதியுந்
திங்கண்மும்மாரிபெய்மங்குன்முழவதிரக்
குயிற்குலம்பாடமயிற்குலமாடச்
சாலிக்கதிர்கள்சாமரையிரட்டப்
பாலிற்றிகழ்வாளைபரந்தொலிதிரட்டக்
கொன்றைபொன்சொரியப்புன்குபொரிதூவ
மியுர்பாசடைமிளிர்குடையெடுப்பச்
சேயிதழ்த்தாமரைச்செழுந்தவிசிருந்து
வளமையன்னமிளமைப்பேடையை

மணம்புரிந்தின்புடனிணங்குவாவியு
நந்தனவனமுஞ்செந்தளிர்ச்சோலையுஞ்
சென்னற்பரப்புங்கன்னற்காடும்
வரம்பைக்கடந்தவரம்பைவனமு
மற்றும்பலபலவளங்களும்பல்கிக்
கற்றுச்சிவாகமங்கருத்தமைந்தவரும்
பொய்தீர்மறையின்மெய்தேர்விபுதரும்
பண்ணுடன்றமிழ்மறைபயில்சன்மார்க்கரும்
மடத்துறைதீர்ந்தவெண்மடத்துறைகுரவரும்
வையாகரணருநையாயிகரு
மறத்தாறீட்டுஞ்சிறப்புறுநிதியை
மாரியும்வெள்கவளையாதுகொடுக்குஞ்
சீரியகுணத்துப்பாரியொப்பாருந்
தருமமுதலாக்கருதுபொருள்க
ளெளிதினெய்துதற்குளதிஃதேயென
மருவியெந்நாளும்வாழ்ந்தினிதிருக்குந்
திருநெல்வேலியெனுஞ்சிவபுரியிற்
பப்புறுமறைகள்செய்பழுதில்பூசைகொண்
டெப்பிரளயத்துந்தப்புதலின்றி
வேணுவாகிப்பேணுமினென்று
மணவூராளுநங்குணநலமுடைய
வழுவறுதொல்சீர்முழுதுங்கண்ட
ராமவழுதிதன்காமுறுபசுக்களின்
பாலைக்கறந்துகோபாலன்பணைமுளை
யிடத்துநடக்கக்குடத்தைக்கவிழ்த்துத்
திருமுடிக்காட்டியவ்வரசனுக்கருளியுந்
தாயீன்றறியாத்தனிமுதலாகியும்
வேயீன்றொளிருவிமலமுத்தாகித்
திருவுருத்தோன்றப்பெருவிருப்புற்றுப்
பூசைகொண்டருளத்தேசார்திருவுருப்

போதாதென்றுளத்தாதரவுடனப்
பாண்டியனன்றுவேண்டவளர்ந்தும்
வேதசன்மாவாமாதிசைவ
னில்லத்தேற்றநெல்லைக்கொண்டு
கோயிலினழகார்வாயிலுளுலர்த்திச்
சிந்துபூந்துறைக்கந்தநீர்கொணர்வா
னேகுற்றுழிச்சூன்மேகம்பரந்து
சோனைமாமழைசொரியக்கண்டு
நானினியென்செய்கோநயமுறுபூசைக்
கென்றுவிரைந்துசென்றுபார்க்கவச்
சாலிக்குவேலிகோலுநீர்கண்டு
நெல்லுக்குவேலிசெய்கின்மலனேயெனச்
சொல்லித்துதிக்கநல்லருள்கொடுத்தும்
பிரமாண்டத்துக்கொருமாதாவாங்
காந்திமதித்தாய்தேர்ந்துசிவாகம
முப்பத்திரண்டறமிப்பதியியற்றிக்
கம்பைமாநதியினைம்புலனடக்கிப்
புரிதவங்கண்டுதெரியாதுவந்து
வாலியநிறத்துமால்விடைமீது
காட்சிகொடுத்துக்கலந்துமணந்தும்
பூட்சியிற்பொலிந்துபொருந்துமுயிர்க
ளிட்சிசெய்வினையினீங்கியின்புற்
றிம்மைமறுமைவீடென்னுமுப்பயன்களுந்
தம்மகம்பொருந்தச்சந்ததான
நாதபாண்டியநீதமன்னவனாய்
மறுவறுதேவவருடமூவுலகு
மறுபகிறுபிரமாண்டருள்செய்துங்
கலைமுழுதுணர்ந்தமலையமாமுனிக்குப்
பணக்கோலமறைத்துமணக்கோலங்காட்டியுக்
தாருகவனத்தவர்ச்சேருமகங்கெடக்

கங்காளவேடனாய்ச்செங்கைபலியிரந்து
மேலுமனந்தலீலைகள்புரிந்து
மெழுந்தருணெல்லையெம்பிரானருளா
லித்தலத்திதுகாறெம்மனோரியற்று
வுத்தமக்கருமமுஞற்றுபுசெய்வா
னெத்தலத்தோர்களுமேத்திடுகவிஞனா
முத்துக்குமாரசுவாமிமுன்புசெய்
மெய்த்தவத்துதித்துவிளங்கிடுபாலன்
றீனரக்ஷகராந்தானநாதருக்கும்
வேந்திமவான்றவக்காந்திமதிக்கும்
பொற்பகம்பிரியாக்கற்பகங்கமல
வாகனமமைத்துமாகனம்பொருந்திய
சுந்தரமூர்த்திச்செந்தமிழ்க்கவிஞனாங்
கனிட்டபிதாமனத்தினிட்டமாய்நடப்போன்
குடக்கநிறைந்தகொள்கைபோன்றென்று
மடக்கமும்பொறையுமமைந்திடுசீல
னுந்திலக்கணமுஞ்சந்தம்விரும்பி
வந்துகேட்குநர்க்குவழங்குமம்பல
வாணனெனும்பெயர்பூணுகவிஞனும்
மலைக்கொடிமலைபுணாமுலைச்சுவடணிந்து
மாவடியமர்ந்தசேவுயர்கொடியன்
றொண்டைநாடிச்செய்தொண்டைநாட்டம்
புலியூர்சோலைப்புலியூர்க்கோட்டத்
தென்றும்புகழ்மிகுகுன்றத்தூர்வாழ்
கோக்குழாம்பரவுஞ்சேக்கிழார்கோத்திரன்
வேதாந்தஞ்சித்தாந்தம்விளங்கிடு
பேதாபேதப்பிறிவறிந்தஈசர்க்
கமைச்சனாந்தியாகராசனருந்தவத்
தமைப்பினிலுதித்தவழகியசற்குணன்

வேணுவனத்தமர்தாணுவாம்பொருண் *
மறையவர்சிறுர்க்குத்துறைபலவாகிய *
வேதமுதற்கலையோதுவித்தருளுமத் *
திருவிளையாட்டைப்பெருவிருப்புற்றுச் *
செய்திகபரமுமுய்திறம்பெற்றேன் *
கல்விவினைதன்கலந்தநட்பினர்க்குக் *
கவராமனத்தொடுகெருநியதுதவுஞ் *
சிவராமனெனுஞ்சீரபிதாமனும் *
மதுவூர்சோலைப்புதுவூர்மருவு *
மிராமசுவாமியெனும்பெருவள்ளல் *
தராதலத்துவந்துசெய்தவப்பயக்காதலன் *
முறுக்கலர்சோலைக்குறுக்குத்துறைநதித் *
திருவுருமாமலைமருவியகுமரன் *
பச்சைசாத்தியெழுந்தருள்பவனியை *
முச்சகம்புகழச்சச்சையன்பாற்செய் *
சுப்பிரமணியனெப்புகற்கனிட்டன் *
அரியகலைகளகத்தமைவுறப்பயின் *
றுரியமாந்தர்க்குணர்த்தவல்லவ *
னுள்ளிநாடோறுமுறவினர்க்குதவும் *
வள்ளிநாயகமாகியமகிபனு *
மொத்துத்தம்பொருளுத்தரஞ்செலுத்துபு *
வுத்தமக்கருவிகளித்தலம்வரவழைஇ *
முத்தமிழாகரவித்தகவச்சுக் *
கூடமென்றியற்பெயர்குணித்துநிறீஇச் *
சிவதருமோத்தரவுவகைமயிலுணாமுத *
லிலக்கணமிலக்கியந்தலக்கண்விளக்கிய *
வச்சுக்கூடமறமுதற்பயன்கொடுத் *
திச்சகத்தென்றுமினிதுமல்குகவே *

நிலைமண்டிலவாசிரியமுற்றும்

செய்யுளகராதி

அகராதி

அகராதி

அகராதிமுற்றும்.

உ

சிவமயம்

சிவதருமோத்தரவுரை

சிறப்புப்பாயிரம்

கடவுள்வாழ்த்து

கணபதிவணக்கம்

மலைக்குமகள்பெற்றமகனைக்கயமுகத்தனைமனத்தெழுகியா ✻
னலற்பிணிபிறப்பறவணுக்களையகத்தியமுனிக்கருளினா ✻
னுலப்பில்கருணைக்கடலுருத்திரனுருத்தனிலுதித்தகுமர ✻
✻ னிலக்குமிந்நூலைக்கலியிளைக்கவுமுரைப்பனுலகிட்டமுறவே ✻

என்பது — யான், மலையரையன்மகள்பெற்றமைந்தனாகியயானைமுகத்தையுடையவிநாயகனைமனத்திலேதியானித்துவற்றாதகிருபாசமுத்திரமாகியவுருத்திரனதுதிருமேனியிற்றோன்றியகுமரக்கடவுளானவன்றனதருளினாலான்மாக்களுக் காணவாதியாலுண்டானபிறவிநோய்தீர்த்தற்பொருட்டகத்தியமகாவிருடிக்குபதேசித்தசிவதருமோத்தரத்தைக்கலிவலிகெடவுமுலகங்கதிபெறவுமுரையாநின்றேனென்றவாறு —யானென்னுமெழுவாயுரைப்பலென்னுமல்லீற்றுத்தன்மைவினைமுற்றுடன்முடிந்தது - அணுக்களையென்னுமையுருபு - ஈண்டுநான்கனுருபாய்மயங்கிற்று.

சிவபெருமான்வணக்கம்

திருமாலும்போதனுந்தேவருமாமுனிவருமோசெறிந்துபோற்ற ✻
மருவாரும்பொழினிலவுந்தில்லைமணிமன்றுடன்மகிழ்வான்றன்னை ✻
யுருவாகித்தானுயிர்கட்குருவாக்கியளித்தடக்கியுய்யச்செய்யும் ✻
பெருமானைநிருமலனைச்சிவனையடிபணிந்துளத்திற்பேணுவாமே ✻

✻ இலக்கல் - விளக்கல் - ஈண்டுபதேசப்பொருட்டாய்நின்றது

எ - து — காரணனும்பிரமாவுந்தேவரு முனிவருநெருங்கிநின்று துதிசெயமணி நிறைந்தசோலைகள் சூழ்ந்திலைமலர் மன்றின்கணின்று திருநடஞ்செயமகிழ்வோனுமாய்த்தானேதிருமேனிதரித்தான்மாக்களைச்சிருட்டித்துத்திதித்துச்சங்கரித்தனுக்கிரகஞ்செய்யும் பெருமானுமாய வாதிமலமுத்தனுமாயிருக்கிற சிவனையவனது பொதகமலத்தில்யாம்வணங்கியெமதுள்ளத்தின்கட்டியானிப்பாமென்ற வாறு. ஏகாரம்-அசைநிலை [க]

சின்மயனைச்சிவனைமலவலிகெடாவியவிஞ்ஞானகலர்க்குஞ்செப்புஞ் [ம-
* சொன்மயனைத்துகளிலியைத்தில்லைப்புலியரவுஞ்சுரர்க்கொப்பாரு
பொன்மயனும்புகழவருள்புரிவானையவனைத்துயிரும்பொருந்திப்பேத ❁
மின்மயனைப்பதம்பணிவாரெளியவர மேவியபடியெய்துவாரே. ❁

எ-து - ஞானமயனுமாய்மலவலிகெடப்பிரணவர்முதலிய ✠ விஞ்ஞானகலர்க்குமருள்செய்ததிவ்வியாகமத்தைவடிவாயுடையனுமாய் மலரகிதனுமாயொப்பிலாதவனுமாய்வியாக்கிர பாதபதஞ்சலிகளுக்கும் தேவர்களுக் கொப்பாகியதில்லை மூவாயிரவருமிரணியவன்மனாயனும்பணியவவர்களுக் கனுக்கிரகஞ்செய்வோனுமாய்ச்சருவான்மாக்களிடத்தும் பிரசன்னமாகவியாபித்துப்பேதமற்றிருப்போனுமாயிருக்கிறசிவனையவனது பொதகமலத்திற்பணியுமவர்கள் கருதினவரத்தைக்கருதினபடியேபொருந்துவர்களென்ற வாறு.

விஞ்ஞானகலர்க்குமென்றவும்மையால் மண்டலர்முதலியபிரளயாகலர்க்குமெனவறிக [உ]

சத்திவணக்கம்

அப்பாலைக்கப்பாலைக்கப்பாலாயுவரியமலைதன்னை ❁
யெப்பாலுந்தானாகிநின்றொழிலைந்துமியற்றுதேயியற்றுவாளை ❁
முப்போதுமலர்தூவி முடிசாய்த்துமனத்தகத்து முன்னுவாளைத் ❁
தப்பாதேபிறப்பறுக்குஞ்சிவகாமசவுந்தரியைப்பணிவாந்தாண்முன் ❁

எ - து, மாயைபெருமாயையெனக்கூறியவிரண்டினுக்குமப்பாலா யான்மாக்களறிதற்கரிதாய்மலமில்லாத சிவசத்தியுமாய்ச்சருவவியாபியுமாய் ஐந்தொழிலுந்தான்செய் யாமற்றன்சன்னிதிமாத்திரத்திலே காரியப்படுத்துமவளுமாய்த்தனது போதங்களின் மூன்றுகாலங்களுமலர்களைத்தூவி யிதையகமலத்திற்றியானித்து

---

* சொல்லென்பதாகுபெயராயாகமத்தையுணர்த்திற்று.
✠ — விஞ்ஞானகலர். பிரளயாகலர். சகலரென்றுமூவகையான்மபேதங்களைத்தத்துவப்பிரகாசம். கயிச. ம்பாட்டிற்காண்க

வணக்கஞ் செய்யுமடியாருடையபிறப்பை நிச்சயமாகவறுப்பவளுமாயிருக்கிற சிவகாமசவுந்தரியையவளதுசீபாதகமலத்தின்முன்யாம்பணிவாமென்றவாறு.

✠ அப்பாலைக்கப்பாலைக்கப்பாலானையாரூரிற்கண்டடியேனயர்த்தவாறேஎன்ப தனாலறிக. [௫]

காரைக்காலம்மைமுதலாயினோர்வணக்கம்

ஆலவனத்தமலனடங்கண்டுவந்தகாரைக்காலம்மைதன்னைப் ✽
பாலருந்தியுமைமுலையிற்பதிகவிதம்பலபகர்ந்தபாலன்றன்னைச் ✽
சூலையினைச்சிவனருளாற்றுடைத்தானைத்தடுத்தாண்டான்றோழன்றன்னை ✽
மாலைமணிவாசகனைமற்றையடியரையுமடிவணங்குவாமே ✽

எ-து. திருவாலங்காடென்னுந்திருப்பதியின்கணின்றும் பரமசிவன்முஞ்சமாமுனிகார்க்கோடராகிய நாகராசாவிவர்களுக்குத்திருநடஞ்செய்யுமூலதாண்டவத்தைத்தெரிசித்துச்சந்தோஷித்தகாரைக்காலம்மையையுஞ்,சீகாழியிற் பெரியநாயகியார்திருமுலைப்பாலையமுதுசெய்ததனாற்றிருஞானமுண்டாய்ப் பலசந்தத்தாற்றிருப்பதிகங்களையருளிச்செய்ததிருஞானசம்பந்தநாயனாரையும், வீரட்டேசுரனருளினாலேசூலைநோய்நீங்கியதிருநாவுக்கரசனாரையுந், தடுத்தாட்கொள்ளுஞ்சிவனுக்குத்தோழனான சுந்தரப்பெருமானாயனாரையும், ரத்னமாலைபோன்றவாசகத்தையுடையவாதவூராளியையுந், தண்டேசுரர்முதலாகியபத்தர்களையும வர்கள்சீபாதத்தில்வணக்கஞ்செய்வாமென்றவாறு. [௬]

வாழ்த்து

வானவரும்பூசுரருமாதவருங்கோதனமுமன்னிவாழ்க ✽
கானமதினடமாடியடியார்க்கும்பதமருத்துங்கருணையாரு ✽
மூனமறவோங்கிடுகவுலகிதனைமனுமுறையாலோம்புமன்னர் ✽
தானவினையொடுதழைகதிங்கடோறும்மாரிபொழிகதானே ✽

எ-து. வெளி,சூத்திரம், வெளிப்படுசொல்லைகிளத்தல்வேண்டா வெளிப்படவாராகிளர்த்தல்வேண்டும்மென்பதினாலறிக, சூ- கடவுளுமுனிவரும்பசுவும்பார்ப்பாரு

அப்பர்

✠ மெய்ப்பால்வெண்ணீறணிந்தமேனியானை வெண்பளிங்கினுட்பதித்தசோதியானை, யொப்பானையொப்பிலாவொருவன்றன்னை யுத்தமனை நித்திலத்தையுலகமெல்லாம்,வைப்பானைக்களைவானை வருவிப்பானைவல்வினையேன்மனத்தகத்தேமன்னினானை, யப்பாலைக்கப்பாலைக்கப்பாலானையாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே.

மாசறுமறையு நாம்மென்ப என்றார் தொல்காப்பியனாராதலாலிக்கருத்தைப்பற்றி யிவ்வாசிரியரும்வாழ்த்துக்கூறியதெனவறிக. [ரு]

அவையடக்கம்

சீரியருஞ் சீரியரையல்லாரைத்தனச்சிறுமைசெப்புவாரோ ✽
யாரியருமாரியரையல்லாரைக்குலப்பழுதுமறைவரோயோ ✽
வீரியரும்வீரியரையல்லாரைவலியின்மைவிளம்புவாரோ ✽
சூரியருஞ்சூரியரையல்லாரைச்சொற்றவறுங்கூறுவாரோ ✽

எ-து தனவான்களூர்தனமில்லாதவர்களைத்தனச் சிறுமையுடையீரென்றுசொல்லுவர்களோ, சாதிமான்களுமாய்ப்பூச்சியருமாயிருக்கிறவர்கள் சாதியில்லாதவர்களைக் குலப்பழுதுஞ்சொல்லுவர்களோ, வெற்றிப் பாட்டினையுடையசூரர்களும் வீரத்துவமில்லாதகோழையரை யேழையென்று சொல்லுவர்களோ, அதுபோல பஞ்சவிலக்கணமுதலியவற்றைக்கற்றுக்கூரிய புத்தியையுடையவர்கள் அஃதில்லாதவெம்போல்வார்சொன்னசொல்லுக்குங் குற்றஞ்சொல்லுவர்களோ சொல்லார்களென்றவாறு.

ஆரியர்அறிவுடையோர் - ஏகார - ஓகாரங்கள்- எதிர்மறைக்கண்வந்தன ரு. அவையடக்கியலேயரிறபத்தெரியின்; வல்லுநர்கூறிவகுத்தனர்கொண்மினென், றெல்லாமாந்தர்க்கும்வழிமொழிந்தன் றேஎன்றார்தொல்காப்பியனார். [சு]

இந்நூற்சிறப்பும்வரலாறுந்தொகுத்துணர்த்துகின்றார்

ஆதிநடுவந்தமிலாவமலனுயிர்க்கழுக்கறுக்கவறைந்தவாய்மை ✽
வேதமுதலுணர்ந்தகுகன்விரைமலர்த்தாளகத்தியன்றான்வியந்துபோற்றிப் ✽
போதகவினைவினைத்துயிர்க்கும்புலமாக்குநெறிபுகலாயென்னக்கந்த ✽
னோதியருள்சிவதருமோத்தரநூலைத்தொகைசெய்துரைப் பாமோர்ந்தே ✽

எ-து. யாம், முதனடுவீறில்லாத நின்மலனாகியசிவனுயிர்களுக்காணவமுதலிய பாசங்களையறுக்கையின் பொருட்டருளிச்செய்த வேதாகமமுதலியவுண்மைஞானத்தையுணர்ந்த சுப்பிரமணியனதுமணம்பொருந்திய செந்தாமரைபோன்றசீபாதங்களைவணங்கிஞானாசாரியனே சருவான்மாக்களுக்கு மறிவுண்டாமார்க்கத்தைத் திருவுளம்பற்றுவாயாக வென்றகத்தியன்விண்ணப்பஞ்செய்யவந்தச்சுப்பிரமணியன்றிருவுளம்பற்றிய சிவதருமோத்தர மென்னுஞ்சிவாகமத்தையுற்றுநோக்கித் தொகுத்தக்கதிதாற்சொல்லாநின்றே மென்றவாறு.

தொகைசெய்துமென்ற வும்மைபாகுவதுத்தமெனவறிக ஆகமாகியவிந்திய

பருப்பதத்தைக்கீழ்ப்படுத்துகையாலகத்தியனெனப்பெயராயிற்று. ௫. வினையினீங்கிவிளங்கியவறிவின்: முனைவன்கண்டதுமுதனூலாகுமென்னுமுன்னூலைப்பார்த்துமொழிபெயர்த்துரைக்கையாலிதுவழி நூலெனப்பெயர்பெறும் ௬.வழியெனப்படுவததன்வழித்தாகுமதுவே தானுமீரிருவகைத்தே தொகுத்தல்விரித்தல்தொகைவிரிமொழிபெயர்ப்பெனத் தகுநூல்யாப்பீரிரண்டென்ப. என்பதனுள்இஃது தொகைவகையெனவறிக. ஆக்கியோன்பெயரைமுதற்கட்கூறாது நூற்பெயரைக் கூறியதென்னுதலிற்றோவெனின். எல்லாரும்பிரமாணமாகவங் கீகரிக்கவேண் டுகையானென்க,ஆக்கியோன்பெயர்முதலியனவருமாறு, ஆக்கியோன்பெயர்,மறைஞானசம்பந்தநாயனார்.வழி.சிவாகமத்தின்வழி,எல்லை,தமிழ்வழங்கும்பூமி.நூற்பெயர்.முதனூலாற்பெற்றபெயர்,யாப்பு,தொகைவகை,நுதலியபொருள், சிவதன்மம்சிவஞானதானமுதலாயின,கேட்போர்.அவர்மாணாக்கர்,பயன்,வீடுபேறு.எனவறிக [எ]

கயிலாயத்திலிருக்குங்கந்தனையகத்தியர்வணக்கஞ்செய்து வினவு
முறையைவகுத்து.௪௱.செய்யுளானுணர்த்துகின்றார்

வேறு

மாதவனகத்தியன்மலைக்குமகள்பெற்ற ✽
போதகனைவெள்ளிமயமாகியபொருப்பின் ✽
வேதமுணர்சண்முகனைவித்தகனையுற்றே ✽
பாதமலர்முன்றுதிவிதத்தொடுபணிந்தே ✽

எ. து. மகத்தாகியதபசினையுடையவகத்தியர் வெள்ளிமயமாகிய கயிலைமலையின்கட்சென்றுமலையரையன்மகள் பயந்தவுபதேசக்குரவனாய்வேதத்தையுணர்ந்தவறுமுகனாகியவித்தகனைப்பலவிதமாகியதுதிகளாலெதிர்பணிந்தென்றவாறு.

ஏகாரம்.ஈற்றசை. [அ]

நின்னதடிகண்டிடினுநீசர்வினைநீங்கிப் ✽
பொன்னுலகமெய்தியதனன்பொருள்புணர்ந்தே ✽
பின்னிசையிருக்குமொழியந்தணர்களென்னப் ✽
பின்னனைவனொன்னறைவன்மற்றையவர்பேறே ✽

எ. து. பொல்லாதசாதியிற்றோன்றியநீசராயினுந்தேவரீர்சீபாதத்தைக்கண்டார்களேயாயிற்றீவினைநீங்கிச்சுவர்க்கத்தின்கணுற்றூண்டுண்டாகியநல்லபோகங்களையனுபவித்ததுதொலைந்தவாறே பூமியின்கணினியவோசையையுடையவிருக்குமுதலியமறைமொழிகளையதிகரிக் கும்பிராமணராய்வந் துபிறப்பர்கள்ஆகையானற்குலத்து

ன்னோராய்வர் தங்களுடைய திருவடிகளைத் தெரிசிக்கில் அவர்களடையும்பலமென்னைஞ் சொல்லுகவென்றவாறு [க]

என்றினியவாய்மைகளியம்பியிறைகூற ❊
வன்றுமைதனக்கிலங்கிய முனிந்தா ❊
மின்றுயிர்தனக்குறுதி நியருளெனக்கே ❊
யொன்றியருளின்றமையிறுன்னெறுமரவோனே ❊

எ. து. வாரீர்மகாபெலத்தையுடையவரே முன்னாட்பார்வதியார்க்குப்பரமே சுரன்றிவ்வியாகமங்களையருளிச் செய்யவப்பொழுதெல்லாவற்றையுங்கேட்டறிந்தீ ர் தேவரீர்சிவனது கிருபையுடன்பொருந்தியிருக்கையாலிப்பொழுதுயிர்க்குறுதியா னதுவெனக்குத்திருவுளஞ்செய்வீராகவென்றவாறு [ம]

என்றுமுனிசண்முகனையேசறவுபேசி. ❊
நின்றுபிறுமாதரவுநட நிறைகூட ❊
வன்றுவினவுங்கிறமனைத்தையுமதித்தே ❊
யின்றறைவல்பாசவிருளிடறவிளைத்தே ❊

எ. து. அகத்தியமுனியானவர் இப்படியேகருதிக்கந்தனைத்தோத்திரஞ்செய்து நின்றபின்புசிரத்தையானதுமேன்மேலும் வளர்ந்துசெல்லவறிவுநிலைபெற்றுவண க்கத்துடன்பொருந்தியன்றுவினவியதிறமெல்லாவற்றையும்விசாரித்தான்மாக்கள் பாசவிருண்மெலிந்துகெடும்படிக்கிப்பொழுதுசொல்லாநின்றேனென்றவாறு [மக

உத்தமசுராக்கதிபதூனவினையோட்டும் ❊
வித்தகவிசாகமயில்வாகனவிண்மேவும் ❊
புத்தியொடுமுத்திதருபோதகபுலாதுன் ❊
சத்திதரயான்வினவல்கேட்டுவிடைசாற்றாய் ❊

எ. து. வெளி [மஉ]

தக்கசிவதன்மநெறிதன்றுளரிதாய ❊
மிக்கசிவதன்மநெறியாதுவிபரித ❊
முக்குணர்வுகித்திடவுனாக்குழையாதோ ❊
நக்கனடியார்ச்சனையும்பாதிவைநவிற்றாய் ❊

எ. து. தருதிப்பாட்டினையுடையசிவபுண்ணியங்களுக் குட்பிறரதிதற்கரி தாய மிகுந்தபலத்தைக்கொடுக்குஞ் சிவதன்மத்தின் முறைமையாது, வாக்கியங்

ளனேகமுளவாயினும் ஐயர் திரிவின்றிமெய் யுணர்வுதோன்றவிலும்வாக்கியம்யாது,சிவனது திருவடியிற்பூசைசெய்யுமுறைமையாது,இவைகளெல்லாமெனக்குத்திருவுளஞ்செய்வாயாகவென்றவாறு. [௰௫

நாடரிய ஞானதரதானமுநவிற்றாய்
பீடுபெறுபேதமுமெனக்குமுறைபேசா
யீடுபெறவீயுமுறையீபவரேப்பார்
கூடுபயனுறியவனைத்துமுறைகூறாய்

எ - து - ஆன்மாக்களறிதற்கரியவிசிட்டமானசிவஞானதானவிதியையும்,பெருமையினையுடையஞானதானஞ்செய்யுமதற்குமண்டபம் அதிவாதம்பூசைமுதலியவிதியையும், பெருமைபொருந்தத்தானங்கொடுக்கும்விதியையு, மதனைக்கொடுக்குமவர்கள்வாங்குமவர்களடையும்பலத்தையுமிவையெல்லாவற்றையுமெனக்கடைவிற்திருவுளஞ்செய்வாயாகவென்றவாறு.

அனைத்துமென்பதனுற்கன்மயாகமுதலியஐவகையாகத்தையும், பலவிசிட்டகாரணத்தையுஞ், சிவதருமபேதத்தையும், பாவவினைத்திறத்தையு, மான்மாக்கள்சுவர்க்காரகங்களையடையுமுறைமையையுமவர்கள்செனனமரணப்பட்டுலகத்திற்றுயருறுமுறைமையையுநரகத்தில்வினைப்பயனையனுபவித்துச்சேடமாயதற்கேற்றவடையாளத்தைப்பூமியின்கண்வந்துபொருந்து முறைமையையுஞ்சிவஞானயோகத்தின்முறைமையினையுநித்தியமுதலியகன்மலோபத்துக்குப்பரிகாரஞ்செய்ததனைத்திர்க்குமுறைமையினையும், பசுக்களிற்குஞ்சிவலோகத்தின்வளத்தினையும், விருவினதெனவறிகஇதனைப்பரமதருமோபதேசமென்னுஞ்செய்யுளாற்பின்னர்முடித்துக்கூறுகின்றாராண்டுக்காண்க [௰௬]

மேற்குமரனது திருவாக்குணர்த்துகின்றார்.

வேறு.

என்றுமுனிவினவுதலுமிரக்கமெய்திபெ ரிதுடையாகுமரன்முனிவனையிலீசன், றுன்றுகழலடிநினைந்துதுயக்கநீங்கச் சொல்லுவங்கேண்முனிவரனேதுகளிலீச, னன்றருள்செய்சிவதருமோத்தரமெனுமொழி னறமதனையறிந்துசிலரதனையாக்கிச், சென்றணையச்சிவபுரியைத்தெருண்டுதம்மைச் சிவனடியைச்சிலரடையமலமுந்தேய்த்தே.

எ-து அகத்தியமாமுனியிவ்வாறுவினவியவளவிலபூகினையுடைய குமாரசுவாமிகிருபைசெலுத் துவப்பிலாதசிவனது நெருங்கினவீரக்கழலினையு டையசிபாதங்

கனித்தியானஞ்செய்தபின்பு முனிவரனே நின்மலனாகியசிவன் பக்குவான்மாக்க
ளுக்கருளிச்செய்தபேர்சிவதன்மங்களையறிந்தருட்டித்ததனாற் சிவலோகத்தையடையவும்
அதிபக்குவரிற்சிவஞானத்தினாலே யாணவமுதலியவாதைனையப் போக்கித்தற்சொ
ருபதெரிசனப்பட்டுத்தனது திருவடியையடையவுஞ், சிருட்டிகாலத்திற் சிவனரு
ளிச்செய்தகாமிகமுதலிய திவ்வியாகமமிருபத்தெட்டினுட் சந்தானசருவோத்தமமெ
ன்றுமூலாகமத்திற்குபபேதமாகிய ஈசானஞ், சிவதன்மம் சிவதருமோத்தரம் திவ்
வியப்புரோத்தம் குபோமெனக்கூறியவைவற்றினுட் சிவதருமோத்தரமென்றுமுபா
கமத்தை ஐயத்திரிபுநீங்கயாஞ் சொல்லாநின்றேமதனைக் கேட்பாயாகவென்ற
வாறு.

மலமுமென்றதும்மையாற் கன்மமாயையுமெனவறிக -ஏகாரம்- ஈற்றசை
நூற்கபபேதமென்பதனை ஆகமத்திற்சருவோத்தத்துபபேதமெனப் பின்னர்க்கூறு
கின்றார். [௰௫]

௧. வணக்கமதிகாரமென்றிரண்டுஞ்சொல்லச்சிறப்பென்னும்பாயிரமாஞ்சீர், ஆயி
ரமுகத்தாலகன்றதாயினும் பாயிரமில்லதுபனுவலன்றே- என்பதனாற்பாயிரமுணர்
த்துநூலுணர்த்தன்மரபெனக்கொள் க-யாதாமோர்நூற்குப்பொருளுணர்க்குங்கால்
காண்டிகைவகையானுமுரைவகையானுமுணர்க்கப்பெறும் - ஈண்டிந்நூற்குக்கூறி
யதியாதெனில்-கு - சூத்திரத்துட்பொருளன்றியுமியாப்பின் றியலுமையாதியல்பவை
யெல்லாமொன்றவுரைப்பதுரையெனப்படுமே-பொழிப் பேயகலநுட்பமெச்சமெ
ன்றப்பாலுள்நோக்குநப்பாகும் -பொழிப்பேபொருளை யொருப்படுத்துரை
த்தல், விரித்துரைதானேயகலமென்ப நுட்பமப்பொருட் கேற்பவுணர்த்தல்அடு
த்தபொருளாயகன்றுநிற்பதனையெடுத் துரைப்பதுவேயெச்சமாகும்,இதனிற்பொ
ழிப்பென்பது, தொகுத்துணர்த்தல், அகலமென்பது, விரித்துணர்த்தல், நுட்பமெ
ன்பது கடாவிடைகூறல், எச்சமென்பதுகடாவறத்துணிந் தபொருள், இதனுனேஒ
ரோவழியாற்சிறப்புப்பாயிரங்கூறியதெனவறிக.

முதலாவதுபரமதருமாதியியல்

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின்,பரமதருமமாகியசிரத்தைமுத
லியவிதியைக்கூறுகையாற் பரமதருமாதியியலென்னும்பெயர்த்து - கு.
இயலேசாயலுந்தமிழ்நடையுமாகும் என்பதனாலிதனைத்தமிழ்நடையாற்
கூறுதலாலியலென்றார், மேலித்தலைச்செய்யுளென்றுதலிற்றேவெனினி
முத்தமுறையானேசிவதருமத்துக்குமூலஞ்சிரத்தையென்றுணர்த்துதலு
தலித்து.

ஆதரவேபரமானவறமதாகுமாநிடவேந்தமிவற்றனைத்துமாகு ✽
மாதரவற்றவரீகையறமேயாகாதாதலினலாதரவேமூலமாகு ✽
மாதரவேபிரசிருநியான்மாவீசனெனும்பொருளுமறிவிக்குமமலன்முனு ✽
மாதரவேயடைவிக்குமாதலாலேயனைத்தினுக்குமாதரவேமூலமாமே ✽

எ - று - வெளி, சிரத்தைக்குப்பரியாயப்பெயர் பத்தியெனவும்பாவமெனவும் பரமப்பிரீதியெனவுஞ் சிவதன்மத்தினொருப்பாடெனவும்பிரதிபத்தியெனவும் ஐந்துவிதப்படும்அவைகளையாண்டாண்டுவந்துழிக்காண்க. ஆதரவு-எ-துசிரத்தை [௰கூ]

மேலதனைவற்புறுத்தியுணர்த்துகின்றார்

மகவினையாலாகத்தின்வருத்தந்தன்னான் மாநிதியான்மற்றுமுளபொருள்களாலுந், தகைபெறுவானவராலுங்காதலின்றேற்சாதிக்கப்படுவதலத்தருமந்தானே, யுவகையுறவாதரவாற்சிறிதேதேனுமுதவிபிடுமறமதனும் பெரிதுண்டாகு, மகநெகலுமாதரவேயரியபேறென்றறியாதாரென்பெறுவரன்னேவன்னே.

எ - து யாகாதிகன்மத்தினாலேயாதல்கிருச் சிரசாந்திராயணமுதலியவற்றுற் சரீரத்தைவாடுதல்பண்ணியாதல் மிகுந்ததிரவியத்தாலாதல் நவரத்னமுலியபொருள்களினலாதல்சிரத் தையில்லாதவிடத்துத்தகைமைப்பாட்டையுடையதேவர்களாலுஞ்சிவதன்மங்கள்சாதிக்கப்படுவதல் லயாதொருவர்சிரத்தையுடனேயற்பமேதாயினுந்தானஞ்செய்யிலதனாலேமிகுந்தபலத்தைக்கொடுக்குந்தன்மமுண்டாம் ஆதலான்மனநெகிழ்ச்சியுடையவாதரவே பெறற்கரியபேறென்றறியமாட்டாதார் என்னபலத்தையடையப்போகிறார்கள் ஐயோஐயோவென்றவாறு.

வானவராலும்பெறற்கரிதெனவேயேனை யோராலுஞ்சாதிக்கப்பெறுதென்பதாம் - ஏகாரம் - ஈற்றசைஅன்னேவன்னே எ-துஇரக்கத்தின்கண்வந்தகுறிப்பு [௰எ]

சிவவாக்கியத்தினதுவிசிட்டமுணர்த்துகிறார்

முனிவரனேசிவதருமமூலஞ்சொன்னேமொழிந்திடுவம்வாக்கியங்கேண் மோகம் போகப், புனிதமுறமனமொருமைப்புந்திதானும்பொய் யகலமெய்யகலப்பொள்ளலாக்கைத், துனி தொலையத்தனைபிணையில்சோதிபாதங்குடிபிடச்சிரம் படர்ந் துதொடர்ந்துநின்ற, வினைவிளியவிழை வுறவேகேட்பார்தங்கள்விளக்கெனமெய்ப்பொருளையதுவிளக்கவுள்ளே.

எ - று- வாராய்முனிகளுக்குட்சிறப்பினையுடையவனே சிவதன்மத்துக்குச்சிரத்தைதானேனுமென்றுசொன்னேஞ்,சிவனருளிச்செய்தசிவவாக்கியத்தையாசையுடன் கேட்போருடைய சகநக்கங்களின் முற்றுதலாலுண்டாகியமோகங்கெடவு, மனசுக்குவராத நிச்சயிப்பிக்கும்புத்தியுமென்னவே யந்தக்கரணங்கள்சுத்திபெறவும், பொய்யானதவனைப்பொருந்தாமல்விட்டுப்போகவுமெய்யானதவரிடத்திற்பொருந்தியெந்தும்பரம்பவு,நவத்துவாரத்தினையுடையசரீரத்தையெடுக்குந் துக்கமொழியவுந், தனக்கொப்பொருவருமில்லாதசிவனது சிபாதத்தைத்தலையிற்றரிக்கவும், பிரவாகரூபியாயசெனனங்கடோறுந், தடராநின்றகன்மக்ஷயம்பிறக்கவும்,விளக்கானதுவிசுவத்திற்பதார்த்தங்களை விளக்குவதுபோலப்பக்குவான்மாக்களுடைய விதையமலத்திற்பந்பதார்த்தமுதலியபொருள்களைவிளக்கவு, மந்தச்சிவவாக்கியத்தைச்சொல்லாநின்றேனுமதனைக்கேட்பாயாகவென்றவாறு. [௰௮]

கபிலர்பதஞ்சலிமுதலாயினோர்வாக்கியங்கள்பிரமாணமல்லவோவென்னிலவர் கன்மலத்தோடு கூடினவர்களாதலாலவர்கள் வாக்கியம் ஆப்தமானபிரமாணமல்லவாதலாற்சருவஞ்ஞனாகியசிவனது திருவாக்கேபோகமோக்ஷங்களைக் கொடுக்குமென்றுணர்த்துகின்றார்.

அமலவரனருளியசொல்வாக்கியமேயதுதானருத்தத்தாலக்கரத்தாலதிகமற்பந், சமலருரையதுபோலவிபரீதஞ்சிறிதுஞ்சாற்றுதேயுள்ளபடி சாற்றுஞ்சாற்று, மமலனையுமணுக்களையுமண்டபேதமனைத்தினையுமறிவிக்குமாதலாலே, பவமொருவுநெறிதன்னைப்பயக்கும்போகம்பாலிக்குந் தானமுதற்பகர்தலாலே

எ - று மலமில்லாதசிவனருளிச்செய்ததிருவாக்கேவிசிட்டமானவாக்கியம், அர்த்தவாக்கியமானதெழுத்தினுற் சுருக்கமும்பொருளினாற்பெருமையுமாயிருக்கு, மஃதன்றிபிராகத்துவேஷத்தடேகசுடினவான்மாக்கள்வசனம்போல விபரீதஞ்சிறிதுஞ்சொல்லாமலுள்ளபடியே சொல்லுமஃதன்றிப்பதியையுமான் மாக்களையும்பாசமாகிய வண்டபேதமனைத்தினையுமறிவியாநிற்குமிதிற்றுவம்யாகமுதலிய வற்றைச்சொல்லுகையாலே போகத்தையுங் கொடுக்கு, மந்தப்போகம் பொசித்துத்தொலைந்தபின்னர்ச்செனனமரணப்பட்டுழலாமற் பரமமானமோக்ஷத்தையுங்கொடுக்குமென்றவாறு.

உள்ளபடியேசொல்லுமதியாதெனில்-ரு-பா-சனிதத்து மந்திரத்துங்காண்க

கசடின்மை, யெனுமவிதுபோலமற்றெல் லாம்ஈனவறிகவாக்கியமாவது※ஆகாம்க்ஷைமுதலியவிலக்கணமுடையது. [௰௧]

இங்ஙனஞ்சிவவாக்கியப்பிரமாணங்கூறியசனுட்சொல்லுமந்திரத்தின் விசிட்டமானமந்திரமீதென்றுணர்த்துகின்றார்

ஆதிதனிலோமென்னும் பதமதாகவந்தமதிற்சிவாயவொலி யனைந்து நிற்க, வோதியவாறெழுத்தினையுமுடைத்தேயிந்தவோமென்னும்பதப்பொருடானுயிர்கட்கெல்லாம், போதகனாய்ப்பொருவிலியாய்நிற்குமீசன் புனிதனவன்சத்திவிதமைந்துமற்றை, யேதமிலாவஞ்செழுத்தின்பொருளே யெண்ணிலிருபயனுமுயிரடையுமிவற்றாலென்றும்,

எ - து அந்தச்சிவவாக்கியத்திற்கூறியபஞ்சாக்கரமானதாதியிலேதுமென்னுபதமும்அந்தத்திலேசிவாயவென்னும்பதமும், நடுவின்நமவென்னும்பதமுநிற்க, வுச்சரியாநின்றவாறக்கரத்தையுமுடையதா, மிந்தஓமென்னும்பதத்தின்பொருளை விசாரிக்கிற்சருவான்மாக்களுக்குமறிவைவிளக்குமவனாய்த்தனக்கொப்பொருவருமில்லாதவனாய்ச்சருவவியாபியாய்வாச்சியார்த்தமாயிருக்கிறசிவன்குற்றமில்லாதமற்றவஞ்செழுத்தின்பொருள், அந்தச்சிவனுடையவீசானமுதலியசத்திகளைந்துமாமிந்தப்பதங்களாலேயந்தப் பொருள்களைக்கருதியுச்சரிக்கிலான்மாக்களொர்தக்காலமும், போகமோக்ஷங்களிரண்டையுமடைவார்களென்றவாறு [௨௰]

அந்தப்பிரணவத்தின்மகிமைபுணர்த்துகின்றார்

ஓமென்னும்பதமதனில்வேதமாதியுறப்பவிக்குமாலவித்தி னுதிக்குமாபோ, லோமென்னும்பதமதனையுணர்த்தார்தாமேயோதினர்கள்வேதாதியுணாகமெல்லா, மோமென்னும்பதப்பொருளையுணர்ந்தார் தாமேயுணர்ந்தாரும்வேதாதியொருமைகூர, வோமென்னும்பதமொழித்தஞ்செழுத்துமாதர்க்கொழுங்குடையசூத்திரர்க்குமுணாக்கலாமே,

---

※ ஆகாம்க்ஷை, யோக்கியதை, சன்னிதி,இம்மூன்றும், வாக்கியப்பொருளுணர்ச்சிக்கேது, ஆகாம்க்ஷை, எ-து அவாய்நிலை, யோக்கியதை, எ-து தகுதி, சன்னிதி, எ-து அண்மை, அவாய்நிலை, ஒருபதம்தன்னைமுடிப்பதொருபதமில்லாதவழிமுடிவுபெறாதுநிற்றல்,தகுதி,பொருட்குவாதையின்மை,அண்மைபதங்களையொருதொடராகவிளையக்கூறுதல், இவற்றின்விரிவெல்லாந்தருக்கசங்கிரகவுரையிற்காண்க

எ-று ஆலம்வித்திலேநின்றுஞ்சாகோபசாகைகள்தோன்றுமாறுபோல் ஓமென்றும்பதத்திலே வேதமுதலாயநூல்களெல்லாந், தோன்றுமாகையால், ஓமென்றும்பதத்தையுச்சரித்தவர்களே வேதமுதலாய நூல்களெல்லாமோதினவர்களெந்தக் காரணங்கொளாருமிப்ப, வோமென்றும்பதத்தினின்றபொருளாகியசிவத்தையறிந்தவர்களேவேதமுதலாகியநூல்களிற்சொல்லும்பொருள்களெல்லாவையுமுணர்ந்தவர்களாதலாற்பார்ப்பார் முதலியநாலுவன்னத்துண்மாதருஞ்சற்சூத்திரருமந்தவேதமாதாவாகியபிரணவத்தைநீக்கிநின்றவஞ்செழுத்தையுமேயுச்சரிக்கலாமென்றவாறு [௨௧]

இதுவுமது

இருநிலமிசைவுலவுமிரவியின்றேலிசையாது பொருளொடுகண்ணொளியுண்டேனும். பொருவரியவோங்காரப்பொருளொன்றின்றேற் பொறியிலங்காதனைத்துயிர்க்கும் பொறியுண்டேனு. மருளதனையணுக்களுக்குமாற்றியென்றுமருளும்பரமசிவன்வாக்கைக்கூறும். குருபரனுமோங்காரப்பொருளேயென்றுகொண்டாரோன்மும்மலமும்விண்டார்தாமே

எ-று பூமியின்கணந்தகாரங்கெடவுலவாநின்றவாதித்தனில்லையாயிற்கண்ணுனது தனக்கெனவொளியுண்டாயினும்பொருளொடுபொருந்திக் காணமாட்டாததுபோல, வொப்பில்லாதருக்குமபஞ்சாக்கர மாகியவோங்காரம்பிரமாமுதலாயினோரைய திட்டித்துக்கொண்டுமனமுதலியவற்றையகரமுதலியவக்கரங்களைக் கொண்டுகாரியப்படுத்தாவிடத்தான்மாக்கள்கருவிகரணங்களுடன்கூடியிருந்தார்களாயினு, மந்தக்கருவிகரணங்கள்செய்யாதாதலாலான்மாக்களுக்காணவவிருளைநீக்கியென்னாளுமறிவைவிளக்கப்பண்ணும்பரமசிவன்றிருவாக்கையுபதேசிக்குஞானசாரியனுமந்தப்பிரணவத்தின்பொருளேயென்றுட்கொண்டவர்களே,மலமாயாகன்மங்களைநீங்கினவர்களென்றவாறு

*அவ்வுடலுவ்வுமவ்வுமனம்புத்தியாங்காரங்கள்
செவ்வியவிந்துநாதஞ்சித்தமோடுள்ளமாகு
மொவ்வெறுமெழுத்தாமைந்துமுணர்வுதித்தொடுங்குமாறு .

---

* சிவஞானசித்தியாரில். ௪.ம்சூத்திரத்தில்.௩௩ம் கவி—

பவ்வமுந்திரையும்போலும்பார்க்கிலிப்பண்புந்தோன்றும்
என்பதனாலறிக [உஉ]

முதற்கட்டொகுத்துப்போந்தவாசிரியர்சிவதன்மம்பரிபாலனமாகையின் பொருட்டிராசாவுக்குபதேசிக்குமியல்புமவன துசிறப்புமுணர்த்துகின்றார்

ஐயமறவிபரீதமதுவுமீசனருண்மொழியையாராய்ந்தவனகனுசான் *
வையகமுமுய்யவுளிச்சைவதன்மமன்னவனுக்களிக்கவவன்மருவுநீதி *
யெய்தியிடுமுலகச்சமெய்தலானுமெல்லோருமிருபயனுமெய்தலாலே *
சைவநெறிதனையரையற்களித்தவாசான்சகத்தினுக்குந்தேசிகனேசாற்றுங்கா [லே

எ-து. சிவனருளிச்செய்த வேதாகமங்களையை யந்திரிவறவுணர்ந்து பாவமில்லாதவாசிரியரானவரு,முலகத்திலுள்ளவான்மாக்களீடேறும்படிகருதிச்சிவதன்மங்களைவிசாரித்து இராசாவுக் குப்போதிக்க, அந்தவிராசாவானவன்சாமபேததான தண்டமென்னுநீதியைப் பொருந்திநடப்பன்,அவனிதிவழிநடக்கவே யுலகத்திலுள்ளவான்மாக்களு நீதிவழிநடவாதோரைத் தண்டிப்பனென்னும் பயம்பொருந்தியறத்தின்கணொழுகுவர்கள்,அங்ஙனநீதிவழிநடக்குமிராசாவுமான்மாக்களும்புத்திமுத்திகளையடைதலா லிராசாவுக்குச்சிவதீக்ஷையைச்செய்து சிவதன்மத்தின்வழி நிறுவினவாசிரியனது மகிமையைச்சொல்லு மிடத்தவனே யுலகத்துக்கெல்லாமாசிரியனென்றவாறு.

வையகமுமென்றவும்மையாலி ராசாவுமெனவறிக-அச்சமெய்தலாலுமென்றவும்மையாலியல்பானும் பத்தியானுமெனவறிக [உ௩]

அந்தவிராசாவானவன் உலகத்துள்ளோரை நீதிவழிநடத்துமுறையுணர்த்துகின்றார்

பூபதிநூன்முறையிற்புவியுளோரைப்புரிவிக்கவுழுவாதுபுரிந்தார்தாமும், பூபதியைச்சிவனெனவேபுந்திசெய்வர்பொருந் திடுவர்தன்மார்த்தகாமம்பூமேற், பூபதியுமித் தகையேபுரிவார்தம்பாற்பொருள்கொள்கவொருகூறுபுவிக்கைந்தாக்கிப், பூபதியைநிரயத்திற் பொருத்துந்தியார் பொருளவனமுறைநிறுவிற் பொருந்தானங்கே,

எ-து. இராசாவானவன் பூமியின்கணுள்ளவான்மாக்களை மனுநீதிவழியேயவரவர்சாதிக்கொத் தவறங்களைச்செய்விக்கக்கடவன்,அங்ஙனமுறைபிறழாதறங்களை

ச்செய்தவான்மாக்களுமத்தவரசனைச்சிவனென்றேபுத் திபண்ணக்கடவர்கள், அப்படிபுத்திபண்ணினேர்களிந்தப் பூமியிலேதானேயறம்பொருளின்பங்களைப்பெறுவர்கள் அரசனுமிந்தமறநூன்முறைமையொழுகுமவரிடத் தப்பொருளை யாறுகூறுச்சிக் குடிக்கைந்துகூறுந் தனக்கொருகூறுமாகக்கொள்ள க்கடவனறநெறியினெழுகாதத்தீவினையோர்பாற்கொள்ளும் பொருளரசனை நரகத்தில்விழும்படி செலுத்துமாதலாற் பொருளைத்தான் கொள்ளக்கருதாமலந்தத் தீவினையோரைக்குற்றத்துக்குத்தக்கதண்டஞ்செய்தவரக்கியறநெறியினிறுத்துவனாயினவ்வரசனரகினையடையானென்றவாறு. [உ௪]

குருவானவனிராசாவுக்குத்தன்மபுத்தி வருவிக்குமுபாயமு மந்தக்குருவனுக்கிவன்செய்யுங் கைம்மாறுவேறில்லையென்பதுமுணர்த்துகின்றார்

பார்த்திபனுங் காமத்திற்பொருளிற்சாலப் பற்றுடையனெனிற்குரவன் பரிவுகூர்ந்து, தீர்த்திடுமந்திரத் தாலவுடதாதித்திறத்தினுமே யறத்தினவன் சிந்தைசெல்லப், பார்த்திடுபரயோகம்பின்புநல்கப் பரயோகமளித்துவினைப்பகைசாராமற், காத்தகுரவனுக்கிவன்செய்கைம் மாறுண்டோ காசினியும் பொருளனைத்துங் கைம்மாறன்றே,

எ. து. இராசாவானவன் காமவிகாரத்திலர்த்தனந்தேடுவதிலு மிகுந்தவாசையுடையனுமிற் குருவானவனிராசாவுக்கிப் படிபொல்லாதபுத்திவந்ததே யென்றிரங்கியதற்போம்படிமந்திரவாதத்தாலு, மருந்துமுதலியவற்றாலுந், தீர்த்தவ்வேந்தன தமனமறத்தின்கட்செல்லும்வண்ணமுணர்த்திப்பின்புமேலான ஞானயோகங்களையுபதேசித்திரக்ஷிக்கக்கடவனங்ஙனஞானயோகத்தையளித்துவினைப் பகையேறுவண்ணமிரக்ஷித்தவாசிரியனுக் குலகமுழுவதுந் திரண்டானபொருள்களுங்கைம்மாறல்லவேயாதலாலவற்கரசன்செய்யும்பிரத்தியுபகாரமில்லையென்றவாறு ஞாலம்விழுவின்கண்வர்த்தம், ஔடதாதியென்பதனுன்மணியுமெனக்கூட்டுக [உரு]

வேதாகமங்களின்முறைமையுமவற்றையுணராதார்பயன் பெருமையுமுணர்த்துகின்றார்

அப்பாயுநரர்க்கென்றேயமலன்வேதமாதிதனைத்தொகுத்தறைந்தானுயாதுமிவற்றை, நிற்பாருஞ் சிலர்நில்லாக்குரம்பைதன்னை நிலையெனவேகருதியவப்பசுநாறன்னைக், கற்பாருஞ் சிலரமலன்காறும்வாக்கைக் கருதாதேயவனதடிக்கமலந்தன்னைப், பொற்பாருங்கருணையினுன்மற்றைநூலாற் பொருந்துதலமரிதுமலம்போக்கருறும்

எ-து நின்மலனாகியசதாசிவதேவநாயனார்பரதகண்டத்திலிருக்குமானிடர்க்குவா னானற்பமென்றுகருதிவேதாகமங் களைச்சுருக்கித்தமதுபஞ்சவத்திரத்தாற்காமிகா திதிவ்வியாகமங்களையருளிச்செய்தார். இப்படிச்சுருங் கச்சொல்லியிருக் கவுமதனை யோதியதிற்பொருளையறியாமலிருப்பாருஞ்சிலருளர்நீர்க்குமிழிபோலநிலையில்லாத சரீரத் தைத்திலையென்றுகருதிப்பிறப்பிறப் புக்கேதுவாகியபொல் லாதபசுநூலையே பொருளென்றதனைக்கற்பாருஞ்சிலருளர்ஆதலாற்சிவன்திருவுளம்பற்றியவேதாகம ங்களைப்பொலிவுபெற்றிருக்கிறதிருவருளினாலேயாராயாததற்கன்னியமானபசுநூல் களையாராயவதனாற்சிவனதுதிருவடித்தாமரைகளையடைதலுமும்மலங்களைநீக்கலுமரி தென்றவாறு [௨௬]

பதிமுதலியபதார்த்தமனாதியென்றுணர்த்துகின்றார்

ஆதியலச்செம்பினுக்குக்களிம்புதானுமாராயிலதற்கதுவுமனாதியாகு
மாதியலமூலமலமனுக் கட்கெல்லாமாணவமுமாருயிர்கட்கனாதியாகு
மாதியலப்பசுபாசமரிக் கவல்லவமலனுமாருயிர்களுமேயனாதியாகு
மாதியலவுலகத்தையடைக்கித்தன்பாலா க்குவதும்வினையுமுயிர்க்கனாதியா
மே ௲

எ-துசெம்பினுக்குக்களிம்புமாதியல்ல,அதனைவிசாரிக்குமிடத்துஅனாதியேஅதுபோ லான்மாக்களுக்கெல்லாமாணவமுமொருகாலத்திலுண்டாயதன்றுஅதுவும், வியா பியாயிருக்கிறவுயிர்களுக் கனாதியேபக்குவான்மாக் களுடையபாசத் துக்குவயிரி யாயுள்ளசிவனுமான்மாக்களுமாதியல்லவனாதியேதன்னிடத் திலேநின்றும்வியாத் தியாத்மிகமாகவுலகத்தையுண்டாக்கிமீளவுஞ்சத்தியாத்மிகமாகத்தன்னிடத்திற்கா ரியவுருவங்களையொடுக்குமிருவிதமாயையுமாதியல் லவனாதியேகன்மமுமாதியல்ல ச்சென்னந்தோறுந்தொடர்ந்துதொடர்ந்து வருகையாற் பிரவாகரனாதியாயேவரு மென்றவாறு

ஆதியென்பது-ஒருகாலத்துண்டாயது, அனாதியென்பதுசகசம் [௨௭]

அந்தச்சிவவாக்கியத்தைப்பக்குவான்மாவுக் குணர்த்தாதஅபக் குவர்க்குணர்த்திற் குற்றமுணர்த்துகின்றார்

போதகனாருமமலமும்போக்கித்தன்னுட் பொருவரியபரம்பொருளைப்
புணரவெண்ணு,மாதவனுக்கறைகவிறையமலன்வாக்கை மற்றையவர்க்கறை
யற்கமனத்துக்கெட்டா,வாதியருள்வாக்கியத்தையருத்தந்தன்னை யருநிதியா

ற்புகழ் முதலாலயர்த்துங்கூறிற்,பாதகனேபோதகனுமவர்களோடும் பற்றிடுவ
னெரிநிரையமங்கார்பற்றே

எ. து. ஆணவமுதலியமலங்களைநீக்கித்தன்னிடத்தில்வியாத்தியினாலேயன்றி யமாய்நிற்குமொப்பில்லாதசிவனையடைதற்குவிரும்பும்பெரியதவத்தினையுடைய மாணாக்கர்க்காசிரியனானவன்கருத்தாவாகியசிவனதுதிருவாக்கையுபதேசிக்க,அல்லாத அபக்குவர்க்குணர்த்தக்கடவனல்லன். அவர்களுக்குமனோவாக்குக்கெட்டாதசிவனருளிச்செய்ததிவ்வியாகமவாக்கியத்தைத்தான்- அதிற்சொல்லும்பொருளைத்தானைசுவரியநிமித்தமாகவும்,புகழ்முதலியநிமித்தமாகவுமறந்து முணர்ப் பனாயினந்தப் போதகனுமிகுந்தபாவான்மாவாயந்தமாணாக்கனோடேதானு மெரியாய்நிரயத்தையடைவன் அதினின்றுமவர்களைக்கரையேற்றுவார்யார்தாமென்றவாறு.

புகழ்முதலால் - என்பதனால் - மக்கள்சுற்றமென்னுங்காதலாலும் அரசன் முதலியோர்பயத்தாலும்மாறுகோளாலுமெனவறிக. [௨௮]

சிவபூசைக்குவேண்டுமுப யோகங்களுக்குட்டலைமையாகியபஞ்ச
சௌவியத்தின்முறைமையுணர்த்துகின்றார்,

வேறு

அறைந்தனமமலன்வாக்கையாலிடையாறுஞ்சொல்வாஞ் ✽
சிறந்ததிசிவபூசைக்குத்தேடரும்பொருள்களென்றே ✽
யிறந்தவரென்போடாமையினோடெழின்மார்பிற்பூண்டு ✽
புறம்புனத்தாடிபொற்றாள்புரிந்துமாதவபோதத்தில் ✽

எ - து - வாராய்மிகுந்ததபசினையுடையானேசிவனது திருவாக்கின்மகிமையைச்சொன்னோமேற்பசுவின்கணுளவாகிய கௌவியங்களாதியினையுஞ் சொல்லாநின்றோம்,மிவற்றைச்சங்காரகாலத்திலிறந்துபோனஅரியயன்முதலினோரொடும்புடலமையோட்டையுமெழில்பெருகியமார்பின்கண்ணணிந் துசுடலையினகண்டாநின்றசிவனதுபொற்பாதத்தைவிரும்பிச்செய் யுஞ்சிவார்ச்சனைக் குத்தேடுமரியபொருளென்றுநின்னறிவின்கட்சிறப்பினோடுமறியக்கடவையென்றவாறு. [௨௯]

அந்தக்கௌவியமுண்டாவதற்குக்காரணமுணர்த்துகின்றார்

அமரருமசுரர்தாமுமமிர் துணக்கருதிவெற்பைத் ✽

தமதுயர்பலத்தாற்றுங்கிக்கடைந்தபாற்கடலிற்றங்கிப் *
பவமுறுமரியதேனுப் * பஞ்சகம்பரமனாலே *
யவன்முடிக்கருகமானவாறுமவ்வைந்திருமே *

எ - து தேவர்களுமசுரர்களுமமிர்தமுண்ணவிரும்பித்தங்களுடையவலி பெலத்தினாலேமகமேருவைமந்தாகவெடுத்து வாசுகியென்னுங்கயிற்றாற்கடையப்பட்ட திருப்பாற்கடலிலேநின்றுஞ்சிவனருளினாலே, நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, யெனக்கூறியவைவகைப்பசுவுந் தோன்றிப்பின்புபூமியின்கண்ணேசிவபூசைக்கும்யாகாதிகன்மங்களுக்குமாகவுற்பவித்தன, வந்தவைந்துபசுவின்கட்சிவனதுதிருமுடிக்குரிமையான, கோசலம், கோமயம், பால், தயிர், நெய், கோரோசனை, யாகிய ※ கௌவியங்களாறுமுண்டாமென்றவாறு. [௩௰]

இதுவுமது.

உத்தமரோசனுந்தமுனைத்திடுமாறுமோரின் *
வித்தகப்பொருள்கள்வேண்டும்பலத்தினைவிளைக்குமென்று *
மத்தனையமலன்றன்னையாதரிப்பாருமார *
வித்திறத்திசையத்தோன்றும்பொருள்களுமியம்புவாமே. *

எ. து- பான்முதற்கோரோசனையீறாகவுரைத்தவாறுமாராயிற்சுத்தமாகியபொருள்களே, செகத்பிதாவாகியசிவனையர்ச்சிக்குமவர்களுக் கும்புசிக்கவவரவர்விரும்பியபோகங்களையெக்காலமுமுண்டாக்குமிப்படிக்கூறப்பட்டகௌவியங்களாறிலும்பொருந்திநின்றுதோன்றும்பொருள்களையுமேற்சொல்லுவாமென்றவாறு
கோரோசனையைரோசனையெனத்தலைக்குறைத்தலாக்கினார், கோசலத்துக்குத்திருவுண்டாகையாலும், கோமயத்துக்குவியாதிபோகையாலும், பாலுக்குச்சத்துருநாசமாகையாலும், தயிருக்குப்புத்திரருண்டாகையாலு,நெய்க்கியாவராலுமதிகபூச்சியமுண்டாகையாலும், கோரோசனைக்குவயதுஅதிகமுண்டாகையாலும்வேண்டும்பலத்தினையெனச்சிறப்பித்தார் [௩௧]

மேற்கூறியவற்றைச்சத்காரியவாதமாகவிசாரித்துணர்த்துகின்றார்

---

* பஞ்சகம்-ஐந்தின்கூட்டம் ※ கௌவியம்-பசுவின்கணுண்டாயது

கோமயமதனில்வில்வங் குறுமுறிகூடத்தோன்றும் ❋
பூமகளந்தவில்வம்புரிந்தநிற்பொருந்துமாற்றுற் ❋
றுமமார்வில்வந்தானுஞ்சிபலமென்றேசாற்று ❋
நாமரும்புனருமீசர்திருமுடிக்கணியெஞ்ஞான்றும் ❋

எ - து- கோமயத்தினின்றும்வில்வந்தளிருடன்றோன்றுமந்தவில்வத்தைத்தி ருமகள்விரும்பியதன்கண்ணிருக்குமுறையாலேமாலையாகக்கட்டப்படாநின்றவிந்த வில்வஞ்சிபலமென்றும்பெயராப்பெறும்- சிவனதுதிருமுடிக்கெக்காலமுமணிதற் குரியதாயும்விளங்குமென்றவாறு,

மற்றுள்ளபுட்பசாதிகளைப்போலக் காலைதப்பனையின்றியெக்காலமுஞ்சாத்து தற்குரித்தாகையாலெஞ்ஞான்றுமெனச்சிறப்பித்தார் [௩௨]

இதுவுமது.

உற்பலகமலமூலம்பின்பதிலுநிக்குநீரிற் ❋
பொற்புறுருங்குலியம்போலிந்தெழும்புரியயாரு ❋
மற்புதன்றனக்குமற்றையனைவர்க்குமுணவதாகக் ❋
கற்புறுசெந்நெல்பாலிற்கதிரொடுகலந்துதோன்றும் ❋

எ - து வில்வந்தோன்றியபின்கீலோற்பலக்கிழங்குந்தாமரைக்கிழங்குமந்தக் கோமயத்தின்கண்ணுண்டாம்,கோசலத்திகண்ணின்றுமெழின்மிக்கருங்குலியமான தெல்லாரும்விரும்பவிளங்கித்தோன்றும், பாலிலேநின்றுஞ்சிவனுக்குமற்றுள்ளதே வர்கள், மானிடர், முதாலானயாவர்க்குமுணவாகியசெஞ்சாலிமுதலிய சாலிபேத ங்கள்கதிரொடுபொருந்திப்புற்பவிக்குமென்றவாறு. [௩௩]

இதுவுமது

சந்தனமுதலாயுள்ளமங்கலந்ததியிறைகு ❋
மந்தரத்தமரருண்ணுமமிர்தமுநவநீதத்தாஞ் ❋
சிந்தையார்சித்திபேதஞ்சிறக்கரோசனையுஞ்செய்பு ❋
மந்திவான்வண்ணன்மேனிக்குருகமிவ்வாறுமாமே ❋

எ - து தயிரினிடத்திலேசந்தனமுதலிய மங்கலபதார்த்தங்கள்தோன்றும், வெண்ணெயினின்றும் விண்ணிலுள்ளதேவர்களருந்துமமிர்தமுண்டாம், கோரோச

னையாவரும்விரும்பியசித்திபேதங்களைத்தலைமைபெறத்தோற்றுவிக்கும், இங்ஙனங்கூறியவாறுஞ்செக்கர் வானம்போன்ற நிறத்தையுடையசிவனதுதிருமேனியிலாட்டிப்பணிதற்குரியனவாமென்றவாறு.

சந்தனமுதலாயென்பதனால், அகில், குங்குமமுதலியவெனக்கொள்க, நவநீதம்-வெண்ணெ. [௩௪]

நிறுத்தமுறையானேசிவனையவைகளாலருச்சிக்குமுறையுணர்த்துகின்றார்

ஆதலானெய்யாற்பாலாலாமிலமற்றுமற்றுங் ✽
கோதறுதயிறுைலுந்தழகனன்முடிமேலாட்டிச் ✽
சீதமதகன்றநீராற்றிளைப்புறவாட்டிச்சேர்ந்த ✽
வாதரவதனாலாட்டியாமலகாதியாவும் ✽

என்பது. வெளி, இதனுள், ஆமிலமென்பது, புளிப்பு. மற்றுங்கோதறுததி எ-து பால்காயாமனுலிழைவது, சீண்டுநாறுவது, முதலியகுற்றங்களில்லாததயிர், சீதமகன்றநீர், இளஞ்சூடானவெந்நீர், ஆமலகாதியென்பதனால், நெல்லிக்காப்பு, மாக்காப்பு, மஞ்சட்காப்பு, எனவறிக. யாவுமென்பதனால், இளநீர், பஞ்சாமிர்தமுதலாயினவென்க [௩௫]

இச்செய்யுண்முதலெனத்துதியியம்புமென்னுஞ் செய்யுளீறுகக் ✠ குளகமாக வுணர்த்துகின்றார்.

சீதளநீருமாட்டித்திகழ்திருமேனியீரம் ✽
பேதமதாகவாடைபிணைத்தரிதாகப்பெற்ற ✽
கோதில்கோரோசனைதிகுங்குமக்குழம்புங்கூட்டிக் ✽
காதலால்வில்வந்தன்னைக்கசடறக்கண்ணுற்கண்டே ✽

எ - து - வெளி, கண்ணினாலேபுழுக்கடியறப்பார்த்துஎன்றுகொள்க [௩௬]

உற்பலகமலத்தோடுமுவகையாற்சாத்திநெய்யாற் ✽
குற்குலுவதனாற்றூபங்கொடுத்தொளிகொடுத்தானெய்யாற் ✽

✠ தண்டியலங்காரம்- ௬- குளகம்பலபாட்டொருவினைகொள்ளும்

பொற்புறுபாயதானம்புரிப்பறுதிநீரின்போனற் *
சற்கனாதெனெய்கூட்டிச்சமைத்தவோதனமுந்தாமே *

எ - து - வெளி, இதறுள், உற்பலஞ்: செங்கழுநீர், குற்குலு, குங்குலியம் ஒளி, தீபம், பாயதானம் - பாலன்னம் [௩௭]

நிறைந்துறைநேயத்தோடுநிவேதனஞ்செய்கமற்றுஞ் *
சிறந்துளவுபசாரங்கள்செய்துசெய்முறைகடன்னிற் *
குறைந்துளவவைபுரிசபொறுத்தருளென்றுகூறித் *
திறம்பலவலமுஞ்செய்துதெண்டனைப்பணிந்துசேர்ந்தே *

எ - து - வெளி, இதறுள், உபசாரமென்றது, பஞ்சோபசாரம், தசோபசாரம்-சோடசோபசாரமெனவறிக. [௩௮]

அண்டங்களனைத்துமாக்குமலர்மிசையயனேபோற்றி *
யண்டங்களனைத்துங்காக்குமரியெனுமகிபபோற்றி *
யண்டங்களனைத்துமாற்றுமதிபெலவரனேபோற்றி *
யண்டத்தின்பேதத்தப்பாலறுதியேயமலபோற்றி *

எ - து - வெளி. [௩௯]

ஆருயிரனைத்துமீன்றவன்னையேயத்தாபோற்றி *
யாருயிரனைத்துநீங்காவரும்பெரும்பொருளேபோற்றி *
யாருயிர்ப்பந்தபாசமறுத்தரு * ளதுலபோற்றி *
யாருயிர்க்கமிர்தமானவன்பனேபோற்றிபோற்றி *

எ - து - வெளி, ஈன்றல், ஆன்மாக்களநாதியுமாய் நித்தியமுமாகையாலே விஞ்ஞானகலருட்டிலமபாகிய அனுசதாசிவர்முதலாயினார்க் குத்தநுவாதிகளைக் கொடுத்தலெனவறிக, அமிர்தமான, அன்பனென்பது, அமிர்தம்போலினிமைசெய் யுமன்பனெனப்பொருள்கொள்க [௪௰]

---

* அதுலம் - சமானமின்மை

எனத் துதியியமடும்பத்தர்க்கிட்டமிம்மைபினுஞ்செய்வன் *
றனக்குயர்ந்தாரொத்தாரையிலன்சிவன்சகளத்துற்று *
ளினைத்தருச்சனைசெய்துய்யநேசர்களாதலாலே *
வினைப்பகைவெல்வார்செய்கவருச்சனைவிதியினாலே *

எ - து - வெளி, மேறகூறியவினையெச்சங்களெல்லாமியம் புமென்னும்பெரொச்சவினையோடுமுடிந்தன, இம்மையினுமென்றவும்மை, மறுமையும் விளக்கிநின்றது, இச்செய்யுள்யாவர்க்குந்தோன்றாது நிட்களனாய்நின்றசிவன், சகளீகரித்தடியவர்பொருட்டுத்தியானாதிக்கெளியனானானதலாற்பிறவித்துயரநீங் கவேண்டினோரருச்சனைசெய்துபிழைக்கவெனப்புத்திகூறினதாயிற்று. [சக]

சிவபூசைசெய்வோரும் அதற்குபத்தியுடனேவல்செய்வோரும் பெறும்பயனுணர்த்துகின்றார்.

முற்றவத்தாலேபூசைமுற்றியபத்தர்மூவேழ் *
சுற்றமுஞ்சுவர்க்கமெய்தத்துன்னுதற்கரிதேயாய *
வற்புதனுலகந்தன்னைத்தாமடைந்திருப்பரன்பாற் *
சொற்பணிசெய்தார்தாமுந்துரிசறுநெறியினாலே *

எ - து - முற்செனனங்களிற்செய்த புண்ணியபலத்தினாலே விருப்பத்துடன் சிவபூசை செய்தவன்பரானோர், தங் குலத்தினுள்ளமூவேழ்சுற் றமுந்தேவலோகத்திற்செல்லத்தாம்பிறராலணுகுதற்கரியசிவலோகத் தைச் சேர்ந்திருப்பர், அதற்கன் பினாலேயேவற்றொழில்செய்தோர்களும்; பிறவித் துயர்தீர்க்குநன்னெறியாகியஞானத்தோடுகூடிச்சிவலோகத்தையடைவர்களென்றவாறு.

அடைந்திருப்பவென்பது, இடைநிலைத்தீபகம், மூவேழ்சுற்றம் - எது - மாதுர்வர்க்கம் -எ- பிதிர்வர்க்கம் -எ- தன்வர்க்கம் -எ- ஆ உயக [சஉ]

அர்ச்சனைக்குபயோகமான தருக்கண்முதலியவுமருச்சனையைத்தெரிசித்தோர்பெறும்பலனுமுணர்த்துகின்றார்.

அர்ச்சனைக்குபயோகங்களாகியதருக்காதி *
கற்புறு சிவலோகத்தைக்கலப்பதேதின்னாங்கண்டோ *
ரற்புதன்பூசைதன்னையருவினையறுவரன்பாற் *

றம்பரன்பூசைகண்டோர்சிவபுரமதனைச்சார்வார் ✽

எ - று - வெளி, [சஙு]

மேலதனைக்கேட்டோர்விரும்பினோரடையும்பலனுணர்த்துகின்றார்.

கேட்டுளார்மகிழச்சொல்வார்கிடைக்குமோவெமக்குமென்று ✽
வேட்டுளாருபகாரங்கள்விளைத்துளாரிவருமெய்ய ✽
நட்டுளார்பிறக்கிலிம்மண்ணுயகராவராகித் ✽
தேட்டுளார்சிவதன்மங்கள்வாதனைநிகழ்தலாலே ✽

எ - று - சிவார்ச்சனையின்பெருமையைக்கேட்டுளோர், கேட்போருள்ளமகிழவதனைச்சொல்வோர், நமக்குமிப்படிசிவார்ச்சனைசெய்யும்பேறுகிடைக்குமோவென்றுவிரும்பினோர், சிவபூசைக்குபகரணங்கள்கொடுத்துள்ளோர், இவர்களெல்லாருஞ்சிவலோகத்திற்சென்றுமவர்களாம்-அங்ஙனஞ்சிவலோகத்திலுள்ளபோகங்களையநுபவித்தமீண்டும்பூமியிலேதோற்றினிந்தலோகமெல்லாந்தானேயாளுநீதிவேந்தராய்த்தோன்றுவர் , தோன்றியுமுற்செனனத்திற்கேட்டல்வேட்டலுபசரித்தலாகியநல்லவாதனைவிளங்குதலையினலேசிவதன்மங்களையேவிருப்பத்துடன்றேடிச்செய்வர்களென்றவாறு.

இவருமென்றவும்மையிறந்ததழீஇயவெச்சம் -பிறக்கில்- என்றமையாற்சிவலோகபோகத்தைவிரும்பாமையாற்பொசித்தவர்களாண்டிருந்துதானேபரிபக்குவராய்ப்பரகதியடைவரொன்பது விளக்கிநின்றது. [சச]

இங்கிதையேபரமமானதன்மமென்றுணர்த்துகின்றார்.

தமக்கபராதமெபதஞ்சதமுறச்சாதித்தார்க்கு ✽
மிமைப்பொழுதெனினுந்துன்பமியற்றிடாவினிமைதன்னை ✽
யமைத்தநூலாதிதமிதென்றேயறைந்திடுமதனையாதி ✽
சமைப்பதேதலைமையானதருமமென்றறிகதக்கார் ✽

எ - று - வேதாகமநூல்கள், தமக்குயாதாமொருவர், வேறுவேறாகவெண்ணிறந்தகுற்றஞ்செய்திருமவர்களுக்கொருகாற்கண்ணிமைக்கொட்டுமளவாயினுந்துக்கத்தைச்செய்யாமனன்மையேசெய்யுமின்பத்தையே பொருளாகப்படுத்தியிதுவாயிருக்குமிதமாவதென்றுசொல்லாநிற்கும், ஆதலினாலேயந்தநன்மையைமுற்படச்செய்தலேமேலான, அறமென்றுதகுதியையுடையோரறியக்கடவரொன்றவாறு அமைந்துச்சொல்லுமெனக்கூட்டுக. [சரு]

சிவதன்மத்தின்விசிட்டமுணர்த்துகின்றார்

செப்பியவொப்பிலாதசிவதருமங்கடன்னைத் ❊
தப்பறநினைப்போம்யாமுஞ்சந்திகடோறும்யாரு ❊
மிப்படியென்னுவார்முன்னீட்டியவினைகளோட்டி ❊
யொப்பிலாவுமையாள்பாகன்புரத்தினிதுறைவரன்றே ❊

எ – து வாராய், அகத்தியனேயிங்ஙனங்கூறிய நிகரில்லாதசிவதன்மங்களைநா முங்காலை,யுச்சி,மாலை,யென்னுஞ்சந்திகண்மூன்றினுந்தப்பாமனினைப்போம்,எம்போ லிப்படிகருதுவாரியாவருமுற்செனனங்களிலார்ச்சித்தபாவங்களைப்போக்கியிணையி ல்லாதவுமையையொருபாசத்திலேயுடையசிவனது சிவலோகத்திற் போகங்களைப் பொசித்திருப்பர்களென்றவாறு.

யாமுமென்னு மும்மைமற்றுள்ளதேவர்களிருடிகண் முதலாயினருமெனவ றிக. [௪௬]

வெதத்துள்ளுமிச்சிவ்தன்மமேசிறப்பென்றுணர்த்துகின்றார்.

ஒப்பிலியனாதிமுத்தனோதியவேதத்துள்ளுஞ் ❊
செப்பியசிவதன்மங்கள்சிறந்தநேரியவேதேறுந் ❊
தப்பிலாப்பலத்தினாலேதடவரைநிகரசான்றோர் ❊
வைப்பெனவிவற்றைக்கொள்வர்மகற்பலவாஞ்சைபாலே ❊

எ – து – தனக்கொப் பாருமில்லாதுயனாதியேநின்மலனாயிருக்கிற சிவனருளி ச்செய்த வேதத்தினுமிச்சிவதன்மங் களைதலைமையையுடையனவாயதிருக்குமங்க ளாயிருப்பனவென்று தெளியப்படும்படியதிருக்குமங்களாயிருப் பினுந்தப்பாமற் றோற்றுவிக்கும்பலத்தினாலே மகமேருவைப்போலப்பெருத்திருப் பனவாசையினா லே யறிவுடையோர்மகத்தாயிருக்கிற பலங் களினுள்ளவிருப்பத்தாலேயவை யிற் றைத்தருமிந்தச் சிவதன்மங் களேயென்றதனைச்சேமிக்கும்பொருள் போலக்கைக் கொள்வரென்றவாறு.

மகற்பலம்வடமொழித்திரிவு [௪௭]

முடிநததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

என்றுபரமானதருமாதிகளிசைத்நான் ❊

றுன்றவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ✻
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைமைய ✻
நின்றமுனிவன்றனதகத்துநினைந்தே ✻

எ - து - வேடர்மகளாகிய வள்ளிநாயகிக் குத்தன் னளிசெய்தமகிழுங்குமரக்கடவுளானவன், தனுநிதனுயிருக்கிறசிவனைத்தியானஞ்செய்து பஞ்சேந்திரியங்களையுஞ்செயித்துக் கொடியகன்மங்கள்கெடும் படிதவத்தின்கணின்றவகத்தியமாவிருடியறியும்வண்ணம்பரமமானசிவதன்மங் களிப்படியென் றருளிச்செய்தானென்றவாறு. [௪௮]

ஞ. சருக்கமுடிவினுமிலம்பகமுடிவினும், விருத்தநடையதுவேறிசைப்பாவே, என்றவிலக்கணத்தாற்சிவத்துதியமகத்தாலுணர்த்துகின்றார்.

வேறு

ஆவிடையைத்தினையாடினனேயம்பரமன்றினுமாடினனே ✻
காவிடைவேடனுமானவனேகாசியென்மாநகரானவனே ✻
வாவிடைமுப்புரமாற்றினனேவார்சடைமேல்வருமாற்றினனே ✻
யானெனுமாசுமிலாதவனேயேனையமாசுமிலாதவனே ✻

எ-து- பாவிவிடத்துண்டாகிய பான்முதலிய கௌவியங்களைத்தினையுமாடாநின்றவனே, ஞானம்பரமென்னும் பொதுவினடம்பண்ணினவனே, விசையன்றபோபலத்தையளத்தற்பொருட்டுக் காட்டகத்துவேடவுருவங்கொண் டவனே,காசியென்னுநாமத்தையுடையதிருப் பதியையுடையவனே, பூமி, யந்தரிக்ஷமாகாசமென்னுமூவிடத்துண்டாகியமுப்புரத் தையெரித் தொழித்தவனே, நீண்டசடையின்மேலேயாயிரமுகத்தோடுவரா நிற்குங் கங்கையாற்றினையுடையவனே,யானென்பதற்குக்காரணமானவாணவமிருளில்லாதஞானுருத் தனே, மற்றும்முள்ளமாயைகன்மங்களுமில்லாதவனேயென்றவாறு. [௪௯]

இதுவுமது

அலைகடனஞ்சமருந்தினனேயானவநோய்க்குமருந்தினனே ✻
தலைகலனாகத்தரித்தவனேசார்ந்தவர்பாசத்தரித்தவனே ✻
மலைசிலையாக்கியதெள்ளியனேயிம்பனைக்காயந்துளதெள்ளியனே ✻
வினைபிணியானவெண்ணீற்றினனேவிபரீதமற்றவெண்ணீற்றினனே ✻

எ-து- தேவர்களாலேமகமேருவைமத்தாக்கி க்கடையுமிடத்தலேயாகின்றசமுத்திரத்திலெழுந்தவிடத்தையுண்டவனே, யாணவமுதலியபிணிக்குமருந்தாயிருப்பவனே, அயனதுசென்னியையாபரணமாகப் பூண்டவனே, திருவடிக்ழலைப்பலகாற்றிளைத்தோருடையபாசங்களையறுத்தவனே, மகமேருவைவில்லா க்கினவலியையுடையோனே, தாரகன், தாரகாக்ஷன்-வித்தியுன்மாலியாகியபொல் லாதமூவரையுமொருநொடியிலிகழ்ந்தெரித்தவனே-விலையில்லாததவளநிறத்தையு டைய திருநீற்றையணியுமவனே, ஐயந்திரிவில்லாதவேதாந்தத்துமுடிவாயுள்ளவனேயென்றவாறு

என் எ-து உரையென்றுமளவை— . [௫0]

குமரகுருபரனது திருவாக்கின்பெருமைகூறுகின்றார்

மலத்தைவல் வினைதனைமனவலியைவதைக்கவல்லநன்மதியினையுதவுந், துலக்கவெண்பிறையணிசடைமுடியன்றுணைப்பதந்தொழுமடியவர்துணைவன், மலைக்குநன்மகண்மதிநுதல்கணவன்மலர்ப்பதம்பெறுமுறவினுநிறைவு, மலக்கணண்டர்களறவொருகரமுன்னமைந்தசண்முகனருளியமொழியே,

எ - து - தேவர்களசுரவாதையாலுறுமனக்கலக்கந்திரும்படியவர்களொதிரோயொருதிருக்கையினையமைத்தருளிய சண்முகனென்னுந்திருநாமத்தையுடையோனருளிச்செய்ததிருமொழியான தான்மாக்களுக்குச்சகசமானவாணவமலத்தினையும்வலியினையுடையகன்மத்தையுமாயாகாரியமானமனமுதலியவந்தக்கரணங் களின்பெலத்தினையுங்கெடுக்கவல்லநல்லறிவினைக்கொடாநிற்கு- மஃதன்றிவிட்டுவிளங்காநின்றவெள்ளியவிளம்பிறையினையணியுஞ்சடாமகுடத் தையுடையனுமாய்த்தனதுசீபாதங்களிரண்டினையும்வணங்காநிற்கும்அடியவர்களுக்குயிர்த்துணைவனுமாயிமவானுக்குநல்லபுதல் வியானபிறைபோலுநெற் றியையுடையமாதேவிக்குநாயகனுமாயிருக் கிறசிவனதுசீபாதமலர் களைப்பெறும்ஐக் கியத்தினுநிறைந்து மென்றவாறு [௫௧]

அகத்தியனைவணங்குதியென்றுமனத்தினுக் குணர்த்துகின்றார்

நினைத்தநன்பலமெளியதின்முடியுநெருக்கியண்டர்கள்முனிவர்கள்பணியத் தனத்தனந்தனதனதனதனவென்சதிக்கிசைந் திடநடமிடுசதுரன் முனைத்தெழுந்தவர்புரமொருநொடியின்முருக் கியென்றவனருளியமொழிகளனைத்தையுந்தருமருமுனியனகத் தியன்திருவடிநினைமனமே

எ-து வாராய்நெஞ்சமே-யிந்திரியங்களைமுனியுமவனும்பாவமில்லாதவனுமா யிருக்கிறவகத்தியனதுதிருவடிகளைநினைக்கக்கடவை. நினைத்தானியென்னாிய நல்ல காரியங்களெல்லாமெளிதாகவேமுடியு-மஃதன்றித்தேவர்களுமிருடிகளுநெருங்கின் றவணங்கத்தனத்தனாதனதனாதன தனவென்னுமிராகதாளவொத்துக்கேற்ப ஆனந்தநிருத்தத்தைச்செய்யாநின்றதெள் ளிமையினையும்பகைத்தெழாநின்றதீயோரதுமுப்புரங்களையுமொருகணப்பொழுதின் கணெரித்தழித்தவெற்றியினை யுமுடைய சிவனருளிச்செய்ததிவ்வியாகமங்களினைத்தையுமறிவிக்குமென்றவாறு
முடியும் • தரும் . என்பன - முற்றுவினைகள் [௫உ]

முதலாவதுபரமதருமாதியியன்முற்றும்

இரண்டாவதுசிவஞானதானவியல்

மேலிவ்வோத்தெனனபெயர்த்தோவெனினிறுத்தமுறையானேசிவதன்மமுதலியவற்றைமேலையோத்திநுட்கூறி-யச்சிவதன்மத்தையுணர்த்துவிக்கிறசிவஞானதானத்தியைக்கூறுகையாற்சிவஞானதானுதி, யியலென்னும் பெயர்த்து,அச்சிவஞானம்பரஞானமெனவும்,அபரஞானமெனவும்இருவிதமாம்.இதனுள்.பரஞானமாவது-சிவனோடிரண்டற்று,அபேதரூபமாயிருப்பது,அபரஞானமாவது,காமிகமுதலியதிவ்வியாகமங்களெனவறிக,இத்தலைச்செய்யுளென்றுதலிற்றேவெனின்தலியற்கைகூறுவாமென்றசிரியன்கருதியவாறுணர்த்துதறுதலிற்று

அரியஞானத்தையயமுமையதும் *
பிரியவோராவியாகியபெற்றியைப் *
பருவமுற்றவர்பாலுபதேசிக *
ஞருநியோரவுரைப்பதுமோதுவாம் *

எ- து- போதகாசாரியனானவன் மாக்களிடத்துவைத்தநேசத்தாற்றனதுள்ளமுருகிஐயந்திரிவாகியவிருணிக்குதற்கழகியதிபமாய்விளங்குமியல்பினையுடைத்தாய்ப்பிறருணர்தற்கரிதாயிருக் கிறஞானசாத்திரத்தையுணரும்படிபக்குவரானமானுக்கிடத்துபதேசிக்குமுறையுஞ்சொல்வாநின்றேமென்றவாறு

ஐயமென்பது, இரட்டுறக்கருதல், மையல் எது - ஒன்றைவேறென்றாகவுணர் தல், ஐயமுமையலும்பிரிய, என்பது. ஏ௦ளிக்கடையாக்குக, உரைப்பதுமென்ற வும்மை.கேட்குமுறையுங்கூறுவதுவிளக்கலினெச்சவும்மை [௬]

குமாரசுவாமியானவரகத்தியனைவிளித்துச்சிவஞானவிசிட்டமுரைத்த வதனையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

சிந்தைசெய்கவகத்தியதீவினைப் ❀
பந்தமும்பசுபாசமுமாயையு ❀
மந்தமாயைபிறக்கியவாக்கையு ❀
மைந்துபோகநல்லார்க்குநரர்க்கரோ ❀

எ - து வாராயகத்தியனேபக்குவான்மாக்களுக்குச்சஞ்சிதமாகாமிய மான கன்மபேதமும், பசுத்துவமென்னும்பெயரினையுடையவாணவபந்தமு, மாயாபந்தமும், அந்தமாயையாலுண்டாகியதேகாதிபந்தமும்,கெடும்படிசிந்தைசெய்வாயென்றவாறு அரோ அசை [உ]

விதவெனப்படுந்தாதுவின்வித்தையி ❀
னுதையமுமுயிர்கட்குயிராகிய ❀
பதிதனக்குருவம்மதுபக்குவர் ❀
மதிதனக்குவிளக்கெனவாய்த்ததே ❀

எ - து - விதக்ஞானேயென்னும்வடமொழித்தாதுவிற் றோற்றியஞானத்தினது பிரகாசமுமந்தஞானந்தானே யான்மாக்களுக்குப்பிராணனுயிருக்குஞ் சிவனுக்குத் திருமேனியு, மந்தஞானந்தானேபரிபாகத் தினையுடையவான்மாக்கள்புத்திக்குத்தீபம்போலப்பிரகாசிக்குந்தன்மையுடையதுமாதலாலதனையறிவாயாகவென் றவாறு அதுவென்பதனையிருபாலுங்கூட்டுக,பதிதனக்குருவமென்பது. பரஞானத்தை க்கூறியதெனவறிக.ஏகாரம், ஈற்றசை [௩

ஆசிரியன்மாணாக்கற்குஞானசாத்திரத் தையுபதேசிக்குமுறைமையுணர்த்துகின்றார்

பருவமுற்றியபாவகமோர்ந்துபின் *
றிருகியோதுகவோதருமுண்மையை *
மருவிவாய்வருபாடையின்வல்லவர்க் *
கரியவாரியத்தாறுமறைகவே *

எ - து ஆசிரியனானவன், நாலுசாதியிலுமுள்ளோர்பாற்பருவமுதிர்ச்சியினாலே யுண்டாம்பத்திசிரத்தைமுதலியவற்றையறிந்தபின்புதனதுள்ளங்கசிந்து அபக்குவர்க்குச்சொல்லப்படாத ஞானசாத்திரத்தையுபதேசிக்க. அஃதெவ்வாறாலெனின்: பரதகண்டபூமியிலுள்ளோரும்பயின்றுவசனிக்குவரும்பாஷாபேதங்களுள்யா தொருபாஷைவல்லோர்க் கந்தந்தப்பாஷையினாலும்வடமொழிவல்லோர்க்குப் பெறுதற்கரியவடமொழியினாலு முபதேசிக்கக்கடவனென்றவாறு.

ஆரியத்தாறுமென்றவும்மைபாற், பிராகிருதம், சவுரசெனி, மாகதம், பைசாசம், சூளிகாபைசாசி, அவப்பிரம்சம், தேசி, எனவறிக. [௪]

இப்படியுபதேசஞ்செய்யுமாசிரியனை மாணாக்கன்சிவனெனச்சிந்திக்குமுறைமையுணர்த்துகின்றார்

ஒப்பிலாவொருவன்சிவனேதிய
வொப்பிலாவுரைதன்னையுரைத்தகத்
தொப்பிலாவுணர்வாக்கிடுமுத்தம
னொப்பிலாவரனேயெனவோர்கவே

எ, து, வெளி. இதனுளொப்பிலாவுணர்வாக்கிடுமுத்தமனென்பது. இணையில்லாத ஞானத்தையுண்டாக்கியவாசிரியன் [ரு]

பக்குவருக்கும் அபக்குவருக்கு ஞானநூலுணர்த்தியவாசிரியர்டையும்பலமுணர்த்துகின்றார்

பருவமுற்றவர்பாலுபதேசிகன் *
பரமனாக்குனவெண்குணம்பற்றுவன் *
பருவமற்றவர்பாலுபதேசிகன் *
நரகிடைப்படுவானெடுநாளரோ *

எ - து வெளி, எண்குணமாவன, சருவக்ஞனாதல், நிறைந்திருத்தல், அனந்

தாகிருதி, சுதந்திரதை, எப்போதுமிளையாதசத்தி, அளவில்லாதசத்தி, நிராமயனு யிருக்கை, எப்போதுஞ்சுத்தனுயிருத்தல், எனவறிக. அப்பர், மறுமாற்றத்திருத்தாண்டகம், நாவாரநம்பனையேபாடப்பெற்ருேநாணற்ருர்நள்ளாமேவிள்ளப்பெற்ருே, மாவாவென்றெமையாள்வானமரர்நாதனயனெடுமாற்கறிவரியவனலாய்நின்ட-தேவாதிதேவன்சிவனென்சிந்தைசேர்ந்திருந்தான்றென்றிசைக்கோன்ருனேவந்து-கோவாடிக்குற்றேவல்செய்கென்ருலுங் குணமாகக்கொள்ளோமெண் குணத்துளோமே, அப்பர். தனித்திருக்குறுந்தொகை, எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழி, லெட்டுவான்குணத்தீசனெம்மான்றனை, யெட்டுமூர்த்தியுமெம்மிறையெம்முளே, யெட்டுமூர்த்தியுமெம்முளொடுங்குமே, சுந்தரமூர்த்தி, திருக்கானுட்டுமுள்ளூர் பண்கொல்லிக்கௌவாணம், இரும்புயர்ந்தமூவிலையசூலத்தினனையிறையவனை மறையவனை யெண்குணத்தினனைச், சுரும்புயர்ந்தகொன்றையொடுதூமதியஞ்சூடுஞ்சடையானை விடையானைச்சோதியெனுஞ்சுடரை, யரும்புயர்ந்தவரவிந்தத்தணிமலர்களேறியன்னங்கள்விளையாடுமகன்றுறையினருகே, கரும்புயர்ந்துபெருஞ்செந்நெனெருங்கிவிளைகழனிக் கானுட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே, என்ருர்சமயகுரவர். முடிவிலாற்றலைதன்வயத்தனைமுற்றுணர்ச்சியைபேரருண், மடிவிலாட்சியைதூயமேனியைமற்றியற்கையுணர்ச்சியைப், படியிலாவியல்பாகநீங்கியபாசநோயைவரம்பிலின்புடையையுன்னடியேங் களென்றுமுனக்கடைக்கலமையனே, என்ருர்மேலோரும் [சு]

அபக்குவரிலக்கணத்தைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்ருர்

ஓதுவார்க்கிடையூறுசெய்பாரவர் ௸
வாதபாடணர்வாக்கைமறப்பவர் ௸
வெதமாதியவோதிவிடுப்பவர் ௸
சாதியாற்றணியாரெனச்சாற்றுவார் ௸

எ - து - ஆசிரியனிடத்தாகமமாதிகளையோதுமாணுக்கர்க்கோதுவியாமல்விக்கினஞ்சொல்லுமவரு, மொருவன்சொல்லாதவார்த்தையைச் சொன்னுனென்றவருடன்சொல்லுமவரு, மவர்சொன்னபொருளைத்தரியாமலுடனேமறக்குமவரும், வேதாகமபுராணங்களையோதியதனைப்பலகாலும் பயிற்ருதுவிட்டவர்களும், பார்ப்பார்முதலியநாற்குலத்தோரன்றியிழிகுலத்தோரென்றுசொல்லப்படுமவருமென்றவாறு [எ]

தன்னின்மிக்கநற்சாதியிற்றேன்றினர் *
இன்னதன்மையனென்றறியப்படார் *
பன்னுநூலின்பயன் முறைப்பற்றிலார் *
சொன்னசொற்பிறுஞ்சோர்வுறச்சொல்லுவார் *

எ - து - தந்தம்வன்னத்துக்குயர்ந்தசாதியிற் பிறந்தவர்களு,மின்னசாதியென்றறியப்படாதோரு, மாசிரியரிடத்திற்கேட்டநூலின்பயனைத்தரிக்கமாட்டாதோரு, மவரிடத்திற்கேட்டபொருளையதன்வழிசொல்லாமற்றவறச் சொல்லுமவருமென்றவாறு [அ]

சந்தபேதமுந்தானறியாரென *
விந்தவாறிசைத்தாரெழுவாயினர் *
நிந்தைசெய்துடனிக்கப்படுமவர் *
மந்தராமவர்தம்மைமதித்துமே *

எ - து - வடமொழி தமிழ்மொழியாகிய விருவகைச்சந்தபேதத்தையறியாதோரும், அகங்காரத்தாலேதம்மைப்பெருமையாகளெண்ணுவோரும்,மந்தபுத்தியாயுள்ளோருமெனவிந்தமுறையிற் சொல்லப்படுமவர், முதலாயினோரெல்லோரும், அபக்குவரென நிந்தித்தக்கணமேதள்ளப்படுமவரென்றவாறு — எழுவாயினரொன்பதனுல், ஆசிரியர்சொன்ன அருத்தமிருக்கத்தானொன்றைக்கற்பித்துக் கொண்டுசொல்லுமவன், ஏட்டிலிருந்தபடி சொல்லாமல்வேறொன்றாகச்சொல்லுமவன், தன்னுடையசித்தாந்தத்துக்குவிரோதமாகச்சொல்லுமவன்.இவர்கண் முதலாயினோரெனவறிக, சந்தபேதமாவன, பஃறொடைவெண்பா ✠ ஒத்தமைந்தசந்தத்தறுபெயரையாய்ந்துரைப்பி னுத்தமத்தியுத்தமேமத்திமமொத்த, நிலையொடுநன்னிலகாயத்திரியுட, னுட்டிணிக்கனுட்டிப்புடன்பங்திபந்தி, திருட்டிப்புடன்சகதிசேருமதிசகதி, சக்குவரியதிசக்குவரியட்டியதி, யட்டிதிருதியதிதிருதியாங்கிருதிமேவுபிரகிருதியாகிருதியேவிகுதி, சங்கிருதியபிகிருதியுற்கிருதி, யோடிருபானுறென்றேபோர், என்றார் வீரசோழியமுடையார், இவ்வடமொழிச்சந்தம் வன்னவிருத்தமெனவு மாத்திராவிருத்தமெனவுமிருவிதப்படும்.

✠ வீரசோழியத்தில்யாப்புஅதிகாரம் - ௩௰ம் - கவியுள்சந்தம் - உ௬ம்.அவைக்குதாரணமுமுள,அவற்றைத்தெரிந்துணர்க

கலித்துறை

இருவிதஞ்சந்தமிவற்ருென்றெழுத்தாலிலங்குமற்றை.யொருவிதமாத்திரையாலேயொளிருமொளிருமிது, பொருவரிதாகியவாரியத்துண்டுபொதியமென்னு,மருவாமாதவன்கூறுந்தமிழுக்கருகமன்றே

அருகமருந்தமிழ்க்காரியத்தும்மெழுத்தானுதித்து,வருகின்றசந்தவிதமென்றுளத்தின்மதித்திடுக, வொருவனையெல்லாவுயிர்க்குமுயிராயொருவலில்லா, நிருமலன்றன்னைப்பதம்பணிந்தேத்திடுநேசர்களே, என்ருேதினர் – மெதுகுரவர் [௬]

அப்பக்குவர்க்குப்பொருண்முதலியவாசையினுன்ஞானநூல்கூறிற்குற்றமென்றுணர்த்துகின்ருர்.

ஓதுவிப்பவனெப்பிலிகற்புரா ❋
பூதலப்பொருளைப்பொருளென்றெணி ❋
யாதனைப்படுவன்னரகத்திழிந் ❋
தாதனுக்கவண்மிக்குறவாரன்ருே ❋

எ – து – தனக்கொப்பொருவருமில்லாததிவ்வியாகமமுதலியவற்றைப்பூமியின்கணுண்டாகியதனதானியந்துகின் முதலியபொருள்களைப்பொருளாகக்கருதியப்பொருளாசையாலோதுவிக்குமாசிரிய னரகத்தின்கண்விழுந்து மிகுந்தவேதனையையுறுவன், அப்படிபபட்ட வறிவில்லாதவனுக் கவ்விடத்திலுதவுவாராரையோவென்றவாறு. [௰]

பக்குவர்க்குஅதனைப்போதித்தபோதகன்பெருமையையுணர்த்துகின்ருர்

ஆக்கைநோயெனவஞ்சினர்க்கற்புதன் ❋
வாக்கையோதுமதிதிகழ்மாதவ ❋
னேக்கமூன்றுடைநோன்மையன்வான்பிணி ❋
போக்குவாரவனன்றிப்புவியுளார் ❋

எ – து சரீரத்தைவெறுப்பினாற்பிணியென்றஞ்சியமாணுக்கர்க் கதிசயஞன சிவனதுவாக்கியத்தையுபதேசியாநின்ற வறிவினால்விளங்கும், பெரியதவத்தினையுடையபோதகாசிரியன்மூன்று திருநயனத் தையும்ஞானவலியினையுமுடையதெக்ஷணமூர்த்தி, யவனேயன்றிப்பூமியின்கட்பிறவிப் பெரும்பிணியைப்போக்குமவர்

எவர்தாமென்றவாறு,   ஆர் - எது - வினவுதல் [௰௧]

இதுவுமது

ஈசன்றானுமிவ னிடத்தேய்ந்துயிர்ப் ✲
பாசந்தன்னைப்பறிப்பன்பழுதகல் ✲
வாசகந்சொல்வன்மற்றிவன்றன்புகழ் ✲
பேசுவாரெவர்பேசரும்பெற்றியால் ✲

எ - து பரமசிவனுமிந்தஞானாசாரியனையதிட்டித்துக்கொண்டான் மாக்களுடையபாசங்களைத்தீக்ஷையினாலேசேதித்துப்பின்பு குற்றமில்லாதஞானத்தையுபதேசிப்பனிந்தஞானாசிரியன்புகழான தியாவராலுமளவிட் டுரைத்தற்கரியமுறைமையுடைத்தாகையாலெவர்தானதனைச்சொல்லவல்லாரென்றவாறு.

பறிப்பனென்றும், வினைமுற்று ஈண்டு வினையெச்சமாய்த்திரிந்தது, மற்று எ-து உரையசை [௰௨]

மேலெய்தியதனிலக்கிக்கொடுப்போன்முறையுங்கொள்வோன்முறையுங்கூறுகின்றார்.

தடுத்ததன்னியன்பாற்கொள்கசாத்திரங் ✲
கொடுக்குந்தேசிகன்றங்குலத்தில்லையே ✲
லடுத்தவன்னியனேயருகன்றேறிற் ✲
கொடுக்கொணாபரமார்த்தங்கொடுப்பதே ✲

எ - து - அந்தணராதிஞானகாண்டத்தையருளிச்செய்யுமாசிரியன்றற்சாதியிலில்லாவிடத்திற்றம்மிற் கிழாகிய க்ஷத்திரியனிடத்திற் கேட்கப்பெறும்அவனுந்தற்சாதியிலில்லாவிடத்துவைசியனிடத்திற்கேட்கப்பெறும் அவனுந்தற்சாதியிலில்லாவிடத்துச்சூத்திரனிடத்திற்கேட்கப்பெறுஞ், சூத்திரன்றற்சாதியினுந் தனக்குயர்ந்தசாதியிலுங்கேட்கலாம், அனாயன்முதன்மூவருமவரவர்க்கடுத் தமேற்குலத்தோருக்குக்குருவுமோபதேசங்கொடுக்கப் பெறுநாகுருபதேசங்கொடுத்தலேயுரித்தாமென்றவாறு.

தங்குலத்தில்லையெனவென்பதனாற்றங்குலத்திற்பெறுதலே சிறப்புடைத்து,

எகாரம் தேற்றம், சனகன், அனையனாயிருக்கவுஞ், சுகர்முதலியபிரம்மரிஷிகளுக் குஞானத்தைப்போதிக்கையாலும், விதுரர்; நாலாம்வன்னமாயிருக்க, ஞானத்தைத்தருவார்க்குப்போதிக்கையாலுங்கூறியதெனவறிக. [௰௩]

உரைத்தாமென்றலென்னுந்தந்திரவுத்தியாற்சிவஞானத்தையுபதே
சிக்குமுறைமையுணர்த்திமேல்தனையெழுதியபுத்தகத்தைத்தான
ஞ்செய்யுமுறைமையுணர்த்துகின்றார்

வேறு

ஒப்பரியவரனமலனுரைத்தவுரையுதவுமுறை *
செப்பினமெய்த்தவசிறந்தசிவஞானகோசத்தை *
யப்பரிசேயருந்தவர்க்குமடைவிக்குமடைவினையுந் *
செப்புவங்கேளிந்தார்க்குமிரந்தார்க்குஞ்சிறப்புறவே *

எ - து வாராய்சத்தியமானதபசினையுடையவனே, தனக்கொப்பொருவரு மில்லாதசிவனருளிச்செய்ததிவ்வியாகமத்தையாசிரியன் மாணாக்கர்க்குபதேசிக் குமுறையைச்சொன்னேம், மேற்சிறப்பினையுடையசிவாகமங் களைவரைந்ததிருமுறையைப்பரிபக்குவராயிருக்கிறவரியதவத்தினையுடையோர்க் குமுதவுமுறைமையினையுமீவோர்க்குமிரப்போர்க்குமித்தானமே, சிறப்புடைத்தென்னும் வண்ணஞ் சொல்லாநின்றேமதனைக்கேட்பாயாக, வென்றவாறு.

அருந்தவர்க்குமென் றவும்மை, ஆசிரியர்க்குமென, எச்சவும்மையாயிற்று, அடைவினையுமென்னுமும்மை, யெண்ணின்கண்வந்தது. [௰௪]

சிவஞானகோசதானஞ்செய்வோர்சிவன்முதலாயினா
ரையருச்சிக்குமுறையுணர்த்துகின்றார்

பராபரனைமுதற்பூசைபண்ணிடுகவதன்பின்பு *
பராபரனுக்கொத்தபரஞானத்தைப்பரிவுறவே *
பராபரனைப்போதிக்கும்பரஞானம்பாலிக்கும் *
பராபரனைத்தேசிகனையதன்பின்புபகர்விதியால் *

எ - து சிவஞானகோசத்தைத் தானஞ்செய்வோன்முதற்கட்பராசத்திக்கு மேலானசிவனையருச்சனைசெய்யக்கடவன், அதற்குப்பின்பந்தச்சிவனுக் குங்கரான, பரகதிஞானமானதிருமுறையையன் பினோடேயருச் சனைசெய்யக் கடவன் அதற்குப்பின்புசிவனையறிவிக் குமேலான சிவஞானத்தையுபதேசிக்கும்பராபரனாயிருந்துள்ளவாசிரியனையாகமத் திற்சொல்லிய குருபூசாப்பிரகாரத்திலேபூசிக்கக் கடவனென்றவாறு.

பூசைபண்ணிடுகவென்பதனையும், விதியால், என்பதனையும், யாண்டும், வருவிக்க. [௰௫]

வித்தியாதானஞ்செய்தற்குமண்டபவிதியுணர்த்துகின்றார்

பூதலத்துளவலங்கள்பொருந்தாதுகுணம்பொருந்து *
மாதலத்துளெண்முழத்தால்வகுக்கமுறைமண்டபத்தை *
மீதியற்றவரிதெனின்முழத்தாலுமியற்றிடுக *
கோணொழித்தநாற்கோணம்வட்டமுமாங்கூறியதே *

எ - து பூமியின்கண் அவலமெனக் கூறியஅதமபூமியைப்பொருந்தாமல்பார்ப்பார்முதலிய நாலுவன்னத்தார்க்கேற் றவன்னகெந்தரசங் களைத்தனித்தனியேயறிந்தந்தப்பூமியின்கண்வித்தியாமண்டபத்தையெட்டுமுழத் திருலேலவிதிவழிசெய்கவிங்ஙனஞ்செய்யக்கூடாவிடத்துநான்குமுழத்தினாற் செய்யக்கடவன், இந்தமண்டபஞ்செய்யுமிடத்துக் குற்றமற்றசதுரசிரமாகவும்,வட்டமாகவும், செய்யலாமென்றவாறு.

சதுரசிரம்சிறப்பிக்குமிடத்துநாலுதிக்கிலுநாலுமற்சியமாகக் கவராயங்கொண்டுசிறப்பித்தநிற்சதுரசிரம்சிறப்பியாவிடத்துவாயக்கப்பெறாதாதலாற்கோதொழித்ததெனச்சிறப்பித்தார். [௰௬]

இதுவுமது.

அதனடுவேயம்புயத்தைவண்சுதையாலமைத்திடுக *
விதனயலேமற்றுமுளவலங்காரமியற்றிடுக *
விதமுறவேயிதன்மீதுவிரித்திடுகவிணைமலருஞ் *
சிதநிறத்தநவவறுவையதன்மீதுசேர்த்துகவே *

எ - து அந்தமண்டபத் தினடுவேயழகியமாப்பொடிமுதலிய வெள்ளையினாலேயெட்டிதழ்த்தாமரையையிடுக, இந்தப்பதுமத்தின்பக்கங்களிலேமற் றுள்ளவல்லிமுதலியவலங்காரங்களைச்செய்க, விப்படியலங்கரித்தபதுமத் தின்மேலே நானாவிதமானசுகந்தபுட்பங்களையும் பரப்பியதன்மேலேவெண் ணிறத்தையுடைய கோடிப்பரிவட்டம் விரிக்கக்கடவனென்றவாறு [௰௭]

இதுவுமது

தண்டரளநிரைவிரவுதம்பங்களொருநான்கு *
கொண்டதனுனற்றிசையுங்குறிபெறவேநிறுவிடுக *

வெண்டரள விதானத்தை விரித்திடுகமீதுறவே *
பொண்டரளமாலைகளுங்கந்துகமுமொழுக்குகவே *

எ - து முத்துக்களையொழுங்குபெறவழுத்திச்செய்ததூண்களு ஞ்சினையும், மண்டபத்துக்கேற்பக்கொண்டந்தமண்டபத் திலுற்றிசையுமழகுபெறநாட்டுக,வத ன்மேலேபொருந்தும்படிமுத்துமேற்கட்டியையுங், கட்டியொள்ளியமுத்துமாலை களு, முத்துப்பந்தினையுங், கொடுங்கையிற்கட்டித்தூக்குக, வென்றவாறு [௰அ]

இதுவுமது

கண்டையுடன்சாமரையுங்கட்டிடுகபட்டினையுந் *
துண்ட * மதிபுற்புதம்பொற்றர்ப்பணங்கடுலக்கிடுக *
திண்டிகழ்கும்போதகத்தைத்திசைநான்குஞ்செறித்திடுக *
புண்டரிகவலரதன்வாய்ப்பொருத்துகவங்குரம்புரிந்தே *

எ - து கண்டையாகியமணி யையுஞ், சாமரையையு, நானாவிதமானபட் டுப்புடைவையையுங், கொய்சுகட்டுக, அர்த்தசந்திரனைப்போன்றபிறையையு, நீ ர்க்குமிழிபோன்றதட்டையையும், பொலிவினையுடையகண் ணாடிகளையும், விள ங்கும்படிகட்டுக, திண்மைவிளங்கியசலம்பூரிதமானசாந் திகும்பங்களை நாலுதிக் கிலுந்தாபிக்க, முதற்கண் அங்குரார்ப்பணஞ்செய்துபின்பந்தச் சாந்திகும்பங்கண் மேலே தாமரைப்பூக்களைச்சாத்தக்கடவனென்றவாறு [௰௯]

சிவஞானகோசத்துக்குச்சிங்காதனமுமியந்திரபீடமுமியற்
றுமுறைமையுணர்த்துகின்றார்

அணியுறவேயரிபரிக்குமாதனத்தையரக்கிடுக *
மணியுறவேமதகரியின்கோட்டாலுமற்றிதுதான் *
பணவரிதேற்சந்தனத்தும்பண்ணிடுகவியந்திரத்தைத் *
திணமருவுமதகரியின்கோட்டாலுஞ்சிறப்புறவே *

எ - து ✠ விசுவகன்மியமுதலியவற்றிற் கூறியபதுமமுதலியவாதனபேதத்திற் சிங்கங்களழகுபெறத்தாங்குமாதனமாகியசிங்காதனத்தை நவரத்தினங்களுமிட் டமுத்திமதம்பொருந் தியயானைக்கொம்பினுலே செய்க, இந்தச்சிங்காதனம் பண்

---

* மதி. புற்புதம், எனபன. வுவமவாகுபெயர்
✠ விசுவகன்மியம். சிற்பநூல்

லக்கூடாதாயிற்சந் தனமரத்தினாலுந்: திண்மைபொருந்தியயானைக்கோட்டினாலு மியந்திரபீடத்தைச்செய்க, வென்றவாறு

மற்று வினைமாற்று,திணம் திண்மை கோட்டாலுமென்றவும்மையாலாதனங்களிரண்டும்,பொன்,வெள்ளி,செம்பு, பித்தளைகளினாலுஞ்,சந்தனமுதலிய தேவதாருக்களினாலுஞ், செப்பதுமாமென்க, இயந்திரபீடஞ் செய்யுமிடத்து முற்கூறியவற்றுளியன்றதொன்றை ப்பதினெட்டங்குலநீளமும்; மிரண்டங்குலச் சுற்றுப்பருமையுமுருண்டதாதல், சதுரகிரமாதல் நாலுதண்டத்தையுண் டாக்கி யதனுனிகளிற்றுமணமுகிழமாகப்பண்ணியதனடுவே துவாரமிட்டதனடுவிற் கயிறுகோத்துஇயந்திரபீடஞ்செய்க, அல்லதிருபத்துநாலங்குலநீளந்தண்டத்திறுயரமுமதிற் பாதிவிசாலதண்டங்களுங்கொண்டுசெய்க [உ௰]

இங்ஙனங்கூறியவாதனமுந்திருமுறையுமண்டபத்தில்வைக்குமுறை யுணர்த்துகின்றார்

இத்தகையவாதனத்தை யிலங்குமணிப்பந்தரிடை *
வைத்ததுவைகந்தமலரதன்மீதேமலிவிக்க *
வித்தகன்வேதகனுதி விளம்பியவாய்மொழியெழுதும் *
புத்தகமுமதன்மீதுவைத்திடுக புணர்வுறவே *

எ-து இத்தகைமையோடேகூடியசிங்காசனபீடமாதலியந்திரபீடமாதல்விளங்காநின்றவழகியபந்தலினடுவேவைத்ததின்மேலேபரிவட் டமும் விரித்துமணமிய பூக்களுநிறைக்கவதன்மேலேசுத்தனுமாயான்மாக்களுக்கறிவிப் பானுமாயிருக்கிறசிவனருளிச்செய் ததிவ்வியாகமத்தையெழுதும்வெள்ளேட்டுத்திருமுறையைப்பொருந்தும்படிவைக்கவென்றவாறு

எழுதும்பொத்தகமுமென்றவும்மையாலெழுதினபுத்தகமுமெனவறிக [உக]

மேலதனைப்பூசைசெய்யுமுறையுணர்த்துகின்றார்

எழுதாதபுத்தகத்திளிருத்தியசொற்புத்தகத்தைப் *
பழுதாகாரோசனையக்குங்குமத்தைப்பாளிதத்தை *
யழகாகப்பூசிடுகவலர்மாலைதனையணிக *
வழுவாதமணிவுபவேசாத்திடுகவத்திரமும் *

எ-து ✠ ஏலேகத்தின்மேலேவைத்திருக்கிற சிவாகமங்களெழுதியதிருமுறையி

✠ ஏலேகம்; வெள்ளேடு

லேகுற்றமற்றகோரோசனையையுங்குங் குமத்தையும் கற்பூரத்தையு மழகுபெறப் பூசிப்பூமாலையணிந்துதவறற்றவன்பினாற்பரிவட்டமுஞ்சாத்துகவென்றவாறு [௨௨]

இதுவுமது

எத்தொகையகமியமிர்நின்விதமுளநல்லினிமையுற *
வத்தொகையவிதத்துடனேநிவேதிக்கவமிர்தினையும் *
பத்திபெறுதீபமுடன்பஞ்சவிததூபத்தை *
யுய்த்திடுகமற்றுமுளவுபசாரமுறையுறவே *

எ - து வெளி - நாழியரிசிக்குஒருபலங்கறி [௨௩]

மேனிருத்தமுறையாலேபஞ்சவிததூபத்தைவகுத்
துணர்த்துகின்றார்

ஐவகையதூபங்களாவனதான் குந்துருக்கந் *
துய்யபசுங்கற்பூரந்துன்னரியகாரகில்வெண்மை *
யெய்தியசந்தனமினியகுற்குலுவுமெனவறிக *
நெய்யதனாற்றிருவிளக்கைக்காபிலத்தானிகழ்த்துகவே *

எ - து ஐந்துவிதமானதூபங்களாவன- குந்துருக்கமுஞ், சூடன் கற்பூரமும்; வயிரமாகமுற்றியகாரகிலும், வெண்மைபொருந்தியசந்தனமு, மினிமை செய்யுங்குருஞ்சிதாரியு, மெனவறிக, சன்னிதியிலிடுந்திருவிளக்கைக் கபிலைப்பசுவினெய்யினாலேயிடுக, வென்றவாறு

கபிலையைக்காபிலமென்றார் [௨௪]

அதனைவலம்வந்துவணக்கஞ்செய்யுமுறையுணர்த்துகின்றார்

வலஞ்செய்துதண்டதனைமானவிதிவழிதழுவத் *
தலந்தன்னிற்பணிந்தெழுந்தலைகரமற்றிருகன்னந் *
துலங்குமுகவாய்புயங்களெனுமெட்டுந்தோய்ம்பி *
னிலங்குசிரங்கரமுழந்தாளெனுமைந்துமிசைந்திடவே *

எ து வெளி [௨௫]

குருபூசையுணர்த்துகின்றார்

இந்தவகைசிவஞானபூசையினையியற்றியுடன் *

கந்தமலர்ப்பூங்கோயிலதற்கயலேகடிதமைக்க *
வந்தமலர்ப்பந்தரிடைத்தேசிகனைப்பருச்சிக்க *
பந்தமறுத்தருள்வானைப்பரமனெனபாவித்தே *

எ - து - வெளி-சிவனுஞ்சிவஞானமுங்குருவுந்தம்மிலொக்குமோவென்னிற் சிவனுக்குயாதொருமகிமையுண்டுசிவனிடத்திற்றோன்றியசிவஞானத்துக்குமப்படியே-அந்தச்சிவஞானத்துக்குயாதொருமகிமையுண் டுஅதனையறிவிக்குமாசிரியர்க்குமப்படியே,அஃதெக்காரணத் தாலென்னிற்சிவனாசிரியமூர்த் தியாயிருந்தான்மாக்கள்பாசத்தைத்தகித் துச்சிவஞானத்தைப்பிரகாசிப்பிக்கையாற்சிவன்முதலியமூவருக்கும்பூசைசெய்தபலமொக்குமெனவறிக [உசு]

ஆசிரியனிடத்தனுமதம்பெறுமுறையுமேற்செய்யுங்கன்மமு
மூன்றுசெய்யுளாற்குளகமாகவுணர்த்
துகின்றார்

பூசித்துப்பரமசிவன்பூசனையைப்போலுளத்து *
ளாசற்றுவலஞ்செய்துபணிந்துகுவித்திருகரமுந் *
தேசுற்றதேசிகனேசிவஞானதானவினை *
யாசற்றுநிறைவேறவனுமதஞ்செய்கெனவறைந்தே *

எ - து - வெளி-ஏசறவு-மனமுதலியவிகாரங்களையகற்றுதல்-ஆசு-குற்றம் [உஎ]

அற்புதனைமாரியன்றனனுமதிபெற்றறன்மூழ்கிப் *
பொற்புடையவெண்கலிங்கம்புனைந்தணிந்துவெண்ணீறுந் *
தற்பரனையுள்ளினைந்துதரணிமிசைப்பணிந்தெழுந்து *
சொற்பதவாசகமுறையைத்துயக்கறவேவிரித்துடனே *

எ - து - வெளி - அற்புதன் - அதிசயன் - விரித்தல் - சேமநீக்குதல் [உஅ]

மற்றைமுறையதுதன்னில்வனாககவியொருநான்கென் *
றுற்றமுறைதனையொடுக்கவுவகைபுறவொருமைபுட *
னற்புதனைத்தேசிகனையருத்திடுகவன்றெதி *
கற்புடையவிரதியர்க்கும்வேதியர்க்குங்களிப்புறவே *

எ - து- வெளி-விரதியர்-பிரமசாரியும்மையாற்சன்னியாசியுமெனப்பெறும் [உகூ]

* பூரிபோசனமுணர்த்துகின்றார்

விருத்தர்நிருபரார்பாலர்மிடியரடுபிணியாள *
ரொருத்தரையுமற்றோர்களூனத்தாரொனுமிவர்க்கு *
மருத்திடுகவுறவினுடனதன்பின்முனருந்திடுக *
✠ பிருத்தியரையதன்பின்புபேணிடுகபிறரையுமே *

எ - து - அறுபதுவயதுக்குமேற்பட்டகிழவமார் - பேராசையுடையவர்கள் - சிறுபிள்ளைகள் - தரித்திரர் - வியாதியினுல்வாதைப்படுவோர்கள் - அனுதர் - குருடர் - என்றிங்ஙனங்கூறியவெல்லோர்க்கும் - அன்னதிகளைப்பொசிப்பிக்க - அதற்குப்பின்பு - மாதாபிதாவுறவின்முறையாரைக்கூட்டிக்கொண்டு - தானும்பொசிக்க - அதன்பின்பு - தனதாளடியாரையும் - தற்காலத்திலேவந்தஅதிதியர்களையும் - இன்னுமொன்றுவரையாமற்பொசிப்பிக்கஎன்றவாறு [ரு௰]

பெலியிடுமுறையுமதிவாதனமுமுணர்த்துகின்றார்

அற்றைநிசிக்கணபலியையமைத்திடுக துயிலினையும் *
பற்றிடுகபிரமசாரியல்லாதார்பற்றொழிக *
மற்றைநாண்முதல்யாமமண்டபத்தையிருமூழுத்திற் *
கற்புறவேயமைத்திடுககாண்பார்கண்களித்திடவே *

எ து அன்றிரவுஉருத்திரகணமுதற்சேத்திரபாலனீறாகவுள்ளகணங்களுக்குப் பலியிடடுப்பின்புபிரமசாரியாயினுறக்கஞ்செய்க இல்வாழ்வானுகிலுறங்காதொழிக மற்றைநாண்முதற்சாமத்திலிரண்டுமுழநீளத்திலுமவ்வளவகலத்திலு மொருமண்டபத்தைவிதிப்படிகாணுமவர்கண்மகிழ்ச்சியுறும்படிசெய்கவென்றவாறு [ருக]

பின்புமோர்விதியாற்சரசுபதி பீடவிதியையுஞ்சிவஞானத்தைப்பூசைசெய்யும்விதியையுமுணர்த்துகின்றார்

அழகுறவேசரத்தாலுமமைத்தவியந்திரபீடத் *
தெழிலுடையபுத்தகத்தையிருத்தியருச்சனையியற்றிப் *
பழுதறுநாகரநந்திமுதலிபியைப்பயின்றுவலா *

---

* பூரி - ஈண்டு - மிகுதி -
✠ பிருத்தியர் - அடிமைகள் -

னெழுநிடுகபடித்திடினுமருச்சனைதாவிக்கதைக்கே ✽

எ - து முற்கூறியமண்டபத்தின்கண் நாணற்கழிமுதலியவற்றாலழகுபொருந்த விருப்படிசெய்தசரசுபதிபீடத்திலுறப்பழசினையுடையஸ்ரீமாதிருகையாகிய திருமுறையையெழுந்தருளப்பண்ணி ப்பூசைசெய்துகுற்றமில்லாதநந்திநாகரந்தேவநாகரமுதலானவெழுத்துக்களை யெழுதித்திருந்தவனை யெழுதக்கடவன், அதனை நாடோறும்படிக்கும்போதுமிந்தமுறைமையிற்பூசைசெய்துபடிக்கவென்றவாறு

முதலிபியென்றதனுல்வடமொழிதெலுங்குமுதலாயின படித்திடினுமென்றவும்மைமிறாததமிழியெச்சம் [௬௨]

மேற்செய்யுங்கன்மமுணர்த்துகின்றார்

அந்தமுறினுபவசியாயமலனடியருச்சிக்க ✽
செந்தழலையோம்பிடுகதிருமுறையையரிச்சிக்க ✽
பந்தனையயறுத்தருளைப்பாலிக்குங்குருபரனைச் ✽
சிந்தைமகிழ்ந்தரிச்சனையைச்செய்திடுகசிறப்புறவே ✽

எ - து - எழுதிமுடிந்தன்னாளின்வித்தியாதானஞ்செய்வோன்பிராகாரியாயிருந்துசிவபூசையக்கினிகாரியமுஞ்செய்து அங்ஙனமெழுதினதிருமுறையை ச்சாந்திகும்பந்தாபித்திருக்குமண்டத்திற்பூங்கோயிலின்கண்வைத்துப்பூசைசெய்து ஆணவமுதலியபாசபெந்தத்தைவேரறுத்துத்திருவருளைக்கொடுக்கும்ஞானசாரியனையுள்ளமகிழ்ச்சியினுலேவிசேடபூசைசெய்க,வென்றவாறு [௬௩]

இதுவுமது

அப்பரிசியங்கிடத்துவேதாதியரவத்தான் ✽
மற்றுயுளபாடலின்றொடைகத்தின்வசியாலுந் ✽
செற்றிடுகதுயிலதனைத்தினகரனைத்தெரித்தே ✽
சிற்பமுறத்தேரதனைச்சிறப்பிக்கவிதிதெருண்டே ✽

எ - து அன்றிராத்திரியந்தப்பூங்கோயிலின்முன்னேவேதாகமபுராணவொலிகளினுலும் , பிராகிருதம் , திராவிடமுதலியபாடல்களினுலு , மான்மாக்களைவசீகரிக்குங்கூத்துக்களாலு - முறக்கத்தினைப்போக்கிவிழித்திருக்கக்கடவன், மற்றை

ஸ்ரீ மாதிருகை - மாதா

காட்காலமேசிற்பநூல்விதியையாராய்ந்துபண்ணப்பட்டதேரினையலங் கரிக்கவெ ன்றவாறு

நாடக்மெனப்பொருப்படக்கூறினமையால், வெண்பா,சங்கரனுடியதாண் டவமு மாங்குமையா, ளிங்கிதத்தாலாடமிலாச்சியமும்பொங்குதிரை,யாழிப்புவியி லகமும்புறவரியுஞ்,சூழுநடாகாலென்றுசொல். எனவறிக [௩௪]

இதுவுமது

இத்தகையவிமானத்துளிறையறையுமொழியெழுதும் ❊
புத்தகத்தைப்புணர்வித்துப்பூசனையைப்புரிந்திடுக ❊
பத்தியுடனரராலேபரிப்பிக்கப்பலர்பரவ ❊
வத்தனமராலேயத்துணகர்வலஞ்செய்தாக்குகவே ❊

எ - று இச்சிறப்பினையுடையபுட்பகவிமானத்திற் சிவனருளிச்செய்ததிவ்வியா கமத்தையெழுந்தருளப்பண்ணிப்பூசைசெய்து அன்பினோடேசுராகியசீர்பாதக்கா ரராற்றுங்கச்செய் துஎல்லாருந் துதிசெய் யநகரைவலமாகவெழுந் தருளப்பண் ணுவித்துச்சிவனெழுந்தருளியிருக் குந்திருக்கோயிலிற்கொண்டுசென்றந்தவிமானத் தைத்திருமுறையுடனிருத்துக,வென்றவாறு [௩௫]

மேல்வேறுமோர்விதியுணர்த்துகின்றார்

அல்லதுபுத்தகமதனையானைமுடிமிசையமைத்து ❊
நல்லநகர்வலம்வருகநகரத்தார்நாட்டாரும் ❊
வெல்லையறுவையும்வீக்கிவிறைவுடனேபுடைபுடைய ❊
மல்கமிகுமங்கலங்கள்வணங்கிமுனேசெலமன்னன் ❊

எ து வெளி. வெல்லையறுவை. வெள்ளைப்புடைவை. அறுவையுமென்றவு ம்மையாற், பாகுசீலையாபரணதிகளுமெனவறிக. வீக்குதல். தரித்தல் [௩௬]

இதுவுமது

பலியதனைத்திசைதோறும்பண்ணிடுகபார்த்திபனு ❊
நிலவணியுஞ்சடைமுடியார்மாபூசைநிகழ்த்திடுக ❊
கொலைமுதலுமொழித்திடுகசிகளாதிகுறைத்திடுக ❊
மலைவிலிக்குமாபூசைமனைதோறும்வருக்கவிரோ ❊

எ - று அக்காலத்திலேயஷ்டதிக்குவிதிக்குக்களிலிந்திராதிபலியையாசாரியராலிடுவிக்க, அரசனானவனுந்தனதுதிரவியத்தாற் சிவபூசையைவிசேடமாகச் செய்வித்துக்கொலை • களவு . கட் . காம • முதலியதொழில்களையுந் • தவிர்த்துநெறிமுறையில்லாதோரைத்தண்டிக்கையின்பொருட்டுத்தானிடுவித்தவிலங்கு தொழுமுதலியவற்றிற்கிடக்குமவர்களையும், விட்டுமகமேருவைவில்லாகவுடைய சிவனுக்கில்லங்கடோறும், விசேடபூசைசெய்யும்படிகற்பிக்க, வென்றவாறு [௫௭]

இதுவுமது

பருவமறுங்காலத்தின்முதமதலைப்பரமனுக்கு ❋
மருவுவிக்கவிதிமுறையேவரதனமர்திருவெல்லை ❋
விரைவுடனேவிரவியமர்விமானத்துட்புத்தகத்தைப் ❋
பரிவுறவேயருச்சிக்கசயவொலியும்பரந்தெழவே ❋

எ - று திருவிழாவடக்கவிதித்தகாலமன்றிச்சிவஞானதானங்கமாகச்சிவனுக்குத்திருவுள்ளமகிழ்வோருநாளெழுந்தருளப் பண்ணிவித்துவேண்டுவார்வேண்டுவதேயீவானானவனாதசிவனெழுந்தருளியிருக்கிறதிருவெல்லையைவிரைவினோடேவலம்வந்துசன்னிதியிலிருக்கிறவிமானத்திலெழுந்தருளியிருக்குஞ்சிவஞானகோசத்தைச்சயசயவென்றமுழக்கந்திசையெங்குமிரிந்தெழத் தம்முள்ளத் திலன்புண்டாகப்பூசைசெய்க,வென்றவாறு — முதம். சந்தோஷம்·வடமொழி [௫௮]

இதுவுமது

பரமசிவன்றிருமுன்னேதேசிகனைப்பணிந்தெழுந்து ❋
திருமுறையைநிவேதிக்கத்திறல்வேந்தன்முதலோர்க்கும் ❋
வரமுறவேயோரியலையதுதன்றன்மதித்தறைக ❋
வுரைவிதியுங்காமருமும்வழுவறவேயுணர்ந்தோனே ❋

எ - று சிவஞானதானஞ்செய்வோன், முன்னர்அர்ச்சித்ததிருமுறையைமேலானசிவனதுசன்னிதியிலெழுந் தருளப்பண்ணிவந் தவாசிரியனை, வணங்கியெழுந்திருந்தவர், கையிற்றானஞ்செய்யக்கடவன், பின்புபதச்சேதம் • பதப்பொருள் • விக்கிரகம் • வாக்கியயோசனைசங்கையுத்தரமாகியவுரைகோளந்தினையும், பூபாளிபைரவிமுதலியகானபேதத்தையும், குற்றமறவறிந்தவாசாரியரானவரந்தவாகமத்திலொருபடலத்தைவிராகமுதலாயிராக்குரன்வமயுண்டாகையின்பொருட்டுப்ப

டித்ததன்பொருளையுணர்த்துகவென்றவாறு [ருக]

சிவஞாத்தைச்சாதகர்முதலியோர்க்குத்தானஞ்செய்யுமுறையும
தனைவேந்தன்முதலியோருமகளிருஞ்செய்தற்கோர்சி
றப்புவிதியுமுணர்த்துகின்றார்

இத்தகையேயருந்தவர்க்குமீபொழுதிலியற்றிடுக ✽
புத்தகத்தின்பூசனையைப்புரவலர்மற்றனைவருந்தம் ✽
வித்தமதுகொண்டிந்தவிதியதனைவிளைவிக்கப் ✽
பத்தினியினாற்பயில்விக்கதேசிகனாற்பாவையரும் ✽

எ து அருந்தவரானசாதகர்க்கும், புத்திரர்க்குஞ், சிவஞானதானஞ்செய்யுங்காலீண்டுக்கூறியபடியேயதனைப்பூசைசெய்துகொடுக்கக்கடவன், வேந்தருமற்றுள்ளோருநெறிமுறையாலீட்டியதத்தம்பொருள் கொண்டேயிந் தச்சிவஞானதானவிதியையன்பினாலேசெய்விக்கக்கடவர்கள், நானுவன்னத்தின்மகளிராயுள்ளோருந்தானஞ்செய்யாது • ஆசாரியனாலேசெய்விக்க, வென்றவாறு [சய]

சாந்திகும்பப்புரோக்கணமுணர்த்துகின்றார்

சாந்திபெறுதோயத்தைச்சமைத்தகுருபரன்றானும் ✽
வேந்தனதுமுடிவிரவத்தெளித்திடுகவிழைவுறவே ✽
சேர்ந்தவர்களனைவர்க்குந்தெளித்திடுகதெளித்ததனாற் ✽
றேய்ந்தழியுமவரவர்தந்தீயவினைத்திறலழிந்தே ✽

எ து ஆசாரியன்வித்தியாமண்டபத்திற்றூபித் தசாந்திகும்பசலத் தைக்கொண்டிராசாவினதுசென்னியிலுமவ்விடத் துவந்துசேவித் தபத்தசனங் களெல்லார்க்கும்விருப்பத்துடனேதெளிக்கக்கடவன், அங்ஙனந்தெளித்தன்மையினாலேயவரவர்செய்தகொடியபாவங்களினதுவலியழிந்துகெடுமென்றவாறு [சக]

ஆசாரியர்க்குப்பூசையரசர்முதலாயினோர்செய்யுஞ்சிறமுணர்த்துகின்றார்

ஆசானுக்கருநிதியமுதலளிக்கவடலரசன் ✽
றாசாதிமற்றையருந்தமக்கியன்றதொகைசெய்க ✽
நேசாரப்பூசையினைப்பூசுரர்க்குநிகழ்த்திடுக ✽
வீசானனடியார்க்குமாதுலர்க்குமிரக்கத்தால் ✽

எ - து வெளி [சஉ]

இந்தவித்தியாதானத்தாலுலகுபெறும்பயனுணர்த்துகின்றார்

இத்தகையபுரிந்திடிலோரிடையூறும்புவிக்கில்லை ✽
வத்தலையேயுளநன்மைவகையனைத்தும்புகழ்மல்குஞ் ✽
சத்திரருந்தொலைந்தகல்வர்கொடுவினையுமடும்பிணியு ✽
மைந்தழியுமழைபொழியுந்திங்கடொறுநலமுறவே ✽

எ - து வித்தியாதானத்தையிப்படியேசெய்வாராயினுலகத்துக்குவிக்கினங்கள், சிறிதுமில்லையாம், ஆக்கமுமின்பத்திறங்களியாவுமுளவாம், கீர்த்தியும்பெருகுஞ். சோரராயுள்ளோருந்தாமேநடுங்கியொளிப்பார்கள், கொடியபாவமும், வருகின்றநோயுந், தேய்ந்துகெடும், நன்மைபொருந்தும்படிமாதந்தோறுமழையும், பொழியாநிற்கு, மென்றவாறு [சங]

மேலதனைத்தானஞ்செய்தோரடையும்பலமுணர்த்துகின்றார்

இத்தகையபுத்தகத்தையீந்தாருமெழுத்தொன்றற் ✽
கத்தனைப்புரத்துறைவராயிரமார்கற்பமுற ✽
முத்தனையமுறுவலகையீனைத்தபிறைவளைத்தநுதற் ✽
றத்தையனமொழிமடவார்தங்கியதேர்த்தானத்தே ✽

எ - து இந்தமுறைமையிற்சிவஞானத்தைத்தானஞ்செய்தவர்களு, முத்துப்போன்றநகையினையுமாகாசத்திற்றோன்றியவிளம்பிறையைப்போலவளைந்திருக்குநெற்றியினையுங்கிளியினதுசொல்லைப்போன்றமொழியினையு முடையவமரர்மாதர்கள், சூழ்ந்திருக்கும்விமானத்திலேறிச்சென்றோரெழுத்துக்காயிரம்பிரமகற்பஞ் சிவலோகத்திலிருப்பார்களென்றவாறு

ஏறிச்சென்று• என்றும்• வினையெச்சம்விரித் துக்கொள்க • ஈந்தாருமென்னுமும்மை யிறந்ததுதழீஇயவெச்சம் [சச]

சிவஞானகோசத்தைச்சேமஞ்செய்தோர்முதலானோர்பலமுணர்த்துகின்றார்

புத்தகத்தைப்புரந்தாருந்தாய்தந்தைபுத்திரருஞ் ✽
சித்தமகிழ்வுறவேவற்செய்தார்களுமிவரு ✽
மத்தனையர்சிவலோகமடைவார்களமருலக ✽
முத்தொகையசுற்றத்தார்முற்றினார்முன்னைற்றவமே ✽

எ - து திவ்வியாகமத்திருமுறையைக்காக்குமவருஞ் - சிவஞானதானஞ்செய்தோருடையமாதாவும்,பிதாவும்,பிள்ளைகளும், முள்ளமகிழ்ச்சிபொருந்தவேவற்செய்தவர்களுமெனக்கூறியவிவர்களெல் லாருஞ் , சிவலோகத்தினையடைவர்கள், முற்செனனத்தினல் லதபோபலத் தாலிச்செனனத்திற் சிவஞானதானஞ் செய்தோரதுமூவேழ்சுற்றத் திலுள் ளோருந், தேவலோகத் தையடைந்திருப் பர்களென்றவாறு [சரு]

சிறப்புவிதியுணர்த்துகின்றார்

பொருந்துவர் முற்பகர்ந்தபலம்புகழாடிப்பூரணையிற் ✽
புரிந்தவருஞ்சிவஞானபுத்தகத்தைப்பூசனையைத் ✽
திருந்துமலர்ப்பந்தரிடைச்சிறப்புறவேவைசகியிற் ✽
புரிந்தவரும்பூரணையிற்சிவஞானபூசனையே ✽

எ - து வெளி [சகூ]

சிவாகமங்களெழுதுகிறதற்குஅலேகங்கள்கொடுப்பார்பெறும்பயனுணர்த்துகின்றார்

வேறு

இறைவனிணையில்வாய்மொழியையெழுதவிதழாலிசைமுறையைப் ✽
பெறுவமென்னுமாதரவுபெற்றார்தமக்குப்பெறுவித்தா ✽
ரறையுங்கழலானமலனமர்புறத்தினதனிலிதமொன்றற் ✽
குறைவருகமோராயிரமுமுறவேபுவகையதுபெறவே ✽

எ - து வெளி - இதழ் . சீதாளிதாலமுதவியன [சஎ]

கம்பைமுதலியவுமியக் திரபீடமுங்கொடுப்போர்பெறும்பயனுணர்த்துகின்றார்

கம்பைகவினொழுத்தாணிகாபிறுங்கொடுப்போர்மையினையு ✽
நம்பிக்கொடுப்போர்முன்னவின்றபலத்திற்பாதிநலம்பெறுவர் ✽
கொம்பினொடுமதகரியின்கோணுச்சரத்தின்கோலாலுங் ✽
தம்பாலுவகையுறப்பீடஞ் சமைத்தேயளிப்பாரவர்தாமும் ✽

எ - து தேக்கு - உசிலே . முதலியமரங்களாற்பண்ணியகம்பையும் , விதிப்படியழகுநிறைந்தவெழுத்தாணியும் , பட்டுநூன்முதலியவற்றாலிருபத்தேழிழையினு

லேசெய்யப்பட்டகயிறுங்கொடுக்குமவரும்,மைக்காப்பினைவிரும் பிக்கொடுக்குமவரும்,யானைத்தந்தத்தினாலுஞ்செவ்வியநாணற்கழியினாலுமியந்திரபீடத்தைச்செய்து தமதுள்ளமகிழ்ச்சியுற்றுக்கொடுக் குமவருஞ்,சிவஞானதானஞ்செய்வோர்க்குமுற் கூறியபலத்திலேபாதிபலமாகப்பெறுவர்களென்றவாறு

கவினுறுமெழுத்தாணியெனச்சிறப்பித்ததனால்—எஃகினுலேபதினாறங்குலநீளங்கொண்டதிணிந்தே. எறும்பினிடைபோன்றதலையுமாகச் செய்தநாராசமெனக் கொள்க,ஈம்பு இரும்பு [சஅ]

திருமுறைக்குவேண்டுமுபயோகங்கள்கொடுப்போரடையும்பலமு ணர்த்துகின்றார்

புத்தகாங்கமேதேனும்புரிவோமவர்புனையோர்பா ❋
லத்தனமருந்தசிவலோகத்தமர்வர்போகமனைத்தினொடும் ❋
வத்திராதிவிதானந்தமகிழ்ந்தேயீவாரிவையொன்றற் ❋
குய்த்தேயுகமோராயிரமுமுறவேயுறைவருகப்புடனே ❋

எ - ரு. திருமுறையைச்சேர்த்தற்கு சமானசலாகைதமருசிசிவுளியாதொன்றைப்பெரியோரிடத்தில்விருப்பத்துடன்கொடுக்குமவர்கள், சிவலோகத் திற்சென்றுசகலபோகங்களுடனுங்கூடிவாழ்ந்திருப்பார்கள்,அதற்குச் சாத்துப் பரிவட்டமுதன்மேற்கட்டியிறுகவுள்ளமகிழ்ந்துகொடுக்குமவர்களிவையொன்ற ற்காயிரம்யுகமுங்குறையாதேயாந்தச்சந்தோஷத்துடன்சிவலோகத்திலிருப்பார்களென்றவாறு வத்திராதியென்பதனுலங்குராக்காற்பாளர்தூக்கன்முதலியதெனவறிக [சகூ]

ஒப்பின்முடித்தலாற்சிவாகமத்தையோதுநூதாக்களுக்குவத்திரதா னஞ்செய்யுமவர்பெறும்பயனுணர்த்துகின்றார்

பரமன்றிருவாய்மொழியதனைப்பயிற்றும்பரமயோகிதனக் ❋
குருகியாடையுகப்புறவேபுதவுமவர்தாமுள்ளளவும் ❋
பொருவில்பரமசிவஞானகோசம்புரிவோரடைந்தபல ❋
மருவுவார்களவரன்றேபுபத்தராவார்வரதனுக்கே ❋

எ - ரு. வெளி - கோசம் - எது. பலபண்டமுமிருக்குமிடம். அதுபோல - அறம்பொருளின் பமவீடென்னுநாற்பொருளும்விரிந் திருத்தலாற் சிவஞானகோசமென்றுமேத்துக்குப்பெயராயிற்று [டுய]

மேலவர்களுக்கன்னபானுதியுதவினோர். பெறும்பயனுணர்த் துகின்றார்

பரமர்திருவாய்மொழியதனைப்பயிற் றும்பரமயோகிகளுக் ❀
குருகியவர்கட்கன்னாதியைந்துவருடமுதவிடுவார் ❀
பொருவில்பரமசிவஞானகோசம்புரிவோடீந்தபல ❀
மருவுவார்களவரன்றேபத்தராவார்வரதனுக்கே ❀

எ து வெளி. ✠ உவப்பினுமுயர்வினுமேன்றதனாற்பரமனொனவீண்டொரு மைப்பால்பன்மைப்பாலாயிற்று [ருக]

இவரன்றியெவராயினுஞ்சிவாகமங்களையாராயுமவர்க்கன்னாதியுதவினோர் பெறும்பயனுணர்த்துகின்றார்

மையலறுக்கும்வாக்கியத்தைவாக்காற்பயிற்றிமனத்தாலு ❀
மையமறவேயாராய்ந்தார்க்கன்னமாடையளிப்பாருந் ❀
செய்யசடையார்சிவபுரத்தைச்செறிவார்சிறுவரிறுநியரும் ❀
வையமுண்டான்வைகுண்டமூவேழ்சுற்றமருவிடவே ❀

எ து மாயைமினால்வருமயக்கவிகற்பங்களையொழிக்குஞ் சிவாகமங்களையா சாரியனிடமாகநாவினாலேபயின்றையந்திரிவுநீங்கமனத்தி னாலுமாராயுமவர்க்கன் னமுந்துகிலுங்கொடுக்குமவர்தங்கூதமுதன் ஏமந்தரிறுதியாயுள்ளோரு, மிருபத் தொருசுற்றமுமுலகமுண் டோனுனதிருமாலெழுந்தருளியிருக் கும்வைகுண்டத்தி ன்மேவத்தாம்சிவந்தசடையினையுடையதம்பிரானுமொழுந்தருளியிருக்குஞ்சிவபுரத் தையடைவரொன்றவாறு [ருஉ]

சிவாகமங்கள்பயிற்றுமவர்க்கோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்

எற்கவிரண்டுமுழத்தாலுமெல்லிலைகோலியதனடுவே ❀
கூர்த்தநான்குகோணமலாற்கொள்கவட்டம்வெண்சுதையாற் ❀
சேர்த்தவெண்டாமரையதனிற்சிறக்கவெழுதியதன்மீது ❀
பார்க்கவினியதிருமுறையைப்பரிக்கபீடத்தொடுபரிந்தே ❀

எ-து ஆகமங்களையோதுவோன்இரண்டுமுழத்தினாலேவிதிபொருந்தவொருவெல்

✠உவப்பினுமுயர்வினுஞ்சிறப்பினுஞ்செறலினு மிழிப்பினும்பாறிணையிழுக்கி னுமியல்பே. நன்னூற்பொதுவியல். சூ. உ௰அ.

இவையிவர்தந்தவெல் லையினந்வேதாற்கோணமாதல்,வட்டமாதல்,ஒருவேதிகை,
கொண்டதன்கண்வெள்ளியசார் தப்பொடியினாலேயழகியவெண்டாமரையைப்
பொலிவுபெறவெழுதி, யதன்மேலேகாணுந்தோறு, கண்மகிழ்ச்சிதருந்திருமுறை
யையொருபீடத்தேயன்பினாலேயெழுந்தருளப்பண்ணுகவென்றவாறு

கோணம் . வட்டமென்பன . ஆகுபெயராய்வேதிகைக்காயிற்று [௫௩]

இதுவுமது

மற்றுமுள்ளமங்களங்கள்வருக்கவரதன்றிருவாக்கைக் ❋
கற்கவளவில்காதலுடன்கற்பார்தமக்குங்கற்பிக்கச் ❋
சொற்கள்கேட்கவிரும்பினர்க்குஞ்சொல்லிமுடிக்கமுடிவளவிற் ❋
கற்பார்பரமகாரணர்க்கும்புரிகபூசைகளிப்புடனே ❋

எ து அந்தவாகமத்தைச்சூழநாலுபருதியைவைத்துக்கந்தபுட்பத்தாலரு ச்சனைசெய்தாசாரியன் , கிழக்கேமுகமாயிருந்துசிவாகமத் தையளவில்லாதவாஞ் சையினாலேயோதக்கடவன் , தன்னிடத்தேயோதுவாரையும் , வடக்கேமுகமாகவை த்தோதுவிக்கக்கடவன் , தானோதியவாகமங்களைக்கேட்கவிரு ம்புமாணவர்க்கும், அத்திசையைநோக்கிவைத்துப்பதச்சேதமுதலியவைத் துறுப்புடனந்தநூலுக்குப் பொருளுரைத்துமுடிக்க , இப்படியேயோராகமத்தையோராசிரியரிடத்திலேயோ திமுடித்துள்ளளவிற்கற்போர்✠உபாதானகாரணங்களுக்கெல்லாமேலாயிருக்கிறசி வனுக்குள்ளமகிழ்ச்சியுடனேபூசைசெய்க,வென்றவாறு [௫௪]

இதுவுமது

புரிகபரமசிவஞானபூசைநசையாற்றேசிகர்க்கும் ❋
பரமஞானயோகர்க்கும்பரிவுபெருகப்பதமுதவு ❋
முருகியிசையவூட்டிமிகவுவகையவர்க்குமுறவுளத்துட் ❋
பொருவில்பரமபுத்தகத்தைப்பொருத்தும்வலத் தைப்பொருந்துதற்கே ❋

எ து பின்னர்மேலானசிவஞானபூசையையன்பினாலேசெய்து , ஒப்பிலாத சிவஞானதானஞ்செய்யும்பலர்தனக்கெய்தும்வண்ணமோதுவித்தவாசாரியருக்கு, மேலானஞானயோகிகளுக்கு , மன்புபெருகாநிற்பவுருகிவேண்டினபடியேயன்று நிலையுமவர்க்குள்ளக்களிப்புண்டாம் , படியமுதுசெய்விக்கக்கடவனென்றவாறு
- பதம் - உண்டி - [௫௫]

✠ உபாதானகாரணம் . முதற்காரணம்

மேலதனையோதுமவர்முதலாயினோர், பெறும்பயனையிரண்டு
செய்யுளாற்குளகமாகவுணர்த்துகின்றார்

ஆதியறைந்தவாகமத்திற்சந்தமொன்றேவதன்பாதி ❁
யோதுவார்களோதுவிப்பாருரையைவிரிப்பாருரைகேட்பார் ❁
போதமுறவேசிந்திக்கப்புரிவார்துணிவார்பொருளினையும் ❁
பேதமறவேயெழுதிடுவாரெழுதுவிப்பாரிவரெல்லாம் ❁

எ - து சிவனருளிச்செய்ததிவ்வியாகமத்திற்சுலோகமொன்றாயினு,மதிற்பாதியாயினு, மோதுவார்களு, மதனைமாணுக்கர்க்குப்படிப்பிக்குமவரு, மதன்பொருளைவிரித்துச்சொல்வோரும்,விரித்தந்தப்பொருளுரைப்பதனைக்கேட்போரு,மங்ஙனங்கேட்டபொருளையறிவிலழுந்தச்சிந்தனைசெய்யுமவரு, மதற்கிதுவேபொருளென்றுறுதியிடுமவரு, மதனைப்பிழைவாராமலெழுதுவோரு, மதனைப்பொருள்கொடுத்தெழுதுவிப்போரு, மிங்ஙனங்கூறியவிவர்களனைவருமென்றவாறு — சந்தம் — சுலோகம் — ஒகாரம் — எதிர்மறை [ரு௬]

மணியின்பேதமனைத்தினையுமகிழ்ச்சியுடனேமண்முழுதுந் ❁
றுணிவுபெறவேநால்வேதந்துயக்கமறவேயாறங்க ❁
மெணியமறையோர்க்கீந்தபலமியைந்தாரியலின்பொருளெல்லாங் ❁
கணியகருத்தார்பலமதுதான்கற்றோராலுங்கணிப்பரிதே ❁

எ. து. முற்கூறியவனைவர்களுமுலகிலுள்ளநவரத்நங் களெல் லாவற்றையும்,பூலோகமெல்லாவற்றையுமையந்திரிவறவும்;பொருளறுதிப் பாடுபெறவுநால்வேதமுமாறங் கமுமுணர்ந் தவந்தணர்க்குமகிழ்ச் சியோடுகொடுத்தபலத் தைப்பெற்றவர்களேயாவர்களாதலாலொருபடலத் தின்பொருளெல்லாமுணர்ந் தவுள்ளத்தையுடையோர்பெறும்பலத்தைச்சகலகலையுங்கற்றபெரியோர் களாலுமளவிடற்கரிதென்றவாறு

நால் வேதமாவன- ருக்,இருக்கேஎசு வேசாமமதர்வணந்தருக் கினைப்போக்கும் வேதநான்கே—ஆறங்கமாவன ரு -சந்தஞ்சோதிடஞ்சீக் கைகற்பந் தந்நிருத்தம் வியாகரணமென் றிவை-யெந் தையங் கமாறெனவெணுக-எண்ணியவென்பதுஎணியவென்றும் -கண்ணியவென்பது-கணியவென்றும்விகாரத்தாலாயிற்று [ருஎ]

மேற்✠கடுத்தமுதலாயினதுதவுவோர்பெறும்பயனுணர்த்துகின்றார்

பரமன்மொழியையெழுதச்சீபன்னமதனூற்சினத்தா ❁

✠ கடுத்தம்-தோல்முதலியவற்றாற் சேர்த்தபுத்தகம்

ஞரியகடுத்தஞ்சமைத்தளிப்பாருந்தவுவாரும்பலகையினை ✽
யரியவிதழினலேகத்தையளித்தாரவரவர்தாமும் ✽
பொருவிலமலன்புரத்துறைவர்போகம்பலவும்புணர்ந்தாங்கே ✽

எ - து பரமேசுரனருளிச்செய்தசிவாகமங் களையெழுதுதற் குஅசினமாகிய மான்றோலினுற்றான்-சிலையினுற்றான்-கடி த்தத்தையுண்டாக்கியதற்கிரண்டுபுறமுஞ் சிபன்னமாகியகுமிழமரத்தினுற்கம்பைபாகச்சேர்த்துப்பசையிட்டொட் டிக்கொடுக்குமவருக்கேக்குமரமுதலியவற்றாற்செய்த✽வட்டிகைப் பலகைகொடுக் குமவரும்,பெறற்கரியபனையோலைபாற்சேர்த்தவலேகத் தைகொடுத் தயரோடொப்பர்,இங்ஙனங்கடித்தமுதலியவற்றைக்கொடுத்தோருமொப்பிலாதசிவனெழுந் தருளியிருக்குஞ்சிவபுரத்துண்டாகியபோகங்களையும்பெற்றுவாழ்வரென்றவாறு

ஆல்-அசை-அவர்தாமுமென் றவும்மை, யிறந் ததுதழீஇய துஆங்கு-அசைநிலை-எழுதவென்பதிறுலெழுத் தாணியாலெழுதப் படாமையினெழுதுதற் பொருட்டுச் செப்புச்சட்டியிலேவேப்பம்பிசினிட்டுநீர்வார்த் தூறவைத்துக்கடுநெல்லி,தான்றி,களிப்பாக்கு,காசுக்கட்டி,யிவைகளையந்நீர்வார்த்தரைத்துலர்த் திப்பின்பதனைவேப் பங்கடைகொண்டந்நீர்வார்த்தரைத் துலர்த்திப்பின்புமவ் வண்ணம்வேப்பங் கடையாற்செம்பஞ்சநீர்வார்த்தரைத் துண்டைபண்ணியெழுதும்பொழுதுநீர்வார்த்துரைத்துநாணற்குழையத்தூரிகைக்கோலாக்கியெழுதுக [ருஅ]

சிவஞானகோசதானஞ்செய்தோர், சிவலோகத் திற்போகம்பொசித்துத்தொலைந்தவாறே பூமியின்கண்வந்துபெறும் பயனுணர்த் துகின்றார்

போகமுடிவின்மறுத்திபுரக்கும்புவிவேந்தருமாவர் ✽
மோகமறநால்வேதமுணர்முந்நான்மார்பரெனமுளைத்துப் ✽
பாகமுறவேமுலமலம்பரமனடிக்கன்பருமாவர் ✽
மாகர்பெறுதற்கரியசிவன்மலர்த்தாளிணையைமருவுதற்கே ✽

எ - து சிவஞானகோசதானஞ்செய்தவர், சிவபுரத்திலிருந்துபோகங்களைப்பொசித்துத்தொலைந்தவளவிற்பூமியின் கண்மறுநான்முறையேகாக்கு மனையரும்பிறப்பர், பின்னர்த்தேவர்களாலும்பெற ற்கரியபரமேசுரனுடையதாமரைமலர்போன்றவிரண்டுபாதங்களையடைதற்பொருட்டையந்திரிபின்றி நாலுவேத

✽ வட்டிகைப்பலகை-சித்திரப்பலகை

ங்களையுமாராயுமா் தணனொனத் தோன் றியாணவமலம்பரிபாகம்பிறக்கும்படிநா டோறுஞ் சிவனடிசிபாத த்தைவணக் கஞ்செய்தற்குநேசமுடைய வருமாவர்கள் என்றவாறு. உம்மை - எண் [ருக]

முற்கூறியசிவஞானகோசமெழுந்தருளப்பண்ணுமதற்காலே
யமுதலாயினவுண்டாக்கு முறையுணர்த்துகின்றார்.

கனகமதனாற்பெட்டகத்தைக்கற்போடமைக்ககலக்கமணி *
புனைகவெள்ளிசெம்பாலும்புரிகவேறும்பொருட்கிசைய *
வனைகஞானவாலயநூல்வழியாற்சிலையாதியின்மகிழ்வாற் *
றனையொப்பரியவரிபரிக்கும்பீடமதனுட்சமைக்கவரோ *

எ - று அந்தஞானகோசமெழுந்தருளப் பண்ணுமதற்குச்சிலைமுதலியவற்றா லாலயத்தைவிதிவழியுள்ளமகிழ்ச்சியுடன்செய்தந்தவாலயத் துணடு வேதனக்கு நிகரில்லாதசிங்கங்கள்தாங்குமொருபீடத்தினைப்பண்ணியிருத் தியதன்மேலேபுத்த கமெழுந்தருளப்பண்ணும் பெட்டகத்தைப்பொன்னினாற்செய்து நவரத்னமிட்டி ழைத்ததாதல், வெள்ளி, செம்பு, மற்றுமுள்ள தாதுக்களாலாதல்,தமதுசெல்வத்து க்கேற்பவிதிவழிசெய்கவென்றவாறு

அரோஅசை-விதிவழியாவது-மூன்றுமுழமுதன்முப்பத் துமூன்றுமுழ மீறாகவித்தி யாமண்டபத்தின்விசாலங்கொள்க-நீளமைம் பதுமுழமீறாகத்தனக்குப்பொருந்தக் கொண்டதனைப்✠பிராசாதமாதல்- மண்டபமாதல்செய்விக்க, சிலையாதியென்பத னாற்செங்கன்மரமுதலாயினவுமாம், சிங்காதனமேழங்குலந்தொடுத் திவ்விரண்ட ங்குலமாகவேற்றியேற்றிமுப்பத்திரண்டங்குலமீறாக-இ ஆயாமம் பொருந்தக்கொ ண்டுசதுரசிரமாய்தாசிரமாதற்பொருத்தம்வாய்க்க-அவ்விதிவழிசெய்க ,பெட்டக ஞ்சமைத் தற்கு - பலா - மா - மகிழ் - அத்தி - முருக்கு - இத்வியன் றதொன்றை மூவிரற்கனப்பலகையாக்கிமுப்பத்தாறங்குலவகலமுமதின்மும்மடங்கு நீளமுமக லத்துக்கொத்தவுயரமுங்கொண்டுபெட்டியாகப்பண்ணியதிலொருபுறத் திலேகத வுந்தாளுமிட்டிசைகளிலிருப்புப்பாளங்கட்டிப்பன்னிரண்டங்குலவுயரத் தின்நாலு கால்பண்ணிப்பெட் டியிற்கிழேதைப்பதென்க, நூல்வழியென்பதாடேகிலேத்திபக மாக்கிமுற்றுங்கூட்டுக. [கூ0]

✠ பிராசாதம்,கோயில், இ ஆயாமம்,உயரம்

இதுவுமது

அணியார்கனகப்பெட்டகத்தையரியாதனத்தின்மிசையமைக்க *
பணியாபரணன்பகர்மொழியைப்பதிக்கவதனுட்பாங்குறவே *
தணியாக்காதலுடன்பூசைசமைக்கவிதியிற்றவறாதே *
யுணர்வுமுணர்ந்தவுயர்ந்தோர்க்குமுவகையுறவேயுதவுகவே *

இ - ள் முன்னர்க்கூறியசிங்காதனத்தின்மேலேயழகுநிறைந்தபொன்முதலியவற்றாற்செய்தபெட்டகத்தினைவைத்ததனுள்ளேபாம் பினைப்பூணாகவணிந்தபரமேசுரனருளிச்செய்த சிவாகமத்திருமுறையையெழில்பெறவெழுந்தருளப் பண்ணியமைபாதவன்புடனேவிதிமுறைதப்பாமற்பூசைசெய்துகற்றுணர்ந்தபெரியோர்க்குமுள்ளமகிழ்ச்சியுடனுண்டியினைக்கொடுக்கவென்றவாறு.

உயர்ந்தோர்க்குமென்றும்மையாலிழிந்தோர்க்குமெனவறிக-அமைக்க-பதிக்க - வென்றமுற்றுக்களையெச்சமாக்கிப்பொருளுரைக்க [௬௧]

இதுவுமது

என்றுமியற்பிபிடையாகாரிகநிதியுமிருநிலனும் *
பொன்றுமுடலமெனவுணர்ந்துபொருவிலரியபொருடன்னை *
யொன்றக்கருதுமுளமுடையாருய்யவையமொப்பிலுணா *
நின்றுநிலைமையுடையோர்பானெறியையறியநிகழ்த்திடவே *

இ - ள் சரீரநிலைநில்லாமலழியுமென்றறிந்திந்தச்சரீரமிருக்கையிற்றானே யொப்பின்றியொருவராலும்பெறற்கரியசிவமாகியபொருளையடையக்கருதுமுள்ளமுடையோருலகமெல்லாம்பிழைக்கும்பொருட்டந்தஞானவாலயத்திலிருக்குஞ் சிவஞானகோசத்துக்கென்றும்பூசைநடத்துதற்குந்திவ்வியாகமங்களையெடுத்ததனிற்கூறுமுத்திமார்க்கங்களையாராய்தற்குமந்தமார்க்கங்களையனுட்டித்தற்குநிகரில்லாதவசனத்தன்வழிநின்றுநிலைபெறுந்தன்மையுடையோரிடத்திற்றனராசியும்பூமியுங்கொடுக்கவென்றவாறு.

நன்கக்கருதுமுளமுடையாரென்பதனை யெழுவாயாக்கிப்பொருளுரைக்க யாகமென்றும் பூசையெனினுமொக்கும். [௬௨]

சிவாகமங்களினதுசிரோத்தாரணவிதியுணர்த்துகின்றார்.

பரவிப்பழுநுபலவிரவிற்பரமர்திருவாய்மொழியிதழும் *
வழுவற்பொழுதவல்லாரால்வரைவித்தெழுதிமைபின்பு *

மழகுற்றதனையருச்சிக்கவாசான்பழையவதுதன்னை ✽.
யழலிற்புரிகவாகுதியையானெய்யுடனேயமலனுக்கே ✽

எ — து ஆசாரியரானவர்தம்பிரானார்திருவாக்கினாலருளிச்செய்ததிவ்வியாக மத்திருமுறைபழகியேடுகள்பலவுமுரிதனெரிதலெழுத்துத் தெரியாமைமுதலியகு ற்றங்கள்பொருந்திற்பிழையறவெழுதவல்லவர்களாலேயெழுதிவித்துமைக் காப்பு ஞ்சாத்தியழகுபெற்றிருக்கிற வந்தத் திருமுறையையருச்சனைசெய்யக் கடவன்பி ன்புபழகிப்போனதிருமுறையைநின்மலனாகியசிவனுக்குப்பசுவினெய் யிற்றோய்த் துச்சிவாக்கினியிலோமஞ்செய்க, வென்றவாறு.

மையெழுதல் – இடுதற்பொருண்மேனின்றது. [சுங]

மேலதற்குஞானவாலயமுதலாகவிங்ஙனங்கூறியவற்
றைச்செய்தோர்பெறும்பயனுணர்த்துகின்றார்

இந்தவிதிவியற்றினர்கண்மூவேழ்சுற்றத்தொடுமிறைவ ✽
னந்தவுலகமடைந்தட்டகுணத்தொடமர்வரவ்விடத்துஞ் ✽
சிந்தைக்கரியசிவனடியைத்நினைத்தேயிருப்பர்சிவமாவர் ✽
வந்துபிறப்பர்போகத்தின்மகிழ்ச்சியாங்கேவைத்தாரே ✽

எ – து இங்ஙனங்கூறியபடியேசிவஞானத்துக்காலயமுதலானவிவையிற்றை ச்செய்தவர்கள், இருபத்தொருவர்க்கத்திலுள்ளவர்களுடனேசிவனெழுந்தருளி யிருக்குமந்தச்சிவலோகத்தையடைந்துமுழுதுணர்ஞானமுதலானவெண்குணங்க ளுடலுங்கூடியிருப்பர்கள், அவ்விடத்துந்திவ்வியபோகங்களிலழுந்தாதுமனத்துக் கெட்டாத சிவனதுதிருவடியினிட்டைபுரிந்திருக்குமவர்கள், மகாசங்காரகாலத் திலேபரமமானமுத்தியையடைவர்கள், அஃதன்றியாண்டுத்திவ்வியபோகங் களில் விருப்பத்தையுற்றோர்கண்,மீளவும்பூமியின்கண்வந்துபிறப்பர்களென்றவாறு [சுச]

அங்ஙனம்பூமியின்கண்வந்துபிறந்தோரடையும்பலமீ
தென்றுணர்த்துகின்றார்

போகமுடிவிற்புவிதன்னிற்பிறந்துபுரந்துபுவியெல்லா ✽
மோகமறவேமறைநான்குமுறையிலுணர்ந்துமுளரிந்துடல ✽
மேகனிறைவனிணையடியையிரண்டற்றெளிருமெழின்ஞான ✽
யோகமடைந்துசிவமாவருனமனைத்துமொழிந்திடவே ✽

எ – து சிவலோகத்திலிருக்குநாள்போகத் தில்விரும்பினோர்,அந்தப்போகம்

பொசிந்துத்தொலைந்துள்ளவிற் பூமியின் கணிராசாவாய்வர் தபிறந் தலகமுழு துங்காக்குந்தலைமைபெற்றுப்பின்புஐயந்திரிவுவிகற்பமறநாலுவேதங் கலையுமுள்ள படியேயாராய்ந்துசரீரமும்பொருளல்லவென்றுவெறுத்துத் தனிமுதலாய்நிற்கும் பரமேசுரனதுதிருவடியிணையைவேறறவிளங்குமழிவிலையுடையஞானயோகத்தை ப்பொருந்திமலமாயாகன்மங்களெல்லாங்கெடும்படிசிவத்தோடேகலப்ப பொன்ற வாறு.

ஞானம் - எ - து - சிவஞானம் அதனைக்கலத்தல், ஞானயோகம், இரண்டற் றொன்றுமெழிலென்பதனை, ஞானத்துக்கடையாக்கிப்பொருளுணாக்க, திருவடியே ஞானமாதலாற்றிருவடியையிரண்டற்றொன்றும்ஞானமெனக்கூறினர்,உடலுமென் றவும்மையாற்செலவமுமுனிற்றெனக்கொள்க [௬௫]

இங்ஙனம்ஞானவாலைபஞ்செய்யும்விதிகூறிமேற்சிவாச் சிரமஞ்செ ய்யும்விதியுணர்த்துகின்றார்

அறைந்தாமமலனருண் மொழிமையயறையுமுறையுமதன்விதமுஞ் *
சிறந்தவெல்லைச்சிவாச்சிரமஞ்செய்யுமுறையுஞ்செப்பிடுவா *
நிறைந்தபுகழுநிகராதபோகவிதமுநிலன்வாழ்வை *
மறந்துபிறவாவரந்தானுங்கற்பார்தமக்கும்வாய்ப்பதற்கே *

எ - து நின்மலனாகியசிவனருளிச்செய்ததிவ்வியாகமத்தைமாணக்கர்க்குபதேசிக் குமியல்பினையுடையசிவஞானதானத் தையுமதற்குபயோகங் கொடுத் தாரடையும் பலத்தையுமந்தவியல்பைக் கற்குமவர்களுக் குலகமெல் லாநிறைந் துநிற்குங்கீர்த்தியு மொப்பில்லாதபோகபேதங்களும்பூமியில்வாழுஞ்செயலையமதித்துநினையாதொ ழிதலைபெற்றொருகாலுஞ் செனியாதமுத் தியுமிவையுண்டாகையின்பொருட்டுச் சொன்றேம,மேற்சிறந்தவெல்லையினையுடையசிவாச்சிரமஞ்செய்யும்விதியையுமுன க்குச்சொல்வாமென்றவாறு

இதனுளிரண்டெழுவாயுமிரண்டுபயனிலையுங்கூட்டுக. கற்பார்தமக் குமென்ற வும்மையாற்கேட்பார்க்குமெனவறிக [௬௬]

மேலதனைவிரித்துணர்த்துகின்றார்

சிறக்கச்செய்கதிருவெல்லைசெறியப்புடையேதிருமதிலும் *
புறத்தேயெழிலார்பொழிலதனைப்புரிசையதனைப்புடையடைய *
நிறைத்தமலர்ப்பூம்பொழில்புறத்துநிரைநீர்த்தடங்களதன்புடையே *
பிறக்கலனையகோபுரத்தைப்பிரியாப்புரிசைபெறுத்துகவே *

எ - து. அழகியவெல்லையின் கடைவேசிவாச்சிரமஞ் செய்தற்கெல்லையை நியமித்ததனைச்சூழவஞ்சுமுழவுயரத்திலொருதிருமதிலுமதனைச்சூழப் புறம்பெல்லையிலேயழகுநிறைந்தபூந்தோப்பினையுமதன்புறத்திலேநீராணிறைந்தபொய்கைகளையுமதைச்சூழமலைபோன்றகோபுரத்தைவிட்டுநீங் காதஅடையவளைஞ் சான்றிருமதிலையுஞ்சிறப்புண்டாம்படிசெய்கவென்றவாறு [கள]

இதுவுமது

உரைத்தபுரிசையுண்ணுலாமொப்பிலமலனுரைந்தவுரா ✽
தரித்தும்விரித்துந்தக்கோர்க்குத்தாழாநிலைமைதலைமையவ ✽
ரிருக்குங்கழகமண்டபமுமியற்றியிடுகவெழிலுறவே ✽
யரிக்குமரிக்குமயன்றனக்குமரியானடியேயடைவாரே ✽

எ - து பிறந்திறக் கும்பிரமனுமாலுந், தேடுதற்கரியசிவனதுசீபாதத் தையடையக்கருதுவோர், முன்னர்க்கூறியமுதலாவரணத்துக்குநடுவாகநியமித்தவெல்லையிலேதிருமடத்தினைமூன்றுநிலமாக வெடுத்ததன்மேலேநிகரில்லாதநின்மலனாகியசிவனருளிச்செய்ததிவ்வியாகமங்களைத்தம்முள்ளத் தின்கட்✠டாரணைபண்ணியுமதன்பொருளைத்தக்கோர்க்குவிரியக்கூறியுமேலானநிலைமையையுடையபெரியோர்களெழுந்தருளியிருக்குங்கல்விபயில்களனாகியநாலாநிலத்தையுமழகுபெறச்செய்கவென்றவாறு — கழகமண்டபமுமென்னுமும்மையால்,முதனிலமிரண்டாநிலமூன்றுநிலங்களிலேகுகைகள்செபத்தியானம்பண்ணுந் தலங் களுஞ் செய்கவெனக் கொள்க. [கஅ]

இதுவுமது

அதற்குமீதாம்பஞ்சமத்தையமைக்கவமலர்க்காலயத்தைக் ✽
குதற்கபேதமனைத்தினையுங்குறைத்தேதுறையாமதிகொடுக்கும் ✽
பதத்தைப்பகர்ந்தபரமனுக்குப்பாசவினைக்கும்பகைவனுக்கு ✽
நதத்தைக்கடந்தநம்பனுக்குநாடற்கரியநாதனுக்கே ✽

எ து முற்கூறியகல்விபயில்களத்துக்குமேலானஐந்தாவதுநிலத்தினையான்மாக்கள்பாசவினைக்கும்பகைவனுமாய்நாதாதீதனுமாயாவராலுங் காணொணாதகர்த்தாவுமாய்வடவாலின்கீழெழுந்தருளியிருந்துதேவர்களிருடிகளுக்கெல்லாம்உவலத்தருக்கமுதலியகுற்றங்களைநீக்கிநிறைந்தஞானத்தையுதவும்வேதாகமங் களையுபதேசித்ததெக்ஷணாமூர்த்தமாகியசிவனுக்காலயமாகச்செய்கவென்றவாறு

பாசவினைக்குமென்றவும்மையால்- ஆணவத்துக்குமென- எச்சந்தழீஇநின்றது- நா

✠ தாரணை - தரித்தல்.

தம் - நதமெனக்குறைகியது [௬௯]

இங்ஙனங்கூறியசிவாச்சிரமத்தைச்சூழ ✠ அபிமுகங்களாகப் பாகசாலை
முதலியவெட்டினையும் (௬) விலோமமாக்கட்டுமுறையுணர்த்துகின்றார்

அங்கிமுதற்றென்றிசையந்தத்தடுகைமனைசத்திரசாலை ✽
பொங்குதழலைப்புரிசாலைபூணும்பணியும்பெறுமிடஞ் ✽
சங்கைதணிக்குங்கொட்டாரஞ்சமைக்கருடநீர்சமித்துறையு ✽
ளிங்குவேண்டும்பொருளதிதியேவலோருமெய்திடமும் ✽

எ - து அக்கினிதிக்குமுதற்றென்றிசையீருகக்கொண்டுஅக்கினிதிக்கிலேதிருமடைப்பள்ளியுங், கிழக்கேசத்திரசாலையு, மீசானதிக்கிலேசிவபூசையக்கினிகாரியஞ்செய்யும்யாகசாலையும், வடக்கேதிருவாபரணமுதலியசேமிக்கும்பொற்பண்டாரமும்,வாயுதிக்கிலேஎண்ணைக்கடந்தபெரியநெற்சேருக்குமேற்கேதிருமஞ்சனம் வைக்குமுறையுளு, நிருதிதிக்கிலேசமித்துத்தெற்பைப்புல்லுவிறகு ஆயுதங்கள் வைக்குமுறையுளுந், தெற்கிலிம்மடத்துக்குவேண்டுமாசனங், கட்டில், பாதுகை, முதலியவைகளிருத்தற்கிடமும், அதிதிகள், பரிசாரகரிருத்தற்கிடமும், செய்கவென்றவாறு.

உறையுள், என்பதனை, குடாரொன்பதற்குமிடமெனக்கூட்டுக, எய்திடமென்பதனைவேண்டும்பொருள்வைத்தற்கிடமுமெனக்கூட்டுக, உம்மையெண்ணின்கண்வந்தது, சமைக்கவென்றும்வியங்கோள்வினைமுற்று, நடுநிலைத்தீபமாயெவற்றிற்கும்பயனிலையாயிற்று [௭௰]

இவ்வண்ணமியற்றியமடத்தின்கண்-தெக்ஷிணாமூர்த்
தத்தைத்தாபிக்குந்திறமுணர்த்துகின்றார்

விதிநான்மறையெயந்தாதவினையுமற்றைவினையனைத்தும் ✽
பதியாம்பரமன்றனக்கிசையப்பண்ணிவிடுகபரிவுடனே ✽
நிதியுங்கொடுக்கநிலனுடனேநிகழவென்றுநிறைபூசை ✽
துதியுஞ்செய்கதோன்றுநதுணையைப்பணிகதுகளறவே ✽

எ - து தெக்ஷிணாமூர்த்தத்தைச்சிலைமுதலியவற்றாற்றிருமேனிக்கொண்டுபதியாகியவந்தத்தெக்ஷிணாமூர்த்தித்தம்பிரானுக்கேற்கும்படிசிவாகமங்களில்விதித்த

✠ அபிமுகம். நேர்முகம்

(௬) விலோமம், முறைபிறழ்தல், அஃதாவது, அப்பிரதக்ஷணம்

பிரகாரத்திலேயதிவாதகன்மமுமற்றுமுள்ளபிரதிட்டாகன்மங்களும்பத்தியினாலே செய்துஐந்தாகிலத்திற்றுபித்து எந்தக்காலமுமகாபூசைநடக்கும்வண்ணம்விளைநிலங்களும், பொன்முதலியநிதியங்களும், கொடுத்துத்தங்களிட்த்துண் டாகியவாணவாதிகுற்றமறும்படியாவர்க்குந், தோன்றுமலவரவருள்ளத்துணிற்குந் துணைவனைத்தோத்திரமுஞ்செய்துவணங்கவென்றவாறு

இசையவென்றுசிறப்பித்ததனாற்சிலாபேதமல் லாதவைகளுக்குக்கண்ணாடியிலதிவாதனஞ்செய்கவென்றுணர்க [எக]

அந்தவாசாரியர்க்குமற்றுமுள்ளோர்க்குமுபகரிக்குந்திறமுணர்த்துகின்றார்

குரவன்றனக்குநிதிமுதலுங்கொடுக்கக்குன்றாக்குணமொழுக்கம் ❀
விரதமுடையவேதியர்க்கும்விழைவாற்பதமுமிசைவிக்கப் ❀
பரமனடியாரவர்தமக்கும்பங்குகாலர்பாலருடல் ❀
விரவுநோயர்விழியிழந்தார்விருத்தர்தமக்கும்விருப்புறவே ❀

எ - து பிரதிட்டைசெய்தபலந் தனக்கெய் தும்வண்ணமந் தவாசாரியர்க்குந், தனந், துகில்,முதலாயினதுகொடுத்துஒருகாலுங்குறைவுபடாதகுணமொழுக்கம்விரதமிவைகளையுடையபிராமணர்க்குஞ்சிவனடியாரானமாகேசுரர்க்குமுடவர், சிறுபிள்ளைகள், சரீரத்திலேவியாதியையுடையவர்கள், குருடர், விருத் தரானவித்தன்மையோர்களுக்குமன் னம்விரும்பும் படியாதரவினாலே பொசிப்பிக் கவெ ன் றவாறு [எஉ]

சிவபுரஞ்செய்தார்
பெறும்பயனுணர்த்துகின்றார்

செய்தார்சிறக்கச்சிவபுரத்தைச்சிற்பவுணாயிற்றிகழ்வினியா ❀
லெய்தார்பிறப்பிற்சிவலோகமெய்திப்போகமினிதருந்தி ❀
வெய்தாம்வினையுமாணவமும்வியாமாயையொடும்விடவே ❀
மெய்யாம்பரமவித்தையுறவிமலன்கமலம்விரவுவரோ ❀

எ - து -பூமியின்விளங்காநின்றசிற்பசாத்திரத்தின்விதியினாலேசிவபுரத்தைச் சிறக்கும்வண்ணஞ்செய்தார்கள்மீண்டும்பூமியின் கண்பிறவாமற்சிவலோகத்தையடைந்தினிதாயபோகங்களையருந்திப்பின்கெடாதமாயையோடுகொடிதாயகன்மமுமாணவமும்விட்டுநீங்கமேலானசத்தியஞானமுண்டாகநின்மலனாகியசிவனதுதிருவடித்தாமரையையடைவர்களென்றவாறு

இச்செய்யுளிற்சிவாச்சிரமத்தைச்சிவபுரமெனக்கூறியதென்னெனிற்,சிவாச்சிரமமும்,சிவத்தலமும்,மடமும்,திருக்கோயிலும்,மொக்குமென்பதனுலென்றுகொள்க அதனால்மேல்வருஞ்சிவனற்புரியென்பதுஞ்செய்புண்முதலியசெய்யுட்களெல்லாஞ் சிவாச்சிரமத்தோடுசிவத்தலங்களையுங்கூறுகின்றனவற்றினையுமாண்டாண்டு பிரித்துப்பயன்கொள்க. [௭௩]

சிவபுரஞ்செய்ததச்சன்முதலாயினோரானவுயர்திணையும
தற்குபகரணமானவஃறிணையுமடையும்பலமுணர்த்துகின்றார்.

சிவனற்புரியைச்செய்தவர்சிந்தைமகிழச்சிவபுரிசெய் *
தவத்திமுதலோர்தருமுதலுஞ்சாரும்புணியொடுமற்றும் *
புவலோகத்தின்மிசைப்புகுவர்பொருள்கொண்டேவற்புரிந்தாருங் *
கவராவொருமைக்கருத்துமிலோகணிகையவருங்களிப்புறவே *

எ - று. கண்டோருள்ளமகிழும்வண்ணஞ்சிவபுரியைச்செய்தசிற்பாசாரிமுதலாயினோருஞ், சிவபுரிசெய்தற்குபகரணமானமரஞ்சிறுசெடிமுதலியனவுஞ்செங்கல் - கல் - முதலியனவூட்டிவருமதற்குப்பொருந்திய எருதுகடாவினுடன்மற்றுமுபயோகமானவைகளுநல்லசிவபுரத்தைச்சென்றுபொருந்துவர், மனம்வேறுபடாதேவற்றொழில்செய்யவுஞ்செய்விக்கவும்பெற்றேமென்னுமொருமைபொருந்தியகருத்துண்டாமேயாகிற்கூலிவாங்கியேவல்செய்தவர்களுமுருத்திரகணிகைமார்களுமகிழ்ச்சிபொருந்தப்பூலோகத்துக்குமேலாகியபுவலோகத்தின்கட்சென்றுபோகம்பொசித்திருப்பார்களென்றவாறு. தவத்திமுதலோரென்பதனால் - எற்றுநூல்பிடிப்பார்முதலாயினோருமெனவுரிக - தருமுதலுமென்பதனாற்சிலையுமெனக்கொள்க, புணியொடுமற்றுமென்பதனால், ஒட்டகமுதலியனவுங்கொள்க, களிகையவருமென்றவும்மை பாற்றேறலுந்தாசிகளுமெனக்கொள்க, உருத்திரகணிகையைக்கணிகையெனத்தலைக்குறைத்தலாக்கினர் [௭௪]

அச்சிவபுரத்துட்சென்றமுதலியவடைந்தோர்பெ
றும்பயனுணர்த்துகின்றார்.

சிறந்துசெறிவர்சிவபுரத்தைத்தெரிதற்கரியசிவனகருட் *
பிறந்தார்பிறவாநிலைமைபெறினைப்பிரியாதொருமைப்பெருமையுட *
னுறைந்தாருறையுமவர்க்கனுமூதவுவார்களுறையுள்தரு *
மிறந்தாரிறக்கவெண்ணுவர்களென்னுமிவர்களெல்லோரும் *

எ - து அளவைகளாலளவிடுதற்கரியசிவனது நகருட்சென்றிருத்தவருநின்றநிலைதவறுதவொருமைப்பாட்டின்பெருமையுடனுறைந்தவருமச்சிவபுரத்திலிருப்போர்க்கன்னமுமில்லமுங்கொடுத்தவருமத்தலத்தின்மரிச்தவர்களுமத்தலத்திலுடல்விடவேண்டுமென்றுகருதினோருமாகக்கூறியவிவர்களெல்லவரும், யாவர்க்குமேலோராந்தலைமைபெற்றுச்சிவலோகத்தையடைவர்களென்றவாறு. [எரு]

மேலதனைப்பணியுமவர்முதலியோர்பெறும்பயனுணர்த்துகின்றார்.

பணிவார்பரவிப்பரமேசன்பதிகடன்னைப்பணிதற்கே *
துணிவார்வழியிற்றுணைச்செல்வார்தொடர்ந்துகூடித்தொழுவாரொன் *
றெணியாரிவர்களெல்லோருமிறைவன்புரத்திலிருப்பதற்கே *
யண்ணியாரவலவினையனைத்துமறுப்பார்சமனைக்கறுப்பாரே *

எ - து யாவர்க்குமேலானசிவனெழுந்தருளியிருக்குந்திருப்பதிகளைத்துதித்து வணங்குமவர், வணங்குதற்குநியமித்தவர்வணங்கச்செல்வோர்க்குவழியின்கட்டுணையாகச்செல்லுமவர், உடன்சென்றவருடன்கூடிப்பணியுமவரொன்றெனவெண்ணப்பட்டோரிவர்களெல்லாருஞ், சிவலோகத்திலேயிருந்துவாழ்வதற்குரியாரவர்களேதீவினைமுழுதும்போக்குவர்அவர்களேதங்கள்பால்வருமியமனைக்கோவிப்பாருமென்றவாறு. [எசு]

அச்சிவத்தலங்களிற்சென்றுசிவபூசைமுதலாயினசெய்தோர்பெறும்பயனுமதிலிருக்குந்தபோதனர்கள்சரீரத்திற்பிணிகளைமருந்துமுதலியவற்றாலொழிக்குமவர்பெறும்பயனுமுணர்த்துகின்றார்

சிவனைப்பூசைசெய்விப்பார்சிவனற்புரியைச்சென்றடைவ *
ரவனைப்பருவத்தறிவிக்குமாசாரியனையன்பரையுந் *
தவரைத்தமிக்கும்பிணிதனையுந்தணிப்பார்தாமுந்தனித்தேமே *
யெவரிப்பிணியைத்தணிப்பாரொன்றினைப்பாரினைப்புக்கினைப்பாரும் *

எ - து சிவனையுமவரவர்பக்குவத்துக்கிடாகவந்தச்சிவனையறிவிக்குமாசாரியனையுஞ்சாதகர்முதலியவன்பரையும்பூசைசெய்விப்போருந்தபோதனராவருத்தும்பிணிகளைமருந்துமுதலியவற்றானீக்குமவருஞ்சிவஸ்தலங்களைவணங்குதனிமித்தமாகவந்தவிடத்தில்வியாதியாய்த்தனித்துவிட்டோமேயிதனை யெவர்களொழிப்பார்களொன்றுவருந்துமனுதராயுள்ளோர்வருத்தத்தைக்கண்டுநீக்கிக்குமவருஞ்சிவலோகத்தைச்சென்றுபொருந்துவரொன்றவாறு பிணிதனையுமென்றவும் மையாற்பசிகுளிர்தணிப்பாருமென்றுகொள்க [எஎ]

மேற்சிறப்புவிதியுணர்த்துகின்றா

ஆக்கையாலோதனத்தாலுமருநோயதனையருந்தவர்க்குப் *
போக்குவிப்பாரவர்தாமும்பொருந்திப்போகஞ்சிவபுரியு *
ளாக்கிப்பிறந்துநிலமிசையேநில்லாதுடலமெனநினைந்து *
நோக்கற்கரியபரமசிவனேென்றாளடைவர்நோயறவே *

எ - று அரியதபோதனர்களுக்குவந்தநீங்குதற்கரியநோய்களைத் தமதுகாய த்தொழில்களினாலுமன்னத்தினாலுந்தாமாதலொருவரைக்கொண் டாதல்போக்கு விக்குமவருஞ், சிவலோகத்திற்சென்றிருந்துபோகங்களையநுபவித்துத் தொலைந்த வாறேபூமியின்கண்வந்துபிறந்துசரீரமனித்தியமென்றறிந்து தம் வமயஞானதியிலே தொடர்ந்துநிற்குமானவமுதலியபிணிகளிக்கும்வண்ணம்யாவராலுநாடொணாத பரமசிவனதுவலியினையுடையசிபாதங்களையடைவர்களென்றவாறு

ஓதனத்தினாலுமென்றவும்மையால் - அவுடதத்தினாலுமெனவறிக [எஅ]

வேறு

என்றுசிவஞானவிததானமுமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைநைய *
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே *

எ - று வெளி [எகூ]

வேறு

அருயிர்வேரானவாயவனேயாரணமோதியவாயவனே *
சாரணர்நாடியசற்பொருளேதனையொழிந்தின்மையசற்பொருளே *
பூரணநெறிப்பொருவிலியேபுரமவைமாளப்பொருவிலியே *
யாருமெண்ணுதவிடத்தினனேயருந்தியவாலவிடத்தினனே *

எ - று எவ்வுயிர்க்குமூலமாயிருந் தவனேசற் புருடமுதல்பஞ்சதிருமுகத் தாலுநாலுவேதங் களையோதினவனேநிசம்பரர்தியானஞ்செய்யப் படாநின்றநல் லமுர்த்தியேதானேயன்றிவேறில் லாமல்விளக்குமுண்மையாகியபொருளேசர்வா ன்மாக்களிடத் தம்பூரணமாயொப்பில் லாதிருப்போனே, தாரகன், தாரகாக்ஷ ன், வித்தியுன்மாலியாகியமூவர்புரங் களையும்பொருதழிக் கப்படாநின்றவில்லையு

டையவனேயொருவராலுமெண் ணுதற்கரியநாதாதி தனேயாலகாலவிடத்தையமு தாகவருந்தினவனேயென்றவாறு. [அ0]

கங்கைதன்னேச்சடையிற்கரத்தனேகரிசுபோக்கிடுமஞ்சக்கரத்தனே ❀
மங்கமுப்புரஞ்செய்தவைவாளியேமதித்தமூவனாயங்குறவாளியே ❀
சிங்கந்தன்னேயுரித்திடுந்தீரனேசெனனசாகரத்தேறிடுந்தீரனே ❀
யங்கந்தன்னிணுமாசைபறுக்கவேயம்மவாணவமாசையறுக்கவே ❀

எ - து கங்கையைப்பார்வதியார்க் குமாறுவாராமற்சடையின்கணொளித்தவனேயான்மாக்கள்செய்தபாவத்தைப்போக்குஞ்சாமர்த் தியத்தையுடையபஞ்சாக்கரத்தையுடையவனேமுப்புரங்களும்பொடியாய்ப்போகக் கூரியவம்பினாலேயெய்தவனேதன்னேயேயுண்டென்றிருந்தநந் திமாகாளர்வாணுசுரனுகியமூவரையுமவ் விடத்துறவாக்கொண்டவனேயிருடிகளாபிசாரத் திற்றோன்றியசிங்கத்தைக்கொன்றதன்றோலையுரித்தணியுந்தீரனேசெனனமரணமாகியகடலிலேநிடர் தமுந்துமென்னேயேற் றுதற்குக் கரையாயிருந்தோனே சரீரத்திலுண்டாகியவிருப்பத்தைப் போக்கவேயாணவமலபாசமாகியகுற்றத்தைச் சேதித்தான்மாக்களேமுத் தியடைவிப்பாயாகவென்றவாறு — அம்ம — எ - து — உரையசை [அக]

வேறு.

காலனேயுருளக்கால்கொடுகடிந்திக்கழல்பேணும் ❀
பாலனேயருளிப்பாசமதகலப்பரிவோடு ❀
மாலதனிழலூற்றுரணமுனிவர்க்கருள்வாய்மைக் ❀
சிலனதுணைபைத்தேரறுமுகனேச்செறிவாமே ❀

எ - து இயமனேயுருளும்படிகால்கொண்டுதைத்தத் திருவடிகளேவிரும்பியருச்சனேசெய்யுமார்க்கண்டற்கருள்புரிந்தான்மாக் களுக்குப்பாசங்கனிங்கும்வண்ணமாலநிழலின் கணன்பினோடேயெழுந்தருளியிருந்து சனகர்முதலியவிருடிகளுக்குண்மையான நாலுவேதங் களேயுமருளிச் செய்த சிலனுகுசிவனதுவாக் கியங்களேயாராய்ந்தவறுமுகத்தினேயுடையமுருகக்கடவுளே யுறவுசெயக்கடவோமென்றவாறு. [அஉ]

அரியயனறிதற்கரியனேயமரர்க்கமிர்தியக் ❀
கருதியகடுமுற்பருகியகருணேக்கடலானேப் ❀
பரமனேயரவக்கரையனேவிரவப்பரிவானேப் ❀

பொருகயல்புரைப்பொறிமலைமுனிசொற்புகல்வாமே ❋

எ - று திருமாலுநான்முகனுமறியவொண்ணாதவனுமாய்த் தேவர்களுக்கமிர்தங்கொடுக்கும்பொருட்டுக் கருநிறங்கொண்டவிடத்தைமுன்னாட் பானம்பண்ணியவருட்கடலாயுள்ளவனுமாயாவர்க் குமேலானவனுமாய்ப் பாம்பினையுஞ்சங்குமணிவடத்தையுந்திருவரையிலணிபவனுமாயாவராயினுந்தன் னையடைந்தபோதவர்க்கன்புசெய்வானுமானசிவனது. ஓசைசெய் யாநின்றவீரக்கழலினையணிந் தசீபாதங்களையடைதற்குப் பொதியமாமலையின்கண் வாழுமகத்தியமுனிவன்விளக்கியதமிழ்மொழியையாம்துதிப்போமென்றவாறு [௮௫]

இரண்டாவதுசிவஞானதானவியன்முற்றும்

மூன்றாவது ஐவகையாகவியல்

இவ்வோத்தென்னுதலிற்றோவெனின் ஐவகையாகத்தின்பகுதியையுணர்த்துதனுதலிற்று. இவ்வணஞ்சிவஞானதானவியலை க்கூறியதன்பின்னரிவ்வியலைக்கூறிய தென்னைக்கெனின்கருமயாகமுதலியஐவகையினுள்ஞானயாகமேவிசிட் டமென் றவாற்றமைபாலதன்பின்னர்வைக்கவேண்டிற்றுஇத்தலை ச்செய்யுளென் னுதலிற் றோவெனின்ஐவகையாகத்தைத்தொகுத்து ணர்த்துதனுதலிற்று

கருமமென்றுதவமென்றுகற்பாற்பயின்மந்திரமென்று ❋
பரிவால்வருபாவனையென்றுபரமஞானமகமென்று ❋
தெரியுமகமோரைந்தினையுஞ்சிறந்தவிவற்றின்பலத்தினையும் ❋
பரமயோகர்நிலையுடனேபரிவான்முனிவபகர்வாமே ❋

எ - று வராய்முனிவரனேகன்மயாகமென் றுந்தவயாகமென்றுமுபதேசிக்கிறமந்திரத்தினற்பயிலாநின்றசெபயாகமென் றுமாதரவினுல்வருந்தியானயாகமென் றுமேலானஞானயாகமென்றுமிப் படியாராயுமைவகையாகத்தினையுமிவையிற்றின்விசிட்டமானபலத்தினையுமேலானசிவயோகிகள்நிலையோடுநின்மேல்வைத் தவன்பினுல்யாம்சொல்லாநின்றோமதனைக்கேட்பாயாகவென்றவாறு [௧]

மேற்றொகுத்தஐவகையாகத்திருட்கருமயாகமுதலியமூ ன்றினைவிரித்துணர்த்துகின்றார்.

செய்துசிறக்கச்சிவபூசைசெந்நீவளர்க்கையுதல்கரும
மையவுடலம்விரதத்தைநவிற்றலாகுதவஞ்செபமும்
மையப்பயிற்றல்பிறர்செவியிற்படாதுபயிற்றன்மந்திரத்தை
மையலகலமனத்தாலும்வருக்கையெனமூவகைத்தாமே

எ - து கன்மயாகமாவதுநூல்விதியினாற்பூசாங்கமாகப்புனன்மூழ்கிச்சிறப்புடன்சிவார்ச்சனைபண்ணியக்கினிகாரியமுதலியனசெய்தல், தவயாகமாவதுசரீரம்வாடச்சாந்திராயணமுதலியவிரதங்களையனுட்டித்தல்,செபயாகமாவதுமந்திரங்களைப்பிறர்செவிக்குக்கேட்கவுச்சரித்தலும்பிறர்செவிக்குக்கேளாமன்மெள்ளவுச்சரித்தலுமயக்கமொழியும் படிமானதமாகவுச் சரித்தலுமெனமூன்றுவகையினையுடைத்தாமென்றவாறு.

மந்திரயாகமெனினுஞ் - செபயாகமெனினுமிழுக்கா. [௨]

இங்ஙனங்கூறியசெபயாகஞ்செய்யுமுறையுமவையிற்றின்பல
மிகுதிக்குறைவுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

செபித்துவடந்தற்சனிமீதேசெபிக்கவொலியைச்சேட்டையினாற்
செபித்துவடமத்திமைதன்னிற்செபிக்கமந்தஞ்சேட்டையினாற்
செபித்துவடத்தையநாமிகையிற்செபிக்கமனத்தைச்சேட்டையினாற்
குறிப்பிற்குறைந்தபலமந்தமதனிலொலியுங்குறைந்தபலம்

எ - து பிறர்க்குக்கேட்கவுச்சரிக்குமந்திரத்தையொலியாகச்செபிக்குங்காற்செபவடத்தைத்தற்சனிமீதேவைத்துப்பெருவிரலாற்றள்ளிச்செபஞ்செய்க, பிறர்க்குக்கேளாமற்றனக்குக்கேட்கவுச்சரிக்குமந்திரத்தை மந்தவொலியாகச்செபிக்குங்காற்செபவடத்தைமத்திமைவிரலின்கட்சேர்த்துப்பெருவிரலாற்றள்ளிச்செபஞ்செய்க, செவிப்புலனாகாதுச்சரிக்குமந்திரத்தைமானதமாகச்செபிக்குங்காற்செபவடத்தையநாமிகையின்கட்சேர்த்துப்பெருவிரலாற்றள்ளிச்செபஞ்செய்க வாராயுங்கான்மானதமாகவுச்சரிக்குமதைப்பற்றமந்தமாகவுச்சரிக்குமதுதாழ்ந்தபலமதனைப்பற்றவொலியாகவுச்சரிக்குமதுகுறைந்தபலமென்றவாறு. [௩]

கண்டிவிசிட்டங்குசைக்கிரந்திகனிட்டங்கமலமதற்கனிட்டம்
புண்டரீகமணியதனிற்படிகமணிபுத்திரதீபி
புண்டைச்சங்கமிறைவிரலுமுணரிலொன்றுக்கொன்றானம்
விண்டார்போகவிருப்பங்கைமேலேமிக்கமாலையெல்லாம்

எ - து செபமாலைகளைவற்றினுமுருத்திராக்கமேவிசிட்டமதற்குத்தெற்பை

யைப்பவுத்திரமுடிச்சாகமுடிந்தமாலைகிழாமதற்குத்தாமரைமணிவடந்தாழ்ந்தபல மதற்குப்படிகக்கல்லிருந்தைடந்தமணிதாழ்ந்த பலம்புத்திரதீபவடமுங்கடைந்து ருட்டினசங்குமணிவடமுமிறைபும் விரலுமாராயிலொன்றுக்கொன்றுபலங்குறைய ம்போதத்தின்கண்விருப்புகிக்கியதறவிகள்கண்டிமாலைமுதன்மாலைகளெல்லாங்கை யிருவிலேமேருக்கேத்தள்ளிச்செபிக்கவென்றவாறு. [௪]

இயங்கிற்பிராணனிடைநாடியிருமுன்றெழுத்துமியம்பிடுக
நயந்தார்போகமநுகயந்தார்வலதுநாடிதனினவில்க
வியங்கிற்பிராணன்சுழுனைவழியிரண்டுமடைவாரியம்பிடுக
முயங்கவிளையார்முலையிணையைவலதுநாடிமுனைத்தெழினே

எ - து போகத்தையடையவிரும்பினோர்பிராணவாயுவானதிடையென்று நாடியிலேநடக்கிற்பிராணவத்தோடேகூடிப்பூலமந் திரமானஅறெழுத்தையுமுச்சரிக் கக்கடவராகிலெவருத்தோர்பிங்கலைநாடியின்கட்பிராணவாயுவியங் கிலாறெழுத் தையுமுச்சரிக்கக்கடவர்புத்திமுத்தியிரண்டினையும் விரும் பினோர்சுழுமுனைநாடியி லேபிராணவாயுவானதியங் கிலந்தவாறெழுத் தமுச் சரிக்கக்கடவர் பிராணவாயு வானதுபிங்கலையிலேதோன்றியியங்குகிற காலத்திலிளையாராகியமட்வாரதுமுலைத் துணையிணையும்புணரக்கடவரென்றவாறு.

மாதரைக்கூடும்விதியின்பிக்கூறிய தமற்றென்றுவிரித்தலென்னுங்குற்றமாகா தோவென்னில், ஒப்பின்முடித்தலென்றுந்தந்திரவுத்தியாற்கூறுகையாற்குற்றமின் றெனவுநிக. [௫]

மேலிருந்தமுறைபாவனைதியானயாகஞ்செய்யுமுறையு ணர்த்துகின்றார்.

பற்றிப்பரமன்றிருவுருவைப்பரிவாலொருமைப்படவுள்ள
மற்றோர்பொருளின்மனம்பற்றுவன்னாந்தின்னாமுறமயக்க
மற்றெதொடர்ந்தவிச்சின்னமடையாவறிவுபாவனை
பெற்றேபொருகுமிறைவன்பாலற்றேயஃதென்றெண்ணுகவே

எ - து தியானயாகமாவது மனம்வேறொருவிடயங்களிலும் பொருந்தா வண்ணந்தாரணையினிருத்தியஞ்ஞானவிகற்பமற்றுள்ளமானதுசதாசிவாதிவிக்கிர கங்களிலொன்றையன்பினுலேயுணர்ந்தத்தியானத் திலேயிடைவிடாதுகலந்துநிற்ற லஃதேத்தனைமத்தென் னிலாற்றுக்கிடையறுதொழுமே த்தன்மைத்தென்றுண ர்கவென்றவாறு. [௬]

மேனிறுத்தமுறையானே ஞானயாகத்தின் சிறப்பு
ணர்த்துகின்றார்.

ஒப்பிலமலன்றனைபுணர்த்துமுறைாமையோதலோ துவித்தல் ✽
செப்பும்பொருளைத்திரிவுமறத்தெளிகைபிறனைத்தெளிவிக்கை ✽
தப்பாததனைமனத்தகத்தேதரிக்கையெனவுந்தானேந்தாம் ✽
வைப்பாயருந்தாமருந்தாகிச்சிறந்தஞானமகவினையே ✽

எ - து இணையில்லாதநின்மலனனசிவனையறிவிக் குந்திவ்வியாகமங்களைத் தானோதுதலும்பிறனையோதுவித்தலுமவையிற்றிற்சொல் லும்பொருளையைந்திரிவறத்தான்றெளிதலும்பிறனைத்தெளிவிக்கையுமந்தப்பொருளைநாடோறுமறவாது மனத்தின்கட்டரிக்கையுமெனவைந்துவிதமாய், மிகுவேபக்குவான்மாக்களுக்கு வைப்புமாய், அபக்குவராலருந்தவொண்ணாதமருந்துமாய்த்தலைமைபெற்றஞான யாகத்தொழிலாவதென்றவாறு.

தேவாரம்.

கற்றல்கேட்டலுடையார் பெரியார்கழல்கையாற்றொழுதேத்தஎனவுங், கல் லாதார்காண்டற்கரியானை, எனவும், கல்லாநெஞ்சினில்லானீசன்சொல்லாதாரோ டல் லோநாமே, எனவுங்கூறியருளினாராகலினிதனையேவிசிட்டமாகக்கூறவேண்டி ற்று. [எ]

ஐவகையாகங்களொன்றுக்கொன்றுசிறப்பென்பதூஉமடை
யும்பலமித்தகைத்தென்பதூஉமுணர்த்துகின்றார்.

அறைந்தகருமயாகமுதலைந்துமொன்றுக்கொன்றதிகந் ✽
சிறந்தபலமும்போகவிதஞ்சிந்தைசெய்தபயனெல்லா ✽
மறைந்துதீயவினைமாய்கைவரதனுருவமெனவடிவ ✽
மிறந்தும்பிறந்துமிளையாதேயிருக்கையென்னுமிவையைந்தும் ✽

எ - து முற்கூறியகன்மயாகமுதலியஐவகையாகமுமொன்றுக் கொன்றுப லன்களாதிகமாயிருக்கும், அஃதெவ்வாற்றாலெனில், கன்மயாகத்துக்குப்போகவி தமுந்தபோயாகத்துக்குச்சிந்திதமனோரதசித்திகளுமந்திரயாகத்துக்குக்கொடியக ன்மங்களுற்பவியாதுகெடுதலுந்தியானயாகத்துக்குச்சிவனதுதிருவடிவுபோலவ டிவமுண்டாதலும்ஞானயாகத்துக்குச்செனனமரணங்களையடைந்திளையாமற்சாயு

ச்சியம்பெற்றிருக்கையுமெனக்கூறியவிவைகளைந்துமொன்றுக்கொன்றதிகபலன்களாம் எ - று

அஃதெங்ஙனமெனின்கன்மயாகத்தைப்பற்றத்தபோயாகம்பதின்மடங்கதிகமதனைப்பற்றமந்திரயாகம்பதின்மடங்கதிகமதனைப்பற்றத் தியானயாகநூறுமடங்கதிகமதனைப்பற்றஞானயாகமளவில்லாதபலத்தைக்கொடுக்குமாதலால், ஞானயாகமேவிசிட்டமெனவறிக. [அ]

மேலிருந்தமுறையானேபரமயோகர்நிலையுணர்த்துகின்றார்

அஞ்சியாசைமுதலாயவவலபேதமனைத்தினையுங்
துஞ்சிப்பிறக்குந்தொழிற்கினைத்துத்தோன்றாத்துணைவனடித்தாங்கும்
விஞ்சைக்குகையுள்விற்றிருப்பர்பரமயோகவிரதியர்மெய்ந்
நெஞ்சத்திவராநினைப்பாரைநிரந்தவினையுநீங்கிடுமே

எ - து காமக்குரோதமுதலியதுக்கபேதங்களனைத்தினுக்குநடுங்கியிறந்துபிறக்குந்தொழிலுக்குவருந்தியவைநீங்கும்வண்ணம், அபக்குவர்க்குத்தோன்றாத்துணைவனாகியசிவனதுதிருவடியிலேநிலைபெறுதற்குக்காரணமானஞானமாகிறகுகையுள்வீற்றிருப்பார், மேலானயோகநிலைபெற்றதபோதனரிவர்திருமேனியையுள்ளத்தின்கணினைத்துமவரைத்தொடர்ந்தகன்மங்களும்விட்டுநீங்கும் - எறு

வினையுமென்றவும்மையான்மாயைமுதலாயினவுமெனவறிக, செடிகொடேறுபின்னடையார்திறம்பார்வருநிலைமையும்திருவாஞ்சியத்தடிகள்பாதமடைந்தாரடைந்தாரடியார்களே, எனவறிக [க]

மேலவரைவழிபாடுசெய்யில்வரும்பலனுணர்த்துகின்றார்.

புரிந்தார்பரமஞானிதனைப்பூசைநசையாற்புகழுறவே
பிரிந்தாருடலைப்பிரியாதேபெருமானுலகம்பெற்றிருப்பர்
நிரந்தகற்பசதம்புதரிகழவதன்பினெடுமால்வாழ்
பரந்தவுலகமதுபற்றியிருப்பர்விருப்பாற்பாங்குறவே

எ - து அன்பினாலேமேலானஞானிகளையருச்சனைசெய்தோர்பூமியின்கட்டமக்குத்தீர்த்திநிலைபெறஞானத்தன்னியவுடம்பினைநீங்கிச் சிவலோகத்தினையடைந்ததனைவிட்டுநீங்காமற்கோடிகற்பஞ்செல்லுமளவுமுறைவர்கள், ஆண்டுப்போகம்பொசித்துத்தொலைந்தவாறேநாரணன்வாழும்விரிந்தவுலகின்கணடைந்தன்பினாலேயவனதுசமீபமாகவாழ்வர் - எறு [ω]

இதுவுமது

உறைந்தேயொழிந்தவுலகத்துமோங்கும்போகமிதமூன்டு *
பிறந்தேபுவியிற்பிறழாதேபெரியோனடியைப்பேறுதலுந் *
சிறந்தேயவனுஞ்சிவஞானயோகந்தெருட்டத்தெருண்டுடனு *
மிறந்தேவினையிலிறைவனுடனிரணடற்றிருப்பரின்புறவே *

எ-து அங்ஙனம், நாராணனுலகத்திற்போகம்பொசித்துந்தொலைந்தவாறேய தனையல்லாதபிரமலோகம் பிரசாபதிலோகமிந்திரலோகங் கந்தருவலோகமியக்க லோகமிவையிற்றினுமடைவேவதிந்திருந்து ஆண்டாண்டுள் ளபோகபேதங்களைப் பொசித்துத்தொலைந்தவாறேபூமியின்கணுத்தமசாதியிற்றோன் றிமூன்விட் டகுறை யினுலேயுள் ளம்வேறுபடாமற்பெரியஞானசாரியனது திருவடியையடைந்துவழி பாடுசெய்துள்ளளவினந்தவாசாரியனுந்திருவுளமகிழ்ந்துசிவஞானயோகத்தையறி விக்கத்தாமறிந்துஞானநிட் டையையடைந் தபின்பந் தத்தேகத்தைவிட்டுநீங்கின வாறேதனக்குநிகரில்லாதசிவனுடன்வேறறக் கலந்துசிவானந்தானுபவத்தையனுப வித்திருப்பர்கள். எ-று [௰௧]

ஞானநிட்டையையுடையோர்கள்விடையங்களிலொழுகினுமவையிற்றி
லழுந்தாரென்றன்றோதுசிறப்புணர்த்துகின்றார்

அமலனுருவமறிந்தார்கள்விடையப்பேதத்தடைந்தாலுங் *
கமலத்தமருநீர்போலக்கலப்பதில்லைக்கருதுங்காற் *
றமலத்தினைபுந்தடுப்பார்கள்சமைக்கபூசையவர்தமக்கே *
விமலனவாவிட்லின்றிச்செய்தார்சிறப்பைவிரும்புவனே *

எ-து நின்மலனானசிவனதுசுபாவசொரூபத்தையுணர்ந்தஞாதாக்கள்விடை யவிதங்களைப்பொருந்தினுரேயாயினுமதனையாராயுமிடத்தவர்கள்தாமரையிலையிற் பொருந்தியநீரதிற்றோய்வின்றிநின்றதுபோல, அந்தவிடையங்களிலழுந்தார்கள், தமது, ஆணவமலமுதலியவற்றையும்போக்குவர்களாதலாலந்தஞானவான்களுக் கேபூசைசெய்யக்கடவரஃதேதுகாரணத்தினுலெனின், மலரகிதனானசிவனந்தச் சிவஞானிகளைவிட்டு நீங்காதவர்களிடமாகநின்றுசெய்தார்செய்த பூசைகளைத்தா னேவிரும்பியேற்றுக்கொள்ளுதலால் - எ று

அடைந்தாலுமென்னுமும்மையடையாமையைவிளக்கினதாகலின்-எதிர்மறை [௰௨]

பணியறநிற்றலாற்சிவஞானிகளிடத்துவினையேறாமைக்குத்திட்டா
ந்தமுமவரைப்புகழ்தலிகழ்தல்செய்தாரடையும்பலமுமுணர்த்துகின்றார்

மருந்தைச்சிறந்தமந்திரத்தைவல்லார்விடத்தைமாந்திடினும் *
வருந்தார்தமதுசெயன்மாளவரதன்பொருவில்வலியுணர்ந்தார் *
பொருந்தார்பாவபுண்ணியங்கள்புரிந்தேயிவரைப்புகழ்ந்தாரும் *
பிரிந்தேயிகழ்ந்துபேறாருமிவர்தம்வினையைப்பெறுவாரோ *

எ - து ஔடதத்தையுமேலானமந்திரத்தையும்வல்லபேர்கள், நஞ்சினைப் பொசித்தாராயினுமதனால்வருத்தமுறாததுபோலவொப்பில் லாதசிவனுடையஞான த்தையுணர்ந்தசிவஞானிகளும், எல்லாம், சிவன்செயலென்று, தம்செயன்மா ண்டிருக்கையினாலேயவர்கள் புண்ணியபாவங்களைச்செய்துமதனால்வருஞ்சுகதுக் கத்தையடையார்களாந் தச்சிவஞானிகளைப்புகழ்ந்தபேரும் வேறுபட்டிகழ்ந்தபேரு மாகியவிவர்கள்தமக்குரியவினைப்பயன்களைப்பெறுவர் எ-று [ம௩]

ஒத்துப்புறணைடமுதலியவைந்திறள்முற்கூறியசெய்யுளைக்குறித்து
ச்சுருத்திரப்புறணையுணர்த்துகின்றார்.

பன்றூன்பரமசிவஞானிபாவவிதமும்பயிற்றிடினு *
மென்றூன்பலமுமெனப்பறுவனுனாக்குமதனலொருதலையே *
நன்றோந்துயரமெனப்பெரியோர்நவைபுமியற்றினசையாலே *
மன்றூரவலமாசுனாயைமாற்றியிடவேவல்லாரார் *

எ - து மேலானசிவஞானிபாவபேதங்களைச்செய்யானதுசெய்யினுமந்தத்தீ வினைப்பயன்களையனுபவியானென்று திவ்வியாகமங்கள்சொல்லுமாகையினாலே சிவஞானியானவன்பாவபீதஞ்செய்யாமையுஞ்செய்யினஃதுண்ணாமையுநிச்சயம், அந்தச்சிவஞானிகளானோர்நாம் துயரத்தைப்பொருந்துவதில்லையேயெனக்கருதித் தமதுமனவிருப்பினாலேகாமாதிகுற்றங்களைச் செய்யினதனாலேயவர்க்குத்தீவினை யெய்தாதாயினும் பூமியின்கணிறையும்பொல்லாதவசைதோன்றுமதனைப் புறங்கூ றுதுமாற்றுதற்குவல்லார்யாவர் எ - று - ஏகாரம்தேற்றம்.
இயற்றினவெனவேயியற்றாமைவிளக்கிற்று [ம௪]

ஞானநிட்டையையுடையோரதனைவிட்டுக்கிரியைகளையனுட்
டிக்கிலவர்பரதத்துவத்தையறிந்தவரல்லவென்றுணர்த்துகின்றார்.

எய்தற்கரியபரம்பரனையிசைந்தார்கருமத்திசையார்கள் ✽
செய்யிற்கருமஞ்சிறந்தபொருள்செறிந்தாரல்லர்செழுங்கனிதங் ✽
கையிற்புகலுங்களைந்தவலக்காயைக்கவரக்கருதினரார் ✽
வையத்தொளிகொண்மணியகற்றிவழுவாஞ்சிலையார்மகிழ்வாரோ ✽

எ - து யாவராலும்பொருந்துதற்கரியசிவனைக்கூடிநேயத் தழுந்துவோர்கிரியையினைச்செய்யார்களதனை யனுட்டித்தாராயின்மேலானபொருளான சிவத்துடன்கூடிநிட்டையையடைந்தவராகார்ஞானயோகிகள்நேயத்தழுந்திலுமதனோடுகிரியையுங்கழித்தாரோவெனின்யாதாமொருவர்தங்கையின்கட்கொழுவியவாழைமுதலியவற்றின்கனிகளெய்தினலதனைநுகராதுவிடுத்துச் சுவையில்லாதகாயினைக்கைக்கொண்டுநுகரவிரும்பினர்யாவரஃதன்றிவையத் தின்கண்ணொளிபொருந்தியபதுமராகமுதலியரத்னங்கள்வந்தெய்திலவையிற்றினைக்கைக்கொள்ளாதுவிடுத்துப்புல்லியகல்லினைக்கைக்கொண்டுமகிழ்வோர்யாவர் எ - று கனிபெற்றோர்காய்விரும்பாததன்மைபோலவுமணிபெற்றோர் சிலைவிரும்பாததன்மைபோலவு ஞானம்பெற்றோர்கிரியைவிரும்பாரெனக்கொள்க. [௰௫]

நேயத்தைப்பெறவேண்டினர்க்குக்காமாதிகுற் றங்களணு
கொணாதென்பதுணர்த்துகின்றார்

ஆசைமுதலாமாசனைத்துமறுத்தேயுடலும்வெறுத்தரிய ✽
தேசன்சிவன்பொற்பாதமலர்செறிந்தார்பிறப்பைமறந்தார்கள் ✽
பேசற்கரியபெருமையினைப்பெற்றாரல்லர்கற்றாலும் ✽
மாசுமலிந்தவாசையினான்மயங்கித்துயங்குமானிடரோ ✽

எ - து காமமுதலியகுற்றமனைத்தினையுங்கெடுத்துயாக் கையும் வெறுத்துப்பிறராலறிதற்கரியஞானப்பிரகாசனாகியசிவனது பொன் போன்றதிவருடிமலர்களைப்பற்றினவர்களேசெனனமரணத்தையொழிந்தோர்களங்ஙனஞ்செய் யாதழுக்குமிக்கவிராகத்தினாலேயுள்ளமயங்கிவருந்துநரரானவர்கள்பெருநூல் களைக்கற்றாராயினுஞ்சொல்லுதற்கரியபிறவியறுதலைப்பெறார் எ - று

பிறவியறுதலேபெருமைதருவதாகலினதனைப்பெருமையென்றுபசரித் துக்கூறினார் [௰௬]

சருவவியாபியாயிருக்கிறசிவன்பக்குவான்மாக்களுக்கல்லதறிய
ப்படானென்றுணர்த்துகின்றார்

காரார்மலத்தாற்கண்ணிழந்தார்கலந்தேயெங்குநிறைந்தானைச் ✻
சேரார்ரவிதனைக்காணார்பிறந்தவிழியையிழந்தாருங் ✻
கோளார்பணியும்புனைவேணிகொண்டானடியைக்கண்டார்கள் ✻
மாறாமூலமலவலியைமாய்த்தாரவன்றன்வலியாலே ✻

எ - து. கட்புலனையிழந்து பிறக்குமவர்களாகாசத்தின்கணின்றெங்கும் பரம்பு மாதித்தியனைக் காணமாட்டாதவாறு போலவாணவமலத் தினாலேயறிவாகியகண்ணினையிழந்தபேர்களெங்குங்கலந்துநிறைந்துநிற்கிறசிவனைக்காணமாட்டாராயினிப்படிக்காணப்படாதசிவனைக்கண்டவர்யாவரெனிலந்தச்சிவனதுசத்தியினாலேதம்மைமறைத்திருக்கும்பொல்லாதமூலமலமாகியவாணவமலசத்தியைக்கெடுத்துஞானக்கண்பெற்றோர்யாவர்சிலரவர்களேவேணியந்தநாகத்தையாபரணமாப் பூண்டசிவனதுதிருவடியைக்கண்டவர்கள் எ—று. [ருஎ]

அந்தச்சிவஞானிகள் எந்தக்காலமுமேயத்தைவிட்டுநீங்கார்களென்ப துணர்த்துகின்றார்

வானமதனைநீங்காதுவாயுவிரைந்துமதனைப்போன் ✻
ஞானமயனைநீங்கார்கண்ஞானத்தவருநடுக்கத்துந் ✻
தேனின்மொழியாரிணைத்தோளைத்திளைக்கும்பொழுதுஞ்சினஞ்செறிய ✻
வூனத்தினரையுவர்த்தொறுக்கும்பொழுதும்யாதாமோருபொழுதும் ✻

எ - து. வாயுவானதெங்குமோடியுந்தனக்காதாரமானவாகாசத் தைவிட்டுநீங்காது. அதுபோலச்சிவஞானிகளுந்தமக்கச்சமுண்டானகாலத்துந்தேன்போலுஞ்சொல்லினையுடையமடவார்திரண்டதோளிணையைக்கலந்தனுபவிக்கும் பொழுதுங்கோபமேலிடத்தமக்குக்குற்றஞ்செய்தோரைவெறுத்துத்தண்டிக்கும்பொழுதுமற்றுமுள்ளகாலத்துந்தம்ஞானசொரூபியாயிருக்கிறசிவனைவிட்டுநீங்கார்கள் எ—று. [ருஅ]

சிவஞானிகண்முதலாயினோர்க்குச்சிவன்றோன்றிநிற்கு முறையுணர்த்துகின்றார்

துயக்கந்துடைத்தஞானிகட்குத்தோன்றுமெங்குந்துகளில்லான் ✻
மயக்கமறுத்தயோகர்க்குமருவுமிதயமலர்மீதே ✻
பயக்கும்பலத்தைப்பாவகனிற்பார்ப்பார்தமக்குப்பாங்குறவே ✻
நயக்குங்குருவின்மற்றையவர்நாடவுறைவனடோறும் ✻

எ - று நின்மலனுஞ்சிவன்விடையங்களிலேயறிவுவேறுபடுந்தன்மையை யொழித்தஞானவான்களுக்கெவ்விடத்துந்தோன்றிநிற்பன் அஞ்ஞானத்தைக்கெடுத்தயோகநிலையுடையோர்க் கவருடையவிதையகமலத்திற்றோன்றுவனந்தணர்க்குக்காருகபத்தியமாகவனீயந்தெக் கணைக்கினியமெனக்கூறியமூவிதமாகியவனல்களிற்றோன்றியவர்விரும்பியபலத்தைக்கொடுப்பன்மற்றுமுள்ளவான்மாக்களெந்நாளுந்தெரிசித் தற்குச்சிவலிங்கமுதலிய ஏயந்ததிருவுருக்களிலேயெழுந்தருளியிருப்பன் எ று [௰௧]

ஞானநிலையுயர்புங்கன்மநிலையிழிபுமுணர்த்துகின்றார்.

ஒளியபதுமராகங்கையுடையார்க்குவகையலதுண்டோ ✽
தெளியயோகசித்தர்க்குஞ்சிறப்பேபலதுசெலவுண்டோ ✽
புளியசிலையைப்பொறுத்தார்க்குப்பொருளோசிறிதுதுயர்பெரிது ✽
நெளிவுபெரிதுபலஞ்சிறிதுநிரந்தகருமநிலையார்க்கே ✽

எ று ஒளியினையுடையமாணிக்கத்தைக்கைக்கொண்டார்க்குமகிழ்ச்சியன்றித்துயருளதோ, வதுபோலத் தெளிவினையுடைய ஞானயோகஞ்சித் தித்தோர்க்குமின்பமேயன்றித் துன்பமுளதோ,புல் லியநிறத் தையுடையவம் மிக் கல்முதலியவற்றைச்சுமந்தோர்க்குவிலையாலெய்தும்பொருளோஅற் பம்அதனைச்சுமக்குந்துயரமோமிகுதியாயிருக்குமதுபோலப்பூசைசெபந் தியான மெனப்பரந்தகன்மநிலையினிற்போர்க்குப்பெறும்பலமற்பம்அடையுந்துயாம்பெரியது எ-று

உண்டோ எ-து இல்லையெனவிளக் கிநின் றமையாலெதிர்மறை செல்லலென் பதுசெலலெனவிகாரமாயிற்று புல்லியவென் பதுபுளியவெனலகாரம் ளகாரமாயிற்று சித்தர் என்றது ஞானவான்களெனக்கொள்க [௨௰]

மேலந்தஞானவான்களெழுந்தருளியிருக்குமெல்லையின்விசி ட்டமுணர்த்துகின்றார்

சிறந்தபரமசிவனுருவந்தெருண்டபரமசிவஞானி ✽
யுறைந்தவெல்லைவிற்கோடியளவும்பாவமொழிந்துவிடு ✽
நிறைந்தகங்கைநிகழிடத்துணீங்குமயுதமாறளவு ✽
மறைந்தவளவினருத்தத்துளகலும்பாவமரன்புரிக்கே ✽

எ - து சிறப்பினையுடையபரமசிவனது சொரூபத்தை யுணர்ந்த மேலான சிவ ஞானியானவனெழுந் தருளியிருக்குமேல் ஆக்குக்கோடி விற்கிடையளவுமந்நால், நிறைந்தகங்கைநதிவிளங்குமெல்லைக்கறுபதினாயிரம் விற்கிடையளவுஞ்சிவாலயத் தெல்லைக்குமுப்பதினாயிரம்விற்கிடையளவும்பாவமெய்தாதகலும் எ-று [உக]

சிவஞானிகள்விசிட்டமுணர்த்துகின்றார்.

நீடும்பொருளொன்றுண்டெனவேநெஞ்சமதனுணிச்சயித்தார் ✻
அடுபுதகமாநிர்த்தமவனிதலத்திலவர்க்கும் ✻
கூடுமெல்லைசிவபூமிகொடியவினைகள்கெடநினைவார் ✻
தேடியவரையருச்சிக்கசிந்தைசெய்கசிறப்புறவே ✻

எ - து நிலைபெற்றுநிற்கும் பதியென்னும்பொருளொன்றுண்டென்றேயுளத் தினகணிச் சயித்தபெரியோர் களாநம்புனல்பூமியிலுள்ளோர்யாவர்க்குங்கங்கைமு தலியபெரியதீர்த் தங்களாமன்றேர்பொருந்துமெல்லையேசிவத்தலமாம்,கொடுமை யாகியபாவங்களின் கெவெண்ணுவோரந் தஞானவான்களைத் தேடிநன்றாகப்பூசிக்க வுமவர்கள்திருவுருக்களைத்தியானம்பண்ணவுங்கடவர் எ-று

ஞானத்தினாலோக்கியநல்லபமென்பதாற்றேடியவரையருச்சிக்கதெனச்சிற ப்பித்தார் [உ௰உ]

ஒருபாயவிட்டையிரண்டுசெய்புளாலுணர்த்துகின்றார்

அகத்திற்புரிவாரருச்சனையையரியபலத்தையடைந்திடுவர் ✻
சகத்திற்புரிவார்சங்கரனைச்சார்வரதனிற்றணியபல ✻
மகத்துளேவல்புரிவார்க்குமதிகபலமேயாயன்பாற் ✻
சகத்திலேவல்புரிவார்க்குமதனிற்சிறுமைசார்ந்திடுமே ✻

எ - து வேர்தன்தமனையகத்தின்கண்ணே வல்செய்யுமவர்களுக்கவ்வேந்த னிடத்திலேநின்றமதிகமானபலன்களெய்துமதற்குப்புறத்திலேயேவல்செய்வோர் க்கதற்குக்குறையபயனெய்துமதுபோலச்சிவனைத்தம்மிதையத்திநுள்ளேயருச்சனை செய்வோர்மேலாயபலத்தினைப்பெறுவர்கள்புறம்பேயருச்சனைசெய்யுமவரதிற்குறை ந்தபலத்தையடைவர்கள் எ-று [உ௩]

பாரியாரும்பரிலாதபக்கமனையுட்பத்தாவைச் ✻
சேரவவனுமவடனக்குச்சித்தக்கரிப்புஞ்செய்திடுவ ✻
னோரிலாவிமலனைநெஞ்சுணினைக்கிலவர்க்கவனும் ✻

பூரித்திடுவன்போகவிதம்பொல்லாமலமும்போக்குவனே ❀

எ - து பாரியானவளொருவருஞ்செல்லாதவெல்லையினெடுத்தபள்ளியறையின் கட்டனது கணவனையணுக அந்தக்கணவனுமவளுக்குமனமகிழ்ச்சியை யுஞ்செய்வனதுபோலத்தனக்கொப்பில்லாதமலரகிதனுனசிவனையிதையகமலத்தின்கட்டியானிக்கிலவர்களுக்கிந்தச்சரீராந்தத்திலேசிவனுந்திவ்வியபோகபேதங்களைநிறைந்தநுபொசித்துத்தொலைந்தவாறே தீமையானவாணவமலத் தினையுநீக்கிமுத்திகொடுப்பன் - எ று

சித்தக்களிப்புமென்னுமும்மையாடைபூண்முதலியவற்றையுமளித்தல்கருநிற்று, மலமுமென்றவும்மைமாயைகன்மங்களையுமெனக்கொள்க, பக்கமென்பதுவடமொழித்திரிவாயிடமென்னும்பொருள்படநின்றது. [உச]

இன்னுமோருபாயநிட்டையுணர்த்துகின்றார்.

ஈனாந்தாயநிகைநடுவேயியமமாதிமலர்கொண்டே ❀
யார்வங்கூரப்பூசனையையமலர்க்கியற்றுமவர்தாமும் ❀
பேரன்புடையபெருமானருலகிற்போகம்பெரிதருந் திச் ❀
சாரும்பிறப்பிற்சிவஞானஞ்சார்ந்துசிவன்றாள்சார்வாரோ ❀

எ - து தேகத்திலுள்ளபத்தத்திக்குநடுவாகியவிதையத்தினுள்ளேயமிங்கிதைமுதலியமலர்கொண்டுநின்மலனுனசிவனுக்குப்பூசைசெய்யினையுள்ளன்புபெருகும் வண்ணஞ்செய்யுமவ்வருமான்மாக் களிடத்திலேபெருங்கருணையையுடையசிவனுலுகுலகத்திற்சென்றுமிருந்தபோகங்களைப்பொசித்துத்தொலைந் தவாறேபூமியின் கண் வந்தெடுத்தசெனனத்திலேதானே சிவஞானத்தைப்பெற்றுச் சிவனதுதிருவடியையடைவர் - எ று - அயிங்கிதை - கொல்லாமை [உரு]

சிவஞானத்தைப்பெறல்வேண்டுமென்றுவிரும்புவோ
ரெய்தும்பலமுணர்த்துகின்றார்.

நச்சிலெவருஞ்சிவஞானநம்பனமரும்புரிநண்ணித் ❀
துய்ச்சேபோகவிதந்தொலைவிற்றேன்றிப்புவியிற்றுரிசழியக் ❀
கச்சேபுளிப்காயத்தைக்கனிகண்டமதுகனிற்கண்டு ❀
விச்சைதனக்கும்விச்சாயவிமலன்கமலம்விரவுவரோ ❀

எ - து யாவராகிலுஞ்சிவஞானத்தைப்பெறல்வேண் டுமென்றுவிரும்பினவ ர்கள், சிவலோகத்திற்சென்றங்குள்ளபோகபேதங்களைப் பொசித்துமுடிந்தவாறே பூமியின்கண்வந்துசெனித்துத்துன்பங்கள்கெடும்படிபுல் லியயாக்கையினைவெறுத் துக்கிலேசனுநியசிவனுத்தமஞானக்கண்ணாலேதெரிசித்துஞானத் துக்கும்வித்தா யிருக்கிறசிவனதுதிருவடித்தாமரையைவேறறக்கலந்திருப்பர் — எ று

விச்சை - எ-து - ஞானம் விச்சு - எ-து - வித்து [உசு]

சர்தஞானவேட்கைமூவிதமென்றுமவற்றாற்பெறும்பயனி வ்வென்றுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

ஆசைதானுமூன்றுவிதமதியிலவையுங்கனிட்டாந்தம் *
பேசுங்கனிட்டவாதரவுபெற்றார்மூன்றுபிறப்படைந்து *
நேசார்ஞானயோகத்தைச்செறிவர்பரமதேசிகனாற் *
பாசம்பிரியப்பரமானவின்பவெள்ளம்பருகுவரே *

எ - து அந்தவாசையாராயுமிடத்துஉத்தமம்மத்திம ங்கனிட்டமென மூ ன்றுவிதப்படும் அதிற்பிற்கனிட்டவாதரவுபெற்றோர்மூன் றுசெனனம்பிறந்துமூன் றாவதுசெனனத்திலேபரமகுருவினருளினாலேயாணவமுதலியபாசங்கணீங்கவொ ளிபரம்பியஞானயோகத்தைப்பெற்றுமேலானவானந்தவெள் ளத்தினையனுபவிப்ப ர் - எ று - தான் - எது - அசை [உஎ]

உடையாரிடைவேறுளத்தமலனுலகமதனையுகப்புறவே *
யடைவாரவனிதலத்திரண்டுபிறப்புமவலவுடலாசை *
விடுவார்பரமசிவஞானியினைத்தகருணைவெள்ளத்திற் *
படிவார்பரமசிவன்பாதம்பரிப்பார்பசுநோயரிப்பாரே *

எ - து சிவஞானத்திலேமத்திமமானவாதரவு உள்ளத்தின்கணு ளடயோர் மேன்மையுண்டாகச்சிவலோகத்தின்கணடைந்து பின்பு பூமியின்கணிரண்டுசெ னனம்பிறந்திரண்டாவதுசெனனத்திலேதுக்கமான தேகவிருப்பினைவிட்டுப்பரம சிவஞானியானவாசாரியன்வைத்தகிருபைக்கடலிலேபடிந்து மேலான சிவனதுதி ருவடிகளைத்தமதுள்ளத்தின்கட்டரித்தாணவநோயை நீக்கி முத்தியடைவர் எ று வேண் விருப்பு [உஅ]

பெற்றார்பெரியவாதரவு பொருமானுலகமதுபெற்றே *

மற்றேருடலமன்றலிலவாய்க்கமனத்தின்மயக்கினையு *
மற்றேயபலவொளிவெளியையறிந்தேபிறிந்தேயவ்வுடலம் *
பெற்றேபிரியாப்பெரும்பொருளைப் பிரியாரழியாப்பேரின்பம் *

எ - து சிவஞானத்திலே யுத்தமமான வாதரவுபெற்றோர் சிவலோகத்தைய டைந்துமீண்டுபூமியின்கட்பிறிதொருசரீரமெடுத்தங்ஙன மெடுத்தவச்சரீரத்திலே தானேயுள்ளத்தில்விருப்புவெறுப்பினையுமொழித்துநின்மலமானஞானவெளியினை யுணர்ந்துபின்னரந்தச்சரீரத்தையுநீங்கித்தன்னைநீங்காத நிறைந்துநிற்கும்பரமசி வத்தினைப்பெற்றழியாதபேரானந்தத்தைநீங்காதனுபவிப்பர் எ - று [உக]

வேறு

என்றுகருமாறியமகத்திறமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினையை *
நின்றமுனியன்றுணரநிற்குணரினைந்தே *

எ - து வெளி [௩௰]

வேறு

காமுறுவாரையுங்கண்ணினனே காமனைக்காய்தழற்கண்ணினனே *
நாமமுமாயிரம்பெற்றவனே நான்முகன்றன்னையும்பெற்றவனே *
யேமமுமென்றனக்கானவனேயேனமுமெய்சிலைக்கானவனே *
தேமொழியாளொருபாலினனேசிறுவனுக்கன்றருள்பாலினனே *

எ - து தன்னைவிரும்புமவரையுமடிமைக்கொண்டருளுதற்குக் கருதினோ னே,காமனையெரித்தநெருப்புக்கண்ணையுடையோனே,ஆயிரந்திருநாமத்தைப்பொ ருந்தினோனே, நாலுமுகத்தையுடையபிரமாவையுஞ்சிருட்டித்தவனே, யெனக்கின் பமுமாயிருப்போனே, பன்றியையுமெய்யாநின்றவில்லையுடையவேடனாயினோனே தேன்போலுமொழியினையுடையவுமையாளையொருபாகத் திலுடையோனே, சிறி யகுழந்தையானவுபமன்னியபகவானுக்குமுன் னாட்கொடுத்ததிருப்பாற்கடலையு டையோனே எ-று -

காமுறுவாரையுமென்றவு ம்மை: யுள்ளபடியுணர்வோரையேயன்றி யென் பது, அவாய்நிற்றலினெச்சவும்மை, நாமமுமென் னுமும்மைமுற்றும்மை,நான்முக ன்றன்னையுமென் னுமும்மை நாரணனையுமெனவெதிரதுதழீஇயது, ஏமமுமென்

றமும்மை, யெனக் குயிரானபகலுபியாயிருத்தலேயன்றியென, எச்சந்தழிஇயிற். று - னெனுமென்றமும்மைமிழிவுசுறப்பு. [௬க]

உன்னலன்வேள்வியுடைத்தவனேபுற்றதுளுடையுடைத்தவனே ❁
கன்னியர்தங்களைக்காதலனேகாமுறுவாளையுங்காதலனே ❁
பொன்னனமேனிபொறுத்தவனேபுன்மையவென்பொய்பொறுத்தவனே ❁
யென்னெனும்புன்மையிலாதவனேயானெனும்புன்மையிலாதவனே ❁

எ - ற தன்னைக்கினையாதக் கவியாகத்தையழித்தோனே, பலதுணியாலுஞ் சேர்ந்தகந்தையைபுடையாகத்தரிக் குந்தபோதனனே, மதுராபுரியின்கண்வணிக ர்குலத்தூர்கன்னிகைகளுக்குக் கணவனுயுள்ளோனே, தன்னைவிரும்புமடியாரை விரும்புவோனே, காவிட்களனுயிருந் தம்அடியவர்பொருட்டாகப்பொன்போன்ற திருமேனியைத்தரித்தவனே, பொல்லாதவெனதுவஞ் சனையைப்பொறுத்தருளி னோனே, யெனதென்றும்புறப்பற் றில்லாதோனே, யானென்றுமகப்பற்றில்லையா னஞானுகித்தியனே - எ - று - [௬உ]

வேறு.

அனகளச்சுதனாறுருத்திரனழகனட்டதிண்புயவீரன் ❁
பனிவரைக்குநன்மகடனக்குளம்பரிவுபட்டிடம்பருள்பாகன் ❁
தினகரற்குமுன்பலேபிறுத்தவன்சிரமறுத்தவனலோனைப் ❁
புனிதனற்புதன்புதல்வனற்பதம்புணர்விருப்பொடும்புகழ்வாமே ❁

எ - து பாவமில்லாதவனுமாயழிவில்லாதவனுமாய்ச்சங்காரகருத்தாவுமாயான் மாக்கள்துன்பத்தைப் போக்குவோனுமாய்ச்சவுந்தரியனுமாய்த்திண் ணியவெட்டுத் தோள்களையுடையவலியுடையோனுமாயிமவானுக் குநல்லமகளாகியபார்வதியார்க் குக்காதல்கொண்டுதிருமேனியிலேபாதியருள்ளேனுமாய்முன்னுட்டக்கனியாகத்து லேயாதித்தியனதுபல்லையுதிர்த் தோனுமாய்ப்பதுமாசனத்திலிருக்கும்பிரமாவினது தலையைபறித்தவனுமாய்பித்திபசுத் தனுமாயதிசயமுள்ளோனுமாயிருக்கிற சிவனு டையகுமாரனுனமுருகனதுநல் லதிருவடிகளைக் கூடுமாசையோடுந்துதிசெய்வாம் எ - று [௬௩]

தமலமோகமுந்தவிரவேயருந்தவருமாதவன்முதலோரும் ❁
விமலவிரசன்முகதுகாசரன்விடலைகாவெனுந்துதியாளும் ❁
மமலறுநிசன்முகனதாள்பணிந்தநிலநிறியுமஃவான்வண் ❁

கமலருன் முகன்மதலைமாதவன் கருணையான்மலங்களைவாமே ❋

எ-று ஒருவராலுஞ் செயற்கரிய தவத்தினையுடைய விருடிகளுமாதித்தியன் முதலிய முப்பத்துமுக்கோடிதேவர்களுந் தம்முடைய வாணவமலத்தால்வருமறியாமைமுதலியநீங்கும்வண்ணநின்றுமலமில்லாதவனே யுந்தமலசத்தியைக்கெடுக்கும்வலிமையயுடையவனே யாறுமுகத்தையுடையவனே குகனே குறமகளைமணஞ்செய்துகானகத்திருப்பவனேநீயே புகலிடமெம்மைக்காப்பாயாகவென் றுதுதிக்குந்தோத்திரத்தைக்கைக்கொள்ளு மமலனுமாய் எவற்றிற்குமுதல்வனுமாயிருக்கிற சண்முகனுடையதிருவடிமலரைப்பணிந்தெல்லா ப்பொருளையுமறிந்தோனு யழகியதாமரைத்தவிசினையுடையநான்முகனுக்குப்புத்திரனுமாயிருக்கிற வகத்தியமாமுனிவனதருளினாலேமலமாயாகன்மங் களைப்போக்குவாம் எ-று

மலமோகமுமென் றவும்மையால் மதமுதலியவானவகாரியம் ஆறுமெனவறிக [௩௪]

மூன்றுவது ஐவகையாகவியலுமுற்றும்

நான்காவதுபலவிசிட்டகாரணவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின்முற்கூறிய கன்மயாகாதிபலன்களதிகமாதற்குக்காரணமானதேசகாலமுதலியவற்றையுணர்த்திற்றுகலாற் பலவிசிட்டகாரணவியலென்னும்பெயர்த்து இத்தலைச்செய்யுளென்னுதலிற்றோவெனின்பொதுமையானவறத்தினைச்சொல்வான்றுடங்கியகத்தியனை க்கந்தன்விளித்தனுதலிற்று

பிறப்பிலிபேதமில்லிபேணுவார்தம்மையென்று ❋
மறப்பிலிமலர்த்தாண் மன்னுமனத்துறவுறவேவைதநுச் ❋
சிறப்புறுதேசமாதிசெப்புவமுனிவதோக ❋
வறத்தினைப்புரிந்தார்க்காகவரும்பயனதிகமாங்கும் ❋

எ-து வாராய்முனிவரனே தனக்குற்பத்தியில்லானுயெவற்றினுமன்னியமின்றியிருப்பானுய்த்தன்னைவிரும்புமடியவரை யெக்காலுமறப்பில்லானுயிருக்கிறசிவனதுதாமரைமலர்போன்ற திருவடிகளைமனத்தின் கணிலைபெறவிருத் தியுத்தமமானதேசமுதலியவற்றை யுனக்குச்சொல்லாநின்றோம், அதனையறிவாயாகவதன்வழியறஞ்செய்வோர்க்குண்டாம்பயனிவ்வுலகத்தின் கணன்றிச்சுவர்க்கத்தின்கண்

ஞமதிமோகப்பளிக்கும் என்று [க]

மேலிருத்தமுறையானேதொகுத்தவற்றைத்தலைதடுமாற்றமென்று ந்தந்திரவுர்த்தியாலுணர்த்துகின்றார்

சிறந்தநற்றேசந்தன்னிற்றேடருங் காலங்கூட *
மறந்திடாவிதியினாலேவாய்த்தவாதரவுகூர *
வறந்தனையறிந்தவாய்மைப்பாத் திரமாவானங்கைச் *
செறிந்திடச்செய்தவற்பமுலகிலும்பெருகுந்தின்னம் *

எ - று உத்தமமாகியகாசிமுதலாகிய புண்ணியதலங்களிலேதேடுதற்கரிதாகி யகிரகணமுதலியபுண்ணியகாலங்கள்பொருந்தவழுவாதவிதியினோடு பொருந்தின வாதரவுபெருக அறமுதலியவற்றையுணர்ந்தசற்பாத்திரமான வன்கையிற்பொருந் தம்வண்ணமுபகரித்தபொருள் சிறிதேயாயினுமஃதுலகிலும்பெரிதாமிதுசத்தியம் எ - று ஆதுருபை ஒடுவாகக்கொள்க [உ]

முன்னைச்செய்யுளிற்பெருகுந்துக்கூறினரிச்செய்யுளிலதன்பயன்சிற ப்பிந்துணர்த்துகின்றார்

ஒன்றியவதனைச்செய்தவுத்தமர்சிவலோகத்துட் *
டான்றியேபோகபேதம்பிரளையசமையந்தன்னி *
னிங்கரும்பொருளைக்கண்டுநிறையுறவொருமைநேரத் *
தாங்குவவின்பந்தோன்றத்துகண்மலந்சோருமன்றே *

எ - று பயனுநூபர்ந்த அந்தஅற்பமாயின நன்மையை ஞானவான்கள்பாற்செ ய்தபெரியோர்கள்சிவலோகத்திற்சென்றங்குள்ள போகவிதங்களையெய்திப்பின் னர்ச்சங்காரகாலத்திற் பொல்லாதமலத்தை நீங்கித்தம்மைவிட்டு நீங்காதசிவத் தைத்தெரிசித்துக்கடல் அலையற்றடங்கினாற் போலவுள்ளத்தன்கண்ணமைவுபிறக் க ஐக்கியபாவத்தடனுனந்தானுபவமுண்டாகநிலைபெற்றிருப்பார்கள் எ - று [௩]

ஐவகையாகத்தோர்க்குதவும்பலத்துக்குக்காலவரையறையுணர்த்து கின்றார்

கருமிகட்கிகைநிற்குங்கலந்தோருபிறப்பிற்கற்ற *
பெரியராந்தவத்தோர்க்கிகைபிறப்பொருநூறுநிற்கும் *
மரியமந்திரத்தார்க்கிகைபாயிரம்பிறப்புநிற்கு *

மூரியயோகிக்குஞானிக்கூழிபேரூழிநிற்கும் *

எ - து கன்மயாகமுதலியஐவகையாகத்தோர்க்குங்கொடுத்தது, அடைவே ஒருசெனனம், நூறுசெனனம், ஆயிரஞ்செனனம், பிரமகற்பம், மகாசங்காரமானகாலமளவும், நின்றுபோகவிதங்களைக்கொடுக்குமென்றவாறு - யோகிக்கூழியெனவும், ஞானிக்குப்பேரூழியெனவும், பதமாற்றுக, போகவிதமென்பது, எஞ்சிற்று [௪]

தேசமுதலியவற்றிற்றானமுதலியகன்மங்கள்செய்யினதிகபலந்
தருமென்பதுணர்த்துகின்றார்.

திருவலையெழுவா யானகாரணஞ்சிறக்கவிகை *
யெரியினையோம்பலீசற்காலயமியற்றலென்றும் *
பரிவுறப்பூசைபண்ணலெனுமிவைநான்கும்பாங்கார் *
தருமமேயிவற்றால்வேண்டும்பலமெலாந்தழைத்துச்சாரும் *

எ - து புண்ணியதேசமுதலாகக் காலமுஞ்சிரத்தையும், பாத்திரமு மான பலவிசிட்டகாரணங்கள்சிறப்போடுபொருந்தவவ்விடங்களிற் றானஞ்செய்தலும், அக்கினிகாரியஞ்செய்தலுஞ்,சிவனுக்காலயமுண் டாக்கலு,மெக்காலமுமன்புபொருந்தவருச்சனைசெய்தலுமென்னுமித்தொழில்கணான்குஞ்;சிவபுண்ணியங்களுட்டலைமையாம், இதனாற்றாம்வேண்டியபோகங்களெல்லாமிகவுண்டாம் - எ று [௫]

சற்பாத்திரவிசிட்டமுணர்த்துகின்றார்.

பாத்திரமாவான்பாவப்படுகடற்பட்டார்தம்மைத் *
தீர்த்தமலேசன்வாழும்புரமெனுந்தீரஞ்சேர்ப்பான் *
கூர்த்தமெய்ஞ்ஞானமென்னுங்கரத்தினைக்கொடுத்தேமற்றார் *
தீர்த்திடவல்லார்கைதானில்லவர்க்குண்டோசெய்கை *

எ - து சற்பாத்திரமானவன், பாவமாகியஒலிபடுகடலினழுந்துவோர்க்குச்சத்தியஞானமாகிறகையினைக்கொடுத்துப்பாவப்படுகடலினையொழித்து மலரகிதனானசிவன்வாழுஞ்சிவலோகமென்னுங்கரையையடைவிப்பன், ஞானக்கையுடையோனன்றிப்பாவப்படுகடலையொழித்தெடுத்தற்குமற்றையோர்யார்தான்வல்லார், பிறருமெடுக்கவல்லர்காணுமென்னிற்கையிலாதார்க்குத்தொழிலுளதோ, அதுபோலச்சற்பாத்திரமல்லாதவன், பாவப்படுகடலினின்றுமெடுக்கமாட்டான் எ று - தமக்கு - எ து - தம்மையெனவுருபுமயங்கிற்று. [௬]

ஆன்மாக்களை ஞானவான்களே கரையேற்றுவரவொழிந்தஅஞ்ஞானிகள்கரையேற்றமாட்டாரென்பதுணர்த்துகின்றார்

அலைபுனலகத்துளாழ்ந்தசிலைமரப்புணையாலன்றிச் ✽
சிலையிறுத்திரந்தன்னைச்சேர்வதாஉமில்லைத்தேரிற் ✽
றொலையிலாப்பாவப்பௌவச்சுழியிடைச்சுழல்வார்தம்மை ✽
நிலைமையாரன்றித்தீயார்நீக்கிவான்கரையினிட்டார் ✽

எ - து அலையெறியாநின்றபெருநீருள்வீழ்ந்தமிழ்ந்தினகல்லானதைக்கரையேற்றவிசாரிக்கின் மரத்தாற்கட்டியதெப்பத்தினாலன்றிக்கல் லினாயதெப்பத்தினாலாகாதவாறுபோலத்தொலையாதபாவக்கட லிற்சுழியாகியசெனனமரணங் களிற் சுழலுமான்மாக்களைச் சற்பாத்திரமாகியஞானவான்களே, கரையேற்றுவதன்றியசற்பாத்திரமானோர் அக்கடலினின்றுஞ்சுவர்க்கமாகியகரையினேற்றமாட்டார் எ - று

முற்கூறியஞானக்கையென்பதற்கேற்கநிட்டற்றொழில்கொடுத்தானென்க [எ]

பாத்திரமென்னுஞ்சொல்லுக்குப்பொருளுணர்த்துகின்றார்.

பாவெனும்பதத்தினர்த்தம்பாவமென்கடலிற்பட்டார் ✽
தேவனற்பதமென்றிரத்திருத்துவான்றிரத்தினர்த்தம் ✽
பாவமென்கடற்பட்டாரைப்பரமர்தம்பதமென்பாரத் ✽
தேவியேயிருத்துவானேபாத்திரமென்னப்பட்டான் ✽

எ - து பாவென்னும்பதத்தின்பொருள், பாவமாகியகடலினமிழ்ந்தினோரென்றும், திரமென்னும்பதத்தின்பொருள், சிவனதுநல்லதிருவடிமலராகியகரையிலிருத்துவனென்றும், ஆகையாலேபாவமாகியகடலின்கண்வீழ்ந்தோரை, மேலானசிவனதுநல்லதிருவடிமலராகிறகரையிற்பொருந்தும்வண்ணஞ்செலுத்தியிருத்துமவனேபாத்திரமென்றுசொல்லப்பட்டான் - எ - று - [அ]

அந்தச்சற்பாத்திரமாயுள்ளோர்க்குப்பிச்சையிட்டார்பெறும்பயனுணர்த்துகின்றார்.

அருமறையாய்ந்தகோடியந்தணர்க்கருத்தவாய்த்த ✽
தருமமுஞ்சிறிதேயென்னத்தகைந்திடுந்தம்மையோர்ந்த ✽
வொருமையயோகர்தங்கையுதவியபிச்சையுள்ளுன் ✽

பிரியவேபெறுவரின்பம்பிச்சையைப்பெறுவித்தாரே ✽

எ - று நாலுவேதங்களையுமாராய்ந்தகோடிபிராமணர்க்கறுசுவையோடுபொசிப்பித்தபுண்ணியமுமற்பமென்னும்வண்ணமான்மசொருபத்தைத்தெரிசித்தவொருப்பாட்டினையுடையசிவயோகிகளுக்கிட்டவொருபிடிபிச்சையானது, பெருத்ததிகமாம், ஆதலாலவர்க்குப்பிச்சையைப்பெறும்வண்ணமிட்டோருட் குற்றமாகியவாணவாதிகளநீங்கிப்பேரின்பத்தைப்பெறுவர் - எ று. [கூ]

சிவயோகிகளையமுதசெய்வித்ததுசிவனுக்காமென்பதுணர்த்துகின்றார்

அருத்துகவமலன்றன்னையகத்துணர்ந்தவரையன்னங்
கருத்திருந்தவர்க்குச்செய்தபூசனைகடவுள்கொள்வ
னொருத்தனுக்கருபசாரங்களுடலிடையுலகர்செய்வர்
பிரித்துடலுயிரைப்பேறும்பெற்றியையாரோபெற்றார் ✽

எ து நின்மலனாகிய சிவனையுள்ளுயிராக த்தம்முள்ளத்தின்கணுணர்ந்த சிவயோகிகளுக்கன்னத்தையருத்துவிக்கக்கடவன ங்ஙனமவர்க்குச்செய்த பூசையைச்சிவன்அவர்களுள்ளத்தின் கணிருந்துகொண்டருளுவன் அஃதெங்ஙன மென்னிலுலகத்திலுள்ளோர் யாதாமொருவனுக்குச்சந்தனமலர்முதலியவுபசாரங்களையவனதுசரீரத்தின்கட் செய்யவேயவனுயிர்க்குச்செய்ததாம் அதுபோலச்சிவயோகிகளுக்குச்செய்ததுசிவனுக்காம் உடலின்கட்செய்வதொழிந்துயிரின்கட்செய்யாரோவென்னிலுலகத்திலேயெவர்தாமுடலிப்பிரிக்கியுயிரைக்கண்டுபகரிக்குமுறைமைபெற்றவர் எ று [ம]

மேலவர்களுக்குப்பிதிர்திவசங்களிலேயருத்துவித்தோரடையும்
பலமுணர்த்துகின்றார்

விடுத்துலகமலன்றன்னைவிரும்பியவிதுலர்க்கன்னங்
கொடுத்தவரன்புகூரப்பிதிர்க்களைக்குறித்தநாளி
லெடுத்தெழுமூன்றுசுற்றங்கிழக்கிடந்தினையாதென்று
நடத்தொழினம்பனுட்டிசிருத்தியேயிருப்பர்நம்பால் ✽

எ து பிதிர்க்களைநோக்கிய திவ்சங்களிலேயுலகவாஞ்சையை யொழித்துநின்மலனாகியசிவனைவிரும்பிய வொப்பில்லாததபோதனர்க்கன்புபெருகவமுதுசெ

யிழித்தோர்தம்முடைய விருபத்தொருசுற்றத்தையுநரகத்தின்கட்கிடந்தவருந்தா மலேந்தியெக்காலமுந்திருநடத்தொழிலினையுடைய சிவன் வாழுஞ்சிவலோகத்தின்கணிருத்தித்தாமுமிருப்பத்திருவேசிவசமீபத்திலே யிருப்பரென்றவாறு விதலம். ஒப்பின்மை நம்பு விருப்பு [ம.க]

அவர்களுக்கிட்டபிச்சையினதுவிசிட்டமுணர்த்துகின்றார்

தம்மினையடைந்தயோகர்தமதுபணிந்துதாமு ❁
மெம்மையேயாளுமீசனிவனெனவிட்டபிச்சை ❁
வெம்மையநரகந்தன்னில்வீழ்ந்ததங்குலத்தைமீட்டு ❁
மெய்ம்மையேசிவலோகத்தினிருத்திடுமியம்பன்வேறே ❁

எ - து யாதாமொருவர்தம்முடைய மனையின்கணெழுந்தருளிய சிவயோகிகளது திருவடிமலர்களைத் தாமுமெதிர்சென்று வணங்கி யெம்மையடிமைகொண்டருளுஞ்சிவனிவனேயென்றிட்டபிச்சை யானது கொடியநரகத்திலேவீழ்ந்த தம்முடையகுலத்தன்னோரையெல்லாமதனினின்று மீளச்செய்துசிவலோகத்தின்கண் வைக்கும் இதசத்தியம் வேறுவியந்து கூறுவதென்னையென்றவாறு, தாமுமென்ற வும்மைபாத்திரம்மைந்தர்மனைவியருமெனவதிக [ம.உ]

இல்வாழ்வோர்க்குத்தொழிலினுற்பாவங்கள்வருமுறைமையுமவை
தீருமுறைமையுமுணர்த்துகின்றார்

உலகினிற்பாவபேதமுண்டுழவாதியைந்தா ❁
லலகிடன்முதலைந்தாலுமவ்வினையறுமெம்மாதிக் ❁
கிலகியவேர்க்குநூலிசைத்தருள்குரவர்க்கென்று ❁
நில்லமையதவர்க்குப்பூசைநித்தலுஞ்செய்வார்க்கே ❁

எ - து புறம்பேசெய்புமுழவுமுதலியதொழிலைந்தினுமனையகத்திற் செய்யு மலகிடன்முதலியதொழிலைந்தினும் பாவபேதங்கள்பூமியின்கணுளதாம் சிவனுக்கும் விளங்காநின்ற வக்கினிக்குஞ்சிவஞானோபதேசித்தருளு மாசாரியர்க்குமெக்காலமுநிலைபெற்றதபோதனர்க்கும்பூசையை நித்தியமுஞ்செய்வோர்க்குமுற்கூறியபாவங்களேறுதகெடும் எ - று [ம.௩]

உண்டியால்வருமுயர்பு மிழிபுமுணர்த்துகின்றார்

அட்டவைதன்னைச்சொன்னநால்வருமருந்தவன்பா ❁

விட்டுமிக்கதனையுண்கையுமிர்தப்பியாதேயுண்கை *
கட்டமுங்கடுமொழிகழிந்தலுங்காயந்தானு *
மொட்டியேயுடலிற்றோன்றும்புழுவுமென்றுணர்கவோர்ந்தே *

எ - து யாதாமொருவர்தமக்குச்சமைத்த வன்னத்தைமுற்கூறிய சிவன்முதனால்வருமமுதுசெய்யும்படியன்பினாலே கொடுத்தந்தச்சேடத்தைப்பொசிக்கைஅமர்தம்பொசித்ததைலொக்கும்இந்நால்வர்க்குமுதவாதுண்கை,மலமும்,விடமுமுயிர்நீங்கியகாயமானபிணமுமுடலின்கட்பொருந்தித்தோன்றும்புழுவுமுண்டலொக்குமென்றவையிற்றை யுணர்ந்து அவர்களுக்கிடாமலுண்கையையொழியக்கடவர் எ - று [மச]

முன்னைச்செய்யுளிலுழவாதியைந்தென்றுமலகிடன்முதலைந்தென்றுந்தொகுத்தாரதனைவகுத்துணர்த்துகின்றார்

தலத்துபுல்கூலிவேலைசந்தையிற்கொண்டுவிற்கை *
குலைத்தசொற்கூட்டுங்கோபஞ்சத்தியங்கூறலுள்ளு *
மலக்கிடன்மெழுகலங்கியாக்கனீரரிசியென்றே *
யிலக்கியத்தியம்புமபத்துந்தமக்கெனிற்பாவமீட்டும் *

எ - து புறம்பேசென்றுநிலத்தின்கணுழுதலுங்கூலிகொண்டுவேலைசெய்தலுஞ்சந்தையிற்கொண்டுவிற்கையு நாய்குலைத்தாற்போன்றசொல்லையுண்டாக்குங்கோபமும்பொய்யுரைத்தலு மில்லத்தின் கணிருந்தலகிடலு மெழுகலு நெருப்புமூட்டலுந்தண்ணீரொடுத்தலு, மரிசிகுற்றலுமென்று நூல்களிற்கூறுந்தொழில்கள்பத்துந்தமக்கென்றுகருதிச்செய்யிற்பாவங்கள்வரும் எ - று

இத்தொழில்களால்வரும் பாவம்யாதெனிற், புருடராமேனுழவுதொழில்செய்யுங்காற்செந்துக்கண்மரிக் கையுமுழுமெருதுக்கு வருத்தமுதலியகுற்றமுமுளதாம், கூலிவேலைசெய்யுங்காலவ் வேலைத்தொழிநிருந்தச்செய்யாமையும்வேலைக்கழப்பும்வெட்டல்கொத்தலிற் கொலையுமற்றுமுள்ளகுற்றமுமுளதாம்,- கொண்டுவிற்குமிடத்துப்பிறர்பொருளேறக் கோடலுந்தம்பொருள்குறையக்கொடுத்தலும், பொய்யுரைத்தலு, முதலியகுற் றமுமுளவாம்; கோபம்வருமிடத்துப்பிறர்க்கின்னாமையுந் தமக்குணர்வுகேடும், வன்சொல்லுமுதலியகுற் றமுளவாம், அசத்தியங்கூறுமிடத்துப்பிறர்க் கிடுக்கணும்பகையு, மச்சமும், பழியுமுதலியகுற்றமுளவாம், மகளிரலகிடன்முதலியவைந் தொழிற்கண்ணுஞ்செந்துக்கள்மரிக்குங்குற்றமுளதா

மௌனவதிக. [௰௫]

அக்குற்றங்கெடுதற்கோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்.

தேசுறுசிவாதிபூசைக்கெனவினைதன்னைச்செய்யி *
னாசமாம்பாவமேதந் தம்மையேநாடிச்செய்யிற் *
பாசமாய்நரகபேதப்படுகுழிப்படுத்தியென்று *
மூசல்போலுழல்வித் தாக்குந்துயரினுக்களவுமுண்டோ *

எ - து இந்தப்பத்துத்தொழிலினையும்புகழான்மிக்கசிவன்முதலியநால்வருடையபூசையின்பொருட்டாகச்செய்வாராயின்அத்தொழிலினால்வரும்பாவவிதங்கள்கெடும்அவற்றைத் தம்மையேகுறித்துச்செய்வாராயினவைகள்கன்மபாசமுமாய் நரகவிதங்களாகியகுழியிலே விழுவித் தங்கோடிக்கோடிழலுமூசலைப்போலவெக்காலமுஞ்செனனமரணங் களிலேசுழன்றுதிரியும்படிசெய்தவற்றினாலுண்டாகுந்துயரினுக்கோரெல்லையுளதோ - எ - று

ஓகாரம், எதிர்மறைக்கண்ணாய்இல்லையெனவிளக்கிநின்றது [௰௬]

மேன்முதற்றமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

இந்தவினைத்திறனுமேயபாவமாறச் *
சிந்தனைசெய்தார்மற்றுஞ்செபிந்தநிவினையுந்தீர்க்கப் *
புந்திசெய்தார்கடாமுஞ்சிவாதியைப்புரிகபூசை *
நைந்தறும்பாவம்வாய்க்குநலங்களுநவிற்றுவாமே *

எ - து இந்தப்பத்துத்தொழிலானுமுண்டாயபாவங்கணிங்கும்வண்ணங் கருதினோர்களுமிவற்றாலன்றிப்பிறவாற்றாறும்பொருந் தியபாவங்களொழிக்கும்வண்ணங்கருதினோர்களுஞ் சிவன்முதலாயநால்வரையும்பூசைபண்ணக்கடவர்கள் அன்னமவர்களைப்பூசைபண்ணிற்பாவங்களெல்லாந்தேய்ந்துகெடுமேலதனாலுண் டாம்பயன்களுஞ்சொல்வாம் - எ - று (௰௭]

சிவன்முதலாயினோர்க்கருநிகொடுத்தோர்சிவலோகத்திலெய்தி யிருக்குங்காலவளவையுணர்த்துகின்றார்

அருத்தியவழிபினைக்கமலனாதியோர்க் கன்பா *
லிருத்திடுஞ்சிவலோகத்தின்வருடமாயிரமுமேயப் *

பொருந்தியவன்பர்தம்மைப்பொருந்திடிற்பருப்புநெய்பு ✲
முரைத்தவவ்வருடந்தன்னிற்றசகுணமோங்குமாங்கே ✲

எ - று சிவன்முதலியநால்வரையுமன்பினுலேயமுதுசெய்வித்த, அவிழ்களிலோரவிழ், ஆயிரம்வருடஞ்சிவலோகத்திலிருக்கும்படிவைக்கும், அந்தஅவிழுடனேபருப்பு, நெய்யும், பொருந்துமாயினங்ஙனமருத்துவித்தவன்பர்தம்மைமுற்கூறியவருடத்திற்பதின்மடங்காகியபதினுயிரம்வருடஞ் சிவலோகத்திலேயதிகமாகவிருந்துமென்றவாறு அவிழ் அன்னம். [௰௪]

இதுவுமது.

பொரித்தநற்கறியும்புல்கிற்றசதசகுணிதம்போனந் ✲
தரித்தசாட்டியமேயென்னிற்சததசகுணமுஞ்சாரும் ✲
பரித்தநற்கந்தபத்தஞ்சதசதகுணமும்பற்று ✲
மிரத்தநற்சாலியன்னநியுதமேயெண்ணிலேன்றும் ✲

எ - று முற்கூறியபருப்புநெய்களுடனேநல்லபொரிக்கறியுங்கூடுமாயின்முன்னேரவிழுக்குக்கூறியவருடத்தினூறுமடங்கான நூருயிரம்வருடஞ்சிவலோகத்திலிருத்தும்அவர்களுக்குநிவேதிக்குமன்னமறுபதுநாளிலேவிளைந்தநெல் லினதன்னமாயின், முன்னேரவிழுக்குக்கூறியவருடத்திலாயிரமடங்கானபத்துநூருயிரம்வருடஞ்சிவலோகத்திலேபொருந்தவைக்கும், நன்மைபொருந்திய புழுகுசம்பாநெல்லினதன்னமாயின், முன்னேரவிழுக்குக்கூறியவருடத் திற்பதினுயிரமடங்கானகோடிவருடஞ்சிவலோகத்திற்பொருந் தும்வண்ணமிருத்தும், நல்லசெஞ்சாலிநெல்லினதன்னமாயின், முன்னேரவிழுக் குக்கூறியவருடத்தினூருயிரமடங்கானபத்துக்கோடிவருடஞ்சிவலோகத்திலிருத்தும் - எ - று

ஏகாரம, தேற்றம், உரைத்தவ வ்வருடமென் டதுஞ்சிவலோகமென் பதும் அதிகாரம்பாரித்தமையால், யாண்டும்வருவித்துக்கொள் க,சாட்டியம், அறுபதாங்குறுவை, கந்தபத்தம், புழுகுசம்பாநெல் [௰௧]

இதுவுமது

சாலியின்விசிட்டராசசாலியார்சமைத்தவன்ன ✲
மேலையபலத்தின்மிக்கதசகுணம்விளைக்குமீண்டுங் ✲
கோலியபலங்களேறுங்கொழுவியநெய்புங்கூடி ✲
லேலவேகறியுங்கூடிலேற்றமுன்னிசைத்தவாற்றும் ✲

எ - று செஞ்சாலிநெல்லினுமதிகமானவிராசசாலிநெல்லினாற்சமைத்தவமுதாயின். முற்கூறியபலத்திலுமதிகமாகப்பதின்மடங்குபலத்தினைவிளைக்குமானவேமுற்கூறிய பத்துக்கோடியிற்பதின்மடங் கானநூறுகோடிவருடஞ் சிவலோகத்திலேயிருத்தலுமென்னும் அந்தஅன்னங்களிலே நல்லநெய் யுங் கூடுமாயின்மீளவுமந்தவன்னங்களுக்கு ச்சொன்ன பலவளவிரட்டிக் கும்அவையிற் றிரேடுபொருந் தக்கறியுங்கூடுமாயின் அந்தந்தக்கறிக்குமந்தந்தவன் னங்களுக்குமுற்கூறியபலத்தினதளவாயவறையின்படியே யிரட்டிக்கும் எ - று [உ௰]

சிவவிரதானதபோதனனாயருத்துவித்தோர்க்கெய்தும்பலமுண ர்த்துகின்றார்

பாருதநூபாயதாதிபலவிதவிரதபாகங் ✽
கொழுவியகனியின்பேதங் குளகிருதாதிகூடு ✽
முழுமணமோதகாதிமுன்னையினதிகமுற்றும் ✽
விழுமியபலத்தைவேண்டிவிரதனாமிசைவித்தார்க்கே ✽

எ - று விசிட்டமானபலன்களைவிரும்பி க்குற்றமற்றபாயசமுதலான குளான்னத்திலான்னம்பருப்புப்போனகிவைகளையுநானாவிதமானவிராசசாலியன்னமுதலியவிரதபாகங்களையுங்கொழுவியவாழைக் கனிபலாக்கனிமாங்கனி முதலியகனியின்விதங்களையுஞ்சருக்கரைநெய்முதலாயின கூட்டிச்சமைக்கு நிறைமணத்தையுடையசுகியன்முதலானபணியாரவகைகளையுங் கூட்டி ச்சிவவிரதங்களை ச்செய்யுந்தபோதனர்களையமுதுசெய்வித்தோர்க்கவைகளே முற்கூறியபலத்திலு மதிகமானபலன்களைவிளைக்கும் எ - று

கு செயப்படுபொருளைச்செய்ததுபோல த்தொழிற்படக்கிளத்தலும்வழக்கினுளுரித்தே என்பதனாற்கருமப்பொருளை க்கருத்தாவாகக்கூறிற்று [உக]

சிவயோகிகளையருத்துவித்தோரெய்தும்பலமுணர்த்துகின்றார்

உரைத்தவிப்பாகபேத முயிர்க்குயிருணர்ந்தார்தம்மை ✽
யருத்தினர்சிராத்தத்தன்பாலருங்கியமுவேழ்சுற்ற ✽
மிருத்தினர்சிவலோகத்தினெண்ணியபடியேதாங்கள் ✽
கருத்திலுட்களிப்பும்பொங்கப்புதல்வனைப்பெற்றேகாண்பர் ✽

எ - று முற்கூறியவிரதப் பாகபேதங்களை யுயிர்க்குயிராகியசிவனைத்தெரிசித்தசிவயோகிகளுக்குச்சிராத்தகாலங்களிலே யன்பினோடமுதுசெய்வித்தோர்தாம்

பூமியின்கணிருக்கவுநரகத்தின்கட் டுருயறுநின்றவிருபத் தொருசுற்றத்தையுமெடுத்துச்சிவலோகத்தில்வைத்தோராவரஃதேயன்றி த்தங்களுள்ளத்தின் கணினைந்தபடியேசற்புத்திரனையும்பெற்றுமனமகிழ்ச்சியும்பெருக க்கண்டிருப்பரென்றவாறு [உ௨]

இறுவுமது

உயிர்க்குயிராகிநின்றவொருவனையுணர்ந்தயோகி ✽
பயிக்கயுங்கொளவென்றெண்ணிப்பரிந்தவர்மனைமுன்பற்ற ✽
வுயப்பெறுவோமென்றெண்ணியவர்குலத்துள்ளாராங்கே ✽
பெயர்த்தடிநடமுஞ்செய்வர்பாடுவர்களிப்பும்பெற்றே ✽

எ து உயிர்க்குயிராகிநிற்குஞ்சிவனைத்தெரிசித்தசிவயோகியானவன் பிச்சைகொள்ளக்கடவோமென்றெண்ணிப்பத்தசனங்களுடைய வில்லின்முன்பொருந்தவக்கணத்திலேதானேயவர்குலத்திலுள்ளோரான விருபத்தொருவர்க்கமும் யாமினரகத்தினின்றுங்கரையேறுவோமென நினைந்தவ்விடத்திலேதானே மனமகிழ்ச்சியையும்பெற்றுக்கால்பெயர்த்துக்கூத்துமாடி யதற்கேற்கப்பாடாநிற்பர் எறு நடமுமென்றவும்மையாற்கையாற்றட்டுமிட்டென்றறிக உ௩]

அந்தச்சிவயோகிக்குச்செய்யும்பூசையைச்சிவனுமற்றுமுள்ளதேவர்கள்பிதிர்க்களுந்தமக்கெனக்கொள்வரொன்றுணர்த்துகின்றார்

ஒழிவறவுறைந்துநின்றவொருவனையுணர்ந்தயோகிக் ✽
கழிகுறச்செய்தபூசையமலனுமயனுமாலு ✽
மெழில்மிகுதேவர்தாமுமெமக்கெனக்கொள்வரொன்றும் ✽
பிழைகெடப்பிதிர்க்கடாமுமெமக்கெனக் கொள்வர்பெற்றே ✽

எ து வெளி [உ௪]

சிவயோகிபூசைக்குவினியோகப்படும்பொருள்கள்பெறும்பயனு மேவல்செய்வோர்நினைப்போர்பெறும்பயனு முணர்த்துகின்றார்

பூசனைக்குபயோகங்கள்பொருவிலிபுரத்தைப்புல்கு ✽
நேசனையுணர்ந்தயோகர்க்கிறைஞ்சிபேயேவல்செய்தார் ✽
நேசமுநிறையநெஞ்சி லினைத்தவர்தாமுநீக்கி ✽
யாசினைச்சிவலோகத்தினரும்பயனருந்துவாரோ ✽

எ - று சிவனைத்தெரிசித்தசிவயோகிகளைப் பூசைசெய்தற் குரியோகப்படுஞ்சந்தனமாமுதலியஎண்வகைக்கந்தமுங்கோட் டுப்பூமுதலியநால்வகைப்பூக்களுநெல்லுமுதலானவைகளுமொப் பில்லாதசிவனது புரத்தைச்சென்றடையுமவர்களைவணங்கியவரேவியபணிவிடைசெய்தோருமுள்ளத்திலேயன்புநிறையும்படியவரைத்தியானஞ்செய்தோருந்தம்மைத்துயர்செயுந்தீவினைக்குற்றங்களையொழித்துச்சிவலோகத்திலேசென்றுபெறற்கரியபோகங்களைப்பெற்றநுபவிப்பர் எ - று [உரு]

தபோதனராயுமதிதிகளாயுஞ்சிவனெனக்கண்டுவணங்கு முறைமையுணர்த்துகின்றார்.

அவனியின்மனிதர்செய்கையுருவமென்றமலன் றனை ⁂
தவிராதுமுறுவந்தன்னைத்தரித்துவந்தானென்றெண்ணி ⁂
யவர்களுக்ககத்தின்வந்தவதிதியர்க்கன்புகூரச் ⁂
சுவைமொழிசொல்லிப்பூசைதுடங்கியேமுடிக்கசூழ்ந்தே ⁂

எ - று பூமியின்கண்மானிடர்தவழிபாட்டினையறியக்கடவோமென்றுநின்மலனாகியசிவன்றானேதபோதனனொன்றுந்திருமேனியைத்தரித்துக்கொண்டெய்தினனென்றுகருதியந்தத்தபோதனர்க்கு,மற்றுந்தம்மில்லின்கண்வந்தவதிதிகளுக்குமன்பானதுபெருகும்வண்ணமின்சொற்கூறியவர்களுக்குப்பாத்தியாசமனர்க்கியமலர்முதலியவற்றுற்பூசையைத்தொடங்கிமற்றுமுள்ளவுபசாரங்களும்விதிப்படிசெய்துமுடிக்கக்கடவன் - எ - று [உசு]

இதுவுமது.

மலினராய்வந்தாரேனும்வடிவொடுவந் தாரேனு ⁂
நிலைமையினிங்காரேனுநிற் கியநிலையரேனு ⁂
மலைவறுமன்பர்க்காதிக்கவர்களுக்கமைக்கபூசை ⁂
புலைபுடற்பொறையைப்போக்கப்பொருந்தியதிருந்தியாரே ⁂

எ - று ஊனுடலாகியசுமையையொழித்தற்குவிரும்பியதிருத்தத்தையுடையோரானவர், தம்மில்லின்கணுக்குமெய்யோடுகூடி யிழிகுலத்தினராய்வந்தாராயினும், பரிசுத்தராய்வேடப்பலிப்பொருநற்குலத்தினராய்வந்தாராயினுந், தாம்-நிற்குநிலைமையினின்றும்வழுவாதோராய்வந்தாராயினு, மந்தநிலைமையினின்றியவியாதவர்களாய்வந்தாராயினும். அவர்கள்-ஆதியாகியசிவனுக் குநிலைபெற்றஅன்பராயின்அவர்களுக்குப்பூசைசெய்யக்கடவர் எ -று [உஎ]

சிவஞானிகளுக்குக்குற்றஞ்சொல்லுமவர்முதலியோர்க்குவருந் தீமையுணர்த்துகின்றார்.

காட்டுமுள்ளொளியினைக்கண்டகண்ணனைக் கயந்துசொல்லக் *
கேட்டவர்கேட்பித்தார்கள்கொழுமினருடன்பட்டார்முன் *
மூட்டினரொன்றவைத்துமூடருங் கூடிமூழ்கி *
மீட்டிடுவாருமின்றியெரிநிரயத்துள் * வேவார் *

எ - து ஆன்மாக்களுக்கெல்லாம் அந்தரியாமியாய்நின்றெப்பொருளையுந்தெரிவிக்குந்தீபமாகியசிவனைத்தெரிசித்தஞானக்கண்ணுடையோனை, யாதொருவனிந்தித்துச்சொல்லுங்காலதனைக்கேட்டிருந்தோரும், பிறனைக்கேட்பித்தோரு, நிந்தைசொன்னவரு, மதற்குடன்பட்டவரு, நிந்திக்கும்படிமுதற்கணேவினோரு, மானவைந்துமூடரு, மொக்கவேயெரிவாய்நரகத்தின்கண் அமிழ்ந்தியெடுப்பாருமின்றிவேவுவர் எ - று [௨௮]

இதுவுமது

மனத்தினால்வடிவுதன்னால்வழுக்கியசழக்கர்தாமு *
மினத்தொடுமிணங்கிவேவவெரிநிரயத்தையெய்தி *
யெனைத்துளகாலந்தானுமென்றுளத்தேங்கியெய்ப்பர் *
தனக்கயலுறவிலானைத்தவறுவரொன்றோதாமே *

எ - து மனத்தினாலுங் காயத்தினாலுஞ்சிவஞானிக் குத்தவறுசெய்தநிந்தைகேடருந், தம்மினமாயுள்ளாரோடுங்கூடியெரிவாய்நரகத் தையடைந்தவேவுவர்கள் இங்ஙனமனுபவித்துத்தொலையுங்காலமெவ்வளவுளவோவென்றுமனமேங்கிவருந்துவராதலாற்றனக்குறவும் பகையுமில்லாதசிவஞானிகளையேன்றான் தவறுரைப்பார்கள். எ - று [௨௯]

இதுவுமது.

மற்றையநரகபேதமனைத்தினுமபங்கிமூழ்வேழ் *
சுற்றமுஞ்சுழலத் தாமுங்கூடியேதுயங்கிவிழ்வ *

---

* வேவார்என்னும்பொருளிலீண் டுடன்பாட்டின்வந்தது.

செற்றவரியமதூதரெமக்குறவாருமில்லை *
யுற்றவித்துயரந்தன்னையொழிக்கவென்றழிவருள்ளம் *

எ - து அத்தீயோர்முற்கூறியவெரிவாய்நரகமேயன்றிமற்றுள்ளநரக பேதங்களெல்லாவற்றிலுந்தங்குலத்திலுள்ளோரானவிருபத்தொருசுற்றமுங்கூடி யுள்ளமலமாக்கலக்கியுணர்வுகெட்டுவிழாநிற்பர், அவ்வனம்வீழ்ந் தந்தத்துயரம் பொறுமனாதேத்தின்றுங்களையேறுந்தோறு யமதூதர்களால்றடித்தடித்துமீள வாதனன்றுவர்கள், அதனாலேயித்துயரத்தையொழிப்பதற்குறவாயுள்ளோரொரு வருமில்லையிதற்கென்செய்வோமென்றுமனமுஞ்சலிப்பர் எ-று [௯௰]

சிவஞானிக்கிடர்செய்யினரகவேதனையெய்துமாதலாலவனைவழி படுகவென்றுணர்த்துகின்றார்.

ஆதலான்முனிவர்தம்மையவமதிசெய்யாதந்நீர்ப் *
பூதலத்தோர்கள்பூவாற்புனலினாற்பரிவுபொங்கப் *
பாதபூசனையும்பண்ணிப்பணிந்தவர்பணியுஞ்செய்து *
நாதனாமிவர்களென்றுநாடுகவுளத்தெந்நாளும் *

எ - து பொறிபுலன்களைமுனிந்தசிவஞானிகளுக் கிடர்செய்யின்நிரயத்து ன்பமேவருமாதலாலுலகிலுள் ளோர்கள் அம்முனிவோரை நிந் தியாதுபயந்துஅ ன்புபெருகநீராலும், பூவினாலுமவர்திருவடிகளைப் பூசைசெய்தவரேவியபணியி னையுஞ்செய்தெக்காலமுந்தம்முள்ளத்தில் சுட்சிவனேயிவர்களென் றுசிந்திக்கக்க டவர் எ-று [௯௧]

அசத்பாத்திரமாவாரின்னாரென்பதுணர்த்துகின்றார்.

பகர்ந்தனமுனிவமெய்ம்மைப்பாத்திரவிசிட்டந்தன்னைச் *
சகந்தனிலின்னக்கோலஞ்சமைந்துதற்பரனைச்சாரா *
ரகந்தனிற்பிறப்புமஞ்சாரவரபாத்திரங்களென்றே *
மிகழ்ந்திடுமிதுவுங்கேளினிபுனக்கியம்பயாமே *

எ - து மாபாபகத்திபமுனிவனே முன்வஞ்சற்பாத்திரவிசிட்டத் தைச்சொன் னோமேல்அசத்பாத்திரமாவதியாதெனி னுலகத்திலுள் ளோரிவர்பெரியதபோதன ரென்றுசொல்லும்வண்ணம்வேடத்தைத்தரித்துச்சட்டுணர்வுக்கெட் டாதசிவனைய டையாதவருமாயுள்ளத் தின்கட்செனனமரணத்துக்கு ப்பயப்படாதவருமானவர்

யாவர்சிலர் அவர்களையசத்பாத்திரங்களென்று வேதாகமங்களி கழாநிற்குமிந்த அசத்பாத்திரத்திலேசெய்ததானம்விளைக்குந் தீமையுமேலுனக்கியாஞ்சொல் லாநின்றோமதனைநீகேட்பாயாக எ‑று [௩௨]

அவர்களுக்குக்கொடுத்ததானம்பலன்கொடாமலழியுமென்பதனை ர்த்துகின்றார்

மெய்யனைவிழைந்துபாசப்பகைவினைவென்றியாமு *
ருய்யவேவேணுமென்னு முள்ளமதிழந்துநின்ற *
பொய்யனாப்புரிந்தபூசைபலத்தினைப்பொருந்துமோதான் *
செய்தநுமவர்க்குப்பச்சைமட்கலநீரேதேரில் *

எ‑து சத்தியசொரூபனான சிவனைவிரும்பியாணவமுதலிய பாசப்பகைவினைச்செயித்துமுத்தராயாமுங்கரையேறவேணுமென்று கருதுங்கருத்தைவிட்டுநின்றவசத்தியற்குச்செய்தபூசை நல்வினைப்பயனைக்கொடுக்கமாட்டாது அதனையாராயின்அந்தவசத்பாத்திரத்துக் குச்செய்ததானம்பசுமட்கலத் தில்விட்டநீர்போலநில்லாதுடனேயழியும் எ‑று

தான் எ‑து அசைநிலை [௩௩]

இதுவுமது

பழுதறுவித்தேயேனு முவரிடைப்பயிரோயாகா *
வழலிடையன்றிநீற்றிறைருநிபலத்தையாக்கா *
விழைவிலாவலியைமேவுமெல்லியலின்பமேவாள் *
வழுவுறுமவர்க்கேயீகைவரத்தினைச்செயுமோமாட்டா *

எ‑து குற்றமற்றநல்லவித்தேயாயினு முவர்நிலத்தின்கண் விதைத்தாலதுபயிராகமாட்டாதவாறுபோலவும்அக்கினியின்கண்ணேயன்றி ச்சாம்பலின்கட்செய்தவாகுதிபலத்தைக்கொடுக்கமாட்டாத வாறுபோலவும்விரும்புதற்குரிமையில்லாதஅலியினைப்புணரும்பெண்ணானவள் புணர்ச்சியின்பத்தைப்பெறாதவாறுபோலவுங்குற்றம்பொருந்திய அசத்பாத்திரமாயுள்ளோர்க்கு க்கொடுத்ததானமும் பலத்தினைக்கொடுக்குமோகொடுக்கமாட்டாது எ‑று [௩௪]

சத்பாத்திரங்களையேற்றுமென்றும சத்பாத்திரங்களையேற்றதென்றுமுவகைமுகத்தாலுணர்த்துகின்றார்

பாத்திரமாக்கிக்கட்டியிரும்பினைப்பண்டமேற்றி *

பாற்றொடையியர்க்கீவன்றுமடைபினையடையுமாங்கே ✽
பாத்திரரிந்தாரேறுநிந்சிவபுரப்பாரம்பற்றும் ✽
பாத்திரமல்லான்கட்டியிரும்பெனப்பாரம்பற்றான் ✽

எ-து யாதாமொருவனிரும்புக் கட்டியைத்தோணியாகப்பண்ணியதிலேபல பண்டமுமேற்றியாற்றின்கண்விடும் போதுதாமெண்ணியகரையினைச்சேரும், அப்படியேசற்பாத்திரமானதுந், தன்பாற்றானஞ் செய்தோனையுங்கொண்டு சிவபுரமாகியகரையைச்சேரும், கட்டியாயுள்ளவிரும் புடன்பண்டத்தையுங்கட்டியாற்றின் கண்விடில்விட்டவெல்லாமிலேயமிழ்ந்திக் கரையடையமாட்டாதவாறுபோல, அசற்பாத்திரமானவனுந், தன்பாற்றானஞ்செய்தோனைக்கரையடைவிக்கமாட்டாததுமன்றித்தானுஞ் சிவபுரமாகியகரையடையமாட்டான் எ-று
கடை - எ-து - கஉ [௧௫]

பாத்திரமபாத்திரமானவிருவருநராயிருக்கவதிலொருவர்க்கொருவருயர்ச்சிதாழ்ச்சியுமாய்த்தன்மைதின்மைபெறுமாறென்னையெனவினவ, அதற்கோர்விடையுணர்த்துகின்றார்.

கட்டியைக்கனலிற்காய்ச்சிக்கம்மியனலகுமாக்க ✽
விட்டநற்பண்டமேற்றுப்புனல்மிசையியங்குமெற்றே ✽
யொட்டிய குரவனாறுமொருபொருளுணர்ந்தாநற்றே ✽
கட்டியைக்கடுப்பர்காட்டுங்கடவுளையுணராக்கையர் ✽

எ-து கொல்லனானவனிரும்புக்கட்டியைத்தீயிலேகாய்ச்சித்தோணியாகச்செய்யவதுதான்கணிட்ட நல்லபண்டங்களையுந்தரித்துக்கொண்டு நீரின்மேலேயோடுமதொத்தன்மைத்து அச்சிவனுடேயேசிபாவம்பொருந்திய வாசாரியன்தீக்ஷாசக்தருக்குபதேசித்த வொப்பிலாதசிவத்தை யுணர்ந்தஞானவான்கள், தமக்கீந்தோரைப்பிறவிக்கடலினின்றுங் கரையையடைவிப்பதத்தன்மைத்தாம், ஆசாரியரானேயேப்பொருளையுங்காட்டுஞ்சிவனையுணராத, அஞ்ஞானிகள், பணிப்படாத விருப்புக்கட்டியையொப்பர் எ-று [௧௬]

மேலுமோர்வகையாற்பாத்திரமென்பாரையுணர்த்துகின்றார்.

பாத்திராபாத்திரத்தைப்பகாதுறுதலைபற்றிக் ✽
கார்த்தவாதரவினாலேகொடுப்பவர்க்கவர்கடாமும் ✽
பாத்திரந்தருடப்பன்றுபாலகர்மிடியர்நோயர் ✽

முத்தவர்சிறுபருநிபிவர்களுமிரக்கமுற்றில் ✽

எ - று இவர்பாத்திரம், இவர், அபாத்திரம், என்றிரட்டுறக்கருதாதுள்ள நெகிழ்ச்சிபொருந்தியிருந்தவாதரவுண்டாகவகையாதுகொடுப்போர்க்கியாவரிடத்திலுமிரக்கமேலிடின், முற்கூறியவசத்பாத்திரங்களுங் குருடர், முடவர் சிறுகுழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிகர், பேராசையுடையோர், முதலானவின்னோர்களும்பாத்திரமேயாம் எ று [கூஎ]

இதுவுமது

உச்சியிலணைவாரொல்லாமுத்தமரொன்றேயென்னவி ✽
யர்ச்சனைபுரிகவன்பாலவலனுக்கைதன்னைக் ✽
கைச்சமலேசன்வாழுங்கடிநகரடைவாமென்று ✽
மிச்சையினியைந்தாரொல்லாமெண்ணியயாவுமேயும் ✽

எ று துக்கத்தை விளைக்கும்பொல்லாதவுடம்பினைவெறுத்து நின்மலனாகியசிவனெழுந் தருளியிருக்குஞ் சிறப்பினையுடைய சிவலோகத்தை யடைவோமென்றுகருதுமாசையினோடேபொருந்தினோரெல்லோரும் உச்சிக்காலத்திலேபசித்துவந்தோரியாவரையும் பாத்திரங்களென்றேகருதி யவர்களையன்பினாலே யருச்சனைசெய்தன்னமுதலியகொடுக்கக்கடவர்அங்ஙனஞ்செய்யிற்றம்மனத்தின்கணினைத்தபலன்களெல்லாங்கைகூடும் எ று [கூஅ]

தாதாவினதிலக்கணமுணர்த்துகின்றார்

பாத்திரமல்லார்செய்கையதனையும்பகர்ந்தாம்பண்பு ✽
வாய்த்ததாதாக்களாவார்தகைமையும்வகுத்துச்சொல்வா ✽
மோர்த்துணருதாரந்தாழ்ச்சியுறவனுகம்பங்கோபந் ✽
நீர்த்திடலென்னுமைந்துமுடையரோசிறந்தார்தேரில் ✽

எ று வாராய் முனிவரனே யசத்பாத்திரமானோரிலக்கணத்தையுஞ் சொன்னோம்மேல்நற்குணம்பொருந்தியதாதாக்கள் மேன்மையும்பிறித்துச்சொல்லாநின்றோமதனையாராய்ந்தறியக்கடவை யங்ஙனமவர்கள்முறைமையை யாராயிற்கொடைவணக்கமுறவுகிருபைபொறையென்றுசொல்லுமிந்த ஐந்துகுணமுமுடையார்களேதாதாக்களாவர் எ று [கூகூ]

சிவஞானிக்கியுந்தன்மையுணர்த்துகிறார்

பாத்திரமதனுண்மிக்கபாத்திரம்பரமஞானி *
தீர்த்தவாசையினாலியாவனவவன்செப்பானன்றே *
சார்த்தவாதரவினாலேயாவன்புடைகூறுகிக்கொள்ளீ *
தீர்த்தனையென்றுமீவான்பலத்தினைத்தெரிக்கலாமே *

எ - து பாத்திரமாவன வற்றுள்விசிட்டமான பாத்திரஞ் சிவஞானியேயவன். பொருள்களினுள்ளவாசையொழித் தபடியினாலே யாதாமொருவர்பாற்சென்றிந்த ப்பொருளையெனக்கீயக்கடவையென்று சொல்லானாதலால் அன்னமயேமிகவுமு டையசிரத்தையினாலேயந்தசிவஞானி யெழுந்தருளியிருக்குமெல்லையிலேசென்று சுத்தனேயடியேன்றரும்பொருளைக்கொள்ளக்கடவையென்றுசொல்லியுங்கொடுக் குந்தாதாவின்பலத்தையளவிடலாமோ எ று [சய]

மெய்ஞ்ஞானியுமஞ்ஞானியுமேற்குந்திறமதனால் வரும்பயனும்பயனி ன்மையுமுணர்த்துகின்றார்

மெய்யினையுணர்ந்தஞானி வேண்டாவாவிடுத்தானேனு *
முய்யவேபிறருமுன்னியவர்கொடையுகப்பனோராக் *
கையர்கடம்மைத்தாமேகாதலித்திரப்பரந்தப் *
பொய்யர்கைப்புகுத்தினர்கள்பொருளினையிழந்தார்போட்டே *

எ - து உண்மையைத்தெரிசித்தசிவஞானியானவன், பொருண்மேலுள்ளவா சையைவிட்டானாயினுந்தம்போலமற்றுள்ளவர்களும்பரகதியடையவேணுமென்று கருதியந்தத்தாதாக்கள் செய்யுந்தானத்தைவிரும்பிக்கொள்வன் அந்தவுண்மை யைத்தெரியாத அஞ்ஞானிகள், தாதாவானவன்கதியடையவேணுமென்றுவிரும் பாதுதம்முடையபோசனார்த்தத்தைவிரும்பித்தானத்தினையேற்பராதலாலந்தஅஞ் ஞானிகள்கையிலேதானஞ்செய் தோர்கள்தம் பொருளினையவமேபோட்டிழந்தவ ராவர்எ-று தாம் - எ-து - அசைநிலை [சக]

தாதாவானவன்சுவர்க்கமடைதற்கின்னோர்சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

காதலித்தவர்வரினக்கலப்பதுமவர்கைகாட்டி *
மாதலால்வானஞ்சேரவாதரவுடையாரஞ்சிப் *
பாதபூசனையும்பண்ணிப்பகர்ந்துசற்காரபாடை *
யோதனமாதிகளிகட்டுறவிறேடே *

எ - து. அறத்தைவிரும்பித்தானஞ்செய்வோர், சுவர்க்கத்தையடையுமுறைமைகாண்பதெங்ஙனமென்னில் அவர்கொடுக்குங்காலத்துமேலாகச் செல்லுங்கைதானேயவர்சுவர்க்கத்தின்மேற்செல்லுமுறைமையைக்காட்டும் ஆகையினாலே சுவர்க்கத்தையடையவேணுமென்னும் விருப்பத்தையுடையோரிரப்போரெனதிக்கூறாமலதிதிகளுக்குப்பயந்துபாதார்ச்சனையுஞ்செய்து நல்வார்த்தையுஞ்சொல்லியன்னமுதலானவற்றையன்பினோடேகொடுக்கக்கடவர் - எ-று [சஉ]

தரித்திரற்குக்கொடாதான்சிறப்புடையனல்லனென்றுணர்த்துகின்றார்

செறிந்துதாவென்றுநின்றமிடியனைச்சிறியனாக்கி ✻
யுறைந்துளான்பெரியனெங்ஙனென்றுளத்தாகஞ்செய்வான் ✻
சிறந்ததாதாவேயல்லன்செட்டிவன்செய்கையெல்லா ✻
மிறந்திடுந்தருமமேற்குமிடியருமின்றேலெங்கும் ✻

எ - து தன்னைக்கிட்டியெனக்கீயக்கடவையென்றுசொல்லியிழிவரவினோடுநிற்குந்தரித்திரனை, யிவனற்பனென்றெண்ணிச்செல்வத்தையுடையபெரியவனெங்கேயிராநின்றானென்றுகருதியவற்குக்கொடுத்தற்குத்தன்னுள்ளத்தின் கண்விசாரிப்போன், அருளான்மிக்கதாதாவாகான், இவன்கொடுக்குங்கொடையெல்லாம், அவன்பாற்றனக்குமோருதியங்கருதியசெட்டாம், இங்ஙனஞ்செல்வனாயிகழ்ந்து மிடியனைச்சிறப்பித்ததென்னெனில், எங்குஞ்சென்றிரக்குமிடியருமில்லையாயின் ஏற்பாரற்றுத்தன்மமானதுலகின்கணில் லாதுநாசமாமாதலாற்றரித்திரற்கேதானஞ்செய்யக்கடவன் எ று [சஙு]

அதற்குமேலுமோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்.

பொருளரிதாகிற்கேட்பார்க்கின்சொலுமரிதோபோந்தால் ✻
விரைவுடனெழுகையோடல்வியந்தெதிர்கொள்கைபீடத் ✻
துரிமையினிருத்தல்பாதபூசனையுகப் புச்செய்கை ✻
பிரிபொழுதுடனேசெல்கையெனுமிவையேழும்பேறே ✻

எ - து தன்பால்வந்துகேட்குமிரப்போர்க்குக்கொடுக்கும்பொருளில்லையாயினவர்க்குச்சொல்லுநல்லவார்த்தையுமில்லாததோ ஆதலால்நல்வார்த்தையாயினுஞ்சொல்லக்கடவன், தன்பாற்பெரியோர்கள்வந்தகாலத்துவிரைவினோடெழுந்திருக்கை; யோடிச்செல்லல்கண்டவுடனெழுந்தருளப்பெற்றதேயெனக்கொண்டாடியெதிர்கொள்கை, அவரிருக்குமதற் குரிமையுடையவாதனத் திருத்தல், பாத

த்திலிருக்கின்றகை, இன்றல்லவோவெனத்துதிக்கை, சுத்தமாயிற்றென்றவனையுயர்த்திப்புகழ்தல், அவர்களெழுந்தருளும்பொழுதுபதினறடிகுறையாமற்சென்றுவழிவிடுக்கை, யெனக்கூறுமிவைகளேழுமுத்தியடைதற்குக்காரணமாம் எ-று

ஒகாரம் - ஒழியிசைக்கண்வந்தது, போந்தாலென்னும் வினைக்கு எழுவாய்விரிக்க. [௪௪]

தாதாவுமவன்கையிலேற்றானுமடையும்பலமுணர்த்துகின்றார்.

இரக்கமாதரவுகூரவிபவன்கையிலேற்று ✽
விருப்பனையிந்தாரொடுசிவனுலகமெய்தி ✽
யிரக்கமாதரவிலான் கையேற்றவனிந்தாரொடு ✽
மிருப்பனைநிரயந்தன்னுளொண்ணிருவினையையெய்தே ✽

எ-து அருளுமாதரவும்பெருகக்கொடுக்குந் தாதாவின்கையிலேயேற்றவன் அந்தத்தாதாவினொடுஞ் சிவலோகத்திலேசென்றிருப்பன்அருளுமாதரவுமில்லாத தாதாவின்கையிலேயேற்றவன், அந்தத்தாதாவினொடுநிரயத்திற்சென்றுமுன்செய்தபாவத்தைவிசாரித்துவாடியிருப்பன் - எ-று [௪௫]

மேற்புண்ணியதலங்களையெடுத்தேழுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு.

கொடுக்குஞ்செய்கையர்தம்மையுங்கூறினம் ✽
விடுக்குஞ்செய்கையர்தம்மையும்வெண்ணிற ✽
விடைக்கும்பாகன்விமலன்விரும்பிய ✽
விடத்தையுமிசைப்பாமினியாமரோ ✽

எ-று தாதாக்கண்முறைமையும் அதாதாக்கண்முறைமையும் வகுத்துச்சொன்னோம்மேல்வெள்ளைநிறத்தையுடைய விடபத்தைச்செலுத்துவோனுமாய் நின்மலனுமானசிவனைவிரும்பியெழுந்தருளியிருக்கும் புண்ணியதலங்களையுந் தொகுத்துயாம்சொல்லாநின்றேம் எ-று

விடைக்குப்பாகனென்பதனைவிடைக்கும் பாகனெனல்மெலிக்கும்
வழிமெலித்தல் அரோ அசை [௪௬]

வேறு

நித்தமாசிவகாசிநிகர்குருக் ✽

கேத்திரம்பிரயாகைநிளரலர் ✿
பூத்தபுட்கரணிபுனிதர்க ✿
வார்த்தகங்கையலைகடலாதியும் ✿

எ து வெளி [சஎ]

கரப்பில்லாநைமிசாரணியங்கவின் ✿
பருப்பதம்வேதபர்ப்பதங்கோகன்னம் ✿
அரத்தமேனியரியரம்பையும் ✿
விருத்தவேதியர்வெண்ணையும்பெண்ணையும் ✿

எ து வெளி [சஅ]

ஒற்றியூர்திருவோத்தூர்விளைவய ✿
லுற்றவூறலுயர்புகழ்வான்மியூர் ✿
வெற்றியூர்திருப்பாசூர்விரிஞ்சையுங் ✿
கற்றுமுற்றினர்காரிவனமுமே ✿

எ து வெளி [சகூ]

கனகமார்முகலிக்கரைகாஞ்சிநல் ✿
லனகராமுதுகுன்றருணசலம் ✿
முனிவர்சேர்குடமூக்கிடைமாமரு ✿
துனருமுத்தனரூர்புலியூருமே ✿

எ - து வெளி [ருய]

காழிமூவலையாறுதென்கண்டியூர் ✿
வீழிவேதவனந்திருவிற்குடி ✿
வாழைமல்குவலஞ்சுழிவாஞ்சியந் ✿
தாழைநீடுவெண்காடுசாய்க்காடுமே ✿

எ - து வெளி [ருக]

எழிலுமார்பரங்குன்றிராமிச்சுரம் *
பொழிலுமார்மதுராபுரிபூவணம் *
அழகுமாருநெல்வேலியஞ்சைக்களங் *
குழகன்புக்கொளியூர்கொலிக்குன்றமே *

எ - து வெளி (ருஉ)

கோதனங்கள்குவிந்தவிடங்களு *
மாதபோதனர்வாழுமடங்களு *
மிகில்வேட்கையர்க்கெய்யிடமின்னுழுன் *
டோதுவாங்காலபேதமுமோர்கவே *

எ - து இவ்வனங்கூறியபுண்ணியதலங்களும்-பசுக்கள்திரண்டவெல்லைகளும் தபோதனர்களெழுந்தருளியிருக்குந்திருமடங்களு-மிகுபோலத்தானஞ்செய்கிறதிலேவிருப்பத்தையுடையோர்க்குப் பலனதிகமாதற்குப் பொருந்தியதலங்களின்னமுமுளதாம்.முறைமையானேயினிக்காலபேதங் களையுஞ்சொல்லாநின்றேமனைவகலையறிவாயாக எ - று (ருங)

காலவிசிட்டமுணர்த்துகின்றார்.

அரவமாதித்தன்றன்னையடர்த்திட *
விரவும்வேலையும்வெண்மதிதன்னையு *
மிருமையானவயனமுமீபவர்க் *
குரியவேலைகண்மற்றுமுண்டோர்கவே *

எ - து வெளி—இருமையாவவயனம் - தைமாதப்பிறப்பு-ஆடிமாதப்பிறப்புமற்றுமுண்டென்பதனுல் - சித்திரைவிசு - ஐப்பசிவிசு - அமாவாசி - பூரணை - திருவாதிரை -வியதிபாதயோகமுதலாயினவென்க (ருச)

சிரத்தாவின்விசிட்டமுணர்த்துகிறார்.

உரைத்தனங்காலபேதமுமோர்கவுட் *
சிரத்தைதன்னையுஞ்செப்புவஞ்சிந்தையுட் *
பரித்தமெய்ம்மைப்பரமப்பிரீதியே *
குருத்தபத்தியுமற்றதன்கூற்றரோ *

எ - து இங்ஙனங்காலவிதங்களுஞ்சொன்னமேலுள்ளத்தின்கணுளவான வாதரவையும் - அதன்பரியாயத்தையுஞ் - சொல்லாநின்றோமதனையதிவாயாக ஆதரவானது - தம்முள்ளத்தின்கணுண்மையோடுகூடினமேலானமகிழ்ச்சியெனவும் - பெருந்தவன்பு - எனவுமற்றுமுள்ளபரியாயப்பெயரினையும்பெறும்- எ று மற்றென்பதுசுட்டியதற்கினமென்பதனலதற்கினமாகியசிவதன்மம்பாவமாதியென்னுமூன்றுமந்தவாதரவுக்குப்பரியாயப்பெயரெனவறிக அரோ - அசை - [ருரு]

மேன்முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்.

சிறந்ததேசமுங்காலமுஞ்சிந்தையுட் ✻
பிறந்தகாதலும்பெற்றவர்நற்றவர்க் ✻
கறைந்தநூல்விதியர்ச்சனையாக்குக ✻
நிறைந்துவானெனவேபலநீடுமே ✻

எ - து உத்தமமாகியகாசிமுதலியதேசமுங்-கிரகணங்கண்முதலியபுண்ணியகாலமு - முள்ளத் தின்கட்போருந் தியமகிழ்ச் சிமுதலானவாதரவும் - எய்தப்பெற்றோர்நல்லதவத்தினையுடையசத்பாத்திரங்களுக்குவேதாகமங்களிற்சொன்னவிதிப்படியேயர்ச்சனைசெய்ததானஞ்செய்யக்கடவர் - அங்ஙனமவர்களுக்குச்செய்ததானபலன்களாகாசம்போலவிசாலமாய்ப்பெருகியழியாமனிலைபெறும் எ - று [ருசு]

வேறு.

என்றுபயன்மேன்மைதரு,காரணமிசைத்தான் ✻
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ✻
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினையை ✻
நின்றமுனியன்றுணரநிற்குணவினைந்தே ✻

எ - று வெளி [ருஎ]

சிவந்துதியுணர்த்துகின்றார்.

வானவர்நாடரு மாதவனேமானவிருட்டறும் மாதவனே ✻
கானமர்வேடனுமானவனேகடிதெனவேசெலுமானவனே ✻
யேனமுமானவனெண்ணலனேயெம்முளத்தாக்கிடுமெண்ணலனே ✻
யூனமர்வெண்டலையுண்டவனேயுத்தமர்நெஞ்சகத்துண்டவனே ✻

எ-து மாலயன்முதலாயுள்ளதேவர்கள் - அறிதற்கரியதபோதன னே, ஆன்மாக்களுக்கியானெனதென்னுமபிமானமாகியவந்தகாரத்தையொழித் தற்குக்காரணமானஞானதீர்த்தியனே, அருச்சனனுக்கனுக்கிரகஞ்செய்தற்பொ ருட்டுக்காட்டின்கணுறையும்வேடுவனாய்வந்தோனே, விரைந்துசெல்லுமிடபத் தையுடையோனே, வராகரூபியுமானதிருமாலறியப்படாதோனே, யெம்முடை யவுள்ளத்தின்கணுண்டாக்குமுழுதுணர்வுமுதலாகிய வெண்குணத்தையுமுடை யோனே, குற்றம்பொருந்தியபிரமகபாலத்திற்பிச்சையேற்றுண்டோனேயுத்தம ராகியஞானிகளுள்ளத்திலனவரதமும்விளங்காநின்றவனே - எ-று [ருஅ]

இதுவுமது

புலிமுனிபூசைபுரிந்தவனேபுகழ்நடமன்றுபுரிந்தவனே ❀
பரிந்துநுவார்க்கிதபாடணனேபாங்கிலர்வாய்க்கிதபாடணனே ❀
மலமறப்போதகவாரியனேயவிர்சடைத்தாங்கியவாரியனே ❀
மலைவிலியாக்கியவன்மையனேவந்துமரிப்பனவன்மையனே ❀

எ-து வியாக்கிரபாதமகாவிருடிசெய்தபூசையைவிரும்பினோனே, யாவரு ம்புகழாநின்றதிருநடத்தைஞானாகாசத்தின்கட்செய்தோனே, தாருகாவனத்திற் பிச்சைகொண்டுவந்திருமாதர்க்கின்சொலைச்சொல்லுவோனே, உரிமையில்லாத- அபக்குவரிடத்துச்சாருவாகமுதலியகொடுஞ்சொல்லைச்சொல்லுவோனே, பக்கு வான்மாக்களுக்குட்பிறவித்துன்பங்கள்கெடவேதாகமங்களைப்போதிக்குஞானசா ரியனே, யொளிவிடாநின்றசடாமகுடத்தின்கட்டரித்தபுனலையுடையோனே, ம கமேருவைவில்லாக்கியவலிமையையுடையோனே, ஆன்மாக்களைப்போலுலகின்கட் பிறந்திறக்குந்தன்மையில்லாதோனே எ-று
இதபாடணம் - இன்சொல் - இதுவடமொழி [ருகூ]

வேறு - குமரன்றுதிபுணர்த்துகின்றார்.

நினைவார்வினைகள்போயறுநிலநின்கதிரவன்முற் ❀
பனிபோவதுமெனவேபசுபதியோதியபனுவன் ❀
முனிதான்வினவியநாளினிமொழிவாய்மையன்முனியா ❀
நிலையாவருடையறுமாமுகனெழிலாரடியிணையே ❀

எ-து பசுபதியாகியசிவனருளிச்செய்தவேதாகமங்களையகத்தியமுனிவன் [illegible] தமிழ்மொழியாற்சொல் லுந்திறமைச்சியையுடையனும், அபாதி

யாவவென்னைக்கோபியாது - அடிமையாகவாளுந்தன்மையையுடையவழகியவாறு முகத்தினையுடையோனது அழகுநிறைந்ததிருவடியினையைத்தியானம்பண்ணு வோருடையகன்மமானது, பூமியின்கணுயர்ந்தஅதித்தியன்முன்னுள்ளபனிகெடுமா றுபோலமிகவுநீங்கி மீளவுமுண்டாகாது - அழியுமென்றவாறு. [௬௰]

அகத்தியன்றுதியுணர்த்துகின்றார்

விழைவாமிருவினையாயினவிடவுமிருள்கெடவும் *
வழுவாகியமலமாருடன்மரவேர்வலியறவும் *
மறியார்கரமுடையான்மழுவுடையானடியுறவும் *
புழையார்கரமதமாமலிபொதிமாமுனிபுகழே *

எ - து உட்டுளைபொருந்தியதுதிக்கையையுடையமதயானைகணிறைந்தபொதியமாமலையின்கணிருக்குமகத்தியமாமுனிவனுடையதோத்திரத்தை - யிருவினைகள்விட்டுநீங்கவும் ஆணவவிருளினதுசத்திகெடவும் - ஈனமாகிய - அழுக்குமிக்கவுடம்பாகியவிருக்ஷத்துக்குவேராகியமாயாசத்திகெடவும் - மானுமழுவும்பொருந்தியகைகளையுடையோனானசிவனதுதிருவடிகளைப்பொருந்தவும் - விரும்புவாம் எ - று. புகழ் - விழைவாமெனக்கூட்டுக [௬௧]

நான்காவதுபலவிசிட்டகாரணவியலுரைமுற்றும்

ஐந்தாவதுசிவதருமவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின் - ஒத்துநுதலியதூஉமோத்தினது பெயருரைப்பவேவிளங்கும் - ஆயினிவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற் - புண்ணியத்துட்டலைமையாகியசிவதருமவியலென்னும்பெயர்த்து - இதனுளித்தலைச்செய்யுளென்னுதலிற்றோவெனின் - முன்மொழிந்துகோடலையுணர்த்துதனுதலிற்று

இனிமுனிவரனோபிசனியம்பியதருமமெல்லாந் *
துனிநனிதொலையச்சொல்வாந்துணிபிணியுடலைத்தொட்டே *
முனிவினையின்றிநின்றமுடருளிருடிகூடி *
யெனையுடையசனற்குமாரத்தினிநிருக்கவேய்ந்தே *

எ - று. வாராய்முனிவரின்மிக்கோனாயவகத்தியனே - யுள்ளத்தைவிராகி ன்றவியாதியானதுசரீரத்தின்கட்பொருந்தி முயற்சியையுமொழிந்துநிற்குமறிவி ல்லாதோருந், தவவலிபொருந்தியென்னையடிமையாகவுடையசிவஞானஞ்சிவலோ கத்திற்சென்றுமகிழ்ச்சியோடிருக்கும் வண்ணஞ்சிவனருளிச்செய்த சிவதரும மெல்லாவற்றையு. மிசையுமையந்திரிவறமேற்சொல்லாநின்றோம், அதனைக்கேட்பா யாக - எ - று முனிவு - முயற்சி - வீடு - வலி (க)

முற்கூறியசிவதருமம்நிலைநின்றுபகரிக்குமுறையுணர்த்துகின்றார்.

அற்புதனமலன்கூறுமறம்பலவயிங்கிதாதி ✻
கற்பொடுங்கலந்துநானாபலத்தினைக்கருதுவார்க்குத் ✻
தற்பரனருளினாலேதருவனவனந்தகால ✻
நிற்பனதொன்றுதொட்டேயன்பனாநிங்காப்பாங்கால் ✻

எ - று கண்டோர்க்குஅதிசயத்தைவிளைப்பானாய்-நின்மலனாயிருக்கிற - சிவ னருளிச்செய்தவறங்கள்பலவுமுளஅவற்றுட்கொல்லாமைமுதலியசிவதன்மங்கள் பத்தும் - எல்லாத்தன்மத்துக் குமேலாய்ச்செய்தோனைப்பற்றிநிற்குங்கற்பின்முன் மையோடும்பொருந்திச்சிவனருளினாலேநானாவிதமானபலத்கைதவிரும்பினோர்க்கு விரும்பினபடியேகொடுக்கும் - அஃதுமன்றித்தம்மையியற்றுமன்பனாநீங்காதவு ரிமையினாலேபிரவாகரூபியாகத்தோன்றுதொட்டெண்ணிறந்தகாலமழகுபெற நிலைபெற்றுநிற்பனவாம் எ - று (உ)

அந்தஅயிங்கிதாதியைவகுத்துணர்த்துகின்றார்.

அரிங்கொலைபொறையேமெய்ம்மையறைதலேயரியநாணே ✻
யுயர்ந்தவாதரவேயுள்ளமொடுக்கலேகொடுக்கைதானே ✻
வியந்தயர்ச்சனையேமெய்யூன்வெறுத்துறுதவமேமேனி ✻
நயந்தபாவனையேயென்னத்தசமிவைநன்றெந்நாளும் ✻

எ - று கொல்லாமையும்பொறையுஞ் - சத்தியவாக்கும் -பெறற்கரியநாண மாகியபழிபாவத்துக்கஞ்சுதலும் - புண்ணியங்களிலேமிகுந்த - ஆதரவும் - உள் ளமுதலியவற்றையொடுக்குமடக்கமுடைமையும் - கொடையும்-யாவரும்வியந்து சொல்லுஞ்சிவார்ச்சனையும் - ஊனிறைந்தசரீரத்தைவெறுத்துச்செய்யுந்தவமுஞ்- சதாசிவாதிவிக்கிரகங்களைவிரும்பினதியானமும் - ஆகத்தருமங்கள்பத்து - இந்த த்தருமங்கள் - எக்காலமுநன்மையைத்தருவனவாம் - எ - று (ந)

முற்கூறியவற்றுள் - தமக்கியன்றமரியாதிசெய்தோரும்அவைமுழு
தஞ்செய்தோரும்பெறம்பயனுணர்த்துகின்றார்.

இயன்றனவியற்றினருமனைத்தையுமியற்றினரும் *
பயன்பலசிவலோகத்திற்பற்றுவர்தத்தம்பாங்கா *
னயந்தவர்போகமங்குநண்ணுவர்மின்னமன்னலாக் *
கயந்தவர்போகங்காட்டுங்கடவுளையடைவர்கண்டே *

எ - து — வெளி [௪]

முதற்றொகுத்தவற்றைச்சிறப்பித்தணர்த்துகின்றார்.

இன்பமேயங்குத்தங்கியிருப்பவர்தமக்குமெள்ளுந் *
துன்பமேதொடர்வதில்லைத்துளங்கிளம்பிறையுஞ்சூடு *
மின்பொலிசடையன்வேந்தன்விளைத்தால்வினையாற்சேர்ந்த *
வன்பர்கடலைவரல்லார்தம்பலமருந்துவாரோ *

எ - து அந்தச்சிவலோகத்தின் கட்போசத்தைப்பொசித்திருப்போர்க்கு மின்பமேயொழியவிகழுந்துன்பமானது தொடர்வதில்லை விளங்காநின்ற விளம்பிறையுமணியுமின்பொலிந்த சடாமகுடத்தையுடையகருத்தாவைத்தாம்செய்தநல்வினையினலேயடைந்தமுத்தான்மாக்கள்கிருத்தியகருத்தாக்களாகார்கள்தமதுசிற்சத்தியின்பத்தையேதிளைத்திருப்பர்கள் எ று

பிறையுமென்றவும்மையாற்கங்கையினையுமெனவறிக [௫]

சிவபூசைக்குவிசேடவிதியுணர்த்துகின்றார்

முனிவரதருமபேதமொழிந்தனம்பலமுமுன்னி *
யினிவரமில்லாதாருமியற்றிடும்பூசையாவு *
முனையுளாசெய்வாமோர்நீயொளிர்சடைமுடியினாரும் *
பனகமுமதியும்வைத்தபரனடிநினைந்துபாங்கால் *

எ து வாராய்முனிவரனே கொல்லாமைமுதலியகருமங்களும்அவைவயிற்றின் பலத்தையுஞ்சொன்னேமேற்சிறப்பில்லாதாருஞ்செய்யும்பூசையுங்காலமுந் தேவயோனியட்டகத்திற்பெறும்பயனு மிவையெல்லாமுனக்குவளாயறைசெய்துசொல்லாநின்றேமவற்றைநீவிளங்காநின்றசடாமகுடத்திலே யூருந்தொழிலைச்செய்யும்பாம்பையுமிளம்பிறையையுங்கூடத்தரித்த சிவனதுதிருவடிமலரைநினைர்தொரு

ப்பாட்டிருடையதிவாயாக எ - று

உண்டென்றவைமயுருபுருவ்வுருபாய்மயங்கிற்று [௬]

குற்றந்தீரக்கூடியொருநாண்முதலொன்பதுநாளிருசச்சிவபூசை செய்தோர்தாந்தேற்குரித்தாகப்பெறும் பயனை யொன்பது செய்யுளாலுணர்த்துகின்றார்

அழுக்கினையறுக்கவல்லரல்லராயாகந்தன்னி ✽
லிழுக்குடையவராயிசனிணையடிக்கொருநாளிட்ட ✽
பழுப்பிலைப்பாங்கினாலேபற்றியேபைசாசத்தை ✽
யழுக்குமுன்னிதத்தைப்புண்டுகளிப்புறவுறைவருண்மை ✽

எ - து சரீரத்தினழுக்கைய கிராடன்முதலியவற்றாற் போக்கமாட்டாதவருமா யழுக்காடையுடுக்கு மவராலைமலினர்களும் ஒருநாட்சிவனது திருவடிக்கீழ் யின்கட்கொம்பிறமுதிர்ந்த பழுப்பிலை கொண்டருச்சித்த நன்மையினாலே பேயினது தன்மையை யடைந் தாசினமாக்கிசங்களை பொசித்துள்ள மகிழ்ச்சி மேலிடப்பை சாசபுவனத்தின்கணிருப்பரென்றவாறு

ஈண்டுக்கூறியபைசாசம்பத்தித்தவத்திற்பைசாசயோனியெனவதிகவுழு க்குமுன் கழிபுமென்றுசொல்வாருமுளர் உள் எ து இடம் [௭]

சினத்தினாற்சிவந்தகண்ணர்சிறப்புறவினையுந்தீர்ந்த ✽
மனத்தினாரிரண்டுவாரமலர்சிவனடியின்வைக்கிற் ✽
றனக்கிணையில்லாதானுமவர்தமைச்சாரச்செய்வன். ✽
றுனைத்தெழுமரக்கர்தொக்கபுரத்தினூட்டுளக்கந்தோயார் ✽

எ - து கோபத்தினாலே சிவந்தவிழியினையுடையோராய்விசேட்டமானநல்வி னையுஞ்செய்யாதமனத்தையுடையோருமானவர்கள் - இரண்டுநாட்சிவனதுதி ருவடியின்கண்மலர்களைக்கொண்டுபூசைசெய்யிற்றனக்குநிகரில்லாதசிவனும் - அ வர்களிவ்வினையின்முன்சஞ்சரிக்குமிராக்கதர்திரண்டிருந்தவுலகத்தின்கணிருக் கும்படிவைப்பன் - அவர்களொன்றுக்கும்பயப்படார்கள் — எ - று [௮]

காக்கவேதக்கவுறுங்கலந்துறுங்கடியார்தாரும் ✽
வியக்கவேதக்கவீசன்விரைமலரடியின்பாது ✽
பயக்கவேபாரூன்றுபாகலநீச்சனைப்பண்ணி ✽

ளியக்கர்தமுலகந்தன்னிலிருத்துவனவனையெல்லாம் ✽

எ - து வெறுக்கத்தக்கபுலாலையுமடிசிலோடுகூட்டிநுகருந்தீயோர்களுங், கண்டோராலதிசயிக்கத்தக்கசிவனதுநறுநாற்றத்தையுடையதாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்தின்கண்மேன்மைதரும்படிமாங்கனிமுதலிய கனிகளைக்கொண்டுமூன்று நாட்பூசைசெய்யிலச்சிவனவர்களையெல்லாமியக்கருலகத்தின் கணிருக்கும்படிசெய்வன் — எ - று

உம்மையிழிபின்கண்வந்தது, ஏகாரங்கள் - அசைநிலை [௯]

காமரங்கற்றுரல்லர்பரதமுங்களிப்புக்கூரத் ✽
தாமரன்முன்னேநின்றுதட்டமுமிட்டுக்கையாற் ✽
பாமரபியாரேனும்பாட்டொருநான்குபாடி ✽
லேமமுமிசையவாழ்வர்காந்திருவத்தையேய்ந்தே ✽

எ - து கானவித்தையும்பரதநூல்விதியாற்செய்யுங்கூத்தும்பயின்றறியாதவர்களு, நாலுநாட்பூசைசெய்துசிவசன்னிதியிலே நின்றுள்ளக்களிப்புமிகக்கூத்துமாடிக்கையாற்கொட்டுதலுஞ்செய்துதேத்தையும்பாடிவணங்கில், அவர்கள்காந்திருவபுவனத்தையடைந்தின்பமுண்டாகவாழ்வார்கள் — எ - று

நாள் - நான்கென்றது - எண்ணதிகாரப்பட்டமையால்வருவித்தது [௰]

இவர்சிவபூசைபண்ணுமியல்பினொன்றுதம்மைப் ✽
புவிதலம்புகழவேண்டிப்பூசனைபுரிந்தார்தாமும் ✽
அவனரனடியிலஞ்சுதினமளவலரினாலும் ✽
✠ திவிதலபோகம்பதந்நிலைப்பரிந்திரனைச்சேர்ந்தே ✽

எ - து இவர்சிவபூசைசெய்யும்பெருமையையுடையோரென்றுதம்மைப் பூதலத்துள்ளோர்கொண்டாடவேண்டியந்தச்சிவனதுதிருவடிகளிலே யஞ்சுநாட் பூமுதலியவற்றினாலேபூசைசெய்தோர்களும், ✠ அயிந்திரபுவனத்தைச்சேர்ந்து சுவர்க்கத்திலுள்ளபோகங்தங்களையனுபவிப்பர் — எ - று

உம்மையிழிவுசிறப்பு [௰௧]

✠ திவி - சுவர்க்கலோகம் ✠ அயிந்திரம் - இந்திரசம்பந்தம்

அரிவையர்போகந்தன்னிலாதரவுடையராகிப் ✽
பரமனைப்பரிவாற்பூசையறுதினம்பண்ணினோரும் ✽
பிரியசோமலோகம்வேண்டியபடியேதாங்கள் ✽
முருகவிழ்குழலார்தம்மையின்புறமுயங்குவாரே ✽

எ - து மடவார்களோடுகூடியநுபவிக்கும்போகத்திலேயாசையுடையராய் மேலானசிவனையாறுநாள் அன்பினோடேபூசைசெய்தோருஞ், சோமசம்பந்தமான சௌமியபுவனத்தையடைந்துதாங்கள்விரும்பியபடியேமணம்விரியாநின்ற அளகத்தையுடையமடவார்களையின்பமுறும்படி கூடியாண்டநுபவித்திருப்பர் எ - று [௰௨]

விழைவினராகிப்போகவிதந்தனில்விமலன்றன்னை ✽
யெழுதினமருச்சித்தாரு மிருப்பார்கள்விருப்பமெய்தி ✽
வழுவறுபோகபேத மருவிடவொருவலின்றி ✽
பிழையறுபிரசைவேந்தன் பெரும்பதியதனைப்பெற்றே ✽

எ - து பலவிதமானபோகங்களிலே விருப்பத்தையுடையராய் மலரகித ஞான சிவனையேழுநாட் பூசைபண்ணினோருங் குற்றமற்ற ✠ பிராகேசுரமென்னும் பெரியபுவனத்தையடைந்து நல்லபோகவிதங்களுண்டாக விருப்பத்தோடுபொருந்தியதனை நீங்காதிருப்பர் எ - று (௰௩)

திருந்தியவேதகாயத் திரியினாற்றினமோரெட்டும் ✽
அரன்பதமருச்சித்தாரு மலரினாலார்வங்கூரப் ✽
பொருந்தியேபிரமலோகம் போகபேதங்களெல்லாம் ✽
அருந்தியேயிருப்பார்தங்க ளாசையுமகலவாங்கே ✽

எ - து வேதகாயத்திரியினாலும் பூக்களாலும் சிவனது திருவடியையெட்டுநாளருச்சித்தோர்களும் ஆசைபெருகப் ✠ பிராமிய புவனத்தை யடைந்து ஆங்குள்ளபோகபேதங்களெல்லாந் தங்களிடத்துண்டாகியவாசைதீரப் பொசித்திருப்பர்கள் எ - று
ஏகாரங்கள் அசைநிலை இவ்வெட்டும்புத்திதத்துவத்திற் புண்ணியாட்டகமென

✠ பிராகேசரம் பிரசாபதியுலகு ✠ பிராமியம் பிரமலோகம்

வறிக (௧௪)

ஒருவனைமூவரொன்று மொன்பதுதினமுமன்பாற் *
பரமனையருச்சித்தாரும் பாம்பணைப்பள்ளிவள்ளல் *
புரமதுபொருந்திவாழ்வர் போகபேதங்கள்பொங்க *
வரியனயாவுமில்லை யவர்தமக்கமலனாலே *

எ து மால்பிரமனாப்பசுவர்க்கமென்று பிறியாது பதியாகியசிவனோடு கூட்டிமும்மூர்த்திகளையுமொருகடவுளென்று சம புத்திபண்ணிமேலாய சிவனை யுள்ளன்பினாலே யொன்பது நாளருச்சனைசெய்வராயின் அவர்கள் நின்மலனாகிய சிவனருளினாலே யரவணையிலேதுயிலுந் திருமாலினது குணதத்துவத்தில் வைகுண்டபுவனத்தையடைந்தாங்குள்ள போகவிதங்கள்பெருகஅவைகளை நுகர்ந்துவாழ்வர்கள், அவ்விடத்தவர்களுக்குப்பெறற் கரியபொருள்களொன்று மில்லை எ - று
இச்செய்யுளளவுங்குற்றத்தோடு கூடிச்செய்தார் பூசையின்பயனுணர்த்தியவாறுகண்டுகொள்க (௧௫)

மேற்குற்றமறப்பூசைசெய்தோர்க்கேசிவலோகமெய்துமென்பதுணர்த்துகின்றார்

செப்பியவிதற்குமீது சிவபுரமதனைச்சேர்வர் *
ஒப்பிலாவொருவன்றன்னை யொருமையவுணர்ச்சிகூரத் *
தப்பறப்புரிந்தபூசைத் தபோதனர்தாமுமாங்கண் *
எப்பயனரியதாக வியம்புவதெளியதேதும் *

எ து இங்ஙனங்கூறியவைகுண்டபுவனத்துக்கு மேலேசிவபுரம்விளங்காநிற்கும், அந்தச்சிவலோகத்தை ச்சிவனேகடவுளென்றொருமைப்பாடுபொருந்தியவறிவுமேலிடத்தனக்குநிகரில்லாத சிவனைநூனெறிகமற வருச்சனைசெய்யுந் தவத்தையுடையோர்களேயடைவர், அவர்களுக்கவ்விடத்திலெந்தப்போகந்தான்பெறற்கரியதாகச்சொல்லுவோமாதலாலெல்லாப்போகமுமெளிதாகவேவரும் எ று (௧௬)

அந்தச்சிவலோகத்தின்சிறப்புணர்த்துகின்றார்

தினகரருதையகோடி தேசெனத்திகழ்ந்ததேர்கள் *
இனையவென்றளக்குமெண்ணை யிகழ்ந்தெழிலிசையநிற்கும் *
மனநினைவதனில்வேண்டு மகிழ்ச்சியும்வாய்க்கச்செய்யுந் *
தனைநிகரில்லிதங்கும் புரிவளஞ்சாற்றலாமே *

எ - று. கோடிசூரியருதயஞ்செய்த பிரகாசம்போலவிளங்காநின்றவிமானங் களெவ்வளவென்றளவிடுமளவைக்கடந்தழகு பொருந்தவெங்குநெருங்கி நிற்குஞ் சிவபுரமானது அவ்விடத்திருப்போர்தங்கண்மனநினைவின் கண்விரும்பியசுகபோகங்களையும் வாய்க்குமவண்ண முண்டாக்குமாகையினாலே தனக்குவமையில்லாதசிவனெழுந்தருளியிருக்குஞ்சிவபுரத்தின்வளப்பத்தையொருவராலு மளவிட்டுச்சொல்லப்படாது எ - று. ஏகாரம் எதிர்மறை. (௧௭)

சிவனெழுந்தருளியிருக்குந்திருப்பதியின் மரித்தவான்மவர்க்கங்கள்சிவலோகமடையுமென்றாற் சிவனையன்போடுகூடிப் பூசை செய்தோர்சிவலோகமடைவது சொல்லவேண்டாமே யென்பதுணர்த்துகின்றார்

தெரிப்பருந்தேவதேவன் றிருப்பதிவட்டந்தன்னின் *
மரித்திடுஞ்சராசரங்கள் சிவபுரமதனுள்வாழு *
மருச்சனைபுரிந்தமற்றை யன்பர்களடைந்துவாழ்கை *
தேர்த்திடவேண்டுமேயோ தெருண்டநற்சிந்தையார்க்கே *

எ - று. வெளி. (௧௮)

கண்டுபாவித்துப்பூசைசெய்தோர்பெறும்பயனுணர்த்துகின்றார்

உண்டோரொண்பொருளென்றுள்ளத் தோர்கிலார்தாமுமோர்ந்த *
பண்டுநர்பணியக்கண்டு பணிந்திடிற்பரமனென்னிற் *
றண்டரளங்கள்போலுந் தாரகாதேசந்தன்னில் *
எண்டிகழ்நாலேழ்கோடி யிரதபேதத்துளேய்வார் *

எ - று. சடசித்துக்களெல்லாவற்றினையு மாளுமொரு ஒள்ளிய கடவுளுண்டென்றுதம்முள்ளத்தின்கண்ணறியாதமூடரும் அந்தப்பொருளை யுண்டென்றுணர்ந்தவர்தாங்கள்வணங்கக்கண்டுதாமும்வணங்கினும் பரமனென்றுதுதிப்பினும் அவர்கள் குளிர்மையுடைய முத்துக்கள் போலுமொளியினையுடைய நக்ஷத்திர பதத்திலே எண்டொகைவிளங்காநின்றவிருபத்தெட்டுக்கோடி விமானங்கள்சூழவதனடுவேபொருந்திவாழ்வர் எ - று. (௧௯)

சிவதன்மங்களைத்தமக்கியன்றமரியாதிசெய்தோர்பெறும்பயனுணர்த்துகின்றார்

ஐந்தாவது சிவதருமவியல்

இயன்றனவியற்றினொரு மற்றையபுரத்திலேய்ந்து ❁
பயன்றனைப்பயின்றுமீண்டு பாரிடைப்பிறந்துபாங்கான் ❁
முயன்றருந்தவத்தைமூவா முதல்வனையகத்துண்முன்னி ❁
யயன்றனைப்பயந்தவாதி யரன்புரியடைவரன்றே ❁

எ து தமக்கியன்றமரியாதிசிவதன்மங்களைச்செய்தோர்களும் வைகுண்டம் முதலியகீழுள்ளபதங்களிற் போகத்தைக்கிரமத்திலே பொருந்தி யங்கங்குள்ளது பொசித்துத்தொலைந்தவாறே மீளவும்பூமியின்கண்வந்துபிறந்து முதிராமலென்று மொருதன்மையாயிருக்குஞ் சிவனையுள்ளத்துட் கருதிச்செயற்கரியதவத்தையொருமைப்பாடுடனேசெய்து பின்பு நான்முகனைப்படைத்தமுதல்வனுகியசிவனதுசிவலோகத்தையடைவர் எ று அன்றே . எ து அசை (உ0)

இங்ஙனங்கூறியசிவலோகத்தின் மேலுமூன்றுபுவனமுண்டென்று தொகுத்துணர்த்துகின்றார்

உலாத்தவிப்புரத்தின்மீதும் புரமொருமூன்றுண்டோர்க ❁
தரித்தவேற்குமரன்றங்குந் தானமொன்றதற்குமீது ❁
பரித்தபைங்கிள்ளைச்செங்கை ப்பாவைதன்பதிபொன்றப்பாற் ❁
றெரிப்பருந்தேசாரீசன் சிவபுரஞ்செப்பாமொப்பே ❁

எ து முற்கூறியவிந்தச்சிவலோகத்தின் மேலுமூன்றுலோகமுளதாம் இதனையறிவாயாக அஃதியாதெனிற் கையின்கண்வேலையேந்துங் குமரக்கடவுளெழுந்தருளியிருக்கும் புவனமொன்று, அதற்குமேலே பச்சைக்கிளியைச் சிவந்தகையிலேதாங்குமுமையினது புவனமொன்று அதற்குமேலே யளவிறந்த பிரகாசத்துடனேகூடியிருக்குஞ்சிவனதுமகாசிவலோகம், அதற்கிணையொன்றுமில்லாமையால் வேறொன்றையொப்புச்சொல்லோம் எ று (உக)

அவற்றுண்முற்கூறிய கந்தபுவனஞ் சத்திபுவன மிரண்டினையுமடைவாரின்னாரெனவிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

சத்தியைத்திரிசூலத்தை த்தரித்தபொற்கரத்தினானை ❁
வித்தகன்றன்னைப்பொன்னை யொத்தொளிர்மேனியானை. ❁

முத்தலை முளைத்தவாறு முகத்தினை முதல்வன்றன்னை ✽
மொய்த்தகண்மயிரின்மேலே முருகனை முன்னுவாரே ✽

எ.து வெளி (உ.உ)

இருப்பர்கள் குமரன்வாழு மெல்லையிலெல்லையில்லா ✽
விருப்புறப்போகபேத மேவிடவிதற்குமீதே ✽
யிருப்பர்களுமையைத்தங்கள் கருத்தினுளிருத்தினோர்கள் ✽
பொருப்பொழுமருக்கர் கோடிநிறமெனப்புந்திசெய்தே ✽

எ-று முற்கூறியசிறப்பினையுடைய குமாரக்கடவுளைத்தியானஞ்செய்வோர்குந் தக்குமரன்வாழும் புவனத்திலே சென்று தாங்கள்விரும்பிய படியே யளவிறந்த போகங்களெல்லாம்பொருந்த விருப்பார்கள் உமாபரமேசுவரியையுதையகிரியின் கண்ணுதிக்குங்கோடிசூரியப்பிரகாசம்போலத்தியானஞ்செய்து தம்முள்ளத்தின் கண்ணிருத்தினோர்கள் அந்தக்கந்தலோகத்துக்கு மேலானஉமாபுவனத்தின்கணிருந் துவாழ்வர்கள் எ-று (உ௩)

மேலிருத்தமுறையானே மகாசிவலோகத்தின் கணுறை வாரின்ன ரெனவுணர்த்துகின்றார்

தெளிபளிங்கனையமேனி திரிநயனங்கைத்தங்கு ✽
மொளிவளர்சூலமாலை யுதாரகையபையவங்கை ✽
நளிசடையுடையநாதனடியினை யகத்துளைச்சி ✽
யுளினருமவனையொப்பச்சிவபுரத்துறைவருய்ந்தே ✽

எ-று அழுக்கற்றுநின்மலமான படிகம்போன்ற திருமேனியையு மூன்றுதிரு நயனங்களையுமொளிவளராநின்றசூலமுஞ் செபமாலையும் பொருந்துமேலிற்கைக ளிரண்டினையும் வரதமுமபயமும்பொருந்தியகீழிற்கைகளிரண்டினையு நெருங் கியசடாமகுடத்தினையு முடையசிவனதுதிருவடியிணையை யுள்ளத்தின்கண்விரும் பித்தியானிப்போரு மந்தச்சிவனுக்குநிகராக ச்சாருபம்பெற்றுமகிழ்ச்சியடைந்து மகாசிவலோகத்தின்கணிருப்பர் எ-று
உளினருமென்றவுமையால்வணங்குவோருமெனவறிக (உ௪)

மகாசிவலோகத்தையடைந்தோர் மீளப்பூமியின்கட் பிறவாமல்முத்தியை யடைவரென்றுணர்த்துகின்றார்

மேலையசிவலோகத்துள் விரவினரொருமைமேவி *
ஞாலமுமடையார்ஞாலவிறுதியை நாசமாக்குங் *
காலமுமணையவுள்ளக் கறுப்பினையறுத்துக்காட்டு *
மூலபண்டாரந்தன்னை முகந்துகந்திருப்பர்முத்தர் *

எ - று மேலாயவிந்தச்சிவலோகத்தின்கண் அடைந்தோரவ்விடத்திலேதானே ஞானயோகத்திலொருமைப்பாட்டைப்பொருந்திமீண்டு பூமியின்கண்ணும்பிறவாராய்ச்✠சிவாதிபிருதுவியந்தமானவெவற்றினையுநசிப்பிக்குஞ்சங்காரகாலம்வரும் பொழுதுதம்முள்ளத்தின்கட்கரியவிருளான வாணவபாசங்களை யொழித்துச்சிவ ஞானங்காண்பிக்குமூலபண்டாரமாகிய ஞானானந்தசுவானுபவத்தைப் பொருந்தித் தலைமைபெற்றுமுத்தராயிருப்பர் எ - று

இ மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே என்பதனாலறிக [உரு]

மேல் மாட்டெறிந்தொழுகலென்னுந் தந்திரவுத்தியாற் பைசாசமு தலாயினோர்க்குச்சித்திபேதங்களை யுணர்த்துகின்றார்

அந்நியவியலினுக்குமபலயவியலின்போக *
பந்தியைப்பகர்வாமெட்டுச்சித்தியும்பரிவுகூர *
விந்தநல்லியலினுள்ளு மெட்டெனப்பட்டசித்தி *
மூந்தியேபைசாசாதி க்குறுமுறைமொழிவாமோர்ந்தே *

எ - து ஈற்றினின்ற கோபுர வியலுக்கு மதற்கயலாகிய பரிகாரவியலுக்குமய லானசிவஞானயோகவியலிலேயட்டாங்கயோகவொழுங்கினையு மதனாலுண்டாம

✠ பூதம் ரு புலன் ரு ஞானேந்திரியம் ரு கருமேந்திரியம் ரு அந்தக்கரணம் ச ஆக ஆத்தமதத்துவம் உ௰ச காலம் நியதிகலை வித்தை இராகம் புருஷன் மாயை ஆக வித்தியாதத்துவம் எ சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்திசிவம் ஆகச்சிவ தத்துவம் ரு

இ திருவாசகம் திருப்பாண்டிப்பதிகம்
காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே

ட்டமாசித்தியிளையும்விருப்பமிகும்வண்ணஞ்சொல்வோம் அஃதன்றி நன்மைபொருந்தியவித்தச்சிவதருமமியலுள்ளும்பைசாசமுதலிய புவனங்களிலுள்ளோர்க்கெட்டுசித்திகளுமேற்றியதிவருமுறையையாராய்ந்துசொல்லாநின்றோம்
எ - று (௨௬)

பைசாசாதிகளுக்குச்சித்திகள் குணங்களேறிக்குறைந்து சேவிக்குமுறையைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

எட்டெனப்பட்டசித்திசைந்திடும்பைசாசாதி ✽
சிட்டர்கள்சேருமெல்லைசிவபுரமிறுதிதன்னி ✽
லொட்டியகுணமுமென்மேலுயர்ந்துயர்ந்தொறுகுமோரில் ✽
லிட்டொளிர்குணத்தின்மேன்மைவிளங்கிடவிளம்புவாமே ✽

எ - அ புத்திதத்துவத்திற்பொருந்தியதேவயோனியாகியபைசாசமுதலிய புவனத்தைப்பொருந்தியுயர்ந்தோர்கள் சேருமேலாயசிவலோகமீறுனபதங்களிலேயெட்டுச்சித்தியுமதனோடுகூடிய குணங்களு மொருபுவனத்திலிருப்பாரைபபற்றவொருபுவனத்திலிருப்பார்க்குமேன்மேலுமதிகமதிகமாயுண்டாம், அஃதெங்ஙனமென்னில், பைசாசபுவனத்திருப்போர்க்கெண்குணமு, மிராக்கதபுவனத்திருப்போர்க்குப்பதினாறுகுணமு, மியக்கபுவனத்திருப்போர்க்கிருபத்திநாலுகுணமும், கந்தருவபுவனத்திலிருப்போர்க்குமுப்பத்திரண்டுகுணமு, மிந்திரபுவனத்திலிருப்போர்க்குநாற்பதுகுணமும், சௌமியபுவனத்திருப்போர்க்குநாற்பத்தெட்டுக்குணமும், பிராஜேசபுவனத்திருப்போர்க்குஐம்பத்தாறுகுணமும்,பிராமியபுவனத்திருப்போர்க்குஅறுபத்துநாலுகுணமும், அவ்வாறுசிவலோகமீறுனபதங்களிலிருப்பார்க்குமேற்றியதிவரும், அதனைவிளங்கவாராயில்விட்டுவிளங்காநின்றகுணத்தின்சிட்டத்தைமேற்சொல்லாநின்றோம் எ - று [௨௭]

திருமான்முதலாயிவர்க்குக்குணங்களேறிக்குறைந்து சேவிக்குமுறையுணர்த்துகின்றார்.

மண்புனலனல்கால்வானமனமகங்காரம்புத்தி ✽
யொன்றுணாமுலமென்றுமொன்பதும்விசேடித்தோங்கிக் ✽
கண்கமலத்தமாலைக்கலந்துளொளிக்குமெட்டே ✽
வண்கமலத்தோனுள்ளேமருவியேயிளக்குமன்றே ✽

எ - த பிரகிருதிமுதலியவைந்துமனமகங்காரம்புத்தியுமொள்ளியகுணத்து

க்குபாதானமானபிரகிருதியுமெனக்கூறுமிந்தவொன்பதுதத்துவங்களுஞ்செந்தாமரைக்கண்ணையுடைய நாரணனைப்பொருந்தி யவனிதையத்தினுள்ளேமிகவுஞ்செறிந்துநின்றறிவைவிளக்காநிற்கும், குணநீங்கலாகநின்றவெட்டுத்தத்துவங்களேயழகியதாமரைமலரின்கணிருப்போனானான்முகனுடையவிதயத்தினுள்ளே பொருந்தி நின்றறிவைவிளக்கும் எ - று
அன்று - எ - து - அசை [உ௪]

புந்தியையல்லாவெல்லாம் பொருந்திபிரசவேந்தன் ✽
சிந்தையைத்தெருட்டுமிந்த த்திறத்தினிற்கீழுந்தோர்க ✽
முந்தியேயிருந்தார்பேற்றை முற்றியவினையினாலே ✽
பிந்தியேசெறிந்தார்தாமு மகிழ்வுறப்பெறுவரன்றே ✽

எ து புத்திதத்துவமல்லாத கீழ்நின்றவேழுந் தம்மைப்புணர்ந்தபிரஜேசனது சித்தத்தைப்பொருந்திநின்றறிவைவிளக்கு, மிந்தப்படியேகீழுள்ளபுவனத்தோர்க்குமடைவிலொவ்வொருதத்துவங்குறைந்துநின்றறிவை விளக்குமென்றுராயக்கடவையிப்பதங்களிலேமுற்காலத்திலேசென்றிருப்போர்பெறும்பயன்களைப்பூமியின்கண்செய்தநல்வினையினாலேபின்புசென்றடைவோருமுள்ளமகிழ்ச்சியுண்டாகப்பெறுவர் - எ - று - [உ௫]

சிவனைக்குறித்துச்செய்ததுபழுதுபோகாதுபலத்தைவிளைக்குமென்றும்பலத்தைக்கொடுப்பன்சிவனென்றுமுவமைமுகத்தாலுணர்த்துகின்றார்.

தனையினையிலக்கதாகவெறிந்தகற்றவறுதற்றே ✽
யரனையுங்குறித்துச்செய்தவினைபழுதாகாதற்றே ✽
பரமனுஞ்செய்தார்செய்திப்பலத்தினைக்கொடுப்பன்பாங்காற் ✽
குருலகுவென்னும்பேதம்வினைதொறுங்குறித்துக்கொண்டே ✽

எ - து வெளி - இதனுள் - குரு - எ - து - அதிகம் - லகு - எ - து அற்பம் [௫௰

மேன்முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

[௰௫]

வேறு.

என்றுதநமக்கொடுபலத்திறமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினையைய *
நின்றமுனியன்றுரைநிற்குணனினைந்தே *

எ - று - வெளி [௫௧]

மேற்சிவத்துதியுணர்த்துகின்றார்

வேறு.

உற்றவர்தீவினையோட்டினனேயுண்பலிதேர்தலையோட்டினனே *
யெற்றுபுனற்சடையேற்றினனேயிடைக்கொல்லைவெள்ளேற்றினனே *
கற்றவருக்கறங்காட்டினனேகடுநடமாடுகாட்டினனே *
பற்றியவர்க்கருள்பாட்டினனேபாங்கிலவென்னையும்பாட்டினனே *

எ - று தன்னையடைந்தோரதுகொடியபாவங்களைத் தொடர்ச்சியறக்கெடுத்தோனே, தலையோட்டின்கண்ணுண்ணற்குரியபிச்சையையங்கங்கேசென்றுதேடுவோனே, திரையெறியாநின்றகங்கையாற்றினைத்திருச்சடையின்கணேற்றிமுடித்தோனே, முல்லைநிலத்தின்கணுளதாயவலியினையுடையவெண்மையாகியவிடபத்தையுடையோனே, தன்பாற்கற்றோராகியசனகர்முதலியோர்க்கறமுதலியநான்கினையுமறிவித்தோனே, சங்காரநிருத்தத்தைச்செய்யுஞ்சுடலையையுடையோனே, யெப்பொருளையுந்துறந்துதன்னைப்பற்றி நிற்போர்க்குமுத்தியையருளும்பெருமையையுடையோனே, பாடுதற்குரியனல்லாதவென்னையும் பாடுவித்தப்பாட்டினைக்கொண்டருளினோனே என்றவாறு [௫௨]

இதுவுமது.

கழலெனநாகமுங்கட்டினனேகண்ணின்விழித்தநங்கட்டினனே *
மழலைநல்வினையின்வாசகனேமயலெனக்கற்றிடும்வாசகனே *
தழைமயிற்சாயலோர்பாலினனேசாலத்தழைத்தகொம்பாலினனே *
மிழலையுமூரெனமேவினனேவெம்புரமெய்தடுமேவினனே *

எ - து திருவடிமலரிலேவீரக்கழல்போலப்பாம்பினையுமணிந்தோனே, பக்குவான்மாக்களைத்திருக்கடைக்கண்ணானோக்கியவர்கள் பாசத்தைச்சேதிப்போனே, தெளியாதசொல்லையுடைய நல்லவீணையினொலியையுடையோனே, யெனக்குமனமயக்கமறுதற்குக்காரணமானசிவாகமயாக்கியங்களையுடையோனே, தோகைமயில்போலுஞ்சாயலையுடையவுமையையொருபாகத்திலுடையோனே, மிகவுந்தழைத்தகோடரங்களையுடையவடதருவினிழலையுடையோனே, திருவீழிமிழலையையுந்தனதுதிருப்பதியாகவுறைந்தோனே, கொடியமுப்புரத்தினையெய்தூன்றக்கும்பினையுடையோனே எ - து [௩௩]

மேற்குமரன்றுதியுணர்த்துகின்றார்

வேறு.

வாடாவனமுலைதோடார்சுரிகுழல்வாளார்விழியினையுமைபாக *
னாடாவயனரிதேடாவடிமுடியோராதயர்வுறவருளீசன் *
காடேயிடமெனநாடாநடநவில்காதார்குழையினனடிசேர்தற் *
கீடாமிருவினைகூடாவகைதருமேரார்அறுமுகனியனூலே *

எ - து அழகுநிறைந்தசண்முகனருளிச்செய்தவிந்நூலானது, தளராதவழகையுடையமுலையினையும்பூக்கணிறைந்தசுருண்டவளகத்தினையும்வாள்போன்ற இரண்டுவிழியினையுமுடையவுமையைத்தன்பாகத்திலே யுடையோனுமயனுமரியுந்தம்மில்மாறுபட்டடியுமுடியுந்தேடிக்காணமாட்டாதுமயங்கிநிற்பவவர்களுக் கனுக்கிரகஞ்செய்யுமிறைவனுயச்சங்காரகாலத்தின் கட்சுடுகாடேயிடமாகக்கருதித்திருநடஞ்செய்புன்காதின்கணணிந்தசங்கக்குழையையுடையோனானசிவனதுதிருவடியை, யாமடைதற்கு, வலிபொருந்தியவிருவினையுமேறுவண்ணம்ஞானத்தைத்தரும் எ - று [௩௪]

அகத்தியன்றுதியுணர்த்துகின்றார்.

கயலாரிணைவிழியிமையாரிணைமுலைகலவாவவரொடுகளியாரே *
யயலாரவரிவரயலாரலனொனுமறியாமையுநனியறுவாரோ *
வியலார்கயிலைநன்மலைவாழ்விமலனவிளையார்மலரடிவிழைவாரோ *
புயலார்வளமுறுபொதிமாமலைமுனிபுகழுரைவிழைவொடுபுகல்வாரோ *

எ - று எந்நாளுமேகங்கணிலிறந்தவளமைபொருந்திய பொதியமாமலையி ல் என்வாழும் அகத்தியமுனிவனது கீர்த்தியையாசையாலேதுதிப்போர், கயல் போன்றவிரண்டுகண்ணினையுடையமடவாரதுமுலையிணைகளைப்புணர்ந்தவர்களோ டு மனமகிழார், அஃதன்றியவர்தமக்கன்னியரிவர்தமக்கன்னியரல்லரென்றுகருதும ஞ்ஞானத்தைமிகவுமொழிப்பார் அஃதன்றி விசாலம்பொருந்தியநல்லகயிலைமலையி ன்கண்வாழுகின்மலனாகியசிவனது மணம்பொருந்தியதிருவடிமலரையும்விரும்புந் தன்மையுடையோராவர் எ - று

விழைவொடுபுகல்வாரென்பதனைமுவாயாக்கியேனையமூன்றினையும் பய னிலையாகக்கொள்க - ஏகாரங்கள் - அசைநிலை [௩௫]

ஐந்தாவது சிவதருமவியலுமுற்றும்

ஆறாவது பாவவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின் ஒத்துநுதலியதூஉமோ த்தினதுபெயருணரப்படவிளங்கும் - ஆயினிவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின்நிரயமெய்துவோரியற்றும் பாவபேதங்க ளைக்கூறிற்றாகலாற்பாவவியலென்னும்பெயர்த்து, இதனுளித்த லைச்செய்யுளென்னுதலிற்றோவெனின்இன்னதுணைப்பாமெனமுன் மொழிந்தகோடலைபுணர்த்துதனுதலிற்று.

முனிவரதருமபேதமொழிந்தனம்பலங்கண்மூற்று *
மினிநிரயத்தையெய்வாரியற்றிடும்பாவபேத *
முனியுரைசெய்வாமோர்ந்திடுடனிறவாபிறக்குந் *
துனிவினைநரகங்கட்கேட்டிடுஞ்சூழ்ச்சியார்க்கும் *

எ - று வாரமிருடிகளின்மிக்கோனே, முன்னையியலுட் சிவதருமபேதங்க ளையுமவற்றினாலுண்டாம்பலன்களைவற்றினையுஞ்சொன்னோம், மேலிந்தவியலினு ம்பிறந்தார்க்கட்டிருக்கருத்தினையுடையோர்க்கு, மனம்வாக்குக்காயங்களினுலு

ண்டாகும்பொல்லாதநிவினைத்துயரநீங்கும்வண்ணநரகமெய்துவோர்செய்யும்பாவபேதங்களையுனக்குச்சொல்லாநின்றோம், மதனைநீகேட்பாயாக எ - அ உன்னையென்றுமிரண்டாமுருபு நான்காவதாய்மயங்கிற்று [௧]

பாவஞ்செய்வோரின்னதொன்பதூஉமப்பாவபேதமிந்துணைத்தென்பதூஉமுணர்த்துகின்றார்

புரிந்துளார்பாவமூன்றும் புக்குமாங்கவையமீண்டு *
பிருந்தவாதனையினாலே யியற்றுவர்பாவம்பின்னும் *
விரிந்திடுமனேககோடி விதமுறப்பாவமெல்லாந் *
தெரிந்திடிற்றூலமாதி திரிவிதமாகிச்சேரும் *

எ - து முற்சொன்னத்தினும் பாவத்தைச்செய்தோர்கள் நரகத்தின்கட்புகுந்தனுபவித்துத்திரும்பவுமந்தவாசனாபலத்தினாலேபூமியின்கட்செனித்துப்பின்னும்பாவத்தையேசெய்வர்கள்அந்தப்பாவவிதங்களைவிரிக்கினனேககோடிவிதமாக விரியுமதனைத்தொகுத்தறியிற்றூலமுதன் மூவிதமாகிப்பொருந்தும் எ - று [௨]

தூலமாதியிவையென்பதூஉமவற்றுட்டூலகன்மமேயீண்டுக்கூறுவதூஉமென்பதுமுணர்த்துகின்றார்

தூலமேசூக்கந்தானே சூக்குமதரமேயென்றிங் *
கேலவேமூன்றுகூறு மிவற்றினுட்டூலந்தன்னைக் *
கோலியேதொகுத்திந்நூலிற் கூறுவமஃதுங்கூறின் *
மாறுறுமனமேவாக்கே வடிவமேயெனவுமூன்றாம் *

எ - து முற்கூறியபாவவிதந்தூலமென்றுஞ்சூக்குமமென்றுஞ் சூக்குமதரமென்று மிவ்விடத்து மூன்றுபேதமாய்ப்பொருந்துமிந் தமூன்றினுள்ளுந்தூலபேதத்தையேயமைத்துத்தொகுத்திந்தநூலின்கட் சொல்லாநின்றோம் அதனையறியுமிடத்துமயக்கம்பொருந்தியமனத்தாலும் வாக்காலுங் காயத்தாலும்வருவனவென மூவிதமாம் எ - று

ஏகாரங்கள் எண்ணின்கண்ணும்அசைநிலைக்கண்ணும்வந்தன [௩]

முதற்கட்டொகுத்துப்போந்தமனாதிகண்மூன்றுமொவ்வொன்றுநந்நான்குபேதமாமென்பதூஉமவை கொடுக்கும்பயனிஃதென்பதூஉமுணர்த்துகின்றார்

பேசியநூலபேதந் தனித்தனிநான்குபேத ✻
மூசாறுநான்குபேத முற்றுமம்மூன்றுமின்று ✻
மாசிலோரறியும்வேலை விரிந்திடுமனேகமாக ✻
நாசமாநரகபேதத் துயரினைக் கொடுக்குநாளின் ✻

எ - று. முன்னர்க்கூறியநூலபேதமென்னு மிருவாக்குக்காயங்களெனவொவ்வொன்றானுமிருமாம் அவையிற்றைத் தொகைகாண ப்பன்னிரண்டு விதமாகமுடியு மற்றமனுதிகண்மூன்றுங்குற்றமற்றபெரியோர்களராயுங் காலின்னமுமனேகவித மாகவிரியு மங்ஙனம்விரியும்பாவபலம் நரகவிதங்களிலேயான்மாக்களுக்குத்துக்கத்தைவிளைத்தநுபவித்துத்தொலைத்தவாறேதாம்நசிக்கும் எ - று. [௪]

நிறுத்தமுறையானே மனத்திலுண்டாம் பாவவிதங்க ணான்குமி
வையென்பதுணர்த்துகின்றார்

அன்னியன்மனையாடன்னை யணையுமாதரவுகூர ✻
வென்னுநலபலர்தங்களுடைமையுங் கொள்ளவுன்னல் ✻
பின்னையுமவர்தம்பாற்படும் பிழையுறுவிக்கப்பேண ✻
லென்றுமிம்மூன்றுங்கொல்ல லெண்ணலுமனத்தினிட்டம் ✻

எ - று. பிறனொருவனுடையமனைவியை க்கூடவேணுமென்னுமாசையாலேயதற்கேற்றசெயல்களைநினைத்தலும் பிறருடையவுடைமையை த்தாமெடுத்துக்கொள்ளுதற்குவிசாரித்தலும் அவர்களுடையவுடைமையை ச்சேதமாக்கவிசாரித்தலும் பிறிதொருவனைக்கொல்லநினைத்தலும் இந்நான்குமனத்திலுண்டாம் பாவவிதங்களாம் எ - று. [௫]

வாக்காலியற்றும் பாவங்களான்குங்காயத்தாலியற்றும் பாவங்களு
ன்குமிவையென்பதூஉம் பின்னருமனுதிகளாலதிபாதகமுதலாயுள்ள
வவிரியுமென்பதூஉமிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

அறுகையுங்கோளும்பொய்யு மயலபவாதந்தானும் ✻
வாறுவியவாக்கின்பேத மற்றையான்மனையாடோளைத் ✻
தழுவுதறமித்துக்கோறல் சராசரபேதந்தன்னைப் ✻
பழிபடுபண்டமுண்கை பரம்பொருளதனைப்பற்றல் ✻

எ - று. அகாரணத்தாலழுகையுங் கோட்சொல்லும் பொய்யுரைத்தலும் பிறன்பழிகூறலுமான விந்நான்கும் வாக்கினால்வரும்பாவ விதமாம் பிறனொருவன் மனைவியைப்புணர்தலு நடப்பனவுநிற்பனவுமானவுயிரின் விதங்களையடித்துக்கொல்லுதலும்நல்லோராணிந்திக்கப்படுமுணவுகளையுண்டலும் பிறர்பொருளைக்கவர்தலும் எ - று. [௬]

என்னுமிந்நான்குங்காய த்திட்டியபாவபேதம் ✿
பன்னிருபேதமாக மனுநிலைப்பகர்ந்தாமின்னு ✿
மன்னியமனுநிமூன்று மகினதிபாதகாதி ✿
யென்னவேவிரியுமொய்நி னவற்றையுமியம்புவாமே ✿

எ - து. இப்படிமுற்கூறியகன்மநான்குங் காயத்தினால்வரும்பாவவிதமாமிப்படியேமனவாக்குக்காயங்களால் வருந்துலூபாவவிதங்களைப்பன்னிரண்டுவிதமாகச்சொன்னோம், அஃதன்றியின்னமு நிலைபெற்றமனுநிகள் மூவிதத்தாலுமழுக்கினையுடையவதிபாதகமுதலிய பாவங்களுண்டாகும்வண்ணம்விரிவனவாமவற்றையுஞ்சுருக்கமாகச்சொல்லாநின்றோம் எ - று.

ஆதியென்பதனால் மகாபாதகமு முபபாதகங்களுமவ்வயிற்றினாறு நல்வியங்களுமெனக்கொள்க [௭]

முதற்கட்டொகுத்தவற்றுளதிபாதகமீதென்பதுணர்த்துகின்றார்

தாரகன்றன்னைச்சாத த்தடங்கடற்றளர்வார்தம்மைப் ✿
பாரகன்றனையும்பாரும் படைத்தவன்றனையும்பாங்காற் ✿
காரகன்றன்னைவாங்குங் கடவுளைக்கயந்தநெஞ்சர் ✿
நாரகர்மீளுநாளும் பிறிதியனவிற்றுவாமே ✿

எ - து. பிறவியாகியபெரியகடலின்கணமிழ்ந்தி வருந்துமவரை யக்கடலினின்றுங்கடப்பிக்குமவனுயுலகத்தைத்தாங்குமவனுன மாயனையும் யோனிபேதங்களையுமன்றிப்பிருதிவிமுதலிய பஞ்சபூதமூலகாரியங்களையுஞ் சிருட்டிக்குமவனுனநான்முகனையு முறைவழுவாமலுண்டாக்குங் காரணசொரூப னுயவர்களிருவரையுமீளத்தன்னிடத்திலொடுக்குஞ் சங்காரகருத்தாவாயிருக்கிற சிவனைத்தூஷணஞ்செய்திகழ்ந்தமனத்தினையுடையவதிபாதகர் நரகத்தின்கண்னெடுங்காலங் கிடப்பர்க

ன், அறிவின்றுமவர்கள் திரும்புங்காலத்தை வரையறுத்திந்தவியலுக்கயலானகு வர்க்கநரகவியலின்கட்சொல்லாநின்றும் எ - று

தாரகன் கடப்பிப்போன், பாரகன் தாங்குமவன், காரகன பண்ணுமவன் நாரகர் நரகத்திற்கிடக்குமவர்கள் [அ]

இதுவுமது

ஒப்பிலியனுடி முத்த ஞெநியவேதமாதிக் ✻
கொப்புயர்புரைப்பார்நிந்தைபுரைப்பவருன்னுவாரும் ✻
வெப்பரிநிரையந்தன்னுள்வீழ்ந்துவெந்துருகிவியா ✻
ரெப்பொழுதேறுவாமென்றினைத்தினைத்தேங்குவாரோ ✻

எ - று தனக்குநிகரில்லாருயவநிமலமுத்தனானசிவனருளிச்செய்தவேதா கமங்களுக்கொப்பாகவுமதற்கதிகமாகவும் பிறிதொருநூலைச்சொல்லுமவரும், அ ந்தவேதாகமங்களை நிந்தைசொல்லுமவரு, நிந்தையைமனத்திலேநினைக்குமவரு ம், வெம்மையையுடையவெரிவாய்நரகத்தின்கண்வீழ்ந்துடம்பெல்லாம்வெந்து வெலாமுருகியிங்ஙனந்துயருறவுமந்தயாதனாசரீரத்தினின்று நீங்காராயிந்நரகத் தினின்றுமெக்காலங்களையேறுவோமென்றுவாடிவாடியேக்கமுமடைவர் - எ-று வியாமை - யுயிர்விடாமை [கூ]

இதுவுமது.

ஒப்பிலியனுநிமுத்தஞெநியபனுவலோர்ந்து ✻
தப்பறச்சாற்றுமாசான்றன்னையுமிகழ்ந்துசாற்றில் ✻
வெப்பெரிநிரையந்தன்னில்வீழ்ந்துவெந்துருகிவியா ✻
ரெப்பொழுதேறுவாமென்றினைத்தினைத்தேங்குவாரோ ✻

எ - று தனக்குநிகரில்லாதவநிமலமுத்தனாகிய சிவனருளிச்செய்தவேதாக மங்களையாராய்ந்தையந்திரிவறவுபதேசிக்குமாசாரியனையுமவமதித்துநிந்தைசொ ல்லுவாராயினவர்களும் வெம்மையுடைய வெரிவாய் நிரயத்தின் கண்வீழ்ந்து முன்னர்க்கூறியதுயரினையுறுவர்கள் எ - று

ஆசான்றன்னையுமென்றவும்மை, சாதகனையும்விளக்கிநின்றது ௰

இதுவுமது

அரன்றிரவியத்தைபாசா னரும்பொருளதனையார்க்கும் ❋
பரம்பரன்பகர்ந்தவாக்கைப்பரித்தபுத்தகத்தைப் பற்றிக் ❋
கரந்தவர்முன்னஞ்சொன்ன கரிசர்களொருமூவர்க்கும் ❋
வரும்பலமுடையர்பாவ மனைத்தையுமருவினாரோ ❋

எ - து சிவத்திரவியத்தையுங் குருத்திரவியத்தையும் யாவருக்குமே லானசிவனருளிச்செய்ததிருவாக்கினை யெழுதினமுறையையும் விரும்பிக் களவு செய்தோர்முற்கூறியசிவநிந்தகர் வேதநிந்தகர் குருநிந்தகரானமூவர்க்கும் வரு ந்தீவினைப்பயன்களையுடையராவரஃதன்றி யெல்லாப்பாவத்தையுஞ் செய்தோரு மாவர் எ - று (௰௧)

அதிபாதகஞ்சொல்லிமுடித்து அதிபாதகதுல்லியபேதஞ்சொல்லத் துடங்குகின்றார்

வேறு

அறைந்தவிவர்களனைவர்களு மதிபாதகரோவெனவுமிக ❋
சிறந்தவினையேதீவினையு ளதிபாதகந்தானெனத்தெளிக ❋
நிறைந்ததுயரோநெடுநாளே யிதனிற்பலமுமெனநினைக ❋
பிறிந்தவதிபாதகபேதந் தனையுமினியாம்பேசுவமே ❋

எ - து இங்ஙனங் கூறிப்போந்த சிவநிந்தகர் முதலான விவர்களெல்லாருமதி பாதகரென்றறிவாயாக இத்தீமையான பாவங்களுள் அதிகோரபாவமென்றறியக் கடவை யிதனின்மிகுந்ததுயரமு மனுபவிக்குங்காலமுநெடுங்காலமென்றறியக்கட வை யிதன்கூறான அதிபாதகபேதத்தையுமேற்சொல்லாநின்றோம் எ - று அதிபாதகரோசிறந்தவினையேயென்னுமேகாரமிரண்டுந் தேற்றம்நிறைந்ததுயரோநெ டுநாளேயென்னு மேகாரமிரண்டுமெண்ணின்கண்வந்தன (௰௨)

அதிபாதகதுல்லியபேதத்தைப்பத்துச்செய்யுளாலுணர்த்துகின்றார்

அரிகசிரமுஞ்சிவதனத்தை யபகாரகனையஃதரிதே ❋
லரிவித்திடுகவிருநிதிய மளித்தும்வலியாரவராலே ❋
யரிதேலஃதுமப்புரிவிட் டகல்கவகலாதுறைவாரோ ❋
வரிபாரதிபாதகத்தவனுக் கொப்பார்நியாயத்தெய்ப்பாரோ ❋

எ - று. சிவத்திரவியத்தையபகரித்தவனைத் தலையைச்சேதிக்கக்கடவர் அவனைத் தண்டஞ்செய்யவலியில்லையாயின் வெகுதனங் கொடுத்தாயினும் பலவான்களாலே சேதிப்பிக்கக்கடவர் அதுவுங்கூடாதாயி னந்தத்தலத்தைவிட்டு வேறொருதேசத்தின்கட்செல்லக்கடவர் அங்ஙனமறுதேசத்திற் செல்லாமலவ்வூரிலதற்கனுமதித்திருப்பார்களாயின் அவர்களையிந்த வதிபாதகஞ்செய்தோறுக்கொத்தற்குரியராய்நரகத்தின்கணமிழ்த்தியிளைப்பார் எ - று.

சிரமுமென்றவும்மையாற்கரமுதலியவுறுப்புக்களுமெனவறிக (௰௩)

சிவனையிகழுஞ்சிறியாரை யவனையர்ச்சனைப்பூசனையை ✻
யுவகைபுறவேகண்களிக்க வுருகிப்பரவாதுழல்வாரும் ✻
அவனைச்சிவன்றாளருச்சகனை யன்புசெய்யாதகல்வாரும் ✻
புவனத்திபன்பவனத்துனியமத்தலனுபுகுவாரும் ✻

எ - து. சிவனையும் அவனது அருச்சகனையுமுள்ள மகிழ்ச்சிபொருந்தும்வண்ணங்கண்களிப்பக்கண்டதனுள் மனநெகிழ்ந்து துதிசெய்யாதிருப்போரும் அந்தச்சிவனையுமவனை யருச்சிக்கும் பூசகனையும் பத்திபண்ணாதுவிட்டு நீங்குவோரும் இருநூற்றிருபத்துநாலுபுவனத்துக்கு மதிபனானசிவனெழுந்தருளியிருக்குந்திருக்கோயிலினுளாசாரநியமங்களோடுசெல்லுமதன்றி யனாசாரங்களோடே புகுவோருஞ் சிவனிந்திக்குமற்பாவவதிபாதகரையொப்பர் எ - று. (௰௪)

பரமன்றிருமுன்னமழன்முன்னும் பரமகுரவன்றிருமுன்னும் ✻
ஒருமையுறவேவறுமையினு முதவாதவருஞ்சிறிதேனும் ✻
அரிதுபொருடான்பச்சிலையு மரிதோவஃதுமரிதாகிற் ✻
றிரணமதனைத்திருமுன்னே மாற்றலரிதோசெயலாலே ✻

எ - து. சிவசன்னிதியிலுஞ் சிவாக்கினியின்முன்னு மேலானஞானாசாரியனது சன்னிதியிலுந்தமக்குவறுமையெய்தின காலத்திலுமேதேனுஞ் சிறிதுதமக்கியன்றமரியாதியொருப்பாடுபொருந்தக்கொடாதோரும் அங்ஙனங்கொடுத்தற்குப்பொருளரிதாகிற் பச்சிலையுங்கிடையாததோ வதுவுங்கூடாதாயிலவர்கள்சன்னிதியிற்கிடக்குஞ்செற்றையைக்கருத்துடனே திருவலகுமுதலியவற்றாற்போக்குதலுமரிதோவரிதன்றேயாதலா லிதனுளொன்றைச்செய்யாதோருஞ் சிவநிந்தகருக்கொப்பர் எ - று.

ஒகாரம் எதிர்மறை (௰௫)

பொருவில்பொருளைப்புணர்ந்தாரை யல்லாரெல்லாம்பூரணையி ✻

ஏரமியுடனேயிளமதிய மிசையும்பொழுதுமிணையிவியு
மெரியுமியலுங்குருபரனு மிருக்குமிடத்தையலகிட்டு
விளையின்விதத்தான்மெழுகிட்டு விதியாற்பூசைபுரியாரும்

எ று தனக்குநிகரில்லாதசிவத்தைக் கூடிநிட்டைபுரியுஞ் சிவஞானிகளல்லர் தோமொல்லாரும் பூரணையிலுமாதித்தியனோடு கலைதேய்ந்த விளம்பிறைபொருந்து ங்காலமான அமாவாசையினுமொப்பிலாதசிவனுஞ் சிவாக்கினியுஞ் சிவாகமமுமே லானவாசாரியனுமெழுந்தருளியிருக்குந் தலங்களைத் திருவலகிட்டுமெழுகிச் சந்த னமுதலியசுகந்தவர்க்கங்களினாலே விதிப்படியருச்சனை செய்யாதோருஞ் சிவநிந் தகருக்கொப்பர் எ று (௰௬)

இந்தமுறையியியற்றாரு மியற்றியநியமிழந்தாரும்
பந்தமானபசுபாசப் பகையைக்கெடுக்கும்பரம்பரனைச்
சிந்தைக்கரியசிவமுதலைத் துயக்கமறவேதெருண்டாரை
நிந்தைநிகழ்த்துநிறையில்லாக் கல்லாப்பொல்லாநீசருமே

எ று இங்ஙனங்கூறிப்போந்த திறத்தோரன்றி யாசாரியராலே சங்கற்பித்த னுட்டித்துவரும்விரதங்களைவிட்டோரும் ஆன்மாக்களிடத்தநாதிசம்பந்தமானவா ணவபாசமானபகையைப்போக்கும் பரம்பரனுயவர்க்கு மனத்துக்கெட்டாதசிவ மாலயமுதலைத் தம்முடையவஞ்ஞான நீங்கும்படியுணர்ந்த ஞானவான்களை நிந் தைசொல்லுநிறையில்லாத அறநூல்கல்லாத பொல்லாதஅற்பருஞ் சிவநிந்தகருக் கொப்பர் எ று

சிவனையிகழுஞ்சிறியாரையனையாரென்பதனையெவ்விடத்தும்வருவிக்க [௰௭)

நிந்தைநிகரின்ஞானத்தை நிகழ்த்துமவரை நிகர்ப்பார்தஞ்
சிந்தைநிகழவருச்சனையைச் செய்யாதறநூறிளைப்பாரு
மிந்தவியலையெழுதினரு மிதனைப்பிறருக்கிசைப்பாரும்
வந்துபொருவில்வாய்மொழியை மதிப்பாரவருமனத்தாலே

எ று தம்முடையஅறிவு விளங்கும்வண்ணம் ஒப்பில்லாத சிவவாக்கியமான அறநூல்களைமலர்முதலியவற்றாற் பூசைசெய்யாது படிப்போரும் எழுதுவோரும் பிறருக்குப்பாடஞ்சொல்லுவோரும் மனத்தாற்சிந்தனைபண்ணுவோருஞ்சிவஞான நிந்தகருக்கொப்பர் எ று

அருச்சனைசெய்யாதென்பதனைமுற்றுங்கூட்டுக [௰௮]

காயசுத்திபண்ணாதுகற்பிப்பாருங் கற்பாருந் ※
தேயசுத்திசெய்யாதுசிவஞானத்தை சசிந்தனைசெய் ※
தாயுமவருமவர்தம்மையடைந்து தயக்கமறவெண்ணி ※
வாய்மைப்பொருளைமதிப்பாருங்கற்பார்தாமும்வரமுறவே ※

எ - து சிவஞானத்தைநீராடல்முதலியவற்றாற்சரீரசுத்திசெய்யாதுபடிப்பிப்பாரும் படிப்பாரும், அதனைத்திருமெழுக்குமுதலியவற்றாற்சுத்திசெய்யாததலத்திருந்துசிந்தித்தாராய்வோரும், அன்னமாராய்வோரைச்சேர்ந்துதனக்கையந்திரிவறும்படி கருத்துண்மையாகியதிவ்வியாகமப்பொருளைக்கேட்போரும் நன்றாகப்படிப்போருஞ், சிவஞானநிந்தகருக்கொப்பர் - எ - று

தேசத்தைத்தேயமென்றார் [௰௯]

ஆசையதனாற்சிவகோச மதனைப்பொருளுக்களிப்போரும் ※
தேசிலவலதேசத்திற் சிறந்தமுறையைச்செபிப்பாரும் ※
பாசப்பகைவன்பகர்மொழியை ப்பயிலாதபனூல்பயில்வாரும் ※
ஏசற்றரன்வாக்கியற்றாரு மேதையகத்துளிருக்கவுமே ※

எ - து திரவியத்தின்கணுள்ளவாஞ்சையினாலே திவ்வியாகம த்திருமுறையை விற்குமவரும் பரிசுத்தமில்லாத வசுத்தபூமியிலேயதனைவைக்குமவரு மான்மாக்களின்பாசத்துக்குச்சத்துருவானசிவன்அருளிச்செய்தவேதாகமங்களைக்கல்லாமலன்னியமானபசுநூல்களைக்கற்போருந்தம்முள்ளத்தின்கண்மிகுந்த புத்தியுண்டாயிருக்கவுங்குற்றமற்றசிவநூலை மேன்மேலும்விரியக்கல்லாதிருப்போருஞ் சிவஞானநிந்தகருக்கொப்பர் எ - று

ஏசற்ற என்னுஞ்சொல் ஏசற்று எனவிகாரமாயிற்று நிந்தைநிகரின் ஞானத்தை நிகழ்த்துமவனாங்கர்ப்பாரென்பதனை யெவ்விடத்தும்வருவிக்க [௨௰]

பொருவில்குரவனிந்தனையை ப்புரிந்தாரவனைப்புனைவார்கள் ※
பரிவாலவனையருச்சனையை ப்பண்ணாதறநூல்பயில்வாரு ※
முருகிப்பணிவையுறாற்றாரு முனுற்றுமவனையொழிப்பாருந் ※
திருவாய்மொழியைத்தினைத்திறைஞ்சி ச்சிறந்ததுதிகள்செய்யாரும் ※

எ - து தேசத்திருவிலையாசாரியனை ப்பூசைசெய்யாமற் புண்ணியநூலைப்படிப்பாரு முன்னமுருகியவர்பணிவிடையைச்செய்யாதோருமங்ஙனம்பணிவிடைசெய்வோரைக்கலித்துவிலக்குவோரு மாதவாசாரியர்திருவாக்கினைற் கூறுமாகமவசன

ங்களை நன்றாகக்கேட்டு மகிழ்ந்தவரை மேலானதோத்திரங் கள்செய்து வணங்காதோருங் குருநிந்தகருக்கொப்பர் எ று (௨௧)

எதிருத்தரமுமிசைப்பாரு மிளைத்தபருவமெனவெண்ணிப் ❀
பிதிருமவருமெதிரியரால் பிழைவந்துழி னும்பிணியுறி னும் ❀
புதல்வர்தமையுமனைதனையும் பொருந்துஞ்சுற்றத்தவர் தமையும் ❀
பதரோயென்னவவமதியைப் பண்ணுமவரும்பரிவறவே ❀

எ. து ஆசாரியனேவியபணிவிடையைச்செய்யாமல வருடனெ திருத்தரஞ் சொல்லுவோரும் அவர்க்குமிடியெய்தியகாலத்து அவரைப்பாதுகாவாமலிகழ்ந்து போவோரும் அவர்ஞாதிமுதலியவெதிர்வாதிகளாலே பயசப்படினும்வியாதிகளை ப்பொருந்தினுஞ்செயித்தக்காவாமல்விட்டுநீங்குவோருங் குரு புத்திரரையுங் குருதேவியையுங்குருவினோடுசம்பந்தமான சுற்றத்தோரையு மிரக்கமற்றுநொய்தாகக் கருதியிகழ்ச்சிசெய்வோரும் குருநிந்தகர்க்கொப்பர் எ று

பொருவில்குரவனிந்தனையைப்புரிந்தாரவரை ப்புரைவார்களென்பதனை யீண்டும்வருவிக்க (௨௨)

இங்ஙனமதிபாதகதுல்லியரையுணர்த்திமேல் மகாபாதகரையுணர்த்துகின்றார்

அதிபாதகருக்கரியார்களிவரொன்றதிமா பாதகரைப் ❀
பொதிமாமுனிவனிவிளிவினைய ப்புந்திசெய்கபுகன்றிடுவா ❀
மதியால்வசனவாய்தன்னான் மனமுடையவடிவதனா ❀
லுதையமானபாவங்கள் கேட்பார்தமக்குமொழிந்திட்வே ❀

எ து பொதியமாமலையிலிருக்கு மகத்தியமுனிவனே யிங்ஙனங் கூறியதிறத்தோரெல்லாமதிபாதகருக்கடுத்தோரொன்றறியக்கடவை யித்திறத்தினைக்கேட்போர்க்குமனத்தினாலுமுகத்தின்கண்ணுள்ள வாக்கினாலுமழுக்கினையுடைய காயத்தினாலுமுண்டான பாவங்களெல்லாமொழியும்வண்ண மிப்போதுனக்குமகாபாதகரை ச்சொல்லாநின்றேமதனைச்சமுதியிற்புத்திபண்ணிக்கேட்பாயாக எ று

கேட்போர்க்குமென்றவும்மையபடிப்போர்முதலியோர்க்குமெனஎச்சத்தின்கண்வந்தது (௨௩)

பஞ்சபாதகரிவரொன்பதுணர்த்துகின்றார்

கொன்றான்மறையோன்றனைமதுவைக்குடித்தமறையோன்சோரத்தாற் ❀

சென்றேறிற்செம்பொனைக்கொண்டான் றினைத்தான் குரவன்றேவிதனை *
நின்றவிவரோடணைவைவர் மாபாதகரெனினையத்தூட் *
சென்றார் வினையச்செல்லலுற மீளுநாளுஞ்சிலவலவே *

எ - து பிராமணனைவதைத்தோனும், மதுபானம்பண்ணியபிராமணனும் பிறருடையதிரவியத்தைக்களவிலுற்சென்றெடுத்துக்கொண்டோனும், ஆசாரியன்மனைவியைப்புணர்ந்தோனும், இவ்வனைக்கூடினோனால்வரோடிணங்கித்திரிவோனுமாகவிவர்கள், ஐவருமகாபாதகர்களாம், அவர்களைவருத்தமுறும்படி சடுதியிலேநரகத்தின்கட்சென்றடைந்தோராவர்களதினின்றுகரையேறுநாளுஞ்சிறிதுநாளுமல்லநெடுங்காலஞ்செல்லும் எ - று [௨௪]

மேன்மகாபாதகதுல்லியமையுணர்த்துகின்றார்

அறைந்தாமகபாதகமதனுக்கனியதனியபாதகமுஞ் *
சிறந்தபொதியிற்சிவமுனிவதெரிப்பாம்வினையத்தெளிந்திடுக *
மறந்துபுரிந்தவல்வினையுமறவாதியன்றவல்வினையு *
மிறந்துபிறக்கவினியவினையிதனையுமாரவிசைந்தார்க்கே *

எ - து மேலானபொதியமாமலையிலிருக்கு நன்மைபொருந்தியமுனிவனே மகாபாதகரைச்சொன்னோம், இதற்கடுத்த துல்லியபாவவிதங்களையுஞ்சொல்லாநின்றோம், இதனையறியவிரும்பினோர்க்கறிந்துசெய்ததீவினையுமறியாதுசெய்ததீவினையுங்கெட்டுநல்வினையுண்டாம்படிக்கிதனைச்சடுதியிலேகேட்டுத்தெளியக்கடவை எ - று [௨௫]

மகாபாதகத்துல்லியருட்பிரமகத்திபண்ணினோர்க்
கொத்தாவாமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வெறுப்பான்மிகுத்தகோபத்தால்வேட்கைமிகையால்வெருட்சியினல் *
ஒறுப்பாமுரையந்தணர்க்குரைப்பாவெறுப்பான்பிரமக்கொலையர்க்கே *
யறப்பேரறிவேயுளமெனவேதன்னைமதிக்குமதியிலியுஞ் *
சிறப்பாங்குரவனெறியிருத்தஞ்செய்யுமறியாச்சிறுவனுமே

எ - து வேண்டாமைபாலாதல், அதிகோபத்தாலாதல், திரவியமுதலிய வாசைமிகுதியாலாதல், அச்சத்தாலாதல்- பிராமணரைப்பொறுத்தற்கரியகொடுஞ்சொற்களைச்சொல்லுவோனும் மிகவும்பேரறிவுடையோம்யாமென்றுதன்னை

யுயர்வாகவெண்ணுமறிவில்லாதவனும்- மேலானவாசாரியரோடுவிரோதம்பண்ணிக்கொள்ளுமறிவில்லாத- அப்பனும்-பிரமகத்திபண்ணினோனுக்குநிகராவர் எ - று [௨௬]

உண்ணவறன்மேற்செலுமாக்களினையுந்தடுத்தேயொறுப்பானு *
நண்ணியிரப்பத்தருவலெனநயந்துகூறியவர்வரவி *
லெண்ணமிழ்ந்துதரும்பொருளுமிலமேயெனவுமிசைப்பானுந் *
தன்மையுணரைத்தகூறியவரைச்சாற்றுமவனுஞ்சபைநடுவே *

எ - து தண்ணீருள்ளவிடத்திற்குடிக்கச்செல்லும்பசுக்களையுமறித்தந்தண்ணீர்குடியாவண்ணம்வாதைபண்ணுவோனுந்- தம்பால்வந்தொருபொருளையிரந்தபோதுதருகின்றேனென்றுநேர்ந்துமுற்கூறிப்பின்பவர்தம்மில்லின்கண்வந்தபோதக்கருத்தைவிட்டுமக்குத்தரும்பொருளும்யாமுடையோமல்லவென்றுசொல்வோனும்- அறிவான்மிக்கோனைச்சபைநடுவேயிழிபானவசனங்களைச்சொல்வோனும்பிரமகத்திபண்ணினோனுக்குநிகராவர் — எ - று

ஆக்களினையுமென்னுமும்மைமற்றுள்ளவிலங்குபுட்களையுமென- எச்சத்தின்கண்வந்தது- மேல்வருஞ்செய்யுளிற்பிரமக்கொலையர்க்கிணையென்பதையிச்செய்யுளோடுங்கூட்டியுரைக்க [௨௭]

அரசன்செவியிற்பிறர்குறையையறிவிப்பவனுமந்தணர்க்கும் *
பரசுபாணிமுதலோர்க்கும்பாங்காநிலனைப்பறிப்பானு *
மொருவும்வகையையுரைப்பானுமதனுள்விளைவையுண்பானும் *
பிரமகொலையர்க்கிணைமதுவைப்பீதற்கிணையும்பேசுவமே *

எ - து பிறர்குற்றங்களையிராசாவின்செவியிற்சொல்லியறிவிப்போனும்- பிராமணர்க்கும்- மழுவைக்கையிலேந்துஞ்சிவன்முதலாயுள்ளகடவுளர்க்கு- முரிமையானபூமியைக்கட்டிக்கொள்வோனு- மந்நிலமவர்களுக்காகாமற்போம்வண்ணஞ்சூட்சிசொல்லுவோனு- மந்நிலத்திற்போகங்களையெடுத்துக்கொண்டுண்போனும்- பிரமகத்திபண்ணினோர்க்கொப்பாவர்கள்- மதுபானம்பண்ணினோர்க்கொப்பாரையுமேற்சொல்லாநின்றோம் - எ - று [௨௮]

மகாபாதகத்துல்லியருண்மதுபானம்பண்ணினோர்
க்கொப்பாரையும்பொன்றிருடினோர்க்கொப்பா
ரையுநான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்

ஆதியமலனருளாளனனகனருள்செயாகமத்தை ✿
யோதியதனையொழிப்பானுமொளிசேரழலையோம்பானு ✿
மாதாவுடனும்பிதாவுடனுமாறுயவர்சொன்மறுப்பானு ✿
மோதாவுரையையுரைத்தானென்றுற்றேநடுவாயுரைப்பானும் ✿

எ-அ எவற்றிற்குமுதல்வனுமாய்நின்மலனுமாயான்மாக்களிடத்திலேயிரக்கத்தையுடையவனுமாயப்பாவமில்லாதவனுமாயிருக்கிறசிவனருளிச்செய்தவிவ்வியாகமத்தையோதியதனையிடையிலேவிட்டவனு- மொளிபொருந்தியவக்கினிகாரியகாரியஞ்செய்துவந்துபின்பதனையிழந்தோனும்- மாதாபிதாவுடனும்விரோதித்தவர்கூறிய- சொற்களைமறுப்போனு- மொருவன்சொல்லாதவார்த்தையைச்சொன்னானென்றுசபைக்கண்வந்துநடுச்சொல்வோனுமென்றவாறு [௨௧]

தோழன்றனக்குத்துயரத்தைத்துய்ப்பிப்பவனுந்துர்சனுக்கு ✿
மேலாய பாகனடியாளையிடரைச்செயவுமிசைந்தானும் ✿
பாவிறந்தநூல்பழித்தபொருள் பண்டமெனக்கொண்டுண்டானும் ✿
வாழும்வனந்தமாக்களையும் வருத்துமவனுமயலுறவே ✿

எ-து வெளி

ஜமாக்கள் பசு மான் மனாமுதலியவிலங்கினங்கள். ஜமாக்களையுமென்னுமும்மைபறவைகளையுமெனவிளக்கிற்று (௩௰)

ஆக்களையுமார்க்கத்திலடவியதனுளரும்பநியுட் ✿
பார்த்தன்மதித்தபட்டினத்தும் பழுதேயழலைப்படுப்பானு ✿
நீக்குமதுவையுண்டானை நிகரோவறியார்நிதிமுதலுங் ✿
காக்குமனையோகரிபரிதேர் கவிரூர்மணியுங்கவர்ந்தானும் ✿

எ-அ பசுக்களிற்குக் கொட்டகைவாசலிலும் வனங்களிலுமரிய சிவத்தானங்களிலும்பூமியுன்மதித்துச்சொல்லப்பட்ட பட்டினங்களிலு மொருகாரணமின்றித்தீவைப்போறு மிவர்களெல்லாம் அறநூலிலாகாதென்று நீக்கு மதுபானம் பண்ணினோர்க்குநிகராவர்கள் மிடியராயுள்ளோருடைமைமுதலாயினவுங் காவல்பெற்றிருக்குமில்லமட்டோயானை குதிரைதேரிவைகளையுமழகு நிறைந்தரத்னத்தையுங்கவர்ந்துகொண்டானும் எ-று

வறியோர் நிதிமுதலுமென்றவும்மையாற்பெரியோர்நிதிமுதலுமென விரிக்க (௩௧)

கதலிபெருவாய்கரும்பிருவாய் கந்தம்லிசந்தன முயர்ந்த ❊
பொதியிலகில்குங்குமமாதி புனையவிளரிய துகிலாதி ❊
பதமேபாவரிபயில்வனவும் பற்றிறனும்ப மூதுறவே ❊
பிதமாங்கனகந்தனைச்சோர்விற் பெற்றூற்கிணையேபேசுங்கால் ❊

எ—து வாழைமுதல்கரும்பீருயுள்ள வுண்டிப்பொருள்களு மணமிக்க சந்தன மும்பொதியத்தின்கணோங்கிவளர்ந்தஅகில்குங்குமமுதலிய சுகந்தப்பொருள்களு முடுத்தற்கினியவாடைமுதலிய வனவுங்காலினுங்கையினுமணியப்பட்டவாபரணமா யுதங்களுமான விவைமிற்றை,யுடையோர் வருந்தும்வண்ணம் அபகரித்தோ ரூஞ் சொல்லுமிடத்துச்சிவந்தநிறத்தையுடையபொன் னைக்களவினாலேயெடுத்தோருக் குநிகராவன் எ—று

பீதம் பிதமெனக்குறுகிற்று (௯௨)

மகாபாதகதுல்லியருட் குருதேவியைப் புணர்ந்தோர்க்கொப்பாளா மிரண்டு செய்யுளாலுணர்த்துகின்றார்

பெறுதற்கரியபாத்திரத்தை ப்பெற்றும்பெற்ற கன்னிகையைச் ❊
செறிவித்திடுதல்செய்யானுஞ் சிறந்தபுதல்வன்மனைவியொடு ❊
மறிவிற்பரிந்தானகத்தினொடும் பகினியுடனுமணைந்தானும் ❊
பொறையிற்பயந்தபுதல்வியொடும் புலைச்சியுடனும்புணர்ந்தானும் ❊

எ—து வெளி

அறிவிற்பரிந்தான், தோழன் பகினி, உடன்பிறந்தாள் (௯௩)

அறிந்துமனையாளவலத்தை யவளைத்துறவாதணைவானுஞ் ❊
சிறந்தகுரவன்மனைவியொடுஞ் செறிந்தார்க்கிணையேசெப்பியவித் ❊
திறந்தான்மகபாதகமதனிற் சிறுமைத்ததனுற்பாதகமென் ❊
றறைந்தாமிதனுக்கணித்தான வுபபாதகமுமினியறைவாம் ❊

எ—து தன்மனவியானவள்பிறர்முகம்பார்க்குங்குற்றத்தைக்கண்டு மவளைத்த ள்ளிவையாதகூடுவோனு மிவர்களெல்லாருமேலானகுருவினதுபாரியோடுகூடின வர்களுக்குநிகராவர்கள், இங்ஙனஞ்சொல்லிய கூறுபாடுகளெல்லாமகாபாதகத்து க்குத்துல்லியமாயிருக்கும்,ஆனையினாலேயிவற்றிற்கு ப்பாதகமென்று பேர்கொடுத்

தச்சொன்றேனும், மேலிதற்கடுத்த உபபாதகத்தையுஞ் சொல்லாநின்றேம் எ - று. (௩௪)

முற்கூறிய உபபாதகத்தை விரித்துணர்த்துகின்றார்

இச்செய்யுண்முதலாகவே யிசைத்தவென்னுஞ் செய்யுளீறாக விருபத்தொரு செய்யுளுமொருதொடர்க்குளகம்

மறையோர்க்கெனவே வைத்தபொருண் மதியாததனை வௌவினனு *
நிறையாற்பெரியோர் நிதியதனை நிரந்துகவர்ந்த நிலையினனும் *
பிறராலதனுக்கிடையூறு பெறுமவனும் பெருங்குலமு *
மறிவுமருந்தவமுடையேமென மகந்தையுடையவவலனுமே *

எ - து. பிராமணர்க்கென்று நியமித்துவைத்த பொருளை யவமதித்தெடுத்துக்கொண்டவனும் வேதாகமங்களின் வழியேயற்றக் குறைச்சலின்றி நின்றநிலைமையான் மிக்கோராகிய நல்லோர்கள் திரவியத்தைக் கவர்ந்தபகரித்த நிலையில்லாதோனும் பிறராலேயவருடைய திரவியத்துக்கிடையூறு விளைப்போனு மெல்லாரினும் பற்றப்பெரிய சாதியுமறிவு மிக்க தவமும் யாமே யுடையோமென்னு மாங்காரத்தையுடைய பொல்லாதவனும் எ - று. (௩௫)

விடைத்துத்தவரைவெருள்வானும் விடம்பமுளத்துள் விரவினனு *
மிடுக்கண்கெடுத்தவிளியாரை யெண்ணாவவலத்தின்னியனுங் *
தடுக்கத்தரியாவாசையுடன் போகவிதத்தைத் தரிப்பானுங் *
கொடுக்கச்சிறிதுங்குறியாது கொள்ளுங்கருத்தேயுள்ளானும் *

எ - து. தபோதனரைக்கண்டு கோபிக்குமவனு முள்ளம்பிறிதொன்றாயிருக்கப் பிறர்மதிக்கவிரதமுதலியவற்றைச் செய்யவிரும்பினோனுந் தனக்கு வந்தவிடையூறாக விரக்கின்றோரை யவமதித்தபொல்லாத கன்னெஞ்சனுந் தடைபடாத வாசை மிகுதியாலே போகவிதங்களையநுபவிப்போனு மற்பமுமொருவர்க்குக்கொடுக்கக் கருதாதபிறர்கையிலுள்ளவற்றைவாங்குங்கருத்தேயுடையோனும் எ - று.

விடம்பம் உள்ளொன்று புறம்பொன்று (௩௬)

மாறுவுளத்தவஞ்சகனும் வயிரமுடையமனத்தினனும் *
பேறார் புலமைமனஞ்செய்து புணர்ந்தாளிருக்கப்புலனிழந்த *
பாலூர்மொழியைப் பைங்கிளியைப் பணைத்தோளியைப்பயின்றதனு *
லேறுமொன்றுமிரண்டிலையுங் கண்டுகொண்டுவெறியனுமே *

எ - று உள்ளத்தின்கண்மைவுபடாதவஞ்சனையையுடையோனு மொருவனொருகுற்றஞ்செய்யி லதனையக்கணமேமறவாம லென்னாளு நினைத்திருக்குமாச்சரியத்தையுடையவுள்ளத்தையுடையோனு மொருத்தியைக் கலியாணஞ்செய்தவளுடையவாபரணமணிந்தமுலைகளைக்கூடிய கணவனிருக்கவுமந்தவிசைபொருந்திய மொழியினையுடையாளான பசுங்கிளிக்கொப்பாளதுவேய்போன்றதோளினையின்கணறிவின்றிப்புணர்ந்த பெருமைநாணென்னுமிரண்டினையுந்தனக்குக்கண்ணாகவிசாரித்தறியாதவேழையும் எ - று [௫௭]

கொழுநன்றனையேதெய்வமெனக் குறித்துத்தருமநெறிகோணு *
தொழுகும்விரதவுத்தமியை நொய்யளெனவேயுளத்துன்னு *
மிழுதைதானுமிவளெளியளென்றே யவடனிணைத்தோளைத் *
தழுவக்கருதுந்தண்ணியனுங் கண்ணாற்புணர்ச்சிதரிப்பானும் *

எ - து வெளி [௫௮]

கரிசுசிறிதுங்கருதாத கவினார்மரபிற்கன்னிகையைத் *
துரிசுமுடையளிவளென்று சொல்லுமவலத்தூர்ச்சனனு *
மொருவன்சிவனுண்டென்றுணர்ந்த பனவன்றனைத்தேர்ந்துதவாதே *
பரிவுமறிவுமுடையளை மற்றொருவற்குதவும்பழியினனும் *

எ - து வெளி பனவன் பிரமசாரி (௫௯)

தருமமணமேபிரமாதிநான்குந் தலைமையிடைமணந்தா *
னொருவனொருத்தியெனுமிவர்த மொப்பிற்பரிவுற்றுறும்புணர்ச்சி *
கருநிற்கடைமூன்றுசுரமுன் கடையென்றவற்றைக்கழியாதே *
விழைபவிழைந்துபுணர்ந்தறத்தை விதித்தமொழியைவிடுத்தாரும் *

எ - து பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தைவமாகிய, இல்லறத்திற்குரியமணநான்குமுத்தமம், காந்தனுங்கன்னிகையுமானவிருவருந்தம்மனப்பொருத்தத்தாலன்புற்றுப்புணருங்காந்தருவப்புணர்ச்சியிடையாயமணமாம், ஆசுரம் இராக்கதம் பைசாசம்,ஆகியமூன்றுமாராயிற்கடையாயமணமாம்,இவற்றுட்கடையென்றுகூறிய, ஆசுரமணமுதலியவற் றைநீக்காமலாசைமிகுதியாலேவிரும்பிச்சடுதியிலேவேட்டுப்புணர்ந்தில்லறநெறியைவிதித்துக்கூறியவேதாகமவசனத்தைவிட்டோரும் எ - று

காந்தருவமுதலியமூன்றுமத்திமமெனவும் பைசாசமராக்கதமெனவுங்கூறுவாருமுளர். இ-பிரமம்பிராசாபத்தியமாரிடம், தெய்வங்காந்தருவமசுரமிராக்கதம்பைசாசமெனவெட்டென்வகைமணமே, பிரமங்கன்னியைப்பெருங்கலனணிந்தே, பிரமசாரியாயிருப்பானொருவனுக், குரியவன்னிமுன்றரவுதன்மருவும், மருவுபிராசாபத்தியமகட்கோடற், குரியகோத்திரத்தார்மகளுதவென, விருமுதுகுரவருமிசைவு தெரிதல், ஈயுமாரிடமாவுமாவினிரும், வாங்கித்திமுன்னர்மகள்வழங்குதலே, வழங்குதெய்வம்வேள்வியாசாரியற்கு, முழங்குதீமுனமகட்கொடைமுறையே, முறைமையாழினிசைகந்திருவ, மொப்புப்பத்தரந்தப்பிலவாகித், தாம்மகூடித்துதிடதாகும், அசுமாசரஞ்செருவில்லேற்றியுந், திரிபன்றியினைத்தெரிவுறவெய்து, மின்னனைபிறவும்பன்னியசெய்தும், கன்னியைமன்றல்தன்றுமென்ப. தன்றுமிராக்கதஞ்சாரிகுழற்பேதையைத், தன்னிற்பெருந்தமரிற்பெருதும், வலிந்துக்கொடன்மரபாகும், காட்டுபைசாசங்களித்தார்துயின்றோர். மாட்டுப்புணர்ந்தவர்ச்சியின்மாண்பே, ஆகவெண்வகைமணங்களையுமிவ்வகையாற்கண்டுகொள்க [௪௰]

உலகவியல்பையொழிந்தாரையுதவீபொருளென்றுரைப்பானு ❊
நிலைமைதளர்ந்துங்காதேதிங்கும்பாங்கிலடியானுந் ❊
சலமில்சகிலையைத்தணப்பானுந்சாற்றிப்பழுதுந்சலந்செய்து ❊
கொலைபுரியுங்கொடியானுங் குணத்தார்தமைபுங்கொதிப்பாலே ❊

எ - று உலகவியாபாரத்தைவிட்டுநிட்டைபுரிந்திருக்குந்தபோதனனையென க்குக்காசுதாசந்தரக்கடவீரென்றுகேட்போனுந், தங்கருத்தனுக்குங்குலகுலையவந்தவிடத்துங்கன்றுபாதுகாவாமல்விட்டுப்போம், தன்மையில்லாதவடியானும், நிலைமைகுலையவந்தவிடத்துவன்மையில்லாததோழனைக்கைவிடுவோனும், நற்குணமுடையோரையுங்கோபத்திறுலேகுற்றமுஞ்சொல்லிவன்மித்துக்கொலைத்தொழிலைச்செய்புந்தியோனும், எ - று

நிலைமைதளரினென்பதனைச்சலமில்சகிலையென்பதற்குங்கூட்டுக, குணத்தார்தமையுமென்றவும்மைசிறப்பு (௪௧)

சுற்றத்தவரைத் துடைப்பானுஞ்சுகிர்தத்தவரைத் துணிப்பானும் ❊
பற்றிப்பசுவைப்படிப்பானும்பதியைக்கொலைசெய்பழியினனு ❊
மற்றைவசியர்வாதினையுமாயோடனையும்வதைப்பானுந் ❊
செற்றத்துறவர்தங்களையுஞ்செருக்கிச்சினத்துச்செகுப்பானும் ❊

எ - து உறவின்முறையாரையும்- புண்ணியவான்களையும்- பசுக்களையும்- நரர்க்கெல்லாமிறைவனை- அரசனையும் அவர்க்கடுத்தசெட்டிகளையும்- வேளாளர்களையு-மடவாரையு - மதத்துக்கோபித்துவதைப்போனும் எ - று (௪௨)

தருக்கடனையுந்தனக்குள்ளித்தழிக்குமவனுந்தருக்காலே
பொருத்தனுயிர்கட்குயிராயவொப்பில்பரமனுறையுமலை
விருக்கவிடபமவைதனையும்விடைத்தேயொடிக்கும்வினையினனு
மருக்கொண்மலரைத்தனக்கெனவேபறிக்குமவலவரியனுமே

எ - து மரங்களைத்தனக்கென்றுகுறித்துமதத் திலேவெட்டுவோனும்- ஏகனுமுயிர்க்குயிரானங்கரில்லாதசிவனெழுந்தருளியிருக்குந்திருக்கோயிலினிற்கு மரங்களிற்கொம்புகளையுஞ்சினத்தொடிக்குந்தீவினையோனும்- திருநந்தவனத்தின் கணுண்டாயமணம்பொருந்தியபூக்களைத்தனக்கெனக்குறித்துப்பறிக்கும்பொல்லாதவிடம்பனும் எ - று (௪௩)

பரமர்திருவாலயமதனிற்பணிசெய்பவரைப்பசுவதனை
யரியசெந்நெலவையுழுதலுமபகாரகனுமவமதியாற்
றருகவென்றுபொருளல்லார்தங்கைப்பொருளைத்தரிப்பானு
மரனையருச்சித்ததன்பலத்தைப்பிறர்க்குப்பொருளுக்களிப்பானும்

எ - து சிவாலயங்களிற்பணிவிடைசெய்வோரையும்பசுக்களையும்பெறற்கரியசெஞ்சாலிநெல்லினையுமுழுதுபயறுமுதலானதானியங்களையுந்திருடிக்கொள்வோனும்- பயனற்றோரான- அநாதாக்களதுகையிற்பொருளைப்புத்திக்கேட்டினாலேயெனக்குத்தரக்கடவீரென்றுகேட்டேற்போனுஞ்- சிவனைப்பூசித்ததனாலுள்ள பலத்தைத்திரவியத்துக்காகப்பிறர்க்குதகம்பண்ணிக்கொடுப்போனும் எ-று ௪௪)

துக்கம்பிரியச்சுகமடையத்துணிவருலகரவருள்ளுந்
துக்கம்பிரியச்சுகமதனைத்துய்ப்பார்சிலரோசிலர்தாமே
துக்கம்பிரியார்சுகம்பிரிவர்துணிந்தவிரண்டுதிறத்தார்க்கும்
புக்கவினைபுண்ணியபாவமென்வேதுணியாப்புசுரரும்

எ து உலகத்திலுள்ளோரெல்லாருந்தமக்குத்துக்கங்களீங்கவுஞ்சுகங்களுண்டாகவுங்கருதாநிற்பர்கள், அவருட்சிறுபேர்கள் துக்கங்களீங்கச்சுகங்களையனுபவிப்பர்கள், சிறுபேர்கள்சுகத்தைநீங்கித்துக்கத்தையனுபவிப்பர்கள், ஆதலாலிந்தவிருவிதத்தோர்க்குஞ் சுகதுக்கமநுபவிக்குங் காரணமுற்செய்தபுண்ணியபா

லங்கினையென்றுறுதியிடாத பிராமணரும் எ - று [சரு]

தன்றாற்சமைத்ததடாகத்தைத் தருக்களதனைத்தாரத்தைப் *
பொன்னேயனையபுத்திரரைப் பொருட்குக்கொடுக்கும்புல்லியனும் *
நன்றேநன்புடையார்தனந்தனையு நயந்துகொள்ளுநலமிலியும் *
உன்னைப்பரிப்பலெனப்பாரி யுடைமைதனைக்கொண்டொழிப்பானும் *

எ - து தன்னாலுண்டாக்கின குளங்கள், வாவிகள், மரங்களையுந்தன்மனைவியையும்பொன்போன்ற தன்மைந்தர்களையும் பொருளுக் குவிற்குமீனனும் நல்லவிரதசிலராயுள்ளோர்கள்திரவியத்தை விரும்பியபகரிக்குந்தீயோனும் நின்னுடைமையைப்பல்குமவண்ணம்பெருக்கி யுன்னைக்காப்பே னென்று தன்மனைவியதுசீதனமுதலியவைப்பொருள்களை வாங்கிக்கொண்டுகொடாதுவிடுவோனும் எ - று [சசு]

தேமலருந்துந்தேமொழியைத் திளைக்குமறிவில்சிறியானும் *
வேறுசிலர்கைப்பொருடன்னை விரும்பித்தருவலெனவாங்கிப் *
பேறுமவர்க்குப்பிழைப்பானும் பேணுஞ்செந்நெலும்பிறர்தம்பாற் *
கூறிக்கொடுத்துவிருத்தியினைக் கொண்டேயருந்துங்கொடியனுமே *

எ - து மதுபானம்பண்ணுந் தேன்போலு மொழியினையுடையாளைப் புணருமறிவில்லாதவற்பனும் பிறருசிலர்கைப்பொருளை மீட்டுத்தருவனென்றுவாங்கியப்பொருளையுங்கொடாமற் பிழைசெய்வோனும் யாவராலும் விரும்பப்பட்டசெஞ்சாலிமுதலியநெல்லினைப் பிறரிடத்துவட்டிக்குக்கொடுத்து அந்தவூதியங்கொண்டு போசிக்குந்தீயோனும் எ - று [சஎ]

குற்றமுடையான்வினைதணிக்கக் கொடுக்கும்பொருளைக்கொள்வானும்
விற்கத்தகுதியல்லாத வன்றுதிகளைவிற்பானுங் *
கற்பால்வசியமுதற்செய்து கனகங்கொள்ளுங்கரிசினனும் *
நிற்பார்நியமத்திவசனவே நிகழ்த்தத்துடங்குநியதியனும் *

எ - து யாதாமொருகுற்றங்களை யுடையன்தான்செய்தபாவந்தணியும்படிக்குக்கொடுக்குந்தானத்தையேற்போனும் விற்பதற்குரிமையல்லாதவன்னமுதலாயினவற்றைவிற்போனு மந்திரத்தால் வித்தியினாலே ✠ வசியமாக ரிஷிணமுதலிய வறுவ

✠ வசியம் ஆகர்ஷணம் மோகனம் தம்பனம் உச்சாடனம் மாரணம்

கையினைச்செய்துபிறர்பொருள்களை வாங்கும்பொல்லாதவனும் நீதிவழிநடப்போ
ரிவரொன்றுபிறர்புகழும்வண்ணம்பாவித்துத்தொடுத்துநடத்து மியமானுட்டானங்
களீஃயுடையோனும் எ று [சஅ]

கொடுத்துத்தனத்தைவேதமுதல்கொள்ளுமவனும்பொருள்கொண்டுஃ
படிப்பிப்பவனும்படிமத்தை ப்பரித்தேயொழிக்கும்பாங்கிலியுந் ஃ
திடத்தையிழந்துதெரிசனங்களனைத்துமதித்துத்திரிவானும் ஃ
அடுத்தசமயத்தயற்பசுநூல் வழியென்றதுகற்றறிவானும் ஃ

எ து திரவியங்கொடுத்து வேதம்வேதாங்கமுதலியநூல்களைப் படிப்போ
னும்பொருள்வாங்கிப்படிப்பிப்போனும் யாதோர்மொருவிரதத்தை யனுட்டித்த தனை
யிடையிலேவிடுந் திடமில்லாதோனுஞ் சைவசித்தாந்தநிலையே மேலானநிலையென்
னுமுறுதியைவிட்டுமற்றுள்ள சமயதெரிசனங்க ளெல்லாவற்றையுமேலாகமதித்
துநடப்போனுந் தானின்றசமயத்துக்கன்னியமானபசுநூலினைமுத்திநெறியென்
றுகருதிப்படித்தாராய்வோனும் எ று [சகூ]

அறிவையளிக்குமதுவன்றி யவலத்தருக்கமறைவானு ஃ
மறுவில்வடிவவானவரை வன்னியதனைமந்திரத்தைப் ஃ
பெறுவித்தருளும்பெரியோனை ப்பேணுதொழிந்துபிழைப்பானு ஃ
மறையோர்தமைப்பசுவினையு மாமாத்தெனவெண்மனிதரையும் ஃ

எ து ஞானத்தையுண்டாக்குந் தருக்கத்தைப்பேசுவதன்றிக் குதர்க்கத்தைப்
பேசுவோனுங் குற்றமற்ற வடிவினையுடைய தேவர்கள க்கினிமந்திரங்களி னவயிற்
றையாராதனைசெய்யக்கற்பித்தருளுமாசாரியனையும் பிராமணரையும்பசுக்களையுமி
கவுமகத்துக்களென்னப்பட்ட பெரியோர்களையும்பத்திபண்ணுதவிட்டு அவர்களுக்
குத்தீமைசெய்வோனும் எ று

மகாமகத்தென்னும்வடமொழி மாமாத்தெனத்திரிந்தது [ருய]

அரசன்றனையுமபவாத மறையுமவனுமவன் முன்று ஃ
முரியவினையைப்பிதிர்தேவர்க் குதவாதவனுமொழுங்கிலியும் ஃ
பரமசிவனுமறநெறியும் பாவவிதமும்பரபதமு ஃ
நரகவிதமுமிலையென்றே நவிற்றுமவனுமாடோறும் ஃ

எ து இராசாவையுமவன்முன்னே பழிச்சொல்சொல்வோனும் பிதிர்க்களுக்

ளர்தேவர்களுக்குந் தாஞ்செய்தற்குரிய கன்மமானசிராத்தந் தர்ப்பண முதலியவ ற்றைச்செய்யாதோரு மொழுக்கமில்லாதோரு மேலானசிவஞானநன்னெறியாகியபு ண்ணியமும்பாவபேதமு மேலான சுவர்க்க நரக விதமுமில்லையென்று நீத்தலுஞ் சொல்லுவாரந்நிரையம் எ - று

அரசன்றனையு மென்றுமும்மை, மற்றுமுள்ளோரையுமெனவறிக, அவன்முன் றமென்றவும்மைஅவனைக்காணுமிடத்துமெனவறிக [௫௬]

பூரணைமுதலியபகற்பொழுதிற் புணருமவனும்பூரணை யி *
றைதரவின்மைநனத்தை ப்பசுவின்பகத்தினையப்பானு *
மாறானவர்தமாசியத்து மயர்த்தும்பெரியோர்களுத்தாலும் *
பேறாயிருதுமதிபகத்து ப்பெட்பாற்புணரும்பேதையுமே *

எ - து பராவம்பூண்டமுலையினையுடையாளை ப்பகற்காலத்திலும் பூரணைமுத லியவற்றிலு ந்தண்ணிரிலுள்ளுங் கூசாமற் புணர்வோரும் பசுக்களினதுயோனியி லும் அறுசைப்பிறந்தோராதவாயிலும்மைதனைத்தைவிரும் புவோரு மறந்தும் பெரி யோர்கண்மனத்திலும் விரும்பாதனமானவளையாசையாற்புணருமறிவில்லா தோரும எ - று [௫௭]

உடைப்பானவனுமுவகைபுடன் பிரியாநுரையு முறிவினையுங் *
கெடுப்பானவனுங்கிளர்சமையங் கிளப்பானவனுங்கொடுங்கிளவி *
புடைப்பானவனும்புனற்கரையைக் கூபதடமும்புலனிமுந்து *
துடைப்பானவனுந்துணையான தேவர்விமானந்துயக்குறவே *

எ - து மகிழ்ச்சியோடும் பிரிவின்றி யிருக்குநட்புடையோனை விரோதத்தால் வெருக்குவோரும்மோக்கியசமணன்முதலியபுறச்சமயத்தாரானவிலகேடுசெய்யும வரும் பொல்லாதவார்த்தைகளைச்சொல்வோருங் குளங்களையுங் கிணற்றங்க ளையும்வெட்டியிடித்த ப்போடுவோரும் அறிவுகெட்டஅஞ்ஞானமேலிடும்படி தமக்குத்துணையானதேவர்களிருக்குங்கோயில்களை ப்பிடுங்குவோரும் எ - று ௫௮

இறவாதிருக்கச்செயுமருந்தே யெனினுமதனைப்பிலகத்துத் *
துறவாதிருந்தாரவைரொடுந் துய்த்தல்கடனேதுயக்குற்றுப் *
பிறர்சொல்பழியும்பெறாதே பெரியோர்தமக்குநாடாதே *
சிறிதுமிரக்கஞ்செய்யாதே தானேயருந்துஞ்சிதடனுமே *

எ - று சாவாமுவாமருந்தேயாயினுமதனைத்தம்மில்லின்கண்விடப்படாதிருந்தா

சொல்லோரும்பகுந் துண்பதேமுறைமை யங்ஙனஞ்செய்யாமலாசை மிகுதியாலே யறிவுமயங்கிப்பிறராற்சொல்லும் பழிச்சொல்லையும்பாதுகாவாமற் பெரியோர்களுக்குமருந்துவியாமற்பொசிக் கிறேமேயென்றுகூசாமற்சற் றமிரக்கமுஞ்செய் யாமற்றானொருவனுயேயிருந்துபொசிக்குங் குணக்கேடனும் எ று (ருச)

எனவேபிசைத்தவித்தொகையிலென்னுமிவர்களெல்லோரு ம்
முனமேமொழிந்தபாதகத்திற் றணியவுபபாதகமுற்றும் ம
வினையாரிணைவேல்விழியாருமிவற்றைப்புரியில்லவைமல்லா ம
ரினியாமுனிவவிதற்கிளையபாவவிதமுமியம்புவமே ௰

எ று என்றுகூறியவித்தொகையிலெண்ணுநிற்கு மிவர்களெல்லோருமிவற்றிற்குமுன்னுகச்சொன்ன பாதகத்துக்கு த்தணிதான பாதகத்தை ச்செய்யுங்கள்மிகளானவுபபாதகராம், வேல்போன்ற விரண்டுவிழியினையுடைய மடவார்களுமுற்கூறியபாதகங்களைச்செய்யினவர்களும் வேறுகாராயதிபாதகமுதலிய பெயரினைப்பெறுவர்கள், வாராயகத்திய முனிவனே மேலிந்தவுபபாதகத்துக்குத்தணிதானபாவபேதத்தையு முனக்கியம்பி ச்சொல்லாநின்றோ மதனைக் கேட்பாயாக எ று (ருரு)

முற்கூறியவுபபாதகத்துக்கு த்தணிதான பாவபேதங்களைவிரித்துணர்த்துகின்றார்

இச்செய்புள் முதல் என்னுமித்தொகையாவருமென்னுஞ் செய்யுளீறுகசாத்பத்தொருசெய்யுளுமொருதொடர்க்குளகம் (வேறு)

ஆவினுக்கு மருமறையாறங்க ம்
நாவினர்க்குந் தன்னையகனுக்குமெய்த் ம
தாபதர்க்குஞ் சகிக்குந்தகைமைய ம
காவிபோர்விழி க்கன்னிகையார்க்குமே (ருசு)

உற்றகாரிய த்தாறுகடன்னையு ம
முற்றுவானு முகிழ்த்தமகிழ்ச்சியைத் ம
துற்றுவார்தமை க்கண்டுதுயக்குறும் ம
பற்றிலானும் பாருருப்பற்றியும் ம

என்பன, பசுவுக்குமாறுவேதமுமாறங்கமும் பயிலுநாவினையுடைய யபிராமணர

ர்க்குற்றமொன்றுடைய பண்டவனுக்கும் வேடங்கட்டி நடிப்பதன்றி யுண்மை யானத போதவர்க்குவலதுதோழுநக்கு மழகினையுடைய நீலோற்பலமலர் போன்றகண் ணையுடையவள்ளைக்களுங் குமுற்றணரியக்க விவேயிடையூறுகளையுஞ் செய்வோ னாகவிலையாதுண்டாகியசெல்வத் தையனுபவிப்போனாயும்பிறருடைய ருபமாய வன்னியத்தையுங்கண்டுபொருமலறிவுவருத்தமன்பில்லாதோனும் எ-று (௫௭)

ஈட்டுவார்தமந் தன்னைமிறைக்குறக் ❋
காட்டுவாருங் கருதியகையுறும ❋
பாட்டுவாருநம் பாவையர்தூடலை ❋
ஊட்டுவாறு நார்க்குநவையுமே ❋

எ-று நன்முயற்சியலார்சிந்தோரது ஈட்டப்பொருளையரசனுக்குக்காட் டிவவறுமப்பொருளை யிவ்வளவேவெனுறு நினைத்துமனம்புழுங்கியவைகயலு நற் குணநற்செய்கைகளையுடையமாதர்களிடத்துத் தூஷிக்கத்தக்கபாட்டுக்களை ப்பாடு கிறவரும்குணவான்களிடத்துக்குற்றத்தை க்கற்பிப்போனும் எ-று

இதுவன் ஈட்டுநர் ஆர்ச்சித்தோர்வையன் ஈனன் (௫௮)

இச்செய்யுள் முதலாகக்குவாறு மலசலவிசர்ச்சனமென்னுஞ் செய்யுளிறுதியா றுசெய்யுளுமொருதொடர்.

ஆக்கள்சேரிடத் தாறுநிசசாலையுட் ❋
டேக்குநீர்த்தடந் தேர்நிகழ்வீதியுள் ❋
வேர்க்கனுந்தரு ச்சாயைபில்வெற்பினிற் ❋
பூக்கிளர்த்தபொழிலின் புறையுமே (௫௯)

சிலையினிற் சிகதைபிற்றேவர்த ❋
மேலையின்மார்க்கத்தி லில்லத்திலேமத்தில் ❋
றொலையிலாததூர் வாதியிற்றம்பையி ❋
னிலைமைமாதவர் நிற்றிலத்துமே ❋

சிகதை மணற்குன்று (௬௰)

உன்னத்தக்கதலத்தி லுயர்தனிற் ❋
செங்கோலாதிய செய்யிற்சிறப்புறு ❋
வய்ர்க்காரிரிற் றுர்மியலத்திலுட் ❋

உலவொத்தாரிகள் கோமயந்தன்னினும் (௬௧)

நீக்குவாருமலசல நித்தலு
நாக்கினுண்மை நடாவா நயந்துணு
மூர்க்கனு முழுவாதி விநோதமு
மார்க்கும்வினைனு மாடிடுமற்பனும்

என்பன முன்னைச்செய்யுட்களிற்கூறிய வந்தந்தவெல்லைகளிலேமல செலங்களை விடுவோரும் நாடோறு மதுபானத்தை நாவினால் விரும்பிப்பொசிக்கு மறிவில்லாதோருந் துந்துமிமுதலியவாத்தியங்கள்கீதங்கள்கூத்துக்களிவையிற்றை விரும்புமவத்தனும் கூத்துக்களையாடாநிற்குஞ்சிறியோரும் என்று (௬௨)

தேக்கநீர்விளையாடுஞ் சிறியனு
மார்க்குநெஞ்சத்தவர் தமக்கந்தரம்
பார்க்கும்பாங்கினி தானும்பலர்செனு
மார்க்கந்தன்னைத் தடுக்கும்வலியனும்

என்று நிறைநீரிலேநீந்தி விளையாடுமற்பனும் புலன்வழிபோகாமன்மனத்தை நிறுத்தும்பெரியோர்களுக்குக் குற்றத்தைத்தேடி நீதியில்லாதோரும்யாவருநடக்கும் வழிநெமுள்ளநல்லனவற்றுலடைத்துவிலக்குமிரக்கமற்றோரும் என்று (௬௩)

ஈடிலார்மனையாட்டியை வெல்வளைப்
பாடிலாரெனப்பற்றும்பாடிறனுங்
கூடமான கருமமுங்கூறிடு
மூடனும்மதனைச்செயு மூர்க்கனும்

என்று பெலமின்றியிளைத்தோர்கள் மனைமுதலாகிய பூமியையவர்களதுற்றுரிமையல்லவென்று கைக்கொள்ளும் வஞ்சகனு மொருவருஞ்சொல்லாது மறைக்கத்தக்ககாரியங்களைச்சொல்லு மஞ்ஞானியான வனும் அத்தக்காரியங்களைப்பிறர்காணச்செய்யுமறிவில்லாதோரும் என்று (௬௪)

ஒளித்துநின்றுபகைவனையூறுசெய்
வெளிற்றனுங்கன்னக்கோலிடுமிண்டனுந்
தெளித்தசொல்லை வனக்கிடைச்செப்பிடா
னொளித்தசொல்லை நிகழ்த்திடுசேனும்

எ - று. தன்சத்துருவானவனையொளித்துக் கொல்லுஞ்செய்கைப் பாதகனுங் கன்னக்கோலெடுத்துப்பயிற்றி பிறர்பொருள் கவருநருந் தம்முண்மாறுகொண்டு வழக்கின்வகைதெரியவிடத்து மனுநூன்முறைமையை யாராய்ந்தறுதியிட்டசொல் லை வழக்கின்கட்சொல்லாது வாரம்பற்றி யோரமாகச் சொல்லும் புலையனும் எ - று. [௫௫]

கொடுமராதிகளைப்பண்ணிநிற்போனுங் *
கொடுமராதியைக்கொள்ளுங்கொடியனு *
மடியர்பாலிரங்காதவலனு *
மடியர்தம்மையொறுத்திடுமற்பனும் *

எ - று. வில்லுமுதலியவாயுதங்களைப் பண்ணி விற்போனும் வில்லுமுதலியவா யுதங்களைவிலைகொடுத்துக் கொள்ளுங் கொடியோனுந் தனதடியாரிடத் திரக்கமில்லாத பொல்லாதவனுமவ்வடியாரைக்கடிந்து கோபிக்குஞ்சிறியோனும் எ - று. [௫௬]

ஆவினைத்தவிப்பானுமலற *
நாவினாற்பொய்நவிற்றுநரகனுங் *
கூவவந்ததுகேட்குங்கொடியனுங் *
காவலர்க்கபராதக்கருத்தனும் *

எ - று. பசுக்களை வருத்தமுறும்படி யடிப்போனும் நாவினாலேயசத்தியஞ்சொல்லுநரகத்துக்குரியோனும் மதனைச்சொல்லுமிடத்துச்சென்றுகேட்கும் பொல்லாதவனுந் தமதரசருக்கபராதஞ்செய்யுமனத்தை யுடையோனும் எ - று. (௫௭)

உறவினுக்கபராதியுமுற்றுடற் *
பிறவிவேரினைப் பிடுங்கும்பெருவலி *
யறிவனுக்கு நல்லாரிய னுக்கலற் *
புறனுரைக்குமவல ப்புலையனும் *

எ - று. சுற்றத்தார்க்குத்தீங்குசெய்வோனுந் தசைபொருந்தியவுடம்பினையெடுப்பதற்கு மூலமாகியவாணவத்தைக் களைந்தழித்துத் தமிழ்ந்திடமான வறிவினையுடையற்குருவல்லவாசாரி யனுக்குப் பொல்லாப புச்சொல்லுந் தீமையை யுடையகளமசண்டாளனும் எ - று. (௫௮)

சொக்கிடுந்தொழில்வல்லதுரிசனு *

ரக்குநோயறவோட்டுமருந்தெனப் *
பொக்கம்பேசிக்கொடுக்கும்புலையனுந் *
தக்கதாய்தந்தைவாட்டந்தணித்திடான் (௬௯)

தனித்திருந்துணுந்தண்ணியகன்னனு *
முனித்தபோதனர்தன்னைமுன்னூட்டிடான் *
நுனித்தவாதுலர்துக்கந்துடைத்திடான் *
பனித்ததாதாபசியும்பலித்திடான் *

இவையிரண்டுமொருதொடர், பொருண்முதலியவற்றைக்கவரும்விருப்பினாலேபிறர்பாற்சொக்குப்போடுந் தொழிலைவல்லதுர்ச்சனனும்பிணியானதுகெடும்படிநீக்குமருந்திதுவென்றுபொய்சொல்லிமருந்தல்லாதமருந்தைககொடுக்கும்பொல்லாதவனுந்தகுதியினையுடையமாதாபிதாக் கள்பசிபிணிபோக்காதுஇந்திரியங்களைமுனியுந்தன்மையையுடையதபோதனர்களை முற்தப் பொசிப்பியாதஇல்லாமையால்வருந்துந்தரித் திரர்களதுபசித்துயரத்தைப்போக்காதபசியானுந்தன்னடியார்கள்பசியுநீக் காததானேதனித் திருந்துபொசிக்குமற்பவறிவினையுடையோனும் எ - று (௭௰)

நீத்துமுன்னையவேதநெறியினைப் *
பேர்த்துநின்றபிராவிரச்சியனுந் *
தீர்த்தனுவரனுநிசிதைந்திடப் *
பார்த்தபண்பிலவலப்படிறனும் *

எ-து ஆதிகாலத்துளவாயவேதாகமங்களிற்கூறியசன்னியாசிமார்க்கத்தின்வழியனுட்டியாமற்றனையொருமார்க்கங்களைக்கற்பித்துநடக்குஞ்சன்னியாசியுஞ் சுத்தனுகியசிவனுடையதிருமதத்தின்முதலானவற்றை யிடியவிட்டிரக்கமின்றிப்பார்த்திருக்கும்நன்மையில்லாததீமையையுடையவஞ்சகனும் - எ - று (௭௧)

ஆக்கடன்னையரும்பிணிவந்துறி *
னோக்கியேயதனோவுதன்னோவெனக் *
காக்கிலானுங்கனத்தைபிளைத்தமெய்ச் *
சேக்கண்மீதுசெறிக்குஞ்சிறியனும் *

எ - து பசுக்களைப்பொறுத்தற்கரியவியாதிகள்பொருந்தினவையிற்றைப் பார்த்ததன்பிணியைத்தனக்குவந்தபிணிபோலநினைத்துப்பரிகாரஞ்செய்யாதவனும்,

முடையினுக்குங்குதிமருதுகள்மேலேபொதிமுதலியவிருத்தபாரங்களையெடுத் தமப்பதும்   எ - று   (எ௨)

விடையின்பின்செத்தைதெவப்பிணிஞரா ✿
னடையச்செய்விக்குமூடனாறும்வந்தைதலி ✿
விடையிற்பாரமெடுத்துமிழுதைபு ✿
மிடபத்தன்னிலெடுத்துமிழுக்கலும் ✿

இ - ரு   சேக்களிறுடையபிசத்தைக்கொடிபதொழிலினையுடையசேமரத்தி களாலுடையும்படிசெய்விக்கும்பொல்லாதவனுமலட்டுப்பசுவின்முதுகிற்பொதிக ளையெடுத்தும்- அறிவில்லாதவனுமிடபங்களிலேபொதிகளையெடுத்து மீளனும் எ - று   (எ௩)

வருந்துமேபகம்வைப்பின்மரிக்குமே ✿
பொருந்துமன்னரிற்புழுக்கனுமென்றுளம் ✿
வருந்தியேபதமேல்வெளவைத்திடா ✿
தருந்தவத்தைப்பிரிந்தவர்க்களும் ✿

இ - ரு   யாவர்க்குமிடமாகப்பொருந்தும்பூமியிலடிவைக்குங்கால்புழுக்க ளு- மெறும்புமுதலியனவும் - வருந்திடுமென்றுஞ்சாமென்றுநினைந்துமனமொ ந்தடிவைமெத்தெனவையாதவரிபகொல்லாதவிரதத்தைவிட்டவிராக்கதனுக்கொ ப்பாலும்   எ - று   (எ௪)

உன்னையுன்னிரும்பிபுரிக்கொலை ✿
பொன்றுவான்கொலைகள்புரிந்தான்கொலை ✿
பன்றுவானைத்தடுத்தப்பகர்கிலா ✿
வன்றுவானிவரோடெறுமாவ்வலும் ✿

எ - று   வேறு   (எ௫)

மக்கசாத்தியுட்டோன்றியும்வேசியர் ✿
துக்கந்துய்த்திடச்செய்யுந்துரிசனுந் ✿
தக்கதன்றுமைதாமனந்தசார்தநக் ✿
நக்கிழைச்செலுத்துஞ்சியுடும் ✿

இ - ரு [illegible] ப்பியா [illegible]

பிராமணரைத்துன்பமனுபவிக்கும்படிசெய்யும்போலாதவனுங்- கள்முதலிய காற்றம்வர்த்தவிசாநிற்குந்திசையிலதனைநல்லதென்றுநாசியினுலுகர்ந்துகொள்ளுமீனனும்- எ - று (எசு)

பாவஞ்செய்பப்பயமில்பாதகனும் *
ஏவஞ்செய்யவிளைப்பிரிருதையுந் *
தேவர்தம்மைக்குறித்துத்திகழ்விதி *
மேவயாகஞ்செய்யாத்தனவேந்தனும் *

எ - து பாவஞ்செய்தற்குப்பயப்படாதவஞ்சகனும்- பிறர்க்குஅனவரதமும் பொல்லாப்புச்செய்தற்கிளையாதமூடனும்- தேவர்களைநோக்கிய சுவமேதமுதலிய யாகங்களைவிளங்காநின்றவிதிமுறைபொருந்தச்செய்யாதமிகுந்ததிரவியத்தையுடைய- இராசாவும் எ - று

எவ்வம்- வயமெனத்திரிந்தது (எஎ)

அலயத்தையமலனுக்காநிக்குக் *
கோலினேமிலைக்கூவிளந்தன்னொடு *
மாலைசூட்டவும்வல்லருமல்லருக் *
காலருமெனவோவறுங்கல்லனும் *

எ து யாம்நின்மலனுகியசிவனுக்குத்திருக்கோயிலைத் தான்கட்டினுமில் லையல்லதுகுளிர்மையுடைத்தாயமனம்பொருந்தியவில் வமாலைமுதலியவற்றைமுக்காலமுஞ்சிவனுடையதிருமுடியிலேசாத்தவுஞ்சமத்தனுடையமுமல்லமென்றுமனத்தின்கண்ணேவில்லாதகன்னெஞ்சனும் எ று [எஅ]

கூர்த்தநீபனங்கூடக்குறுகினார்க் *
கார்த்தெதிர்ந்தழையாதவலனு *
மூத்துளார்பிணியுற்றினர்பற்றிலர் *
பார்த்தபோதுபரிவில்பாதகனும் *

எ து மிகுந்தபசிபொருந்திவந்தனுவிடேற்கெதிரோசென்றுநல்வார்த்தை சொல்லியழைத்து அன்னமிடாதபொல்லாதவனும், வயோதிகர்-வியாதியாளர்-யடியரிவர்கள்தன்னைவந் துகண்டபோதாயினும் அவர்கண் மேலிரக்கமில்லாதபொல்லாதவனும் எ று [எசு]

தன்னிற்றன்னியனேவலைத்தக்கதென்
றுன்னிச்செய்யுமறிவிலனூனறு
மென்னெனாதசங்காக்குமெளியனுந்
துன்றுமாயிடங்காக்குந்தொழிலனும்

எ று தனக்குக்கிழானேனேவலைநல்லதென்றுகருதிசெய் புமறிவில்லாதகுற்றமுடையோனும் ஆடு-எருமை-யிவைகளைக்காத்ததினால்வரும்பயனியாதென்றெண்ணமல்மேய்க்குநோய்யவனும் எ று [௮௰]

அச்சமின்றியாருவினைக்காடகத்
திச்சையால்வருந் துன்பமுமெண்ணிடான்
முச்சியேமரக்கோவை முயற்சியாற்
கச்சிடாதுகடற்செலுங்கல்லனும்

எ று தனவாசையினாலேபொருத் தற்கரியபாவத்தக் கஞ்சாதுஆழ்கடலினடுவேகாற்றுமுதலியபொருந்திற்கப்பல்கவிழ்ந்தமரிபபோமென்னுந்துக்கமுமெண்ணுதமுமுயற்சிமிகுதியாலேகப்பலைப்பண்ணியதன்கயிலாறுதலைவெறுத் திடாமற்கடலோட்டுகன்னெஞ்சனும் எ று

மரத்தாற்சேர்த்தலினாலே மரக்கோவையெனக்கப்பற்கோர்காரணப்பெயராயிற்று [௮௧]

அகத்திற்பன்பறுத்தாடகத்தாசையான்
முகத்திற்பண்பைமுகிழ்த்தவித்துடன்
சகத்திற்காளையர்தம்மைமயக்குவார்க்
குகப்புச்செய்தவடோள்புணருனனும்

எ து உள்ளத்தின்கணன்பின்றியொழித்துப்பொருளாசையினன்முகத்திற்கண்மலர்ச்சியைத்தோற்றுவித்தலோகவிதத்தினாலேபூமியின்கணிளைஞராயுள்ளோரைமோகிப்பிக்கும்வேசைகளுக்குச்சந்தோஷத்தைச்செய்தவர்கள்தோளிணையைக்கூடிக்கிளைமையுடையோனும் எ று [௮௨]

தபதிகாருகன்கொல்லன்றனமனைக்
குபகரிப்பவனன்றேட்டினானல்வழி
யபகரிக்கும்பிணியறப்பானெனு

மிவருங்கூலியருங்கபடெய்திடின் ❋

எ - து சிற்பாசாரியு, மீரங்கொல்லியுங், கொல்லனு, மிராசாக்களுக்குத்திரவியங்களையாதாயமாக்கிக்கொடுப்பனென்றிராசகாரியம்விசாரிக்கப்பொருந்தினேனுஞ், சரீரபலத்தைக்கெடுக்கும்வியாதியைத்தீர்க்குமருத்துவனுங், கூலியாளருமாகவிவர்களறுவருந், தந்தஞ்செய்தொழில்களிலேவஞ்சகஞ்செய்வாராயினவர்களும் எ - று (அங)

வேலைதோறும்வினைசெயவேண்டியே ❋
கூலியென்றிமைமெய்க்குக்கொடுத்திடான் ❋
சாலவுண்ணுஞ்சழக்கனுந்தாமத ❋
வேலைமூவைந்திற்பின்னுணும்வீணனும் ❋

எ - து காலந்தோறும் அதற்கேற்றசற்கன்மஞ் செய்யும்பொருட்டுத்தன் சரீரத்துக்குக்கூலியென்றுண்டியைக்கொடாமலுண்டிச்சுவைவிருப்பினலேபுருஷாகாரத்துக்குமேல், மிகவுமுண்ணும்பொல்லாமனத்தையுடையோனு, மிராத்திரிகாலம்பதினைந்துநாளிகைக்குமேற்பொசிக்குமில்வாழ்வானுசியவவத்தனும் எ - று மூவைந்தென்று, அர்த்தயாமத்தைக்கருதுகையால், அர்த்தயாமம் பதினொன்றேகாலுக்குமேலெனச்சொல்லவும்படும், எனவே, ஒருசாமத்துக்குள்ளேபொசித்தல்சிறப்பெனவறிக (அச)

ஆறிலொன்றுகடமைகொள்ளாததி ❋
னேறவேகொளுமீடிலிறைவனு ❋
மூறுசெய்திடுவானுமுலகினை ❋
வேறுவேறுதன்னேவல்விதத்தினும் ❋

எ - து ஆறிலொன்றுகடமைகொள்ளாமலதனிலதிகமாகக்கொள்ளுநன்மையில்லாதவரசனும், தன்னேவல்விதங்களினலேசேனைகளாயுள்ளோரையும், அதிகாரிகளையுங்கள்வரையுங்கொண்டுதேசத்துக்குநானாவிதமாகத்தீங்குசெய்விக்குங்கொடுங்கோன்மன்னனும் எ - று (அரு)

இத்தகைத் தவிறைவனிருந்தி ❋

மைத்தொடுகவரக்கருதிய *
சித்தமேயிடச்சென்றிரந்தேகொளும் *
பொய்த்தவம்புரிபூசுரன்றனுமே *

எ - து முற்கூறியவிந்தக்கொடுமைகளோடுகூடியகொடுங்கோன்மன்னன
து திரவியத்தைப்பாகாரென்றுவெறுமலதனைவாங்கக்கருதமானசமிருதியாலவன்
பாற்சென்றிரப்பவனாகூறிவாங்கும்பொய்த்தவத்தைச்செய்யாநின்றபிராமணனும்
எ - று (௮௬)

சோரன்றன்னைத்துயக்கமனத்தினாற் *
சோரனன்றெனக்கூறுந்துரிசனுந் *
சோரனல்லனைச்சூட்சியிரப்பிறாற் *
சோரனென்றுதுணிந்திடுந்துட்டனும் *

எ - து பூசமற்றமனத்திருலேகள்ளனைக்கள்ளனல்லவென்றுவிடும்பொல்லா
தவேந்தனு, மாராய்ந்துவிசாரியாத அறிவின் மையாற்கள்ளனல்லாதவனைக்கள்ள
னென்றுக்கினைபண்ணுங்கொடுங்கோன்மன்னனும் எ - று (௮௭)

சோரனுக்குத்துணைச்செலுந்துட்டனுஞ் *
சோரவித்தைகள்சொல்லுந்துரிசனுந் *
சோரனைச்சோரனென்றறிந்துந்துனுந் *
சோரனுமவனைச்சுரியானுமே *

எ - து கள்ளன்திருடுமிடத்தவனுக்குத்துணைப்போனதீயோனு, மவனுக்கு
க்களவுநூல்களையுபதேசிக்கும்பொல்லாதவனும், கள்ளனைக்கள்ளனென்றறிந்து
மவனோடுகூட்டுச்செய்யுங்கள்ளனும், அவனைக்கண்டாலித்தொழில் செய்யாதே
யென்றுகோபியாதவனும் எ - று
சோரவித்தைகளாவன, மந்திரந்தெய்வமருந்தேநிமித்தந் தந்திரமிடனேகாலங்
கருவியெனவெண் விதமாயிருக்கும்இதனைச் சிலப்பதிகாரமுதலிய நூல்களிற்கா
ண்க (௮௮)

எந்திளந்தடங்கொங்கையைபின்புறங் *
காந்தளங்கவக்காரிகைதோளினை *

தோய்ந்தசோரனைத்தொட்டுத் துயர்செயா *
வேந்தனும்மனைச்சோரனில்வேறலன் *

எ - து ஆபரணங்கள் தாங்குமிழுமைத்தன்மையுடையபெரியமுலையினையுடையாளைக்கூடிமனமகிழ்ச்சிபொருந்துங்கணவன்பிரிந்தகாலத்தந்தமனையாளுடையதோளிணையைப்புணர்ந்தகள்ளனைப்பிடித்துத்தண்டஞ்செய்யாதஅரசனும் பிறர்மனைச்செல்லுங்கள்ளனில்வேறாகானுதலாலர்தவிராசாவும் எ - று (௯௯)

பாலெநெய்யைப்பலத்தைத்திலத்தினைச் *
சாலியாதியன்ஞாதியைத்தண்புனன் *
மூலமாதிமுதிரையிறுதியைச் *
சேலையோடுபட்டாடைதிருடனும் *

எ - து வெளி - மூலம் - கிழங்கு - முதிரை - துவரை (௧௰)

பரியகம்பளந்தன்னையும்பாசமும் *
வரியவூனும துவுந்தயிலமும் *
திரணநீறுசெறிந்தசில்பண்டமுங் *
கரமுறப்பற்றிக்கொண்டிடுங்கள்வனும் *

எ - து வெளி - பாசம்-கயிறு-வரியவூன்-ஆகாதெனவரைந்தவூன் (௧௧)

சத்திரந்தனைப்பாதுகைதன்னையும் *
வித்தரித்திடும்பாயின்விதத்தையுங் *
கொத்துலாமலர்க்கூடையும்பேழையு *
மத்தமுட்டியெடுக்குமவலனும் *

எ - து வெளி - கொத்துலாமலர்க்கூடை - திருப்பூக்கூடை - அத்தம் - கை (௧௨)

சங்கமாதிசலத்திற்சனித்தவும் *
வங்கமாதிமரத்தின்வகுத்தவு *
மங்கலத்தமழலைமுழவமு *
மங்கையாற்பற்றிக்கொள்ளுமவலனும் *

எ - து சங்குமுதலாகநீரின்கட்பிறந்துள்ளனவுங், கப்பன்முதலாகமரத்திற்பண்ணியுள்ளனவு, மங்கலவாத்தியமானமழலைச்சொல்லையுடையமத்தளமுமானவிவைகளையுந், திருடுமவத்தனும் எ - று (௧௩)

சயந்தன்னைப்ரும்பினைச்செம்பினைத் ❀
தேயனுந்திரபுத்தனைச்செங்கலை ❀
மாயவார்க்கையர்தங்கண்மனைபினு ❀
மேயுமேறுமெடுக்குமிழுதையும் ❀

எ - து — வெளி — தேயன் எ - து திருடன் - திரபு - எ - து - பித்தளை - இவைகள்வடமொழி (௧௪)

பிறர்பொருட்கடுகிற்பிளவாயினு ❀
மறையநின்றதனைக்கொளும்வஞ்சனு ❀
நிறையறக்கொளவெண்ணிடுநெஞ்சனு ❀
மறையுமாதனுமன்னியர்க்காகவே ❀

எ - து பிறர்க்குரியபொருள்களைக்கடுகிற்பாதியாயினுமவர்காணுவண்ணஞ்சென்றுதிருடுங்கள்ளனு, முத்தமமானநிறையென்னுங்குணநீங்கப்பிறர்பொருளைக்கைக்கொள்ளும்படிவிசாரிக்குமனத்தையுடையோனு, மொருவன்பொருளைப்பிறர்க்காம்வண்ணஞ்சொல்லுமறிவில்லாதோனும் எ - று (௧௫)

என்றுமித்தொகையாவருமீங்கியற் ❀
பன்றுபாவக்கடலிடைப்பட்டுளா ❀
ரின்னபேதத்துரிசுமியற்றிடிற் ❀
பின்னுவார்துயர்ப்பேதையர்தாமுமே ❀

எ - து இவ்வணஞ்சொல்லப்பட்டவிந்தப்பாவவிதத்தொகையிலுள்ளோரெல்லோருமிவ்விடத்திந்தவியலின்கண்விதித்தவுபபாதகத்திற்றண்ணியபாவமாகியகடலின்கணமிழ்ந்தும்பாவிகளாவோர், பின்னற்றெழில்பொருந்தியநீண்டவளைக்கத்தினையுடையமடவார்களுமுற்கூறியவிந்தப்பாவபேதங்களானதீமைகளைச்செய்வாராயினத்தன்மையுடையபாவிகளாவோர் எ - று பாவக்கடலிடைப்பட்டுளார் எ து நடுநிலைத்தீபகம் (௧௬)

மேலதிபாதகமுதலிய கன்மங்களைச்செய்தோர்பெறும் பயனுணர்த்துகின்றார்.

ஈட்டுமிந்தவினைத்தொகையாவையு *
மீட்டிடும்படிவெய்யநமன்றமர் *
காட்டிடுந்துயராக்கைகலந்துபோய் *
வாட்டுமாநிரயத்துள்வநிவரே *

எ - து அதிபாதகர்முதலாயினோரிவ்வண்ணஞ்செய்யுமிந்தவதிபாதகமுதலிய கன்மபலங்களெல்லாவற்றையுமொழிக்கும்படிகொடியயமதூதர்களுண்டாக்குந் துன்பவுடலாகியயாதனாசரீரத்தையடைந்துசென்றுதுக்கத்தைக்கொடுக்குநரகத்தின்கணிருப்பர் எ று (௬௭)

மானிடரேயன்றித்தீமைசெய்தவிலங்குபறவைகளு
நரகமடையுமென்பதுணர்த்துகின்றார்

மைந்தர்மாதருமற்றையலியுமோ *
பந்தபாசவிலங்கும்பறவையு *
மூந்தவாக்கைபிதுவெனமுன்னுறு *
மந்தவாக்கையடைந்தகன்றுழுமே *

எ - து ஆணச்சாயுள்ளோர்பெண்ணச்சாயுள்ளோரலியச்சாயுள்ளோர்மாத்திரமோநரகத்தின்கணழுந்துவது, அவர்களையல்லாதபாசபந்தத்தையுடைய மிருகங்களும்பறவைகளுமுந்தவுண்டானவுடம்புபோலெதிர்வருமந்தயாதனாசரீரங்களைப்பொருந்திப்பூமியின்கணெடுத்தவச்சினின்றுநீங்கிநரகத்தின்கணழுந்தும் எ - று (௬௮)

முற்கூறியஅதிபாதகமுதலியபாவபலங்களைக்கொடுப்பவன்யமனென்றுஞ்சிவபத்தர்கள்செய்தபாவ பலங்களையாசாரியன்பிராயச்சித்தத்தாற்போக்குவனென்றுமுணர்த்துகின்றார்

விண்ணுளார்நரர்மற்றைவிலங்குமே *
பண்ணுபாவபலத்தைக்கொடுப்பவன் *
றிண்ணமேயமன்றேசிகன்றீர்த்திடும் *
பண்ணிற்பாவமிதஞ்சிவபத்தரும் *

எ - து தேவர்களு, மானிடரு, மிவர்களல்லாதமிருகங்களுந், செய்யுந்தீ

வினைப்பயனைப்பாவகருக்குக்கொடுப்பவன் யமராசன், சிவபக்திகளையுள்ளோர்பாவங்களைச்செய்வாராயின் அந்தப்பாவபலங்களையாசாரியன் பிராயச்சித்தசாத்திரங்களாலேபோக்குவனிதுநிச்சயம் எ - று
திண்ணமென்பதனையிருபாலுங்கூட்டுக (௧௧)

வெளிபாதகப்பாவஞ்செய்தவன்மாக்களையிராசாத்
தண்டிப்பனவனாற்றண்டிக்கப்படாதோரையமனே
தண்டிக்கப்படுவனென்றுணர்த்துகின்றார்

பிணக்கந்தன்னையும்பெற்றவர்தம்மிடைக் ✽
கணக்கிலாரையுங்கள்வர்கடம்மையும் ✽
வணக்குவான்மன்னன்மற்றையர்தங்களை ✽
யிணக்குவானரகத்துறியமனே ✽

எ - து ஒருவர்க்கொருவர்வழக்கின்கண் மாறுபாட்டைப்பெற்றுவந்தவிடத்து அழிவழக்குடையோரையுஞ்சோரர்முதலாயினோரையுந்தண்டித்துநிறுத்துமவன் ரசனே, அவனாற்றண்டிக்கப்படாதோரையுமாசாரியராற்பிராயச்சித்தப்படாதோரையுநரகத்தின்கட்செலுத்தித்தண்டிப்போனியமதருமராசன் எ - று (௱)

இந்தபாவங்கள்தீர்த்துக்கோடற்குப்பரிகாரஞ்செ
ய்துகொள்ளுமாறுணர்த்துகின்றார்

ஆதலாற்செய்ததீங்கையறுத்திட ✽
வேதமாதிவிதியும்விளங்கிய ✽
போதகன்பதம்போற்றவவன்செயும் ✽
வாதியாதபிரத்தியவாயமே ✽

எ - து தீவினைசெய்தோர்க்குநரகமும் அந்நரகத்தின்கட்செலுத்துமொரு இயமதருமராசனுமுண்டாகையினாலே, ஆன்மாக்கள்தாந்தாஞ்செய்தபாவங்களையொழிப்பதபொருட்டாகவேதமுதலியநூல்களிற்சொன்னவிதிகளையுமறிந்தவாசாரியனதுதிருவடியைவணங்குவாராயினாசாரியனுமந்தவான்மாக்களைத்தீவினைகள்வருத்தாமைக்குக்காரணமானபரிகாரத்தைச்செய்துதீர்ப்பன் எ - று (௱௧.

மேன்முடிந்ததைமுடித்துணர்த்துகின்றார்

வேறு

அதிபாதகமுமதிற்பிரிவுமவலமகபாதகமைந்தும் ✽
கதிதமகபாதகந்தன்னிற்கனிட்டமானபாதகமு ✽
மதனிற்றனியவதற்கனியவுபபாதகமு மதற்கனிய ✽
வதனிற்றனியபலபாவவிதமுந்தொகைசெய்தறைந்தாமே ✽

எ - து அதிபாதகமுமந்த அதிபாதகபேதமுந்தன்பத்தைவிளக்கும்பஞ்சமாபாதகமுஞ்சொல்லப்பட்டவந்தப்பஞ்சமகாபாதகத்திற்றண்ணிமையானபாதகமுமந்தப்பாதகத்திற்றண்ணிமையுடையவாயதற்கபித் தவுபபாதகமுமந்தவுபபாதகத்துக்கடுத்திருப்பனவாயதனிலுந்தண்ணிதானநாலுவிதமானபாவபேதங்களையுமிவ்வியலின்கட்டொகுத்துச்சொன்னோமிதனைமுனிவனேயறிவாயாக எ -று. கதிதம், வடமொழி (௱௨)

வேறு

என்றுசிவலிங்கையெழுவாய்வினையிசைத்தான் ✽
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ✽
வென்றுபுலனைந்தினையும்வெப்பவினைநைய ✽
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே ✽

எ - து வெளி (௱௩)

சிவத்துதியுணர்த்துகின்றார். வேறு

கன்றியகாலனைக்காய்ந்தவனேகருவினைப்போக்கிருக்காய்ந்தவனே ✽
வென்றிவில்வேடனைவீட்டினனேவிரும்படியார்க்கருள்வீட்டினனே ✽
யன்றிருவர்க்கரிதாயவனேபண்டமுமாக்கியதாயவனே ✽
யொன்றியவெங்கணுமுற்றவனேயுணர்ந்தனனுன்னையுமுற்றவனே ✽

எ து மார்க்கண்டனைக்கோபித்து வந்தஇயமனைச் சங்கரித்தோனே; ஆன்மாக்களுடையஅஞ்ஞானத்தைநீக்கும்வேதத்தை முனிவரறியும்வண்ணஞ்சொன்னோனே;வெற்றிபொருந்தியகருப்புவில்லினையுடையவேளானகாமனைக்கொன்றோனே தன்னைவிரும்புமடியார்களுக்குக்கொடுக்கு முத்தியையுடையோனே.படியுமுடியுந்தேடியகாலத்தரிபிரமரிருவர்க்குங் காணுதற்கரிதாய் நின்றோனே; யண்டங்களையுண்டாக்கியவுலகமாதாவானோனே. யெப்பொருளுந்தானொருவனென்றுசொல்லும்வண்ணமெவ்விடத்தும் வியாத்தியினாலே வேறறப்பொருந்தி நின்றோனே,யெவரொவரிருவினைசெய்யக்கருதின நினைவையு முயிர்க்குயிராயிருந்தவரவர் நினைக்குமுன்

னையதிர்ந்தா ஞானதவத் தோனே எ - று

அண்டமுமென்றுமும்மை பிண்டமுமெனவெச்சத்தின்கண்வந்தது [௱௪]

இதுவுமது

இடுபலிகொண்டுணியென்பவனேயிருவினைதீர்த்திடுமென்பவனே ✽
நடநவிலுந்தொழிலல்லவனேநாசமுமாமயனல்லவனே ✽
மடலவிழ்கொன்றையமாலையனேவந்தனையாஞ்செயுமாலயனே ✽
படிதலிற்காசிப்பதியவனேபல்லுயிர்க்கெல்லாம்பதியவனே ✽

எ - து இருடிகள்மாதரில்லந்தோறுமிடாநின்றபலியினைப்பெற்றுண் பே ரென்றியாவருஞ்சொல்லப்படுவோனே, நல்வினைதீவினையிரண்டினையுநீக்குமென்றுடையவிறைவனே, பஞ்சகிருத்தியமாகியநிருத்தம்பயிலுநற்றொழிலையுடையோனே, பிறப்பிறப்பினையடையும்பிரமாவல்லாதோனே; யிதழ்விரியநின்றகொன்றைமாலையையுடையோனே, யாம்பூசனைசெய்யுந்திருக்கோயிலின்கணுள்ளோனே, பூமியின்கட்பொருந்தியகாசிப்பதியையுடையோனே, பலவாகியவான்மாக்களுக்கெல்லாங்கருத்தாவாயுள்ளோனே எ - று (௱௫

குமாரத்துதியுணர்த்துகின்றார்

வேறு

பூதிபூடணன்வேதபாடணன்பூவைசூடினன்காளியூடின ✽
னாதிநாயகன்பேதைநாயகனுமைபூணினன்வாய்மைபேசினன் ✽
போதன்மாதவனாடினேடவும்பூணவேணயங்காணொணாவரன் ✽
காதன்மாமகனாறுமாமுகன்காசில்வாசகம்பேசுவாமரோ ✽

எ - து திருநீற்றையேயாபரணமாகத்தரிப்போருமாய்வேதத்தையருளிச்செய்வோருமாய்ப், பூவைமலரைத்திருச்சடையிலேசூடுவோருமாய்க்; காளியுடனேவாதுசெய்வோருமா, யாதிகருத்தாவுமா, யுமைக்குக்கணவருமா; யாமையோட்டையாபரணமாகவணிந்தோருமாய், வேதாகமங்களைப்பாடுகாப்போருமாய்த், தாமரைமலரின்கணுறையும்பிரமாவுந், திருமாலுந், தம்முண்மாறுகொண்டுதேடவுமவர்கள், கண்ணிற்பொருந்தும்வண்ணநில்லமைபொருந்தியதன்மையைக்காணவொண்ணாதவருமாயிருக்கிறசிவனுடையகுமாரனை ஆறுமுகக்கடவுளினதுகுற்றமற்றதிருவாக்கைப்புகழாநின்றேம், எ - று (௱௬)

மேலகத்தியதுதியுணர்த்துகின்றார்

ஆறுசூடினனீறுமாடினனாலநீழலன்மூலஞானமூல ❀
னேறதேறினன்கீறுகூறைய னீறிலாதவன்றேறிலாதவன் ❀
மாறிலாவரன்வேறிலாவரன் வாய்மைபேசினன்றீமைகூசினன் ❀
கூறுமாகமந்தேறுமாதவன் கோயிலாவதென்கோவுளாவுமே ❀

எ - து கெங்கையைத்தரித்தோனுமாய்த் திருநீற்றைத்திருமேனியெங்கும்பூசியோனுமாய் வடவாலின்கீழிருப்போனுமாய் மாரிங்கூரில்ஞானமூலமுதலினடியிலேயிருப்போனுமாயிடபத்தின்கணேறுவோனுமாய்க் கிழிக்கப்பட்டகோவணவாடையையுடையோனுமாய் நாசமில்லாதவனுமாயா ராயிலெவற்றையும் விளக்கும் ஞானநித்தியனுமாய் வணங்கினோர்க்குமாறுதவரத்தைக்கொடுப்போனுமா யெவற்றிற் றமன்னியமரகாமற்கலந்து நிற்குஞ்சங்காரகருத்தாவுமா யுண்மைப் பொருளையுபதேசிக்குமாசாரியனுமாய்த்தன்னையடைந்த வான்மாக்களுக்கு த்தீமைசெய்யநாணுவோனுமாயிருக்கிறசிவனருளிச்செய்த திவ்வியாகமத்தையுள்ளபடியறிந்தபெரியதபோதனனாகியஅகத்தியமுனிவனுக்கு என்கண்ணுநாவுமே யெழுந்தருளியிருக்குந்திருக்கோயில் எ - று கோ எ து கண் (௱எ)

ஆறாவதுபாவவியலுரைமுற்றும்

ஏழாவதுசுவர்க்கநரகவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின் ஒத்துநுதலியதூஉமோத்தினது பெயருணர்ப்பவேவிளங்கும், ஆயினிவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் முன்னையியல்களிற்கூறியபுண்ணியபாவங்கள் செய்தோரடையுஞ் சுவர்க்கநரகங்களினது திறத்தையுணர்த்திற்றாகலாற்சுவர்க்கநரகவியலென்னும்பெயர்த்து. இதனுளிந்தச்செய்யுளிரண்டுமென்னுதலிற்றோவெனினிவ்வியலிற் கூறுந்திறத்தைத்தொகுத்துணர்த்துதலாலிற்று

அறைந்தவதிபாதகமாதி யடைந்தாரியமனுலகதனைச் ❁
செறிந்துசிவந்தவிழிகண்டு சித்தங்கலங்கிச்செயலழிந்து ❁
பிறிந்துபுணர்ந்துபிலவழியை ப்பிடித்துத்தூதரடித்தெறிய ❁
மறிந்துநிரயக்குழிவீழ்ந்து வருந்தும்விதத்தைவகுப்பதன்முன் (க)

அறிகமுனிவவறம்புரிந்தா ரவருமியமனுலகதனை ❁
நெறியிற்றருமபலநிகழ நீடுமகிழ்ச்சிகூடியிடச் ❁
செறியுமுறையுமவர்க்கவனுஞ் செய்யுஞ்சிறப்புந்துறக்கத்தி ❁
லுறையுமுறையுந்தொகைசெய்தே யுரைப்பாமுலகமுவப்புறவே ❁

இவையிரண்டுமொருதொடர், முன்னையியலிற்கூறிய அதிபாதகமுதலியபாவபேதங்களைச்செய்தோர் யமலோகத்திற் சென்றியமதன்மராசனது கோபத்தினுலெசிவந்தகண்ணினைக்கண்டுமனங்கலங்கிச்செயலற்றுச்சுவர்க்கத்துக்குப்போம்வழியைவிட்டு நரகத்துக்குப்போம்பெலத்துவாரத்தையடைந்து தம்மைப்பிடித்துக்கொண்டுசெல்லும் யமதூதர்களடித்தெறிய த்தலைகீழாய் நரகக்குழியின்கண்விழுந்துவருந்தும்விதங்களை வகுத்துச்சொல்வதற்கு முன்னேபுண்ணியங்களைச்செய்தோர்களு மியமலோகத்தின் கண் முறையானே புண்ணியபலன்கள்வந்து பொருந்துகையினாலே நீடுபெற்றமனமகிழ்ச்சியுண்டாகச்சென்றடையுமுறையையு மவர்களுக்குத்த யமதன்மராசன் செய்யுஞ்சற்காரத்தையு மவர்கள் சுவர்க்கத்தின்கணிருக்குமுறைமையையுந்தொகுத்துலகத்துக்கு மேன்மையுண்டாகச்சொல்லாநின்றோம் அதனைமகாமுனிவனேயறியக்கடவை எ-று (உ)

ஆக்கைநிலையில்லாமையுணர்த்துகின்றார்

முளைத்தகருவுமழவுருவு முதிராவுருவுமுதிர்ந்தமையா ❁
விளைத்தவடிவுமெனுமிவற்றி லிருந்தவுயிர்கள்வினையிறலும் ❁
வளைத்ததூதர்வதைசெய்ய மற்றோருடலம்பற்றிமுனம் ❁
விளைத்தசெய்தீப்பலம்விளைய வியமபுரியைவிரவிடுமே ❁

எ-து கெர்ப்பகோளகையின் கட்பதிந்த கெர்ப்பமும்பாலகவடிவமு முதிராததருணவடிவமுமூப்படைந்த தன்மையிலுமெலிந்த விருத்தவடிவமுமானவிந்தச்சரீரங்களிற்பொருந்திய வான்மாக்களூழ்வினை தொலைந்தவளவில் வந்துசூழ்ந்தியமதூதர்கள்வதைக்கவிந்தப்பூதவுசரீரத்தைவிட்டு யாதனாசரீரத்தையடைந்து அவ்விடத்தின்முன்னாட்செய்த கன்மபலம்பொருந்தா நிற்பவதுவனுபவித்தற்பொருட்டியமலோகத்தையடைவர்கள் எ-று (ங)

ீ மனிதத்தமுறையானேயறம்புரிந்தோர் யமலோகத்தையடையுமுறைமையு ணர்த்துவான்றொடங்கியதனுட்பாதுகை யுதவினோரடையுமுறைமையுணர்த்துகின்றார் வேறு

பாதுகையுதவினர் பனவருமுறவே ❋
வாதமுமனபரி வரவழியுகையா ❋
வேதரியதுவென வெளிதுறவெவையும் ❋
போதகரிவரென யமபுரிபுகுவார் ❋

எ - து அந்தணர்பெறும்படிசெருப்பு மரவடியிவைகளைக்கொடுத்தோர், வேகத்தினுல்வாயுவையொத்தகுதிரை, வழியின்கண்வந்து பொருந்த வதன்கணேறிடத்திவர்க்கரியபொருள்யாதென்றுசொல்லும் வண்ணமெப்பொருளுங்கைவந்து பொருந்தி யறிவுடையோரிவரென்று சொல்லும்வண்ணம் யமலோகத்தை யடைவர் எ - று (௪)

குடைதானம்பண்ணினோரடையும்பலமுணர்த்துகின்றார்

சத்திரமுதவினர் தகைமையர்பெறவே ❋
மொய்த்தெழுமுகினிழல் வழிபுறமுறையா ❋
லெத்தொகைபினியன வவையெளிதுறவே ❋
சித்தமுமகிழ்வுற யமபுரிசெறிவார் ❋

எ - து வெளி இதனுள் சத்திரம் குடை (௫)

வத்திரதானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பட்டினையுதவினர் பனவருமுறவே ❋
தொட்டிடவினியன துகில்புனைவடிவுட ❋
னிட்டமதுறுபயன் வழியெளிதுறவே ❋
சிட்டருமிவரென யமபுரிசெறிவார் ❋

எ - து வெளி இதனுள் சிட்டர் பெரியோர் [௬]

மெத்தைதானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

தவிசினையுதவினர் தகைமையர்பெறவே ❋
புவிதனிலரியது பொருவினையொரியது ❋

சிவிகைபுகுதருவதன் மிசைவழிநிகழ்வா ❀
ரிவர்மிருதவரென யமபுரியிசைவார் ❀

எ அ வெளி இதனுள் தவிசு மெத்தை சிவிகை பல்லக்கு [எ]

அசுவதானம்பண்ணினோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

தந்துருபரியினை யுதவியதகைமைய ❀
ரந்தருபரிமிசை யருகுறவழியே ❀
யெத்திறநகையினியன வவையெயினுறவே ❀
சித்தருமிவரென யமபுரிசெறிவார் ❀

எ. அ வெளி இதனுள் சித்தர், சித்தியையுடையோர் (அ)

கட்டில்தானம்பண்ணினோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

கட்டிலைபகர்வபுருதவினர்களிறு ❀
ரிட்டமதுவமவிதென வழியிடையே ❀
கிட்டியவதசெறுடு கெழுமியவழகாற் ❀
சிட்டருமிவரென யமபுரிசெறிவார் ❀

எ அ வெளி இதனுள் கட்டிலை, கட்டில் (க)

சாலிதோப்புவைத்தோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

பொழிலினைநிறுவிய பொருவருபுகழினர் ❀
நிருவுறுபொழில்வழி நிறைமலருறவே ❀
விரைவிளவிளியன வெவையவைமிகவே ❀
யருகியரிவரென யமபுரியடைவார் ❀

எ அ வெளி இதனுள் பொருவரு ஒப்பில்லாதது விழைவு விருப்பு [ம]

திருநந்தவனம் வைத்தோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

பூமலிபொழிலினை நிறுவியபுகழினர் ❀
தேமலர்தரு முருகவனிசெறிவா ❀
மேமருமிசைவர்கள் வழியிடையெழிதே ❀
காமலிபுகழொடு நடுவினையடைவார் ❀

எ - று. வெளி இதனுள் அணி அலங்காரம் ஏமம் இன்பம் நடுவன் எ - று. ஆன்மாக்கள் செய்யும்புண்ணியபாவங்களை யேற்றக்குறைச்சலின்றியறிந்து அதின் னோக்கிடாக நரகவேதனைசெய்தலால் நடுவனென யமனுக்கோர்காரணப்பெயரா யிற்று [௰க]

தேவர்கண்முதலியோர்க்குப்பணிவிடை செய்வோரடையு முறைமையுணர்த் துகின்றார்

தேவர்கண்முதலியர் பணிமுறைசெயுமவர் ✽
ஓவியமனமட வரலியருறையே ✽
மேவிடவழியிடை மிருகளியுறவே ✽
நாவணிபுகழொடு நடுவனையடைவார் ✽

எ - று. வெளி இதனுள் ஒவியம் சித்திரப்பாவை உழை பக்கம் (௰உ)

முற்கூறியதேவர்கண்முதலியோர் சன்னிதியிற்றிருவிளக்கிட்டோ ரடையுமு றைமையுணாத்துகின்றார்

ஒளியினையவருற வுதவியவவருந் ✽
தெளிதருதிருவுரு வடைவர்கடிசைசேர் ✽
மளினமுமறவழி மருவுவர்மதியோ ✽
ரளிபுனரிவரென நடுவனையடைவார் ✽

எ - று. முற்கூறிய வந்தத்தேவர்முதலியோர் சன்னிதியிற்பொருந்த த்திபத்தி னையிட்டோர்களு மனத்துக்கெப்பொருளையுந் தெளிவித்தற்கு க்காரணமாயிருக்கி றவழகியவடிவைப்பெற்றநதவடிவிலொளியினாலெதிக்குக்களிலேயுண் டான விருளுமோட நல்லவழிக்கட் சென்றிவர் சிவனருளை யுள்ளோரென்று தம் மையறிவு டையோர்புகழுடமதன்மராசனை யடைவோர் எ - று.

மலினம் மளினமென லகார ளகாரமயக்கமாயிற்று (௰௩)

அதிதிகளுக்கில்லங்கொடுத்தோரடையுமுறைமை யுணர்த்துகின்றார்

இல்லமுமுதவின ரிரவலர்வரவே ✽
நல்லகமருவிய வழியிடைநடவா ✽
வெல்லையில்வளமுற மகிழ்வுறவெளிதே ✽
வில்லியுமிவரென யமனுறைவிழைவார் ✽

எ - து வெளி. இதறள் வில்லி, காமராசன் உழை, இடம் (௰௪)

கோதானம்பண்ணினோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

கோவினையுதவினர் குலமறையவர்கைப் ✽
பூவணிபிரதமுமுறவந்து புகுவார் ✽
ஓவியமனமட வரசியருடனே ✽
தேவருமிவரென யமபுரிசெறிவார் ✽

எ - து வெளி. இதறள் அணி அழகு (௰௫)

அன்னதானஞ்செய்தோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

அன்னமுமுதவின ரருமறையவர்பாற் ✽
றன்னிகரில்லன முறவழிதனினும் ✽
பன்னியவவைதினை யுறுமுறைபயிலா ✽
நன்னயரிவரென நடுவினையடைவார் ✽

எ - து வெளி. அன்னத்தை யனமென இடைக்குறை யாக்கினர் பன்னியது சொல்லியது நன்னயர் நல்லறிவினையுடையோர் (௰௬)

வியாதியாளர்க்கவுடததானஞ்செய்தோ ரடையுமுறைமை புணர்த்துகின்றார்

உதவினரவுடத முறுபிணியினர்கைத் ✽
திதமுறு முருவமு முறவழிசெறிவார் ✽
இதமிதமெவையவை யெளிமையினுறவே ✽
மதனனுமிவரென யமனுறைமகிழ்வார் ✽

எ - து வெளி. திதம் நிலை (௰௭)

குருபணிவிடைசெய்தோரடையுமுறைமைபுணர்த்துகின்றார்

குரவனபணிபுரி குணமுடையவர்முன் ✽
மருமலரிரதமும் வரவழியெதிரே ✽
திரமுறவதனமர் தெரிவையருடனே ✽
பொருவிலரிவரென யமபுரிபுகுவார் ✽

எ - து வெளி. திரமுற நிலைபெற [௰௮]

அந்தணர்க்குப்பாதம்விளக்கினோ ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

அருமறையவர் திருவடியிணையதனிற் ✽
பரிவொடுகுளிர்புனல் பயில்வினையவருந் ✽
தருவமர்குளிர்நிழல் வழிபெறுதகையே ✽
பொருவிலரிவரென யமபுரிபுகுவார் ✽

எ து வெளி (௰௯)

அந்தணரிடத்துச்சொன்னரத்னதிகளைத்தானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

ஒளிமணியுதவினர் கனகமுமொருமைத் ✽
தெளிதிகழ்மறையவர் திகழ்கரமதனிற் ✽
றுளையிலகனகநல் வளைவழிதுதையா ✽
வளியுளரிவரென நடுவிலையடைவார் ✽

எ து வெளி துலை ஒப்பு துளையென லகார ளகாரமயக்கமாயிற்று துதைதல் நெருங்குதல் (௨௰)

பெரியோர்களுக்குப்பாதம்வருடினோ ரடையுமுறைமை யுணர்த்துகின்றார்

உத்தமவொருமைய வுணர்வினரடியொடு ✽
கைத்தலமுறமுறைவருடிய கருணையர் ✽
தத் நுறப்பரிமிசை யழகதுதகவே ✽
சித்தசனிவரென யமபுரிசெலுவார் ✽

எ து வெளி சித்தசன் காமன் [௨௧]

அந்தணர்க்குத்தேரினைத்தானம்பண்ணினோ ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

அருமறையவருற விரதமுமருளினர் ✽
மருமலரிரதமுன் வரவழியிடையே ✽
திரமுறவதனமர் தெரிவையருடனே ✽
பொருவிலரிவரென யமபுரிபுகுவார் ✽

எ து வெளி (௨௨)

பூமிதானம்பண்ணினோ ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பூமியையுதவிய பொருவருபுகழினர் ✿
தாமுறுமினியன வழிபெறுதகையே ✿
காமினியவரொடு களியுறவளவா ✿
நாமலிபுகழொடு சிவனிலயமடைவார் ✿

எ - து வெளி காமினி தந்தமனத்துக்கொத்ததேவமகளிர் . (உ௩)

முற்கூறியவந்தணர்க்கேயன்றியாவர்க்கு மன்னபானியமுதவினோரடை யுமுறைமையுணர்த்துகின்றார்

பானமுமுதவினர் பரிவொடுபலவித ✿
போனமுமுதவினர் புரிதருமுறையே ✿
தானினிதுறவவை தலையுறுபவியா ✿
மேனையரிவரென யமதுறையிறைவார் ✿

எ - து வெளி மேனையர் மேலானவதிதிகளையுடையோர் [உ௪]

ஈண்டுக்கூறியவேயன்றி மற்றுமுள்ளதானங்கள் பண்ணினோ ரடையுமு றைமைக்குமேற்பொதுவிதியுணர்த்துகின்றார்

மற்றுளவிலைபல மருவினரவரும் ✿
பற்றுவர்வழிதனின் முறைபெறுபலமுந் ✿
துற்றவர் புயரிலர் துரிசறுநெறிசேர் ✿
நற்றவரியலென சிவனிலயமடைவார் ✿

எ - து வெளி துரிசு குற்றம் துற்றுதல் அநுபவித்தல் (உ௫)

முற்கூறியதானக்களெல்லாவற்றிலுள்ளு மன்னதானமேயதிகதானமெ னவதற்கோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்

வேறு

அன்னதானமறைந்தவற்று ளதிகபலமேயருந்தினனுக் ✿
கின்னல்கெடுந் தமப்பொழுதே யின்பந்தனையுமிசைவிக்கு ✿
மன்றுமுடலுள்வலியதனுன் மாறில்பொருளோபகதது ✿
வென்றுமுவமையிதற்கில்லை மண்ணின்கண்ணேயெவ்விடத்தும் ✿

எ - து முற்கூறியதானபேத மெல்லாவற்றிலுள்ளு மன்னதானமேயதிகமான

பல்களைக்கொடுக்கும், அந்தவன்னத்தைப்பொசித்தோருக்கக்கணத்திலேதானே பசித்துயரத்தைப்போக்குமஃதன்றிச்சுகத்தையுஞ்விளைக்குஞ்சரீரத்துண்டாயபெலமுநிலைபெறுமாதலாலந்தவன்னமேயொப்பிலாதபொருளுமாமாகையினாலேயிதற்குவமைமையபவிசாரிகளிற்பூமியின்கண்மாத்திரமோவெவ்வுலகத்திலுமில்லை-று (உசு

அன்னமேசரீரமெடுத்தற்குக்காரணமாமென்பதூஉ மன்னமேபடைத்தளித்தழிக்குமென்பதூஉமுணர்த்துகின்றார்

அன்னமதனிலாமுதிர மதனாற்றசையாமதனாலே *
மன்னுமதினசுக்கிலமு மதினமதனாற்கருவாகு *
மன்னமின்றேலுயிர்வாழு மாக்கைவிளையவழிந்தகலு *
மன்னமதுவேயுடறன்னை யாக்குநிறுத்துமழித்திடுமே *

எ து அன்னத்திலேநின்றுமிரத்தமுண்டா, மந்தவிரத்தத்தினாலேதசையுண்டாமந்தத்தசையினாலேயமுக்காகிய சுக்கிலநிலைபெறு, மந்தச்சுக்கிலத்தினாலேகெற்பந்தரித்துச்சரீரமுண்டா, முன்னர்க்கூறியவற்றிற்கெல் லாம் பரம்பரையினாலேகாரணமாயிருக்கு, மன்னமில்லையாயினுயிரிருந்துவாழுமுடம்புசடுதியிலேயழிந்துபோ, மாகையினாலேயந்தவன்னமே யுடலையுண்டாக்கு, மஃதன்றித்தானேயுணவாய்நின்றந்தவுடலைக்காக்குந் தானில்லையாயினந்தவுடலையழிக்கும்; எ று (உஎ

பசிநோயுற்றோர்க்கந்நோயன்னத்தினாலன்றிப்பிறிதொன்றினாலுந்தீராதென்பதூஉம் யாவர்க்குமன்னமே யாதாரமென்பதூஉமுணர்த்துகின்றார்

உற்றான்பசியைக்கனகத்தா லொளிசேர்மணியாலொண்டொடியான் *
மற்றுமுள்ளநல்வளனாலு மாற்றவலனோவலன்வயினாட் *
கெற்பந்தனக்கும்பாலனுக்குங் கிளர்ந்ததருணன்றனக்குமுட *
லொற்கமுடையவிருத்தனுக்கு முண்டோநிலையோதனமொழித்தே *

எ - து - வெளி - ஒற்கம் - மெலிவு - (உஅ)

முற்கூறியமானிடரேயன்றித் தேவர் முதலியோர்விரும்புவதுமன்னமேயென்பதூஉமதுவேபசிநோய்க்குமருந்தென்பதூஉமுணர்த்துகின்றார்

தேவர்முனிவர்தானவருந் திளைப்பருணவைத் தினிருப்பி *
யாவருணவைவிரும்பாதா ரிடர்சேருடலுண்மூன்றற்றெட் *
டோவா நோயுண்டவற்றன் றும்பசிநோய் கொடியதாதினைதனுக் *
காவா யென்றேயருளாள ருத்து மருந்தோதனமன்றே *

எ - து தேவர்களுமிருடிகளுமசுரர்களுந் தங்கள் தங்கள் சரீரமழியாமனிற் றற்கவேண்டியவன்னமாதியவுணவினையருந்துவர்கள், ஆகையினாலேயுலகத்தின்கண் ணேயோர்தாமன்னத்தைவிரும்பாமல்விட்டோர், ஈதுமன்றித்துக்கத்துக்குக்காரண மாய்ப்பொருந்தியவுடம்பின்கட்டொடர்ச்சிவிடாத மூன்றுற்றெட்டு வியாதியுள தாம்அதனுள்ளும்பசிநோயேமிகவும்பொல்லாதது, அப்பசிநோயையாதொருவர் பொருந்தினர்அருளினையுடையோர்தோவந்தோவென்றிரங்கி யதற்குக்கொடுக்கு மருந்தாவதுமன்னமன்றே. எ - று அன்றேயென்கிளவியாமென்னும் (உக)

மேலன்னதானஞ் செய்வோரேபிராணதானஞ்செய்வோராமென்றுண ர்த்துகின்றார்

உற்றபசிநோய்க்கன்னமருந்தை யுதவுவாருமிலராகி *
லற்றதுயிருமவ்வுடலு க்கன்னமளிப்பாரவருண்டேற் *
பெற்றதுயிருமவ்வுடலம் பெறுமவ்வுயிருந்தருமாதி *
சொற்றவையிவாறுயிரியான் றருமமுதலுந்துயக்கறவே *

எ - து யாதாமொருவர்கொண்டபசிநோய்க்கன்னமாகிய மருந்தினைக்கொடுக் குந்தாதாக்களுமில்லையாயில் அந்தவுடலுக்குயிருமில்லையாய்விடும், அன்னதானஞ் செய்வோருளராயிற் பசிநோய்நீங்கியந்தவுடம்புஉயிரைப்பெற்று வாழும், மற்றவுயி ருமறமுதலியநான்கையுஞ் செய்யப்பெறுமாகையினாலே யன்னதானஞ்செய்வோ ர்பிராணதானஞ்செய்வோரும், அதுவேயன்றிவிபரீதமறவறம்பொருளின்பவீ டென்னுநான்கினையுந்தானஞ்செய்தோருமாம். எ - று

சொ - சொற்றவையெனக்குறித்தது, வாழ்வென்பதனைத் தருமமுதலுமென் பதிற்குறிக்கட்டுக. (௨௨)

அன்னதானஞ்செய்வோரிம்மைமறுமைப்பயன்களை யடைவரென்பதூஉ ந்தபோதனர்க்கன்னதானஞ்செய்வோர் தவப்பயன்பெறுபாதியாகப்பெற்ப தென்பதூஉமுணர்த்துகின்றார்

பொன்னைமணியைப்புனையிழையை மற்றும்விரும்பும்பொருளினையு *
மன்னிமேவிப்பாரிங்கடைவ ரங்குந்தாம்வேண்டியவடைவ *
ரன்னமதனையருந்தவரை யருத்தினோர்களவர்பலத்திற் *
றுன்றுவார்களொருபாதி யவர்தாமொருபாற்றுன்றுவரே *

எ - ஆ அன்னதானஞ்செய்வோரிவ்வுலகத்தின் கண்ணேதானே பொன்னையும் ரத்னங்களையுமணியாநிற்குமாபரணங்களையுடைய மாதரையுமற்றுந்தாம் வேண்டியபதார்த்தங்களையும்பெறுவர், அந்தத்தேவலோகத்தின்கண்ணுந் தாம்வேண்டிய போகங்களைப்பெறுவர் அரியதபோதனர்களை யன்னத்தைப்போசிப்பித்தோர்கள் அவர்செய்ததபோபலத்திலொருபாதிபெறுவர்கள், அந்தத்தபோதனர்கள் மற்றவொருபாதியேபெறுவர்கள். எ - று (௫௧)

சரீரத்துக்குமதனாற்செய்யுமறமுதலியவற்றிற்கு மன்னமேமேலானகாரணமென்றுணர்த்துகின்றார்

அன்னமாக்கைதனையாக்கு மதனாலறமுன்றுளவாகு *
மன்னமதனாலனைத்திற்கு மதிககாரணமதனாலே *
யன்னமதனுக்கொப்பான காரணமில்லையாயுங்கா *
லன்னையாகுகாரணமும் புதல்வர்க்குளதோவகமிடத்தே *

எ - து அன்னஞ்சரீரத்தையுண்டாக்கு மந்தச்சரீரத்தினாலே யறமுதலியான்குமுண்டாமதனாலேவற்றிற்கு மந்தவன்னந்தானே மேலானகாரண மாகையினாலேவிசாரிக்குமிடத்தன்னத்துக்கு நிகரானகாரணமொன்றுமில்லை, யஃதெங்ஙனமென்னிற்பூமியின்கட்பிள்ளைகளுக்கு மாதாவுக்குநிகரானகாரணமுமுளதோவாதலாற்சரீரமுண்டாவதற்கன்னமும்மாதாவுமே முதற்காரணம். எ - று

காரணங் - கடனமெனக்குறுகிற்று (௫௨)

அன்னமேசிருட்டிமுதலியகாரியகருத்தாக்கண் மூவருமாமெனவுணர்த்துகின்றார்

அன்னமதனையுலகனைத்து மாக்குமயனென்றறையுமறை *
மன்னுமுலகந்தனைக்காக்கு மாயனெனவுமதித்துரைக்கு *
சொன்னவுலகமனைத்தினையுந் துடைக்குமரனுமெனச்சொல்லு *
மின்னமுறையாலேவற்றினுக்கு மிஃதேமுதலென்றெண்ணுகவே *

எ - ரு - வெளி - இருள் - முதல் - காரணம் (௬௩)

உதகத்துக்கெய்தியதோர்சிறப்புவிதியு மன்னோதகமிரண்டையுந்தானஞ்
செய்தலேயதிகபலன்களைத்தருமென்பதுமுணர்த்துகின்றார்

உதகமதனையுயிரெல்லா முண்ணவிரும்புமதனாலே *
யுதகந்தனக்குமொப்பானபொருள் வேறில்லையுலகத்து *
ளுதகமன்னமெனுமிரண்டு முயிரையோம்புமதனாலே *
யுதகமன்னமெனுமிரண்டு முதவிற்பரமபலமுளதே *

எ - ரு — வெளி ஓம்புதல் - காத்தல் (௬௪)

இவ்வனந்திறப்பித் தவன்னதானமுத லாதியவிசிட்ட
தானங்களெட்டுமற்றுமுன்னதானமுஞ்செய் தோர்,
யமலோகத்தினையடைந்தபின்னர்ச்சுவர்க்கத்தைய
டைவரென்பதுணர்த்துகின்றார்

அன்னமுதகமாவசுவமாடைகுடைகட்டிலைவபின்ன *
மென்றுமிவைகளிருநான் குமிவிற்பிறதபடியிரங்குந் *
சொன்னபடியேமற் றுமுளதானம்புரிவார்துயரகலத் *
துன்றுவார்களியமபுரியதன்பின் னடைவர்துறக்கமுமே *

எ - ரு அன்னமும்-தண்ணீரும்-யானையுங்-குதிரையுந்துகிலும், குடையும்-படுக்கைக்கட்டிலும்- புத்தகம்முதலியவாகனமு- மென்றுமித்தவெட்டுவிசிட்டதானங்களைபுஞ்செய்வார் யமதன்மராசன்,அநுக்கிரகத்தைப்பண்ணும்படிசெல்வர்கள்.அங்கிருந்தபடிமற்றுமுள்ளதானங்களைபுஞ்செய்வோர்தமதுதுக்கமெல்லாமொழிந்தீத்தபமலோகத்தையடைவர்கள், அதற்குப்பின்பல்வளங்கூடியவிருவிததானஞ்செய்தோருமவனைவழிபட்டுச்சுவர்க்கலோகத்தையுமடைவர்கள் எ-று (௬௫)

மேலிறந்தசமுத்திரபாலை பரம்புரிந்தோர்க்கியமதன்ம
ராசன்செய்யுஞ்சிறப்பைமூன்றுசெய்யுளாற்றொகமா
கவுணர்த்துகின்றார்

வேறு

தருமசிந்தையர்கடருமராசபுரியடையவேதருமராசனும் *
விரையவேயவனாபெருங்கோளாவரவுமினவியேகருணைவிழைவினொ *
லரியவாதனமுமருளியேபுதகவிநியுமாநிடவேந்தமு *
மொருமைமேயாடவர்தமுளமுமோதைபுறவுதவியேமதுரவுணாயுமே *

எ - து வெளி

அரியவாதனம் - சிங்காதனம் - உதகவிதி, பாத்தியாசமனூர்க்கியம் - அதிநடுவந்தம் - பாதமுகஞ்சிரசு (௫௬)

வேதமாதிதனிலோதுநீதிபலமேவினீரொருமைமேதையா *
லாதலாலுமையலாதுதேடினருமாறுபிர்க் குறுதியாவரோ *
நாதகீதநவின்மாதர்சூழநடமாடவேறுசிலர்நாண் மலர்ப் *
போதுசேர்ரதமேறியேகடிதுபோமினீரமரர்போகமே *

எ - து வெளி — மேதை-யறிவு - போகர்தருமிடத்தைப்போகமெனக் கூறியதுபொருளாகுபெயராயிற்று (௫௭)

எண்ணியாதொருபலத்தைநிரயமியற்றினீர்தவறுமின்றியே *
நண்ணியேயதனைவிண்ணின்மிதனுபவித்துநாளுமநுமாளமுன் *
பண்ணியேயுடையபாவலேசமதுபாறவேயெமதுபாலனை *
துய்மினீர்நரகயாதனைப்பலவுமென்றவர்க்கருளுரைப்பனே *

எ - து — வெளி — லேசம் - சிறிது (௫௮)

மேலவர்கள்சுவர்க்கத்தையடையுமுறைமைபுணர்த்துகின்றார்

ஏவல்பெற்றுநமனைத்தணந்திரதமேறியேயறிவுதேறியே *
தேவர்பெற்றவிவிதேசமுற்றதுலபோகமுற்றுமுறைசேரவே *
மேவிவிட்டமுறவேபிறப்பரிடர்மேவுதற்கரியர்மெய்ம்மையே *
பாவமுற்றினர்கள்பாதளக்குழியிலேதமேவினைபற்றுமே *

எ - து இவ்வனம்யமதன்மராசனேவலைப் பெற்றுப்பின்னரவனை நீங்கிப்புட்பகவிமானத்தேறியறிவுதெளிந்துதேவர்கள்பெற்றுவாழுஞ்சுவர்க்கலோகத்தின் கணடைந்துதிகரில்லாதபோகங்களைமுழுதும்புண்ணியங்களையார்ச்சித்தமுறையே வந்துபொருந்தவவையிற்றினைப்பெற்றுத்தாந்தாமிச்சித்தபொருள்களும்வந்துகைகூடவிருந்துவாழ்வர்கள், அஃதேயன்றித்துன்பங்களொன்றும்பொருந்தார்கள். இதுசத்தியமேதேவலோகத்தின்கட்டுன்பமெய்தாதோவெனிற்பாவஞ்செய்தோர்களெய்துநரகக்குழியிற்றுன்பம்புண்ணியஞ்செய்தோர்களெய்துஞ்சுவர்க்கவின்பத்தின்கட்பொருந்துமோபொருந்தாது எ-று சுவர்க்கபூமியின்கட்டுன்பமெ

யிற்றுனடைவுராகபூமியாய்விடுமென்பதுபற் றியேதமேனிலைமைபற்றமேயெனவி ருப்பித்தனர் (௩௯)

இவ்வண்ணம்புண்ணியஞ்செய்தோர்களடையும்பயனைக்கூறிமேற் பா-
வஞ்செய்தோர்களடையும்பயனுணர்த்துகின்றார்

வேறு

புண்ணியபலங்கடன்னைப்புகன்றனம்புவியிற்பாவம் *
பண்ணினர்பலமுஞ்சொல்வாம்பருப்பதமுனிவகேளி *
நண்ணியர்பாவபேதந்நிர்ந்தவர்சிவனுமுண்டென் *
றெண்ணியரச்சமெய்தக்கெட்டிடும்போதாவென்றும் *

எ - து வாராய்பொதியமாமலையின் கணிருக்கு முனிவனே யிங்ஙனம்புண்ணி யஞ்செய்தோர்களெய்தும் பலன்களைச்சொன்னோம் இதப்பூமியின்கட்பாவஞ் செய்தோர்களெய்தும்பயனையும் நீடமித்தாயப்பாவபேதங்களையுநீங்கிச்சிவனையு முண்டென்று கருதினோர்கேட்குங் காலமேயன்றி யெக்காலமுமச்சமெய்தும்வ ண்ணஞ்சொல்லாகின்றோமதனைக் கேட்பாயாக எ - று

ஓகாரம் பிரிநிலைக்கண்வந்தது (௪௦)

பாவான்மாக்களெல்லாம் யமலோகத்தையடையுமுறைமைக்கோர்பொ
துவிதியுணர்த்துகின்றார்

கருவினுமாயிருமற்றைக்காயபேதங்கடன்னின் *
மருவியவுயிருந்தொல்லை வல்வினைமாயவச்சம் *
பெருகிடமோகந்துன்பம் பிரிந்துடற்பிரியும்போதிற் *
றருமுடற்றுங்கித்தூதர் செலுத்திடயமனிசாரும் *

எ - து கெற்பத்தின்கணிருந்துழியிரும் அதல்லாமன் மிருகபேதங்கண்முத லியயோனிபேதங்களிலிருக்குமான்மாக்களு முன்னுள்ளபிராரத்தகன்மத்தொலைத் தலாலேபயமுமோகமுந்தபாமு மேலிடாநிற்ப வெறுத்தவுடலினின்றுநீங்கியங்ஙா னிக்குந்தகாலத்திலேயுண்டாம் யாதனாசரீரத்தையெடுத்துயமதூதர்கள்செலுத்த யமலோகத்தையடையும். எ - று - அச்சம் - யமதூதராலெய்துந்துக்கம் மோகம் - புத்திரமித்திராதிகளைவிட்டுப்போகிறேமேயென்றெண்ணுமாசை - து ன்பம் - மரணவேதனை (௪௧)

மகாமேருவின்றென் பாலானவை வச்சுதமென்னும் யமலோகம் பூமிக்கு மேலிந்தனையோசனைதூரத்திலிருக்குமென்று மெல்லிய நல்வினைதீவினையோர்க்கஃது அணிமையும் தூரமுமாமாறு முணர்த்துகின்றார்

மண்டலத்தின்மேருவென்னு மலைதனிற்றென்பால் வார்ந்த ஃ
வெண்டிசையெண்பத்தாறு யிரமெனும்யோசனைந்தன் ஃ
தண்டமுந்தரித்தகையன் றங்கியயமனிசாருந் ஃ
துண்டர்கடமக்குத்தூர மணித்தறந்துன்னினோர்க்கே ஃ

எ - து எண்விளங்காநின்றவெண்பத்தாறுயிரம் யோசனையளவுபூமிக்குமேல் நீண்டமகாமேருவென்னுமலைக்கு த்தென்புறத்திசையின்கட்டண்டாயுதத்தைத்தரிக்கும்யமதன்மராசனிருந்துவாழும் யமனியென்னும் பட்டைவீடுபொருந்தும், அதுபாவிகளுக்குதூரமாயும் புண்ணியவான்களுக்குச் சமீபமாயுந்தோன்றும் - எ - று
இல்லுருபு - குவ்வுருபாய்மயங்கிற்று (சஉ)

இருத்தமுறையானே இருவினையோர் யமலோகத்தை யடையுமுறைமையு ணர்த்துவான்றொடங்குகின்றார்

சித்திரகுத்தன்சீவன் செய்திவின்மிறங்களெல்லாம் ஃ
புத்தியிலொருமைசெய்து புகன்றிடச்சமனும்போக்க ஃ
வொத்துயிர்கவருந்தூதர் வழியினுமொறுக்கவொல்லிச் ஃ
சித்தமுங்கலுழ்ந்துதீயார் செல்கைமுன்செப்புவாமே ஃ

எ - து சித்திரகுத்தனென்னுங் கணக்கன் - ஆன்மாக்கள்செய்தகன்மபேதங்களெல்லாவற்றினையுந்தன்னுடைய வறிவினாலேயெண்ணிச் சபித்திவரிவர்செய்தகன்மமிதுவென்றுசொல்லவதனைக்கேட்டிட மறுமேவுகையினாலே சென்றுபொருந்தியுயிரைவாங்காநின்ற யமதூதர்கள்பூமியின்கணின்று கொண்டுவரும்வழியினுமறுதுயர்செய்யவுள்ளமுமெலிந்தழுதுதீவினையோர்சொல்லுமுறைமையை முதற்கட்சொல்லாநின்றோம் எ - று

கலுழ்ந்து - என்பதற்கு - கலங்கியெனவுமமையும் (சங)

மேற்றீவினையோரை யமலோகமடைவிப்பிக்கும் யமதூதர்களதியல்பி னையாலுசெய்புளாறுணர்த்துகின்றார்

வேறு

மைத்திகழ்தருவளைபினைநிகர் வடிவுடையவர்வலியார் ✻
மெய்த்திகழ்தருமரணமுமுளர் விடவரவனவினையார் ✻
குத்திரவினைபலவுடையவர் குணமிலவலகொடியார் ✻
இத்தகைமையரியமன துணைவழிவிலகுதலிலரே ✻

எ - து யமதூதர்களாவோர், கருமைவிளங்காநின்றவஞ்சனபருவதத்தையொத்தசரீரத்தையுமிகுந்தபெலங்களையுஞ் சரீரத்தில்விளங்காநின்ற வச்சிராங்கிகளையும் விடத்தையுமிழாநின்றபாம்பினையொத்ததின்மைத்தொழிலினையும்வஞ்சனைத்தொழில்பலவற்றையும் பாவிகளிடத்து நன்மையில்லாததீமைகளையேவல்லகொடுமையினையுமுடையர்களாயிருப்பர்கள், இத்தன்மையையுடையதூதர்கள்யமனுடையசொல்லின்வழியைத்தப்பார்கள். எ - று

குத்திரவினை தாமாகமுன்னில்லாதுவேறொன்றையேயுவாக்கிக்கோடல் (குசா

வீரமுமுளர்வெகுளியுமுளர் விரைதலுமுளருடலத் ✻
தீரமுமுளர்சினமுதலிய செறுநெறியினர்திருமுன் ✻
னீரமுமுளரெரியுமிழ்விழியிருமையுமுளர்கரிற் ✻
கூரமுமுளர்கொடும்படையினுமிருணவலகொடியார் ✻

எ - து வீரத்தினையுந்தீவினையோர்மேல்வைத்தகோபத்தினையும்யமதன்மராசனேவியகருமங்களில்மனம்மடியாதுசெல்லும்விரைவினையும், மழியாதவச்சிரயாக்கையினையுஞ்சினமுதலியவறனைக்கெடுக்குந்நெறியையுடைய தபோதனர்கள் சந்நிதியிலிருக்கத்தினையுநெருப்பினைச்சொரியாநிற்கு மிரண்டுவிழியின்றன்மையினையும்பகைத்தோரிடத்துக்கொடுமையேசெய்யுந்தொழிலினையுந் தாமெடுக்குமாயுதங்களைப்பற்றவுமரியின யுண்ணவல்ல திறமையினையு முடையர்களா யிருப்பர்கள். எ - று (௪௫)

காலமுமிதுவெனவறியுநர் கருமமுமிவையெனவுந் ✻
சூலமுமொருகரமதனினர் சுழல்வலயமுமொருகைப் ✻
பாலகனரனொடுமறிவுறு பதமறிதர்களபயமுற் ✻
றேலமுமிடவுடலினைவிட வுயிர்கவர்வினையுடையார் ✻

எ - து முற்கூறியவந்தத்தூதர்கள் அவரவர்க்கமைத்தகாலமிதுவென்றும்

அவரவர்செய்தகன்மங்களிவையென்று மறியவல்லோருமாய்ஒருகையிலேசூலமு மொருகையிலேசுழலாநின்றபாசக்கயிறும்பொருந்தினோருமாய்ச்சங்காரகருத்தா வாகியஅரனேயுலகுபரிபாலகனென் றுணருமறிவில்லாத பதரினையொத்தமானிட ர்கள்பயப்படலறவுயிரானது டலினைவிட்டுநீங்க லவ்வுயிரினைவாங்குங்கொலைத் தொழிலையுடையோர்களுமாயிருப்பர்கள் - எ - று

பாலகன் - காப்போன் - (௬௬)

நிட்டுரதரர்வினைவழியவு நிலையிலசிலருடலைக் *
கட்டுவர்முதுகுறவமைமசி கயிறுறவிருகரமும் *
பிட்டுநிரமுமொழுநிடவிடர் பெருநிடவலறிடவும் *
வெட்டுவருயர்விணில லமரவிசிறுவரறவெடியார் *

எ . து - நிட்டூரத்தையுமிகவும்வெடித்தசொல்லினையுமுடையோரான யமதூத ர்கள்தம்மைக்கண்டவுடன் அறிவழிந்துபோகாநிற்பவும் விடாமலொரு நிலையுமில் லாதசிலபாவிகளுடலைத் திருப்பி மடக்கிவளைத்து முதுகின்கட்பொருந்த விரண்டு கையையுமுரமிகுந்த கயிற்றாற்சேர்த்துக்கட்டியுடம்பெல்லாம்பிண்டிரத்தத்தாரை யொழுகவுந் துக்கம்பெருகவும் வாய்கிடந்தலறவும்வெட்டி,யுயர்ந்த ஆகாசத்தின் கட்சுழலவெடுத்துவீசாநிற்பர் - எ - று . (௬௭)

இங்ஙனங்கூறியயமதூதர்களாலே பாவஞ்செய்தோர்கள்யமலோகத்து க்குப்போம்பொல்லாவழியையடைவதொன்றுணர்த்துகின்றார்

இத்தகைமையவியமன படரிடைவிடலில்வலியாற் *
குத்திரர்குணமறுசிறுமையர் கொடியனவினையுடையார் *
மைத்துளமுடனடலைபுமுற நயவியதுணைபறவே *
சித்திரமிகுதுயருறுவழி செறிவர்கள்பிரிவறவே *

எ - து - இந்தக்குணங்களோடுபொருந்தியவியமதூதர்கள் நீங்காதவலிசும யினாலேவஞ்சகருமாய்நற்குணமில்லாத வற்பப்புத்தியையுடையோருமாய் க்கொ டுமையையுடையனவானதீவினைகளையுடையபாவிகள் உள்ளமெலிந்துதன்பமுமே லிடநலம்பொருந்தியதுணையுமற்றுநானாவிதமாக மிகுந்ததுயரம்பொருந்தியவழிக் கணீங்காதடைவர்கள் - எ - று (௬௮)

அவ்வழியின்கணுளதாந் துயரத்தினைப்பதினாலுசெய்யுளா லுணர்த்துகின்றார்

வேறு

கண்டகமுறுநெறி செறிசிலகரிசர்கள்கதறு *
விண்டிடவினையினர் விடுமுறையறிகிலர்விழுவார் *
திண்டிகழ்ச்சிலைநுதி செறிநெறிகுறுகியசிறியார் *
பிண்டிடவிளையடி பிழையுறவிழுவர்கள்பிழையார் *

இ - ள் - தாந்தாஞ்செய்த பாவத்தினாலே பெருமுள்ளுக்களடர்ந்த வழியின்கண் யமபுரிக்குச்செல்லாநிற்குஞ்சிலபாவிகள் தந்தமுள்ளுக்கள் காலின்கட்டைப்பல வறிச்செல்லுவர், செல்லும்போதந்த முட்களைப்பிடுங்கிப்போட்டுச்செல்லு முறைமையையறியாமல்விழுந்துகிடப்பர்கள், பிழைபொருந்திய சிலசிறியார்திண்ணிமையான கூரியகல்லுக்கள்பரந்தவழியின் கணேறுகியந்த கற்கலுக்கனிரண்டு காலினுங்கிழிதைக்கதனாலே நிலத்தில்விழ்வர்கள் - எ - று (௪௬)

அளறுறுநெறியிடையடியுறவிடுமுறையறியா *
துளமுறுகிடவுடலுடலையுமுறவசையொழிவார் *
பளமுறுநெறிசிலர்படர்வர்களிடர்பலபடவே *
பிளவுறவுடன்முழுதரிகுளைசநுதிவழிபிரியார் *

இ - ள் சிலபாவிகள், சேறுபரந்தவழியின்கண் அடிவைப்பவந்தச்சேறுகாலின்றும்பிடிமுறையைக்காணுதமனஞ்சுழலச்சரீரத்துக்கத்தையடையத்தங்கள் பெலமுங்கெடாநிற்பர்கள், சிலர் ஆழ்ந்தபள்ளங்கள்பொருந்தியவழியின்கண் துக்கங்கள்பலவுமுண்டாகச்செல்லாநிற்பர்கள், சிலருடம்பெல்லாம்பிளக்கவரியாகற்குங்கூரியவாயிலையுடையநாணற்புல்லுகள்பொருந்தியவழியைநீங்காது செல்லுவர் எ - று சடிலை - துன்பம் (௫௰)

விடமுழுமுறுதடம்விரவியகலர்சிலர்மெலிவார் *
தடவரையிடைநடைதளர்வுறவுறவருதமியார் *
பொடியுறுதழல்வழிபுகுதுவர்நிலையிலர்புலியார் *
படிதுழிவிடமுழுமடைவர்கள்சிலரிடர்படவே *

இ - ள் சிலபாவிகள், செவ்வையவழியின்றிவஞ்சனைமிகுந்தவழியின்கட்சென்றுதனுற்றுக்கத்தையுறுவர்கள், சிலர்-பெரியமலைவழியின்கட்சென்றேற்றமிறக்கத்தினிலேநடைகூடாமற்கால்தளரவங்குவந்தமர்க்கோருறவுமில்லாததனியராயிருப்பர்கள், சிலர்தமக்கொருநிலையுமில்லாராய்ப்பொடிமூடாதெரியுநெருப்பிலேநடு

பொருந்தியவழியின்கட்புகுநாநிற்பர்கள், சிலர்படுகுழிமுதலியவஞ்சனைகள்பொருந்தியவழியின்கட்சென்றுதுக்கத்தையுறுநிற்பர்கள். எ - று. விஷமம்விடமமாயிற்று - தமி - தனி - புல்லியாளைப்புலியார் - என்றார் (ருக)

சரிகர்சகலமுமுறுநெறிசெறிசிலதமியார் *
வெருவுவரழனிகர்வியன்மணலிடைவழிவிழுவார் *
விளைமுளைநிறுவியநெறியிடையடிதளர்நிலையார் *
பருவரலுறுவர்கண்முளைமுளுமுறுநெறிபடர்வார். *

எ - து சிலரம்புபோலிருக்குமோடுஞ்சல்லியும்பரந்தவழியின்கட்சென்றுதங்கோர்துணையுமற்றுஅந்தவழிதொலையாமையான்நடுங்காநிற்பர்கள், சிலர்நெருப்பினைபொத்தசுடுமணல்பரந்தவழியின்கட்சென்றச்சூடுபொருமல்விழாநிற்பர்கள், சிலவொழுங்குபடவசிகளைநிறுத்தியவழியின்கட்சென்றந்தவசிகள்காலின்கட்டைப்பவதனாற்செல்லமாட்டாதடிதளருநிலையினையுடையோர்சிலர்மூங்கின்முட்கள்பரந்தவழியின்கட்சென்றவற்றினாற்றுன்பமுறுநிற்பர்கள் எ - று
நெறி — வழி-வசி-வாள் (ருஉ)

கூரிருணெறிசெறிகொடுமையர்சிலர்நிலைகுலைவார் *
காரயவரிதொடர்கனலனல்வழியிடைகலுழ்வா *
ராரழல்வனநெறியடையுநர்சிலர்நினைவழிவார் *
திரவுமறிகிலரழனிகர்சிலைசெறிசிறியார் *

எ - து சிலர்மிகுந்தவிருள்பரந்தவழியின்கட்சென்று வெளிகாணுமனிலையழிவார், சிலர்தீயொழுகக்காய்ச்சியகரியவிருப்புச்சங்கிலியின்னிக்கிடக்கும்வழியின்கட்சென்று அடியிடமாட்டாமலழாநிற்பர்கள்-சிலர்-தீக்காட்டினையுடையவழியின்கட்சென்றந்தக்காட்டுத்தீயிற்பட்டறிவழிடாநிற்பர்கள் - சிலர், நெருப்புப்போலச்சுடாநிற்குங்கல்லுகள்பொருந்தியவழியின்கட்சென்றதனை நீங்கும்வகையுந்தெரியாமன்மயங்காநிற்பர்கள் எ - று (ருங)

உடைவர்கள்பனிநனி யுறுநெறியதுதனையுறுவார் *
மிடறளவுறுமணல் விரவியகலர்சிலர்மெலிவார் *
சுடரனதுளிமழை சொரிவழிதனினிலைதொலைவார் *
வடிவறமயலுறவறளியினழல் வசமறுவார் *

எ - து - சிலர், பனிமிகவும்பொருந்திய வழியின்கணடைந்த ப்பனியினாலேயு ள்ளமுடைவர்கள், சிலர், கழுத்தளவமிழ்த்து மணல்பரந்தவழியின்கட் சென்றுவருந்தாநிற்பர்கள், சிலர்நெருப்புப்போன்ற துளியினையுடைய மழைபெய்யும்வழியிற்சென்றதனால் நிலையழிவர்கள், சிலர், வறள்நெருப்புப் பொருந்திய வழியின்கட் சென்றதம்மேனிகெடக்கலக்கமுண்டாக த்தமதுயாக்கையின் வலிகெடுவர் - எ - று (௫௪)

சிங்கமுமுறுநெறி செறிவினரறிவிலர்செயலுந் *
தங்கியபுலிவனமடையுநர் நிலையிலர்தளர்வார் *
வெங்கொலைமிருகமு முடலடவொருவழிவிழுவார் *
விங்கிடமசகமு முடலினைநினைவினைவிடுவார் *

எ - து - சிலர், சிங்கங்கள்பொருந்தியவழியின்கட்சென்றவைகள் பாய்தலினாலேசெயலுமறிவுமில்லாமன்மயங்குவர்கள், சிலர், புலிகள்பொருந்தியகாட்டின்வழிகளிற்சென்றதனாலேதஞ்செயல்கெட்டு வருந்தாநிற்பர்கள், சிலர், மற்றுமுள்ள வெவ்வியகொலையினைச்செய்யு மிருகங்களுந் தம்முடம்பினை யழியாநிற்ப ப்பிறிதொருவழியின்கட்சென்று கலங்கிவிழுவர்கள், சிலர், பிறிதொருவழி யின்கட்சென்றுபெருங்கொசுக்களுடம்பினைத்துளைக்க வருந்தி த்தம்மறிவினை யொழிவர்கள் - எ - று (௫௫)

உளவர்களுடல்குடை கிருமிகளுறுநெறியுறுவார் *
செறுகையுமுடலட வொருவழியறிவிலர்செறிவார் *
துளையுறவுடலடு சிறுபறவைகளொடுசுழல்வார் *
விளைவறவிடவரவடர்வழியயருறவிழுவார் *

எ - து - சிலர், உடம்பினைத்துளையாநின்றபுழுக்கள்பொருந்திய வழியின்கட் சென்றுவருந்துவர், சிலர், பிறிதொரு வழியிற்சென்றட்டைகள் வந்துடலின்கட்கடிக்கவதனாலேயறிவும் போய்மயங்குவர்கள், சிலர், பிறிதொரு வழியிற் சென்றுடம்பினைத்துளைக்குஞ்சிறியபறவைகள்பலவற்றினாலுங்கொத்தலைப்பட்டுண்டுஞ்சுழலாநிற்பர்கள்; சிலர் பிறிதொருவழியின்கட்சென்றுநல்வினைவினைவில்லாமையாலேநஞ்சினையுமிழாநிற்கும்பெரும்பாம்புகள்வந்து தீண்டவதனாலேசோர்வுபொருந்திவிழாநிற்பர்கள் - எ - று - (௫௬)

கடகரிதொடர்வழியழுதழுதயர்வொடுகுழல்வார் ✻
உடலடவுளியழுமொருவழிநினைவினையொழிவார் ✻
இடபமுமடர்வழியிடர்பலபடுவர்களெளியார் ✻
திடமுடைமயிடமுமடர்வழியழிவர்கள்செயலோ ✻

எ - து சிலர் - மதம்பட்டயானைகள்பாயும்வழியின்கட்சென்றந்தயானைகள்பாய்தலினாலேயழுதழுது சோர்ச்சியிற்கலங்காநிற்பர்கள், சிலர் - பிறிதொருவழியின்கட்சென்றுகரடிகள்வந்துடம்பினைக்கவ்வாநிற்பவதனாலறிவினை நீங்குவர்கள், சிலரிடபங்களெருங்கியவழியின்கட்சென்றுஅவற்றினாற்றுன்பங்கள்பலவும்பட்டவற்றினைத்தடுக்கமாட்டாமலெளியராய்நிற்பர்கள், சிலர்-வலியினையுடையகாட்டெருமைகள்பாயும்வழியின்கட்சென்றுசெயலோவழிவதுமன்றுமழிவர்கள் - எ - று ஓகாரம் - ஒழியிசைக்கண்வந்தது (௫௭)

ஒட்டகமுறுமெறியுடல்வினைகெடநினைவொழிவார் ✻
நிட்டுரமகளிருமடர்வழியழிவதுநினைவோர் ✻
வெட்டியகிசரர்மிடைவழியுடல்வினைவிடுவார் ✻
தொட்டிடவிறலுறுபிணிபலவயர்வொடுசுழல்வார் ✻

எ - று சிலர்-ஒட்டகங்கண்மிகுந்தவழியின்கட்சென்றுடம்பின்செயல்கெடவறிவழிவர்கள், சிலர்கொடுமையைச்செய்யுமிடாகினிகளாகியகுரூரமகளிர்களெருங்கியவழியின்கட்சென்றவர்கள்செய்யுந்துயராலறிவோவழிவதுசெயலுமழிவர்கள், சிலர்வெட்டிமையுடையகிராதகர்நெருங்கியவழியின்கட்சென்றுடம்பின்செயலழிவர்கள், சிலர்-பிறிதொருவழியின்கண்வலிபொருந்தியவியாதிகள்பலவும்வந்துபிடிக்கச்சோர்ச்சியினாலேயுழலாநிற்பர்கள் எ - று

வெட்டிமை - கொடுமை (௫௮)

ஊறுறவுடலிடையுணர்விலர்சரமழையுறவே ✻
கூறுறவுடல்பலகுலிசமதுறுமழைகொளவே ✻
நீறுறவுடல்கெடவொருவழியழிவதுநினைவோ ✻
தேறியவழன்மழைபலபலமுறையொடுதெறவே ✻

எ - து சிலர்-பிறிதொருவழியின்கட்சென்றுடலின்கணூறுபொருந்தவம்புமாரிசொரியாநிற்கவறிவுகெடுவர்கள், சிலர்-பிறிதொருவழியின்கட்சென்றுடம்புபல்வாகத்துணிக்கும்வச்சிராயுதங்களாகியபெருமழைசொரியவறிவழிவ

ர்கள், சிலர்பிறிதொருவழியின்கட்சென்றுவிளங்கியநெருப்புமழைகள்பலபலவி
தமாகப்பெய்துசுடுகையினாலேயுடம்புவெந்துருகவறிவுமாத்திரமோவழிவதுசெ
ய்துமழிவர்கள் எ - று (௫௯)

கடுகியவளியலைவுறுநெறிதுகளொடுகலுழ்வார் ✽
பொடிமழைபொழிவழிநிலையறவலலொடுபுகுவார் ✽
உடல்பிளவொருவழிமழைபொழிசிலையுறவுளைவா ✽
ரிடிவிழவிரமினுமிடருறநிலவுதலிலரோ ✽

எ - து சிலர்-தூட்களோடேபொருந்திவிரைந்துவாராநிற்கும்பெருங்காற்ற
டிக்கும்வழியின்கட்சென்றுகலங்குவர்கள்,சிலர்துளிமழைசொரியாநிற்கும்வழியி
ன்கட்சென்றுநிலையற்றுத்துயரொடுசெல்லாநிற்பர்கள், சிலர்பிறிதொருவழியின்
கட்சென்றுடல்பிளந்துபோம்படிகல்மழைபொழிவதனால் வருந்தாநிற்பர்கள்,
சிலர்பிறிதொருவழியின்கட்சென்றிடியுமின்னும்விழவவற்றினாலேதுயருற் றத்தா
மதிவிட்டுவிளங்குதல்போய்நிலையழிவர் எ - று (௬௰)

ஆயுதவருடமுமொருவழிபுடலினையரியக் ✽
காய்கனலினைநிகர் கடுவறல்சுடவுடல்கலுழ்வார் ✽
ஓய்வர்கள்குளிர்பனியனிலனுழலுறுவழியுளைவார் ✽
எய்வர்களினையனவிடர்பலவழியுறுமெளியார் ✽

எ. து. சிலர், பிறிதொருவழியின்கட்சென்று யுதமாரியாகவிழுந்துடம்பினைத்
துண்டிக்கவெரியாநிற்கும் நெருப்புக்கொத்த நச்சுநீர்மழைவிழுந்துடம்பினைச்சு
டவுமாற்றுமற்கலங்கிச்சோர்ந்துவிழுவர்கள், சிலர், குளிர்ந்தபனியும்பனிக்காற்று
ம்பொருந்தியவழியின்கட் சென்றவையிற்றினால், மிகவும்வருந்துவர்கள், இவ்வண
ங்கூறியவழியின்கட்செல்லுதல்வினைவலியில்லாதோ ரித்தன்மையையுடையனவா
னதுயரங்கள்பலவற்றையுமநுபவிப்பர்கள். எ. று. (௬௧)

கடுகியபரியுறவொருவழியறிசிலர்கலுழ்வார் ✽
விடுமுறையறிசிலர் விரவியகொடுமையவினையார் ✽
இடர்படுவதுழுவினைவினையெனவுளமதிலெணுவார் ✽
திடமுடையமபடர்வலிசெயவழியொடுசெறிவார் ✽

எ. து. சிலர், பிறிதொருவழியின்கட்சென்றுமிகுந்தபசிமேலிடவதனாலறிவின்

நியந்தப்பசிநிருமுறைமையை யறியாராய்க்கலங்குவர்கள், இங்ஙனம்பொருந்தி யதிமையையுடையபாவிகள், யாமிந்தத்துயரப்படுவதுமுன்செய்தபாவமென்றுதம்முள்ளத்தின்கண்விசாரியாநிற்பர்கள், அந்தப்பாவிகளெல்லாமிருந்தபெலத்தினையுடையயமதூதர்கள்வன்மைசெய்யத்துயருற்று யமலோகத்துக்குப்போம்வழிபின்கட்செல்லுவர்கள். எ-று (௯௨)

அந்தத்திவினையோரை யமதூதர்கள் கொண்டுபோம் முறைமையைப் பதினாறுசெய்யுளா லுணர்த்துகின்றார்

வேறு.

சிலரைத்தொடரிற் செறிவித்தடியிற் ✽
றலையைத்தரையிற் றகவைத்துயர்வா ✽
னொலிபிற்சரணத் தினைவைத்திகவா ✽
வலலுற்றலறக் கொடுபோயடைவார் ✽

எ. து. யமதூதர்கள், சிலதீவினையோரைக்காலின்கணிருப்புச் சங்கிலிபூட்டித்தலையைநிலத்தின்கண்ணுகவைத்துச்சங்கிலியினோடு பொருந்தியகாலிரண்டினையுமுயர்ந்த வாகாசத்தின் கண்ணுக்கி யுள்ளதகிரக்கமுமொழிந்தவர்கள்துயரத்தையுற்றுக் கிடந்தலறும்படி யிழுத்துக்கொண்டு சென்றியமலோகத்தின்கணடைவர். எ. று. யமதூதனொன்றுமெழுவாய்வருவிக்க (௯௩)

உரையிற்கொடியா ருரமிக்குடையார் ✽
நிரையத்துறுவார் தமைநிட்டுரமோ ✽
தரையிற்கவிழத்தடமார்முகமு ✽
மரையக்கொடுபோ யடைவித்திடுவார் ✽

எ. து. கொடியசொல்லினையுமிருந்த வலியினையுந்தறுகண்மையையுமுடையர்களாயிருக்கிறயமதூதர்கள் நரகத்தின்கட்செல்லுமவரான சிலதீவினையோரைநிலத்தின்கட்பெரியமார்புமுகமுங்கவிழத்தள்ளியவ்வுறுப்புகள் நிலத்தினோடுதேய்ப்பண்ணவிழுத்துக்கொண்டுசென்றியமலோகத்தின்கணடையர். எ. று. (௯௪)

நேசற்றவரோ நிலையற்றவரைத் ✽
தேசற்றவரைச்சிலரைச்செறியப் ✽
பாசத்துடலம் பறியப்பதறிக் ✽
கோசத்தமுறக் கொடுபோயடைவார் ✽

எ - து. சற்றுமான்மாக்களிடத்திரக்கமில்லாத வியமதூதர்கள் அறநெறியினில் லாதோருமாய் மறுமைப்புகழில்லாதோருமான சிலதீவினையோரைப் பாசக்கயிற் றினாலிறுக்கிக்கட்டியுடம்புவருந்துகையினாலேபதறித்துடித்துக்கோவென்றலறுஞ் சத்தந்திசையெங்குமெழக்கொண்டுசென்றியமலோகத்தின்கணடைவர். எ - று.

செறிதல் - கட்டழுந்துதல். பரிதல் - வருந்துதல். (௬௫)

சித்தந்துருகாதவரைத் திறலார் ✽
மத்தக்கரிபோ யனையார்வழியா ✽
ரத்தந்தமரங்குச முள்ளதனாற் ✽
கொத்திக்குளமுங் கொடுபோயடைவார் ✽

எ - து. தன்மத்தின்கண்மனமுருகாத சிலதீவினையோரை, வெற்றிநிறைந்தமத யானைக்கொப்பாராயதிபெலத்தினையுமுடைய யமதூதர்களானோர் தமதுகையிலி ருக்குந்துடாரியினாலேநெற்றியையுங்கொத்தியிழுத்துக்கொண்டுசென்றிய மலோகத்தின்கணடைவர். எ - று.

குளம் - நெற்றி. குளமுமென்றவும்மைமற்றுளவுறுப்புகளுமெனக் கொள்க (௬௬)

கிளைகன்னிலரைக் களவுள்ளவரைத் ✽
தளரும்படிவெஞ் சமனூதமரோ ✽
யுளைவுள்ளுறவு முடல்பின்னுறவு ✽
முளைமுள்வனமே கொடுபோய்முனிவார் ✽

எ - து. கொடியயமதூதரானோர் ஆன்மாக்களிடத்திரக்கமில்லாதோரையுங்கள் வரையும்வருத்தும்வண்ணம் அவர்களுள்ளத்திற்றுயரமுண்டாகவு முடம்புபிண்டு பின்போகவு முன்பின்முட்காட்டினுள்ளே யிழுத்துக்கொண்டுசென்றுகோபிப்பார் கள். எ - று. (௬௭)

பழுதேபகர்வார் பயில்பாவியரைக் ✽
குழையாதவரைக் குளிர்வாய்மொழியே ✽
விழையாதவரைக்கடிதேயயறு ✽
மழல்சேர்வழியேகொடுபோயடைவார் ✽

எ - து. இயமதூதரானோர், கோட்சொல்லுதன்முதலியபாவஞ்செய்தோரையு ந்தன்மத்தின்கண்மனநெகிழ்ச்சியில்லாதோரையும்பெரியோர்களதுகுளிர்ந்ததிரு

வாக்கைவிரும்பாதோராயுஞ்சடுதியிலேநிறைந்துமிகவுந்திப்புந்தவழியின்கட்கொண்டுசென்றியமலோகத்தினையடைவர் எ - று (௬௫)

அத்தத்தினையுமட ரக்கடிதே
பொத்திப்புறமேகாிறம்புகவே
துத்தத்தலறத் துவளத்துவளக்
குத்திச்சிலராக்கொடுபோயடைவார்

எ - து இயமதூதரானோர், சிலபாவிகளைவிரல்களையினையுமிருகுப்புறத்துவாங்கித்தோளொடுதோள்சந்திக்கக்கட்டிப்பாசக்கயிற்றினாலேயிறுகக்கட்டியவர்களலறவயிற்றின்கண் குலுங்கக்குலுங்கக்குத்திக்கொண்டுசென்றியமலோகத்தினையடைவர் எ - று துத்தம்வயிறு (௬௬)

சிலராக்காமுஞ்செயிவித்ததனைத்
தளையத்தொடருந்தழலைப்புனையு
முளையைச்செயிவித்தநிராமுனியா
வுளையத்தடிதேசமுனூருறுவார்

(௬௯) எ - து யமதூதர்கள், சிலதீவினையோர்களிரண்டுகையையுங்கட்டியந்தக்கையினிற்சங்கிலியும்பூணவிட்டுள்ளொருகைகளினுருவுகெருப்புப்போலன்றமுளையையுந்தடாவியதட்டியவர்களவருந்தும்வண்ணங்கோபித்துச்சடுதியிலேயமலோகத்திற்கொண்டுசெல்லுவர் எ - று (௭௰)

கண்டத்துறவேகாிறுஞ்சிலராக்
கொண்டேயுத்தலறப்புகுவார்கொடியார்
துண்டப்பிறைபோற்சுழல்வாள்பிடரிற்
புண்டுடைத்தலறச்சமனூர்புகுவார்

எ - து கொடியயமதூதர்கள், சிலபாவிகளைப்பாசக்கயிறுகழுத்திலிறுகும்வண்ணம்பூட்டியவர்கள்வருந்தியலறும்வண்ணமிழுத்துக்கொண்டுபோவர்கள், சிலராயிளம்பிறைபோல்வளைந்தகொடுவாளாற்பிடரியிலேபுண்படுத்தைத்தலறும்வண்ணம்வெட்டியமபுரியிற், கொண்டுசெல்லுவர்கள் எ - று
சண்டிச் சுழல் - வினையின்கண்வந்தது (௭௧)

நாவிற்றுளையாகடுவே மூளையு ✱
மேவக்கயிறும்விரவப்பணியே ✱
நோவித்தலறச்சிலநொய்யவரைப் ✱
பாவப்பலமூற்றெலையேபடர்வார் ✱

எ - து யமதூதராமேனோர்-சிலபாவிகளைநாவினைத்துளைத்தநடுவேமூளையுங்கட்டியதம்முடுபொருந்தக் கயிறுங்கோத்து வருந்தச்செய்தவர்கள் லறத்தீவினைப்பயன்பலிக்குமெல்லையான யமலோகத்திற் கொண்டுசெல்லுவர் . எ - று . - பண்ணி-யென்னுஞ்சொல் . பணியெனவிகாரமாயிற்று (௬௨)

துய்யத்திடையேக யிறுங்கொளுவா ✱
நையத்துயரம்பலவு நவிலா ✱
மையற்படவே மனமுஞ்சிலரைத் ✱
தெய்வச்சமனூர்புரியைச்செறிவார் ✱

எ . து . இயமதூதர்கள் . சிலபாவிகளைக்கோசத்தின்கட் கயிறுகொளுவியுடலை வருந்தவுமனமயங்கவுந்துயரங்கள்பலவுஞ்செய்து தங்கள்தேவனான யமதன்மராசனதுபுரியின்கணடைவர் . எ - று . (௭௩)

துண்டப்புடையிற் றுளைசெய்ததனிற் ✱
கண்டிக்கயிறுங்கடிதேயடைவார் ✱
புண்டைத்துறவேகவுளும்புகுவார் ✱
கொண்டக்கணமேசிலரைக்கொடியார் ✱

எ - து கொடுமையையுடையயமதூதர் - சிலபாவிகளை மூக்கின்புறத்திற்றுளைத்ததிலேபாசக்கயிற்றையுங் கோத்துக்கட்டிச் சடுதியிலேகொண்டுசெல்லுவர்கள், சிலபாவிகளைக்கதுப்புக்களிலேபுண்பொருந்தும்வண்ணந்துளைத்துக்கயிறுபூட்டியிழுத்துக்கொண்டர்தக்கணத்திலே யமலோகத்திற்புகுவர் எ - று
கட்டி - கண்டியெனவிகாரமாயிற்று (௭௪)

மூத்தத் துறவேதுளையுமூளையுங் ✱
தொத்திச்சிலரைக்கொடுபோயடைவார் ✱
சித்தத்தயர்வுஞ்செறியச்சிலரைத் ✱
துத்தத்தொடரிற்சமனூர்தொடர்வார் ✱

எ - து. இயமதூதர் - சிலபாவிகளை யுதடுகளிற் றுளையுறும்வண்ண முளையையும் அடித்திழுத்துக்கொண்டுசெல்லுவர்கள் - சிலபாவிகளைமனத்தின்கட் சோர்வுபொருந்தும்படி வயிற்றிற்கட்டினகயிற்றினோடேயிழுத்துக்கொண்டியமலோகத்திற்செல்லுவர்கள் எ - று (௭௫)

கன்னத் துளையிற்கயிறுஞ்செறியா
வென்னித் துயர்தானெனநொந்தழவே
நன்னப்புடுநற்றுணையுமறவே
தென்னற்றிசையிற்புரியைச்செறிவார்

எ - து சிலபாவிகளை யிரண்டுசெவித்துவாரங்களிலு முருவக்கயிற்றைக்கோத்திந்தத்துயர மெந்தப்பாவத்தால்வந்ததோவென்று வருந்தியழவு மதனை நீக்குதற்கோர்நற்றுணையுமற்றொழியவுங்கொண்டுசென்றுதென்றிசைக்கணுண்டாயநல்லயமலோகத்திலடைவர் எ - று (௭௬)

முகவாயுறவேகயிறும்முனியத்
தகவோவெனநொந்தழுவார்தமையே
யகமும்புறமுமழியக்கொடுபோ
யிகமுமறிவானுழையேயிசைவார்

எ - து யமதூதர்கள் கீழ்வாய்ப்புறத்துக்கயிறுபொருந்தக்கோத்து வருத்தம்பொழுதிதுமுறைமையோவென்றுவருந்தியழுஞ்சிலபாவிகளையுள்ளமு முடலு மழியக்கொண்டுசென்றிம்மைமறுமையிரண்டினுமான்மாக்கள்செய்தபுண்ணியபாவங்களையீதெனப்பிரித்தறியுந் தன்மையையுடையனான யமதன்மராசனருகேயடைவர் எ - று (௭௭)

அங்கத்தெவ்வுமழியச்சிலரைப்
பங்கித்தடைவார்பயிலத்துயரும்
பொங்கப்புலைநீர்புகர்வார்முதல்கொண்
டொங்கித்தடிவார்சமனூர்குறுவார்

எ - து இயமதூதர்கள், சிலபாவிகளைச்சரீரத்திலுள்ளவுறுப்பெல்லாஞ்சிதையும்படியறுத்தறுத்துக்கொண்டுசெல்லுவர்கள், சிலபாவிகளைத்தன்மமானது மேன்மேலுமுண்டாகவிரத்தமானது பெருகப்புகரினையுண்டிடுவான்

முதலியவாயுதங்களாற்கொண்டுகுத்திவெட்டுவார்கள்; இங்ஙனம்வழியின்கட்பெரு ந்துயரங்கள்செய்துயமபுரியிற்கொண்டணைவர்கள் எ - று.

பனிநீர் - இரத்தம் - புகர் - நோயல்வாயப் பாலெழுந்தோர்நிறம் - ஒங்கி - ஒங் கியெல்லைக்குறைகிற்று. (எரு)

இங்ஙனம்யமதூதர்கள்கொண்டுசெல்லப்பாவஞ்செய் தோர்யமபுரத்தையடைவரென்றுணர்த்துகின்றார்.

தக்கார்வரவிற்றவறேபுரிவார்
நெக்கார்வமிலார்நிலையேதுமிலா
துக்கேவலியிற்றுயர்வந்துறவே
புக்கார்விளையத்தருமன்புரியே

எ - து. தம்பாற்பெரியோர்கள்வருங்காலத்தெதிர்கொள்ளல், பணிதல், முதலி யவைசெய்யாதிகழ்ச்சிசெய்வோர்களும்யாவரிடத்துமனநெகிழ்ந்தன்புசெய் யாதோர்களுமாயதனுத்தமக்கொருநிலையில்லாதோர்களுமான்பாவிகள்செல்லும் வழிக்கண்யமதூதராலிவ்வனந்துயரங்கண்மேன்மேலும்வந்துபொருந்துதலின்மிகுந் தேயுள்ளமழிந்துசந்ததியிலேயமலோகத்திற்புகுவார்கள் எ - று. (எ௬)

இங்ஙனந்தீவினையோரைக்கொண்டுசென்றயமதூதர்கள் யமதன்மராசன்முன்சென்றறிவிக்குமுறைமையுமினிய மேலிவர்களைச்செய்யுந்திறம்யாதென்றவினவுமுறை மையுமிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வேறு.

அழியாதவாண்மையினரகலாதவாய்மையினரதிபாதகாதியழிவார்
வழியாதனாதுசலாமலிமாசுமேவினைமறவாதமாணறிவினார்
ஒழியாதவாசலெனவுழல்வார்கள்பூதலமுமொழியாதவாவியுடையார்
பழியாதபான்மையனைவருமாததூதுவர்கள்பதிபாதமீதுபணியா

எ - து. ஒருகாலுங்கெடாதவாண்மையும்யமதன்மராசன்சொல்லியவா க்கைத்தப்பாமற்செய்யுந்தன்மைப்பாட்டினையுமதிபாதகமுதலியபாவங்க ளைச்செய்வோரையுள்ளபடியறியுந்தன்மையையுமதற்கேற்குச்சொன்னநெறியி லேயவர்களையாதனைபண்ணுந்தெள்ளிமையினையும்பாவங்கள்செய்தோரைமறவா

தமாட்சிஷமைப்பட்ட வெவ்வினையுமனவாதமும் ஆட்டொழியாதவூசல்போலப் புமியி ன்கட்பிராயான்மாக்களைக்கொண்டுவருந்தன்மையினையுமுடம்பின்கணிறவாதவுயி ரையுடையநித்தியத்தினையுஞ்சிவன்முதலாயினரையிகழாதநல்வினைப்பகுதியோ ரைவருத்தாதுவிட்டுச்சீங்கமதி வினையுமுடையியமதூதர்கள் தம்மிறைவனுடைய ம தன்மராசனதுபுரத்தங்குளிவ்வனங்கு ... யாதனைமிகுந்துவருத்தம் பூத்தலும்மென்றவும்மைபால்யுமடூலாகிமுமென்வறி ... (அய)

பாவஞ்செய்பாவியர்கள்பாலெல்லைமையோவ்வாசங்கைமேவவெளிதே யேவஞ்செய்தார்வினையாவவந்துளார் வழியிலேநுண்டுள்ளார்பெரிதுமே ... கோவந்துளார்பரமனோலெங்குள்ளாரிவர்கனுறுமங்கவரியம்நுவலிர் ... தேவென்செய்வாமினியெனுவென்றுசுற்றுவர்கள்சேடஞ்செய்வாருமென்றிவ்வ

... வோரீர் ... பாவஞ்செய்ந்தீவினையோர்க்ளிட்த்து ... ங்களையேவுகை யிஞனுமும்முனையிதான பாசமெத்தள்ளிநியிலேபொருந்துகையிலுனுங் குற்றங்க ளைச்செய்தோரெனிதாகவே சடுதியிலேவந்தார்கள். இவர்கள்மிகவும் வழியிலேவா தைப்பட்டார்கள், அதனுலேயவ்விடத்திலேமிகவும்வருத்தந்தையுடையராயினர்கள் வர்கள்வேதாகமங்களிற்சொன்னவழிநடவாதவர்களாதலிலுலேகாலபாசத்தினின் றுந்தப்புதற்கெங்கே மேலானவலியுள்ளாராயினியிவர்களையாதுதெண்டஞ்செய் வோமென்றுவிண்ணப்பஞ்செய்யாநிற்பர்கள். எ - து. எவ்வம் - ஏல்லைமன்விகா ரமாயிற்று - நோல் - வலி - அநுவர்களின்னுமெமுவாய்கூறுவர்களென்னும் யனிலேயாடுமுடிந்தது (அக)

முற்கூறியதீவினையோர்வந்தயமதன்மராசனைக்கண்டவளவிலிண்டாவா ... தோர்நடுக்கமுனைந்துநின்றார் ...
வேறு
(...)
விண்டவர்கள்வேதநெறிவெய்யவினைதன்னைக்
கொண்டவர்கள்வஞ்சனையனெஞ்சினர்கொதிக்குந்
தண்டதரனைச்சமனைச்சரவுதன்னைக்
கண்டனனெனக்கலுற்வர்கண்டிடுகணத்தே

எ - து. வேதாகமவழிநடவாமை ... யிகழ்ந்தோர்களுமாய்க்கொடியதீவி னைச்செயல்களைப்பொருளென்றுட்கொண்டோர்களுமானவருஞ்சகம்பொருந்தியநெ ஞ்சதையுடையபாவான்மாக்கள் தண்டத்தைத்தரித்திருப்பானுய்க்கோபாக்கினி

யேபொங்காநிற்பானுமிருக்கிறயமதன்மராசனைக்கண்டவளவிலே நஞ்சினையுமிழாநிற்கும் பெரும்பாம்பினைக் கண்டவர்போலக்கலங்காநிற்பர் எ - று - கலுழ்தல் கலக்கம் (அ௨)

யமதன்மராசனதுதன்மையையும் அவனைக்கண்டோர்மனம் வேறுபடுந் தன்மையையு மையனையமேனியனென்னுஞ் செய்யுள் முதல், எவலருளெங்கள்பெருமானென்னுஞ்செய்யுளீறாக வொருதொடராகவுணர்த்துகின்றார்

மையனையமேனியனவாய்ந்தவுருமூன்று *
கையுடையனைக்கடியனைக்கடியருள்ள *
நையவுமிழ்வெய்யவழனாட்டமுடையானைத் *
துய்யபிறைபோலெயிறுறச்சுளிமுகத்தே *

எ - து அஞ்சனபருப்பதம்போன்றதிருமேனியையும் வலிபொருந்தியபதினெட்டுக்கைகளையு மதிகோரத்தையுந்தூய்மைபொருந்திய விளம்பிறையைப்போன்ற வெயிறுகள்தோன்றச்சுளிக்கின்றமுகத்தின்கட் கொடியோருள்ளமழியச்சொரியாநின்றவெவ்வியவக்கினிநேத்திரங்களையுமுடையனாய். எ - று (அ௩)

எற்றுபுருவத்தினனைவலியுடையமேனி *
பற்றிமுகமீதுபெறுபங்கியுடையானை *
முற்றுமயிர்பெற்றமுகமுற்றதரவோட்ட *
நிற்றலறவுற்றபுரணத்தினனைநேரோ *

எ - து நெற்றிமீதேறுகின்றபுருவங்களையும், வலியையுடையவுடம்பின்கட் டோன்றியமேனெழுந்தமுகங்களாய்நிற்குமுரோமபங்கிகளையு, நிறைந்தமீசை பொருந்தியமுகத்தோடுகூடிக்கிழுதடுமேலுதடுநேரேநிற்குந்தன்மையின்றித்துடிக்குந்தன்மையையுமுற்றிருப்போனாய். எ - று (அ௪)

மேருநிகர்நன்னதனைவீறுடையதண்டந் *
தாரகனைமற்றையதழற்படையனைத்துங் *
காரனையமேதிமிசைகாணவருவானை *
யேருடையசெய்யவுடையாடையனையென்றும் *

எ - து மகமேருவோடொத்தவுயரத்தினையும்,வெற்றியையுடையதண்டாயுதமுமற்றுமுள்ளநெருப்புப்போன்றவாயுதங்களும்முழுவதுந்தரித்திருக்குந்தன்மையி

ளேயும், யாவருங்காணக்காளமேகம்போன்றகடாவின்மேல்வருஞ்சிறப்பினையு, மெந்நாளுமழகும்பொருந்தியசிவந்தபரிவட்டத்தையேதரித்திருக்கும்மியல்பினையுமுடையவனாய். எ - று (அரு)

செம்மைபெறுமாலையதுசேர்முடியினனை ✽
வெம்மையிடியன்னகுரல்வீறுமுடையானை ✽
விம்முகடலோடுலகனைத்தையும்விழுங்கச் ✽
சும்மதனெனத்தருவனைத்தடைதடுத்தே ✽ ௩ - ௩

எ - து சிவப்புநிறம்பொருந்தியமாலைகளைச்சூடியதிருமுடியையும், வெவ்விய இடிபோன்றகுரலின்மேம்பாட்டினையுமுடையவனாகி நின்றகடலோடுலகங்களெல்லாவற்றையும்காவல்கொடுத்துவிழுங்குதற்குவிருப்பமுடையவன்போன்றிருக்குந்தன்மையையுமுடையனாய். எ - று (அசு)

விரித்தமுகின்மேனியம்மிருத்தியுமிருக்கக் ✽
கருக்கியநிறத்தினொடுகாலனுமிருக்க ✽
செரித்தபுருவத்தினுடனந்தகனுநீடப் ✽
பரித்தகொடுமைத்தொழில்செய்மாரியுமோர்பாலே ✽

எ - து பரந்தகாளமேகம்போன்றவடிவினையுடையமிருத்தியுமொருபக்கத்திலிருக்கக், கரியநிறத்தினோடுகூடியகாலனுமொருபக்கத்திலிருக்க- ஏறிட்டபுருவத்தினோடுகூடியவந்தகனுமொருபக்கத்தினிலைபெறக், கொடுமைபொருந்திய தொழிலைச்செய்யாநின்றமாரியுமொருபக்கத்திலிருக்க, அதனடுவேவீற்றிருக்குந்தேவனாய். எ - று விரிந்த - என்பதனை - விரித்த - எனவலித்தது - நீட - என்பதனைமாரிக்குங்கூட்டுக - ஓர்பாலென்பது - கடைநிலைத்தீபகம் - வீற்றிருப்பானாயென்னுமெச்சம்-வருவித்துரைக்க. (அஎ)

கருக்கியநிறத்தினர்கள்கண்டவர்களஞ்ச ✽
செரித்தவுருநெற்றியர்கணிட்டுரரரட்டர் ✽
தரித்தகரத்தினர்கள்சத்திதிரிசூலம் ✽
விரித்துடையபாசமுலக்குசமும்வேறே ✽

எ - து கண்டோர்நடுங்கும்வண்ணங்கரியநிறத்தினையுஞ்சுளித்தவுருவினையுடையநெற்றியினையுங்கொடுமையினையுமெவர்களையுஞ்சஞ்சலப்படுத்துந்தன்மையி

லைப்பேவ நூழ்நிலைச் சூலமுங்கொடியபாசக்கயிறுமழல்போன்றதொட்டிய மற்றுமு
ள்ளனவும் [அஅ]

தண்டுமிளிர்வாளொளிகொள்சக்கரமுமிக்க ✽
வெண்டிகளும்வாளியிளைதூணியெழில்விற்கோல் ✽
தண்டமிவைமற்றையதழற்படையினைத்து ✽
மண்டுதொழில்வீரதரதூதரவர்வந்தே ✽

எ - து தண்டாயுதமும் விளங்காநின்றவாளும்மொளிபொருந்தியசக்கரமும்
பேரளவுவிளங்காநின்ற, அம்புகளும்அவைவிற்றினைச்சேர்க்கப்பட்டஅம்பறாத் தூ
ணியும்அழகுநிறைந்தவில்லுமானவிவைகளு, மற்றுமுள்ளஅக்கினிபோல்தவாயுத
ங்களெல்லாவற்றையுந்தாங்குங்கையினையுடையர்களாயந்தந்தவாயுதங்களைப்ப யி
ற்றுந்தொழிலினையுமம்பட்டவிரமிக்கோராகியதூதுவர்கள்வந்து. எ - று. [அகூ]

ஏவலநுமெங்கள்பெருமானெனவிருக்குந் ✽
தேவினைவிதித்தறமதித்தொருமைசெப்பு ✽
பாவினைநமன்றனையடுக்கமொடுகண்டார் ✽
மேவலர்களென்னமனம்வேறுபடுவாரே ✽

எ - து முன்னர்க்கூறியதிறத்தினையுடையவிடமதூதர்கள்வர்தெம்முடைய
சுவாமியார்க்கள்செய்யுங்குற்றேவலருள்வாயாகவென்றுவிலக்கப்பஞ்செய்யவீற்
றிருந்தக்கடவுளாய்ச்சிவனருளிச்செய்தவிதித்திறத்தை, யேகாக்கிரபுத்திபண்ணி
யந்தவிதிப்படியேதண்டங்கள்செய்யச்சொல்லுவனின்யுடையவருமிருக்கிறயம
தன்மாராசனையச்சத்தோடுங்கண்டபாவிகள், அந்தயமதன்மாராசனுக்குச்சத்துரு
க்கள்போல, அவன்மனத்துக்குவேறுபடுவர்கள். எ - று. (கூ0)

இயமதன்மாராசனந்தப்பாவிகளைக்கோபிக்குந்திற
முரைத்தருகின்றார்.

வெறுத்தவனைநல்வினையைவெவ்வினைதன்னைச்
செறித்தவனைநோக்கியழல்சிந்தவிழிசித்தங்
கறுத்தியமனர்சரவெனக்கடிவெனத்தார்
குறுக்குவனமத்தனார்வுறக்கடிதொறுத்தே ✽

எ - து இயமதன்மாராசனல்வினைகளைச்செய்யாதுவிட்டுக்கொடிய

பாவங்களைச்செய்யவிரும்பினபாதகரைத், தனரகங்களிலேநின்றுநெருப்புப் புறப்படப்பார்த்துள்ளம்வெருண்டுநெஞ்சினையுமிழாநிற்கும்பாம்புகள்போலவும் ஆலகாலவிடம்போலவுஞ்சீறியவர்கள்தளர்வுறும்வண்ணமிகவுங்கோபித்தடர்தந்தறியாநிற்பன். எ - று [கூக]

பாவிகளானோரந்தயமனையேயன்றிச்சித்திரகுத்தனையுங்கண்டால் நடுங்குவரென்பதுணர்த்துகின்றார்

வெய்யவினைதன்னையும்விதிப்படிவிளைந்த ✽
துய்யவினைதன்னையுமறிந்தொருமைசொல்லு ✽
மெய்யுடையசித்திரநல்குத்தனையும்வீறுக் ✽
கையரவரஞ்சுவரவன்விழிகள்கண்டே ✽

எ து அந்தப்பாவிகளானோர், சிவனருளிச்செய்த வேதாகமங்களிற் கற்பித்தமுறையேயவரவர்க்குண்டானகொடியபாவத்தையுந்தூய்மையையுடையபுண்ணியத்தையுமறிந்துள்ளபடியே சொல்லுஞ் சத்தியவாக்கினையுடையநல்லசித்திரகுத்தனையும்வேறுபட்டவனுடையவிழிகளைக்கண்டு நடுங்காநிற்பர். எ று

வீற்று - எ து வீறு-என விகாரமாயிற்று. கு வீற்றும்பேதமும் விள்ளாவுந்திரிபும் வேற்றுமையுங்கொள்பவேறுபடற்பொருட்டே-என்பதனாலறிக. [கூஉ]

சித்திரகுத்தன் அவரவர் செய்தபாவங்களையெடுத்துக்கூறி யந்தத்தீவினையோர் நரகத்தினெய்துதற் கொருப்படுமாறு அறிவித்தலையுமேலந்தயமதன்மராசனுமெடுத் துக்கூறுமுறையையும்இச் செய்யுள்முதல்கன் றவெமனுதலொன் றுஞ் செய் யுள்வரையொருமுதாடராகவுணர்த்துகின்றார்

சித்திரநல்குத்தனெதிருற்றவரைநோக்கிப் ✽
பொய்த்திறமதித்தவர்கள்போதுகமுனைவீர் ✽
மத்தகளிறன்னவலிபாலுமெளியார்தம் ✽
வித்தமுதல்கொண்டவர்தமக்கிடர்விளைத்தீர் ✽

எ து நல்லசித்திரகுத் தனானவன்,தனக்கெதிரேநின் றபாவிகளைப்பார்த்துப் பாவவிதத்தைப்பொருளென்று கருதினவர்களே-வருவிராகநீங்கள்முன்னும் மத

யானையையொத்தபெலத்தினாலேயெளியராயுள்ளோருடைய திரவியமுதலானவற்றையபகரித்துக்கொண்டவர்க்குத்துக்கத்தையுண்டாக்கினீர் எ - று (௧௩)

அங்கமுமுறுமென்மையழகாலுமயலார்த
மங்கையர்கடோள்புணருமாதரவுவைத்தி
ரிங்கிவைகளும்மையகலாயாதகல்வதெங்ஙன்
சங்கையுறுமின்னிலையமுற்றுடறளர்ந்தே

எ - று அங்ஙனம் பிறர்பொருள்கொண்டதன்றி, யுமதுசரீரத்திற் பொருந்திய அதிகசவுந்திரியத்தினாலேபிறருடையமனைவியர்கள்தோளிணையணையும் வாஞ்சையும்பொருந்தியநீர் இவ்வனங்கூறியதீவினைகளுங்களுடன்கூடிநில்லாமலெங்கே போகாநிற்கு மாசையாலத்தப்பாவங்கள்திரும்வண்ணம்நரகத்திலேசென்றதனுலுடலினைத்துத்துக்கத்தையனுபவிக்கக்கடவீர். எ - று

அழகாலுமென்றதும்மையாற்றனமிருந்தியாலுமெனவறிக- சங்கை. வருத்தம் (௧௪)

உற்றவாகள்வெய்யநிரயத்துயமாயோரி
லற்பவர்களையவிலையல்லதுமாறென்
குற்றமதனைக்குணமெனப்பெரிதுகொண்மர்
நூற்றவினைஞ்சிலேயனிக்கும்பரிசொல்லீர்

எ - று ஆராயிற்கொடியநரகத்தின்கட்டுன்பத்தையனுபவித்தவர்களே பொல்லாதபாவங்களை யொழித்தோராவர், அங்ஙனம் நரகத்தையனுபவியாமற் பாவங்களொழியுமாறெப்படிதீமைகளையேநன்மையென்று மிகவுமுட்கொண்டவர்களேநீங்கள் நரகமனுபவித்தற்கிவ்விடத்திலேபயப்படுவீராயிற் செய்தபாவமெப்படிநீங்குமெனக்கதனைச்சொல்லக்கடவீர். எ - று துற்றல்- அனுபவித்தல் (௧௫)

என்றிவையவாசகமவர்க்குறவிசைப்பன்
கன்றியமனுஞ்சித்தியனாக்கிடுநோக்கி
யன்றுமனுநீதிமுறையாவையுமயர்த்தி
ரின்றுநிரயத்துயவினைப்படிதெரிசைப்பிர்

எ - றி என்றித்தன்மையையுடையநீதிவசனங்களைச்சித்திரகுத்தன் அந்தத்தீவினையோர்க்குப்பொருந்தச்சொல்லாநிற்பன் பின்பு. இயமதன்மராசனும்வெகுண்டத்தப்பாவிகளைக்கொடுமையாகப்பார்த்து முன்றுணிவுகண் மனுநெறிமுறைமையெ

ல்லாமறந்துபாவங்களையேசெய்தீர்இப்போதுநரகத்தின்கட் செல்லுதற்குமனமடிப்பதென்னதனைச்சொல்லக்கடவீர் எ - று (௬௬)

வந்திடுகமண்ணுலகமாண்டதிறன்மன்னர் ✽
வெந்துயரமேயுயிர்களுக்குறவிளைத்தீ ✽
ரெந்தமுறையாலுமிங்ஙனேதுமதுபாலே ✽
வந்துதவியானதுசொலீர்பொருண்மறித்தீர் ✽

எ - து பூலோகத்தினையாண்டவெற்றிப்பாட்டினையுடைய வீராசாக்களே, வருவீராக- நீங்கள்திரவியத்தைவிரும்பியான்மாக்களுக்குத் துன்பங்களுறும்படி கொடுமையேசெய்தீர், அங்ஙனஞ்செய்தவுமிடத்திலெந்தவகையிலேயாயினுமீண்டுவந்ததவியானதெதுதானதனைச்சொல்லக்கடவீர் எ - று (௬௭)

மங்கையர்களெங்குளர்கள் மற்றையவர்தாமு ✽
மெங்குளர்சொலீர்புரவியானைநரயான ✽
மிங்குவரயாமறியமேபகையையெற்றும் ✽
பொங்குபடையெங்கொழியவிங்கெளிதுபோந்தீர் ✽

எ - து உங்களுடையவந்தப்புறத்திலே நீங்கடுணையாகக்கருதிவைத்திருந்த மடவார்களெங்கேயிருக்கிறார்கள், மற்றுமுள்ளசுற்றத்தாருமெங்கேயிருக்கிறார்கள், அதனைச்சொல்லக்கடவீர் நீங்களாண்டகுதிரையும்யானையுமேறினசிவிகையுமிவ்விடத்துங்களுடனொக்கவரயாம்,கண்டோமில்லையேசத்துருக்களைச்சங்கரிக்குநிறைந்தசேனையெங்ஙனேவிட்டுப்போகத்தனித்துநீங்களிங்கேயெளிதாகவந்தீர் எ - று ஏகாரம் - இகழ்ச்சி (௬௮)

கன்றவெமதூதர்களசிவுற்றுமதுகாவ ✽
லொன்றுமறநீர்தனிமையோடிங்ஙனுறுந்தீ ✽
ரின்றுநிரையத்தினுளிருத்தவுமிருந்தீ ✽
ரொன்றவர்களச்சமுறவேபலவிசைப்பன் ✽

எ - து நீங்கணம்முடையதூதர்கள்கோபிக்கையினாலே வருத்தமுற்றும் முடையவாசற்காவலாயுள்ளதொன்றுந்தாங்காமற்போகத்தனிமையோடிவ்விடத்தில்வந்தீர், இப்போதுநரகத்திலிருத்தவுமிராநின்றீரொன்றுஅவர்கள்அச்சமுறும்படிபலவசனங்களையுஞ்சொல்லாநிற்பன் எ - று [௬௯]

இப்படியேயவர்கள்சொல்லவந்தப்பாவிகள்கிற்குந்திற
மீளவும்யமதன்மராசன்கண்டுசெண்டன்மகாசண்டனுக்
குச்சொல்லுந்திறமுணர்த்துகின்றார்.

மற்றவருமுன்னமுளவல்வினைகளெல்லா ॥
முற்றுணர்வினிற்பருவரையற்றுளநடுங்கா ॥
வற்றொழிபயமற்றிவரகத்திறமுன்னத்து ॥
மெற்றிடுகசண்டமகசண்டகரதென்றே ॥

எ - து இவ்வனஞ்சித்திரகுத்தனும்யமதன்மராசனுமொப்பச்சொல்லவந்த க்கொடுங்கோன்மன்னருந்தாமுன்றுட்செய்தகொடுவினைகளெல்லாந்தம்மறிவின் கட்டோன்றிச்சொல்லுதற்கொருத் தரமுமற்றுமனநடுங்கிநிற்பர்கள், மீளவும்ய மதன்மராசன்வாரீர்சண்டமகசண்டரோயிவர்கள்செய்தபாவபேதமெல்லாமனுப வித் தறுத்தொலையும்படிசந்நிதியிலடிக்கக்கடவீரென்றுசொல்லுவன் எ - று அகம் - பாவம் [௱]

யமதன்மராசன்கூறமகசண்டன்முதலாயினோ ரந்தக்கொடு ங்கோன்மன்னரைத்தெண்டிக்குந்திறமுணர்த்துகின்றார்.

ஓதநமனுற்றமகசண்டனைமுவாயர் ॥
காநியவர்பாதமிருகைகொடுபிடித்தே ॥
பேதமுறவேசுழல்பெறுத்திடுவர்விண்ணின் ॥
மீதேறிவர்பற்றிடுவரொற்றிடையிரைந்தே ॥

எ - து இங்ஙனம்யமதன்மராசனருளிச்செய்யவவ்விடத்திநிற்குமகசண் டன்முதலாயுள்ளோரந்தக்கொடுங்கோன்மன்னருடையகால்களையிரண்டுகையி னும்வாரிப்பிடித்தடித்தவர்கள்மனங்கலக்கமுறும்வண்ணஞ்சுழற்றியாகாயத்தின்க ண்ணுமெறியாநிற்பர்கள், மீளவுமவர்களையெரிதழற்கல்லின்கணடித்தற்பொருட் டாகச்சந்நிதியிலேயேற்றுக்கொள்ளாநிற்பர்கள் எ - று [௱க]

மேலவர்படுந்திறமுணர்த்துகின்றார்.

வெந்தழலையன்னசிலைமீதுகடிதெற்றிச் ॥
சிந்தவுடல்செங்குருதிசேறுபெறவூற ॥
நொந்தறவுநோலுறுவர்நொய்யவினைசெய்தார் ॥
மந்தமரமெந்தவிதமெற்றவராயுற்றே ॥

எ - து பொல்லாதவினையைச்செய்தவேந்தர்களைவெவ்வியவெரிதழற்கல் லி ன்கட்சந்நிதியிலடிக்குங்காலத்தவர்களுடம்புசிதறவுஞ்சேறுபடியும்படிவேர்தவிர

த்தம்புறப்படவுமிகவுநொம் துரமதுவலிகெடுவர், அஃதெப்படியென்னில், இளந் தளிராயுடையவிளமரத்தைக் கல்லின்மேலடித்தாலெப்படிசிதறிப்போமப்படிச்சி தறவருத்துவர்கள் எ - று கோல் - வலி - [௩௨]

அவர்களைநரகத்திலிடுந்திறத்தையிரண்டுசெய்யு
ளாலுணர்த்துகின்றார்.

அற்றவர்கள்சிந்தனையையாகமநுதன்னரி ✽
லுற்றுலவமாருதமுமுண்ணினைவுதன்னைப் ✽
பெற்றிடலுமற்றவர்கடவினையபேத ✽
மற்றகலவுய்த்திடுகதாழ்தலவழற்கே ✽

எ - து இங்ஙனமடிபட்டுச்சிந்தையழிந்துமூர்ச்சித்துக்கிடக்கும்வேந்தர்கள்த ம்முடைய சரீரத்தின்கட் டென்றற்காற்றுவந்துவீசவதனாலுள்ளுணர்வுபெற்றமா த்திரத்திலேயிவர்கள்செய்தபாவங்களொழிந்துபோம்படிக்குப்பாதாளலோகத்தி ன்கிழானவெரிவாய்நரகத்திலேபோடக்கடவீர் எ - று (௩௩)

என்றியமனேவுமுறைகொண்டவரையெல்லா ✽
மன்றியடுதூதர்கொடுசென்றவளரியின்கீ ✽
ழொன்றியவொரேழ்தலமொழித்தபுரியின்கீழ் ✽
நின்றநிரையத்திடைநிறுத்துவரொறுத்தே ✽

எ - து இப்படியமதன்மராசன்சொல்லும்வசனத்தைத்தூதுவர்கள்கேட்கொண் டு. அந்தப்பாவிகளையெல்லாம்பூமியின்கீழ்ப்பொருந்தியபாதாளலோகமேழினுக்கு ங்கீழானவுலகத்தினிலேபெற்றநரகத்திலேதண்டித்துநிறுத்துவர்கள் எ - று

அரையர்க்குச்சொல்லவேயவனுலுமுலகத்தின்கண்ணுள்ளசனங்களுக்குங்கூ றினதாயிற்று (௩௪)

மேல்நரகங்களினதுதொகைவகையுணர்த்துகின்றார்

வேறு

தொகையினாலிருபத்தெட்டுத்துக்கசாகரங்கள்சொல்லின் ✽
வகையினாற்சதமும்வாய்த்தநாற்பதுமநிக்குங்காலே ✽
யகலமுமிருபத்தெட்டுக்கோடியேயாயும்போதிற் ✽
றொகைவகையிரண்டுமிந்தநாலினுட்சொல்லுவாமே ✽

எ - று தக்கசமுத்திரங்களாகியநரகங்களைச்சொல்லு மிடத்துத்தொகையின் இருபத்தெட்டாம், அதனையாராயுமிடத்து வகையினால்நூற்றுநாற்பதாம் அதன்விரிவைவிசாரிக்குங்கா லிருபத்தெட்டுக்கோடியாம். இங்ஙனங்கூறியமூன்றிறுட்டொகைவகைநரகங்களின்பேர்களையேயிந்தநூலின்கட்சொல்லாநின்றோம் எ-று (௱௫)

நரகங்கள்பெயருமுறையுந்தடுமாறிவருவதற்கோர்வழுவமைப்புணர்த்துகின்றார்

பேதமுமுறவேயென்னும்பெயர்களுமுறையும்பேசும் ✽
வேதனைக்குழிக்கணு நிர்மலனுலொன்றுக்கொன்று ✽
பேதமுமுறவேதோன்றும்பிரளயமுடிவுதன்னி ✽
லாதலால்விரோதந்தம்மிலைவற்றிலையாயுங்காலே ✽

எ - று பிரளயமுடிந்தபின்றோன்றுஞ்சிருட்டிகாலத்திலேவேதனைசெய்யுநரகக்குழிக்குளெண்ணும், முறையும், பெயருமொன்று,க்கொன்று பேதமாகத்தோன்றும் ஆகையினுலேயனுதிநின்மலனுகியசிவனருளிச்செய்தசிவாகமம். எண்ணையும்பெயரையுமுறையையுமொன்றுக்கொன்றுபேதமாகவுஞ் சொல்லாநிற்குமதனையாராயுமிடத்தந்தவாகமங்களொன்றுக்கொன்றுதம்மில்விரோதமில்லை எ - று.
பேதமுமென்றவும்மையாற்பேதமில்லாமலுந்தோன்றுமெனவறிக (௱௬)

தொகைநரகங்களின்பெயரைநாலுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

கோரமதுதான் முதனரகங்கூறுமதன்கீழ்க்கவின்கோரங் ✽
கோரமதன்முன்னதிகூட்டிக்கூறுமதுமூன்றுநரகங் ✽
கோதரமேயதனதுகீழ்க்கோரரூபமற்றதன்கீழ்ச் ✽
சேருமதன்கீழ்த்தரளதரஞ்செறியுமதன்கீழ்ப்பயானகமே ✽

எ - து - வெளி (௱௭)

அதன்கீழ்க்காளராத்திரியேயாகுமதன்கீழ்ப்பயோற்கடமே ✽
யதன்கீழ்ச்சண்டமதுதானேயடையுமதன்கீழ்மகாசண்ட ✽
மதன்கீழ்ச்சண்டகோலாலமாகுமதன்கீழ்ச்சண்டதர ✽
மதன்கீழாகுஞ்சரோருகமேயப்பாற்சலசவதியதுவே ✽

எ - து - வெளி (௱௮)

அதன்கீழ்விமமநுதானேயப்பால்வீமவீடணமே ✻
யதன்கீழ்க்கரளம்விகரளமேயதற்குமப்பாலெனவறிக ✻
வதன்கீழ்க்குலிசமுக்கோணமைந்துகோணமதற்கப்பா ✻
லதன்கீழ்த்தீர்க்கதரமாகுமப்பாற்பரிவர்த்நுளமநுவே ✻

எ - து - வெளி (௱௯)

அப்பாலேழுநிலமதனுக்கப்பாலெட்டுநிலமதனுக் ✻
கப்பாற்றீர்க்கவொளியதனுக்கப்பான்மாயையெனவறிக ✻
அப்பாசடையன்விதியிகழ்ந்தாரழுங்குங்குழிகளெழுநான்கு ✻
மிப்பாவியலுளெண்ணுகவொவ்வொன்றிற்கோடியெண்ணுறவே ✻

எ - து - வெளி (௱௰)

முற்கூறியவிருபத்தெட்டினுக்குமொவ்வொன்றுக்கைவைந்துநாயகநரகமுண் டென்பதனையுமதன்பெயர்களையும் பதினாறுசெய்யுளால் வகுத்துணர்த்து கின்றார்

தொகையாலிருபத்தெட்டினையுஞ்சொன்னேமிவிநாயகநரகம் ✻
வகையாலறைவமதித்திடுகவைந்தைந்தாகமற்றவற்றிற் ✻
பகையேபாவமெமக்கென்றுபயந்துகொடியபாவத்தைத் ✻
தகைபார்தடுத்துநல்வினைபச்சமைக்கநலத்தைத்தாமுறவே ✻

எ - து தொகையினாலே யிருபத்தெட்டு நரகத்தினையுஞ்சொன்னோம்,வகையி னாலேயவற்றிலொவ்வொன்றுக்குநாயகநரகமைவைந்தாகவிருக்குமென்றுசொல் வாம்,அதனையறிவாயாக. அஃதேதுகாரணத்தாலெனிற் பெருமையினை யுடையோ ர்பாவமேநமக்குப்பகையென்றுபயந்ததனைச்செய்யாதொழிந்துநல்வினையைச்செ ய்துநன்மையடைகையின்பொருட்டு எ - று (௱௰௧)

வேறு

வெந்துயர்செய்ரௌரவமாரௌரவமேமிக்கதமஞ் ✻
சிந்தைகலுழநிசிதமநிவெப்பமெனத்தெரித்த ✻
வைந்தினையுமுதனிரயத்ததிபதிகளெனவறிக ✻
விந்தமுறைநாயகங்களனைத்தினுக்குமெண்ணுகவே ✻

எ - து. ரௌரவம்- மகாரௌரவம்- அதிதமம்- அநிசீதம்- அதிவெப்பமென்று

கூறியனவைந்தும் முதலினையமாகிய கோரத்துக்குநாயகங்களாமிந்தமுறையேமற்ற வ்ருபத்தேழுநரகத்துக்குமோவ்வொன்றுக்கவைந்தாகவெண்ணக்கொள்க. ௱௪ நரகப்பெயர்களையுஞ்சொல்வாம் எ - று (௱௰௨)

அதிகோரமறவுமிருடக்கனமற்றம்போசம் ✽
விதமுடையசஞ்சிவஞ்சடமாயைவிலோமமெனக் ✽
கதமுடையவிமமெனக்கடங்கடத்தோடிவைபத்தும் ✽
விதமறுதிவிரவேகங்கராளமெனவிளம்புகவும் ✽

எ - று - வெளி [௱௰௩]

விகராளம்பிரகம்பம்வெங்கமலம்விற்றுறுகம் ✽
பகவிக்குங்கரும்பாசம்பின்றபிரமருத்தனமே ✽
புகராயசூசிமுகம்புதைநேமிகாதகமே ✽
பகவுடற்பிடவங்கும்பீபாகமெனப்பகர்ந்தனவும் ✽

எ - று - வெளி [௱௰௪]

அதிபாகங்கிரகசமற்றசிதாருவங்காரங் ✽
குதிகொள்ளுமிரத்தச்சிக்குழிபிருப்புத்துண்டப்புள் ✽
கெதமாக்குஞ்சங்வருத்தங்கிரதுவழன்மயச்செங்கற் ✽
றிதநிங்கவுழுத்ததசைகிரபுவெனச்செப்பியவும் ✽

எ - று - வெளி (௱௰௫)

சோகிக்குமுச்வாசநிச்வாசஞ்சுடர்த்திரக்க ✽
மோகிக்குஞ்சுழலழல்வாள்முள்ளிலவந்துணித்துருட்டஞ் ✽
சோகிக்குநாதஞ்சுப்பிரவாகம்பிரவகனம் ✽
வேகிக்குங்காரபுருமேடமெனவிளம்புகவும் ✽

எ - று - வெளி (௱௰௬)

விறலிடபமுட்பன்றிசிங்கம்வியாக்கிரம்யானை ✽
திறனாய்சூகரமாநிதிடமேநிபிடவமச ✽
மறவெடியவிருகானமந்திரகங்கும்பிரங் ✽
கறவுளநக்கிராக்கியங்கட்டரவமெனக்கழறுகவும் ✽

எ - து வெளி (௱௰௭)

உரைத்தபெயர்பின்றுறைந்துமுனமிலையோளனரிலைப் ※
பரித்தகடத்தினைமற்றுமொருபொருளைப்பரித்திடலால் ※
விரித்துணர்வார்க்கரியென்றுசொல்லுறுபலபொருள்விளக்குஞ் ※
சுரித்தமிழித்தொகும்பொருள்களபலவுமுளதுணியிகால் ※

எ - து முன்புரைத்தபெயர்களைப்பின்புரைக்குங்குற்றமில்லைய, ஃதென் போலென்னில்அழகியவக்கினியைத்தரித்தகுடமானது கடமானவேறொருகுடமான து மற்றொருபதார்த்தங்களைத்தரித்தாலுங்குடமென்னும்பெயர்குன்றாதவாறுபோலப்பெயரொன்றாயிருந்தாலுங்குணம்வேறுபட்டிருக்கும்அஃதன்றியும்அரியென்னுஞ்சொல்லைவிரித்தறிவார்க்குப்பலபொருளைவிளக்குமதுபோலவுஞ், சுருக்குதலையுடையமடிச்சீலையென்னும்பெயரொன்றாயிருக் கவும்அவையிலிரு க்கும்பொருளை விசாரிக்குங்காற்பலவாயிருக்குமதுபோலவும். எ - று

இச்செய்யுளான்முற்கூறியதைப் பிற்கூறினுலுங்குற்றமில்லையென்றுவழுவமைதிபண்ணினொன்க. (௱௰௮)

கூர்மவுருக்கருங்காகங்கொடுங்கழுகுகடுங்கூகை ※
கார்வாயவட்டைபுலிகவிகட்கங்கண்டக்மே ※
யீர்வாய்ச்சியிரத்தவிழிபிகழ்பூதி மிருத்திகையே ※
சேர்வாயகணதூமமெனமுறைபிற்செப்பியவும் ※

எ - து வெளி (௱௰௯)

அழலுமிழ்வன்புழுக்குழியமேத்தியமப்பிரதிகரம் ※
வழுவாபுண்ணீர்த்தானம்வாய்ீர்க்கிவளஎழுளைக் ※
கழியாத்தான்றனைத்தின்னல்கலந்தனத்தமனைத்துமுனை ※
லொழியாததாருணமேயெனமுறைபிலுரைத்தனவும ※

எ - து வெளி (௱௨௰)

வேதிக்குஞ்சங்கடமேவித்தரமேமிருவிகடம் ※
வாதிக்குங்கட்பூதங்கரிநெருப்புவறையோடு ※

பேதிக்குஞ்சைவதரவரிபிருப்பழற்பாம்பிணித்துறக்க ❀
வேதத்தைத்தருமேகபாதமெனவிசைத்தனவும் ❀

எ - து வெளி (௱உ௧)

அறவருத்தும்பூரணமேயசிதாலவனங்கோர ❀
முறியவெலும்பினொருருக்கன்முழுப்பிடைதிலச்செக்கே ❀
யெறியவுறுமியந்திரமேகாப்பாலியிடர்ப்பாசம் ❀
மறியவுடன்மறுத்தனமேயெனமுறையில்வகுத்தனவும் ❀

எ - து வெளி. (௱உ௨)

பரியகலிநுன்கல்விபாறையழலிருப்புமயம் ❀
பொருவனகள்குரதாரம்யாமளமென்பொருப்பதுவே ❀
யருவருமூத்திரகூபமலக்கூபமறவுமிரு ❀
ளெரியுமறற்சாதனமேயுரலுலக்கையென்பனவும் ❀

எ - து வெளி (௱உ௩)

அளைத்தொறுக்குமியந்திரமேசிலைவண்டிலயக்கலப்பை ❀
வருத்தியிடுந்தாலவனமாமசகமண்டுகமே ❀
தருக்கழிக்குஞ்சம்மோகமத்திபங்கந்தழற்சூல ❀
மிருப்பழலாமுருள்விழுங்கலெனமுறையிலிசைத்தனவும் ❀

எ - து - வெளி . (௱உ௪)

பலதுயரமிகுதுயரம்பழுதாயகசுமலமே ❀
நிலவரியசமலமலநிட்டுரவாலாகலமே ❀
விலகரியமிதவிருபம்விகிர்தமியமானுகமே ❀
யிலகியிடுமொருபாதந்திரிபாதமென்பனவும் ❀

எ - து - வெளி (௱உ௫)

அறக்கொடியதிவிரமேயவீசியெனவறைந்தனவுஞ் ❀
செறித்தறிகவொருநூற்றுநாற்பதெனத்திண்ணமுற ❀

வொறுத்நுயிர்க்குப்பாவவிதமொழிக்கவொழுக்கியநிரையத் *
திறத்தினுக்குநாயகங்கடெருளவெனுஞ்சிந்தையரோ *

எ - து தீவிரம்- அவீசியென்றிங்ஙனங் கூறியது கூடநூற்றுநாற்பதாகவேற்றி யாரகங்களைநிச்சயமாகப்பிறித்தறியுஞ் சிந்தையினையுடையோர்,ஆன்மாக்களுச்சு ப்பாவவிதமொழிக்கநிறுவியநரகபேதங்களுக்குஒன்றுக்கைவைந்துநாயகங்களெ ன்றறிக எ - று (ருஉகூ),

மேலிராசநரகங்களையுணர்த்துகின்றார்

இருள்புழுதிவடிவாகியிடர்மிகுத்தரௌரவத்தை *
யரையனெனவறிந்திடுகவருந்துயரந்தனைக்கொடுக்கு *
மெரிமயக்கும்பீபாகமிதற்குமிறையெனவெனுக *
கிருமிசெறியவீசியிறையெவற்றினுக்குங்கிளக்குங்கால் *

எ - து இருண்டபுழுதிவடிவாகிமிகுந்ததுயரத்தைச்செய்யும்ரௌரவத்தையெல் லாநரகங்களுக்குமிராசநரகமென்றறிந்திடுக,அரியதுயரத்தைச்செய்யுமக்கினிச்சு வாலைபோன்றகும்பீபாகமென்னுநரகம்இந்தரௌரவத்துக்குமிராசாவாதலாலிரா சராசநரகமெனப்பெயர்பெறுமெனவறிக, புழுப்பொருந்தியஅவீசியென்னு நரக த்தைச்சொல்லுங்காலெல்லாவற்றுக்குமிராசாவாமாதலாலி ராசாதிராசநரகமெ னப்பெயர்பெறும் எ - று (ருஉஎ)

மேற்பாவிகளைநரகத்திலனுபவிக்கச்செய்துகளையேற்றுமுறைமையை
யுவமையாலுணர்த்துகின்றார்

செய்தசெய்ததீவினையின்றிறத்திசையவிவற்றழுந்தி *
மையலுறுமவர்துயரமுடிவின்கண்வல்வினைகள் *
பையவிடவெடுத்திடவும்படுவரழற்படுகனகம் *
வெய்யவழலினைவிடுமேகளிம்பறலும்விளங்கிடுமே *

எ - து அழலிற்போட்டகனகமானதுஅக்களிம்பற்றமாத்திரத்திலே யந்தவெய் யவழலினின்றுஞ்சொன்னகாரராலேயெடுக்கப்பட்டு விளங்கும்,அதுபோலத்தாந் தாஞ்செய்தபாவவிதத்துக்கிசைய- அவீசிமுதலியநரகத்திலழுந்தி மயக்கமுறுமா ன்மாக்களும் பாவபலமுடிவிலே பலவினைகள் மெல்லவிடவி யமதூதர்களாலேய வைகளினின்றுமெடுக்கப்படுவர்கள் எ - று

சொன்னகாரரொன்றும் யமதூதரொன்று மெச்சம்வருவித்துரைக்க (ருஉஅ).

இயமதூதர்கள் பாவிகளைத்தண்டிக்க அவர்கள் துன்பத்தைப் பொருந்தும்வகையினை பிருபதுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

மறுத்தருட்டமக்குவைத்தவத்தனித்தன்வாய்மையும் *
வெறுத்தறத்தினைத்தவத்தைவிட்டகட்டதுட்டனைக் *
கறுத்துளைந்தறச்சிவந்தழற்கவிந்தகண்ணரா *
பொறுத்தொறுத்துறுக்குவார்கடுந்தராயுதத்துமே *

எ - து தம்மிடத்திலேயருளைவைத்த செகத்பிதாவாகிய சிவனதுவாக்கியப்பிரமாணத்தையுமறுத்துத்தனக்கேற்றதன்மத்தினையுஞ்செய்யாது வெறுத்துத்தவத்தினையும்விரும்பாதுவிட்ட பொல்லாததுட்டனை, யமதூதராவோர் மனங்கறுத்துமிக வஞ்சிவந்தழற்சொரியாநின்ற கண்ணினையுடையராய்ஆயுதங்களினாலேகுத்திக்குத்தி காவிப்பர் எ - று (௱உக)

இருப்பழற்பெருடர்ப்பிணித்திடர்ப்படக்கரத்தினும் *
பரித்திடப்பணித்தவன்பழிப்புடற்பதைக்கவே *
தூரக்கமெய்ச்சுழன்றுருண்டதுக்கனைத்தொகுத்துவின் *
டருக்கறச்சதத்திருப்புருட்பிணிப்பர்தாரிலே *

எ - து அழல்போன்றவிருப்புச்சங்கிலியினாலேகையையுங்கட்டியச்சங்கிலியைத்தக்கமுறையேவெந்துவித்து, அங்ஙனம்பழிப்புண் டாகியசரீரம்பதைக்கத்தூரத்தவோடமாட்டாமற்றமதுடல்சுழன்றுவிழுந்துபுரண்டதுக்கத்தையுடையபாவிகளை மிகவுங்கூட்டிப்பிடித்துமிகுந்தகெருவமறும்படிக்குநூறிருப்புண்கடையையிரண்டு காலிலுங்கட்டிமிகவுந்தூரத்துவர்கள் எ - று விண்டருக்கு - மேலான கெருவம் (௱௩௰)

உன்னுவார்கண்முன்னைவல்வினைத்திறமுளத்துளே *
யென்னைசெய்பலாவதென்றுமெண்ணிநொந்திளைப்பருந் *
துன்னுவாருமில்லையுற்றதுக்கநோய்துடைக்கவு *
மன்னுமாமனத்தொடல்லதில்லையுடல்வாய்மையே *

எ - து முற்கூறியபாவிகளானோர், தாம்முன்னேசெய்த கொடியவினைதிறத்தைவிசாரிப்பர்கள், அதற்குப்பரிகாரம்யாதுசெய் வோமென்று தமதுமனதிலேயெண்ணியுள் ளதிர்ந்திளைத்தலையுஞ்செய்வர்கள், தாம்பொருந்தியதுக் கநோய்து

டைப்பதற்கவ்விடத்தொருவர்,வருவாருமில்லையாதலாலுடலுந்தமது மனத்தோடன்றிவேறொருவருடனுமில்லை,யிவைகளுண்மையே. எ று (௩௱௩க.)

சித்தமுந்திகைக்கவேயிரத்தமுந்தெறிக்கவே ❀
மொத்துவாரழற்கசைக்கொழுந்தழுந்திமூளவூன் ❀
குத்துவாரிருப்புலக்கையைக்கரத்தினிற்கொடே ❀
மத்தரானதூதர்பாவமேவினோவாடவே. ❀

எ - து மதத்தையுடையயமதூதர்கள், பாவஞ்செய்தோரைமனந்தடுமாற இரத்தமுந்தெறிக்கவக்கினியைச்சொரியாநிற்கிறகசையிற்கொழுந்தான தூதசை யைப்பிறிதூனிலேசென்றுதைக்கவடிப்பர்கள், பின்பிருப்புலக்கைகளையக்கையிலே யெடுத்துக்கொண்டு அவர்கள்தளர்வுறும்வண்ணமுதுகிலேகுத்துவர்கள் எ - று கசை - குதிரைச்சம்மட்டி. (௩௱௩௨)

ஒழுக்குவார்கள்காரநீருமொள்ளழற்குழம்புமோ ❀
தெழித்திரத்தவெள்ளமுந்திறக்கமெய்மறக்கவே ❀
யழுத்திவாளையங்கமெங்குமன்றிநின்றறிந்துடற் ❀
புழுக்குவாரொணைத்தடக்குடத்தினுட்புகுத்தியே ❀

எ - து இங்ஙனமடிபட்டுப்புண்ணாகியதேகத்திலேயுப்புமுதலியகாரநீரையுமக் கினிக்குழம்பையுமதட்டிவிடுவர்கள்,அஃதன்றியுமிரத்தவெள்ளமுந்தறந்தோடநி னைவுமறக்கவாள்கொண்டறுத்துச்சரீரமெங்குஞ்சின்னஞ்சின்னமாகவரிந்துபெரி யவெண்ணெக்குடத்துக்குள்ளேயடைத்தவேகவைப்பர்கள் எ - று அழற்குழம்புமோவென்றவோகாரத்தினாற்புளிநீர்முதலியவுமெனவறிக. (௩௱௩௩)

விட்டைமிக்ககூபவாய்விழுங்கவேயமுங்குவார் ❀
கட்டமிக்கமேதைசிக்கலந்துளங்கலங்குவார் ❀
நிட்டுரப்புழுக்குழிக்குணின்றயர்ந்துநீங்கிலார் ❀
விட்டறத்தினைக்களித்தவம்புரிந்தவினைரோ ❀

எ - து தன்மத்தினைச்செய்யாதொழித்துஅதன்மத்தைச்செய்தவினைராகுலோ ரிற்சிலரை, யமதூதர்கள்மிகுந்தமலகூபமாகியநரகத்திலேபோடவதன்கண்மூழ் கிக்கிடந்துதுக்கிப்பர்கள், சிலர்துன்பத்தைமிகவுங்கொடாநின்றவூறுஞ்சீயுமு டையநரகத்தைப்பொருந்திக்கிடந்ததிலேயுள்ளங்கலங்குவர்கள், சிலர்கொடு

மையானபுழுக்குழிநரகத்துனின்றுசோர்ந்தநினைந்கமாட்டாதுகிடப்பர்கள் எ - று (௨௩௪)

கூரிதாயவாயவாயகாதிகோதிமோதியு ✽
ரிரவிரவாறுபோலிரத்தமும்பரக்கவே ✽
நிருமாறுதேடுவார்கடையபாவமேவினோர் ✽
விரமாயநாயுமாயவாயினல்விடக்கடும் ✽

எ - து தீவினைகள்செய்தோர்,கூரியவாயினையுடைய காக்கைமுதலாயினபுட்கள்,காலாலடித்தமூக்கினாற்கொத்தியுமருக்கவருக்க வீரத்தினையுடைய நாயுங்கூரியவாயினாற்றமதசரீரத்தைக்கடிக்க,இரத்தமானதாறுபோலோடத்துக்கித்திந்தத்துயரமொழியுமாறெங்ஙனமென்றுவிசாரிப்பர்கள் எ - று (௨௩௫)

செக்கிடைத்நிலத்தினுக்குமோப்பெனத்திருக்குவார் ✽
இக்கினுக்குமொப்பெனக்கலைப்பர்வைத்தியந்திரத் ✽
தப்பினைக்கலந்தவுப்பெனத்தழற்கழுத்துவார் ✽
தப்பறத்தமக்கறம்புரிந்திலார்கடம்மையே ✽

எ - து யமதூதர்கள்- தமக்கென்றுகருதிக்குற்றமறத்தன்மஞ்செய்யாததுட்டரைச்,செக்கிற்போட்டெள்ளுப்போலவரைப்பர்கள்,அதுவுமின்றியாலையிட்டுக்கரும்புபோலநெருக்குவர்கள் அதுவுமன்றி நீரிலேகலந்த வுப்பானதுபின்னமன்றியிருக்குமாறுபோலவிவர்கள்,சரீரத்தையக்கினியென்றுஞ் சரீரமென்றும் பின்னம்பண்ணுமலக்கினிச்சுவாலையாகியநரகத்தின்கண்ணும்போடுவர் எ - று

கலித்தல் - நருக்குதல் - இயந்திரம் - கருப்பாலை [௨௩௬]

பொய்வினைப்புகன்றபுல்லர்வாயினைப்புடைத்துநாக் ✽
கொய்வர்துக்கபேதமுங்கொடுப்பர்தூதர்கோணறு ✽
மெய்யர்முன்புசொன்னபொய்வினைத்திறம்விளங்கவே ✽
யைவகொன்னைசெய்வமென்றுநிருமாறுநாடியே ✽

எ - து யமதூதர்கள்பொய்சொல்லியவர்வாயிலேயடித்துஅவர்கள்நாக்கினையறுத்துப்பல துக்கத்தையுமுறுவிப்பர்கள்அப்பொழுதந்தப்பொய்சொல்லியகொடியோர்- தாமுன்புசொன்னபொய்களெல்லாந்தம்மனதிலேபதிக்கவுதித்தவாறேயதனாலுண்டாகிய பாவபலம்போமாறுவிசாரித்ததற்கென்செய்வோமென்றுள்ளமுடைவர் எ - று [௨௩௭]

வேதமாதிநாரினுள்விதித்தறத்தினைப்பழித் ❋
தேதமானநூலியம்புநீனர்நாவெழுந்துபோய்க் ❋
காதமோடணைத்துரங்கமிக்கவெங்கலப்பையால் ❋
வாதைசூருமாறுகிழியூறுசெய்பமாய்வரோ ❋

எ - து வேதாகமபுராணத்திலுண்டாகியவிதிமுறையைப்பழித்ததற்கு விபரீதமாகியநூலினைச்சொல்லு மற்பர்நாவானது ஒன்றரைக்காதவழிதூரமெழுந்துவளராநிற்குமங்ஙனம் வளர்ந்தநாவிலேயவர்கள்துயருறும்படி யமதூதர்கள்கொடியகலப்பையினலேயுழுதுபுண்படுத்தவதனலேசோர்வர் எ - று (௱௩௭)

வேறு

விதித்திறத்தைச்செவிப்புலத்துள்விளைத்தருள்செய்வேதியனைக் ❋
கொதித்ததட்டுமவர்முகத்தைக்குடைந்திரத்தங்குடித்திடலும் ❋
பதைத்திடுவரட்டைபலபருகியபின்னழற்காரம் ❋
விதிர்த்தலறவிட்டிடுவர்தாமிரத்தின்வெவ்வழலும் ❋

எ - து வேதாகமபுராணங்களிலேவிதித்தமுறையினைத்தன்செவியிலே புலப்படவருளிச்செய்தவாசாரியனைக்கோவித்துப்பார்த்ததட்டும்பாவிகள்முகத்தை, யட்டைகள்குடைந்துஇரத்தங்குடிக்கவதனற்பதைத்துவிழுவர்கள், அவ்வட்டைகள்குடித்துவிட்டபின்னாகயமதூதர்கள்சுடுகிறகாரநீருமுருக்கினசெம்பும் அவர்மெய்நடுங்கியலறும்படிகாய்ச்சிவிடுவர்கள் எ - று

வேதியன் - அறிவிப்பவன் - புலம் - அறிவு (௱௩௮)

உருகியபித்தளைத்தழலுமொழுக்கிடுவரதன்பின்பு ❋
விளையவழலுறுதயிலமதுதனையும்விட்டிடுவர் ❋
பொருகிருமிமலவளறும்பூரிப்பர்புல்லியரை ❋
வெருவுறுத்திநமன்றூதர்விதியிகந்தவினைவிடவே ❋

எ - து யமதூதர்கள், வருணச்சிரமத்துக்கேற்றவிதியினைவிட்டோருடையபாவம்போம்படிக்கந்தவற்பரைப், பயமுறுத்திப்பித்தளையுருக்கிவிடுவர்கள், அதன்பின்பு, எண்ணெயினையுங்காய்ச்சிச்சடுதியிலேவிடுவர்கள், அதுவன்றிப்புழுக்கணெருங்கியமலச்சேறுகியநரகத்திலமூழ்குவிப்பர்கள். எ - று (௱௩௯)

உற்றிடுவருணாத்ததுயரனைத்தினையுமொருவாதே ❋
பெற்றெடுத்ததாய்தன்னைத்தந்தைதனைப்பெரியோரைப் ❋

பற்றறவேபாடிக் நக்கொதி த்ததட்டும்பாவியருங் ✻
குற்றமவர்செய்திடினும்பொறுத்திடுகைநன்மன்றே ✻

எ - து பெற்றவர்த் தமர்குரவர்தமையும் மகாத்மாக்களையுமவர்களிடத்து நேசமில்லாத வசனத்தைச்சொல்லிக் கோபித்திருக்கும்பாவிகள், முன்சொன்ன நரகங்களெல்லாவற்றையும் நீக்கமின்றியனுபவிப் பார்கள் ஆகையினாலேயவர்கள் குற்றஞ்செய்தினுமதனைப்பாராட்டாமற்பொறுத்தலேநன்மையாவது எ-று (௱௪௧)

உத்தமரைமதியாதேயுபானபதத்தொடுநடக்கு ✻
மத்தரையுமதற்குரிமுள்ளிலவமரமதுதன்னிற் ✻
பொத்திடுவர்முதுகறைவர்புணரிருப்புமுளைத்தண்டாற் ✻
கொத்திடுவரங்குசத்தாலிர்வாளாற்குறைப்பருமே ✻

எ - து பெரியோர்களைமதியாமலவர்கள்முன்னே மரவடி செருப்பு முதலியவற்றைத்தொட்டு நடக்குமறிவில்லாதோரை யமதூதர்களக்கினி சொலிக்கிற முள்ளிலவமரமாகியநரகத்திலே முகங்கிழாகப்போட்டு இருப்பு முளைகளைநெருங் கச்சடாவியதடியினாலே முதுகிலேயடிப்பார்கள் அஃதன்றிக் குடாரியினாலுங்கொத்தியீர்வாளாலுமறுப்பர்கள் எ - று (௱௪௨)

உற்றிடுவருனாத்த துயரனைத்தினைபு முயிர்க்கிரக்க ✻
மற்றவதைத்தவைதன்னையவலமெனகவற்றானைத் ✻
துற்றினருமற்றுமுளகொலைபுரிந்ததுட்டினரும் ✻
பற்றுமிலர்படுந்துயர்க்குக்கடுந்தூதர்வலிப்பட்டே ✻

எ - து உயிர்க்கிரக்கமற்றுத் தமக்குப்பொசித்தற்கருகமாகிய மிருகமுதலியவுயிர்களைவதைத்தவையிற்றினான்களைக் குற்றமென்றுகருதாமற்பொசித்தவர்களும் பொசித்தற்கருகமல்லாதவுயிர்களை வதைத்தபாவிகளும், யமதூதர்வலியிலேயகப் பட்டு அவர்கள்படுந்துயரத்துக்காதாரமுமற்று முன்சொன்னநரகங்களெல்லாவற்றையுமநுபவிப்பர்கள் எ - று (௱௪௩)

அரிந்தரிந்தேயுடலுனையருந்திடுவரிரத்தமெலாஞ் ✻
சொரிந்துகுடித்திடச்சொலுவர்தூதர்பசிதோன்றவனை ✻
மிரந்தவர்க்குப்பசிதணியாதிருந்தருந்துமினையும் ✻
அருந்திடக்குளிர்ந்தபுனலுதவாதவவலரையும் ✻

எ - து இயமதூதர்களானோர், பசித்துவந்தவதிதிகளுக்காகாரமிடாமற்றனே தனித்திருந்துபொசிக்குமற்பரையுந், தாகித்தபேர்களுக்குந்தண்ணீர்கொடாத பொல்லாதவர்களையும் அவர்களுடையமாங் கிசங்களையரிந் தரிந்து பொசிப்பித்துச் சரீரத்தையுங்குடைந்துஇரத்தத்தைவாங்கியவர்களைத்தானேகுடிக்கச்சொல்லுவர்கள். எ - று (௱௪௪)

பின்னுமவர்தமைபாலைக்கரும்பெனவேபேதிப்பர் ✻
துன்னுமசிதாலவனத்திட்டற்றுணியத்தொகுத்திருப்பர் ✻
பின்னமுறவுடலழுன்றசூசிபலபெறுத்திடுவர் ✻
கொன்னவிலுந்தழற்குலக்கொழுந்தினுமெய்கொளுத்துவரே ✻

எ - து வெளி அசிதாலவனம் - வாள்போலருகின்றமட்டையினையுடையபனங்காடு - சூசி - ஊசி - கொன் - அச்சம் (௱௪௫)

அறுத்தொறுப்பருறுப்பனைத்துமீர்வாளாலகத்தெலும்பு ✻
முறித்திடுவர்கண்கலங்கமுகத்தறைவர்மூரணழியப் ✻
பொறுப்பரியதுயரனைத்தும்பொருத்திடுவரொறித்திடுவர் ✻
கறுத்திடுவரிரங்காதகரிசுதனைக்கழித்திடவே ✻

எ - து வெளி — அகம் - சரீரம் - மூரண் - வலி - கறுத்தல் - கோபித்தல். (௱௪௬)

நிறுத்திடு✠வருச்வாசஙிருச்வாசமினையத்தும் ✻
வறுத்தமனன்முகத்தறைவர்மாளொள்ரளொளரவைத்து ✻
முறுத்திமிகவொறுத்திடுவரொள்ளழற்கூரிருப்புமுளை ✻
செறித்தறைவர்கோசத்தின்முகமதனிற்சிரத்தினுமே ✻

எ - து வெளி (௱௪௭)

பதத்தறைவர்குதத்தறைவர்பதைத்தழுங்கவுரத்தறைவர் ✻
விதிர்த்தகரத்தினுமறைவர்வெய்யவழற்செங்கலினு ✻
மிதித்திருப்பருதகானமுதவாதவெட்டியனைக் ✻
கதத்தெழுந்துநமனுணைகடவாதகடுந்தூதர் ✻

எ - து வெளி-உதகானம்-உதகம்-அன்னம்-கதம்-கோபம் (௱௪௮)

✠ உச்சுவாசம்-சுவாசம்விடுதல்-நிருச்சுவாசம்-சுவாசமடக்குதல்

மேற்பரதாரகமனம்பண்ணும்புமானையுமந்தநாரியை
யுமியமதூதர்கள் துய்ப்பிக்குமுறைமையாறுசெய்யுளா
லுரைக்கின்றார்.

பரிவுடையபரதாரியழலிருப்புப்பாவைதனை *
யுருகிடவுடன்முழுதுந்தழுவியழுந்தவணைந்திடுவ *
னுரியவனையொழிந்தொருவற்குடல்கொடுத்தவொண்டொடியு *
மெரியுருவப்பாவையவனைத்தழுவியிணைப்பாளே *

எ - து வெளி அழலிருப்புப்பாவைசொரனாரிரூபமாகிய-இருப்பழற்பாவை - உலைதல் - துக்கித்தல் - எரியுருவப்பாவையவன் - புமானுருவமாகிய - இருப்பழற்பாவை. (௱௪௯)

பிரிந்திடவேயினைந்திடுமப்பேதைதனைப்பிரியாதே *
பொருந்தியிடவழலுருவிற்புணர்த்திடுவர்கணவனைநீ *
பிரிந்தனையேபுணர்ந்தனையேபிறனுருநின்பெரும்பாவம் *
பிரிந்திடுநாட்பிரிந்திடுநீயெனத்தூதர்பேசுவரோ *

எ - து வெளி (௱௫௰)

மற்றவனுமழன்மயத்தவடிவுசுடவழிவுசெய *
லற்றழிந்துபிரிந்திடவேயாதரிப்பனவன்றனையு *
மற்றொருவன்மனைமகிழ்ந்தவல்வினைநின்றனைப்பிரிந்தே *
யற்றிடுநாளகன்றிடுநீயெனக்கடிகியழுத்துவரோ *

எ - து வெளி மற்று - வினைமாற்று - ஆதரித்தல் - விரும்பல (௱௫௧)

இனையகடுவினையதனையியற்றினளாயிரும்பாலே *
வனைகுடத்துட்புகுத்தியதன்வாயடைத்துவன்றூதர் *
கனன்மிசையேவைத்தெரிப்பர்கன்றவுடலுரலிடிப்ப *
ரனலொழுகுசிலைதனிலுமுடற்சிதறவறைவரோ *

எ - து வெளி வனைதல் - பண்ணுதல் (௱௫௨)

வெருளவிருட்கூபத்தும்விட்டிடுவர்விள்ளவுடற் *
பிரமரங்கள்பெறுத்திடுவர்நிறுத்திடுவர்பெருங்கிருமி *

யுருவவுடற்குடைந்திடலு மூதிரவெளமொழுமியிட ❊
வெரியனையகாரவெள்ளக்கூபத்துமிறக்குவரோ ❊

எ - து வெளி - பிரமரம் - வண்டு - வெள்ளத்தை - வெளமெனத்தொகுத்தார். (௱௫௩)

பின்னுமவரெரிவாயநிரையத்துப்பெயப்பட்டுக் ❊
கின்னமுறவுடலுருகக்கிடந்திடுவர்தொடர்ந்தவினை ❊
தன்னைநினைந்தழுங்கிடுவர்விதித்தவினைதனைத்தவறித் ❊
துன்னினர்கடுயரவிதந்தனைக்கொடுக்குந்துரிசினையே ❊

எ - து வெளி - பெய்தல் - போடல் - கின்னம் - துக்கம் - துரிசு - பாவபலம். (௱௫௪)

குருவாதிமூவருக்கும் - ஏவல்செய்யக்கூசினோர்முதலா
னவர்படுந்துயரநாலுசெய்யுளாலுணர்த்துகின்றார்

தேசிகர்க்குந்தேவர்க்குஞ்சிறப்புடையவருந்தவர்க்குங் ❊
கூசினனாயேவலுக்குக்கொதித்தமனக்கோணினனைத் ❊
தூசினையும்பிறர்மனையிற்றிருட்டெடுத்தசோரனையும் ❊
பாசமுறவுறப்பெவற்றும்பிண்டமெனப்பந்தித்தே ❊

எ - து குருலிங்கசங்கமாகியமூவர்க்குமேவல்செய்யக்கூசினவர்களையும் அவர்களைக்கோபித்தபொல்லாதமனத்தையுடையோர்களையும்புடைவைதிருடின சோரனையும்பமதூதர்கள்தபதுபாசக்கயிற்றினாலேயவர்களனைவவங்களெல்லாவற்றையுங்கூட்டிக்கொட்டைக்கட்டாகக்கட்டி எ - று (௱௫௫)

எறிந்தருந்தவிருப்புமயத்தும்பிகளையேவிடுவர் ❊
செறிந்திடவுஞ்செந்தழலிற்செலுத்திமிகவொறுத்திடுவர் ❊
பிறிந்திடவுஞ்செந்தழலிற்பெய்திடுவர்நையவுள ❊
முறைந்துருகக்காரீடவழலிடையுமூறுத்துவரோ ❊

எ - து வெளி - காரீடவழல் - வறளிந்தழல் (௱௫௬)

கூட்டிடுவருமியமூழ்க்குங்கொடிதாயவதுதன்னின் ❊
மீட்டனைப்பர்சராசரத்தவெட்டியகற்பாறையினு ❊
மூட்டிடுவரூனனைத்துமுடலிடையேயுறப்பவித்துத் ❊
தேட்டுடையவினைக்கிருமியனைத்தினுக்குஞ்சிறப்புறவே ❊

எ - ந வெளி - உற்பவம் - உண்டாக்குதல் (௱௫௭)

அழுத்திடுவர்கிருமிசெறியவக்குழிக்குமதன்பீட்டே ✽
யழுந்தசைக்குழியுள்ளூறுமுற்றுத்திமிகவொறுத்திடுவர் ✽
வழுக்கறவேபொருகிரியினிடைநெருக்கிவருத்திடுவ ✽
ரழுந்துநரியினதோமுகமாவழுத்திடுவரவர்தமையே ✽

எ - து வெளி - உழுந்ததசை - நாற்றமாங்கிசம் - பொருகிரியினிடைநெருக்கல் - இரண்டுமலையினிடைநெருக்கல் - அதோமுகமாவழுத்தல் - தலைகீழாகப் போடுதல். (௱௫௮)

பரிவோடன்றிப்பிடிவோரதுபானான்னத்தைப்போசித்தோர்
படுந்துயருரைக்கின்றார்.

அரவொலாழுந்தமிருப்புன்னடையவைவிழுங்கவடித்திடுவர் ✽
ஒழுகிடவுதிரவெள்ளங்கசையாலுமொலித்திடுவர் ✽
பழுதறவேபராமரியாகிடுசோறுண்பரிசிலரை ✽
யழுதழுதகதியவர்விழுந்திடத்துநாதுவரதிர்த்தே ✽

எ - அ வெளி (௱௫௯)

ஆலயமுதலியவற்றின்மலவிசர்க்கமுதலியசெய்தோர்
படுந்துயரமிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

ஈசர்திருவாலயத்துமிடர்கடியும்புனற்றடத்தும் ✽
வாசமலர்த்திருநந்தவனத்திடையுமடத்தினூடும் ✽
மாசுகளைந்தருந்தியனமைதுனமற்றையதொழிலுங் ✽
கூசமறப்புரிகின்றகொடியாரைமிகக்கொதித்தே ✽

எ - து வெளி - மாசுகளைதல் - மலவிசர்க்கமுதலியனசெய்தல், மற்றைய தொழில் - சயனாதிகள் - கூச்சம் - கூசமெனக்குறுகியது. (௱௬௰)

இக்கெனவேசெக்கிடையிட்டியந்திரிப்பர்யமதூதர் ✽
துக்கமுறநரகவிதமெனைத்தனைத்துந்தொகுத்தொறுப்பர் ✽
உக்கிரவாரமுனியையத்தொடுக்கிடுவருநீவிழுத் ✽
தக்ககதிர்மதியளவுமவரதனிற்றவிப்பாரே ✽

எ - து வெளி- உக்கிரவாரமுனியையம்-நருமாகியவெரிவாய்நரகம் (௱௬௧)

ஆசாரியனைநிந்தனைபண்ணக்கேட்டிருந்தவர்களுஞ்சிவயோகிகள்
தபோதனரிவர்கட்கபராதம்பண்ணினவர்களுமநுபவிக்குந் துயர
த்தையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

குரவனையுநிந்தனைகள்கூறியிடக்கேட்டார்த ✽
மிருசெவியிற்றுளையுறவேயெரியிருப்புமுளையறைவர் ✽
உருகியதாமிரமற்றுமொழுக்கிடுவரவற்றுளுறப் ✽
பருவரலுற்றிடநிரையவிதத்துமுறப்பதிப்பாரே ✽

எ - து வெளி - பருவரல் - துக்கம் (௱சுஉ)

உற்றிடுவர்செவிப்புலத்தினுறுதுயரமெனைத்தனைத்து ✽
மற்றுமுளவிந்திரியத்தபராதமருவினர்க ✽
ணெற்றிவிழிநிருமலனைநினைந்துலகவியற்கையினை ✽
யற்றவருந்தபோதனர்க்கும்புரிந்தாருமபராதம் ✽

எ . து அந்தவாசாரியர்க்குமற்றுமுள்ளகண்முதலியவிந்திரியங்களினாலேயப
ராதம்பண்ணினோர்களுமுதற்கட்செவிப்புலத்தினுக்குக்கூறிய துயரமெத்தனையுண்
டத்தனையுமந்தந்தவிந்திரியங்களிலேயநுபவிப்பர்கள், உலகவியற்கையையொழித்
துச்சிவத்தியானம்பண்ணியிருக்குஞ்ஞானிகளுக்குஞ்சாதகர் முதலியதபோதனர்க்
குநிந்தைமுதலிய வபராதம்பண்ணினவர்களுங் குருநிந்தைசொல்லக் கேட்டிருந்
தோர்க்குச்சமமாகஅநுபவிப்பர்கள் எ . று (௱சுங)

பிறர்மனையாளையிச்சித்துத்தீண்டினோர் துயரமுணர்த்துகின்றார்

மற்றொருவன்மனையாளைவாஞ்சையுறப்பரிசித்த ✽
குற்றமறக்கூரழல்வாய்ச்சூசியினாற்குத்திடுவர் ✽
முற்றுமுடற்றுமிரத்தின்முழுக்கனலுமொழுக்கிடுவர் ✽
மற்றுமுளநிரையவிதத்தினுமழுத்திவருத்துவரோ ✽

எ து - வெளி (௱சுச)

பிறர்மனையாளையிச்சித்துவிகாரத்தாற் பார்த்தோராயமநுதர்கள்துய்ப்
பிக்குமுறையுணர்த்துகின்றார்

மனமுருகவிழிகுளிரவாஞ்சையுறப்பார்த்திடினு ✽
முனமுளாத்ததுயரவிதங்கண்டளிலுமுற்றுவிப்பர் ✽

நினைவரியவ சிதொலைபதிலமையினை நின்றினர்க்குத் *
துனியதனை முறைபுறவே துய்ப்பிக்குந் தூதுவரோ *

எ. து. வெளி. கண்டனிலுமென்றவும்மையாற்சரீரத்திலுமெனவறிக (௱௬௫)

ஆசாரியனைக்கோபத்தினாலேகண்சிவந்தேறிட்டுப்பார்த்தோனையுஞ்சிவ பூசையக்கினிகாரியமதிதிசத்காரமிவைசெய்யாமற்போசித்தோனையும் யமதூதர்கள்துய்ப்பிக்குமுறையைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

எற்றியிடவினைப்புருவமிரத்தவரிவிழியிரண்டும் *
பற்றியிடப்பரிவொழியக்குரவனுருப்பார்த்தானை *
யெற்றியிருவிழிமுழுதுமெரிவிரவுஞ்சூசியினை *
யுற்றுறத்திக்காரவழலொழுக்கிடுவருணர்வறவே *

எ. து. வெளி. இரத்தவரி. செவ்வரி (௱௬௬)

பஞ்சவிதலோகவறற்பகைத்தலமக்கவிழ்த்தொறுப்பர் *
கஞ்சழியமனமவனைமற்றைநரகினுநலிப்பர் *
அஞ்சிருவினடமாடியவற்பூசை நடங்காதே *
யஞ்சியழலோம்பாதேபத்தியனையருத்தாதே *

எ. து. வெளி பஞ்சவிதலோகம்-பாதேவில். ரு. பொன்னும்வெள்ளியுஞ்செம் புமிரும்பும். தன்னியமுமைவகைலோகம். நஞ்சிருள்சங்காரகாலம் (௱௬௭)

அநந்தினர்கறுவிளிடையப்பலொழுகுமிருப்பாணி *
பொருந்தியிடவொருநூறுபுதைத்திடுவர்பகைத்தலற் *
வருந்திடக்காரவழலுடன்முழுதும்வார்த்திடுவ *
ரெரிந்தொழுகுதாமிரமுமிறைத்திடுவரிளைப்புறவே *

எ. து. வெளி (௱௬௮)

சிவனதாக்தவனத்துப்பூவையெடுத்துமுடித்துமுகர்ந்தோனைத்துய்ப்பிக் குமுறையுணர்த்துகின்றார்

திணையிலிசந்தனவனத்துளினாராருமணமலரை *
யெனமிழந்துபறித்து முகர்ந்தெழிலுறவேமுடிக்கனியிற் *

றிணமுடையவழவிருப்புமுளையறைவரவர்சிரத்தின் ✽
மணமுகந்தநாசியினுங்காரமுதல்வார்ப்பாரோ ✽

எ - து . வெளி (௱௬௯)

சிவன்முதலாயினோரையுஞ் சிவாகமத்தையுந் தூஷணம்பண்ணினோர்களை யமதூதர்கள்துய்ப்பிக்குமுறையை மூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

அமலனையுங்குரவனையுமமலனுக்கேயாட்பட்டுத் ✽
தமலமறத்தவஞ்செய்யுந்தகுதியர்களவர்தமையு ✽
நிமலனுரையதுதனையுநிந்தித்தாரவர்வாயுட் ✽
டுமிலமுறவிருப்பாணியழலறைவர்துயருறவே ✽

எ - து . வெளி . துமிலம் , ஆரவாரம் (௱௭௰)

தந்தத்தினிடைதோறுமதரோட்டமவைதனினுஞ் ✽
சிந்தச்செங்குருதிவெள்ளஞ்சிரத்திடையுமுரத்திடையுஞ் ✽
சந்தித்தவிடைதோறுநாசியினுந்தழலொழுக ✽
வெந்நுற்றவிருப்புமுளையறைந்தொறுத்துவெறுப்பாரோ ✽

எ . து . வெளி (௱௭௧)

ஒழுக்கிடுவரழற்காரமுடன்முழுத்தாமிரத்தி ✽
னழற்சொரிவர்மற்றுமுளவல்லவெலாமருத்திடுவர் ✽
பழித்திடுவர்வினையவிதமனைத்துமுறப்பதைக்கவுடற் ✽
றொழிற்பலத்தைமுறையுறவேதுய்ப்பிக்குந்தூதுவரோ ✽

எ - து வெளி (௱௭௨)

கையினாலேபிறர்பொருள்கவர்ந்தோரையும்பிராமணர்வடிவிலுஞ்சிவனுக்குக்கருதியபதார்த்தங்களினுஞ்சிவாகமத்தினுமறந்தாயினுந்தமதுகால்படச்செய்தோரையும்யமதூதர்கள்துய்ப்பிக்குமுறையையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

அன்னியர்தம்பொருளதனையங்கையினாற்பற்றிடினு ✽
மன்னுபுகழ்விப்பிரர்தம்வடிவிடத்துமறந்தேனுங் ✽

தன்னுடையபரம்பரனுஞ்சங்கரர்க்குறித்தபொரு ✽
ளின்னிசையவாகமமென்றியம்பிடுமிவைதனினும் ✽

எ . து . வெளி (௱௭௩)

கரமதனிற்பதமதனிற்காரவமுற்கவிழ்த்திடுவ ✽
ருருகியதாமிரத்தினையுமொழுக்கிடுவர்வழுக்கறவே ✽
நிரையமிதமெனத்தனைத்துமுணர்வறவேநிறுத்திடுவர் ✽
கரவினையும்பதவினையுங்கட்டதரங்கட்டதரம் ✽

எ - து - வெளி . வழுக்கு . சிக்குதல் - கட்டதரம் . மிகுந்தகொடுமை (௱௭௪)

சிவாலயமுதலியவற்றின்மலமூத்திராதிகளைவிட்டோரையமனுதர்கள்து
ய்ப்பிக்குமுறையைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

ஈசர்திருவாலயத்துமேழிலுறுநந்தனவனத்து ✽
மோசகலமலமதனைமூத்திரமுமுரணழித்துக் ✽
கோசமதிற்பிசமதிலயோமயத்ததுறுந்தண்டா ✽
லோசையுறநமன்றூதர்நருக்கிமிகவொறுப்பாரே ✽

எ - து - வெளி . அயோமயத்ததண்டு - இருப்புத்தடி (௱௭௫)

அனலொழுகுஞ்சூசிபலவழுத்திடுவரவைதன்னிற் ✽
கனலொழுகுமயோமயத்ததண்டமதிற்கண்டகமு ✽
மினனுறவேகுதத்தியற்றிச்சிரத்தின்மிசையெற்றுவேற்றி ✽
நினைவழியவலிதொலையத்துயரவிதைநிறுத்துவரே ✽

எ . து . வெளி . கண்டகம் . முள் - இன்னல் துக்கம் அதனையின்லென் றதனு
டைக்குறை (௱௭௬)

கனலினையகாரவழலவைதன்னிற்கவிழ்த்திடுவ ✽
ரனலொழுகுதாமிரமுமலறிடவேசொரிவார்க ✽
ளினையதுயர்மற்றுமுளவிக்கிரியத்தியற்றிடுவர் ✽
வினையவலமவற்றுளும்விதிபிகந்துவிளைத்தவர்க்கே ✽

எ . து . வெளி . மற்றுமுள்ளவிக்கிரியம் எ - து . மற்றையதென்பது. சுட்டிய
தற்சினம்- என்பதனுள்வாக்குமுதலியதெனவறிக (௱௭௭)

இயமதூதர்கண்மிகவுந்தனதானியங்களைப்படைத்திருந்தமறஞ்செய்யர் தோளாவேதனைப்படுத்துமுறையை யேழுசெய்யுளாலுரைத்துகின்றார்

தனமிகுதிதரித்திருந்தும்தானவினைபுரியாளை *
மனைதனிற்செஞ்சாலிமிகவுளராயும்வழியார்வந் *
தனமுளதேயெனவிரந்தவதிதியளையருத்தாதே *
தனியிருந்துண்ணவலளையுந்தண்டதரன்றமர்தாமே *

எ - து இயமதூதர்கள்மிகுந்ததிரவியத்தையுடைத்தாயிருந்துந்தானந்தன்மங்களைச்செய்யாதோளையுந்,தம்முடையமனையின்கட்செஞ்சால்முதலியவெகுதானியமுண்டாயிருக்கவும்பசிமிகுதியால்வந்தாகாரம்வேணுமெனக்கேட்டவதிதிகளைப்பொசிப்பியாமற்றானேதனித்திருந்துபொசிக்கும்பொல்லாதவர்களையும் எ-றாளஅ

அறைந்திடுவர்கூரியவாயிருப்புமூளையவர்மிடற்றுட் *
புறம்புறுமவ்வாணிவளைச்சிருங்கலையைப்பூட்டிடுவர் *
சிறந்தவயவிருதம்பத்திடைக்கணையிற்செறித்திடுவர் *
பறந்திடவேபதம்பாணிபக்கமுறப்பயிற்றுவரோ *

எ - து கூரியவாயினையுடையவிருப்புமுளைகளையவர்கள்கழுத்தினுள்ளேயிறங்கவடித்துப்புறம்பேபொருந்தியவந்தவிருப்பாணிவளையத்திலேசங்கிலியைப்பூட்டியிரண்டிருப்புத்தூணைநாட்டியதன்மேலேயுத்திரத்தைப்போட்டதனடுவே நூறுவருஷங்கிடக்கும்படிக்குக்கட்டித்தூக்கிக்காலுங்கையுமிரண்டுபுறத்தினும்பறக்கத்தக்கதாகவிடுவர்கள் எ - று சிருங்கலை - சங்கிலி. (௱௭௧)

சிரத்தறைவர்குளத்தறைவர்திறந்துறவாய்தனிலறைவ *
ருரத்தறைவர்பதத்தறைவரொள்ளழற்கூரிருப்புமுளை *
கரத்தறைவர்வருத்தமுறக்கசிந்தன்பாறகடும்பசியி *
லருத்திடாதருந்தவளையருந்தியதீவினையறவே *

எ - து வெளி (௱௭௨)

வாக்கதனைக்கிருமிபலமண்டியுணவயத்துண்டக் *
காக்கைபறித்தருந்திடமற்றுமுளகடுந்துயர *

டாக்கிடுவர்காக்கி வடுத்துளைத்தயன்றவயத்தொடரால் *
விக்கியதிபாரவிருப்புண்டைபலவிடுவாரோ *

எ - து வெளி - கிருமி - புழு - அயத்துண்டக்காக்கை - இருப்புமூக்கையு டையகாக்கை - அயத்தொடர் - இருப்புச்சங்கிலி - விக்குதல் - கட்டுதல் ௱அ௧

கட்டிடுவர்பிசத்துங்கோசத்துங்கடியதொடர் *
விட்டதனைநான்றிடவேவியனிருப்புக்கட்டியினைக் *
கட்டிடுவரதன்முடிவிற்கரத்துமிவற்பிரட்டிரட்டி *
நிட்டுரணைநிறியுதவக்கருதாதநெஞ்சனையே *

எ - து இயமதூதர்கள்திரவியத்தைத்தன்மத்தின்கட் செலுத்தவிசாரியாத நெஞ் சினையுடையகொடியபாவிகளது பிசத்திலுங்கோசத் திலுமிருப்புச்சங்கிலி யைக்கட்டிவிட்டதனுனியிலே முற்கூறியவிருப்புண்டைகளிலிருமடங்குகன முள்ள விருப்புக்கட்டியைக்கட்டி காலவிடுவார்கள் அதற்குபின்பு கைகளிலுமிருப்புச்சங் கிலியைப்பூட்டி நான்மடங்கு கன முள்ளவிருப்புக் கட்டியைக்கட்டிவிடுவார்க ள் எ - று (௱அ௨)

அரிந்தரிந்தேயவராகந்தலமேனவேயருத்திடுவர் *
சொரிந்திரத்தந்துடித்திடவுஞ்சொல்லிடுவர்சூசியினு *
லெரிந்தொழுகுங்காரவறலிறைத்திடுவர்தாமிரமுஞ் *
சொரிந்திடுவரழலொழுகுந்தயிலமும்பின்சொரிவாரோ *

எ - து இயமதூதராஞேரந்தப் பாவிகள்சரீரத்தை எள்ளுப்போலவரிந்த தனைத்தின்னச்சொல்லுவர்கள் அஃதன்றி யூசியிலுலுமவர்கள் சரீரத்தைக்குடைந் திரத்தத்தை யேற் றுக்குடிக்கச் சொல்லி யந்தப்புண்வாயிலே யக்கினிச்சுவாலை போன்றகாரநீரையுமிறைத்துச்செம்பினையுமுருக்கிவிடுவர்கள் அதற்குப்பின்யெண் ணையினையும்நெருப்புப்போலக்காய்ச்சிவிடுவார்கள் எ - று (௱அ௩)

அரிதாரவழலிடையுமழுத்திடுவரதன்பின்பு *
கொதியாமற்றையநிரையத்துயரனைத்துங்கொடுத்திடுவ *
ருதராங்கிதனையரிகவுமுநிப்பித்தேயொறுத்திடுவ *
ருதகாலசயுறத்தபனவுழலினையுமுநிப்பிப்பார் *

எ - து இயமதூதர்களாஞேர் அந்தப்பாவிகளைமிகுந்த ஆழத்தினை யுடைய

வெரிவாய்நரகத்தின்மற்றுள்ளபொங்காநிற்கிற நரகங்களிலும்போட் டுத்துக்கங்க ளெல்லாவற்றையுமுறுவிப்பர்கள்பின்புஅந்திகள்பசித்திருக்கப்பொசித்திரொன்றவ ர்களுதரத்திலேமிகவும் பசியையுண்டாக்கித்தண் ணீர்மேலாசையுண்டாக்கும் வ ண்ணந்தாகத்தையுமுண்டாக்கிவாதைப்படுத்துவர்கள் எ - று.

தபனவழல் - தாகம் (௱௩௪)

நரகயாதனைகளையளவிடப்படாதென்று முடித்துணர்த்துகின்றார்

ஒருநிரையத்துயர்பலவேயுரைப்பனவோவுரைத்திடினு &
நிரையவிதமனைத்தினுக்குநிரந்ததுயர்நிச்சயித்து &
வருடமொருசதமுறினுமதித்துரைக்கவலரிலரோ &
யருநிரையக்கடற்றுயரப்பெருவெளத்துக்களவுண்டோ &

எ - து ஒவ்வொருநரகயாதனையைவிசாரிக்குமிடத் தனந்தமாயிருக் குமதனை ச்சொல்லப்படுமோ சொல்லுமிடத்து நரகங் களெல்லாவற் றிற்கும் பொருந்திய யாதனையையளவிட்டுநூறுவருடஞ்செல்லினும்அளமத்துச் சொல்லவல்லவர்களில் லையே,ஆதலாலுரைத்தற்கரிதாகியநரகக்கடலிற்றுக்கமாகியபெரு வெள்ளத் துக்கு முடிவுண்டோமுடிவில்லை எ - று. (௱௩௫)

நரகயாதனையினதிசயமுணர்த்துகின்றார்

வேதத்தினுகமத்தின்விதிவிகந்துவிடுத்தார்கள் &
வாதிக்கப்படுவரவற்றனைத்தினுந்தாமரியாரும் &
மேதைக்குண்மாதுரியர்கேட்டவுடன்வீவரெனப் &
போர்திக்குங்கடுந்தழலிற்கொடுவினையார்புகுவாரோ &

எ - து வேதாகமங்களிலேகற்பித்தவழிநடவாததனைவிகந்துவிட்டோரிங்ஙு னங்கூறிய நரகவிதங்களெல்லாவற்றினும் யமதூதர்களாலேவாதைபண்ணப்படுவ ர்கள் அங்ஙனம்வாதைப் படினுஞ் சாகவுஞ்செய்யார் புத்தியினாலேமிகவுங் கூரிய ராஞேரிந்தயாதனையைக்கேட்டமாத் திரத்திலேதானே சாவரொன்றுவேதாகமங்க ள்சொல்லுமாதலாலறக்கொடியதுன்பங்களைச்செய்யாநின் றவனல்போன் றநரக த்திலேயார்தான்புகுவர் எ று வீதல் - சாகுதல் (௱௩௬)

இயமதூதர்கள்நரகத்திலேகிடந்துவேதனையுறுமான்மாக் களுக்கு அவர்கள்முன்செய்தபாவங்களைபெடுத்துக்கூறியறிவுறுத்துந்திறத் தைப்பதினொருசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

வித்தகனற்றனையென்றுமதித்துவிரும்பிரோ *
பொத்தையுடற்பொறைநிற்குமெனப்பொய்புகன்றிரோ *
மொத்துமருற்றதுயக்கமயக்கமொழித்தாரோ *
மித்திரனைப்பரிவுற்றதன்மத்தைவிளைத்திரோ *

எ - து வெளி-வித்தகன்-சிவன்-உமர்-சுற்றத்தார்-மித்திரர்-இட்டர் [௱௮௭]

யாதனையுண்டுகொலென்றுதுயங்கியிருந்திரே *
நாதனுமுண்டுகொலென்றுகயந்துநவின்றிரோ *
யோதனமுண்டுகொலென்றவர்தம்மையொழித்திரோ *
வேதனைகண்டுவியந்துபயந்துவிழுந்திரோ *

எ - து வெளி-உண்டுகொலென்பது-உண்டோவென்னுமையம்-துயங்குதல் அறிவுவேறுபாடு-கயத்தல்-அடவம்-வியப்பு-அதிசயம் (௱௮௮)

கண்டகரோடுகளித்தறநெறிகறுத்திரோ *
யுண்டொருதெய்வமுமென்றவர்தம்மையுவர்த்திரோ *
யண்டர்தமாலயமாமரமற்றுமறுத்திரோ *
மண்டவில்வார்குழைமந்தெளியாரைவதைத்திரோ *

எ - து வெளி - கண்டகர் - துட்டர் - கறுத்தல் - நீக்குதல் - உவர்த்தல் கோபித்தல (௱௮௯)

பஞ்சகபாதகமென்றெளிதென்றுபயின்றிரோ *
நஞ்சனவெஞ்சொலைநற்றவரோடுநவின்றிரோ *
வஞ்சகநெஞ்சகமாதர்களிப்புமதித்திரோ *
யஞ்சனவேல்விழியார்குறுகற்புமழித்திரோ *

எ - து வெளி (௱௯௰)

ஓரவழக்கினைமன்பிலிருந்துமுரைத்திரோ *
யோரிடமொன்றுமையேமிகமேன்மையறைந்திரோ *
பாரினவேபொறையானையுநோய்மைபகர்ந்திரோ *
நீரினவேபிணியானையும்வெல்லநினைந்திரோ *

எ - து வெளி - நீரொனவேயினியார் - தண்ணீர்போலவினிமைசெய்யாநின்றசாத்துவிதகுணத்தையுடையவர்கள். [௱௬௧]

உற்றவிடுக்கணொழித்தவர்தம்மையுமோரீரோ *
மற்றவர்காணியுமெம்மதுவென்னமதித்திரோ *
சிற்றினமேயினமென்றுதெளிந்துசெறிந்தீரோ *
மற்றினமொன்றிடினன்புமறுத்துமருண்டீரோ *

எ - து வெளி - சிற்றினம் - அற்பர் - மற்றினம் - பெரியோர் [௱௬௨]

ஆதுலருற்றிடினேசமவர்க்குமறுத்தீரோ *
வாதவினோதிகள்வந்துறினசையைவைத்திரோ *
யேதிலர்குற்றமெடுத்தினையாமவிசைத்தீரோ *
சூதுபொருந்தொழினன்றெனவன்றுதுணிந்தீரோ *

எ - து வெளி - ஆதுலர் - மிடியர் - ஏதிலர்-குற்றமில்லாதவர்கள் [௱௬௩]

ஊறறிவொக்குமெனாதுயிர்மெய்யையொறுத்தீரோ *
வேறலவெம்முடலோடுமெனாதுமிசைந்தீரோ *
பேறுணவல்லதுமில்லையெனக்கைபிழைத்தீரோ *
சீறுதலேபொருளென்றுயிரன்புசெகுத்தீரோ *

எ - து நம்முடையதேசத்திலேபுண்படில்நோமாறுபோலவல்லவோவவர்க்குமென்றுவிசாரியாமற்பிறிதுயிருடல்களைக்கொன்றீரோ, நம்முடையசரீரமுந் திறுடையசரீரமும்பேதமலலவென்றெண்ணாததனைவிரும்பித்தின்றீரோ, மிங்ஙனம்பொசிப்பதேபரமமானபேறல்லாமல்வேறில்லையென்றுதன்மனெறியைவிட்டீரோ, கோபமேமேலானதென்றுன்மாக்களிடத்துக்கிருபையையாதவிட்டீரோ எ - று மிசைதல் - பொசித்தல். [௱௬௪]

ஈயுமவர்க்கிடையூறுகடேறவிசைத்தீரோ *
காயுமவர்க்கனுபந்தருமாயுள்களித்தீரோ *
ரோயுமுறப்பிறர்திமையுடற்குதுவன்றீரோ *
தூயரியற்றிடாவவலம்பலசொன்னீரோ *

எ - து ஒருவர்க்கொருவரொன்றையுகந்துகொடுக்குமிடத்தவர்கள்மனது

பேதிக்கவிக்கினங்களைச்சொன்னீரோ, யொருவனையொருவன்கோபிக்கும்போது வனைத்தடாமலதற்குடன்பட்டுச்சந்தோஷத்தையடைந்தீரோ, பிறர்சரீரத்துக்குவருத்தமுறப்பொல்லாப்புகளையேசொன்னீரோ, சுத்தான்மாக்களானோர்செய்யாத பொல்லாப்புகளைச்செய்தாரென்றுபலவாகச்சொன்னீரோ - எ - று -
அறுபந்தர்வடமொழி. (௱௬௫)

ஒழுக்குடையாரறிமேதையர்தம்மையுமோராதே *
புழுக்கமழுக்குமனத்துறவெம்மைபுகன்றீரோ *
சழக்கொழுவாய்வினைவாதனையுற்றமைதன்னாலே *
யழுக்குழியாங்களழுத்தவழுங்கியிருந்தீரோ (௱௬௬)

என்றழல்வாயழிவாரொடுதூதரிசைப்பார்க *
ளன்றறியோமிவையென்றவர்தாழுமயர்ந்தாழ்வர் *
பொன்றுவரோவினைபோமளவுந்துயர்பூரித்தே *
நின்றுறுவார்முனைவல்வினையாவுநினைந்தேதாம் *

என்பன ஒழுக்கமுடையோரையுமிகுந்தவறிவுடையோரையுமவர்கள் மகிமையை விசாரியாமல் உம்முடைய பொல்லாமனத்தின் கட்கமறுதலைப் பொருந்திக் கொடுமைகளைச்சொன்னீரோ, நீங்கண்மனக்கோணல்முதலியவற் றாலியற்றியபாவத்தினது வாதனுபெலத்தாலே யழுக்குழியாகிய விந்தநரகங்களிலே யாங்கள்வீழ்த்தவிப்பொழுது விருந்திருந்தீரோ யென்றிங்ஙனங்கூறிய பலவற்றையுமழல்வாய்த்தநரகத்திலழிவாரொடுமதூதர்கள்சொல்லுவர்கள்அந்தப்பாவிகளுமன்றிதனையறிந்தோமில்லையென்று சோர்ந்துவிழுவர்கள்இங்ஙனம்வேதனைப் படுகையினு முயிர்விடுவரோ வுயிர்விடுவதுஞ்செய்யார்பின்பு தாஞ்செய்தபாவந் தொலையுமளவுந்துக்கத்தையே நிறையப்பொருந்தி முன் தாஞ்செய்த கொடுவினைகளெல்லாந்தம்மனத்தின்கணினைத்துஅந்தநரகங்களிற்கிடந்து துயருறுவர்கள் எ று (௱௬௭)

அதிபாதகமுதலியபாதகத்தைச்செய்தோரனுபவிக்குங்கால
முன்றுசெய்யுளானுணர்த்துகின்றார்

வேறு

உற்றிடுவதொருநான்குகோடாரினுமொருவாதே *
பற்றியதிபாதகத்தைப்பரித்தார்கள்பாவியு *

மற்றையவிண்டலத்தினையும்வாரிகொருநாள்வரையு *
முற்றுமதிபாதகத்துக்கிணையதனைமுடித்தாரும் *

எ - து அதிபாதகத்தைச்செய்தோருமதிபாதகத்துல்லியத்தைச்செய்தோருமிருபத்தெட்டுக்கோடி நரகத்தையும் பொருந்திப்பிரமப்பிரளயகாலமாகியஆயிரஞ்சதுரயுகமதனைவிட்டு நீங்காதழுங்குவர்கள் எ - று (௱௧௮)

இரவிமதியுள்ளளவுமிவற்றழுங்கியிடுவார்கள் *
பிரமவதைமுதலாயபிழைபுரிந்தபேதையர்கள் *
விரவிடுவர்பாதகந்தைவிளைத்தார்கள்பதினான்குட் *
பிரமனொருபகற்பாதிமற்றையர்க்கும்பேசிடுவாம் *

எ - து பஞ்சமாபாதகத்தைச்செய்தவர்களிருபத்தெட்டுக்கோடி நரகத்திலேசந்திராதித்தருள்ளவரையுங்கிடந்தழுங்குவர்கள்.பாதகத்தைச் செய்தவர்கள் பதினாலுகோடிநரகத்திலே பிரமாவினது நித்தியப்பிரளயத்திற்பாதியாகிய ஐஞ்ஞூறுசதுரயுகமளவுங் கிடந்தழுங்குவர்கள். மற்றப்பாதகர்க்கு மேற்சொல்வாம் எ - று (௱௧௧)

பாதமுறப்பகலதனிற்பதினான்கிற்பாதிதனில் *
வாதையுறுவார்களுபபாதகத்தைமருவினர்கள் *
பாதத்திற்பாங்குறமூன்றரைக்கிற்பாவியர்கள் *
கேதமறும்பொழுதவலவினையனைத்துங்கெட்டிடுமே *

எ - து உபபாதகத்தைச்செய்தவர்களேழுகோடிநரகத்திலே யிருநூற்றன்பதுசதுரயுகமளவுங்கிடந்தழுங்குவர்கள்.அதற்குத்தன்னிதானபாவத்தைச்செய்தவர்கண்மூன்றரைக்கோடிநரகத்திலேநூற்றிருபத்தஞ்சுசதுரயுகமளவுங் கிடந்தழுங்குவர்கள்,இங்ஙனம்விதித்தகாலங்களளவுமதிபாதகமுதலியபாவத்தைச்செய்தவர்கள்.நரகத்திலேகிடந்து துக்கங்களையனுபவித்துத் தொலையும்பொழுது தவர்களைத்தொடர்ந்துநின்றகொடிதானபாவமெல்லாம்விட்டுநீங்கும் எ - று (௨௱)

பாவிகளானோரிங்ஙனம்நரகவிதங்களையனுபவித்து அக்காலந்தொலைந்தவாறேநரகசேடமனுபவிக்கும்படிக்குமீளவும்பூமியின்கண்வந்துபிறப்பரொன்பதனையஞ்சு செய்யுளாலுத்தரோத்தரவிசிட்டமாகவுணர்த்துகின்றார்,

வேறு

பாவபேதம்பாிற்றியபாவிக ✽
ளேவமாயநரகிடரெய்தியுந் ✽
தீவினைப்பலசேடமுஞ்சேரவே ✽
சேர்வர்முன்பயின்மண்மிசைத்தின்னமே ✽

எ - று வெளி (உளக)

அடைவர்தாபரபேதமனைத்தையும் ✽
படர்வாங்குளதுன்பபலத்திறும் ✽
விடுவர்தாபரயோனியைவிட்டபின் ✽
ஞெடுவர்கிடவுருவுந்துரிசரோ ✽

எ - து இங்ஙனம்பூமியின்கண் வந்தபாவிகள்தாந் தாஞ்செய்த கன்மத்துக்கிடாகமுதற்கட்டாபரயோனிபேதங் களெல்லாவற்றையு மெடுத்தாண்டுள்ளதுக்கங்களெல்லாமநுபவிப்பர்கள் - பின்பந்தத்தாபரயோனியைவிட்டுப் புழுவாய்ப்பிறந்துதுக்கங்களையநுபவிப்பர்கள் எ - று (உளஉ)

கிட்டியேகின்றகிடவுருவாமும் ✽
விட்டுமற்றைவிக்ககவுருவினைத் ✽
தொட்டுநின்றதுயர்பலதுய்த்தபி ✽
னெட்டுவார்விலங்கின்றுருயாவையும் ✽

எ - து இங்ஙனம்புழு வாயெடுத் தயாக்கை யைவிட்ட தந்குவேறுகியபறவையுருக்களாயெடுத்ததிலுண்டாகிய துக்கங்களெல்லாமநுபவித்துத் தொலைந்தவாறே மிருகசாதிகளாய்ப்பிறந்தாண்டுள்ள துக்கங்களையநுபவிப்பர்கள் எ - று (உளங)

விட்டுநின்றவிலங்கிறுருவினைத் ✽
தொட்டுளார்பசுவின்றுருத்துன்பமும் ✽
பட்டுளார்துயரம்பலபட்டபின் ✽
விட்டுளார்பெற்றமாகியமேனியும் ✽

எ - து பின்புமிருகசாதிகளாயெடுத்தயாக்கையைவிட்டுப்பசுச்சாதிவடிவையெடுத்தாண்டுள்ளதுக்கங்களெல்லாமநுபவிப்பர்கள், அங்ஙனந்துயரங்கள் பல வ

தருமமேபோலமேற்சாரும்வாரிதனைப் *
பருவமேற்றுவிலைநிலையம்பற்றுமே *

எ - று. ஆன்மாவானது புல்லினிடத்துப் பொருந்திய சலளப்பானபுழுவொருதலைபற்றியொருதலைவிடுமாறுபோலவர்த்தியகாலத்தேதானே வாராநின்றயாதனுசரீரமாகியசூக்குமதேகத்தைப்பற்றிப்பின்பர்தப்பூதசரீரமாகியதூலவுடலைவிட்டுநீங்கும் அங்ஙனம்யாதனுசரீரத்தை யெடுத்துக்கொண்டு செல்லும்போது நல்வினைப்பரிபாகமானாற் சுவர்க்கத்தை யடையுந் தீவினைப்பரிபாகமானால் நரகத்தை யடையும் எ - று. (௨௮)

மரிப்பதைப்பற்ற இரத்தலுங்கரத்தலுமே மிகுந்துக்கமென் றுணர்த்துகின்றார்

மரிப்பினைநந்துயர்மதிக்கின்மற்றிலை *
யிரப்பதேயதனினும்பெரியவின்னலே *
கரப்பதூஉமிரப்பதிற்கடியவின்னலே *
யிரப்பதூஉங்கரப்பதூஉமின்மையின்பமே *

எ - று. மிகுந்ததுக்கங்கள்பலவுளவாயினும் விசாரித்துப்பார்க்கும்போது மரிப்பதைப்பற்றவுமநந்துயர்வேறில்லை, யதனினுமிகுந்ததுக்கமொருவன்பாற்சென்றீதாகொம்வென்றிரத்தலே, யதனினுமிகுந்ததுக்கம் இரப்போர்க்கில்லையென்கையே, ஆதலால்தானொருவன் பாற்சென்றிரவாதிருத்தலுந்தன்பால்வந்திரந்தோர்க்கில்லையென்னாதிருத்தலுமிம்மையுமறுமையிரண்டினுக்குமின்பமாவது. எ-று (௨௯)

துறவுடையோர்மறுமையையிரண்டுசெய்யுளானுணர்த்துகின்றார்.

மண்ணினுந்தனத்தினுமனைக்குவாய்த்தநற் *
பெண்ணினுமகவினும்பெரியபேரினுந் *
துன்னெனவிழைவினைத்துறந்ததூயரே *
விண்ணினுமின்புடன்விளங்கிமேவுவார் *

எ - று. மண்முதலாகியபூமிகளினுந், தனதானியமுதலியவற்றினுந், தன்மனைக்குரித்தாகியநற்குணத்தையுடையபெண்டிருடனும், பிள்ளைகளிடத்தினுந், தன்னைப்பெரியோனென்றுசொல்லுங்கீர்த்தியினு, முண்டாகாநின்றவாசையைச்சடுதியில்விட்டசுத்தரே, தேவலோகத்தினுமின்பத்தோடுகூடிக்கீர்த்தியைப்பொருந்தியிருப்பர் எ - று. விண்ணினுமென்றவும்மையால், மண்ணினுமவர்களேநன்மையனுபவிப்பர்களெனவறிக. (௩௰)

ஆக்கையிற்றுயர்பெரிதற்பமின்பமென் ❀
றாக்கையையறவெறுத்தார்வங்கூர்வரோ ❀
லாக்கையினறுதியேமுத்தனுக்கவ ❀
னாக்கையுந்துயரமுமறுப்பனுணையால் ❀

எ - து சரீரமெடுத்ததினுலேதுக்கம்பெரிது, இன்பஞ்சிறிதென்றுவிசாரித்துத்தேகாதிபிரபஞ்சத்தைநன்ருகவெறுத்துத்தேகத்தினின்றும்அறுதிமுத்தனுகிய சிவனுக்குஅன்புபொருந்தியிருப்பாராயின், அந்தச்சிவனும், ஆக்கினசத்தியினுலே யாக்கைக்கேதுவானமலமாயாகன்மமாகியதுக்கத்தையொழிப்பன் எ - று

அறுதியேமுத்தனுக்கார்வங்கூர்வரோல் என்றுகூட்டிப்பொருளுரைக்க (கக)

ஆசையானதிருவிதப்படுமென்றுணர்த்துகின்ருர்.

வேறு.

ஆசைதானிருபேதமேயவையேயனுதியிலாதவன் ❀
பேசுநூல்விதிபேணியேசெயும்பெற்றிதான்முதன்மற்றதுந் ❀
தேசுசேர்வினைநிரவேவருசேதனுவிபரீதமே ❀
யாசிலாவரனுணையாலவையாள்வரோவுடலாளரே ❀

எ - து ஆசையானதிரண்டுவிதமாயிருக்கும், அதிலொன்று - அநாதிகாலத்திலேதொடுத்து ஆசையில்லாதிருக்கிற சிவனருளிச்செய்தவேதாகமத்தின்வழிதவறாமனடக்குமியல்பு, மற்றொன்று- நல்வினைதீங்கியவறிவுமயக்கத்தினுலிதுவே நிச்சயமெனக்கருதிச்செய்யுந்தீவினை, யாதலாற்சரீரத்தையெடுத்தவர்கள், அந்த நல்வினைதீவினையிரண்டினையுங்குற்றமில்லாத சிவனதாஞ்ஞையினுலேயநுபவிப்பர்கள். எ - று (கஉ)

ஆன்மாவுக்குமுற்கூறியஆசைமுதலாயினநீங்கி
வயிராக்கியம்பிறக்கவேமோக்ஷமுண்டாமென்று
ணர்த்துகின்ருர்.

ஆசைமோசமவாசவேரறவாளவாரியுமாயவே ❀
பாசநாசகவிசனுசிவபாததாமரைநாண்மலர் ❀
வாசநேசனுபூதியாவருவாதைபேதமிலாததே ❀
தேசுதேசமோசமோசிவயோசர்பூரணதேசரோ ❀

எ - து ஆன்மாக்களுக்காசையுண்டாக்குங் கன்மம்நீங்கச்சரீரத்துக்குக் காரணமாகியமாயையும்வலிகெடவாவைவகாரியங்களுநீங்கினவாறேபாசத்தைநாசிப்பிக்குமவனுமாய்-தனக்காணவாதிமுற்றமில்லாதோனுமான-சிவனுடையதிருவடித்தாமரையினதுபரிமளத்தையன்புடனநுபவித்திருத்தலே, வேறொருவாதையுமில்லாதது, அங்ஙனமநுபவத்ததையுடைய முத்தான்மாக்களுடையஞானம், ஏகதேசமல்லச்சிவனைப்போலச்சருவஞ்ஞத்துவாதிகுணங்களோடுகூடிவியாபித்திருக்கும். எ - று ஆணவாதியென்பதனால் விந்துதிரோதானமுமெனவறிக (௯௩)

முற்செய்யுளிலான்மாவைவியாபியென்றவஃதையிச்
செய்யுளிற்சாதித்துணர்த்துகின்றார்

வேறு.

ஏகதேசவுடலுற்றவர்க்கறிவுமேகதேசமலதில்லையே ✽
யேகதேசவுடலற்றபோதுமறிவேகதேசமெனலென்சிவ ✽
னேகதேசவுடலற்றவன்னறிவுமேகதேசமலவாதலா ✽
லேகதேசவுடலற்ற முத்தனறிவேகதேசமலவென்பரே ✽

எ - து ஏகதேசவுடலைப்பொருந்தினவான்மாக்களுக்கறிவுமேகதேசமேயல்லாமல் வியாபகம்விளங்காது, ஏகதேசவுடலாகியபெந்தத்தைநீங்கினபோதறிவையேகதேசமென்றுசொல்லவேண்டுவதில்லை, அஃதேதுகாரணத்தாலெனில் சிவன்ஏகதேசசரீரமில்லாதவனாகையாலேயவனுடைய வறிவுமேகதேசமல்ல - வியாபியே-யது போல - ஏகதேசவுடனீங்கினமுத்தான்மாக்கள்றிவுமேகதேசமல்லசருவ வியாபியே. எ - று (௯௪)

முத்திக்குமலக்ஷயம்பிறத்தலேமேலானகாரணமென்
றுணர்த்துகின்றார்.

வேரறப்பணையுமற்றுமற்றொழிழியும்வேறவற்றுறுதன்மேவுமே ✽
யாரணத்திணையுமாகமத்திணையுமாயுமற்புதனலாரியன் ✽
பேரருட்பெறவனுகிமுத்தனொடுபேதமற்றநிலைபெறுதான் ✽
கூரிருட்குழுவறுத்தறுக்குமுடல்கூடமுத்தனநுகூலமே ✽

எ - து யாதொருமரமானதுவேரற்றவாறேயதனுடையகொம்புபணைகாய் பூவெல்லாம்நாசமடைந்துமேலுமுற்பத்தியுமுண்டாகாதவாறுபோல, வாணவமா

யெங்கிறைந்தவிருவினைகளுடனேயுடலானதுமலமாயாகன்மத்தோடுங்கூட நாசத்தையடைந்து முத்தியைப்படையும். அஃதென்னெனில்வேதாகமங்களையயர்ந்திரிபறவுணர்ந்தஞானாசாரியனதுமிகுந்தகிருபைபெற்று அறுதிமுத்திஞானியசிவனோடு கூடியிரண்டறவயிக்கியமாயிருப்பதேமேலானபேறு. எ-று தான் - அசை (௧௫)

இங்ஙனம்பெற்றமுத்தான்மாவினுடையதன்மையு
மவர்கள்சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுரோ
ன்பதூஉமுணர்த்துகின்றார்.

முத்திபெற்றவனழுக்கினைத்தினையுமுற்றவிட்டுமுளையற்றவ ✽
னித்தனுத்தமனிருத்தசுத்தசுகசிற்கனத்துநிலையுற்றவன் ✽
யுத்தனைத்தவிதமுற்றுமிக்கபிரபுத்தனைக்கெழுவுபூரணன் ✽
றத்துவத்தொகைமலத்தொடற்றுமுடலைப்பெறப்பிறர்சமைப்பனோ ✽

எ-து முத்தான்மாவானவன்ஆணவாதிமலங்களைமுழுதும்போக்கி மேற்சென்னமில்லாமலிருப்பவன், நித்தியனுமாயுத்தமனுமாயொருபொருளினும்பற்றில்லாதசுத்தனுமாய்ச் சுகஞானசொரூபத்திலே நிலைபேறுடையனுமாயெக்காலமும் புதுமைசெய்திருப்போனுமாய் அப்பொருள்விதங்களெல்லாவற்றினும்பொருந்திப்பிரபுவுமாயிருக்கிறசிவனுடனேயயிக்கமாயிருக்கிற அந்தவியாபியானவன் கருவிகரணங்களுடனே கூடியதத்துவகூட்டத்தையும்ஆணவாதிமலங்களுடனே கூடப்போக்கடித்திருந்தமற்றவான்மாக்களுடலினைப்பெறுதற்குத்தான் சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவனோபண்ணான் எ-று ஓகாரம் - எதிர்மறை (௧௬)

மேன்முடிந்ததமுடித்தலென்னுந்தந்திரவுத்தியா
லுணர்த்துகின்றார்.

வேறு.

என்றுபிறவித்துயரறப்பலவிசைத்தான் ✽
றன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ✽
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைநைய ✽
நின்றமுனியன்றுமாசிற்குணனினைந்தே ✽

எ-து வெளி (௧௭)

மேற்சிவத்துதிபுணர்த்துகின்றார்

வேறு.

முரிவல்லானை முருக்கினனே முதிர்சடைசூடி முருக்கினனே *
பாரியோர்பாலுறப்பண்ணினனே பாடிய நான்மறைப்பண்ணினனே *
கூரிருளாடிடுங்கொள்கையனே கோல்வளையார்பலிகொள்கையனே *
காரியகாரணனானவனே கரிசறக்காயமுன்னானவனே *

எ-று ஆங்காரத்தையும்வலியினையுமுடையயானையின்றோலையுரித்தவனே,முதிர்ந்ததிருச்சடாபாரத்திற்பலாசம்பூமாலையைத்தரித்தவனே,பார்வதியாரையொருபாகத்திலேபொருந்தவைத்தோனே, நாலுவேதங்களைப்பாடிய-இசையையுடையோனே, மகாசங்காரகாலத்திலே திருநடமேதொழிலாகச்செய்யுங்குணத்தையுடையோனே, அழகியவளையினைத்தரியாநின்ற இருடிகள்பத்தினிமாரிடும்பிச்சையையேற்குங்கையையுடையோனே, நாதமுதலியகாரியங்களுக்கு நிமித்தகாரணனாயுள்ளவனே, ஆணவாதிதோஷங்களையறும்படிதெகிக்கமுதன்மையையுடையோனே எ-று கோலம் - கோலென்றாயிற்று. (௧௮)

இதுவுமது.

என்வினைதன்னையிறுத்தவனே யேதுயிதென்னவிறுத்தவனே *
முன்மலவானை முருக்கினனே முன்னினர்நெஞ்சுமுருக்கினனே *
யன்னையுமத்தனுமற்றவனே யகமெனுமற்பனுமற்றவனே *
முன்னொருவேள்விமுடித்தவனே முதிர்சடைக்கங்கைமுடித்தவனே *

எ-று யான்செய்தகன்மங்களெல்லாவற்றையும்போக்கினவனே, யான்மாவினுடையசொருபமேதென்றுவிசாரிக்கவறிவுண்டாக்கினவனே, பிரமனுமாலுநானேகருத்தாவென்றுமைபலுற்றவிடத்துந்தழற்பிழம்பாய்த்தோன்றியவர்கள் அஞ்ஞானத்தைப்போக்கினவனே- தன்னைத்தியானஞ்செய்தவர்களுள்ளத்தையுமுருகப்பண்ணினவனே, மாதாபிதாவில்லாதோனே, நானென்றுமகங்காரத்தையுடையபுல்லியருமுன்னையல்காதபிரமவிட்டுணுக்களே, தன்னையிகழ்ந்துசெய்ததெக்ஷப்பிரசாபதியாகத்தைநாசம்பண்ணினவனே, முதிர்ந்ததிருச்சடாபாரத்திலே கெங்காபவானியைத்தரித்தவனே எ-று அற்பன் - மற்றவன் - என்னுமொருமையைப்பன்மையாக்குக (௧௯)

கந்தன்றுதியுணர்த்துகின்றார் வேறு

தமலமற்றிடமேசார்தாய்மனைதனையர்மற்றையர்தாமாரோவென் *
விமலமித்தகவிறார்வேறறுவிதூலசிற்கனதாதாவானவன் *
சமலமறபதிவெகுகாலாதியர்கடிறெருபூக்கரியானுர்காய்வழி *
யமலனற்புதனுனேமிற.பிதந்தருள்குகற்கி ஷியாளாவாமமோ *

எ-து தனக்கன்பரானோர்க்குத்தங்களுடையவாணவாதிதோஷம்போகவும் அன்புபொருந்தியதாய்பெண்டிர்பிள்ளைகள்மற்றுமுண்டாகியபந்துசனங்களையிவர் கள்யார்யாமொன்றும் வெறுப்புவரவும்மேன்மைபொருந்தியஞானமயத்தைக் கொடுக்குந்தாதாவுமாய்- இலக்குமிபதியாகியதிருமாலும்பிரமாவுமுதலாயினோ தவர்கள்வந்துவிமலனேவித்தகனேயொப்பிலாதவனேயென்றுதோத்திரஞ்செய்து தனதுசிபாதத்திலேவணங்குகையாலிரக்கமில்லாதவராகியவித்திபுன்மாலிமுதலிய ர்முப்புரத்திலேயெரித்தவில்லினையுடையனுமாய்-மலமில்லாதவனுமா-யதிசயத்தை யுடையனுமா-யிடபவாகனத்திலேயேறுவோனுமாயிருக்கிறசிவன்பெற்றசுப்பிரம ணியர்த்து, யாமுன்போற்சென்னசாகரத்திலகப்டாமலினியடிமைப்படு வாம். எ - று (௱)

அகத்தியர்துதியுணர்த்துகின்றார்

மருவிபுற்றனேநீயேநியவிமருவுவித்தநுமாதாவாருயி *
நிருமாறுந்தனேநீயேநியவேயெனவெனக்கியல்வானேயவன் *
மாயபுற்பியவாசார்காரநின்மலியநற்றவர்மாடேநிடிய *
வநூவளைப்பயிலானுமாதவனருளகத்தியனுமுருகமே *

எ-து குன்றுமறும்வினைத்தமணம்பொருந்தியசரீரசிலும் நெருங்கிநல்ல தபோதனர்களும்பக்கத்திற்பொருந்திய அரியபொதியின்கணிருக்கிறமகர் தவத்தினையுடையனுமாய்க்கிருபையையுடையனுமாய்முப்பத்தாறுதத்துவமேசரீ ரமாகவுடையனுமாயிருக்கிற-அகத்தியமுனிவனே, யிந்தத்தேகத்திற்பொருந்தினவ னும்நீயோநீயல்லவிந்தத்தேகத்தையுண்டாக்கினதமாதாவுமல்லவுடலினுண்டாகிய ஆனவத்தைநீக்கினதம்நீயோநீயல்லவென்னும்வாக்கியத்தையெனக்குத்தெரிவித் தவன். எ - று நீயோநீயல்லவென்றதுன்மானவக்கருதிவிளுவுகையாற்கூட்டிமு டிப்பான்கருத்தாவென்றகருதிற்று - ஆனவம்-நீக்காமை (௱க)

எட்டாவது செனனமரணவியறுவா
முற்றும்.

ஒன்பதாவதுசுவர்க்கநரகசேடவியல்

மேலிவ்வோத்தென்றுதலிற்றோவெனின் - ஒத்துநுதலி யதூஉமோத்தினதுபெயருணர்ப்பவேவிளங்கும் - ஆ யினிவ்வோத்தென்னபெயர்த்தெனில் - சுவர்க்கநரக சேடமநுபவித்தற்கெடுக்குஞ்சரீரத்தைக்கூறிற்றுதலா ற்சுவர்க்கநரகசேடவியலென்னும்பெயர்த்து- முன்னை யியலின்கட்செனனமரணதுக்கங்களைக்கூறிப்பூமியின் கணிருவினைக்கிடாகச்சுவர்க்கநரக சேடமாகியசரீரங் களையெடுக்குமிலக்கணத்தைக்கூறினமை பாலதன்பின் விதனைவைத்தார். இதனுள்ளித்தலைச்செய்யுளென் றுத லிற்றோவெனின்நல்வினைதீவினைசெய்தோர்.உயர்ந்தசா திதாழ்ந்தசாதியிற்றோற்றுமுறைமையைத்தொகுத் து ணர்த்தலுதலிற்று.

புண்ணியர்விண்ணவர்தம்புரிபுக்கே *
மண்மறையோர்குலமாய்வருமாறும் *
பண்ணினர்தீவினைபாதளமுற்றே *
தண்ணியரானகையுமின்றுசமைப்பாம் *

எ - து வாராயகத்தியனே. புண்ணியததைச்செய்தவர்கள்சுவர்க்கலோகத்திற் சென்று, அங்குள்ளபோகம்பொசித்துத்தொலைந்தவாறே பூமியின்கட்பார்ப்பார்மு தலியநற்குலத்தில் வந்து பிறக்குமுறைமையினையும், பாவத்தைச்செய்த பேர்கணி ரையத்தின்கண்ணழுந்தியாங்குள்ள துன்பங்களையனுபவித்துத்தொலைந்தவாறேதா ழ்ந்தகுலத்தில் வந்தபிறக்குமுறைமை யினையு மிப்போதுனக்கு. யாம். சொல்லாநி ன்றோமதனைக்கேட்பாயாக. எ- று (க)

நிறுத்தமுறையானேபுண்ணியஞ்செய்தோர் பூமியின்கண்வந்துநற் குலத்திற்பிறந்துசற்கன்மத்தையடைந்து மோக்ஷமடையுமுறைமை யைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேதகனேறியவேதவிதிக்கே *
சாதகர்வானவர்தம்புரிபுக்கே *

மோதகராயதன்வாழ்வு முடித்தே *
வேதியராவர்கண்மேதினிமீதே *

எ-து ஆன்மாக்களுக்கறிவுவிளங்கச் சிவனருளிச்செய்தவேதாகமத்தின்வழியனுட்டித்தவர்கள்- சுவர்க்கலோகத்திற்சென்று சந்தோஷத்தையுடையராய அந்நன்னபோகங்களை யநுபவித்திருந்தப் போகந்தொலைந்தவாறேபூமியிற்பிராமணராய்வந்துபிறப்பர்கள். எ-று

மோதகம். சந்தோஷம் (௨)

முன்னையநல்வினைவாதனையுளத் *
தூன்றுவர்நால்விதியானதொடர்ந்தே *
மென்மலர்மண்மிசைநல்வளமியத் *
தன்னிகரில்லிதன்றனைதரித்தே *

எ-து முற்செனனத்திற்செய்த புண்ணியத்தின் வாதனாபலத்தினாலேயிச்செனனத்தும்வேதாகமங்களையோதியநன்வழியை யறிந்தனுட்டித்துத்தனக்குநிகரில்லாதசிவஞானமுடைய விபூதிகண்டிகைமுதலிய சிவவடையாளங்களைத்தரித்துச்சிவார்ச்சனைசெய்துபூமியின்கண், எண்வகையைசுவரியத்தையுமுடையராயிருப்பர்களாதலால்தன்பால்வந்திரப்போர்க்கியுமதற்கவர்களுக்கெதுதான் குறைச்சல். எ-று

எண்வகை ஐசுவரியமாவன- இராசாங்கம்- மக்கள்- சுற்றம்- பொன்- மணி- நெல் வாகனம்- அடிமை- (௩)

முற்றுவர்நல்வினை முற்றியபின்னர்ப் *
பற்றுவர்வானுபரும்பதிபெற்றித் *
துற்றுவர்போகமிதம்பலதுற்றிப் *
பற்றுவர்பற்றறவீசனற்பாதம் *

எ-து இச்செனனம்பூமியின்கட்சற்கன்மத்தையேசெய்து கொண்டிருப்பர்கள் பின்னரந்தப்புண்ணியபரிபாகம் பிறந்தவாறேமேலான சிவலோகத்திற்சென்றுநானாவிதமாகியபோகங்களைப்போசித்திருப்பர்கள்; இவ்வண்ணமது அனுபவித்தந்தப்போகத்தில்வயிராக்கியம்பிறந்தவாறே வேறொன்றிலும் விருப்பமற்றுச்சிவனது ஸ்ரீபாதகமலத்தையேசேர்வார்கள். எ-று [௪]

மேலிறந்தமுறைபாவனை பாவத்தைச்செய்தோர்நரகத்தின்கட்கிட
ந்தழுந்திநின்றுபூமியின்கட்பிறக்கும்போததாங்கள்செய்தகன்மத்

துக்கீடாகியசரீரங்களெடுப்பவொன்பதனையிரண்டுசெய்யுளானுணர்த்துகின்றார்

வேறு

ஈட்டினர்பாவபேதமிரக்கமிலியமதூதர் ✽
கூட்டியநரகபேதக்குழிவிழுந்தழுங்கியாழ்ந்து ✽
மீட்டுமண்ணிழிந்தயோனிவிதமெலாம்விரவிமுன்ன ✽
மீட்டியவறத்தினாலுநரர்தனுவெடுக்கும்போதும் ✽

எ-து முற்கூறிய அதிபாதகமுதலிய பாவங்களைச்செய்தவர்கள் கசிவில்லாதறி யமதூதர்கள்செலுத்தியவிருபத்தெட்டுக்கோடி நரகக்குழியினும்விழுந்தழுந்திக்கி டந்துதுயருற்றுமீளவுமிந்தப்பூமியின் கண்வந்தீன யோனியாகிய தாபரமுதலியவறு வகையோனியினையு மெடுத்துத்தொலைந்தவாறே முற்செனனத்திற்செய்தசற்கன்ம வாதனுபலத்தினான்மானிடயாக்கையெடுக்கும்போதும். எ-று
அறத்தினாலுமென்றவும்மையால்மறத்தினாலுமெனவறிக,தனுவெடுக்கும்போதுமெ ன்றவும்மையாற்றனுவெடுத்தலரிதென்க (௫)

வஞ்சகமனத்தராயும்வாக்கினையிழந்தாராயுஞ் ✽
செஞ்சொலைக்கேட்குமற்றைச்செவியினையிழந்தாராயு ✽
நஞ்சிடவழுகுநோயினடலைமெய்யுடையராயுந் ✽
தஞ்செயற்கிசையவாளைவழியினிற்சரிப்பர்தாமே ✽

எ-து வேதாகமங்களில்விதித்தனசெய்தலும் விலக்கியனவொழிதலுமென்னு மியல்பினைவிட்டவான்மாக்கள்கன்மானுகுணமாகக்கற்பித்தகடவுளினது பிரேரக த்தினாற்றத்தமனதுக்கேற்ற படியினாலே நடந்தபாவிகளானோர், வஞ்சகமனத்தை யுடையராயுமூமராயுஞ்செவிடராயுஞ்சரீரத்தின் கணமுருகன்முதலிய வியாதியை ப்பொருந்தியதனாற்றுக்கத்தை யுடையராயுமிப்படியே பலபல வடிவையெடுத்துழ லாநிற்பர் எ று. (௬)

மேலதிபாதகமுதலியபாவஞ்செய்தோர்நரகசேட த்துக்கிடாகப்பூமியின்கணதற்கதற்கேற்றவடை யாளங்களைப்பொருந்தியந்தவுடற்கண்ணேயெய் துந்தீவினைப்பயன்களை முப்பத்தஞ்சுசெய்யுளானு ணர்த்துகின்றார்.

உறவுமாயுயிர்கட்கெல்லாமுயிருமாயொழிவிலாத *
வறவினையரனைநெஞ்சத்தனிட்டருமவலவாக்கை *
பிறவிநோய்ப்பிணியைத்தீர்க்கும்பெருமையகுரவன்றன்னைக் *
கறுவியமனத்தினாலேகரிசுறுங்கடையர்தாமும் *

எ - து சருவான்மாக்களுக்குஞ்சுற்றமுமாயுயிர்க்குயிராயவர்களிடத்திரண்டறவியாபித்துநிற்போனுமாய்ப்புண்ணியசொருபனுமாயிருக்கிறசிவனைத்தூடணஞ்செய்தவனிடத்திலன்பில்லாதநெஞ்சையுடையபாவிகளும், பொல்லாதவுடலையுடையபிறவிப்பெரும்பிணியைத்தீர்க்கையிலுற்சேதிக்கும்பெருமையினையுடைய ஞானாசாரியனையும்,வெறுப்பினையுடையமனத்தினால்-அவ்வண்ணமென்னும் பாவிகளும். எ - று (எ)

மலத்தினுட்கிருமியாகிமாண்டுமாண்டுதித்துமாறு *
வலக்கணுற்றுழல்வர்நிந்தையறைந்தவர்யாவராலும் *
விலக்கரும்விதனமுற்றுமுயலகன்வியாதிமேவிக்
கலக்கியவுளத்தராகிக்கதறியேகழல்வர்தாமே *

எ-து மலத்தட்புழுவாய்ச்செனித்துச்செனித்திறந்திறந்தொழியாததுக்கத்தையுற்றுக்கிடப்பர்கள்-சிவனையுங்குருவையுங்குருபுத்திரனையுநிந்தைசொன்னவர்கண்முயலகனென்னும்வியாதியைப்பொருந்தியொருவராலுந் தடுக்கப்படாத துக்கத்தையுற்றுக்கலங்கியமனத்தையுடையராகக்கதறிக்கொண்டுதிரிவர்கள் எ-று (அ)

கருத்துடனேவல்செய்யாக்கசர்கள்குரவன்காதை *
திருத்தினுந்திருந்தாவுள்ளத்திமிரரோயாவரேவல் *
கருத்துறச்செய்வார்தம்மைக்கலைத்தவன்கோம்பியாவன் *
சிரத்துநோயுடையன்றானுஞ்சினப்பனேற்சினத்தபோதில் *

எ - து ஆசாரியனேவலைச்செய்யப்பெற்றேமென்றுமனத்துடன்செய்யாத பொல்லாதவர்கள்-ஆசாரியர்இதிகாசமுதலியபுராணத்தைச்சொல்லிக்காட்டிப்புத்திசொல்லினுங்கேளாதமனக்கோணலையுடையராய்ப்பிறப்பர்.அவரேவலைச்செய்யுமாணாக்கரைக்கலைத்தவன்; ஓந்தியாய்ப்பிறப்பன்- ஆசாரியரும்பிராமணருங்கோபித்தபோதுதானுமவரைக்கோபித்தானாகில் அவன்மண்டைவியாதியையுடையனாயிருப்பன் எ - று காதை - எ - து - இரண்டாம்வேற்றுமைத்தொகை [௯]

அந்தணன்றன்னைக்கொன்றனருங்கயரோகியாவன் *
றந்தமும்பழுதேயாகுந்தனரியலையருந்தினோர்க்குச் *
சிந்தியதநரியாவன்செம்பொனைத்திருடினானுங் *
கொந்தியகுட்டநோயன்குருமனைகுழுவினானே *

எ-து பிராமணனைக்கொன்றவன்-சயரோகமென்னும் வியாதியைப்பொருந்துவன், மதுபானம் பண்ணினவன்- சொத்தைப்பல்லையுடையனாய்ப் பிறப்பன், பொன்னைத்திருடினவன்பலகாலும் அறுக்கப்பட்டசொத்தைநகத்தையுடையனாய்ப்பிறப்பன், குருதாரகெமனம்பண்ணினவன் குடாரியாற் கொத்தப்பட்டகுட்டவியாதியையுடையனாய்ப்பிறப்பன். எ-று (௰)

பாம்பெனுமுருவந்தன்னைப்பரித்திடும்பகைக்குமஞ்சித் *
தேம்பியேதிரிவன்றெய்வத்திரவியங்கவர்ந்தநீம்பன் *
பாம்பணைப்பள்ளியானைப்பழிமொழிபகர்ந்தபாவி *
கோம்பியாயுதரவங்கிகூர்ந்திடக்குலையுமன்றே *

எ-து சிவத்திரவியங்களை யபகரித்த பொல்லாதவன்- பாம்பாகப்பிறந்துதன்னையடித்துக்கொல்லும்பகையாகிய கெருடன் முதலியவற்றிற்கு மாலிடர்க்கும்பயப்பட்டுக்காட்டிலேகிடந்து தேம்பித்தேம்பித்திரிவன் அந்தநாகந்தனைப்பாயாகத்துயிலுமாயனை நிந்தைசொன்ன பாவியானவன். ஒந்தியாய்ப்பிறந்து. உதராக்கினிமேலிட்டு, அதினாலேநடுங்காநிற்பன். எ-று (௰௧)

பறைந்தவனயினோடும்பழுதுறுபதிதனோடும் *
புறம்புறுபுலையனோடும்புறம்புறுபுலையனாவன் *
அறந்தனைமறந்தபாவியவனொடுமிருதுவாரி *
உறைந்திடுமவளைக்காமுற்றுவகையோடுளைத்தான்றானும் *

எ-து நாயுடனுங் குற்றத்தையுடையவிரதபங்கனுடனும் நீசனுடனும் அதற்கதற்கேற்றகன்மத்தைச்செய் யாதொழிந்தபாவியுடனும், இருதுவானவளுடனும்வாஞ்சித்துமகிழ்ச்சியுடன்வார்த்தைசொல்லுமவனும், நீசனாய்ப்பிறப்பன். எ-று (௰௨)

கருவினுள்ளழிவன்முற்றிக்கழிந்துடனழிவன்காளைப் *
பருவமுற்றழிவனிங்கபகர்ந்துபின்னுதவாப்பாவி *

பெருவிலைக்கனரியாதும்பிறந் தூயிர்வதைத்தபேதை *
கருதியபொருளைத்தங்கோர்க் குதவிடான்பிளைத்தகையன் *

எ-று யாதாமொருவர்க்கொருபொருளைக்கொடுத்தற்கிசைந்து பின்னைக்கொடாதவன் மாதாவினது கருப்பத்தின்கண்ணே நாசத்தையடைவன், பெரிதாயிருக்கின்ற விலையிருவுங் கன்னிகளிருவுமிருக்க பட்சிமுதலியனவைகளைப் பிடித்துக்கொன்றுஅறிவில்லாதவன் கெற்பமுற்றிப் பூமியின்கட்பிறந்தவுடனே நாசத்தையடைவன், தபோதனர்க்கென்று நியமித்த பதார்த்தங்களையவர்களுக்குக்கொடாமற்றானேயபகரித்தவர்கள் பேரெம்புருகரும்ப நவத்திலேயிறப்பன். எ-று (௰௩)

அரவையவடனைத் தங்கு தன்பிப்பறித்திடுமொக்கையாருஞ் *
சுவைபிளைவிரும்பியுண்ட துட்டர்கள்சோலைதன்னைத் *
தியமியநினைத்தெங்குக் கிண்ணரியதிரக்கன்னை *
யவமதியாலெசாலவழித்திடுமற்பர்தாமும் *

எ-று முற்சேனைகளில்மாங்கிசக்களை விரும்பிப்பொசிக்கும் பொல்லாதவருஞ், தோட்பிள்ளையினைத் தேங்கித்திவலெதெறிக்கஅலையெறியா நின்றதிண்ணியதாமெயரி துறைமுதலியவற்றிற்கரைகளையும், துர்போதபுத்தியினாலேவெட்டியழிக்குமற்பருந், துட்டவியாதியைப் பொருந்தி யுறப்புக்கவெல்லாந்துறைந்து நாசத்தையடையுமாக்களையுடையராய்ப்பிறப்பார்கள். எ-று (௰௪)

தூவகைபாகத்தோன்றுமமக்கிடாதருந்திறநும் *
தெய்வமேகோமகனென்றுதெரிந்தவச்சிந்தையற *
தையலைக்காமுற்றுந்தனாந்துகற்புடையாடன்னைப் *
பொய்புயக்கியகாப்புல்லும்புலையனும்பன்றியாவான் *

எ-று தெய்வயாகம் பிதிர்யாகம் பசுயாகம் மாநுடயாகம் பிரமயாகம் எனக்கூறியஐம்பெரும்வேள்விமுதலிய வைவகையாகங்களிற்றனக்கியன்றதொன்றைச்செய்யாமற்பொசித்தோனுந் தன்னைவளர்த்ததெய்வமென்று கொண்டுவேறுவிகாரபுத்தியைமொழிந்தபுத்திரமியை யாசைப்பட்டவனும் பதிவிரதையாகியபாரியைவிட்டுப் பொய்யைமெய்யாகவே சொல்லிப்பசப்பும் பொதுமடவாளைக் கூடும் பாவியான பொல்லாதவனுமிப்பன்றியாய்ப்பிறப்பன். எ-று (௰௫)

ஒருகுடிப்பிறந்தாள்போகமுகந்தவனூர்நாயாவான் *
றருமமேயெமக்குமோக்கந்தனைத்தருவதென்று *

கருணையாலன்னசாலைகாப்பதுகற்பலாறு *
பொருளினைமறித்துச்செய்தான்புலையனும்நாயுமாவன் *

எ-து அன்னியகோத்திரத்திலுண்டான கன்னிகையை விவாகஞ்செய்யாமற்றன்னுடையகோத்திரத்திலுண்டானகன்னிகையை விவாகஞ்செய்தவனூர்நாயாய்ப் பிறப்பன். தனங்கொடுத்துத் தருமஞ்செய்யுங் கருத்தாவுக்கும் அவர் கையிற்றனத்தைவாங்கித்தன்மதத்தைக்குறைவறநடத்துகிறாமக்கும்புண்ணியமொக்குமென்றுகருதியன்னசத்திரமுதலியவற்றைக்கிருபையுடன்விசாரிக்குமந்தமுறைமையல்லாமற்றனக்கொருபிரயோசனத்தைக்கருதி விசாரிக்கிறவன் சண்டாளனாகப்பிறந்தபின்புநாயாகவும்பிறப்பன். எ-று (௰௬)

வேறு

இம்மைப்பயனைக்குறியாதேயிறைவன்றிருவாலயமதனுட் *
செம்மைசிறக்கமாபூசைசெய்விப்பவரேசிறப்புடையார் *
இம்மைப்பயனைக்குறித்தியற்றுமதிகாரியர்நாயுடலெடுப்பர் *
புன்மைப்புலையனொடுமுடலும்பொருந்திவிடுவர்புகழினையே. *

எ-து இம்மைப்பயனாகியதிரவியமுதலியவற்றைக்கருதாமற்சிவனாலயத்தில்வைபோகமாசமகாபூசைகளைச்செய்விக்கிறவர்களே மறுமைப்பயனையடைகிறவர்கள். இம்மைப்பயனைக்குறித்துச்சிவனதுகாரியங்களைவிசாரிக்குமவர்தமதுசீர்த்தியைப்பொழித்துநாயாய்ப்பிறந்தபின்புசண்டாளராகவும்பிறப்பர். எ-று (௰௭)

எங்கள்குரவன்பெரியனெனவென்றுமதுகற்பதுவல்லார் *
உங்கள்குரவனெப்பியனெனநுவலும்பரிவாதவர்தாமும் *
பங்குபத்தர்விழிபிழந்துபார்வைதனையுமிழந்தார்கள் *
அங்கணவற்றைக்கேட்டார்கள்கேள்விப்புலனற்றவர்தாமே *

எ-து யாதாமொருவர் தம்முடைய குருவைப்பெரியனெனக்கருதி யிருப்பதேமுறைமை யஃதல்லாமற் பிறனாசோக்கி யும்முடைய குரவனொன்றுமறியானெனச்சொல்லுமகாபாதகரானவரு மூடருமா யுருவமுதலியவற்றைப் பார்க்கக்கண்ணில்லாத குருடருமாய்ப்பிறப்பர். அவ்விடத்திலேயிருந்தக் குருநாடனைத்தமெனங்களிக்கக்கேட்டிருந்தவர்கள் செவிடராய்ப் பிறப்பர். எ-று.

பரிவாதம்- குற்றஞ்சொல்லுதல் வடமொழி (௰அ)

கன்னிலாக்கிருமியாவன்கருத்தினுங்குருவையன்னெஞ்சிற *
வென்னரினன்குரவன்றன்னையிடர்ப்படக்குய்யர்தன்னிற் *
புன்னையுமுறுவன்பின்புபுகன்றவனபவாதத்தைக் *
கன்றுளத்திலவேயாகிக்கரத்தினைக்காப்பவன்றே *

எ - து குருவாசாரியனையற்பனெனமனத்தின் கண்விசாரித்தவன் கன்னிலே கிருமியாகப்பிறப்பன் மற்றைச்சனனத்திலே மாதுடனாய்ப்பிறந்து குய்யத்திலே வியாதியைப்பொருந்துவன் அந்தவாசிரியர் செய்யாத கருமத்தைச்செய்தாரென்று பொய்மொழிசொன்னவன் அறிவற்றமனத்தை யுடையனாய்ப் பிறந்து கழுதை மேய்த்துக்கொண்டிருப்பன் எ - று (௰௯)

பரமனுங்குருத்தாவேவற்பத்தியகருத்தாத்தேவர்க் *
குரிமையிற்பூசைமற்றுமுழுற்றிடாவூனத்தாலே *
வரமறமரியனாவன்வாய்த்தநற்சுற்றத்தார்க்கு *
முருகிடாதொழிந்தான்கண்டுமிடியனுமுறுவன்கல்லேறாய் *

எ - து முதன்மையானவிராசாயினது வேற்கன்னிற் குமவனவ்வனாயன் கற்பித்தபடி சிவன்முதலிய தேவர்களுக்குப்பூசைதிருநாள் நடப்பி வியாதகுற்றத்தாலே விரதமையுடைய அரியனாய்ப்பிறப்பன் அச்சிவனடியார்க்கு மனமுருகாது கண்டொழிந்தவன் வறியனுமாய்க்கண்ணேறுவுமுறுவன் எ - று (உ௰)

விருந்தியையத்தாதுள்ளேவிற்றிருந்தடிக்குனே *
யருந்தினவ்கபோலவேயனருந்தவர்க்கருத்தாமுன்னு *
னருந்தியேயவனாப்பின்னையருந்தியவவனெநெஞ்சின் *
வருந்தவேமருவுநோயன்மாறுமோமருந்தினாலும் *

எ - து தன்மனையிடத்துப்புதிதாய்வந்தவதிதிகளைப்போசிப்பியாமற்றனொருவனுமாயுண்டிருந்த அன்றதிதிகளைப்போசித்தவன், சன்னத்திலேவியாதியைப் பொருந்தித்தயருமவன் அரியதபோதனர்களைப்போசிப்பிக்குமுன்னேதான்போசித்து பின்பவர்களைப்போசிப்பித்தவன் நெஞ்சிலே சுவாசகமென்னும் வியாதியைப்பொருந்தித்துக்கத்தையுடையவன் அந்தவியாதி மருந்துகளினாலும் போமோபோவதல்ல எ - று [உ௧]

ஒருகளமொளித்துக்கொண்டாறுதரமந்தாங்கியாவன் *
வாய்தரிற்புன்னுறுபாவன்வயுக்கிடைக்கூடமாக் *

வீதிவன்செய்தானென்றேவியம்பியவிழுதைதானும் *
வாய்தனிற்புண்ணேயாவன்வாக்கினுல்வழுக்கலாலே *

எ-து பரிவுடனவ்வன்னத்தைத்திருடிப்பொசித்தவன்மூலாக்கினிசொலி யாதவனுய்ப்பசியின்றியிருப்பன். அஃதன்றி - வாயின் கட்புண்ணையும் பொருந்து வன்வழக்குச்சொல்லுமிடத்து ஒருபாலுள்ளாசைகொண்டு ஒருவர்செய்தகு ற்றத்தையின்ன திவர்செய்தானென்று விளங்கச்சொல்லாதுமறைவினுற்சொன்ன வறிவில்லாதவனும்வாயினுல்வழுப்படக்கூறலாலேயவ் வாயின்கட் புண்ணையடை வன் எ-று (௨௨)

கண்டனினோயுமாவன்காறனிற்புண்ணுமாவன் *
கொண்டநோய்கண்டுதன்னைக்குறுகியபெரியோர்தம்மை *
விண்டவன்பிதாவைத்தாயைவிரும்பியசுற்றத்தாரைப் *
பண்டையோர்தமையும்நெஞ்சிலிரக்கமும்பாங்குமற்றே *

எ-து. யாதாமொருவனொருவியாதியைக்கொண்டிதனைப் போக்குவார் யாவரெனத்தேடித்தன்பால்வந்தபெரியோரையுந்தனதுமாதாபிதாக்களையுந்தன்னி டத்தன்பினையுடைய சுற்றத்தாரையுஞ்சினேகித் தபேர்களையுமிரட்சியாமல்மன தின்கட்கிருபையையுமுரிமையையுமொழித்துத்தள் ளிவிட்டவன்கண்ணுக் காட் டினையுங்காலிலே புண்ணையுமுடையனாய்த்துக்கத்தையுறுவன் எ-று (௨௩)

சொற்றவிப்பலன்கடன்னைத்துன்னுவன்சோரன்சோரற் *
குற்றுடன்பட்டான்றனுழைத்தவூனுபாபிதானும் *
பத்தினிபலருட்பக்கபாதத்தையொருத்திபாலே *
முற்றினனலியனென்றுமுடையுடலெடுக்குமூடன் *

எ-து பிறர்சொத்தைக்கவருங்கள்ளனுயுள்ளானும் அந்தக்கள்ளனுக்குத் துணைச்சென்றேனுமதற்குபாயஞ்சொல்லிக்கொடுத்தவனு முன்னர்ச்சொன்ன கண்ணோக்காட்டினையுங்காலிலேவியாதியையும்பொருந்தியதனுற்றுக்கத்தை யுறு வன். தனக்குப்பாரிகள் பலவுண்டாயிருக்கில் எல்லாரையுஞ்சமமாக நடத்தாது ஒருத்தியிடத்திற், றனேயிருந்தபக்ஷபாதத்தையுடையனுயிருக்கிற அறிவில்லாத வனுற்றத்தையுடைய தேகத்தையெடுத்தலியனாய்ப்பிறப்பன் எ-று (௨௪)

வெள்ளிபட்டாடைதன்னைவிரும்பியேயெடுத்தகையன் *
கொள்ளுமேகுட்டநோய்நீர்க்கோவையென்றுதரநோயா *

றுள்ளமுமொல்கிவாடுமுதகநீர்ப்பந்தர்தன்னை ✽
கள்ளசத்திரத்தைநல்லார்படுத்துறநாசஞ்செய்தான் ✽

எ - து வெள்ளியையும்பட்டுப்புடைவைமுதலியதுகிலினையுமாசைப்பட்டுத் திருடினபொல்லாதவன், வெள்ளைக்குட்டமென்னும் வியாதியைப்பொருந்துவன், தண்ணீர்ப்பந்தரையும்நல்ல அன்னசத் திரங்களையும் பெரியோர்கள்துயரு ற அழித்தவன் - நீர்க்கோவையென்னுமுதரவியாதியைப்பொருந்தியதனாலுள்ள மெலிந்துருசுகத்தையுறுவன் எ - று (உ௫)

புலையனேயாவன்கோவிப்பூதிநாசிகனேகோளன் ✽
கலகமேவிளைத்தான்கன்னிக்காட்டிப்புன்னகையினாலும் ✽
வலமுறுமழுகல்வாயன்வனத்துமாகனமேயாவன் ✽
விலைசெய்வாளியந்தன்னைப்பித்தினாகவரிவேறும் ✽

எ - து மிகுந்தகோபத்தையுடையவன், சண்டாளனாகப்பிறப்பன், கோட் சொல்லுமவன், சிமிழ்ப்புத்தையுடையநாசியையுடையனாவன், நயனபார்வை இரைபாவைமுதலியவற்றால், ஒருவனுக்குச்சண்டையைமூட்டினவன், நன்மை யில்லாததுர்க்கந்தத்தையுடையவாயையுடையனாவன். நயம்பித்தலை சாமனைமற் றுமுள்ளபதார்த்தங்களையுந் தக்கமக்கேற்றதொழிலில்லாதோன்விற்கில், அவன் மலைப்பாம்பாய்ப்பிறந்துபருவன். எ - து (உ௬)

செலவுறமென்றுமாலவட்டமுந்திருடுந்திம்பன் ✽
வலமிலனெனுந்தன்னைமதித்துவாமனனேயாவன் ✽
கொலையிடையூர்திபுன்னுமனையுறக்குலைத்துநோவ ✽
னலமுறமிறவியந்தனாவினைவதைத்தவப்பன ✽

எ - து ஆலவட்டமுஞ்சிறியுந்திருடினபொல்லாதவன், எந்நாளுந்துயரத் தைக்கிருப்பிடமாய்த் துயரினையேயுறுவன், தானொன்றிலும்வன்மையில்லா தவனாயி ருந்தும்யானே தக்கவல்லவன்தக்கவல்லவனென்று தன்னைப்பெருமைபண்ணி க்கொள்ளுமவன்மிகவுங்குள்ளனாய்ப்பிறப்பன், இடபத்திலேறித்திரியுமவன், கடி த்தலைத்திப்புண்ணைப்பொருந்தியதனால்நோவெய்யுநிதரையுறுவன்பசுவைவதைத் தவர்பனாவன், பிறவிக்குருடனாய்ப்பிறந்ததுன்பத்தையுறுவன் எ-று (உ௭)

கோவினைத்துக்கஞ்செய்தான்கோணியனேசியாவன் ✽
கோவிலுக்கிரக்கமில்லான்கூறிடிற்சிபுடற ✽

காவியங்கண்ணரிநீங்காக்கற்பினாளவன்பார்த்த *
லோவினன்களத்தினினீங்காக்கறலைப்புபுடையானன்றே *

எ - து - பசுவைத்துயருறுவித்தவன் - கோணன்மூக்கினையுடையனாய்ப்பிறப்பன், சகலதேவருக்குமிருப்பிடம் பசுவாதலாற் பசுவினிடத்திலேயிரக்கமில்லாதவன், உள்ளேகொப்புளத்தையுடைய நாசியை யுடையனாய்ப்பிறப்பன் சமூர்த்திகள்போன்றகண்ணையுடைய பதிவிரதாபாவத்தை விடாதவளிடத்தன்பில்லாததனவனானவன் கண்டத்திலேயொழியாதபுளக்கழலையையுடையனாவன். எ - று [உ௮]

விற்றவன்சோமந்தன்னைவேட்டைவார்வேடனாவன் *
றுற்றினன்கடத்திற்கூலிவேலைசெய்துரிசனாவன் *
கற்புறுமானைதன்னைக்காப்பவன்றாரிலந்தன்னை *
விற்பவன்றானுங்கூலிவிரும்பிப்பிற்கொடுத்தவீனன் *

எ - து யாகாதிகர்மநிமித்தமாக ஆட்டாங்கோடியைவிற்றவன் வலைமுதலியவற்றால் வேட்டையாடும்வேடனாய்ப்பிறப்பன்; சட்டிபானைமுதலியவற்றிற்பொசித்தவன் கூலிவேலைசெய்யும் பாவியாய்ப்பிறப்பன் -- வாணியனலலாமனென்னைவிற்றவனுங்கூலிச்காசைப்பட்டிருக்கும் விடுதொடுக்கும்வீணனும் யானைப்பாகனாய்ப்பிறப்பன். எ - று [உ௯]

களத்தினிற்கண்டமாலைகழித்தலூன்முதலுண்கல்ல *
லுளத்திலன்பொழித்துநூலைப்போதினன்மூகனாவன் *
றளத்தியல்கோசந்தன்னைத்தற்கரன்சாத்தியந்தன் *
பளக்குமூக்குடையான்பாங்கார்தருமநூல்பழித்தபாவி *

எ - து சாத்திரத்திலேமன்னர்முதலாயினோர்க்காகாதெனநீக்கியமாங்கிசத்தையும் உள்ளிமுதலானபதார்த்தத்தையும்பொசிக்கும் பொல்லாதவன் - சமுத்திரகண்டமாலையென்னும் வியாதியுடையனாவன் ஆகமபுராணங்களையுள்ளத்தின்கட்சிரத்தையின்றியாசாரியர்கட்டாயத்தினாலே யாதினவன்மூகனாய்ப்பிறப்பன், ஆகமசாத்திரங்களை யெழுதிய திருமுறையைத்திருடினவன் - பிறவிக்குருடனாய்ப்பிறப்பன் - சிவாகமமுதலியவுரிமையான நூல்களைப்பழித்தபாவியானவன் - கொப்புளத்தையுடைய மூக்கையுடையனாவன் எ - று (௩௰)

கற்புளார்செயலைநொய்துகழறினன்காத்தைக்கண்ணா *
னற்றவர்தேவர்ஞானயோகர்நல்லறஞ்செய்வார்கண் *

மற்றுமுத்தமர்பாலன்புவைத்திலன்கோணல்வாயன் *
பற்புழுப்பயிலுநோயன்பழுதுளைப்பவனிவார்பால் *

எ-து பெரியவர்களனுட்டித்தவாசாரத்தைநோய்மைபண்ணி நிந்தித்தவன் - மாறுகண்ணனுமவன் - நல்லதைபோதனர்கள் - தேவர்கள் - ஞானயோகிகள் மிருந்தபுண்ணியத்தைச்செய்வோர்கள் மற்றுமுள்ளபார்ப்பார்முதலியவுத்தமரிவர்களிடத்துக்கிருபையில்லாதவன் - கோணல்வாயையுடையவனுமவன் - யாதாமொருவர்க்கொன்றைக்கொடுப்போர்களிடத்துக்கொடாதபடிவிகாதம்பண்ணினவன் - பல்லிலேபுழுவுடைத்தாகியநோயையுடையவனுமவன் எ-று (௫௧)

சலமெனும்வாதியாவன்றகைபெறுசமையந்தன்னை *
நிலைகுலைசெய்தான்கள்ளநிசாநேசஞ்செய்து *
கொலைவிலக்கிடுவான்றுறுங்கோணியவழக்குக்கூறும் *
புலையனும்பொருந்திமன்றிற்புந்தியிற்புன்மையாலே *

எ-து தகைமைப்பாட்டையுடையசிவசமயத்தைப்பேதித்தவனுஞ்-சோரராகியவினைவிநாசவனவன்றுக்கிலைபண்ணுகையிற்பட்சபாதத்தினாலேயவனை விடுவிச்சிறவனும் - அம்பலத்திலேயிருந்து செவ்வைவழக்கைச்சொல்லாததனாது புத்தியிற்புன்மையால் லாங்கிறுமிலை வழக்கல்லாவழக்கைச்சொல் லுமீனனுஞ்சலவாதியாவன் எ-று (௫௨)

எளியனாவனைத்தவந்தவிர்கைளுமில்லான் *
களவிலாவடியார்தம்மைக்கறுத்தொறுத்தவன்கைகாலுந் *
தளர்வுறக்குட்டநோயுந்தாங்கியவுடலனாவன் *
விரிபவன்கொண்டநோன்புவிடிழந்துழல்வன்வேறே *

எ-து ஏழையாயுள்ளவெயளாயவரிடத்தபராதமின்றிவதைத்தபொல்லாதவன் - கைகால்முதலியவுறுப்புகள் குறைந்தவனுமவன் - களவில்லாதவடியாரைக்கள்வரெனக்கருதிக்கோபித்தடிக்குமவன் - கைகாலுந் - தளர்ந்துகுட்டவியாதியையுமுடையனுமவன்-தான்சங்கற்பித்தனுட்டித்தவந்தவிரதங்களையிடையிதுகாலங்களில்விட்டவன் - தானிருந்தவீட்டையிழந்துவேறுமுள்ள விடங்களிலேபோய்த்திரிந்துழல்வன். எ-று (௫௩)

நிடியமனைவியல்லான்மற்றைநேரிழையாரோடு *
கூடிப்பேசதுராங்காதியாடியகொள்கையாளன் *

கேடுறுமுடலினைப்பகேசியேயாவன்கேழரி
நீடிளைத்திடக்கைவிட்டான்பரிபவப்படுவனெங்கும்

எ-து தன்னுடையபாரியல்லாமன்மற்றுள்ளோர்பாரிகளுடனேகூடியிருந்துசது ரங்கஞ்சொக்கட்டான்முதலியவற்றையாடிப்பொருந்தொழிலையு டையவன்-நாசத் தையடையவின்றசரீரத்தின்கண்,அற்பரோமத்தையுடையவனுவன் சுற்றத்தாரரா ஞோர்தமதுசெல்வம்போய்மிடியரானவிடத்துஅவர்களுக்கியன்றதுகொன்புட்டுதவா மற்கைவிட்டவன்போனவிடத்தெங்கெங்கும்அபூச்சிய ஞு ய் பி ந் தி க் க ப் ப டு வன் எ-று. (௩௪)

பொருதவன்சதுரங்காதிபொதுமடவரலாரோடு
திருவறவுருவுமின்றித்தீம்பரும்புடையேசேரத்
தருபவரொவரோவென்றுதளர்ந்துடற்றுறச்சிபேசித்
திரிவனேயிரந்துநின்றுதீர்த்திடாச்செல்லலோடே

எ-து வேசியர்முதலியபொதுமடவாருடனேசதுரங்கமுதலியவற்றைப் பொருதவன், செல்வமுமின்றிச்சவுந்தரியமும்போய்ப்பொல்லாதவர்களும், பக் கத்திலேசூழக்காசுபணமுதலியவற்றைத்தருவாரொவரோவென்றுசுருதிந்தாழ்ச்சி களைச்சொல்லிச்சரீரம்வாட்டத்தையுற்றுருக்காலுந்திராததுக்கத்துடனே யிரந் தருந்தித்திரிவன். எ-று (௩௫)

அருக்கனத்தமனத்தன்மனிலடைந்தவர்க்கிடங்கொடாதான்
பரித்திடும்பாரிதன்னையிழந்துளம்பதைப்பன்பாங்கால்
விரைத்தெழுந்தெதிர்கொளாதான்விரும்பியபொருளைவிழ்ப்பன்
மரித்தனல்வேதத்தாராத்தபோதனர்தமையுந்தாழ்ந்தே

எ-து ஆதித்தியனத்தமனகாலத்திலேதனது மனையிடத்தேவந்துசேர்ந்த வர்களுக்கில்லங்கொடாதவன் - அக்கினிசாட்சியாகக்கைப்பிடித்தபாரியையிழந் து - உள்ளத்தின்கண்ணேதுக்கத்தையுற்றுத்திரிவன் - நால்வேதத்தையுமோதிய வேதியருந்தபோதனர்களுந் தன்னிடத்துவந்தகாலத்துச்சடுதியிலெழுந்திருந்து தேவரீரொழுந்தருளப்பெற்றதேயென்று - இனியவசனங்களைச்சொல்லிப்பணிந் தூ ரிமையுடனேயெதிர்கொள்ளாதவன் - தான்ஆசைப்பட்டுழூர்ச்சித்திருக்கிறபொரு ள்களைப்போக்கடிப்பன். எ-று. (௩௬)

வேதநிந்தகனேபுன்மையிடக்குறும்புலையனாவன் *
வேதநல்லந்தநிந்தன்வெவ்வினைவேடனாவன் *
வேதஞானிநிந்தைவிளம்பினன்பித்தனாவன் *
வேதியர்பொருள்கொண்டான்விளக்குறுவிட்டிலாமே *

எ-து வேதாகமங்களைத்தூஷித்தவன்பொல்லாதவிடக்கைப்பொசிக்கும் புலையனாய்ப்பிறப்பன் வேதாந்தமுதலியசாத்திரங்களைத் தூஷித்தவன் - வெவ்வியகொலைத்தொழிலைச்செய்யும்வேடனாய்ப் பிறப்பன் - வேதாகமங்களையோதியுணர்ந்தஞானவான்களைத்தூஷணஞ் சொன்னவன்-பயித்தியங்கொண்டு போவன் வேதியர்பொருளையபகரித்துக்கொண்டவன் விளக்கின்கண்வீழுகிறவிட்டிற்பூச்சியாய்ப்பிறப்பன் எ-று (௬௭)

விட்டிடாவியாதியாளனாயிட்டிகவிரதம்விட்டா *
னொட்டகமாதியின்மைதுனிபிரமேகரோகி *
யிட்டமிக்கிளைஞருநாரியைத்தோய்விக்கப் *
பட்டவைம்பருவத்தன்னிற்பாங்கலாமற்றைப்பாலும் *

எ-து நயிட்டிகப் பிரமசரியத்தைமரணாந்தம்வரையு மனுட்டிக்கவென்று சங்கற்பித்துக்கொண்டதை முடிவுபோகவனுட்டியாமலிடையிதுகாலத்திலே விட்டவன்சரீரத்திலேஅனவரதகாலமுமொழியாதவியாதியைப்பொருந்துவன்மாதருடன்கூடும்தற்காகாதெனவிதித்தவிதிபாதமுதலியபஞ்சபருவங்களிலுமுரித்தல்லாதமற்றத்திதிநட்சேத்திரங்களிலுமாசைமிகுதியாலேதனது பாரியைக்கூடினவனும் - ஒட்டகமுதலியவற்றின்யோனிகளிலேமைதுனஞ்செய்தோனுஞ் சுக்கிலப் பிரமேகமென்னும்வியாதியையுடையவனாவன். எ-று
ஒட்டகமாதியென்றதனால் - கழுதை-குதிரையெனவறிக - பிரமேகம்-மேகவியாதி. [௬௮]

தந்தைபாற்றாய்பாலன்புதவிர்ந்தவன்றனமுழின்றி *
நைந்துளம்நடுங்கவுற்றுநாடியபலத்துளொன்றும் *
வந்துகைகூடாதவாறிவன்மனத்தின்கண்ணு *
மந்தரமடைவனென்றும்பிறர்பழியறைந்தவற்பன் *

எ-து மாதாபிதாவினிடத்திலே - அன்புவையாது விட்டவன் - தரித்திரனுமாயுள்ளத்தின்கண் நடுக்கத்தையுற்றவருந்தித்தனக்குவருமென்றிருந்தபதார்த்தங் களிலேயொன்றும் வந்துகைகூடாமலதினாலேமனத்தின் கட்டுக்கத்தையுறுவன்

பிறனாயடாப்பழிசொன்ன அப்பனானவன் - அழகுகெட்டகண்ணை யுமிளைத்த நெஞ்சினையுமுடையனாயெந்நாளுந் துக்கத்தையேயுறுவன். எ - று [௩௯]

கூட்டியேயவலர்தம்மைக்கூறினான்பெரியோர்குற்றம் *
நாட்டமும்பீழ்துங்கநீங்காநடலையையுறுவன்மாலை *
சூட்டியகணவன்றனைத்துறந்தகத்தூய்மையற்ற *
வாட்டடங்கண்ணிமாதரைமருவினான்வாதரோகி *

எ - து பொல்லாதவர்களைக்கூட்டியச் சபையிலேபெரியோர்கள்செய்திருக்கிறகுற்றத்தைச்சொன்னவன் - கண்ணிலேபூளையும்புறப்பட்டு அதினாலே யொருகாலுமொழியாததுக்கத்தையுறுவன் - தன்னையக்கினிசாட்சியாகமாலையைச்சூட்டிக்கைப்பிடித்தகணவனிருக்கவும்-அவனைவிட்டுப்பதிவிரதாபாவகத்தையுங்குலைந்தசோரபத்தாவுடனேகூடக்கருதும்வாள்போன்றகண்ணினையுடைய மாதரைக்கூடினவன் - வாதவியாதியைப்பொருந்துவன் எ - று (௪௰)

மிருதியின்வழியின்விட்டுவேண்டியதெல்லாஞ்செய்தா *
னுருவினுமனத்துந்துன்பமொருவிலனென்றுமற்றைக் *
கரிசருங்கலப்பார்தத்தங்கடுவினைக்கிசைந்தகட்டம் *
விரியுநூல்துயரபேதந்தனித்தனிவிளம்பும்வேலை *

எ - து மனுமுதலியமிருதியின் வழிநடவாததன்மனதுக்கேற்றபடி வேண்டியதனையெல்லாஞ்செய்தவன் - சரீரத்தினு - மனத்தினும் - எக்காலமுமொழியாததுக்கத்தையனுபவிப்பன் ஈண்டுக் கூறியதன்றிமற்றைப்பாவபேதங்களைச் செய்த - அதனானரகசேடத்தைப்பொருந்தியபாவிகளுந் - தாந்தாஞ்செய்துள்ளபொல்லாவினைக்குத்தக்கதுயரங்களையுறுவர்கள் - அவைகளையும்விளங்கக்கூறினாலாகாதோவென்னிலந்தத்துயரபேதங்களைத்தனித்தனியே விரித்துச்சொல்லுமிடத்திந்தநூல்விரியுமாதலாற்கூறிற்றிலர் - அதனைக்கன்மபரிபாகநூலில்வந்தவழிக்காண்க. எ - று (௪௧)

அதிபாதகமுதலியபாவஞ்செய்தோரடையும்பயனை
யும்அவர்பின்னர்ச்செய்யுஞ்செயலையுமேனுமோர்
வகையாற்றொகுத்துமூன்று திருவிருத்தத்தா
லுணர்த்துகின்றார்,

வேறு

பன்முறையாமதிபாதகரோ பன்னெடுநாண்மலபாதகரோ ✽
பன்மையாமகபாதகரோ பம்பலபன்றிமெய்ப்பற்றுவரோ ✽
பன்மைமற்றையபாதகரோ பற்பலநோயுடல்பற்றுவரோ ✽
பன்மையவாமுபபாதகரும் பற்பலபமரசாதியரோ ✽

எ-து பலகாலுமதிபாதகத்தைச்செய்தவர்கள் - நெடுநாளாகநரகத்திற்கிடந்தநுபவித்துப்பூமியின்கண்ணேமலத்திற்கிருமியாகியநுபவிப்பர்கள் - பலகாலுமகாபாதகத்தைசெய்தவர்கள் - ஊர்ப்பன்றிமுதலியபன்றியுடலையெடுப்பர்கள் - பலகாலுமகாபாதகவுபபாதகத்தைச்செய்தவர்கள் - பலபலநோயுடலையெடுப்பர்கள் - பலகாலுமுபபாதகத்தைச்செய்தவர்கள் - பலபலவண்டிச்சாதியாய்ப்பிறப்பர்கள். எ-று (௪௨)

பன்னினர்முன்னதிபாதகமேபன்னுவரோயதிபாதகமே ✽
பன்னினர்முன்மகபாதகமேபன்னுவர்பின்மகபாதகமே ✽
பன்னினர்மற்றையபாதகமுன்பன்னுவர்மற்றையபாதகமே ✽
பன்னினர்முன்றுபபாதகமேபன்னுவர்பின்றுபபாதகமே ✽

எ-து முற்செனனத்திலதிபாதக - மகபாதக - முபபாதகம் - இவைகட்குத்துல்லியபாதகங்களிவைகளைச்செய்தவர்கள் - இச்செனனத்துமவ்வண்ணமேயந்தப்பாவவிதங்களை-முன்னரிபற்றியவாசனைப்படியேசெய்வர்கள் எ-று ௪௩

பன்னினர்மற்றையபாவவிதம்பன்னுவரோபலபாவவிதம் ✽
பன்னினரோர்பரிகாரவிதம்பற்றிலர்முற்றியபாவவிதம் ✽
பன்னிலரோர்பரிகாரவிதம்பற்றியவாழ்குழிபற்றுவரோ ✽
பன்னியபாதகசேடமுறப்பாரிழியோனியும்பற்றுவரோ ✽

எ-து முற்செனனத்திற்பாவத்தைச்செய்தவர்கள் - இச்செனனத்திலுமந்தப்பாவத்தையேவிரும்பிச்செய்வர்கள் - ஒருசெனனத்திற்செய்தபாவமற்றோர் - செனனத்துந் - தொடருமாகையாற்குற்றம்போம்படிக்குப் பரிகாரஞ்செய்வாராயினந்தப்பாவபலத்தையுறார் - வைதிகத்துந் - சைவத்துங்-கூறியபடியாசாரியராற்பரிகாரஞ்செய்துகொள்ளாதிருப்பாராயின் - அக்குற்றம்போகாது-ஆதலாலந்தப்பாவபலம் - போம்படிக்குநரகத்திற்கிடந்தழுந்துவர்கள் - அங்ஙனமந்தநரகவனுபவத்திற்போகமநுபவித்துத்தொலைந்தவாறே யந்தப்பாவசேடமநுபவிக்கைக்கின்பொருட்டுப்பூமியின்கண்ணிழிந்தசாதியாயும்பிறப்பர்கள். எ-று. (௪௪)

மேன்முடிந்ததமுடித்தலென்னுந்தந்திரவுத்திபா லுணர்த்துகின்றார்.

என்றுவினையொன்றுபலசேடமுமிசைத்தான் ❀
றுன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ❀
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினையை ❀
யின்றமுனியன்றுணரநிற்குணவினைந்தே ❀

எ - து வெளி [சரு]

மேற்சிவத்துதியிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு.

அன்றறமாநியறைந்தவனேபருக்கனுரைப்பலறைந்தவனே ❀
குன்றவிலங்கையிற்கொண்டவனேகோலவிலங்கையிற்கொண்டவனே ❀
வென்றிநினைந்துவிலங்கலுமேமிண்டியெடுக்கவிலங்கலுமே ❀
யன்றவலுகமரக்கினனேயவனிசைக்கங்கியரக்கினனே ❀

எ - து சிருட்டியாரம் பத்திலேயகத்தியர்முதலாயினோர்க்கற்முதலியநான் கினையுமுபதேசித்தவனே - யாதித்தியனுக்குரமாயிருந்தபல்லையுடைத்துப்போக் கினவனே - மகமேருவைவில்லாகவுள்ளங்கையிற்பிடித்தவனே - யழகுபொருந் தியஇலங்காபுரியையிருப்பிடமாகவுடையவிராவணன்தனதுவெற்றிப்பாட்டைக்க ருதித்திக்குவிசையம்பண்ணப்புறப்பட்டவவதரத்திற்கயிலாயபருப்பதத்தைக்கண் டதனைமிடுக்கினாலேயெடுக்க-அவனதுசரீரத்தைப்பெருவிரலாலூன்றிநெருக்கினவ னே - பின்பந்தஇராவணன்றனதுமுன்கைநரம்பைவாங்கியாழாகப்பண்ணிச்சாம வேதத்தைக்கானம்பண்ண-அந்தவிசையினாலே சந்தோஷித்து அக்கினியின்மெழு குபோலவுருகினவனே - எ - று ஏகாரங்கள் - ஈற்றசை [சசு]

வாக்கிறைநோயினைமாற்றினனேமனமயலாதிக்குமாற்றினனே ❀
தூக்கியசுந்தரன்றூதுவனேதொண்டர்முகந்துணுந்தூதுவனே ❀
பாக்கவிப்பாண்டியன்மந்திரியேபாசமறப்பகர்மந்திரியே ❀
நோக்கரிதாகியநுண்ணியனேநொடிபஞ்சியூன்கலனுண்ணியனே ❀

எ - து வாகீசராகிய அப்பருடைய சூலவியாதியைப்போக்கினவனே,யெ ன்மனத்துண்டாயமயக்கமாகிய தீமைக்குப் பகைவனாயுள்ளோனே, தமிழ்நடை

க்செய்யுளாகிய திருப்பாட்டையருளிச்செய்யுஞ் சுந்தரப்பெருமானாயனார்க்குத் தூதுசென்றவனே, பரமானந்தமான அமிர்தத்தையடியார்முகந்து பருகுதற்குப் பாத்திரமாயுள்ளவனே, பாக்கவியினாலேபுலவர்கள் துதிக்கப்படாநின்ற பாண்டியனுக்கு மந்திரியாகிய தென்னவன் பிரமராயருடைய மலமாயாகன்மம் போம்படிக்குக்குருந்தின்கீழ் ஆசாரியமூர்த்தமாயெழுந்தருளியிருந்துபதேசித்த இரகசியப்பொருளையுடையவனே, வானக்கண்ணினாலேகாண்பதற்கரிதாகிய சூக்குமமாயிருப்போனே, தாருகாவனத்திலிருடிபத்தினிகளழைத்திடாநின்ற பிச்சையையூணை யுடைத்தாகியபிரமகபாலத்திலேற்றுண்பவனே எ று. (௪௭)

குமாரன்றுதியுணர்த்துகின்றார்

வேறு

மாலயன்மயலுறவுமாலெரிவடிவுடைய *
காலனைவெருவுறவுங்காய்ந்தகழலடிய *
னாலதனிழல்மருவுமாரணனவனருளும் *
வேலனதிருபதமும்வேணினமோவேணினமோ *

எ - து மாலும்பிரமனுந்தாங்கள்செகத்துக்குக்கருத்தாவென்று மயக்கத்தையுறஅக நிரும்படிக்குத்தோன்றிய பெரிய அக்கினிச்சுவாலையை யுடையனுமாய் - மார்க்கண்டர் நிமித்தமாகவந்த இயமனைக்கலக்கத்தக்கதாகவுதைத்த வீரக்கழலையணிந்த ஸ்ரீபாதத்தையுடையனுமாய்வடதருவினிழலிலேயிருந்து வேதாகமங்களையருளிச்செய்தோனுமாயிருக்கிறசிவன், தரப்படாநின்ற சுப்பிரமணியனுடைய இரண்டுஸ்ரீபாதத்தையும் விரும்பினவர்களே, பெருமையையுடையவர்கள் எ று (௪௮)

அகத்தியர்துதியுணர்த்துகின்றார்

திருகநினைபவருஞ்சிவகதிதருவதுதா *
னேதெனவெனுமவருமெனதுநாவினிதமிழி *
னேருதகவொருமையுடனுலகுயவுமையுதவும் *
போதகனருள்புணரும்பொதிமலைமுனிபுகழே *

எ - து குற்றந்தீரக்கருதுமவரும், சிவபதத்தையடையும்நெறியாதெனவினைக்குமவரும், வருவீராக யான்சொல்லுமொழியினை நன்றாகவுணருமின், வையகமெல்லாமுய்யும் பொருட்டு உமையாளருளிச்செய்த ஞானசாரியனாகிய குமர

னது திருவருளைப்பெற்ற பொதியின்மாமலையிற்றமிழ்முனிவனது கீர்த்தியை யொருமைப்பாட்டுடனேவந்தனைசெய்தோறாக எ று (௬௧)

ஒன்பதாவதுசுவர்க்கநரகசேடவியலுரை

முற்றும்.

பத்தாவதுசிவஞானயோகவியல்.

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின்-இத்தநுத
லியதூஉமோத்தினதுபெயருரைப்பவேவிளங்கும்,
ஆயினிவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற்சிவஞா
னயோகவியலென்னும்பெயர்த்து - மேலையோத்தி
னோடியைபென்னையோவெனின்முன்னையவது
ட்புண்ணியபாவங்களுக்கீடாகச்சரீரமெடுத்தவர
து - அடையாளங்கூறியவதனுட்புண்ணியபலத்தா
ற்சரீரமெடுத்தவர்கள்ஞானாசாரியனையடைந்துசி
வஞானயோகத்தையடையுமுறைமைகூறினாராதலி
னதனோடியையுடைத்தென்க-இத்தலைச்செய்யுளெ
ன்னுதலிற்றோவெனிற்கிரியாபாதத்துமுறைமை
யைக்கூறிமேல்ஞானயோகத்தின்பகுதிகூறுதலா
ல்விநாயகத்துதியுணர்த்துதனுதலிற்று.

ஒருவனிரண்டறவெங்கணுமொழிவறவொன்றியுணின்றவ *
னிருவரகம்பரமென்றவர்க்கிகலறவன்றெரியொன்றின *
னருளியவைங்கரனன்பர்களகவினைநைந்தறவன்புசெய் *
கரிமுகனம்பவளம்புனைகணபதியெங்களிகண்களே *

எ - து நட்பில்லாதயனுக்கெவ்வுலகின்கண்ணும் - நீக்கமின்றிப்பேதமறக்கலந்துநிற்பானாகிநாமேபிரமமென்றமாலயனாகிய இருவரதுமாறுபாடுநீங்க -

அக்காலத்தமுகிலை யுடைவாகியவிறைவன்றரப்படாகின்ற ஐந்துகரத்தினையுடைய ருதித்தனரடிக்கன்பர்கள்வினைதெய்ந்த போகக்கருணைசெய்யும்யானைமுகத்தினை யும். அழகியபவளம்போன்ற நிறத்தினையுமுடையனுயட்டாதச குணங்களுக்கதிப தியென்றும் பெயரினையுடையவனை மக்குமகிழ்ச்சியை வழங்கும் புறப்பொருள் யாவையுங்காட்டுங் கண்கள் போல வகப்பொருள் யாவையு முணர்த்துங் கண்கள். எ-று (௪)

இறைவனதுவணக்கங்கூறுகின்றார்

உருவருவென்றவுடம்புடனொருவவிரண்டனுபந்தமு ❊
மிருண்மலபந்தமுமந்தமுமினையுமின்புறகம்புட ❊
னிருமலனின்பநிரந்தவனிலன்மு டிவெங்குநிறைந்தவ ❊
னருளியசந்தமதன்பொருளவனவளென்றுவணங்குவம் ❊

எ-து தூலசூக்குமமாகிய விரண்டு சரீரத்துடனே மாயையுங் கருமமுமிருள் போன்றவாணவமலத்தினது மயக்கமும், எமக்குவிட்டுநீங்கவும் முடிவும்புணர்வுமி ல்லாதபேரின்பமெய்மையவற்றையுடையவும்யாம்இன்பவடிவருமாய் நாதமுதல்மண் ணீறகவெவ்விடத்துநிறைமற நிற்பானும். அநாதிமல முத்தனுமாகிய சிவனருளிச் செய்த திவ்வியாகமங்களிற்சொல்லியமகுடப்பொருளையுஞ் சிவனுஞ்சத்தியுமாகக் கருதித்துதியோடுக்கூடவணங்குகிறேம் எ-று (உ)

ஞானயோகத்தின்பகுதிபுணர்த்துகின்றார்

வேறு

அலற்பிறப்பவமாவிக்கறவுறவறிவானந்தந் ❊
சொலத்துடங்குவங்கேள்ஞானயோகமுந்துகட்சத்தி ❊
மலத்தொறுமறுமுத்தன்மயமுணர்ந்துணர்த்தல்ஞான ❊
முலப்பிலாவவனுள்வேறற்றுறைதலையுணர்தல்யோகம் ❊

எ-து ஆன்மாக்களுக்குச்செனனமரணதுயரத்தை யுண்டாக்கும்பிறப்பானது விட்டுநீங்கவும், ஞானானந்தம் வந்துபொருந்தவும் யாம் ஞானயோக த்தையுஞ் சொல்லப்புகுகின்றேம் அதனைக்கேட்பாயாக, அஃதெவ்வண்ணமெனின்குற்றம ற்றநிற்சத்தியையுடைய னுயநாதியேமலத் தைநீங்கியகடவுளினது சொருபத்தை யாசாரியன்முன்னராராய்ந்தறிந்துமாணுக்கருக்கறிவித்தல்ஞானம். நாசோற்பத் தியில்லாதவக்கடவுளுடன் பேதமின்றிக்கலந்திருத்தலை யறிதலே யோகம் எ-று

உண்மை- இபந்ததசநீஇயவெச்சம் (௩)

ஞானயோகியின்முறைமையுணர்த்துகின்றார்

தன்னனுசத்திகாட்டுந்தத்துவத்தொடர்ச்சிநீங்க *
வன்னியனலனைத்தன்னோடொறியவமலன்றன்னைக்
கன்மமுமலனைத்தாமுன்கண்டுகொண்டிடாதுகாட்டப் *
பின்னதனலவ்வுண்மைபெற்றவன்ஞானயோகி *

எ-து ஆன்மாக்களுக்குக்கலையாதி தத்துவங்களின் பந்தமானதுவிட்டுநீங்கின வாறேதனக்கன்னியனல்லனாகிய னுதியேமலமில்லாதவனுமாகிச் சுட்டுணர்வாலறி யப்படாதசிவனை ஆன்மசிற்சத்தியானதபிரகாசிப்பிக்கும், அக்கடவுளைஞானாசாரி யரானவர், தாமுதற்கண்டனுபவித்ததனை மாணாக்கற்குக்காட்சியாற் காட்டாமலு பதேசத்தினாலேயறிவிக்க, ப்பின்னர்அவ்வறிவினாலேயந்த மெய்ப்பொருளையடைந் தவன்யாவனொருவன், அவனேஞானயோகியாவன். எ- று (௪)

அந்தஞானயோகியானவன்கேவலசகலத்தருமற்சுத்தாவத்தையை
ப்பொருந்துவனென்பதுணர்த்துகின்றார்

உலகுளார்பெறுதுதுஞ்சுமொருபொருள்விழித்தயோகி *
யுலகுளார்விழித்தபண்டத்துறங்குவனுருவமாக *
வுலகெலாமொன்றிவேறற்றொளிருமொப்பிலிதனொண்டா *
ளலர்தலைக்கணிந்தயோகிக்கவனலான்றேயம்யாதே *

எ- து உலகின்கணுள்ளார் மலமறைப்பினாலே சிவதெரிசனப் படாமற் றுயில் கொள்ளுமிடத்துஅந்தப்பொருளின்கண்ணே தனதுஞானக்கண்ணைவிழித்துப்பார் த்திருக்குஞ்சிவயோகியானவன், அவ்வுலகின்கண்ணுள்ளார்ஊனக்கண்ணாற்கண்டி ருக்கப்பட்டவிஷையபதார்த்தங்களிடத்துத்தான்றுயில்கொள்ளாநிற்குமாதலாற் றற்சொரூபமெனவவ்வுலகமுங்கலந்துதானேயாகிப்பேதமறநின்றுவிளங்குமொப் பில்லாதபரமசிவனுடைய ஒள்ளியபாததாமரையைத் தனதுதலைக்கலங்காரமாகப் புனைந்தவந்த ஞானயோகிக்கு அப்பரமசிவனல்லது வெறறியும் பொருள்யா தோ எ- று (௫)

இந்தஞானயோகமுதலியவற்றை யிறைவன்றுமுதனூலாகியதிவ்வி
யாகமங்களுணாக்கின்றமை கூறுகின்றார்

ஒப்பிலியருணிருத்தனருளியகாமிகாதி *
யிப்பரஞானயோகம்விரியவேயியம்புமென்றுந் *
தப்பிலாக்கருமயோகந்தருமமுன்கருமந்தாரும் *
அப்பலபேதமென்றவினைத்தையுமறையுமன்றே *

எ-து தனக்கொப்பொருவருமில்லாதவனுமாய். அருநிமலமுத்தனுமாகிய சிவன், அருளிச்செய்யப்பட்டகாமிகமுதல்வாதுளமிறுதியிருபத்தெட்டுத்திவ்வியாகமங்களும், இந்தமேலான ஞானயோகத்தை விளங்க விரித்துக்கூறும், அஃதன்றியெக்காலுந்தவறின்மையிற்காணுங் கருமயோகமென்னும்புண்ணியபாவங்களென்றுமுன்னரிட்டப்பட்டவினையினதுபலன்களென்றுசொல்லப்பட்டயாவையும். விரித்துரைக்கும். எ-று
அன்றாம். ஏயும்- அசைநிலை (௬)

அருநிமலமுத்தன்றன்மையுணர்த்துகின்றார்

காட்சியிற்பொருளுமந்தக்காட்சியான்முன்னங்கண்டே *
யாட்சியாமநுமானத்தினானுத்தரமனுமொன்றாக *
சேட்சியிற்பொருளுமைப்பந்திரிவறச்செப்பிச்சிவ *
னாட்சியவறிவுமாக்குமவன்மலத்தருநிமுத்தன் *

எ-து காண்டலளவையினாலறிக்கும்பொருளையுமக்காண்டலினாலேதான்முன்னர்க்கண்டநுபவித்தறிந்தபின்னொருகாலத்தினுமித்தறியும்பொருளையு மிவ்விரண்டினுமெட்டாத்தற்கரிதாகிச்சொல்லளவையினாலறிக்குமாகமப்பொருளையும் ஐயம்விபரீதமறக்கூறியவளவைகளாலுயிர்கண்மாட்டநுபவசித்தமாகியவறிவுகளையுமுண்டாக்குமவனேயருநிமலத்தினின்றும்விடப்பட்டவன். எ-று (௭)

பரசமயத்திலின்றோர்களிந்தச்சைவ சமயத்துக்கதிகாரியாகி
வருமுறைமையுணர்த்துகின்றார்.

இருவினையுணர்ந்தபுத்தரவர்முதலிகளும்வாதத் *
தெரிசனமினைத்துஞ்சேர்ந்தார்சிவசமையத்துச்சேர்வார் *
பொருவிலிபுகன்றவாக்கிற்கருமமென்னெறியும்புக்கே *
விரவுவர்ஞானயோகம்விடுவர்மெய்யடைவர்மெய்யே *

எ-து புண்ணியபாவங்களை யுண்டென்றறிந்த புத்தர்முதலொன்று க்கொன்று

மாறுபடச்சொல்லுகின்றசமயிகளினதுநிலைமையாவையுமறிந்தவடந்தார், முன்னரார்ச்சித்தநல்வினைப்பகுதியாலேசைவசமையத்தை யடைவார், பின்னர். அங்ஙனமடைந்தவர். ஒப்பில்லாத விறைவனாற் கூறப்பட்டவாகமங்களிற்சொல்லுகின்ற சரியை, கிரியைகளையனுட்டித்துப்பின்பு ஞானயோகத்தையடைவர், அடைந்தவரா றேசரீரபந்தத்தைவிட்டுஉண்மைநிலைமையையுமடைவர். எ- று

கருமநன்னெறியுமென்றவும்மையால்யோகபாதமுமெனவறிக (அ)

சைவத்திற்சிறப்புமேனையவற்றிற்சிறப்பின்மையுமுணர்த்துகின்றார்

எடுத்ததோராக்கைதன்னிலிருண்மலசத்திதன்னைத் *
தடுத்தருள்சைவநூலின்சாதனமதனைத்தள்ளி *
விடுத்துவீறற்றநூலின்சாதனம்விரும்புவார்முன் *
னடுத்தவாரமிர்தம்விட்டுப்புற்கையாதரிப்பாரன்றே *

எ - து இங்ஙனமெடுத்தவுடம்பின்கண்ணதானே யந்தகாரமாகிய வாணவத்தினதுசத்தியைநீக்கிப்பேரின்பத்தைவழங்குவதாய்சைவசாத்திரத்திற்சொல்லப்பட்டமார்க்கங்களையாய்ந்துணராதொழித்து மலபந்தராற்சொல்லப்படுதலின்மேன்மையற்றபுன்சமயங்களிற்சொல்லு மார்க்கங்களைப்பொருளெனமதித்துவிரும்புமவர், தமக்கெதிராகவனுகியிருக்கிற நிறைந்தஅமிர்தத்தைவிட்டுப்புற்கையையுண்ணவிரும்புவாரோடொப்பர் எ - று புற்கை - கூழ் (கூ

மேலயல்நூல்களின்பகுதியுமுணர்த்துகின்றார்.

ஒப்பிலியாநிமுத்தனுரைக்கயனூலொவ்வொன்று *
தப்பறுஞ்சிருட்டியாதித்தலைமையொவ்வொருவர்தம்மை *
யப்பரமென்னுமற்றையீனவராம்பரமேயென்னுந் *
தப்பறத்துணியும்புத்திதன்னையும்பரமேயென்னும் *

எ - து தனக்கோரொப்பில்லாதவனுகியவனாதிமலமுத்தனாற் சொல்லப்பட்டதிவ்வியாகமங்களுக்கயலாகியசமையநூல்களிலொவ்வொரு நூல்கள் குற்றமற்றபடைப்பாதித்தொழிலாற்றலைமை பூண்டபிரமவிட்டுணுக்களிலொருவரொருவரையந்தந்தநூற்கதுவேபரப்பிரமமென்று சொல்லுமற்றைவேதாந்தநூல்சீவகோடிகளெல்லாவற்றையும் பரமேயென்று சொல்லுமற்றைப்பவுத்தநூல் தவத்தைநிருவிக்கும்புத்திதத்துவத்தையும்பரமேயென்றுசொல்லும், எ று

யெல்லாமுணர்ந்தவராற் சொல்லப்பட்டதல்ல - ஆகையாற்சிற்றறிவர்செய் ந ூலொருவழிப்படாதுதங்களின்மாறுபடக்கூறிமயங்குமெனக. (ம)

முன்னர்க்கூறியசமையவாதிகளைநோக்கிமறுத்துணர்த்துகின்றார்

அசேதனவாக்கையாளரவர்பரப்பிரமமல்ல *
வசேதனத்தனுநிமுத்தன்சிவன்பரப்பிரமமாகு *
மசேதனவாக்கையின்றேலறிவுமஞ்சனத்தார்க்கில்லை *
யசேதனத்தனுநிமுத்தனதிபனாயாக்குவானும் *

எ - து கலாதிதத்துவங்களாகியசரீரத்தாற்கட்டப்பட்டவர்களாதலானும் அச்சரீரப்புணர்ச்சியில்லாதவிடத்துமலமறைப்பாலறியுந்தொழிலுந்தடைபடுமாகையாலு மான்மாக்கள்பலரும்பிரமமல்ல வாதலான்மும்மலங்களினின்றுமனாதியேவிடப்பட்டசிவனே பரப்பிரமமாவன் படைப்பாதித்தொழில்பூண்டகாரணகருத்தாக்களையுண்டாக்குமவனும், அவ்வனாதிமலமுத்தனே. எ - று

உம்மையாலவர்களை யுண்டாக்கிறவனும் அவர்கள்செய்யும்விசிட்டகிரியைகளுக்குத்தன்சத்திகொண்டு செய்விப்பானுந் தநுகரணபுவன போகங்களெல்லாவற்றையுமுண்டாகருவானுமவனேயெனக்கூறியதெனவறிக. (மக)

அந்தச்சிவன்விகாரியல்லனென்பதனையுவமைமுகத் தாலுணர்த்துகின்றார்.

உருக்குதனவநீதாதியுலர்த்துதலிரமண்ணும் *
விரிக்குதல்கமலமாதிவெறிகமழ்குவளைமற்றுஞ் *
சுருக்குதலென்றவிந்தத்தொழில்விதமில்லானேனு *
மருக்கனேயவற்றிற்கேதுசடச்செயற்கனாதிமுத்தன் *

எ - து வெண்ணெய்முதலியபொருள்களையுருக்குதல்ஈரமண்ணையுலர்த்திடுதல் தாமரைப்பூமுதலியவற்றையலர்த்திடுதல்மணம்வீசுகின்றநெய்தல்முதலாயுள்ளமலர்களைச்சுருக்குதலென்றுசொல்லும்வினைபினதுவேறுபாட்டையில்லாதவனாயினுமத்தொழில்களனைத்தும்முடிவித்தற்குநித்தியனேகாரணமானாற்போல ச்சரீராதிகளையுண்டாக்கிக்காரியப்படுத்தமதற்குமனாதிமலமுத்தனேகாரணன். எ - று ஆதியென்றதனால்-மெழுகு-வெல்லமுதலியவெனவறிக. (மஉ)

ப்திமுதலியமுப்பொருள்களுமனாதியென்பதனுடம்

அவற்றுட்பாசம்நீங்குமுறைமையீதென்பதூஉமு
ணர்த்துகின்றார்.

அநாதியேயமலன்சச்சிதானந்தன்பதியான்மாக்கள் *
அநாதியேபெத்தர்பந்தமகவிருளநாதிமூன்றும் *
அநாதியபசுபாசத்திற்பக்குவத்ததுலனான *
அநாதியேயமலனாலேபவர்தமையவைகணீங்கும் *

எ - து அநாதியேமலத்தினின்றும்விடப்பட்டநித்தியஞானனந்த சொரூபத்தையுடையவனே யிறைவன், அநாதியேமலாதிகளாற்றடுக்கப்பட்டஞானக்கிரிகைகளையுடையவரோ யான்மாக்கள், இருளாகியவாணவமாயைகன்மமாகிய மூன்றுமநாதியேகட்டுகளாயுள்ளன-ஆகையான் மலமாயாகன்மங்கள்பரிபக்குவமாய விடத்து ஒப்பில்லாத சிவனாகிய வநாதிமுத்தனாலே யநாதிபெத்தராகிய வான்மாக்களை யநாதியேபந்தங்களாகிய பாசங்கண்மூன்றும் விட்டுநீங்கும் எ று (௰௩)

அந்தவாணவதோடத்தைப்போக்கு வித்தற்குத்திட்டா
ந்தமுணர்த்துகின்றார்.

செம்பினிற்களிம்புதானேசெம்பினைத்திராதென்றுஞ் *
செம்பினுக்கதனைத்தீர்க்குஞ்சித்தியுமில்லைத்தேரிற் *
செம்பினிற்களிம்புதீர்க்குஞ்சித்தனுமுண்டுதேடிற் *
செம்பினிற்களிம்புதீர்க்குமருந்துமற்றவனாற்சேரும் *

எ- து அதனையாராயுமிடத்துச்செம்புடன்சகசமாயிருக்கிறகாளிதமானது- தானேசெம்பினைவிட்டுநீங்காது, அந்தச்செம்பினுக்கு மக்காளிதத்தைத்தானேநீக்கிக்கொள்ளும்வலியுமில்லை. யக்காளிதத்தைநீக்கும்பொருட்டுநாட்டமுற்று விசாரிக்கிற்களிம்பினையகற்றவல்லசித்தியை யுடையனு முளன், அவனாலக்களிம்பினைப்போக்குதல் வலலமருந்தும்வந்தடையும். எ- று (௰௪)

மாயாகாரியமாகிய சரீரத்தையான்மாக்களுக்கிறைவனே கூட்டுவ
னென்பதற்குவமித்துணர்த்துகின்றார்

விளக்கினுக்கில்லைத்தன்னையாக்கிடும்வினைதானென்றும் *
விளக்கினையாக்கவல்லவினைவிழிதனக்குமில்லை *
விளக்கினையாக்கிப்போக்கிவிழிக்கிருளறுத்தபேதம் *
விளக்குவான்போலுமீசன்விழியுயிர்விளக்கொப்பாக்கை *

எ-து விளக்கிருக்குந்தன்னைத்தானேயுண்டாக்கிக்கொள்ளவல்லதொழில்தன்னிடத்திலில்லை, யவ் விளக்குக் குக்காட்டாகியகண்ணிருக்குந்தானேயுண்டாக்கிக்கொள்ளுந்தொழில்தன்னிடத்தில்லை, யாதலால்விளக்கென்னுஞ்சடரிலேயுண்டாக்கிக்கண்களினதுசோதியைபத்தமித்தபிருளைக்கெப்பொருள்களினது விகற்பங்களையறிவிக்குமவனேருடொப்பானிறைவன், கண்களோடொப்பனவுயிர்கள், விளக்கினோடொக்குங்கலாதிதத்துவருபமாகியசரீரம். எ-று ((௰௫)

அந்தச்சரீரமிருவிதமென்றுமதற்குக்காரணமிதென்றுங்கூறுகின்றார்.

அக்கையுந்தூலசூக்கமெனவிரண்டவற்றுட்டூல ✻
வாக்கைதான்பஞ்சபூதபரிணமத்தாகுமற்றை ✻
யாக்கையாறைந்திற்காலமாதியிற்றுகுமந்த ✻
வாக்கையுமாயைதன் வினைமலமின்னருளாலாமே ✻

எ-து முன்சொல்லப்பட்டவுடலானதூலவுடலெனவுஞ்சூக்குமவுடலெனவுமிருவிதமாம், அவற்றுட்டூலவுடலென்பது மண்முதல்வானீருகியவைந்தபூதங்களினதுபரிணமகாரியத்தாலுண்டாகும்மற்றைச்சூக்குமவுடலென்பது காலதத்துவமுதல் நிலமுடிவாகியமுப்பத்தொருதத்துவத்தாலுமுண்டாகும், அந்தச்சூக்குமவுடற்காரணமாகிய முப்பத்தத்துவங்களுஞ்சிவனுடைய வினிதாகியதிருவருளினதுபிரேரகத்தினாலேமாயையின்கண்ணேநின்றுமுண்டாம் எ-று

தன்மாத்திரைமுதலியவெட்டினையும் புரியட்டகமென்றுரைதிருக்க, இவ்வாசாரியர்முப்பதென்றுரைத்ததென்னெனின், அந்த - எட்டும் - எட்டுவர்க்கமாம், அவையாவன, பூதம் - ௫ - தன்மாத்திரை - ௫ - ஞானேந்திரியம் - ௫ - கன்மேந்திரியம் - ௫ - குணம் - ௩ - பிரகிருதி - ௧ - கலாதி - ௫ - மாயை - ௧ - ஆக - எட்டுவர்க்கத்துக்கு முப்பதுதத்துவமும்வந்தவாறுகாண்க. (௰௬)

மேலிவ்வகையினையான்மாக்கள்புணர்ந்துபோகந்துய்க்குமுறையையுவமித்துக்கூறுகின்றார்.

பாங்குளான்கொடுத்தகோலைப்பற்றியேகுருடனான்றி ✻
யிங்கெமக்கியங்குமாற்கமிஃதெனவெண்ணிச்செல்வ ✻
துங்கலாதித்தவித்தையாதிபிவற்பநானாந் ✻
தேங்கியபோகத்தேற்றத்திலைத்துடனியக்குஞ்சிவன் ✻

எ - து கண்ணில்லாதவன் தனக்கியல்புடையானொருவனுதலிய தண்டினைப்பிடித்துக்கொண்டன்றி யிவ்விடத்தியாஞ்செல்லும்வழியிதுவெனக்கருதிச் செல்லாநிற்பன், அதுபோலமூலமலத்தாற்றடைபட்ட ஞானக்கிரியைகளையுடையவான்மாக்களுஞ்சங்காரகாரணனாகியவிறைவனருளியவித்தைமுதலியதத்துவங்களாலுண்டானவற்பவறிவானதுமாயாபோகங்களை நிச்சயத்துக்கொடுக்கவவைகளைநுகர்ந்துயாக்கையினதுபோக்குவரத்தைச்செய்யும். எ - று (௰௭)

மேலுலோகாயுதன்முதலியசமையிகளான்மாவின
துண்மையுணராமற்றங்கோட்பாடேயுணர்த்தவ
தனைமறுத்துணர்த்துகின்றார்

வேறு

ஆக்கையினைச்சிலரான்மாவெனவறைவரறிவிலர்மெய் ❈
வாக்குமனமெனுமிவையேயெனமறிப்பர்மறித்தவற்றின் ❈
நீக்கமிலாக்குணமென்பர்நிரந்தவற்றின்மேனின்ற ❈
நோக்கினையுநோவினையுமுடைத்தான்மாநுவலுங்கால் ❈

எ - து உண்மையறிவில்லாமையாலுலோகாயுதன்றூலவுடலினையே, ஆன்மாவெனக்கூறுவன், புத்தன்மதத்தை விசாரிக்குமிடத்து அகங்காரமாகிய அந்தக்கரணங்களையே ஆன்மாவெனக்கூறுவன், அருகன்மதந்தை விசாரிக்குமிடத்துச் சருவான்மாக்களிடத்தும் வியாபித்துநிற்கிறமுக்குணங்களேயான்மாவெனக்கூறுவன், அவையன்று - அதனுண்மையைவிசாரித்துச்சொல்லுமிடத்து - இங்ஙனஞ்சொல்லப்பட்டவைகளுக்கெல்லாமேலாகநிலைபெற்றஞானக்கிரியைகளையுடைத்தேயான்மா. எ - று (௰௮)

இதுவுமது.

ஆக்கைசடந்தனித்தியங்காதறிவினையுமின்றியகத் ❈
தாக்கைவிளக்கெனவறியப்படுங்கரணமான்மாவுக் ❈
காக்கைவிதம்பேதமெனவத்திபக்கமறிவிக்கு ❈
மாக்கைவிதத்ததிபதியேயமலனுயிர்க்கதிபதியே ❈

எ - து இச்சரீரஞ்சடமாதலாலறிவுடையனாகியவான்மாவையுமன்றித்தான் போக்குவரத்துச்செய்யமாட்டாதாகையாலுஞ் சூக்குமசரீரமாகியகலாதிகளாந்தத்தூலசரீரமாகியகிரகத்துக்கு விளக்குப்போலவறிவைப்பிரகாசிப்பிக்குங் கரண

ங்களாகையாலுமிந்தச்சரீரங்களான்மாவுக்கு வேறுயிருப்பதொன்றென்பதனை நீ பிரத்தியக்ஷவாதியாதலாலுனக்கந்தக்காண்டலென்னுமளவைதானேயறிவிப்பிக்கு மாதலாலுஞ்சொல்லப்பட்டசரீரபேதங்களுக்கெல்லாமான்மாவேயிறைவன் அந்த வான்மாவுமீசுரப்பிரேரகனாதலாலவனுக்குச்சிவனே யிறைவனுமவன். எ - று

அறிவனையுமெனறவும்மையாலறிவிப்பானானசிவனையுமன்றியிலென்றதாம் - அத்தி யக்கம்பிரத்தியக்கத்தலைக்குறை. (௰௧)

இதுவுமது.

அறிவென்பர்சிலர்சடமேமனமொன்றினறிவென்ப *
ரறிபுகிருமலனறிவையளிக்கிலெனவறைந்திடுவ *
ரறிவில்லாரவர்மூலமலத்தான்மாச்சாதித்த *
வறிவுடைத்தேமாயையெனுந்துணையினையுமஃதுடைத்தே *

எ- து மாயாவாதிகள்உயிரைவிளங்கிய வறிவென்றுகூறுவர்கள், வைசேடிகர்மனமுதலியதத்துவங்கள்வந்துகூடினகாலத்துஅறிவுண்டாமென்பர்கள், பரிணாமவாதிகள்ஆன்மாவுக்குச்சுதந்திரமாகவறிவில்லையெல்லாமறியுமிறைவனுணர்த்திலு ணருமென்பர், இவர்களெல்லாருமெய்யுணர்வற்றவர்கள், அநாதியேமூலமலத்தினு லேதடுக்கப்பட்டவுணர்வையுடையதாகியததனைநீக்குநிறமாயையெனுந் துணைக்காரணத்தையுமொத்தாசையுமுடையதான்மா. எ- று (௨௰)

இதுவுமது

ஆக்கைதனிலோரிடமென்றறைவரலவனுமென்பர் *
நீக்கமறவுடன் முழுதுநிற்குமெனநிகழ்த்திடுவர் *
போக்குவரவில்லாதபூரணமேயெனப்புகல்வர் *
மேக்கிலர்தன்டனுமூலவியாபகிக்கும்வியாபகமே *

எ- து மேலாய. அறிவில்லாதகன்மயோகிகள்- ஆன்மாவை யுடலினோரிடத்திருக்குமென்பர்கள், அஃதன்றிலையாயினும்பஞ்சராத்திரியு மான்மாப்பரமாணுருடமாயிருக்குமென்பர்கள், சமணருடன்முழுவதிலேயும் வியாபித்துநிற்குமென்பர்கள், மாயாவாதிகள்போக்கும்வரவுமில்லாமலெவ்விடத்தும் பூரணமாய்நிற்குமென்பர்கள், இவர்களெல்லாருமுண்மையானதெரிசனப்படாதவர்கள்ஆனாலுமதுசித்தாந்தம். யாதெனில்தன்னைத்தாயிருக்கப்பட்ட தத்துவங்களாகிறதுக்குமதேகங்களுக்குக்காரணமாகிவியாபகியாயிருக்கும், அசுத்தமாயைதனக்குமதுக்குமேலான

சுத்தமாயைதனக்கும்அப்பாற்பட்டவியாபகமே. முத்தித்திசையில். எ- று மேக்கிலர் என்பதனைமுற்றுங்கூட்டுக (உ௧)

வியாபகமுறைமையைத்தெரிசிப்பிக்கின்றார்

அமலைக்குவியாபகனேயரனவற்குவியாப்பியமே ✽
விமலைவியாபகியுயிர்கட்குயிரவட்குவியாப்பியமே ✽
சமலைக்குவியாபகியேசமலையுயிர்வியாப்பியமே ✽
சமலைசகவியாபகியேசகஞ்சமலைவியாப்பியமே ✽

எ- று நிருமலையாயிருக்கிற சிவசத்திக்குச் சிவன்- வியாபகன், அவனுக்கந்தநின்மலையாகியசத்திவியாப்பியம், அந்தச்சிவசத்தியான்மாக்களுக்குவியாபகி. அந்தவான்மாக்கள்அவளுக்குவியாப்பியம்- அந்தவான்மாக்களதமதுமலத்தோடுகூடியவான்மசத்திக்குவியாபகர், அவர்க்கவர்சத்திகள்வியாப்பியம்- அந்தச்செகத்துக்குஆன்மசத்திவியாபகம். அந்தஆன்மசத்திக்குச்செகம்வியாப்பியம். எ- று அதிகவிருத்தியை யுடையதுவியாபகம், நூனவிருத்தியை யுடையது வியாப்பியம், இப்படி நூனவிருத்தி யதிகவிருத்தியின் முறைமையைத் தெரிசிப்பித்ததெனவறிக (உஉ)

இங்ஙனநூனவிருத்தியதிகவிருத்திகளையுணர்த்திமேற்றுல்லியவியாத்தியையுணர்த்துகின்றார்

உயிரொளியுமிருண்மலமுமொன்றுதுல்லியவியாத்தி ✽
யயர்வுறலாலறிவதனாலதற்குவியாபகமல்ல ✽
வயர்வுறுத்துமகவிருளுமதற்குவியாப்பியமல்ல ✽
நயனவொளியிருளிவற்றின்கலப்பொப்பேநாடுங்கால் ✽

எ- து. ஆன்மப்பிரகாசமும். அந்தப்பிரகாசத்தைமறைத்துயிருளேவடிவாயிருக்கிறவாணவமலமுங் கூடிநிற்கிறது ஒன்றுக்கொன்றேற்றக் குறைவின்றி யிரண்டுமொத்தவியாபகமாயிருக்கும் அந்தவான்மாவினுடைய ஞானக்கிரிகைகள்மலத்தாற்றடைபடலால். அதிகவிருத்தியை யுடையதல்ல- வதனைத்தடுக்கும் வலியினையுடையவாணவமலமும்நூனவிருத்தியையுடையதல்லவாதலாலான்மசத்திக்குவியாப்பியமாகாததனாலா ராயுமிடத்து ஆன்மசத்திக்கு மாணவத்துக்குஞ் சமவியாத்தி

யெப்படியென்னிற்கண்ணிடத்துண்டாகிய சோதியுமிருளினது பிரகாசமுந்தல்வி யவியாத்தியாயிருக்கும். எ-று

இதன்கருத்து,கண்ணொளியானது இருள்மேலிட்டகாலத்துஒளிமாந்திநிற்குமொளி மேலிட்டகாலத்துமிருண்மாந்திநிற்கு மிதுபோலச்சிவன்மாயாகாரியமானதனுவா திகளையான்மாவுக்குக்கூட்டியகாலத்து ஞானசத்தி மாந்தினவிடத்து ஆன்மசத்தி சற்றேபிரகாசமாயிருக்கும். மலமேலிட்டகாலத்துஆன்மசத்திமாந்தியிருக்குமென வறிக, ✠ ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிடமொன்றுமேலிடவொன்றொளிக்கும் என்றுந்திருவாக்கியுணர்க. (உ௩)

மேலிறைவனான்மாக்களுடன்சருவவியாபியாயிருக்கினும்பாசந்த
னதுபரிபாகத்தாலல்லதுநீங்காதென்பதுகூறுகின்றார்

பரமசிவன்பராசத்திபல்லுயிர்க்கும்பயின்றிருக்க *
விரவுவதென்னிருளெனிற்கேள்வெய்யவழற்பசுமரத்தின் *
விரவியதேபசுமரமும்வெந்தவலவெந்துவிழும் *
பருவமுறக்கரணமுறப்பதியுமுறப்பழுதறவே *

எ-து. மேலாயசிவனுமவனதுமேலாகியஞானசத்தியு மெல்லாவுயிர்கண்மாட்டுங்கலந்திருக்கவும், இருளாகியஆணவம்பொருந்துவதென்னெனிலிவ்வினாவிற்குவிடைகேட்பாயாக, வெம்மையையுடைய நெருப்பானது- பசுமையையுடையமரத்தின்கண்ணடிதொடுத்துமுடியளவாக வியாபித்திருக்கினுமப்பசுமரங்கள்வெந்தனவல்ல முதிர்ந்து தமது பருவம்வந்தவிடத்து தம்மிடத்துண்டா யதழலையுதிப்பிக்கும் ✠ ஞெலிகோலாகியகருவியுமது கொடுக்கையுங்கருத்தாவு முதலாயினபழுதறவந்துபொருந்தவவ்விடத்தழலுண்டாய்அம்மரங்கள்வெந்துவிழுதலைச்செய்யும், அதுபோலாணவமுந்தனக்குப்பருவம்வந்தவிடத்துச்சிவனுடைய திருவருளாலேதனது பெலங்கெட்டுநிற்கும். எ-று

இதன்கருத்துபரமசிவனுடையபராசத்தியானது மலபரிபாகம்வாராதவான்மாக்களிடத்துப்பசமரத்திலக்கினிபோலவப்பிரகாசமாகவேயிருக்கும். மலபரிபாகம்வ

கொடிக்கவி. கட்டளைக்கலித்துறை

✠ ஒளிக்குமிருளுக்குமொன்றேயிடமொன்றுமேலிடினொன், றொளிக்குமெனினுமிருளடராதுள்ளுயிர்க்குயிராய்த், தெளிக்குமறிவுதிகழ்ந்துளதேனுந்திரிமலத்தே, குளிக்குமுயிரருள்கூடும்படிகொடிக்கட்டினனே. (க)

✠ ஞெலிகோல் - தீக்கடைகோல்

ந்த வான்மாக்களிடத்துப்பிரகாசித்து மலங்களைக்கெடுத்து ஆன்மப்பிரகாசத்தையுண்டாக்கியிரட்சிக்குமென்க. (உச)

இதுவுமது.

உக்கொழியாதொளிக்குமிருளுதையகதிரொளிமுன்னே *
பக்குவத்திற்பசுபாசவடங்கும்பரமசிவ *
னக்கனுயிர்க்கருள்புரியகசித்ததலவசித்ததல *
நெய்க்கனநீங்குதலென்னமாயையழிலைதொலையும் *

எ - து உதையகாலத் தாதித்தியப்பிரகாசத்தின்முன்னே யிருளானது நாசத்தையடையாமல் மறைந்துநின்றதுபோலச்சிவனுடைய அனுக்கிரகத்தினாலேயான்மாக்கள்பசுத்துவமாகிய வாணவமலம் - அதனுக்குப்பருவம்வந்தவாறே நாசமடையாதுஉயிரினதுஞானக்கிரியையைத்தடுக்கும்வலிகெடும்,மாயாகாரியங்களுநாசமடைந்தனவுமல்லாமல் நிலைபெற்றுநின்றனவுமல்லாம லுறைந்திருந்த நெய்யானது உருக்கினபோதுகனங்குறைந்து நெய்கெட்டுப்போகாமலிருக்கின்றதெப்படியதுபோல முத்திநிலையிலுமிந்தமலங்களுங்கெடாமலான்மாக்களைப்பெந்தியாமலும் நிற்கும் எ - று [உரு]

மேலுமோருபாயத்தாலிறைவனைத்தொட்டு மூலமலமீருகச்சூக்குமதூலமாகிநிற்கும்பகுதியைத் தெரிசிப்பிக்கின்றார்

நுண்ணியனேசிவன்றூலஞ்சத்தியவனுண்யார்க்கு *
நுண்ணியளேநொய்யார்களதிதூலர்நுதன்மதிக்கு *
நுண்ணியரோநொய்யார்தஞ்சத்திகளுக்கவர்தாமும் *
நுண்ணியரோநோய்க்கவர்க்குமதிதூலதரநோயே *

எ - து சிவன் - சிவசத்திக்குச்சூக்குமமாயிருப்பன் அந்தச்சிவனுக்குச்சத்திதூலமாயிருக்கும் அந்தச்சிவசத்தியான்மாக்களுக்குச்சூக்குமமாயிருக்கும்.அந்தச்சத்திக்கு ஆன்மாக்களதிதூலமாயிருக்கும் அந்த ஆன்மாக்கள்தமதுசத்திக்குச்சூக்குமமாயிருக்கும் அந்த ஆன்மசத்தி ஆன்மாவுக்குத்தூலமாயிருக்கும் - அந்த ஆன்மசத்திமும்மலங்களுக்குஞ் சூக்குமமாயிருக்குமந்த மும்மலங்களுமான்மசத்திக்குத்தூலமாயிருக்கும். எ - று (உசு)

அந்தஆணவமாகியபிணிக்கரிக்குவான்அறுதிமுத்

தருமியமருத்துவனென்றிரண்டுசெய்யுளாலுண
ர்த்துகின்றார்.

பெருநோயே மூலமலம்பிணிமருந்து முடன்மூலர் *
றருமமலன்மருத்துவனே மருந்தறிந்துசாராது *
பெருநோயர்மருந்தறியாரெனல்பேசிப்பெறுவதல *
நிருமலனைமருத்துவனென்றறிகபிணிநீங்கிடுமே *

எ - து ஆணவமலமென்பது - ஆன்மாக்களுக்குப்பெரிதாகியபிணி, அப்பிணிக்குமருந்தாகிமாயாகாரியமாகியதநுகரணபுவனபோகங்கள் மதமேறுடன்றேயுள்ளது, அம்மருந்தினையுதவிப் பிணிதீர்ப்பவனின்மலருத்தியசிவனே - மருந்துதானேயறிந்து வந்தடையாதெனவும் - பெரிதாகியவாணவநோயையுடையராகிய வான்மாக்க ளதாமேயும் பெருநோயைப்போக்கிக்கொள்ளும் அதற்குமருந்தறிந்தவரல்லரோ. எவுந் - சொல்லுதலைச்சொல்லிருந்ததனாலப்பிணிநீக்கம்வந்தடைவதல்ல.- அநு [illegible] மலமுத்தனாகிய சிவனேபிணியைநீக்கும் பண்டிதனானவனென்றறிந்தவன்மாட் டன்புசெய்யப்பிணிநீக்கும். எ - று ஈண்டன்பென்றது, சமாதிசெய்த லெனவுணர்க. [உஎ]

இதுவுமது.

மருத்துவனும்பிணியாளியெனிற்பிணியுமாறாது *
மருத்துவன்முன்பிணியாளியெனிற்பிணியைமாற்றியதோர் *
மருத்துவனுண்டிம் முறையின்மாற்றமனவத்தைவரு *
மருத்துவனையநாதிமலமுத்தனெனமதிக்கவரோ *

எ - து பண்டிதனும் நோயுடையனெனிற்பிணிநீக்குவதல்லப் பண்டிதன் முன்னர்நோயுடையனெனிலந்நோயை நீக்கியதொருபண்டிதனுளனும், இம்மு றையானேயொருவன்பிணியை மாற்றுவானொருவனுளனாகத் தொன்றுதொட்டு அநவத்தையென்னுங்குற்றம் வருமாதலாலநாதியேமலத்தினின்றும்விடப்பட்டவ னேயுயிர்களைப்பற்றிய வாணவமென்னும்பிணியைநீக்கும் பண்டிதனாவான். எ - று அரோ - அசை - இவ்விரண்டுசெய்யுளிடத்துப்பிணியெனவு மருந்தெனவுமருத்து வனெனவும்வருவன - ஆகுபெயர். (உஅ)

மேற்சரீரியல்லாதசிவனேயுலகம்யாவையுமாக்
கிப்புரந்தழிக்குமுறைமையைக்கூறுகின்றார்.

ஆக்கையினையியக்குதற்குமாக்கையிலையான்மாவுக்
காக்கையிலானவனமலனுக்குவிப்பனானந்தலகு
மாக்கியொருமூவரைமுன்முக்குண தநினவிப்பிப்பன்
போக்குவிப்பனவர்பாற்றன்சத்திவிதத்தினைப்புணர்த்தே

எ - து ஆன்மாவானவன் அசரீரியாயிருந்தெப்படி யுடலைப்போக்குவரத்தைச்செய்விக்கும் அதுபோல நின்மலனுமாய் அசரீரியுமாயிருக்கிறசிவன்றனது சன்னிதிமாத்திரத்திலே சருவலோகங்களையுமுண்டாக்குவன் அஃதெவ்வாறென்னிற் றமதமுதலியமுக்குணத்தையுமுடைய மூவராயுமுண்டாக்கியவர்கண்மேல் தனது சத்திபேதமாகிய கிரியாசத்தியைப்பிரமாவினிடத்து அதிட்டித்துச்சிருட்டிகிருத்தியத்தையும் - ஞானசத்தியைமாயனிடத்ததிட்டித்துத் திதிகிருத்தியத்தையும் இச்சாசத்தியைச்சிகண்டபரமேசுரனிடத்ததிட்டித்துச்சங்காரகிருத்தியத்தையும் புரிவன். எ - று போக்குவிப்பனென்பதனாற்சிருட்டியுந்திதியுங்கூறியது (௨௧)

இதுவுமது.

வேறு

உள்ளுறச்சத்துவந்தானுருத்திரனுருவந்தோன்று
முள்ளுறவிராசதந்தானுநிக்குமாலுருமுன்மெய்யி
னுள்ளுறத்தமோகுணந்தானயனுருத்தானுமுற்ற
வொள்ளியவொருமூவர்க்குமொழிப்பிறுவாய்வேறென்றும்

எ - து சிருட்டிபேதங்களனேகமாயிருக்கும் - அதிற்பவுராணிகப்பிரக்கிரியையிற்சொற்றமானபிரகிருதிமாயையிலேதானே மூன்றுகுணத்திலு மூன்றுகருத்தாக்களைப் பரமசிவன்றோற்றுவித்த - அந்தச்சிருட்டியின்மூவருள் - உருத்திரமூர்த்தியாகிற சிகண்டபரமேசுரன்றிருமேனி சாத்துவிககுணமதிகமாயேனையவிரண்டுங்குறைந்துதோன்றும் மாயன்றிருமேனியிராசதகுணம் அதிகமாயேனையவிரண்டுங்குறைந்துதோன்றும் - பிரமாவினுடையதிருமேனிதாமதகுணமதிகமாயேனையவிரண்டுங்குறைந்துதோன்று - மிப்படிமூன்றுமான திருமேனியையுடையகருத்தாக்கள்பிரகிருதிக்குக்கீழுள்ளசிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவர்கள். எ - று [௩௰]

மேன்மூவருட்சங்காரகருத்தாவோரேயேனையவிருவராயுமொப்புக் கூறுவாரொய்துங்குற்றங்கூறுகின்றார்.

அதிட்டித்தல - நிலைப்படுத்தல்

காரகன்றனையுங்காயங்காசினிகாறுங்காக்கும் *
பாரகன்றனையுமபாரும்படைத்திடப்பட்டயாவும் *
ஆரகனதிகமென்றுதவர்தமக்கொப்பென்பார்கள் *
நாரகர்பரிகாரத்தைநவிற்றுநூலறியாதாமே *

எ - து சரீரத்தையுநிலனிறுதியபுவனங்களையும்படைக்கும்விதியினையும் அவையிற்றைப்புரக்கும்பாரகனாகியவிண்டுவினையும் - அவனாற்புரக்கப்படும்வைய கத்தினையுஞ்சராசரமாகியபொருள்களையுமழிக்குமவனாகியஉருத்திரனை - யிவரின் முதன்மையுண்டானென்றுதவரோடொப்பனென்பாரேல்நரகசம்பந்தராவர் கள் அவர்க்குத்திரும்பரிகாரத்தினைச்சொல்லுநூலும்யாமாராய்ந்தநூல் களிலில்லை எ - று காரகன் - பண்ணுகிறவன் பாரகன் - இரக்ஷிக்கிறவன் - ஆரகன் - சங்கரிக்கிறவன் - நாரகர் - நரகத்திலேவிழுகிறவர்கள். (௯௧)

அச்சிவனேயதிகமென்பதனைப்பவுராணிகர்மதத்தினு லுணர்த்துகின்றார்

என்றுகபிரதானத்தைப்பிருபத்துநாலாம்வேறொன் *
றென்றுகபுருடன்றன்னையிருபத்தைந்தாவானென்றே *
யென்றுகவிருபத்தாறும்பொருளெனவீசன்றன்னை *
யென்றுகவிவ்விசனையிருபத்தேழாவானென்றே *

எ - து பிரகிருதிமாயையானதத்திற்றோற்றப்பட்டஇருபத்துநாலு தத்துவத்துக்கும் பிராகிருதத்துக்குக்காரணமென்றறிக, ஆன்மாவையசுத்தமாயைக்கு மேலாயிருபத்தைந்தாகவெண்ணப்பட்டவனென்றறிக, அதுக்குமேலாக இருபத் தாறும்பொருளென்றெண்ணப்பட்டவர், ஈசுரனென்றறிக, அதற்குமேலாகியிருப த்தேழாம்பொருளாகவெண்ணப்பட்டிருக்கிறவனையொப்பற்றபரமேசுரனேயென் றறியுங்கள். எ - று பிரகிருதியைச்சொல்லவேயசுத்தமாயையுமதிலடங்கிய தா யிற்று, ✠ ஐயைந்தினைப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே யெனவிக்கருத்தைப்

திருவாரூர் - பண் காந்தாரம்

✠பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங் o
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும் o
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு o
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே o

பற்றித்திருநாவுக்கரசுநாயனாருளிச்செய்தார். (௩௨)

அந்தப்பரமசிவனைத்தியானம்பண்ணினவர்பெறும்
பேறுகூறுகின்றார்.

பார்த்தவிருபத்தேழாம்பொருடனைப்பகவன்றன்னைப் ✽
பேர்த்துடலெடுப்பரல்லர்பெறற்கரும்போகபேத ✽
மூர்த்துவபுவனத்துண்டேபுலகெலாமொடுங்கும்போது ✽
தீர்த்திடமூலநோயுஞ்சிவனவனவர்நண்ணம் ✽

எ - து இங்ஙனஞ்சொல்லப்பட்ட விருபத்தேழாமெண்ணின்கணின் றபொருளாகியபரமசிவனைத்தம்முடைய வறிவின்கணன்னியமாகக் கண்டவர்மீண்டொருகாலுங் கருப்பையுட்புக்குச்சரீரமெடுப்பாரல்லர்தேவராலும் பெறுதற்கரிதாகியபோக பேதங்களையெல்லாமேலாகியசுத்தவித்தியாபுவனத்தின்கண்ணுகர்ந்துபின்னர்ப் பிரபஞ்சகாரியமெல்லாந்தத்தற்காரணத்திலேயொடுங்குஞ்சருவசங்காரம்வந்தவிடத்துச்சிவனவர்க்கனுதிசம் பந்தமாகிய வாணவமலத்தினையுநீக்கிடுதலினாலேயந்தச் சிவனோடபேதமானமுத்தியினையடைவர், இதற்கையமில்லை எ-று

உம்மையால். மாயைகருமங்களையு மெனக்கொள்க. ஊர்த்துவபுவனமென்றார் அசுத்தமாயாபுவனங்கட்குமேலாயவாகலின் (௩௩)

சிவன்திரிகாலத்திலாசாரியனாயதிட்டித்துக்கொண்டெவ்வேயகாலங்களினிராதாரமாகவநுக்கிரகிக்கிறமுறைமை யிரண்டுதிருவிருத்தத்தாலுணர்த்துகின்றார்

திதியினுதாரஞ்சேர்ந்துசிவனுயிர்ப்பாசந்தீர்க்கப் ✽
புதியனபோகமுண்டுசிலர்சிவம்பொருந்துவார்மேற் ✽
றிதிநிலைத்தொலைவினந்தக்கணத்தினிற்சிவமேயாவர் ✽
பதியருள்விழியினாலேநள்ளிருட்பார்க்கப்பட்டார் ✽

எ- து திரிகாலமானவர்த்தமானகாலத்திற்பரமசிவனுலவர். அவ்வாசாரியனாயதிட்டித்துக்கொண்டுமலபரிபாகத்துக்கேடாகவவர்களவர்கள் பாசத்தைப் போக்கவேஅபரமுத்தித்தானமாகியபஞ்சகுய்யாட்டகாதானமாகியஉருத்திரர்பதத்திலுமந்திரமந்திரேசர்பதத்திலுமீசானமுதலிய பதங்களினுமிருந்தனுண்டுள்ளபோகங்களைப்பொசித்திருந்துசங்கார காலத்துநிராதாரமாகச்சிவனாலேயநுக்கிரகிக்கப்பட்டவர்களப்போதேதானேமோக்ஷத்தையடைவர்கள். எ- று

ஏகாரம், தேற்றம் (௩௪)

உற்பவவேலைதன்னி லுலகினையாக்கவல்ல *
கற்புளர்சிலரேமாவர்கழலடைவாருமுண்டு *
தற்பரன்விழிபிற்பட்டார்சங்காரவாரம்பத்திற் *
கற்புடன்படைப்புமுலக்கருத்தரும்வருகாலத்தின் *

எ-து சிவன்படைத்தற்றொழில் நடத்துங்காலத்துச் சுத்தாத்துவாமுதலியமூன்றத்துவாவிலுந்தங்கள்தங்கருத்துமுதன்மையான அதிகாரங்களைப்பண்ணியிருந்து அதிகாரத்திலவசியாக்கியம்பிறந்ததனால் மோக்ஷத்தையடைவர்கள்சங்கரிப்புண்ணுறவதரத்திலேமலபரிபாகமுள்ளவர்கள். பரமசிவனாலனுக்கிரகிக்கப்படுவர்கள் மலபரிபாகமொத்தியத்தையுடையவர்கள் சங்காரகாலத்தொழிவில்மேல்வருஞ்சிருட்டிகாலத்துச்சிருட்டிமுதலியபஞ்சகிருத்தியங்களைப் பண்ணுதற்கு. அதிகாரகர்த்தர்களாகச்சிவனாலேவரப்பட்டிருப்பர்கள். எ-று

உம்மையெதிரதுதழுவியவெச்சம் (௧௭)

முற்கூறியஞானயோகமடைதற்பொருட்டுக்கருமயோகத்தினதியல்பு
கூறுவான்றொடங்குகின்றார்

பரமமெய்ஞ் ஞானயோகப்பாங்கிலார்தமக்கும்பாங்காங் *
கருமயோகினையுங்காணக்கழறுவங்கருதாவானே *
கருதிடும்பொருளையத்தக்கருத்தன்பயனையென்ன *
வருமொருநான்கு முன்னைமதிக்கவேயோகம்வாய்க்கும் *

எ-து மேலாயவுண்மையாகியஞானயோகமடையாதார்க்கு நன்மையைத்தருவதாயிருக்கிறகருமயோகத்தின தியல்பினையுங்கூறுகின்றோமதனைச்செவிப்படுக. ஒருபொருளைக்கருதுமவனுமவனுற்கருதப்படும்பொருளும்அப்பொருளைக்கருதுங்கருத்துமக்கருத்தாலவாந்தடையும்பயனுமென்று சொல்லுதற்குவரும் நான்கினையுமுன்னேயாய்ந்தறிபவர்களுக்குப்பின்னர்அக்கருமயோகநெறிகூடும் எ-று

நான்குமென்றவும்மை முற்றும்மை-மதிக்க வென்றதனாலாய்ந்தறிதல்வேண்டுமென்பதாயிற்று (௧௮)

இதுவுமது

மலத்திறுமறுதிமுத்தன்வாக்கிறுமேகதேசம் *
பலிப்பதுமுத்திப்பார்க்கவிம்மையிற்பயனுட்பார்த்தான் *

மலத்தினுநீங்கியீசன்மலரடிநீழல்வாழ்க்கை *
விலக்கிலேயென்றேயெண்ணிவிரும்புவன்யோகம்வேறும் *

எ-து அநாதிமலமுத்தனாலுரைக்கப்பட்ட வேதாகமங்களுள் ஒருசாரிம்மைப்பயனுட்பலிக்கப்பட்ட கருமயோகத்தை விதிவழுவாதியற்றி முன்னர்ப்பார்த்தறிதலைச்செய்க, அங்ஙனம்பார்த்தால்மூலநோயினின்றுநீங்கியிறைவனுடையதாமரைமலர்போன்றதிருவடிநீழலையடைந்து வாழ்தற்குவிபரீதமில்லையெனக்கருதியிம்மைப்பயனுட்பலிக்குங்கருமயோகத்துக்குவேறாய் வீடுபேற்றுக்குரித்தாகியஞானயோகத்தையும்விரும்புதலைச்செய்வன். எ-று (௩௭)

இந்தக்கருமயோகத்துக்குப்புண்ணியநதிமுதலானவையுபாங்கமெனக்கூறுகின்றார்

எல்லையையெழுவாயெல்லாமென்னுகவுபாங்கமென்றே *
யல்லலிவ்வாக்கைகண்டவருவருப்பெனவறிந்து *
புல்லியபுலன்கள்வென்றுபொருவிலிபுரியும்புக்குச் *
செல்லலெல்லாமுந்தீரச்சிவனடியடையுஞ்சித்தர் *

எ-து இந்தநிலைநில்லாத சரீரந்துன்பத்தைவிளைக்குமதெனவுங்காட்சிப்பிரமாணத்தாற்பழிக்கப்பட்டமலமூத்திரப்போர்வை யெனவுமதனையறிந்து. அற்பவறிவினைத்தருவதாய விடயபோகங்களினது வழிபோகாமற் றம்வழிக்கொண்டு தனக்கோரொப்பில்லாதவிறைவனை அநுசந்தானமாகவடைந்து வீற்றிருந்துதுன்பத்தொடர்ச்சியெல்லாம்விட்டுநீங்கிச்சிவனுடைய திருவடியையடைதலைவிரும்புவார். இடம்பொருளேவற்செய்வோரென்னு மூன்றினையு மிக்கருமயோகத்திற்குபாங்கமென்றறிக. எ-று

யோகத்திற்குப்பிரதானமாகிய அங்கம்இயமமுதலியவெண்வகையந்தவங்கத்துக்குத்தானமுதலானவைகள்உபயோகமாதலாலுபாங்கமெனச்சிறப்பித்தார்.இதவடமொழி. இப்பயன்பலித்தலியல்பாதலிற்சித்தரெனச்சிறப்பித்தார் (௩௮)

இதுவுமது

அரவினன்மற்றுமச்சமறவருவருப்புமின்றி *
மரநிரைமலருமல்கமனிதர்கள்பலரும்வந்து *

விரவிடாவெல்லைதன்னில் விரும்பியே குகையுஞ்செய்து *
திருவிளக்குடனே தூபந் தீர்க்கவே குகையுட்செய்க *

எ - து வெளி - இந்நூல்யோகசாதனைக்குத் தலங்கள்கூறியதாயிற்று (ஙகூ)

யோகசாதனைக்குரித்தல்லாதாரிலக்கணத்தை யிரண்டுசெய்யுளா லுணர்த்துகின்றார்

ஆக்கையிற்பிணியையுற்றோ னுதரவகத்திலற்றோன் *
காக்கவேபாக்கைதன்னைக்க நந்தினுள நுக்கிவைத்தா *
னிக்கிடாக்கருமத்தோடே வலியுறநிரந்துநின்று *
னாக்கமேயுடையானானமிகப்பணிக்கொருமையுற்றே *

எ - து - வெளி - ஊக்கம் - உச்சாகம் (சய)

ஆரியனைவல்செய்வானாகிய பனமுமுள்ளான் *
பாரியதபனந்தன்னைப்பற்றினன்மற்றுங்குற்றம் *
சேரியனென்றுசெப்புமிவரெலாஞ்சிறந்தயோகத் *
தாரியர்சொல்லப்பட்டவிவரலார்தொடங்கலாமே *

எ- து- வெளி- யோகத்தாரியர்- யோகஞ்சாதித்தற்குரிமையல்லாதார்-ஆரியன் ஆசாரியன் (சக)

இக்கருமயோகத்தினதுபயனைவழுவாதெய்துவாரித்தகைமையரெ னவவரிலக்கணத்தினை நாலுசெய்யுளாற்கூறுகின்றார்

மதமிதாய்ச்சிறிய கூடும்பற்றியபரிமிதான *
முதரதிபனமுங்கூரவுச்சிப்பின்றொருபோதுண்பா *
னுதகமுநொய்திறுஞ்சாணுதரபந்தனமுமுள்ளான் *
மிதமிதமென்றேபொன்னிவேளைவாத்துடைத்துவிட்டான் *

எ- து மேன்மையையுடையதாய்ச் சிறியதுட்டிடறுங்கூடிய அற்பமாகியவன் னத்தைவயிற்றின்கட்பசியுமிகவுமுண்டாக உச்சிக்குப்பின் ஒருநேரமாகவுண்டலை ச்செய்வான், தண்ணீரினையுஞ் சிறிதேபருகுதலைச்செய்வான் வயிற்றின்கண் ✠ ஒ ட்டியாணக்கட்டினையு முடையான் யாதாமொருபொருளை நுகர்தற் பொருட்டா

✠ ஒட்டியாணம் - யோகப்பட்டை.

சைவந்தவிடத்துச்சிறிதினைக்கருதி மிகவுநுகர்தலைச்செய்யாது நீத்துவான். எ-று

வேணவா. எ- து. வேட்கைப்பெருக்கம் [௬௨].

நீக்குவான்றிரண்டபானெய்நிகழ்தநிதனைபுசெய்பி *
ணுக்கியவப்பமாதியனைத்தைபுமவலமென்றே *
நூக்கினுட்சொல்லுமுண்டைச்சுவையுளிமுருங்கைதொண்டை *
பீர்க்கினுட்பெரியதத்தியெனுமிவையாதிபேணான் *

எ- து- வெளி- இதனுள். தூக்கு. நூல். தொண்டை. கொவ்வை (௬௩)

அஞ்சுவானசைதோன்றிலருவருப்பான்றன்னுகம் *
பஞ்சின்மெல்லடியார்வந்துபுரிந்துமெய்பற்றினாலு *
நஞ்சுளநடுங்கிபன்னைபெனவவர்தம்மைநாடி *
வஞ்சிநுண்ணிடையார்போகமறுத்தறவெறுக்கவல்லான் *

எ- து- வெளி (௬௪)

தொழிலினைச்சுருங்கியுள்ளான்சுளிப்பவன்றுயிலுந்தோன்றில் *
விழைவினை ஞானயோகபலத்தநிவினாவின்வைத்தான் *
உழையுறைபுலன்களெல்லாமொடுக்கியேயுள்ளானென்று *
கழறியவிவரோயோகபலத்தினைக்கைக்கொண்டாரோ ௰

எ- து கிரியாபாதத்திற்சொல்லுகித்தியநைமித்தியகாமியசடங்கிற்கிரியைவிரியாமற்சுருக்கிச்செய்துள்ளான் நித்திரைவந்தவிடத்து த்தடுத்தததனை வெறுப்பான் யோகத்தின்பலமாகிபழுந்தியினைபடைவதில் மிகவும்விரும்புதலைச் செய்வான் தன்னிடத்திற்பொருந்திநிருக்கிற விடைபங்களிற்பற்றுதலெல்லாமொழித்துள்ளானென்றிப்படிச்சொல்லி வரப்பட்டவித்தன்மைபரோ யிவ்வியோகசாதனையெய்தும்பயனைப்பெறுவர். எ- று

எதிர்காலத்தாற்கிளப்பதனைமிறந்தகாலத்தாற்கிளந்தார். விரைவுபற்றி (௬௫)

மேலாதனமுதலியவற்றைவிரண்டுசெய்யுளாற்
றொகுத்துணர்த்துகின்றார்

ஆதனம்பதுமமாதிபல்லதுமிசைந்ததொன்று *
லேதமக்கியற்றித்தேவனிணையடியிறைவிபாதம் *

போதகவுருவன்பொற்றாள்புந்தியுளினைந்துபோற்றிச் *
சாதகர்புரிகயோகந்தவறறுமுபயோகத்தால் *

எ-து. சாதகனானவன் பதுமமுதலிய அறுபத்திநாலு ஆதனத்துளொன்றைப் பொருந்தியல்லது தனக்கியன்றதொரு ஆதனத்திலேயிருந்து சிவன்உமையாள். தெக்ஷணாமூர்த்தி யிவருளொருவர் பாதமாதல் புத்தியினாலே தியானித்தொழிந்தவாறே தோத்திரஞ்செய்துயோகத்துக்குத்தவறுவாராமற்புரிக. எ-று. (௪௬)

கரந்திரியக்கேயாகக்கவான்மிசைக்கலக்கத்தென்பாற் *
காந்தனிற்பிருட்டசாய்கைகலக்கமற்றங்கைக்கண்ணே *
பிரிந்தபன்னடுவேநாயினந்தரம்பெய்துநிற்க *
வரந்தனமுன்னேபின்னும்நிமிர்ந்திடக்களமுமோங்க *

எ.து கைய்ங்காலுங் குறுக்கேவைக்க. அஃதெங்ஙனமென்னில் வலதுகாலையிடதுதொடைக்குள்ளேவைத்து அதன்மேலே மடியிலேயிடதுகையைமுதல்வைத்ததன்பினதன்மேலேவலதுபுறங்கைபொருந்தவைத்துப் பல்லொன்றோடொன்றுகிட்டாமனடுவேநாக்குநிற்கப்பண்ணிமார்புமுன்னேதள்ளிப்பின்னே நிமிர்ந்துசரீரஞ்செவ்வையாகவிருக்க. எ-று ௪௭

முற்கூறியவாசனத்தையும் பிராணாயாமத்தையும் பிரத்தியாகாரத்
தையுந்தொகுத்துணர்த்துகின்றார்

நாசியினந்தஞ்சேர்த்திநாட்டநான்கைந்தொன்றென்றே *
தேசுறுநிசைகடன்னிற்செலுத்திடாநிருந்துவாயு *
ரேசகபூரகங்களெனுமிவையிரண்டுமின்றிப் *
பேசுதற்றனுமில்லாச்சிலையெனவிருக்கைபெற்றே *

எ-து கண்கள்நாசிநுனியைப்பொருந்திப் பிரகாசத்தையுடைய பத்துத்திக்கிலு மனதைச்செல்லாதபடி நிறுத்தியிருந்து இரேசகபூரகமாகிய விரண்டையும் விட்டுக்கும்பகத்தோடே மவுனியாயிருந்து சிலையானதெப்படி சேட்டையற்றிருக்கும தப்போலவசைவறவிருக்க எ-று. (௪௮)

மேற்றாரணைதியானஞ் சமாதிமூன்றினையுந்தொகுத்
துணர்த்துகின்றார்

மனநிலையொடுங்கவீசன்வடிவினையகத்துள்வைத்துப் *
பினைவடிவறநிபேசுந்தேசிகனருளாற்பெற்று *

மனநிலையொடுங்கவாய்த்தவாய்மையினறிவைவைக்கக் *
கனிவொடுகொண்பான்காட்சிகாட்சியிற்படலுங்கைத்தே *

எ - து மனத்தை வேறொன்றிலுஞ் செல்லவொட்டாமல் மூலாதாரமுதலிய ஆதாரங்களிலே நிறுத்துவது தாரணை, ஞானசாரியனுடையவருளினாலே ஓட்களத்தையுபதேசிக்கப் பெற்றுச்சிவனைமூலாதார முதலியதானங்களிற்கடப்பம்பூவானதெப்படியடியிலேதொடுத்துமேமேலேசெல்லுமதுபோலப்பாவிப்பது தியானங்,காண்பானுங் காட்சியுங்காணப்படும் பொருளுமின்றிச் சித்தமனோலயம்பிறப்பித்துச்சித்தாயிருக்கிற வியாபகத்திலே யறிவானதை நேயத்துடன் வைத்திருப்பது சமாதியெனப்படும். எ று [சக]

இப்படி யுண்மைநிலைகைவரா தோர்க்கு மேலோருபாயநிட்டையுணர்த்துகின்றார்

நீங்கினரிந்தவுண்மைநிலையினைநெஞ்சந்தன்னிற் *
றாங்குகசகளந்தன்னைச்சங்கரன்றன்னையுன்னி *
நீங்குகசகளந்தன்னைமுன்னையினிலையினிடித் *
தூங்குகநிரியிற்பின்னுஞ்சகளமாதரிக்கச்சூழ்ந்தே *

எ - து இங்ஙனங்கூறியவுண்மைநிலையாகிய சமாதியைவிட்டுநீங்கினவர்கள் சகளமூர்த்தியாகியசிவனையிதையத்தின்கட்டியானஞ்செய்க, அந்தத்தியானத்தைவிட்டு நீங்கினவிடத்துமுன்போலச்சமாதியைப்புரிக, அதனைவிட்டுநீங்கினவிடத்துப்பின்புஞ்சகளமூர்த்தியையேதியானஞ்செய்க. எ - று (௫௰)

மேலுமோர்வகையாலகப்பூசையுமுணர்த்துகின்றார்.

அகத்தினுட்பூசைசெய்வார்க்கருவருப்பில்லைக்கொல்லும் *
பகைத்தொழிலில்லையல்லற்படுதலுமுடலுக்கில்லை *
யுகப்புறுபலமுமேலாமுறும்பலமுனையினறப்ப ஞ் *
சகத்தினுட்பூசைசெய்வார்தமக்கெலாம்வருத்தஞ்சார்ந்தும் *

எ - து யாதாமொருவர்அகப்பூசைசெய்யுமிடத்தவர்களுக்கு அசுசிமுதலியகுற்றமுமில்லைபுட்பமுதலியவற்றைப் பறிக்கிறவாதையாகியகுற்றமுமில்லை மிகவுமிதனாற்சரீரவருத்தமுமில்லை யிவன்பெறும்பலமுமதிகமாயிருக்கும் புறப்பூசைசெய்யிற் சரீரவருத்தஞ்சாரினுமதனாற்பெறும்பலமுமற்பம் எ - று (௫௧)

மேலகப்பூசைசெய்தற்குத்திருமேனியீதென்றுணர்த்துகின்றார்.

மங்கலவங்குலத் தாம்வளர்திருவுருவந்தன்னைத் ✽
தங்கருத்தினுக்கேதக்கநிறத்துளிச்சலசந்தன்று ✽
ளெங்கருக்கிறைவா விட்டசித்திதாவென்றேயேத்தச் ✽
சங்கரனவர்க்கேயிட்டசித்தியைச்சமைப்பன்றானே ✽

எ - து எட்டங்குலமுயரமாக வொருசிவலிங்கத்தை நினைந்துதமதுகருத்துக்குரியவண்டினதொருநிறமாகவதனைக் கருதியிதயகமலத்தின் கண்ணிருத்திசிவன்றிருப்பசாரத்துடன் பூசைசெய்து எமது சுவாமியாமியாதொன்றடையவேணுமென்றுகருதின இட்டசித்திகளெல்லாவற்றையுந்தருவாயாகவென்று பிரார்த்திச்சுத்தோத்திரஞ்செய்யச்சிவனுந்திருவுளமகிழ்ந்துஅவர்களவர்கள்வேண்டினஇட்டசித்திகளையிம்மைக்கட்கொடுப்பன். எ - று (௫௨)

சராசரமாகிய ஆன்மாக்களிடத்துச்சிவன்வியாபி
த்திருக்குமுறைமையையுணர்ந்தார்
பேறும்பலமுணர்த்துகின்றார்.

சராசரத்தமலனிங்காத்தன்மையனாதலாலே ✽
சராசரமவன்றன்மேனியெனவுணர்தக்கோர்தாமுந் ✽
சராசரவுயிர்க்குந்தாயாஞ்சங்கரனுலகஞ்சார்ந்து ✽
சராசரமோடின்தம்போதுதற்பரன்றானுஞ்சார்வார் ✽

எ - து வெளி-சரம் - சர்விருகாதி - அசரம் - தாபராதி (௫௩)

முன்னர்த்தொகுத்துப்போந்தயோகத்தைமேல்வ
குத்துணர்த்துகின்றார்.

போகத்தைநிந்தமன் தம்புணரமுன்பொருந்திநின்ற ✽
மோகத்தை முனியயோகமுயிரண்டங்கத்தாலே ✽
புரிந்தேயுரைப்பாஞ்சொல்லற்கொருபொருளல்லாவூக்கத்தை ✽
யாகத்தையயலென்றாய்ந்தவறிவுடையார்கடாமே ✽

எ - து ஈதென்றுசுட்டிச்சொல்லுதற்கேறவல்லாதவமுக்குமிக்கசரீரத்தைமக்கன்னியமென்றாய்ந்த வறிவுடையோர்கள், அபரபோகம்பரபோகத்தைப்பொருந்தவுமுன்னே சென்னந்தோறுந்தொடராநின்ற வஞ்ஞானங்களொ

ழியவும் ஆறங்கமாகியயோகத்தையாம்விசாரித்துஇந்நூலிற்சொல்லாநின்றேம் எ-று [௫௪]

அறங்கமாகியயோகத்துட்டலைமையாகியபிராணயா
மத்தையுவமித்துணர்த்துகின்றார்.

அட்டாங்கயோகமென்றிருக்கவீண்டாறங்கமென்றதென்னெனில். இயம நியம மிரண்டுமிதனுளடங்குதலால்வேறாகக்கூறிற்றிலர்

முந்தியபிராணயாமமுதற்சாதனசமாதி *
யந்தமாறங்கயோகமவற்றுளாம்பிராணயாமந் *
தந்தியைப்பாகனெற்றேதடுத்தடர்த்திடுமையற்றே *
பந்தமாம்பிராணன்றன்னைப்பயிற்றுதலுணர்க்கும்பாங்கால் *

எ-து பிராணயாமமுதற்சமாதியந்தமாகியவாறங்கயோகமும்மோக்ஷமடைதற்குப்பாங்கென்றுசொல்லலாம், அவற்றுட்டலைமையாகிய பிராணயாமத்தின் பகுதியைவிசாரிக்குமிடத்துப்பாகனானவன்யானையானத்தன்வழிசெல்லவொட்டாமற்றோட்டியாற்றலையிற்கொத்திமறித்துத்தன்வசமாக்கிக்கொள்ளுமாறுபோலவான்மாவைவிட்டுநீங்காதிருக்கிறபிராணவாயுவை சிவயோகியானவனிரேசக பூரகங்களினாலேமறித்துத்தன்வசமாக்கிக்கொள்ளுவன். எ-று [௫௫]

அந்தப்பிராணயாமத்தின்பகுதியையுணர்த்துகின்றார்.

ஊன்றியேவலப்பானாசிப்புடைவிரலுதரவாயுக் *
கான்றிடவிடையினாலேகலைகபிங்கலையினாலே *
யூன்றியேயிடப்பானாசியுதரத்துள்ளுறவேபூரித் *
தூன்றியேயிரண்டுங்கும்பித்திடுகபின்னுதரத்துள்ளே *

எ-து வெளி (௫௬)

மேற்பிராணயாமமென்னுஞ்சொற்குப்பதப்பொருளு
ணர்த்துகின்றார்.

பெற்றமையாலேநீங்காப்பெற்றியைப்பிராணனோடே *
பெற்றிடும்பிராணனென்னும்பெயரினையனிலந்தானு *
மற்றதன்வருத்தந்தன்னையதித்துளாயாமமென்றே *
பற்றுகபிராணயாமப்பதப்புணர்ச்சியினைப்பாங்கால் *

எ - து ஆன்மாவினுடைய பிராணவாயுவானது விட்டு நீங்காதிருக்குந்தன்மையைப்பெற்றமையாலேயதற்குப் பிராணனெனப்பெயராயிற்று - அதனைரேசகபூரகங்களினாலேபோக்குவரத்துச்செய்து தக்கிப்பிக்கையால் ஆயாமமெனப்பெயராயிற்று, இப்படிபிராணவாயுவை ப்போக்குவரத்துச்செய்விப்பிக்கையாற் பிராணாயாமமெனவச்சொற்பொருளாயிற்று. எ - று (௫௭)

அந்தப்பிராணாயாமத்தால்வருநன்மைநிலைமையுணர்த்துகின்றார்

அந்தரம்பெரிதேயாகுமவகதியாயாமத்தான் ❋
வந்துறுமென்மைநன்றுவாய்க்கினுயாமம்பாச ❋
பந்தமும்பிற்றியச்சப்படுத்தியங்குசத்தாற்பற்றுந் ❋
தந்திவாகனனுஞ்சாலத்தளர்வனேதவறேசாரில் ❋

எ - து மேலந்தப்பிராணாயாமத்தை யாதாமொருவன் விதிவழிசெய்யாது ஏற்றக்குறைவாகச்செய்யின் அவனுக்குமிகவுந்துக்கத்தையே கொடாநிற்குமதனையுள்ளபடியறிந்துசெய்தஅதுவாய்த்தவிடத்துஅதனாலுள்ளசித்திகள்நன்மைகளெல்லாம்வந்து பொருந்தும்,காலிலே சங்கிலியும் பூட்டப்பட்டுப்பாகன்றோட்டியினாலேவாதைப்படுத்த வதனாற்பயங்கரத்தை யுமுடையயானையின் மத்தகத்திலேயிருக்குந்தேவேந்திரனேயானாலும் அந்தப்பிராணாயாமம்வாயாதவிடத்து மிகவுந்துக்கத்தையுறுவன் எ- று- உம்மை- உயர்வு சிறப்பு (௫௮)

பிராணாயாமத்தவறினவிடத்துண்டாகியகுற்றம்போம்படிக்குபாயமைத்துசெய்யுளாலுணர்த்துகின்றார்

வாயுவாயாமந்தானுந்தவறுமின்வருத்தமாக்கு ❋
நோயுமுமுற்றநோய்களுங்குதனுவலக்கேண்மோ ❋
தேயுவைத்தியானஞ்செய்யச்செறிந்தநோயங்கந்தன்னின் ❋
மாயுமேவாதரோகமனந்தகத்தொருமைவாய்த்தே ❋

எ- து யாதாமொருவர் பிராணாயாமஞ் செய்யுமிடத்து க்குற்றம்வரிற்சரீரத்திலேவாயுவினாலேவருத்தத்தையுண்டாக்கும் அஃதன்றிவியாதியையு முண்டாக்கும் அக்குற்றங்கள்போம்படிக்கொருஉபாயஞ்சொல்வாமதனை க்கேட்பாயாகமனதிலேயொருமைப்பாட்டையுடையவனாயதற்கு விருத்தமானவக்கினியைத்தியானஞ்செய்யிலதனாற்சரீரத்தின்கட்பொருந்திய வாதமுதலியவியாதிகளுநீங்கும். எ- று (௫௯)

அங்கியான்வருத்தமுற்றவவையவமதனிலாழ்ந்த *
பொங்குதண்புனலைச்சிந்தைபுரிந்திடிற்பிரிந்துபோகும் *
பொங்குதண்புனலாற்றுன்பம்பொருந்நியவுறுப்புந்தன்னி *
லங்கியைத்தியானம்பண்ணவல்லவர்க்கழியுமிந்நோய் *

எ-து அக்கினியைத்தியானஞ்செய்தஇதனாலேயிவனுடைய சரீரத்தின்கண் அதனால்வாதைவரில் அதற்குவிருந்தமாகிய தாழ்ந்தமடுவின்கண்ணிறைந்திருக்கப்படாநின்றசீதசலத்தைத்தியானம்பண்ணிலந்தவாதைவிட்டுநீங்கும் அந்தச்சீதசலத்தினாலேசரீரத்தின்கண்வாதைவரில் அதற்குவிருத்தபூதமாகியதேயுவைத்தியானிக்கவல்லவர்க்குஅந்தவாதையானதுநீங்கிப்போகாநிற்கும். எ-று

வல்லவர்க்கென்றுஞ்சொல்முற்றுங்கூட்டுக (௩௰)

உற்றிடுஞ்சுரந்தன்னினுதாசனனுற்றபோதே *
பற்றுகவமிர்தவெள்ளப்பாவனையதனூற்பாறு *
மற்றையவுதகவேட்கைவரினுமிவ்வாறுசெய்க *
வற்றிடுமறலின்வேட்கையாகமுங்குளிருமன்றே *

எ-து முன்னர்க்கூறியவந்தவக்கினியானது உதராக்கினியுடன்பொருந்திமிகவும் வாதைபண்ணினவிடத்து விந்துத்தானத்தினின்று இறவமிர்தமானது புறப்பட்டு எங்கும் நனைந்ததாகப்பாவிக்கிலந்தவக்கினிவாதை சமிக்கும். அஃதன்றி மிகவுந்தண்ணீர்த்தாகமுண்டான விடத்து முன்புபோலே யமுதபாவனைபண்ணினாற் றத்தாகமுஞ்சமித்துச்சரீரமுங்குளிர்ந்திருக்கும். எ - று (௩௰௧)

உற்றநோயுடலினூடியுணர்ந்தபின்விபரீதத்தைப் *
பற்றுகபாவகத்தாற்பற்றியவுறுப்பினோய்கள் *
அற்றிடுமைவர்விரமடக்கியேயவாவுமாய்த்த *
நற்றவர்புரிகவிந்தமுறைபினைப்பயிக்குநாளும் *

எ - து பஞ்சேந்திரியங்களையுமடக்கி யாசையினையுமொழித்த நல்ல சிவயோகியானவன் நாடி சோதனையைப்பண்ணின்பின்பு சரீரத்தின்கட்பொருந்திய வியாதியானது போம்படிக்குப்பாவனாசாமர்த்தியத்தினாலே பின்பு விபரீதமாகநாடிசோதனையைப்பண்ணிலச்சரீரத்திற் பொருந்திய தலைவலி - கண்ணோய் முதலி

பிணியாதிகளெல்லாம்போமாகையாலே நாடோறுமிந்தப்படியேசெய்யில்யோகசித்திவரும் எ - று (கூஉ)

கடுவெளிற்றரவமெய்யிற்கடித்திடிற்கனலுமந்த *
வுடலெல்லாமமிர்ததாரையொழுக்கியேநினைக்கவுள்ளத் *
திடரெலாமன்றனக்கப்போதேதீர்ந்திடும்விடமுமற்றை *
விடமுறும்போதுமிந்நினைவுறின்விரைந்துநீங்கும் *

எ - து வெளி.

காளி - காளாத்திரி - நீலி - நிலாத்ரியென்னும் பல்லையுடைத் தாதலாற் கடுவெளிற்றரவமெனச்சிறப்பித்தார், மற்றுமென்பதனால் தேள் முதலாயின வெனவறிக (கூஙா)

யோகத்சித்தியானதற்கடையாளங்களுணர்த்துகின்றார்

வாயுவைச்செயித்தசெய்கைவாய்த்தகற்கடையாளங்கள் *
ஆயுராரோக்கியாதியவற்றையவ்வுடலங்காட்டு *
மாயமுமனத்தினில்லைவசமுறும்புலன்களெல்லாங் *
காயத்தின்மலநீர்மற்றும்நோய்தெனக்கழியுமன்றே *

எ - து - வெளி. (கூச)

அந்தப்பிராணாயாமமிருவிதமாமென்று இரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வாயுவிறையாமந்தானிருவிதமாகவாய்க்கு *
மாயினொன்றகற்பமற்றையதுமகாசகற்பமாகும் *
வாயின்மந்திரத்தைச்சொல்லிப்பயிற்றலுமனத்தினாலே *
தேயனைச்சிந்தைசெய்தேபயிற்றலுஞ்சகற்பந்தேரில் *

எ - து. பிராணயாமம்சகற்பப்பிராணயாமமெனவும் அகற்பப்பிராணயாமமெனவுமிருவிதமாம்அவற்றுட்சகற்பமாவது வாக்கினாலே மந்திரத்தையுச்சரித்துமனத்தினாலேசிவனைத்தியானஞ்செய்தபிராணயாமஞ்செய்வது. எ - று (கூரு)

அகற்பமவ்விரண்டுமின்றியாக்கிடுமாயாமந்தான் *
மகத்பலவாஞ்ஞையாலேபயிற்றுமாதவர்க்குவாய்த்த *

சகற்பமேயகற்பந்தன்னிற்றரும்பலமதிகந்தாழ்ந்த ❋
வகற்பமுமலசினோர்க்குப்பலத்தினைநொய்திறுக்கும் ❋

எ-து முற்கூறியசெபமுந் தியானமு மின்றிப்பிராணாயாமஞ்சொன்னமாத்திரைகளினாலேசெய்வதுஅகற்பப்பிராணாயாமமென ப்பெறுமிகுந்த பலத்தையடையக்கருதும்வாஞ்சையையுடைய மகாதபோதனர்க்கு அகற்பப்பிராணாயாமத்தைப் பற்றச்சகற்பப் பிராணாயாமமே யதிகபலத்தைக்கொடுக்கு மந்தச்செபத்தியானத் தோடுகூடியசகற்பப்பிராணாயாமஞ்செய்ய மாட்டாமற்சோம்பினபேர்க்குஅகற்ப ப்பிராணாயாமமானதுமுற்கூறியவற்றிற்றாழ்ந்ததைக்கொடுக்கும். எ-று. (௬௭)

பிராணாயாமத்தின்விசிட்டமும்அஃதில்லாதார் சமாதியடையமாட் டாரென்பதுமுணர்த்துகின்றார்

இந்திரியவிருத்தியெல்லாம்பிராணனேயியக்கவேயு ❋
மிந்திரியஞ்செயிக்கவெண்ணிற்பிராணனைச்செயிக்கப்பஞ்ச ❋
விந்தியஞ்செயித்தார்தாமேயெய்துவர்சமாதிதன்னை ❋
யிந்தியஞ்செயிக்கமாட்டாரெய்துவதேதுமின்றே ❋

எ-து. இந்திரியங்களெல்லாம்பிராணவாயுவியக்கவே யியங்குமாதலாலிந்திரியஞ்செயிக்கக்கருதுமவர்பிராணவாயுவைத் தமதுவசவிருத்திபண்ணுக, இந்திரியஞ்செயித்தாற்பிரயோசனம் யாதென்னிலிந்திரியஞ் செயிக்கமாட்டாதோர்சமாதியுமடையப்பெறார்கள், சிபாஞ்ஞைகளுங்கைவரமாட்டாது, ஆதலாற் பஞ்சேந்திரியங்களைச்செயித்தவர்களேசமாதியையடையுமவர்கள். எ-று. (௬௮)

அந்தச்சமாதியடையுமிடத்துபஞ்சேந்திரியங்கடாமாகச்செய்யவற் றென்னிலான்மாவேநடத்துமென்பதற்குருவகம்பண்ணியுணர் த்துகின்றார்

விசையுறுபரிகளாகவிரவுமிந்திரியபேதங் ❋
கசையதுவாகவாயுக்கற்புற்றயாமத்தாலே ❋
தசையுடலிரதந்தன்னைச்சாரதியாகித்தானே ❋
யசைவதுமின்றியூருங்கொளவிருபயனுமான்மா ❋

எ-து. சோத்திராதிபஞ்சேந்திரியங்களானதுவிசைவுடைத்தான குதிரைகளைப் போற்சென்றுவிடயங்களைப்பொருந்துமிப்படிச்செல்லுமிந்திரியங்களான்றுவா

யச்செலுத்தச்செல்லுமதன்றித் தானுகச்செல்லமாட்டாதந்தவாயுவானதும் பிராணுயாமத்தை விதிப்படி நாடோறும்பண்ணினவிடத்தாந் தானினைத்த இந்திரியங்களிற்செலுத்தமாட்டாவாதலால்ஆன்மாவுக்குவசவிருத்தியாம்அப்போதான்மாவானவன் மேலாகியபோகமோக்ஷமாகியவிருபயனையுமடைதற்பொருட்டு மாங்கிசமுடைத்தாகியதூலசூக்கும மானசரீரத்தைத்தேராகப்பண்ணி யிந்திரியமாகிய பரிகளைப்பூட்டிவாயுவைச்சம்மட்டியாகப்பிடித்துக்கொண்டுதான் தேர்ப்பாகனு யனையின்றியவதிகாரியாயிருந்துதன்சன்னிதிமாத்திரத்திலே யந்தத்தேராகிய சரீரத்தைச்செலுத்தாநிற்பன். எ-று (௯௮)

அந்தஆன்மாவுந்தானுகச்செலுத்தவற்றன்றுவென்னி
ன்றிவற்றைச்சன்னிதிமாத்திரத்திலேநடத்துவனெ
ன்பதனையுத்தரரூபமாகவுணர்த்துகின்றார்.

வேறு

இயக்கினுடலுயிர்விதற்கியெனிற்பூணிக்கியந்திரத்தின் *
றியக்குவிக்குமிறைபமலனெனிற்றெழிற்றுண்டிறைவனுக்கு *
மியக்கமிருநிலமெய்துமிரவிக்கேதுதானில்லை *
யியக்காநிரும்பெய்திபிடுங்காந்தத்துமிலைத்தொழிலே *

எ-து ஆன்மாவானவன் அதிகாரியாயிருந்துசரீரத்தையியக்குவிப்பனென்னிற்சகடையியக்கும் பூணியானதையியக்குவிப்பானொருவன்போல விசுவத்தைநடத்துவன் நிர்மலனாகியசிவனே யென்னி லந்தக்கர்த்தாவுக்குத் தொழிலுண்டாகவேனுமென்னில்லஃதப்படியன்று பெரியநிலத்துள்ளார்தொழில்செய்கிறது ஆதித்தபகவானேயல்லவேயஃதன்றிக் காந்தக்கல்லின்முன்னிரும்புசேட்டிக்கப்படுகிறது காந்தக்கல்லினது தொழிலல்லவேயாதலாற்கர்த்தாவுக்குத் தொழிலில்லைக்காண். ஆதித்தியன்காந்தக்கல் இவற்றின் சன்னிதிமாத்திரத்திலேயவை காரியப்படுமாறுபோல விசுவமுஞ்சிவனதுசன்னிதிமாத்திரத் திலே காரியப்படும் எ-று (௯௯)

சிவன்செகத்தையசரிரியாயிருந்துநடத்துவனென்
பதற்குதாரணரூபமாகவுணர்த்துகின்றார்.

அவையவைத்துங்காரியமெய்யாதியதற்கமலனிறை *
யவையவத்தவிரதாதிகாரியமுண்டாக்கினர்மெய் *

யவயவமுமாக்குமறிவதற்குமுதற்காரணத்தின் ✿
றவயவத்தாற்பந்திக்கப்படுமவர்க்குமவர்வினைக்கும் ✿

எ - று. சரீரமானது மெய் வாய் கண் - மூக்குச் செவி - முதலியவவயவங்களுடனே கூடிக் காரியப்பட்டிருக்கையினாலேயதனை யுண்டாக்குகைக்குச் சரீரமில்லாதசிவனே கர்த்தனச்சரீரமில்லாதவனே தநுவாதிகளை யுண்டாக்கவேணு மென்னில் அச்சுபார்தட்டுக்கண்முதலியவவயவங்களைப் பொருந்தியிருக்கப்பட்டதேர்முதலியவற்றை யுண்டாக்கினவர்களுடையசரீரமுமவயவங்களுடன்கூடியிருக்கக்கண்டோமேயாதலாற் சரீரத்தையுடைத்தானவர்கள்தானே தநுவாதிகளையுண்டாக்குவர்களென்னிற்றேர்முதலியவற்றை யுண்டாக்குமந்த விசுவகன்மாவுக்குமதனையுண்டாக்குஞ் சாமர்த்தியத்தையுடையபேரறிவினையுமவனது விசிட்டகிரியைகளையு முண்டாக்கத்தக்க சரீரங்களையுண்டாக்குமதற்க சரீரியாகியசிவனேகர்த்தன். எ - று எனவே - நிமித்தகாரணன் - ஈசுவரனென்பதாயிற்று. (எ௰)

ஆசாரியனை மாணாக்கனானவன்சங்கைபண்ணிவினவுமதனையுணர்த்துகின்றார்:

அமலனிறைசடச்செயல்களனைத்தினுக்குமெனிலணுக்கள் ✿
சமலரவர்சபக்கத்திற்றலைமொனச்சாற்றினையொன் ✿
விமலவவரறிபாலமொழிக்காட்சிவிருத்தமுறான் ✿
டெமலமறவிருந்தவனெபரிகாரமிவற்றியம்பாய் ✿

எ - று ஆன்மாக்கள்செய்யுங் கிரியைகளெல்லாவற்றுக்குமின்மலனாகிய சிவனே கர்த்தனென்று நீர்சொல்லிற் சபக்கத்திலிரததிட்டாந்தமிட்டுக் கூறியது, ஆன்மாக்கள்மலத்தான் மறைக்கப்பட்டவர்களாகையாலவர்களைக் கர்த்தரென்று கூறியதெப்படி யஃதன்றியவர்கள் விசேஷித்தமலத்துடனே கூடினவர்களாதலாலவர்கள் கர்த்தாக்களாகார்கள், என்னில் - இரதமுதலியவற்றைப்பண்ணும் அவர்களைப்பிரத்தியக்ஷமாகக்காண்கையால் - எல்லாவற்றுக்குஞ்சிவனே கர்த்தனென்றுசொல்லுவது பிரத்தியக்ஷவிருத்தமாதலாற்கூடாது, எம்முடையமலத்தைப்போக்குதற்குத்திருமேனிக்கொண்டு, எழுந்தருளியிருந்தவரேயிந்தச்சந்தேகந்தீரும்படிக்குவகைசொல்லுவீர். எ - று (எக)

அதற்குவிடைமேலான்மாக்கள்தநுவாதிகளைப்ப
ண்ணமாட்டாரென்பதும்பரமசிவன்கர்த்தாத்து

வாமுதலியவற்றைச்சிருட்டித்துஅதிலிருக்கும்வி
ஞ்ஞானகலர்முதலாயினரையுண்டாக்கியவர்க
ளாற்சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவிப்ப
னென்பதுமுணர்த்துகின்றார்.

அக்கையுமாக்குதற் றுவலரலரனுக்கடமக்கமலன் *
அக்கையுமாக்குவனவருட்சிலர்க்கவருட்சிலர்சிலருக் *
காக்கையுமாக்குவரவருட்சிலர்சிலருக்கவருள்ளு *
மாக்கையும்பிந்திவரிரதமாதியுநின்மலனருளால் *

எ - து ஆன்மாக்கள்தமது சரீரமுதலியவற்றைத் தாமாகவுண்டாக்கமாட்டார்கள், அந்தப்பரமசிவன் சுத்தமாயையையதிட்டித்துக்கொண்டு அனுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடி மகாமந்திரங்களையுமுண்டாக்குவன், அந்தவிஞ்ஞானகலருள்பரமசிவன் அனந்தாதிகளையதிட்டித்துக்கொண்டு அசுத்தமாயையிற்சிருட்டியாதி கிருத்தியங்களைப்பண்ணுவிப்பன், அனந்ததேவராயனார்சீகண்டபரமேசுரனையதிட்டித்து அவராலேபிரகிருதியிலுண்டான சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவிப்பர், அந்தச்சீகண்டபரமேசுரன் பிரமாவையதிட்டித்துபஞ்சபூதத்தின் ஞாலகாரியசிருட்டியைப்பண்ணுவித்து அதில்பிறவனசிருட்டியால்சகலயான்மாக்களையுமுண்டாக்கித் தச்சன்முதலாயினரைக்கொண்டு தேர்முதலானவற்றைச்செய்விப்பன் பரமசிவன்அருளினால். எ - று

மேலிதன்விதிரப விரித்தசிபுமிடத்து முதலே சுத்தமாயையாகிய முதற்காரணமானதினின்றும் பரமசிவன் அதிகாரகர்த்தர்களையுண்டாக்கியவர்களாலே கீழிருண்டமாயையிற்சிருட்டிகளுமதிற்றோன்று மதிகாரகத்தாக்களை யுண்டாக்கப்படுமென்று மதிகாரகத்தாக்கள்பரம கத்தரல்லர். என்று மருளிச்செய்ததற்கு விளங்கவருளிச்செய்கிறார், - பரமசிவனந்தவதிகாரகத்தாக்களான தாங்கள்தானுந்தங்கள் சரீரங்கள்தன்னையும் தாங்களிருந்துசஞ்சரிக்கும்புவனங்கள் போகங்கள் அதற்குதாரமாகிய அண்டங்கள் அதற்காதாரமாகிய சாதாரணமாகியதத்துவங்களையுந்தாங்களாகவுண்டாக்கிக்கொள்ளுகைக்குவல்லரல்லர்கள்அந்தச்சுத்தமாயையிற்றோன்றப்பட்ட அதிகாரகத்தாக்களான அனுசதாசிவர்அட்டவித்தியேசுரர்சத்தகோடி மகாமந்திரேசுரரில் அதிகாரகிருத்தியம் வேண்டாமென்று வெறுத்தமுன்றரைக்கோடிப்பேர்சிங்கலான மூன்றரைக்கோடிமந்திரேசுரர்க்கு மயர்க்கேற்றதிருமேனிகளைப்பரமசிவனேயுண்டாக்குவன், அவர்களிற்பிரணவர்முதலாகியஅனுசதாசிவர்பத்துப்பேருந்பரமசிவனை தன்சன்னதிமாத்திரத்திலேயுண்டாக்கப்பட்

டதிவ்வியாகமங்களை யதிகரித்துக்கொண்டு கீழுண்டான அனந்ததேவநாயனார்முதலானவெட்டுப்பேர்களுமதற்குக்கீழான மூன்றரைக்கோடிமந்திரேசுரமற்றுமுண்டானவிஞ்ஞானகேவலர்களுக்கும் அனுக்கிரககர்த்தாக்களாகவிருப்பர்கள், இனிமற்றுமுள்ள அட்டவித்தியேசுரர் மூன்றரைக்கோடிமந்திரேசுரரில் அனந்ததேவநாயனாரானமகேசுரராளவர் நின்மலனாகிய பரமசிவனனுக்கிரகத்தினாலே யசுத்தமாயையிலுண்டாக்கப்பட்ட அண்டபுவனபோகம் ஆன்மாக்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாகிய சாதாரணதத்துவங்களையு மணடல்கர்முதலிய பிரளையாகலராயுள்ளசருவான்மாக்களுக்கு மவரவர்க்கேதனித்தனியே தோன்றப்பட்ட அசாதாரணமாகியசூக்குமதேகங்களையுமுண்டாக்காநிற்பர், இனிமூன்றரைக் கோடிமந்திரேசுரர்களும்அந்தமாயையிலுண்டான தூலமானஅண்டங்கள்புவனங்கள்போகங்கள்பிரளையாகலராயுள்ளார் தூலசரீரங்களெல்லாவற்றையும் நின்மலனாகியபரமசிவனனுக்கிரகத்தினாலேயுண்டாக்காநிற்பர்கள், அவர்களாலே தோற்றுவிக்கப்பட்டபிரளையாகலருட் பரமசிவன் அனுக்கிரகத்தைப் பெற்றுள்ளாரான நூற்றொருபத்தெட்டு ருத்திரர்களில் ஸ்ரீகண்டபரமேசுவரரான உருத்திரமூர்த்திபிரம்மவிட்டுணுக்களுக்குமற்றுமுள்ளசகலருக்குந்தனுவாதிகளை யுண்டாக்கிப்பிரகிருதியிற்றோன்றப்பட்டசாதாரண அசாதாரணமாயுள்ளதத்துவங்கள், அண்டபுவனங்களையெல்லாமுண்டாக்காநிற்பர், ஸ்ரீகண்டராலேயுண்டாக்கப்பட்ட பிரம்மாவானவர்பிருதுவிமுதலாகாசமீறுகப்பவுதிகமாகிய பஞ்சபூதங்களிலுண்டாகியதூலபரிணாமமாகிய அண்டங்கள் புவனங்கள் சகலராயுள்ளாரானார். தூலசரீரங்களெல்லாநின்மலனருளினாலே யுண்டாக்குவர் அந்தப்பிரமாவாலே யுண்டாக்கின பஞ்சபூதமட்டும்விட்டுணுவானவர் நின்மலனருளினாலே யிரக்ஷிப்பர், அப்படியவர் களாலேயுண்டாக்கப்பட்டாரில் தேவேந்திர பகவான் விசுவகன்மா நவக்கிரகாதியான அதிகாரகத்தாக்கள் நின்மலனருளினாலேதங்கள்தங்களுக்குக்கட்டளையிட்ட அதிகாரங்களைப்பண்ணி யிருப்பர்கள், அவர்களுள்ளும் பிந்தினரான புவலோகவிராசாக்களானமனுமுதலாகிய விராசாக்களும் விசுவகன்மாவி னங்கிசம்பற்றிவருஞ்சிற்பாசாரியர்முதலானவர்களுந்தேராதியவாகனங்கள்மூர்த்திகளான விக்கிரகபேதங்களையெல்லாம் நின்மலனருளினாலேயுண்டாக்கியும் போக்குவரவுகளைப்புரிவித்துச் செய்யாநிற்பர்களெனவறிக, இதனாற்சொல்லியது சரீரங்களான அதிகாரகத்தாக்களெல்லாம் அவனருளாலேஉபகாரகத்தாக்களாக இருப்பதொழிந்து பரமகர்த்தாவ

ல்லையென்றதாம். [௭௨]

இன்றுமவர்கள்பரமகர்த்தாவல்லரென்பதனைவிள க்கவருளிச்செய்கிறார்

உற்பவத்துருவுடலாதியுண்மையினுமொடுக்கத்தும் ✻
அற்பதியின்றிரோதானமனுக்கிரகமெனுமிவற்றுந் ✻
தற்பரனல்லிவையளதாக்கலைவரலர்தமோவினைக்குந் ✻
சிற்கனனுறுதியமலன்சிவன்சாதகன்றேசால் ✻

௭-து ஆன்மாக்கள்சங்கரிப்புண்டுகிடந்தகாலந்தொலைந்து பரமசிவன்றனுகரணபுவனபோகங்களைத்தோற்றுவிக்குமவசரத்திலும் சங்கரிப்புண்டுகிழ்க்கிடக்கிற காலத்திலுந்திதிகாலந்தொலைந்து சருவசங்காரகாலமாகிற வந்தவவசரத்திலுந்திதிகாலந்தன்னிலுமாகஇந்நாலுகாலத்தில்திதிகால நீங்கலானமூன்றுகாலத்துமல பரிபாகம் வந்தவான்மாக்களையெல்லாம் பரமசிவனே யனுக்கிரகம்பண்ணுவர், அந்தப்பேர்களிலதிகபக்குவராகிய சிலரைத்திருவடியிலே சேர்த்துக்கொள்ளுஞ்சிலரையதிகாரகர்த்தாக்களாக்கியவர்களைக்கொண்டு சுத்தமாயை நீங்கலாகவிரண்டு மாயையிலுண்டாக்கப்பட்ட அதிகார கர்த்தாக்களுக்கெல்லாம் பரமசிவனாலேயனுக்கிரகப்பட்ட அனந்தாதிகளைக்கொண்டே அனுக்கிரகமுதலான பஞ்சகிருத்தியங்களையும்பண்ணுவிக்கும் அந்தவேளையிலும் அந்தப்பரமசிவனாலே மலக்ஷயம்பண்ணிக்கொண்டார்களொழிந்து தங்களாலேயனுக்கிரகாதி வினைவையுண்டாக்கிக்கொள்ளமாட்டார்கள் அந்தவதிகாரகர்த்தாக்கள்தாங்கள் பரமகர்த்தாக்களல்ல.திதிகாலத்திலதிகாரகர்த்தாக்களல்லாதமற்றுண்டானசிவான்மாக்களாயுள்ளார்களில்மல பரிபாகம்வந்தவான்மாக்களுக்குமலமென்பது போக்கியுஞ்சிலஅறிவுடைத்தா யிருக்கிறவான்மாக்களைத்திரோதானசத்தியவர்களுடைய மலசத்தியை ச்செலுத்தாமல்வைவிட்டுஅனுக்கிரகித்தவிடத்துங்குருமுதலானஅதிகாரகர்த்தாக்கள்மலக்ஷயம் பண்ணுவார்களென்றஅவ்விடத்துந்தொழிலுக்கும்ஞானசொரூபனுயவனுதியே நின்மலனுய்ஞானத்தைச்சாதிக்கவல்லவனுனசிவனுடையபராசத்தியவர்களிடத்திலே யிருந்துண்டாக்குமாதலாலவர்கள்பரமகர்த்தாவல்லரவர்களுக்கும்பரமசிவனனுக்கிரகத்தாலேஅபரகர்த்தாக்களாகவிருந்துசத்திரத்துவம்பண்ணுவர்கள். கி-று (௭௩)

இன்னும் பரமகத்தாவேமாயாகாரியமானவையெல்லாவற்றுக்குங்கத்தனென் றுமவனுடையசாமர்த்தியத்தையும்விளக்குமென் றுஅநுமானப்பிரயோகங் களினாலும் நவாலுமிரண்டுசெய்யுளாலருளிச்செய்கிறார்

உண்மையினான் முதற்பக்கத்து மாத்திரைற்சபக்கத்தும்
நன்னுமுருநான்கிறைமையுஞ்சாபகக்காரியம்பண்ணுவா
னன்னுமுருவைந்திளையுயிருயிரினான்குருவினைமெய்
பண்ணினனுமவனருவுருவுடலிலியும்பலமாமே

எ- து. முற்பக்கமாகியஇந்தமண்ணிலே கடாதிகள் தோன்றுதற்குயோக்கிய முண்டாயிருக்கை யுண்மையாகையாலது சடமாகையால் தானாகத்தோன்றமாட் டாதே, ஒருசேதனனாலல்லாமல் அவ்வவ்வியல்புகளாகத்தோன்றப்பட் டதுகாண்கையினாலேசபக்கமென்ற மேலான்மாயைகளிலுந்தனுகரணாதிகளாகு ந்தோன்றுகைக்கு யோக்கியமுண்டாயிருக்கவும் அதுகளைத்தோற்றுவிக்கைக்குஅந் மாயைகள் சடமாகையாலவற்றைத்தோற்று விக்கமாட்டாதாகையாலந்தத்தனு கரணாதிகளை யவ்வவ்வியல்பையவம் பொருந்தக் காரியப்படுத்தி த்தோற்றுவித்தா னொருகத்தாவுண்டென்றறியப் படும் குலாலனைப்போல வின்னுமவனுடையசத்தி சாமர்த்தியத்தையு மறிவின்பெருமையையு மறிவிப்போனுகச்சிவனுடையவிக்கிரக மென்றுசொல்லப்பட்டவுருவம் நாதமுபயமொன்றுமாகியவஞ்சு விக்கிரகங்களை யுமிருள்தறுஞானசொரூபமாகியிருக்கப்பட்டசிவஞ்-சத்தி-நாதம்-விந்து - என்னுமரு வமாகிய விக்கிரகங்கள் நாலையும், ஆக. ஒன்பதுவிக்கிரகங்களையுங் காரிய ரூபமாகப்பண்ணினனும்அந்தச் சரீரியல்லாத பரமசிவனேயென்றறிக, அப்படியா கில்சரீரமில்லாதபரமசிவனே யெல்லாவற்றையுஞ்செய்வானாகிற்சரீரிகளான அதி காரகத்தாக்களிருக்கவேண்டு வானேன் அவர்களாற் பயனில்லையேயென்னில் உ ட்லியுமென்றவும்மையாற் சரீரமில்லாத பரமகத்தாவாலுமவனனுக்கிரகத்தைக் கொண்டசரீரமுள்ள அதிகாரகத்தாக்களாலும் விசுவம்பலம்படும். எ- று.

இந்தநூலில் வாரார்த்தபொருள்களெல்லாம் விரித்துக்கூறியது மற்றும்விரிந்ததமி

ழ்ச்சாத்திரங்களிலுமாகமங்களிலுங் கண்டுவிரித்துக்கூறியதெனக்கொள்க, சித்தியார்சுபக்கத்தில் விந்தைகள்வித்தை யீசர்சதாசிவனென்றிவர்க்கு, வைத்துறும்பதங்கள்வன்னம்புவனங்கள் மந்திரங்க, டத்துவஞ் சரீரம்போகங் கரணங்கடாமெலாமு, முய்த்திடும்வயிர்தவர்தாமுபாதானமாகின்றே. எனவும்-பரபக்ஷத்திற்புத்தன்மாத்தமிகன்மதத்தில். அவையவம்பொருளாய்த்தோன்றும்அவையவமழிந்தார்பின்னை, யிவை பொருளென்ன வேறென்றிலாமையாற் பொருள்களின்றும், அவைபொருளிலாமையாலே யறிவு மின்றாகுமென்று, நவைதருமொழியினாலேநவ்வுமாத்தமிகன்முனே- எனவும். கருவிதனித்தனியேகாணுயிர்கட்கெல்லாம்புரமுடலார்தங்கும்பொழுது- எனப்பதி- பசுபாசவியலில்திருவுளம்பற்றியதுங்கண்டுகொள்க, இன்னுங்காட்டின்விரியும். (எசு)

ஆயாமமறைபொழுதிலறைந்தவனுபாடனைத்தாற் *
றேயாருமனுமானவிதமுன்றிறுறத்தெருளத் *
தாயானையனைத்துயிர்க்குந்தற்பரனைச்சிற்கனனை *
நேயாருநெஞ்சினர்க்குநிறையுறவேநிகழ்த்தினமே *

எ- து பிராணயாமவிதிசொல்லுகையிலேபிரசங்காப் பிரசங்கமாகிய அனுபாடணமானதுசொல்லத்தக்க சத்திபொருந்துகையாலே விளக்கம்பொருந்தினஅனுமானவிதமுன்றிருலும்பொருந்தியறியச் சருவான்மாக்களுக்கு மாதாவாகவிருக்கப்பட்ட மேலான பரமசிவனை ஞானசொருபனை நேசம்பொருந்தின புத்தியையுடையவர்களுக்கு ஏற்றக்குறைவு வராமனிறை பொருந்தவே சொல்லாநின்றோம். எ- று. [எரு]

பிராணயாமஞ்செய்தற்குமாத்திரையுத்தமாதிபே
தத்தால்மூவிதமென்றுணர்த்துகின்றார்.

வேறு

கைத்தலத்தாலேசானுப்புரிவலங்கணிக்கவிரொட் *
டத்தொகையினைத்துமொன்றேபாகுமாத்திரையாயாமத் *
துத்தமநாற்பத்தெட்டாமொருபதுமிரண்டுநீச *
மத்திமமென்முன்றுங்கைநொடியுமாத்திரைமாட்டார்க்கே *

எ - து இடக்கையினாலே யிடதமுழந்தாளைப்பதினுறுதரஞ் சுற்றியெண்

னில் ஒருமாத்திரையெனப்பெறும், அந்தமாத்திரைகொண்டு நாற்பத்தெட்டுப்பண்ணுவது உத்தமப்பிராணாயாமம், இருபத்துநாலுபண்ணுவது மத்திமம், பன்னிரண்டுபண்ணுவது கனிட்டம், இவ்வாறுசெய்யமாட்டாதார் முற்கூறியவெண்ணிக்கையிலேகைநொடிமாத்திரையாலுத்தமமாதிபேதத்தாற்செய்க. எ-று (எசு)

குசைதுனித்தீர்த்தபானத்தாலுண்டாயவிசிட்டமும்பிராணாயாமவிசேடமுமுணர்த்துகின்றார்.

குசைதுநினீரையானுங்குடித்திடவிடைவிடாதே *
தசதசவருடங்கூடத்தங்கியபலத்தைச்சார்வார் *
இசைவுடன்பிராணாயாமமியற்றினொருகால்விண்ணில் *
அசைவறவிருக்கயாகமனைத்தையுமியற்றினாரோ *

எ-து யாதாமொருவரனுட்டானஞ்செய்தமுடிவிலே யொருமாதநாடோறுங்குசைதுனியின்விழுகிற செலத்தைவலதுகையினாலேபானம்பண்ணினவர் நூறுவருஷம்பிராணாயாமம்பண்ணினபலத்தைப்பொருந்துவர், சொன்னபடியே பிராணாயாமம்பண்ணினபலத்தை யாதொருவரொருக்காற்பண்ணிலவர்கள் தபசுயாகந் தானம் விரதஞ் சிவதீர்த்தம் இவைகளாலுண்டாகும்பலங்களையும் பெற்றுச்சுவர்க்கத்திற்பொருந்தியிருப்பர்கள். எ-று (எஎ)

பிரத்தியாகாரத்தையுமதனாற்பெறும்பலத்தையுமுணர்த்துகின்றார்.

மனத்தையும்விடையந்தன்னின்மறித்துளேயடக்கிவைத்துப் *
பினைச்சலியாமைசெய்கைபிரத்தியாகாரம்வேதத் *
தெனைத்துளயாகபேதமனைத்தையுமியற்றினோர்கள் *
மனத்தையுமறித்தமைந்தரவர்சிவபுரத்துள்வாழ்வார் *

எ-து மனதும்விடையங்களும் போகங்களைப்பொசிக்கவந்தவிடத்தும்மிகுந்தபசிவந்தவிடத்துமதனிடத்துச்செலுத்தாமலாமையானதெப்படிதனதங்கங்களையுள்ளேயடக்கிக்கொள்ளுமதுபோலத்தானுஞ்சலியாமல்மனத்தை நிறுத்துவது பிரத்தியாகாரம், யாதாமொருவரிதனைநாடோறுமியற்றுகிறாரவர் வேதத்திலே கூறுகிறயாகபலமெத்தனையுண்டத்தனையுஞ் செய்தார்கள். அடைந்தபலத்தைச்சிவலோகத்திலிருந்துபொசிப்பர்கள். எ-று (எஅ)

தாரணையுமதனாற்பெறும்பலமுமுணர்த்துகின்றார்.

ஆசையுடனிதையப்போதி லொட்டியபொருளிற்நித்த ✽
மாசையறநிறுத்தலேதாரணைமதனைச்செய்தார் ✽
கசிவுறுமூவேழ்சுற்றங்கடிநரகதனின்மீட்டு ✽
மாசையுறுசிவலோகத்துளிருப்பரோவிருப்பமிக்கே ✽

எ-து ஆசையுடனே மூலாதாரமுதலியதானங்களிலங்கங்கேபார்க்கக்கடவியபொருள்களைக்குறித்துமேலேமேலேபோய்த்தான் வேண்டியபொருளில் நிறுத்துதல் தாரணையெனப்பெறும், இப்படியாதாமொருவர் நாடோறுமிதனைச்செய்யின் இறங்குகின்றதனது குலத்திலிருபத்தொருதலைமுறையையுள்ளாராகியவெவ்விய நரகத்தின்கட்கிடந்தாரையெடுத்து மேலாகியசிவலோகத்தின்கணுண்டான போகங்களைமிகுந்த வாசையுடன்போசித்தவர்களுடனிருப்பர். எ-று (௭௯)

தியானஞ்செய்முறைமையும்பலமுமுணர்த்துகின்றார்

ஆற்றிடைப்புனறொடர்ந்தெயவிச்சின்னமாகவோடன் ✽
மாற்றறவற்றேயீசன்மலர்ப்பதத்தறிவைவைத்துத் ✽
தேற்றுறநிற்கைதானேதியானமித்தியானஞ்செய்தார் ✽
மாற்றிபெரநிற்சுற்றமவர்தமைப்போலவாழ்வார் ✽

எ-து ஆற்றின்ஜலமிடைவிடாமற்செம்மையாயெப்படியோடுகிறதப்படியேதான் கருதினபொருளையிடைவிடாமற் தியானஞ்செய்திருத்தலே தியானயோகம், இந்தத்தியானயோகத்தையாதொருவர்செய்யின்அவருடையசுற்றத்தாரெல்லாரையும் நரகத்தினின்றெடுத்துச் சிவலோகத்திருத்தித்தனதுதேகத்தைவிட்ட வரைப் போன்றிருப்பர் எ-று [௮௰]

இனிமந்திரஞ்செபிக்குமுறையுணர்த்துகின்றார்

மானதமந்தமற்றைப்பாங்குதவுசனமென்றுந் ✽
தானிருமூன்றுஞ்சாற்றுமந்திரந்தனைமைசார்ந்து ✽
மானதமனத்திறுமேமந்திரிப்பதுவேவாய்க்கு ✽
வெளிபமந்தஞ்சுற்றோர்தபுறவியம்பலாமே ✽

எ-து வெளி பாதம்-எ-து சொல்லல் (௮௧)

இதுவுமது

அருகிருந்தவர்தாங்கேட்கவுறைதல்பாடணமேயாதி *
திருவுருக்கருதிச்செபிற்சிறப்புடைத்தெல்லாந்தூல *
வுணாதவிற்சிறப்பேமந்தவுனாயதுதன்னிற்சாலப் *
பெருமையையுடைத்தெனெஞ்சிற்பேசிடாப்பேச்சுத்தானே *

எ - து வெளி ஆதிதிருவுருக்கருதிச்செப்பவென்பது னை முற்றுங் கூட்டுக (அஉ)

மந்திரங்களையுச்சரிக்குமிடத்துஉச்சாரணபேதமு ணர்த்துகின்றார்

உற்றிடுமுயிரொவ்வொவ்வொன்றேயுயர்ந்துயர்ந்தொருமூன்றாகு *
மற்றையவுன்னதாதிகூடனுமொன்பானவாய்க்கும் *
பற்றிடாநாசிநீங்கப்பத்துடனெட்டாமீர *
றூற்றிடுமுயிருமோர்ந்துச்சரிக்கவேபலிக்குமோதில் *

எ - து அகாராதியாயிருக்கிற உயிரொழுத்துத்தனித்தனி யுச்சரிக்குமிடத்து ஒவ்வொன்று மும்மூன்று பேதப்படும், அஃதாவது உயரவுச்சரிக்கிறது உதாத்தமென்றுந், தாழவுச்சரிக்கிறது அநுதாத்தமென்றுஞ், சமமாயுச்சரிக்கிறது சொரிதமென்று, மிப்படிமூவிதமாம். இந்த மூவிதமும் ஒவ்வொன்று மும்மூன்றாக ஒன்பது பேதமாம், அஃதாவது ஒருமாத்திரைகொண்டது இலகுவென்றும், இரண்டு மாத்திரை கொண்டது குருவென்று,மூன்று மாத்திரைகொண்டது புலுதமென்றும் இப்படி யுதாத்தமூன்று மநுதாத்தமூன்றுஞ் சொரிதமூன்றுமாக ஒன்பதாம்,இந்த வொன்பதையும் நாசியைக்கூட்டி யுச்சரிக்குமிடத்து சாநு நாசிகமெனப்பெயர் பெறும், நாசி கைகூடாமலுச்சரிக்கும்போது நிரநுநாசிகமெனப்பேர்பெற்றிப்படி ப்பதினெட்டுப்பேதமாம்அகரமுதலிய வுயிரொழுத்துப் பதினாறுள் அலியெழுத்து நாலு நீக்கி நின்றபன்னிரண்டுயிரொழுத்துஞ் செபகாலத்தே யந்தந்த மந்திரத்து ப்பிரயோகத்துக்கீடாகவறிந்துச் சரிக்கில் மந்திர சித்திவரும். எ - று [அஙு]

இப்படிமந்திரத்தின் விதியறிந்துச்சரிக்குமவர்களை தாமகிமையையுணர்த்துகின்றார்

அந்தரத்தியங்கவல்லவசுரருமறுகமாட்டார் *
சிந்தியசித்தக்கொத்தைப்பேய்களுந்தின்டமாட்டா *
செந்தழலென்னவஞ்சித்தியவாயரவுந்தீண்டா *
மந்திரநவிற்றுவாரைமறலியுமஞ்சுமன்றே *

எ - து முற்கூறிய விதியையறிந்துமந்திரமுச் சரிக்குமவர்களை யாகாசத்தி லேசஞ்சரிக்குமிராக்கதர்களுங் கிட்டமாட்டார்கள், நானாவிதமாகிய சித்தத்தை யுடையவறிவில்லாதபேய்களுந்தின்டமாட்டா, பொல்லாதவிடம் பொருந்தியவா யினையுடையபாம்புகளுஞ்சிவந்த அக்கினியெனப்பயந்து தீண்டமாட்டா, இஃதன்றியெல்லாரையும் வாதைபண்ணுமியமராசனுமணுகமாட்டான் பயப்படுவன். எ - று (அ௪)

இதுவுமது.

வினைகளுமஞ்சும்வெய்யவினைஞருமஞ்சுவார்க *
ளினிவிளம்பிட்டமெல்லாமவர்க்கொருகணத்தினேருந் *
துனையமேசுழன்றுபோகுந்துட்டசார்த்தூலமற்று *
மனிதருநல்லாரேயோவமரரும்வாஞ்சிப்பாரே *

எ - து வெளி - துனைவு - விரைவு - சார்த்தூலம் - புலி (அரு)

சகற்பசெபஞ்செய்புமவர்கள்பெறும்பயனுணர்த்துகின்றார்.

பரமனையொருமைகூரப்பாவனைபண்ணியுள்ளே *
யுரைதவிலகநாமமொழியவேவிதியினேநிப் *
பரவிடும்பத்தர்முன்னைப்பாவமும்பறிப்பன்வேண்டும் *
வரமெலாங்கொடுப்பன்வள்ளன்முத்தியுமவர்க்கேவாய்க்கும் *

எ - து மேலானசிவனை மிகுந்தவொருமைப்பாட்டுடனே மனதின்கட்டியா னம்பண்ணியம்மந்திரத்தையேற்றக்குறைவின்றியேவிதிப்படியுச்சரித்துத்தோத்தி ரம்பண்ணும்பத்தர்களது முற்செனனத்திலார்ச்சித்தபாவத்தையுந்தீர்ப்பன், அவர்கள்வேண்டும்வரத்தினையுமிம்மையிற்கொடுப்பன், மோக்ஷமுமவர்களுக்கேசித்தியாம். எ - று முன்னைப்பாவமுமென்றவும்மை எதிரதுதழீ இயவெச்சம் பத்தர்கள்வேண்டும் வரங்களைக்கொடுத்தலால் வள்ளலெனச்சிறப்பித்தார். வள்ளல் எ- று அமுவாய். கொடுப்பன் எ - து பயனில் (அசு)

சமாதியினிலக்கணங்கூறுகின்றார்.

பொருளெனுமாத்திரத்தாய்ப்புலனிறந்திரவிக்கண்ணுக் ✽
கிருளறுத்திலங்கலென்னவெண்ணகத்திலங்கியெங்குந் ✽
திரையறவுததியெல்லாந்தேங்கல்போல்விம்மிச்சித்தங் ✽
கருதுருவல்லாமூலங்கண்டிரண்டறல்சமாதி ✽

எ-து உண்மைப்பொருண்மாத்திரத்தாய்க் கருவிகரணாதிகளுடன் கூடா மலாதித்தியப்பிரகாசங்கண்ணிடத்திருளைப்போக்கிப்பிரகாசித்தல்போலவிவன் கருதப்பட்டநினைவுள்ளேபிரகாசித்து ஆரவாரிக்கும் அலைகளறச்சமுத்திரமெல்லாவிடங்களினுநிறைதல்போல நிறைந்துபொலிந்துசித்தத்தாற் கருதமுருவமல்லாதவெல்லாவற்றுக்குங்காரணமானசிவத்தைத்தெரிசித்திரண்டற்றிருப்பதே சமாதி எ-று (௮எ)

சமாதிசித்தியாதார்க்குபாயமுணர்த்துகின்றார்

இடையினுமியங்கிடாதேபிங்கலைதனினும்வாயு ✽
நடுமுனைநாடிதன்னிணடக்குமேற்சமாதிவாய்க்குந் ✽
திட்டமுடைச்சிலையேயென்னச்சித்திரமெனவிருப்பார் ✽
விடையமுமுணராரந்தக்கரணமும்வேறுபட்டே ✽

எ-து யாதாமொருவர்சமாதியைப்புரியுமிடத்து ப்பிராணவாயுவானதுஇடையினும்பிங்கலையினுமோடாமற் சுழிமுனைநாடியின்கணடக்குமிடத்து விடையத்தின்கட்சித்தத்தையையாமலந்தக் கரணங்களும் பசுகரணத்தைப் பொருந்தாமற்சிவகரணங்களாய்க்கடினத்தையுடைய கல்லெனவுஞ்சித்திரமெனவுமிருந்து சமாதிபுரிவராயின் அவர்களுக்கேயச்சமாதி சித்தியாம். எ-று. [௮௮]

சமாதியடைந்தோர்நன்மைபுணர்த்துகின்றார்

அட்டமாசித்தியென்றவணிமாதியவர்க்கேயாகு ✽
மிட்டமாஞ்சந்தோபேதமியற்றவும்வல்லமொன்னின் ✽
முட்டறவேதமாதிமொழியவும்வல்லர்நல்ல ✽
துட்டியாற்சமாதிதன்னிற்றங்கியதூயோர்தாமே ✽

எ-து. நல்லசந்தோஷமாகியசமாதியைப்பொருந்திய மகாத்மாக்களானோரிட்

டமாயிருக்கிற உத்பல முதலிய சந்தவிருபத்தாறு பேதங்களையுஞ் சொல்லவல்லராவர்கள், அத்தந்திரி சரித்துமிடத்து வேதாகம புராணங்க ளனைத்தையு முடிவுபோகவுதவும் வல்லராவர்கள், அவர்களுக்கே அணிமாமுதலியவட்டமாசித்தியும்வந்தடைகூடும். எ-று.

புத்திகூரியமாதவரைப் பட்டிபெயச்சிறப்பித்தார் (௮௧)

முன்னர்த்தொகுத்துப் போந்த அட்டமாசித்தியினது இலக்கணமி
தென்றுணர்த்துகின்றார்

வேறு

அணுவிற்றுன்றுருவுகொள லணிமாவாமுனற்றி னதிவேகத்தியங்கி
யுந்தோய்வற்றவுடலகிமாத், தினியபெருவடிவாமெனமெய்ச் சிறப்புறுகைமா
கிமாச்சிந்தித்தபலமெவையுஞ்செறிந்துறுகைபிராத்தி, யீனைவியூயாராயிர
வரோடும்புணர்ச்சிபெறுகைபிராகாமியிசிதைமாவலியுமடிபேணன், மணமு
லர்போலெவராலும்வாஞ்சிக்கப்படுகைவசிவசிதைவலியாராற்றடுப்பரியவா
ழ்வே

எ-சு. அணிமாவென்றுஞ்சித்தியாவது பரமாணுவைப்பற்ற அதிசூக்குமவடிவையெடுப்பது, லகிமாவாவது மகத்தாகிய வேகத்துடனே சேற்றுக்குள்ளேயழுந்தியிருந்தும் … சேறுபடாமலெழுந்திருப்பது, மகிமாவாவது கடினமானபெரியமலைபோலவடிவையெடுத்தல், பிராத்தியாவது தான்யாதொரு பக்கலைக்கொள்ளவேணுமென்றுமனதிலெண்ணித்தா லந்தந்தரூபங்களுமாயந்தந்தப்போகத்தைப்பொசித்திருத்தல், பிராகாமியமாவது, மாயனைககாலத்திலெப்படிபதினாறாயிரங்கோபாலஸ்திரீகளைக் கூடியவர்க்கவராயிருந்தாரதுபோல ஆயிரந்திரீகளையேககாலத்திலே கூடியிருந்தநுபவித்தல், ஈசத்துவமாவது, சகலதேவர்களையுந்தன்னுக்கினை யாளடப்பிந்துக்கொள்ளுமது, வசித்துவமாவது, தன்னையாவராலுமனதுடையபட்சமாகவேதெப்படி வாஞ்சிக்கப்படுவது அப்படிப்போற்சகலலோகங்களையுந் தன்வசமாக்குவது, வசிதையாவதிவருடையபெலத்தைமிகுந்தபெலவான்களாலுந்தடுக்கப்படாமலிருத்தல். எ - று (௧௰)

சமாதியையடைந்தவர்சிறப்பும்பெரும்பயனுமுணர்த்துகின்றார்.

வேறு

அடைந்திடுஞ்சமாதியாளர்க்கமரருஞ்சிறப்புசெய்வார் *
திடம்படுசித்தத்தாலேயவற்றினைத்தீண்டாதார்க்கு *
நடம்பயிலுதன்வேண்டும்வரத்தினைநல்கியென்று *
முடன்பிரியாதபேறுமுதவுவன்கருணையுற்றே *

எ - து சமாதியையடைந்தவர்களுக்குத்தேவர்களுஞ்சிறப்பைச் செய்வார்கள், திடமானசித்தத்தினாலந்த அட்டமாசித்தியை யபேட்சியாதபேர்களுக்கு நடனஞ்செய்யுஞ்சிவபெருமான் கருணைபொருந்தி விரும்பியவரங்களைக் கொடுத்தெக்காலமுந்தன்னிடத்தினின்று நீங்காதமுத்தியையுங்கொடுப்பன். எ - று இதற்குத்தேவிகாலோத்தரத்தில் ✠ அட்டமாசித் திமுதலென் னுங் கவியாற் காண்க. (௯௧)

பிராணயாமமுதலியவற்றையுத்தரோத்தரவிசிட்ட
முணர்த்துகின்றார்,

அதிகமாயாமந்தன்னிலறுவளையடக்குமாற்றால் *
அதிகமேயதனினுக்கைமனத்தினையணகன்பாதத் *
ததிகமேயதனிற்சித்தத்தவிச்சினைத்தியானமம்ம *
வதிகமேயதனினுள்ளத்தரனைவைத்தறையும்வாக்கே *

எ–து காமக்குரோதாதிகளின்வழிச்செல்லாமனிறுத்துமதனைப்பற்றப் பிராணயாமமதிகம்அந்தப்பிராணயாமம்பன்னிரண்டுகொண்டதுஒருதாரணைஅந்தத்தாரணைபத்துக்கொண்டதுகாலமிடைவிடாமற்சிவத்தியானஞ்செய்வது-அதனைப்பற்றவும்பன்னிரண்டுகொண்டது சமாதியென்று இப்படிக்காலவளையறுத்து வேதாகமங்கள் சொல்லுமிதனைக்கேட்பாயாக. எ - று. அம்ம - எ - து வுளாயசை (௯௨)

தேவிகாலோத்தரம் - நிசம் - கவி

✠ அட்டமாசித்திமுதலனைத்துள்ளபேறுகளுங் o
கட்டமாங்கதிகடரும்பரகதிகாணக்கொடா o
மட்டிலாமாலையாய்வியாபகமாயதிவாகிக் o
கிட்டலாகாமுத்திமற்றிவற்றுற்கிடையாதே o

செபத்தியானமுமிவற்றாற்பெறும்பலமுமொன்றுக்
கொன்றதிகமென்றுணர்த்துகின்றார்.

வாக்கினுமதிகமூலவாக்கினுமனத்தினாலு ✽
நோக்கரும்பொருளாந்தன்றுணைநோக்கநோக்கதிட்டை ✽
நோக்கிடிற்பலங்கடாறுறுவன்றவிம்முறையாலேயென்மை ✽
யாக்குவனவற்றையெல்லாமன்பருக்கருண்முத்தன் ✽

எ - து மூலவாக்காகியவைகரிவாக்காயுச்சரிக்குமதனைப் பற்றமந்தவோலி யாய்மந்திரத்தையுச்சரிப்பதுவிசிட்டம்-அதனினுமானதசெபம்விசிட்டம் அதனினு ம்வன்னருபங்களுடன் மூர்த்தியை மனத்தாற்தியானித்தலதிகம்,அந்தத்தியானத் தைப் பற்றவதற்குமேலாகிய சமாதியைப்பாராதேபார்க்குமது விசிட்டமுற்கூறி யசெபமுதலாயின பலன்களையடியார்க்கு அருளுமுத்தனாகியசிவன் கிரமத்தினா லேயதிந்த அதற்கேற்றபலன்களைக்கொடாநிற்பன். எ - று

ஈண்டுமூலவாக்கென்றது ✠ வைகரிவாக்கெனவறிக. (௬௩)

இதன்மேற்சிவயோகத்தானிட்டையடைந்தார் பெ
றும்பலமுணர்த்துகின்றார்.

வேறு

சிலரேணயோகர்நிடமாகமேனிசிவலோகராகமெனவே ✽
பலகாலம்வாழ்வர்படிகிதியாள்வர்பசுபாசநாசமுறவே ✽
நிலனிறுமாயவருகாலமேயநிகழ்வாயகாயமறவே ✽
மலமாகுமாயவமலேசர்பாதமலர்சூடிவாழ்வர்மகிழ்வால் ✽

எ - து சிவயோகத்தானிட்டை யடைந்தஞானயோகர் ,சிலர்சிவலோகத்திலச் சிவனுடைய சகளமானதிருமேனிபோலச் சித்திபெற்றுப்பலகாலம் வாழ்ந்துலக மெல்லாந்திருமுறைமையுடையராயச் சார்பைப்பற்றிவரும் பசுபாசங்களுசத்தைப் பொருந்தச்சஞ்சரித்திருந்து சருவசங்காரகாலத்தின்மலக்குற்ற நீங்கவும்நிகழு

✠ வைகரிவாக்கானது, உதானவாயுவைக்கூடின பிராணவாயுத்தன்னோடு கூடிவந்தவசனருத்துமைமுதலாயுள்ளவாக்குக்களைச்செவியின் பகுதியிலேகேட் கநினைந்தபொருள்களையறியாநிற்றும், இதுதனக்கும்பிறர்க்குங்கேட்க வுச்சத் தல்.

ஞ்சரீரமாறவும் பரமசிவன்பாதமலரா நிரதிசயானந்தத்துடன்பொருந்தி வாழ்வர். எ று [௩௪]

இனியிப்படிப்பட்டசிவயோகிகளைவழிபட்டவடி
யார்பெறும்பயனுணர்த்துகின்றார்.

அறுமாசைகோபமவைநாசமாகவறுமேறுபாவமறலு *
மறவேசெய்பாவமறஞகமாயுமதுமாயமாயையகலு *
மறமாயைதானுமகமாயைதீருமதுதீரமூலமலமு *
மறமூலநோயுமமலேசர்பாதமடைவார்கள்யோகரடியார் *

எ- து முன்சொல்லப்பட்ட ஞானயோகிகள் அடியாரானவர்கள் ஞானவான்களுக்குத்திருவுளத்துக்குவரவே பணிவிடைசெய்கையாற் பரமசிவன் அவர்களுக்குக்காமக்குரோதலோபமோகமதமாச்சரியமாகிய வறுவகைப்பொல்லாப்புமடாதபடிநீக்கிவிடும், விடவேஆகாமியங்கள்வந்தேறுது- ஆகாமியமேறுதேபோய்விடவேஅந்தஞானிகள் தருமருளுக்காலே யனுதியேசெய்த வளவற்றசஞ்சித கன்மங்களுங்கெடும். கெட்டுப்போகவேசரீரமுமாய்ந்துபோமந்தச் சரீரமெடாமற்கன்மமூமாயாகாரியமானசரீரமுங் கெட்டுப்போம் போகவேயசுத்தமாயையுமகலும் அசுத்தமாயையகலவே சுத்தமாயைக்குள்ளீடாக அசுத்தமாயாகாரியங்களைச் செலுத்தாநிற்குஞ் சூக்குமை முதலான வாக்குகளடங்கும். அடங்கவேசுத்தமாயையடங்கும்அந்தச்சுத்தமாயையுந்தீரவே மூலமலமுமற்றுப்போம். அந்தமூலமலமாகியநோயுமற்றுவிடவே நின்மலனாகியபரமசிவன் பாதத்தை யடைவார்கள். எ- று (௩௫)

இனிச்சிவன்சிவசத்திப்பிரசங்கம்வந்ததோடே யான்மா வான்மச
த்திப்பிரசங்கமுணர்த்துகின்றார்

வேறு

சிவன்றனக்கவனியந்தஞ்செகமநிதூலதேகம் *
அவனுடற்றூலமாறுமாறுயிர்வர்க்கஞ்சூக்கம் *
பவன்றனக்குயிர்க்குமப்பாற்பராபராபரமசூக்கம் *
அவன்சிவன்பரமசத்திதனையனுபவிப்பனூர்ந்தே *

எ- து பரமசிவனுக்குநாததத்துவமுதலாகப் பிருதிவி தத்துவமந்தமாகமுப்பத்தாறுதத்துவங்களினுண்டாகிய வளவிறந்தவண்டங்களும் புவனங்களுமளவற்ற

வான்மாக்களுடைய அலதேகங்களுமிவையெல்லா மதிஅலதேகமாயிருக்கும் அந்தச்சிவனுக்குத் தூலதேகமாவதுமுப்பத்தாறுதத்துவங்களுமாயிருக்கும் அளவற்றவான்மசொரூபங்களெல்லா மந்தச்சிவனுக்குச் சூக்குமதேகமாயிருக்கும்- அந்தவான்மசொரூபங்களுக்கு மேற்பட்டிருக்கப்பட்ட மேலான பரமசத்தியானதுஆன்மாக்கள்சொரூபந்தன்னிலு முன்னிதாய்ப்பரமசூக்குமமாயிருக்கும்- அந்தச்சிவன்றன்னுடையபராசத்தியுடைய பேரின்பத்தை யனுபவித்துக்கொண்டிருப்பன் எ- று. (௧௬)

இதனுமது

பாரியைப்பரர்கண்பார்வைப்படாப்பதிவிரதைதன்னை *
யாரியமுணர்ந்தகாந்தனவடனைத்திளைப்பனுர்ந்தே *
பாரியைப்பரர்கண்பார்வைப்படாப்பராசத்திதன்னை *
யாரியனுதிமுத்தனவடனைத்திளைப்பனுர்ந்தே *

எ - து ஆன்மசத்தியாகிய தந்தந்தவான்மாவுக்கே யுரித்தாய்ப் பிறரிடத்துச்செல்லாத பதிவிரதையாகவேயிருக்கப்பட்ட சத்திதன்னை, வடமொழியாகிய வாகமங்களை நன்குயாராய்ந்த ஞானியான புருஷனானவன் மலத்திரயங்களுநீங்கிச்சாயுச்சியத்தைப்பெற்றபோது பொருந்திக் களங்கமற்ற வின்பத்தையனுபவியாநிற்பன், இவ்விதமநாதிமுத்தனாகவிருக்கப்பட்ட பரமசிவனுந்தன்னைவிட்டு நீங்காதிருக்கப்பட்ட பராசத்திபேரின்பத்தைப் பொருந்தியனுபவியாநிற்பன் எ - று [௧௭]

ஆன்மாவானவன்மலநீங்கினுற்றற்சொரூபந்தானே
யின்பமா மெனத் தன்னைத்தானிச்சித்தாலின்பமு
ண்டாகாதுஆன்மசத்தியின்பமே யாமென்றுவமை
முகத்தாலருளிச்செய்கிறார்

மண்டலத்தவருமற்றையவர்களும்வாஞ்சைசெய்தே *
பெண்கொடியாளையின்பமுறுவரேயவர்தோளொன்றிக் *
கண்டிலந்தம்மைத்தாமேகாமுறல்களிப்பார்தங்கள் *
எண்டனக்கெட்டாவிச்சித்நிறைவியைத்நிலைக்குமென்றும் *

எ - து தேசத்திலுள்ளவர்களுமற்றத்தேவர்கள் முதலோருமாசைப்பட்டுப் பெண்ணைப்புணர்ந்தே யின்பமுறுவர்கள்,அப்படியின்றித் தன்னைத் தானிச்சித்தின்

பம்பொருந்தினவர்களாகக்காணேம், அதுபோல ஆன்மாக்களானவர்களறிவுகளுக்கெட்டாத பரமசிவன் தனதுபராசத்தியின்பத்தையநுபவிப்பன், ஆகலாலான்மாக்களுடைய சத்திமலத்தை நீங்கினவாயுச்சியத்திலேயான்மாவானவன் றன்சத்தியின்பத்தையநுபவிப்பன் எ - று (௬௮)

சிவனுஞ்சத்தியுமான்மாக்களுக்கு மாதா பிதாவெ
ன்பதனைபுணர்த்துகின்றார்

அணுக்களையவர்க்குமைந்தரன்னையுந்தன்றனு *
மணுக்களுக்காரவங்கூர்ந்தேயணுக்கடன்சத்தியோடே *
யணுக்களைப்புணர்ப்பர்சத்திப்பருவமுமறிந்துதாமே *
யணுக்கடஞ்சத்திதன்னைத்தீளைப்பரஞ்சனமுமற்றே *

எ - து ஆன்மாக்களை யச்சிவபெருமானார்க்குமைந்தர்கள், அவர்கட்குமாதாவும்பிதாவுமாகிய சிவபெருமானாரும் அவ்வான்மாக்களிடத்துவிருப்பமிகுந்தவ்வான்மாக்களது சத்தியுடனே அவ்வான்மாக்களைச் சத்தியினது பருவங்களையுமறிந்துதாமேபுணருதலைச்செய்வர், அதனால் அவ்வான்மாக்கள் தங்கள் சத்தியைமலநீங்கியநுபவிப்பர்கள் எ - று [௬௯]

இச்சிறப்பினையுடைய சிவதெரிசனப்பட்டவர்கள்
முறைமையையுணர்த்துகின்றார்

அறுகியபமலன்றன்னையகன்மனைக்காண்பரன்ப *
ரறுகியபசுபாசத்தையறுத்தவனருளினாலே *
யறுகியேயமலன்கன்மமாயநுபவிப்பவொன்ப *
ரறுதியபசுபாசத்தையறுத்திலாரறிவிலாரே *

எ - து அன்பரானஆன்மாக்கள் சிவனதருளினாலறுகியான பசுபாசங்களைப்போக்கியறுதியேயின்மலனானசிவனைத் தனதுள்ளத்தே தெரிசிப்பர், அறிவில்லாதஆன்மாக்கள்அறுதியாய்வரப்படாநின்ற பசுபாசத்தை யவனதருளாற்போக்கிக்கொள்ளமாட்டாமலவனிடத்துக்கலந்திருந்தும் அவனேசெய்விக்கிறனென்றுமறிவையிழந்துயான்செய்தேன் பிறர்செய்தாரென்றுந் தற்போதத்தால்வருங்கன்மத்தையநுபவித்தற் பொருட்டு இறந்துபிறந்து திரிவார்களென்றுசொல்லுவர்பெரியோர். எ - று (௭௰)

தூலசரீரமுதலாகவொன்றுக்கொன்று மரியாதெனப்பதனையுமாண
வநோய்போனவிடத்து ஆன்மாச்சிவதெரிசனப் படுமென்பதனையு
முணர்த்துகின்றார்

நோக்குமோதாலவாக்கைநுண்டனுவதனைத் தால *
நோக்குநுண்டனுவுந்தன்னைநோக்குமோமீதுமாக்கை *
நோக்குமாருமிருந்தன்னைநோக்குமோமீதுமெல்லா *
நோக்குநின்மலனைநோக்குநோக்கறத்தனையுநோய்போய் *

எ-று- வெளி- ஒகாரம்- எதிர்மறை (௩௧)

முற்கூறியசிவதெரிசனப்படுமதனைத்திட்டாந்தமிட்டுணர்த்துகின்றார்

ஆக்கையிறுவியென்னவமலனுருயிரின்வாழ்வ *
னேக்கிலர்மூலநோயால்நோலறிவடங்கிநொய்யார் *
நோக்குவரமலன்மூலநோய்வலியடக்கப்பாகத் *
தோக்கொளியுணர்வைச்சேர்ந்தாமெனவுபசாரத்தொன்றும் *

எ-று சரீரத்திலான்மாவியாபித்திருக்குமாறுபோல வந்தவான்மாவினிடத்தி லுஞ்சிவன் வியாபித்திருப்பன், இவ்வணம் வியாபித்திருக்குஞ் சிவனை யாணவமல மேலிட்டாலிச்சாஞானக்கிரியைகளாற்றடைபட்டுக் கிஞ்சிக்ஞரானவர்கள்தெரி சிக்கமாட்டார்கள், பக்குவான்மாக்களுக்குப் பரமேசுரன் ஆணவமல சத்தியைக் கெடுத்துத்தானிரண்டறநிற்கு மதனைத்தெரிசிப்பிப்பன், இப்படிசிவதெரிசனப்பட் டபிரகாசத்தையுடைய வறிவைப்பொருந்தினார்களென்பது முன்னில்லாததையிப் போதுசென்று கூடினார்களென்றதன்று கண்ணிற்கிரசம்போனவாறே கண்ணுக்கு மிருந்தபிரகாசமுண்டானாற்போல, இவருஞ் சிவனதுபிரகாசத்தைப் பொருந்தினு ரென்பது. உபசாரம். எ-று (௩௨)

அதற்கோர்திட்டாந்தமுணர்த்துகின்றார்.

இருட்டெலிருந்தான்றுஞ்சாவிணைவிழியொளியவ்வெல்லைப் *
பொருட்டலைப்புணர்ந்துங்காணுதொளிபுறிற்புதைந்துநின்ற *
விருட்டறவுடலைக்காணுமேனையயாவுங்காணும் *
பொருட்டவிற்புணர்ச்சிகண்டபொழுதெனப்புகல்வரோயோ *

எ-று யாதாமொருவனிருட்டறையில் விழித்திருக்கிறவனுடைய கண்ணி ற்பிரகாசமான தவ்விடத்திலிருக்கும் பதார்த்தங்களுடனே சம்பந்திச்சிருக்கையி னையறியான், பின்புதீபம்வந்து அந்தகாரத்தைப்போக்கவப்பொழுது தன்னுடைய சரீரத்தையுங்காணும்அங்குள்ள பதார்த்தங்களையுங் காணுமதுபோல வான்மாவி னுடையசத்தியைத்தடைபடுத்தின மலமானதுசிவசத்தியினுலே நீங்கவதுநீங்கின

விடத்து ஆன்மதெரிசனமுண்டாம் அதற்குமேலருட்டெரிசனமுஞ் சிவதெரிசன முமுண்டாயதனுடனேகூடியிருப்பர். எ - று [௱௩]

ஆன்மாச்சிவனைக்கூடினனென்பதனையேகதேசியாமென்றுசங்கித்
துஅதனைமறுக்கிருர்

கூடுதலேகதேசியெனுமிருபொருட்கேகூடு
மோடிவான்றேடிக்கூடுமவரொவருமிருளுனம்
வாடலுந்தன்னுண்மெய்யைநோக்கநோக்குவானி
னீடொளிபடலநீங்கக்கண்டனினிகழுமன்றே

எ- து. ஆன்மாச்சிவனைக்கூடினனென்னி லேகதேசியுமாய்க் கடபடாதிகளைப் போலப்பிரிந்துஇரண்டுபொருளாய்விடும், அஃதெங்ஙனமென்னில் வியாபியாயிரு க்கிறவாகாசத்தை விரைவிற்றேடிக்கூடுகிறேமென்கிறவனெவன்முன் சொல்லுவ னூற்கூடுங்கூடுமென்றுசாத்திரஞ்சொல்லுகிறதெப்படியென்னிலான்மசத்தியை த்தடைபண்ணுமாணவமலம் அருளாற்போகவேயப்பொழுததற்சொரூபமும் விள ங்கியதற்குமேலாகியபதிசொரூபத்தைப்பாராமற் பார்த்திருப்பதென்போலவென் னிலாகாசத்தில்விளங்காநின்றவாதித்தியகிரணமானதுபோகத்தினுலேதடைபட்ட போதுகாணுமலதநீங்கினபோது அந்தப்பிரகாசமிவனுடைய கண்ணுக்குத்தோன் றுமாறுபோல. எ- று. (௱௪)

பேதாபேதமென்பதனைமறுத்துஆன்மாச்சிவனு
டையவயிக்கத்தையுணர்த்துகின்ருர்.

பேதமேலேகதேசிமுத்தியிற்பிரானுமேக
வாதமுமயக்கஞ்செம்புமலினநாசகனுமொன்றே
வாதலாலிரண்டுமல்லாவபேதமேயமலனுவி
வேதகருமிருங்கண்ணும்வேறெனுமொன்றுமென்னுர்

எ-து ஆன்மாவுஞ்சிவனும்பேதமென்றுநீசொல்லுவையாகில்,ஏகதேசியாய்விடுங் காணப்படியன்று, முத்திநிசையிலான்மாவுஞ் சிவனுமொன்றெ ன்னிலேகவாத முமாய்மயக்கத்தையுங்கொடுத்துவிடுங்கா ணிப்படியானுற் குற்றம்யாதெனிற் - செம்புந்தன்னுடையகாளிதத்தைப்போக்கு மிரதகுளிகையுமொன்றல்லவேயாகை யினுன்முற்கூறியவிரண்டுமின்றியான்மாவுஞ் சிவனுமபேதமாயேயிருக்குங்காண், வேதாகமங்களையுள்ளபடியறிந்த ஞாதாக்களான்மப்பிரகாசமுங் கண்ணினுடைய

பிரகாசமும் பொருந்தினவிடத்தவ் விரண்டையும்பிரித்து வேறென்றுமொன்றெ ன்றுஞ்சொல்வார்கள். எ-று. உம்மைபிறந்தது தழுவிய வெச்சம். (௭௫)

இவ்வண்ணங்கூறியமுத்தான்மாக்களிடத்துண்டாகிய
வாணவமலமவர்களைவாதைபண்ணுமஞ்சமுமடை
யாமலிருக்குமென்றுணர்த்துகின்றார்

கடல்விடங்கொல்லுங்கண்டார்தம்மையுங்காலகாலன்
மிடறுறுங்கொல்லவல்லமிடலிலையெற்றேயற்றே
யடிபிணைசரணமென்றேயமலனையடைந்தார்தங்க
ளடல்வலியடங்கன்மூலமலத்திறுக்கறிவுமின்றே

எ-து. தேவர்களமிர்தமதனம்பண்ணினவிடத்துண்டாகிய வாலகாலவிஷத்தைபார்தாமொருவர்கண்டார்களவர்களையுங்கொல்லு, மித்தன்மையையுடைய விடங் காலனுக்குங்காலனாகியசிவனதுகண்டத்தில்வந்து பொருந்தியிருக்கவுமவனைவாதியாதெப்படிதன்வலிகெட்டுநின்றது அப்படிப்பரமசிவனுடைய ஸ்ரீபாதத்தையடைந்தமுத்தான்மாக்களை மலசத்திவாதைபண்ணுமற்றுறுங் கெடாமலிற்கும். எ-று. உம்மை - உண்டாரையுங்கொல்லுமென்றுமெச்சம் - மலங்களுக்குட்பிரதானமாதலால் மூலமலமெனச்சிறப்பித்தார். [௭௬]

அறுதிபானவாணவமலசத்தி முத்தியிற் கெடுமென்றுசொல்லிலா
ன்மசத்திசிவசத்தியுங்கெடாதோவென்னக்கெடாதென்றுணர்த்து
கின்றார்

அடங்குமேலறுதிமூலமலவலியதனைப்போல
வடங்கிடுமறுதிமுத்தன்வலியனுவலியுமென்னி
லடங்கிடாதறுதிமுத்தன்சத்தியாற்றடுக்கும்பாச
மடங்குதன்றொக்கைநீங்கவறுவதிவதித்தாசால்

எ-து. அறுதியாயிருக்கப்பட்டமூலமலமாகியவாணவமலத்தின்சத்தியானது சாயுச்சியபதத்தைப்பெற்ற வான்மாக்களுக்கு ஆணவசத்தி யடங்குமென்றதுஆணவமலமொன்றாயிருந்தவிலையுமவர்களை மறைக்கிறதுதவித்தனிசத்தியாகமறைப்பிக்குமாறையா லந்தச்சசத்திமாத்திர மறையாமலந்தச்சத்தி கெட்டுப்போகாமலிருக்குமென்று சொன்னதைப்பற்றி யறுதியாகமறைத்திருக்குஞ்சத்திமறையாததன்றிரிபங்குன்றியடங்குகையால் அதுபோலவறுதிமுத்தருமிருக்கப்பட்ட பசுசிவன்சத்தியுமறுதியாகவிருக்கப் பட்டவான்மாவினுடைய சத்தியும் விரியல்

கெட்டடங்குமென்றுநீசொல்லிலஞதியேமலத்தினாயத்தையுநீங்கி விளங்கப்படா நின்றசிவனுடையசத்தியடங்காது ஆணவமலசத்தியாகியபாசத்தைமேலிடவொட்டாமலான்மாவினறிவுபிரகாசிப்பிக்கு நுண்ணிதாகிய சூக்குமதேகநீங்கினவதீதாவத்தையிலாணவமலத்தாலேயான்மாவினுடையவறிவற்றடங்கும். எ-று.

. இதன்கருத்து ஆன்மாமோக்ஷத்தைப் பெற்றவிடத்து ஆணவசத்திகெடாமலடங்காநிற்குமென்றுஞ் சகலத்திற் றத்துவங்களாகிய சூக்குமதேகங்கூடியவிடத்து ஆன்மசத்திக்குஞ்சிலவிளக்கமுண்டாயுந் தத்துவங்களாகிய சூக்கும தேகநீங்கினவதிதாவத்தையில்மலசத்திமறைப்பால் ஆன்மசத்தியடங்கியிருக்குமென்றும் பாசசத்திகளுக்குக்கேடில்லையென்றுஞ்சொன்னதாம். [௩௱௭]

மேலான்மாசிவனுடைய வயிக்கமுணர்த்துகின்றார்

ஏகமன்றிறைவனுவியிரண்டுமன்றபேதமென்றே
யாகமவேதமெல்லாமயிக்கியபதத்தினாலே
யூகமுள்ளவர்தம்முள்ளத்துணர்த்திடும்பிரத்தியாயத்
தாகமுமற்றென்றென்பரயிக்கியபதார்த்தமுனர்

எ-து ஆன்மாவுஞ் சிவனுமொன்றல்ல விரண்டு மல்ல வென்றே வேதாகமங்களெல்லாமவர்களிருக்கிற வயிக்கியத்தினாலே யபேதமென்று சொல்லுமிப்படியே வேகித்தப்பிரத்தியமென்னுஞ் சத்தத்தினாலேயிதற்குஅயிக்கியபதமென்றுஅவர்களறிவினாலேயுதிவிக்கப்பண்ணும் இப்படியர்தச்சத்தத்தினுடைய பொருளையறியாமலற்பவறிவையுடையோர் அயிக்கியமென்ற பதத்தின் அருத்தத்தையொன்றெனவறுசொல்லுவர்கள். எ-று.

பிரத்தியமென்பது அறிவு (௩௱௮)

முற்கூறியவயிக்கியத்துக்குதாரணமுணர்த்துகின்றார்

தருவிழலொன்றேவன்றேத னித்திருபொருளோவன்றே
பரமனுமுயிருமிந்தப்படியெனவபேதம்பாரார்
ஒருபுடையேகதேசமெனவுபமானமோரார்
அரிவைசொல்லமிர்தமென்றுஞவினலறிவதோசொல்

எ-து மரமுநிழலுமொன்றென்றுசொல்லப்பெறு, வன்றியிரண்டென்றுஞ்சொ

ல்லப்பெறு, வாதலாலிவையிரண்டு மொன்றுக்கொன்று இப்படிபிறிக்கப்படாதி ருந்தது அதுபோலப்பரமசிவனுமான்மாவுமிப்படிபிறிக்கப்படாமலிருக்கிற வயிக் கபாவத்தைவிசாரித்தறியார்கள், யாதொருவிடத்திற்றிட்டாந்தஞ்சொல்லுகிறதெ ல்லாமேகதேசதிட்டாந்தமொழிந்துமுற்றுமன்று.அஃதெங்ஙனம்மெனின்வெவ்வ சனம்அமிர்தம்போன்றிருக்குமென்று லதனைநாவிலுற்பருகியதனுட்சுவையையின் னபடியென்றசொல்லப்படாது எ - று (௱௧)

இப்படியான்மாவுஞ்சிவனுமிருக்கிறவயிக்கத்தை யறியாமல்மாயாவாதியொன்றென்றுசொல்லுமதனை மறுத்துணர்த்துகின்றார்.

வேறு.

அத்துவிதமென்றசொலுமுன்முறையினுய்க *
வத்துவயமென்றசொலுமம்முறையினுய்க *
முத்தனிவனையற்றொருவனென்றுமொழிவேதத் *
தத்தமதியாரமலனுவிமலமென்பர் *

எ - து அத்துவிதமென்றசொற்பொருளைமுன்னேயாசாரியர்கள் சொன்ன முறைமையில்விசாரிக்க, அத்துவயமென்றசொற்பொருளையுமந்தப்பிரகாரத்திலே விசாரித்தறிக, வனுதிமலமுத்தனுமாய்த்தனக் கொப்பாருமில்லாதவனென்றுவே தங்கோஷிக்கவுமதவுண்மைப்பொருளையறியாமனின்மலனுகியசிவனையுஞ் சமல னுகியவான்மாவையும்வித்தையாகிய மலத்தையுமொன்றென்றுகூறுமது கூடாது எ - று ✠ பண்ணையுமோசையும்போலப்பழமதுவு,மென்னுஞ்சுவையும்போலெங் குமாம், ஆக்குவென்றுந்திருவாக்கினுனுந்தெளிக. (௱௨)

அதற்குதாரணபூருவமாகஇருசெய்யுளாலுணர்த்துகின்றார்

பார்த்தபெறுமேவல்வினைபற்றினருமம்வாழ்வுந் *
திர்த்தரசனேவலிடர்சேருநருமொன்றே *

சிவஞானபோதம் - உம் - சூத்திரத்திரத்துள் - நேரிசைவெண்பா

✠ பண்ணையுமோசையும்போலப்பழமதுவு o
மென்னுஞ்சுவையும்போலெங்குமா - மண்ணரு o
மத்துவிதமாதலருமறைகளொன்றென்னு o
தத்துவிதமென்றறையுமாங்கு o

வார்த்தவுடலோவவிவனுருயிரனைத்து *
மூர்த்தமவன்மூர்த்தியெனவோர்கவறுமோகம் *

எ- து இராசாவு மிராசாவுக்கேவற்றொழில்செய்யும் பரிசாரகரும் அவனதுசதுரங்கபெலமு முலகத்துள்ளவான்மாக்களுக் கிடர்வந்தகாலத்து த்திர்த்துமவர்கள்செய்தகுற்றத்தையறிந்து தெண்டித்தும் போக்கப் படுவதால் இராசாவும் அவனேவற்றொழில்செய்யும் அந்தப்பிராணிகளுமொன்றல்லவே, யஃதன்றிச் சத்ததாதுக்களாலேயெடுக்கப்பட்டசரீரமுமான்மாவல்லவே ஆயின்அதெப்படியென்னிற் சருவான்மாக்களுமவனுக்குவடிவாகவுமந்தச்சிவனந்தவடிவுக்கு மூர்த்திமானாகவுமிருக்குமுறைமையினை விசாரித்தறிவையாகி லுன்னிடத்துண்டாகிய அஞ்ஞானம் போம். எ- று- ஒகாரம்-எதிர்மறை (௩௱௰௧)

ஊடலிருவர்க்கொழியவுண்டுகொலொருத்தர்க் *
கேடணையுமேவலெ:ழுவாயுமியனூலு *
மூடருணரார்மலைவு மூன்றெறுபின்னென்றே *
தேடுவர்சிவன்றனையுமாதரவுசெய்தே *

எ- து இருவர்க்கேசண்டையொழிந்து ஒருவர்க்கஃதில்லையே யந்த ✠ வேடணையுமொருவன் போ.வா.வென்றேவுதல்முதலியவும் இந்தமுறைமைகளைப் பிறிந்துமுன்றெறுபின்பொருள்கோள்மலைவினறிச்சொல்லுஞ்சாந்திரத்தி னுண்மைபுமுணராதறிவற்றவர்கள்சிவனு மான்மாவுமொன்றாயிற் சிவனையாதரவுடனே கூடவேணுமென்றுவிசாரிப்பரஃதென். எ- று. ஒகாரம். வினு. [௩௱௰௨]

பொத்தைபுடலூனுமறவேயருள்புரிந்து *
தத்துவமசிப்பொருடருங்குரவனொன் *
றத்தவுதையத்தவலமாசினைபறுத்தே *
சித்திபெறுமோபிரமமென்கொலிதுசெப்பாய்

எ- து பொந்துபோன்றுன் பொருந்திய வுடலைவிடுவித்துத் தத்துவமசியென்னுமகாவாக்கியப்பொருளை யுபதேசித்தனுக்கிரகஞ் செய்யுமாசாரியனெவனென்று தேடியதனுற்றற்பதமாகியசிவனையுந்தொம்பதமாகியவான்மாவையும் அசிபதத்தாலயிக்கம்பண்ணப்பட்டு இருந்தவுபதேச காலத்தாற் பொல்லாதஅஞ்ஞானத்தைப்

✠ ஏடணை - விருபபம் - அது - அத்தவேடணை - புத்திரவேடணை - உலகவேடணை - எனமூன்றுவிதம்

போக்கிச்சித்திமை யாடையுமோ பிரமமானது நீ சொல்லுமதுவென்னைசொல்வாயாக. எ-று- ஒராம்- எதிர்மறை- கொல்- ஐயபத்தின்கண்வந்தது ✠தொம்பதம் தற்பதம்- சிந்தித்தாரே - என்றுந்திருமந்திரத்திற்காண்க. [௩௰௩]

விண்டருபவத்தை யூவிருத்தமெய் மூவாயு *
மண்டமவனன்றவனதாகமயலென்றே *
கொண்டவர்கள்விண்டவர்கள்கூடினார்களாகம் *
பண்டையபராபரனிணைக்கமலபாதம் *

எ-து முற்கூறியபதத்துவமசிமலமிக்கத்தை யொன்றென்னையாகிலுன்னிடத்தில்விளங்காநின்றவருபவத்துக்குமாறுபாடாய்விடும் அண்டமுதலியநால்வகைத்தோற்றமுமவனிடத்திற்றேன்றியதன்று. அதற்குஅவன் பின்னமென்றுயாதொருவர்கொண்டார்களவர்களேசரீரபெந்தநீங்கினவர்களாகையாலநாதியானபரமசிவன்றிருவடியையடைந்தவர்கள். எ-று [௩௰௪]

மோசகனுபிர்க்கிறுளனுகிமல மூத்தன் *
பேசுமியல்வேதமொழிபெற்றுமறிவற்றோர் *
மாசறியினுர்சிலாகன்மற்றையியல்பெற்றோர் *
தேசிலருளார்ச்சியிறுமென்றறிகதிண்ணம் *

எ - து ஆன்மாக்களுக்காணவமலத்தைப் போக்கிறவனுநிமலமில்லாதவனுநித்தியவேதவாக்கியத்திருண்மையைப்பெற்றிருந்து மறிவில்லாதவர்களேயான்மாவுஞ் சிவனுமொன்றென்பார்கள் அஃதன்றி வியாழபகவான்முதலாயினோரிலசொல்லப்பட்டகுற்றத்தைப்பொருந்தியசாத்திரத்தையோதியதனுண்மையையறிந்தார்களேயாகினுமவர்களறிவு, விளங்கினதல்லவென்று நிச்சயமாகவறிவாயாக. எ - று [௩௰௫]

அக்கைசடமாறுமொயின்றியசையாது *
நோக்கிலர்கொல்பாவைபுடலாவியெனுநொய்யார் *

திருமந்திரம் - முத்தரியம் - எம் . கலி

✠ தொம்பதந்தற்பதந்தொன்முத்தரியம்போ 0
லம்பியமென்முத்தரியத்தாற்று 0
மம்பியன்றுவதிருக்கத்தப்பாடுக் 0
செம்பொருளாண்டருள் சிந்திதாரே 0

சாக்கிய நமற்றையர்கடா:முமுமையாது ✽
மேக்கிலநுணர்ச்சியினுமென்னையவர்விடே ✽

எ - து சரீரமானது செடமானபடியாலேயான்மாவையின்றி யொருக்கா லுஞ்சேட்டிக்கமாட்டாததனைவிசாரிக்கிலர்கொல்லோ மரப்பாவையானது சூத்திரதாரியையன்றிச் சேட்டிக்கமாட்டாதவாறுபோலவென் வஃதன்றியற்பா மிருக்கிறசமணன்மற்றுள்ளசமையிகளுமவர்கள் சாத்திரத்தைப்படித்தறிந்தார்க ளேயாயினுமவர்கள் தங்கள்தங்கள் சமையமுத்திகளைச்சாதிந்தார்களேயாயினுந் திரும்புகிறமுத்தியாதலாலதுபரமமான முத்தியல்லாதபடியாலந்த வறிவில்லாத வர்கள்சொல்லுகிற முத்தியெப்படிதான்கூடும் எ - று (௩௰௬)

மேற்பரமுத்திகளைமறுத்துத்தமதுமுத்தியிதென்று ணர்த்துகின்றார்

கந்தமறல்பந்தமறல்கூட்டிருளெண்சித்தி ✽
யந்தமறிவூறுகடகாசமறலப்பு ✽
முந்தவரையுற்றநிரண்மூத்தியலமுத்தி ✽
பந்தமறவின்புறல்பிறப்பிலிபதத்தே ✽

எ - து உருவம்வேதனைகுறிப்புபாவனை விஞ்ஞானமென்கிறபஞ்சகந்தமுங் கெடுகிறதேமுத்தியென்றுசொல்லும்புத்தன்முத்தியுஞ்சுத்திகளில்வெவ்வேறு உருவங்கொள்ளுமணிமாமுதற்பிராகாமியமீறாகியஅட்டமாசித்தியென்று சொல்லப்பட்டயோகிகள்முத்தியுமாகாசமானது பாத்திரவசத்தால்கடாகாசமடாகாசமாகியிரண்டாய் நின்றாற்போலவுமொரு சந்திரனுபாதிவசத்தாற் சார்வங்கடோறும் பலவாய்நின்று தோன்றினாற்போலவும், பிரமமானது மாயாகாரியங்களான தேகங்கடோறுநின்று முத்தியிலொன்றுமென்னுமாயாவாதிமுத்தியு, மகாமேருவையடைந்த காகம்பொன்னிறமானாற்போலவும், உப்பளத்தையடைந்தகிரணுதிகளந்தவுப்பேயானவாறுபோலவுந்தன்மைகெட்டு ஒன்றுமென்னுஞ்சிவசமவாதிமுத்தியுமிவைகளற்பமுத்தியாதலாலிவை பரமமுத்தியல்ல, ஆயின்உமதுமுத்தியாதெனின் ஆணவாதிபெந்தநீங்கிச் செனனமரணமில்லாத சிவனதுசீபாதத்தையடைந்து சிவானந்தானுபூதியைத்தினைத்திருப்பதேமுத்தி எ - று (௩௰௭)

அர்தமுத்தியையடைந்தவர்கள்திரும்பார்களென் பதுவுஞ்சிருட்டியாதிகிருத்தியங்களைச்செய்யார்க ளென்பதுவுமுணர்த்துகின்றார்.

விண்டமர்கண்மூலமலம்விற்றிவர்மீளார் *
பண்டையுறைநாடுடல்படைப்புமிலையீறுங் *
கண்டனைபிறந்தவுயிர்காரணனிடத்தே *
யுண்டிலவிடாதகிழியுற்றபொருளொத்தே *

எ - து கண்ணிற்காசம்போகக்கண்விளங்கினாற்போல மூலமலத்தைநீங்கிச் சருவஞ்ஞத்துவத்தையடைந்தவர்கள் ஆற்றுநீரானது சமுத்திரத்தையடைந்தாலது மீளாதவாறுபோலமோக்ஷத்தைப்பெற்றுமீண்டுவந்துடலெடார்கள் அஃதன்றிச்சிருட்டியாதிகிருத்தியங்களையும்பண்ணார்கள், மீளாதமுத்திபெற்றவர்களாயிற் சிவனுக்குப்பஞ்சகிருத்தியமெப்படியென்னில் அநாதியேயான்மாக்களளவற்றிருப்பார்கள், அஃதெங்ஙனமென்னிலுலவாக்கிழியெடுக்கவெடுக்க வெப்படிதொலையாமலிருக்கிறது அதுபோலமுத்தியடைந்த வான்மாக்களுக்குமளவில்லை யினிமுத்தியடையப்போகிறவான்மாக்களுக்குமளவில்லை. எ - று ✠பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந், துறந்தோர் துறப்போர் தொகை. என்னுந்திருவாக்கினுணர்க. (௱௰௮)

ஆசாரியனுபதேசத்தைப்பக்குவான்மாக்களுக்குணர்த்தவேண்டுமென்பதுவும்அபக்குவர்க்குணர்த்திற்குற்றமென்பதுவுமுணர்த்துகின்றார்.

அக்கையினையைந்தலையநாகமெனவஞ்சி *
நீக்கநினைவார்க்குநிகழ்வேயுடனிந்த *
வாக்கறைகமற்றையர்தமக்கறையுமாந்தர் *
நிக்குழிபிறழ்ந்தழிவர்சேர்ந்தவருமாய்ந்தே *

எ - து வெளி - சேர்ந்தவர் - எ - து - கேட்டமாணுக்கர் (௱௰௯)

பக்குவான்மாக்களுக்குப்போதியாதவாசானுக்குக்குற்றமுணர்த்துகின்றார்.

உற்றசிறைசாலையெனவூனுடல்வெறுத்தே *
நெற்றிவிழிநின்மலனதாளிணையினைய *
முற்றவர்தமக்குநுநியோதுதல்செய்யாத *
குற்றமுடையானுமதல்வீழ்வனபர்கொண்டே *

✠ திருவருட்பயன்உயிரவைநிலை - க -

எ-து வெளி (௱௨௰)

பக்குவர்க்குப்போதித்தவாசாரியருமவரிடத்துக்கேட்ட மாணுக்கரும்பெறும்பலமுணர்த்துகின்றார்.

ஆசிலர்தமக்குருவியன்புடனுணர்த்துந் *
தேசிகனுந்தேர்ந்தவருஞ்சேர்ந்துசிவலோகம் *
வாசமலர்மேலுறைவர்மாசறலுமந்தத் *
தீசனடிகண்டனுபவிப்பர்தமதின்பம் *

எ-து வெளி (௱௨௧)

பரசமையிகள்வந்துமேலிட்டவிடத்துஅவர்களைக் கண்டிக்கச்சாமர்த்தியந்தன்னிடத்துண்டாயிருக்க வுமவர்களைக்கண்டியாதிருந்தோர்க்குக்குற்றமொ ப்பின்முடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்து கின்றார்.

நிறுத்திடவலானமலஞானெறியையென்று *
மறுத்திடவலானவலமார்க்கமயலுற்றே *
நிறுத்திலன்மறுத்திலனெனிற்கரிசன்னேச *
மறுத்தவனைமாய்க்கைகரிசல்லவறமாமே *

எ-து புறச்சமையிகளாகியபொல்லாதோர் தங்கள்தங்கள் கோட்பாடே பிரதானமாகச்சாதிக்கவந்தவிடத்துப்பரமேசுரனருள்செய்ததிவ்வியாகமத்தை யுள்ளபடியறிந்த வாசாரியன் அந்தந்தமார்க்கநூல்களைக்கண்டித்துத் தன்மதத்தைத்தாபிக்கவல்லனாயிருந்துந்தன்னுடையமத மேலானமதமெனச்சாதித்து நிறுத்திடாதிருப்பனாயினந் தப்பாவியிடத்துநேசம்வையாமலவனைச் சேயென்றுவர்த்தல்குற்றமன்றுஅதுவேபரமமான்தன்மம். எ-று (௱௨௨)

வேதாகமத்தைபுணர்ந்தவர்கள் தன்மமுதலியமூன்றைத் தமிழாற் சொல்வதன்றிவீட்டுநெறியைத் தமிழாற்சொல்லார்சொல்லவேண் டுமிடத்துவெவ்வுடமாகவுரைசெய்க வென்றுணர்த்துகின்றார்

செந்தமிழிலின்பமிறுவாயலதுசெப்பார் *
அந்தமிலியாநியுமிலானுவாயை யாய்ந்தார் *

செந்தமிழ்நூலுங்கெவுடமாகவுரைசெய்தார் *
இந்தயுககாலகலியிடரால்விடும் *

எ-து திருவள்ளுவதேவர் செந்தமிழ்நூலே யறத்துப் பால்முதலியமுப்பாலு மோதிமற்றவீட்டுநெறியை விரித்துச்சொன்னூலிற்சிவவாக்கியத்தையுணர்ந்தவ ராதலாற்பக்குவான்மாக்களைமோக்ஷத்தையடைதற்பொருட்டுக் கலிகாலத்தின்வ லிதொலைதற்பொருட்டுங் கெவுடமாகமேப்புணர்தலென்னு மதிகாரத்தைக்கூறினு ர், ஆருடையதேவராயனூர்- திருவுந்தியாரென்னுஞ் சாத்திரத்தைக்கூறினாராதலா ற்றமிழாற்கூறிற்குற்றமில்லை. எ-று (௱௨௩)

முடிந்தமுடிந்தலென்றுந்தந்திரவத்தியாலுணர்த்துகின்றார்

என்றுசிவஞானவரயோகமுமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினையாய *
நின்றமுனியன்றுணர்நிற்குணனினைந்தே *

எ-து - வெளி [௱௨௪]

சிவத்துதிபுணர்த்துகின்றார்

வேறு

மையணிக்கிடெனக்கருள்வள்ளலே மாறமாகுடலாகியவள்ளலே *
ஐயவர்தம்மையடர்ந்து நுமடக்கியே யாலநஞ்சமிடற்றுமடக்கியே *
பையபாம்பணியாகப்பரிப்பனே பாண்டியற்குமுடல்வெப்பரிப்பனே *
வையம்பெய்பவர்நாணுமறுப்பனேயருச்சுனன்றனு நாணுமறுப்பனே *

எ-து மலக்குற்றம்பொருந்தியவுடலாகிய சேறுமாறும்படிமயக்கத்தைக்கெடு த்தெனக்கருளைச்செய்யும்வள்ளலேயென்னிடத்துண்டாகியவைம்புலவேடர்களைக் கொன்றுமடக்கினவனே ஆலகாலவிடத்தையுண்டுகண்டத்தினிடத்தம்அடக்கினவ னேபடத்தையுடையபாம்பையாபரணமாகத்தரித்தவனே,பாண்டியனுக்கு முடலி லுண்டாகியவெப்புநோயைக்கெடுத்தவனேபிச்சையிடும்பத்தினிமார்களதுநாணத் தையும்பிடுக்கினவனே,அருச்சுனனதுவின்றுணியையுமறுத்தவனே எ-து (௱௨௫)

இதுவுமது

கங்கைசெஞ்சடைத்தாங்கியகண்டனேகாளவல்விடமுண்டிருள்கண்டனே, மங்கைமாதவஞ்செய்திடவாடியேமதித்துமற்றவளோடுறவாடியே சங்கமேவித்தருந்தமிழ்ச்சைவனேதவிரினன்றறயானுமசைவனே, திங்களூரினப்பூதிக்குஞ்செல்வனேநினைத்துநின்னைப்பவத்தினுஞ்செல்வனே.

எ- து. கங்கையைச்சிவந்தசடையிற்றரித்தெங்குநிறைந்தவனே, கருமையாய் வலிமிகுந்த விடத்தை யுண்டிருண்ட கண்டத்தை யுடையவனே, மங்கையாகியஉமையவள்திருமேனிவருந்தியரியதவத்தைச்செய்பவதையறிந்தவளோடுறவாடினவனே, மதுரையிற்சங்கத்தாரோடுபுலவராகியெழுந்தருளித்தமிழிலக்கணத்தை யுதவுஞ்சிவபெருமானே, நீங்குதற்கரிய நன்மைகள் கெட நரக சொர்க்கங்களில் யானுந்திரிவனே, திங்களூரினவதரித்த ✠ அப்பூதிநாயனாருக்குச்செல்வமாகியிருந்தவனே, உன்னருளாலுன்னைக்கூடினபின்புபிறவியினிடத்துஞ்செல்லுவேனேசெல்லேன். எ- று. ஏகாரம் - எதிர்மறை (௩௱௨௬)

குமரன்றுதியுணர்த்துகின்றார்

வேறு

௨. மையாள்புதல்வாவுனதாளிணையே ✻
யிமையோர்தொழவேயெதிர்சூரனையுங் ✻
குமையாவவர்வாழ்வருள்கூரியனே ✻
யெமையாளெமையாளிடரோடிடவே ✻

எ- து- வெளி (௩௱௨௭)

அகத்தியர்துதியுணர்த்துகின்றார்

அப்பூதிநாயனாருக்குச்செல்வமாகியிருந்தவனென்பது. திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்ததிருப்பழனம்பண் பழந்தக்கராகம்

✠ வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும், பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா, னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி, குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. [௰]

அதிபாதகமாகியபாவமிதம் ✽
புதுமாமலர்சூடுதல்போற்புரிவேன் ✽
விதியேவிழையேன்வினைவேரரியாய் ✽
பொதிமாமலைமாதவனேபுனிதா ✽

எ-து- வெளி- விதியேவிழையேன். எ-து- சத்கன்மத்திலாசைப்படேன் (௱௨௮)

பத்தாவதுசிவஞானயோகவியலுரைமுற்றும்.

பதினோராவதுபரிகாரவியல்

இவ்வோத்தென்னுதலிற்றோவெனின், ஒத்துநுதலியதூஉ மோத்தினதுபெயருரைப்பவேவிளங்கும், ஆயினிவ்வோத் தென்னபெயர்த்தோவெனிற்பரிகாரவியலென்னும்பெய ர்த்து, ஆன்மாக்களுக்குவாதனாபலத்தாலேயிருவினைப் பலன்களைப்பொசிக்குமிடத்தேறியபாவம்போம்படிக் குப்பரிகாரத்தைக்கூறியதெனவறிக,இத்தலைச்செய்யுள்- என்னுதலிற்றோவெனிற்பரிகாரவிதங்களிற்சிறிதுதொகு த்துணர்த்துதனுதலிற்று.

அறிந்திடுகபரிகாரமவலவினையறுத்தற்கறைந்திடுவாமருமுனிவவாகா ரசுத்தி, நிறைந்தபுனலான்மாசுநீக்கலுடற்காடைநிகழ்நீரினமுழுக்கறுக்கை நீசனைப்பேசிடினும், பிறந்திறந்தவாசூசம்பேணியறன்மூழ்கும்பெற்றியெ னப்பேசியவிம்முறையினைத்தும்பெற்றார், சிறந்தபரிகாரத்தைச்செய்தவல மானதீவினையிற்றீர்ந்திடுவர்நன்பலமுஞ்செறிவார் ✽

என்பது - வாராய்சிறப்பினையுடையவகத்தியமாமுனிவனே, ஆன்மாக்களார்ச் சித்தபாவம்போம்படி பரிகாரத்தையாஞ்சொல்லுவாம், அதனையறிவாயாக அஃ தெவ்வாறென்னின் - உடலின்கண் - நவத்துவாரத்தாலுண்டாங்குற்றமும், சுத்தியானையின்பொருட்டு நதிமுதலியவற்றின்மூழ்காமல்வெந்நீரி ன்மூழ்குங்குற்றமும்புடைவையிற் சுக்கிலமுதலியனபட்டகுற்றமும் இழி ந்தசாதிகளுடன்பேசினகுற்றமும், அவர்களுடனமையைப்பொசித்த குற்றமும்

அந்தணர்முதலாயினார்க்குண்டாகியவிருவிதவாசூசமும் போனவாறேமுழுநிச்சுத்தராகாதகுற்றமுமாகிய இங்ஙனங்கூறிய குற்றங்களைச்செய்தோர் அக்குற்றம்போம்படிக்கதற்கதற்கேற்றபரிகாரஞ்செய்துபாவங்கள்போனவாறேயோட்டவைத்த பொன்போலவிளங்கிச்சுத்தாத்துவாவிலுண்டாகியபோகங்களைப்புசித்திருப்பர்கள் எ - று ஈன்பலமுமென்றவும்மையான் மோக்ஷமுமெனவறிக. (௯)

அப்பரிகாரஞ்செய்தற்கதிகாரிகளைப்பிறித்துணர்த்துகின்றார்.

பரிகாரம்கிரகபதிக்கும்பிரமசாரிக்கும்பகர்ந்திடுவாம்பவுதிகனைநயிட்
டிகனையென்று, விரதியருமிருவரிருவிதங்காமாகாமமெனவினையுங்கிரக
பதியகாமவினையினுக்குப், பரிகாரம்பகர்ந்திடுவாமொழிபாலுங்காமம்பார்
க்கவிருதுணிதமெனப்பவுதிகனுக்கிரட்டி, கிரகபதியினும்பரமவிரதிக்கு
நான்குகெழுமுமெனவறிகவினைப்பாவங்கள்கெடுப்பார். ௧

எ - து ஈண்டியாம் - இல்வாழ்வானுக்கும்பிரமசாரிக்கும்பரிகாரஞ்சொல்வாம், அப்பிரமசாரிபவுதிகப்பிரமசாரிநயிட்டிகப்பிரமசாரியெனவிருவகையர், அவர்பாலொனின்; நூலின்கண்விதித்தகாலமளவும்பிரமசரியவிரதத்தையனுட்டித்துமுடிந்தவாறேவிவாகஞ்செய்யுமவன்பவுதிகப்பிரமசாரி, மரணாந்தம்வரைபிரமசரியவிரதியாய்விவாகஞ்செய்யாமலிருக்குமவன் நயிட்டிகப்பிரமசாரி, இவர்கள்செய்பாதிறகுங்கன்மமும்புத்திபூருவமாகவும் அபுத்திபூருவமாகவுமிருவிதப்படும், ஈண்டில்வாழ்வான் அபுத்திபூருவமாகச்செய்தகன்மத்துக்கேபரிகாரஞ்சொல்வாம், ஒழிபென்னும்பிரமாணத்தாலேமுற்கூறின திவிரட்டிபுத்திபூருவமாகச்செய்தகன்மத்துக்கெனவறிக, கிரகத்தனுக்குஅபுத்திபூருவத்துக்குச்சொன்னதிலிருமடங்குபவுதிகன்செய்தவபுத்திபூருவத்திற்கெனவறிக, அந்தப்பவுதிகனுக்குச்சொன்னதிலிருமடங்குநயிட்டிகப்பிரமசாரி செய்யும்அபுத்திபூருவத்திற்கெனவறிக, அதிலிருமடங்குபுத்திபூருவத்திற்குப்பொருந்தும்,ஆதலானான்மடங்காயிற்றெனவறிக, தான்செய்தவினைசெய்வினையெனப்பாவங்களிருவிதத்தால்வரும், அதுபுத்திபூருவம் அபுத்திபூருவம் என்னும்பேதத்தானான்குவிதப்படும், இப்படிக்கன்மபேதங்களையறிந்துஅதற்கதற்கேற்றபரிகாரங்களைச்செய்து பாவங்களைப்போக்குக, எ - று ஒழிபாலுமென்றவும்மையாற்பிரமசாரிக்குச் சொன்னதுவானப்பிரத்தனுக்கும் நயிட்டிகனுக்குச்சொன்னது சன்னியாசிக்குமெனவறிக, இவர்கள்தாந்தாமேபரிகாரஞ்செய்தற்கசத்தராயிற்றம்மாசிரியாராலேயாதல் ஆசிரியர்புத்திராலேயாதலிருமடங்குசெய்விக்கிற்குற்றம்போமெனவறிக. (௨)

முற்கூறியகாமம்அகாமம்ஈதென்றுணர்த்துகின்றார்

முற்றும் வினைதைவிகத்தான் மோகத்தானே யான் மூர்க்கரசர்சோரரிவர்க ளுடைந்த பயத்தாலும், அற்று முறையிவழித்துமகாமமெனவுமிகவல்லனாவே காமமெனவுமிகவமலேசன், சொற்றவையுந் துணியாத நயக்கத்தை யிகமேநு வளிந்தவனும்பேராசைதொட்டவிவுகெட்டும், பற்றியிடும் வினைமோகம்பரம னுரைகேட்டும்பரலோகமார்கண்டாரென்றெண்ணும்பழமும் ॥

எ - து தைவிகத்தாலுண்டாயவினையும், மோகத்தாலுண்டாயவினையும், மிருந்தயியாதியாலுண்டாயவினையுமூர்க்கவிராசா - கள்வர் - இவர்களுடைய மிகுந்த பயத்தால்வரும்வினையும் - பேய்பாம்புமாயமயக்கமுதலியவற்றாலறிவழிந்துசெய்யுங்கன்மமும், அகாமவினையெனப்பெறும் - இவையல்லாமலுண்டாம்வினைகள்காமமெனவறிக, வேதாகமங்களிலின்னது செய்தாலின்னபாவமென்று அறுதியிட்டறிந்திருக்கவுமதற்குப்பயமின்றிச்செய்வது முற்கூறியதைவிகமெனவறிக, குறள் ✠ மோகஞ்சுகர்க்கமுற்றதலாற்புத்திதனக் கூகமொழிக்கையெனவோர், என்பதனால்வேதாகமங்களை யோதியறுதியிட்டவர்கள் ஆசைமிகுதியாலதனைச் செய்வதுமோகமெனவறிக, உலோகாயுதனைப்போலிம்மைப்பயனையொழிந்து அம்மைப்பயனையார்கண்டாரென்று கருதுமதுவுமோகமெனப்பெறும் · எ - று அகாமமெனினும் அபுத்திபூருவமெனினுமொக்கா, காமமெனினும்புத்திபூருவமெனினு மொக்கா, அமலேசன்சொற்றவையுமென்றவும்மை பான்மிருதிபுராணங்களு மெனவறிக. [௯]

நித்தியகன்மத்துட்டலைமையாகியசிவத்தியானத்
தையைப்புலரிக்காலையிற்செய்யாதொழியிற்பரிகார
முணர்த்துகின்றார்.

உள்ளிடுகசதாசிவமும்பிராமமெனுமுகூர்த்தத்தொழிந்திடிற்பின்னிரு குளித முணர்ச்சிக்கேயொருநாள், குன்னிடுகவல்லதிறையுருவத்தைமூல முனைத்திடுகவிருநாறுநீறுடலிற்பூசிப், பின்மனைபிற்புறப்படுகபிறைத்தா னேயாகிற்பேசிடுகவகோரத்தையிருநூறென்பெறவே, யன்னமருந்தாதரு ந்திக்கொளவியத்தையற்றைக்கபசவியம்பூனுமலசலமோசனத்தே ॥

எ - து சூரியனுதிக்குமுன்றேமுக்காநாழிகையென்ன வெழுந்திருந்து சுத்தி செய்துதிருநீறுதரித்துக்கொண்டுசமாதிசெய்க, சமாதிசெய்தற்கருகமல்லாதார் சதாசிவமுதலியதிருவுருவைத்தியானஞ்செய்க, நித்திரைவசத்தாற்றியானியாதொ ழியினிருமடங்குதியானஞ்செய்க, நித்திரையன்றியிருக்கவுந்தியானஞ்செய்யா

✠ பதிபசுபாசப்பனுவல் - நான்காவது - பாசசாதகவியல் - ௬௰௮ -

தொழிலினுண்மடன் தியானஞ்செய்க இங்ஙனஞ்செய்யாதொழியினக்குற்றம் போம்படிக்குமூலமந்திரத்தையிருநூறுருச்செபித்தல்செய்க, பின்திருநீறு தரித்து த்தியானஞ்செய்து இல்லத்தின்கணின்றும்புறப்படுக. திருநீறுதரியாமற்புறம் புறப்படினும் பூணூலைவலக்காதிலாதல் கழுத்திலாதல்வையாமலிருந்து மலசலா திகளைநீக்கினும் அக்குற்றம்போம்படிக்கன்று பவாசமாயிருந்துபஞ்சகௌவியத் தைச்சிவனுக்காட்டிச்சேடத்தைப்பருகிய. கோரமந்திரத்தையிருநூறுருச்செபித் திருக்கிலக்குற்றம்போமென்றவாறு - உம்மை - எதிரதுதழீஇயவெச்சம். (௪)

மலசலமோசனகாலத்து வருங் குற்றத்துக்குப் பரிகாரமுணர்த்து கின்றார்

பார்த்தவன்மூக்கிரமல மும்பாற் பிடிம்போதிற்பருதிமுதற் பண்ணைவ ணாப்பார்ப்பானைப்பசுவைச், சேர்ந்தறைகவொருநூறு நிகைபிழைத்தான்று ணுந்தேசத்தைப்பிழைத்தானுஞ்சிவாங்கனைத் துஞ்சிறந்து, நீர்க்கடத்துநிறை வாசநந்தனத்துமல நீர்நீக்கினனேலொருகாலைஞ்சபிந்தானுநீக்கிச், சேர் த்தறைகபிரமங்களொருநூறைந்நூறு செப்பிடுகவீசானஞ் சுடலைநிருப்பு ரிக்கும்.

எ-து மலசலமோசனகாலத்துத்தேவர்கள் தவசிகள் அந்தணர் ஆதித்தன்சந்தி ரன். அக்கினி தாரகை. மாதர்இவர்கண்முதலாயினாரைப்பாராதொழிவானன்றிப் பார்த்தானாகில் அகோரத்தையொருநூறுருச்செபிக்க. இஃதன்றிச் சந்தியாகாலமி ரண்டினும்பகலினும்வடக்குமுகமாகவிராதவனும் அத்தவிராத்திரிக்கு நிருதிதிக்கு ப்பார்த்திராதவனுமிரவில்தெற்குமுகமாக விராதவனும் விதித்ததேசத்தைப்பொ ருந்திமலாதி விடாதானும். அம்முறைசெபஞ்செய்க. சிவனாலயசன்னிதித்தெருவி னும்புண்ணியதீர்த்தக்கரையினும் மனம்பொருந்தியதிருநந்தவனத்தினுமலசலங் களைநீக்கினானாகில் நெஞ்சுவருந்தியுபவாசத்தைப்பண்ணி ப்பஞ்சகௌவியத்தைக் கொண்டிருந்துபஞ்சப்பிரமங்களைநூறுருச்செபிக்க. திருவிழாநடக்குந்தெருவீதியி னுஞ்சுடலைக்கரையினுமலசலத்தை நீக்கினவனுமுபவாசமாயிருந்து ஈசானமந்தி ரத்தையைஞ்ஞூறுருச் செபிக்கவக்குற்றம்போம். எ-று- தேசமென்பது- ஆக்கள் சேர்விடம்- பொழிலின்புடை- சிலை- நீர்- நீர்நிலம்- உன்னதத்தலம்- கோமயம்- இ வைமுதலியன. (௫)

நீராடுமிடமுந்தூசொலிக்குமுறையுமுணர்த்துகின்றார்

ஆடுக நீரினையம்புளரிதெரியின் மற்றவம்புமடைதனினழுக்கறுக்கவ ருந்திடினுமலத்தாற், றூடிதமென்முத்திரத் தாஞ் சுக்கிலத்தினாலுந் தோய்ந் திடுககாரத்தினிற்சுடு நீருஞ்சொரிக, கூடியிடக்கோசலமுங் குளிர்நீருஞ்சொரி கக்கூட்டிடுகசுத்தமிருத்திகைகளையுந் துலங்க, வோடுபுனல்வெள்ளத் துமுழு த்தியொருத்தழுக்கையொழித்திடுகவாதபத்திலுலர்த்திடுகவுணர்ந்தே.

இ-ள். நதிமுதலியவற்றின்கண்- முழுகுவது உத்தமம்- அஃதல்லாத தாமரை யோடைகளிலவைகளின்முழுகுவது மத்திமம்- கிணற்றிலும்வாவியிலுமுழுகுவ தகதமம்- இங்ஙனமியன்ற தொன்றின் முழுகி யனுட்டானஞ்செய்து பின்புடை வையைத்தோய்த்துலர்த்தவும் பெரசித்தவிடத்துண்டான அசுசிபோகையின்பொ ருட்டுமவ்வாறுசெய்க- மலசலஞ்சுக்கிலமுதலியவற்றாற்புடைவையின்அசுசியாயின அசுத்திபோகையின்பொருட்டுஅதனையுவர்முதலியகாரநீரிலேபோட்டுவெந்நீரும்பு ற்றமண்ணுங்கூட்டிப்பிசைந்துண்டானவழுக்கைப்போக்கிக் கோசலந்தெளித்துக்குளி ர்ந்தநீரிற்றுவைப்பச்சுத்தியாம் அங்ஙன நீர்ச்செலவின்மாரிநீர்வாறு முதலியவற்றிற் றோய்த்துக்கல்லிலடித்துத்தோரணமாகவிரண்டுகழியைநாட்டிமேலேயொருமூங் கிலைப்போட்டுத்துவைத்தவைகளைத்தாவுலர்த்திடுக- தீத்தியகன்மநூல்தெரிந்தென்றவா று- வெள்ளத்துமென்றவும்மையாற்குளத்துமெனவுமிக. (கூ)

வியாதியினலாதுமுதலியவற்றின்முழுகாதோர்க்குப்பரிகாரமு ணர்த்துகின்றார்

அந்தினமேனும்பிணியாளரானாடியிடக் குளிர்நீ ரழன்றபுனலாடியபினகத் துநினைந்தமைக, தஞ்சமெனப்பிரமங்கள்சடங்கங்கண்முக்காற்றண்புனலுக் கன்னியனுமந்தினமேனும்முறு, மெஞ்சலறவெண்பஃது மிருபஃதுமியம்ப விருநாறுஞ்சாதங்கை யியம்பிடுக நாற்பெட், டஞ்சலெனு மகோரத்தையா டையநீருளாடினனேனுமொழிகவற்றையாளலந்தே.

இ-ள். வியாதியாளர்குளிர்ந்தசெலமாட்டப்படாதுவெந்நீரின்முழுகின துற்றம் போம்படிக்குப்பஞ்சப்பிரமங்களை யதனைப்போக்குமெனக் கருதியதனைமுக் காற்செபிக்க. வியாதியன்றியிருக்குமவரும் வெந்நீரின்முழுகினுஞ் சத்தியோசாத முதலாருசெபிக்கச்சிவதீக்கையுடையவனுமுதலியவற்றானாடையின்றிநீரா

டினு ஞகிலன்றவருந்தியுபவசியாயிருந்தகோரத்தைநூற்றெட்டுருச்செபிக்கிற்குற் றம்போம். எ- று. [எ]

ஆசூசவிதியுணர்த்துகின்றார்

ஒருவனுடல்விடினூருளுண்டவ்வூர்க்கசூசிபொருதெருவுளொருமுக டேலம்பதுவிற்கிடையுண், டிருபதிலேனொருபதினுண் டிடைவிடினேமு கடுமிடைசெலினேநாராசமிலையப்பாலசூசி, யொருபதினென்றளவுண்டுமற் றையவித்கண்ணூனவுடலெடுப்பதன்முன்வேதமுதலோதேற், பரமனைய ர்ச்சனைபுரியேன்முப்பதுதண்டளவுட்பற்றியிடுமோசூசம்பசுபதியாலயத்தின்

எ- து ஒருகிராமத்திலொருவன்மரிக்கிலவ்வூர்க்கெல்லாமாசூசமுண்டு அல்ல தொருதெருவிலொருமுகட்டுக்கூரையிடைவிடாதிருக்குமாகிலதற் கைம்பதுவிற்கி டைதூரமாசூசமுண்டு அஃதன்றிருமுகடுஇடைவிட்டிருக்குமாகில் முப்பதுவிற்கி டையாசூசமுண்டு ஒருதெருவின்கணம்மேவநாராசம்வரில் அதற்கப்பாலாசூசமில் லை இறக்கிறவீடுவிட்டுப் பிழக்கடைப்புறத்துவீதியிலும் பக்கவீதியிலு மாசூசமுண் டானுற்பதின்னொருவிற்கிடைதூரமாசூசமுண்டு இங்ஙனங்கூறியதலங்களிலாசூசமு ண்டானவிடத்துக்குற்றத்தையுடையசவமெடுப்பதற்கு முன்சிவபூசைமுதலியகன் மமும்வேதாகமபுராணமோதுதலுமொழிக,திருக்கோயிலைச் சூழ்ந்த வீதியிலொரு வர்மரித்தவிடத்துமுப்பதுதண்டுக்குட்பட்டிருக்கிலாசூச முண்டென்றவாறு. சவ ங்கிடக்கப்பரார்த்தத்தினித்தியமுதலியகன்மஞ்செய்தாராயினக்குற்றம்போம்படி க்குக்கலசந்தாபித்தபிடேகஞ்செய்யினக்குற்றம்போமென்க (அ)

அந்தணர்முதலியோர்க்காசூசவிதியுணர்த்துகின்றார்.

எட்டுமிரண்டும் பிறந்தநாளிறந்தநாளு மிழுக்குண்டு மறையோருக்க ளாயருக்கீராறுண், டெட்டுடனேழேனையருக்கிரொட்டொன்றானமியல்வழி யினியங்கியிடுஞ்சூத்திரருக்கிரட்டி, விட்டவர்க்குவிதிபுதல்விதன்னுடனே பிறந்தாள்வேறல்லாதன்மாமனெழுவாயர்வியோகத், தொட்டுமொருமூன்று நாளொழிந்தார்க்குமூழ்கவொழியுமொருபதினேந்துட் சிவகணிகையோர்க் கே ௯

எ- து- செனனமரணமிரண்டினுக்கும்பிராமணர்க்குச்சூதகம்பத்துநாளுண்டு இராசாக்களுக்கிருவகையாசூசமும்பன்னிரண்டுநாளுண்டு வசியருக்கவ்விருவகை யாசூசமும்பதினேந்துநாளுண்டு தீக்கைபெற்றுவேதாகமங்களின்வழிநடக்குஞ்சூ

த்திரர்க்குஇருவகையாசௌசமும்பதினைந்துநாளுண்டு அந்தநூல்களில் விதித்தவழிநடவாச்சூத்திரர்க்குஇருவகையா சௌசமு முப்பதுநாளுண்டு இவைநான்கு வன்னத்தார்க்கும்பூரணாசௌசம். இனிமூன்றுநாளாசௌசமுடையார்யாவரொன்னிற்றன்பெண்ணுந்தன்னுடன்பிறந்தாளும் தாயுடன்பிறந்த மாமனுமாகிய விவர்களுக்குமூன்றுநாள்மரணவாசௌசமுண்டு எழுவாயர்ளன்பதனால் தாயைப்பெற்றபாட்டன்பாட்டி தாயுடன்பிறந்தபெரியதாய்சிறியதாய் பெண்கொடுத்தமாமன் மாமிசாதகாசாரியர்போதகாசாரியர் மோக்ஷத்தைக்கொடுக்கு மாசாரியர் இவர்களுடையதேவிமார் மாணாக்கர்க்கு மெனவறிக ஞாதியில்லாதவர்களிலொருவனேகசாதியானுய்ப்பிரத்தியான்வீட்டில்வந்து மரிக்கிலவனுக்கு மூன்றுநாளா சௌசமுண்டு இவர்கள்அல்லாதோர்மரிக்கில் முழுகினமாத்திரம் விடை யவனுக்குச்சுத்தி,மூன்றுநாளாசௌசமுடையவர்களுக்கு டவர்கள்அவர்கள்மரித்தமூன்றுநாளுங்கடந்தவன்கேட்டாலொருநாளாசௌசம் ஒருநாளாசௌசமுள்ளார்க்குஅந்த ஒருநாளுங்கடக்கிற்கேட்டபொழுதேயாசௌசம் தொன்றுநாழிகையாசௌசமுள்ளார்க்கு இராத்திரிகேட்கிலிராத்திரிமட்டாசௌசம் பகற்கேட்கிற்பகல்மட்டாசௌசமுண்டெனவறிக. இஃதுபிறநூன்முடிந்ததாமுடன்படுதலென்னும் தந்திர யுத்தியாற்கூறியதெனவறிக. சிவபெருமான்றுருகாவனத்திலிருடிகன்மாதரைமோகிப்பித்தந்தவிகாரத்தினாலவர்களிடத்துக் கருப்பமுண்டாகிப்பிறந்தஉருத்திரகணிகைமார்க்கிருவகை யாசௌசமும்பதினைந்துநாளுண்டென்றவாறு. உருத்திரகணிகைமாரிற்கொண்டுவளர்த்தவள்வாங்கிவளர்த்தவள்முதலாயிருக்காசௌசம்அசுசதிபிகையின்விரித்துக்கூறினாராண்டுணர்க,யாதாமொருசாதிக்கெவ்வளவுஆசௌசமுண்டு அவ்வளவும் பிண்டோதகக்கிரியையைச்செய்க. ஆசௌசம்போனபிறகேயேகோதிட்டக்கிரியையைச்செய்க. இவ்விதியந்நூலிற்காண்க மாதாவுக்குச் சக்களத்திபுடன்பிறந்தானு மாமனாதலால் வேறல்லா நன்மாமனைச்சிறப்பித்தார். (௯)

நிரூபாவிசேடத்தார்சங்கோசமானவாசௌசமுணர்த்துகின்றார்

ஒடுங்கமனமமலனடியொன்றிவர்க்காசௌசமொட்டாது சிவதருமனியர்க்
கு முலகம், விடும்பரிசில்லாவுலகதருமனியதிக்கைவிரும்பினர்க்குநாண்
மூன்றுவிரவிபிடும தூசி, சடங்கொருமையன்னியராற்சங்கரற்கு பூசை ச
மைப்பிக்கவல்லநூசானிரவுடைதரித்தே, துடங்கலுமாஞ்சிவபூசைபிரண்
டாந்திக்கைபினைத்தொட்டாரும்ம்முறையைத்தொடங்கலுமாஞ்சூழ்ந்தே.

எ - து சங்கிலிட்டமுதலியநால்வகைமனதிறுள்மூன்றுந்திரிகரணத்தோடு கூடினஆதலாற்சிவனிடத்திற்சுவலீனமானநாலாவ்தானமனதைப்பாதத்திலேலயி ப்பித்திருக்கிறசிவஞானிகளுக்காசூசமில்லை, ஆசாரியனுலிருவினையுந்தீக்கையினுற் சோதிக்கப்பட்டுஆசூசமுடையவர்களுடன் கூடிப்பாகமும்புசிப்புமின்றித்தனியே பாகம் பண்ணிப் பொசித்திருக்குஞ் சிவதருமணியதீக்கையுடையார்க்கும் ஆசூச மில்லை, ஆசாரியன்மாணுக்கன்செய்தபுண்ணியங்களைமாயைக்குமேற்சுத்திசெய் யாமற்சுத்தாத்துவாவின்போகம்பொசிக்கைக்கின்பொருட்டுஅதனைவைத்தப்பாவ கன்மத்தையேசோதித்துப்புண்ணியகன்மத்தைச்சோதியாமற் சிகாச்சேதம்விதி வழிபண்ணப்பட்டிருக்கிறவ்லகதருமணியதீக்கையையுடையவர்களுக்குஇருவகை யாசூசமுமூன்றுநாளுண்டு, முற்கூறியசிவதருமணியதீக்கையுடையார்களும்பூருவா ச்சிரமத்துடனேகூடியபாகமும்போசனமும்வேறின்றிக்கூடிப்பொசித்திருந்தார்க ளேயாயினவர்க்கு மூன்றுநாளிருவகையாசூசமுமுண்டென்க, இங்ஙனங்கூறியவி ருவகையருஞ் சிவபூசைசெய்யாதமூன்றுநாளுமந்திரியாகஞ்செய்துபொசிக்க, அவ ர்களுடைய சிவலிங்கத்தைவேறேயொருவராலே✠சாதாரண்மந்திரங்கொண்டு பூசைசெய்விக்க, அல்லது பத்திவயிராக்கியந்திடமுள்ளவர்களாயின், ஆசாரியன் தீக்கைசெய்தமண்டலத்தரானசிவனதுதிருமுன்னே நீயுள்ளமட்டுமேபூசியென்று கற்பித்துஅவர்கொடுக்கக்கைக்கொண்டலிங்கத்தைப்பூசியாமற்பொசிக்கலாகா தெனக்கருதிமுழுகியீரப்புடைவையைத்தரித்துக்கொண்டுசிவபூசைசெய்க, விசே டதீக்கையுடையபுத்திரருமம்முறைமையிற்பூசைசெய்க எ - று

பிரத்தியாரைக்கொண்டுபூசைசெய்வித்தவர்கள் ஆசூசம்போனவாறேமுழுகிக் கௌவியத்தைப்புசித்துப்பின்புபிராய்ச்சித்தார்த்தமாகஅகோரத்தைமுந்நூறுருச் செபித்துப்பூசைசெய்க தடங்கலுமாமென்றவும்பையெதிர்மறை. (௰)

புத்திரன்மரித்தால்மாதாபிதாக்கள் செய்வதூஉம்பதியானவன்மரி த்தாற்பாரிசெய்வதூஉமுணர்த்துகின்றார்

மரித்தநாளுணலொழிக மகவிறந்தபிதாவுமற்றிருநாட்கௌவியமா ந்தகமாதாப்பாரி, பரித்தவனையிழந்தநாட் பலுகதலைவபனம்பண்ணிடு கசாந்திராயணமாகிபனைத்தே, சரித்தபினைச்சிறிதுண்க தாங்கவுடறன்னைச் சங்கரனற்றுணினையைச்சாரவுமிவுண்டே, லருச்சனையைப் புரிந்திடுகவாரிய னறனருள்பெற்றவனிதனிற்சரிக்கபுலனடக்குகனைந்தழுதே. ✠

எ- து- பிள்ளைசாகக்கொடுத்தபிதாவுமாதாவுமன்றைக்குபவசியாயிருக்கமாதா

✠ சாதாரணம் - பொது

வானவர் இரண்டாநாள் மூன்றாநாளாதல் விதிப்படிகௌவியத்தைத்தாபித்துஅத
னையேபொசித்துபவசியாயிருக்க, பதியைச்சாகக்கொடுத்த பாரியானவள்பட்டினி
யையுடையளாய்த்துக்கித்தழுது மயிருடனிருக்கிறது பதிக்குக்குற்றமென்பதனால்
முண்டிதம்பண்ணிக்கொண்டுசாந்திராயணமுதலியவற்றை யனுட்டித்துமுடித்துச்
சிறிதுநாளைக்குப்பின்னர்வுடலின்கணுயிரிருக்குநிமித்தமாகச்சிறிதன்னாதிகளையுப்பு
யின்றுமின்றியொருபொழுது பொசித்துப் பாக்குத்தின்னாமலிருக்க தெய்வந்தொ
ழாஅள்கொழுநற்றொழுதெழுவாள் என்பதனாற்பத்தாவே தெய்வமென்றிருந்தபதி
விரதையானவள் அவனில்லாமையால் இனிச்சிவனையடையவேணுமென்னும்புத்தி
யுண்டாகிலாசாரியனையடைந்து அவன்செய்யுந்தீக்கையைப்பெற்று அவனுக்கிர
கத்திருமேனியுடையவனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டருச்சனைசெய்க பூமியி
ல்கல்லோ ஓடோ தருப்பையைப்போட்டதனிற்சயனஞ்செய்க ஆமையானது
தன்னவயவங்களை யடக்குமாறுபோலப் பஞ்சேந்திரியங்களின் வழிமனஞ்செல்
லாமலடக்கியவனது சற்சரித்திரத்தைச் சொல்லித் துக்கித்திருக்க. எ- று- பிதாவு
மென்றவும்மையான் மாதாவுமெனவறிக [௰௧]

சமங்கலியினாசார முணர்த்துகின்றார்

எந்திழைக்குப்பதியேவழிபற்றுதலேநியதியீசனிணைத்தாளணையவேச
றவுபெருகிற், காந்தனனுமதிபெற்றுக்கைக்கொள்கபூசைசுவீக்கிடினேயிரு
துகளுந்தோறுமூன்றுநாளும், வாய்ந்திடச்செய்துடற்சுத்தி மற்றையர்நீர்
தரவேமானதபூசனைபுரிகமற்றையநாட்புனலுட், டோய்ந்தருந்திக்கௌவிய
த்தைச் சூட்டுகபோதரற்குச் சூதகமுன்பெருநோன்புமுன் சூட்டி விக்கப்பிற
ரால். *

எ- து. சமங்கலிக்குப்பத்தாவினேவல் செய்தலே பரமமானதன்மம். இஃதன்
றியும்அந்தப்பதியினேவல்செய்துவருகையிலுஞ்சிவனது பாதங்களையடையவே
ணுமென்னும்விருப்பமுண்டாகிலவர்களுக்குத்தனக்கெனச்சுதந்தரமில்லாமையா
ற்பத்தாவினனுமதியைப்பெற் றாசாரியனையடைந்து அவரிடத்திருவுடையவனையெ
ழுந்தருளப்பண்ணிக்கொண்டுசிவபூசைசெய்க அவளுக்கிருதுவானது வந்தவளவி
லவளொருசன்மத்துக்குமருகமல்ல அஃதேனெனில் முதனாளவள் சண்டாளி இர
ண்டாநாள் பிராமணனைக்கொன்றவள் மூன்றாநாள் வண்ணாத்தி யித்தன்மையையு
டையளாதலால்ஒருசன்மத்துக்குமருகளல்ல மூன்றுநாளுஞ்சரீரசுத்தி நிமித்தமா
கநீர்முதலியவற்றைத்தீண்டாமல் வேறொருவளைத்தண்ணீர்தரச்சொல்லிச்சரீரசு
த்திசெய்துகொண்டு நாலாநாட்கோசலம்புற்றுமண்முதலியவற்றாற்சரீரசுத்திசெய்

ஆநதிமுத லியவற்றின்மூழ்கிப்பஞ்சகௌவியந்தாபித்தருந்துக அதுகூடாதிருக்கிற் பால்நெய்யாதல் பருகிற்சுத்தியாம். பின்புசிவபூசைபண்ணுகதும்மூன்றுநாளும்அந்தரியாகஞ்செய்யாதொழியின்அக்குற்றம்போம்படிக்குஅகோரத்தையாயிரமுருச்செபிக்கஅக்காலம்பூசியாதிருக்கிற்குற்றமன்று தான்பிள்ளைப்பெற்றசூதகந்தனக்குரியார்மரித்தசூதகம் வியாதியிவைகள்வரிற்றனக்கொத்ததீக்கையுடையவர்களைக்கொண்டுசாதாரணமந்திரத்தாற்பூசைசெய்விக்க. எ- று. (௰௨

இருதுவருங்காலநியமமும் அவர்களைக்கூடலாகாத திவசமீதென்ப தமுணர்த்துகின்றார்

நிசிவேலையந்தியயாமத்திருதுநிகழி னேரிழைக்கற்றையநாளைமுதலெ
னவேநினைந்து, நசையுறவேபதியவடோணண்ணுகவைந்தாநாளுன்றினுமா
மிவைதனினுநணுகலமவாசி, யிசையினும் பூரணைபதினான் கெட்டாறுதிதி
மூன்றெட்டுடனீரிரண்டென்னுந் திங்களெழுவாய்கள், சுசியாயவெநிபாத
மெனுமிவற்றுளொன்றுதொடினுமணைந்தாற்பலியாசொல்லிடுமந்திரமே ॥

எ- து. மாதர்கள்இராத்திரிநாலாஞ் சாமத்திருதுவாயினவர்களுக்குஅன்றுதானேமுந்தினநாளாகக்கொள்க பதியானவன்விருப்பத்துடனேயவளுக்கிருதுவானதுஐந்தாநாளுண்டாகாதிருந்தாலற்றைக்கவளைக்கூடுக நாலாநாளுண்டாகாதொழியினன்றுங் கூடுக அமவாசி பருவம் சதுர்த்தசி அட்டமி சட்டி திதித்திரயம் துவாதசி மாதப்பிறப்பு விதிபாதமுதலியபஞ்சபருவம் இவைகளிலொன்றுவந்துகூடினுமாகாது இவைகளிற் காமமிகுதியாற் சேர்ந்தாற்றான் செபிக்குமந்திரமும்பலத்தைக்கொடாது. எ- று. பாரியைத்தீண்டுமிடத்து ஒற்றைபட்டநாட்களிற்புத்திரனிமித்தமாகத்தேவதேவமகாதேவமந்திரத்தையுச்சரித்துக்கூடிற் சற்புத்திரனுண்டாம் இஃதன்றி யிராத்திரிக்குத்திரியாமையென்னும் பெயருண்டாகையாலதனைமூன்றுகூறாகப்பிரித்துமுந்தினவிரண்டு கூறுகடக்கப் பிற்படிலன்றுதானே யொருதினமென்றுகூறுவதுபெரும்பான்மையாதலாலிவ்வாசிரியரதனைக் கூறிற்றிலர் நான்கினுமென்றவும்மையால்நாலாநாட்கூடிப்பிறந்தபிள்ளையற்பவயதில்மரித்தலாணிழிவுசிறப்பாயிற்று ஏகாரமீற்றசை நாலாநாட்டொடுத்துப் பன்னிரண்டு நாளீறாகஇருதுவுண்டாகில்அற்பாசமனம்பண்ணினவர் சுத்திசெய்யுமாறுபோலச் சுத்திசெய்க அப்பாலுமிருபதுநாளுக்குமேற்காலத்தில்வியாதியின்றியிருதுவாகில்மூன்றுநாளாளுசமுண்டெனவறிக (௰௩)

சிறப்புவிதியுணர்த்துகின்றார்

அந்தணர்க்கைந்தா நாளே யன்றியர்க்கு நான்குமல்லாவைந்தா நியுமா மமவாசியாதி, வந்துற்றேனமருவற்கவவற்றுள் ஐந்தவத்தை மதித்துவசிக்கின்றவரமுடையானேயாகில், அந்தணனுமைந்தா நாளன்றேபென்மந்திரத்திலா குரியுஞ்செய்கபழியகன்றிடவேயுமிந்து, பைந்தொடியைத்தவம்பண்ணுன் பரிசியாநிற்பதைக்கவொருங்கெற்பத்தைவதைத்தபழிப்படுவான் *

எ-து. தேவகன்மத்திலும்பிதிர்கன்மத்திலுமைந்தா நாளிருதுவானமாதர்க்குச் சுத்தியென்றுவசனமுண்டாதலாற்பார்ப்பாரும்பூசுராராகையால் ஐந்தாநாள் அந்தணர்மாதரைக்கூடவென்றார் பற்றாவுக்குநாலாநாட்சுத்தியென்பதனுன்மற்றையர்க்குநாலாநாட்கூடவெனக்கூறியது இந்நாள்களில்அமவாசிமுதலியவாகாதநாள்கள்கூடிற்றீண்டாதொழிக-ஞ-ராடியபின்விராதுளானுங் கருவயிற்றுறூஉங்காலமாதவிற்பிரியப்பெருன்பரத்தையிற்பெயர்வோன் என்றதனுற்காந்தன்விரதங்களைத்தொடுத்துத்தவசுபண்ணிக்கொண்டிருப்பானுகிலவ்வந்தணனு மைந்தாநாட்சேரத்தகுப்படிச்சேராதகுற்றம்போம்படிக்குவிதிவழிமந்திரத்திஞலேயாமஞ்செய்க தவசுபண்ணுமன்மாதரையுமக்காலத்துஉள்ளுரிலிருந்து அவளைத் தீண்டாதிருப்பாஞகிற்குழந்தைப்பிள்ளையைக்கெற்பத்தில் வதைத்தகுற்றத்தை யடைவனென்றவாறு (௰௪)

ஆகாதென்றகாலங்களிற்கூடல்முதலியவற்றிற்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

விலக்கியகாலங்களிலும் புணர்ந்தாரோலயுதம் விளம்பிடுக பிரணவமேலோரெழுத்தகுசல்லார், மூலத்துடத்தைப்பகற்பொழுதின் முயங்கிடினுமிங்கமுறையறைகபசுப்புணர்ச்சிமுதலானநோக்கின், அலற்றவிரப் பகலுறங்கினகோரமொரு நூற்றெட் டறைந்திடுகவரிவையார்தம் போகத்தை யணித்தே, சொலத்தொடங்கிச்சிலர்கேட்டகோடமறத்தனக்குச் சொல்லிடுகநூற்றெட்டுத்துரிசுடனேதுடைப்பார். *

எ-து. பிராமணர்முதலியமூவருமாகாதென்றநாளிலொருத்தியைக்கூடினராகிற்பிரணவத்தைப்பதினாயிரமுருச் செபிக்க குத்திரராயிற் பஞ்சாக்கரத்தை யம்முறை செபிக்க பகலின்மாதரைக்கூடிஞல்முற்கூறியமுறைமையே செபிக்க அறியாமற்பசுமுதலியபுணர்ச்சியைப்பார்க்கினும்பகல்நித்திரைசெய்யினும்அகோரத்தைநூற்றெட்டுருச்செபிக்க சிலபேர்கள் இரவிற்றங்கள்கலவியிற்கூடினவார்த்தையைத்தங்களிலேபேசியிருக்குமதனையாதொருவர் விருப்பத்துடனே கேட்டாராகிலக்குற்றம்

போம்படிக்ககோரத்தைநூற்றெட்டுருசெபிக்க பாவத்தை யுடனே போக்கவேணு மென்றுகருதமுர்த்தமர் எ-று- து ரீ சு- பாவம். (௰௫)

பரதாரமுதலியவற்றைத்தீண்டிற்பரிகாரமுணர்த்துகின்றார்

பரதாரந்தனைவேசிதனைவிடலிதனையும்பரிசித்தான்மோகத்தாற்பறைநத் துடனுந்தெரிந்தே, யொருநாளுமிரத்துடனையும்பதினாயிரமுருச்சரிக்க வகோரத்தைக் கன்னிகைதோளொன்றி, லிருகுணித மிணங்க வினமில்லா னாக்கண்ணேரிச்சைபுறப்பார்க்கிலொருசதமுறவே யியம்பக், குருமனையை க்குணதோடமுறப்பார்த்தகொடியான் கூறிடுகசாதத்தையொருநூறுகுறி த்தே. *

எ-து ஒருவனுடையபெண்சாதியையும் பொதுமடவாராகிய வேசியைய ம் புருடனிருக்கவும்புறத்திற்சோரமாகத்திரிகிறவிடலியையுமாசைமிகுதியாலொ ருகாற்றீண்டினனாகில் அய்யோவிப்படிசெய்துவிட்டோமேயென்றுடனுநடுங்கித் துக்கித்தப்பின்புதெளிந்தகோரமந்திரநூற்றெட்டும்பதினாயிரமுருச்செபிக்க. கன் னிகையைத்தீண்டினனாகில்முற்கூறியதிலிரட்டிசெபிக்க. இனங்குறிக்கருகமில்லா தவர்களைக்காமவிகாரத்தாற்பார்த்தானாகில்வாமத்தைநூற்றெட்டுருச்செபிக்க, பிராமணர்முதலியநாலவருந்தங்கள்தங்கள்பாரியைப்பற்றத்தகுமொழிந்துதமக்க ன்னியமானமாதனாயொருநாள்விகாரத்தாற்பார்க்கிற்பட்டினியிருந்து பிராமணர் நூற்றெட்டுமனாயர்முதலானோர்நூறுநூறேற்றியும்வாமதேவத்தைச்செபித்துசன்னி தியிற்செபிக்க, வாமதேவங்குய்யத்துக்குகிட்டாதாவாயிருக்கையால்அம்மந்திரங் கூறியதெனவறிக, குருமனையைவிகாரத்தாற்பார்த்தபொல்லாதவன் சத்தியோ சாதத்தைத்தியானம்பண்ணிநூறுருச்செபிக்க எ-று. ருத்திராச்சிக்கும்வாழ் க்கைப்படுமுன்னிருதுவானவளுக்கும்விடலியென்றும்பெயர்சொல்லப்படும். (௰௬)

நயிட்டிகப்பிரமசாரிக்குப்பரிகாரமுணர்த்துகின்றார்:

உணாயாதேவிரதியரிவையர்பெபருமாருவாரன்றுதேகனவினவொடு ம்புணர்ச்சியுறினும், வெருவிவிபனீர்மூழ்கியுணலொழிந்ததிரத்தைவிள ம்புகநூறெழுகின்று நீர்விரியத்தைவிளக்கிற், சுமிருமலார்தோணினையிற் சொல்லுகநாலுநூறுதுயக்கமறவாமத்தைச்சொல்லிடுகவிருநூறு, ரிரவினினை யாணாவெணிபிறக்கினன்விரியத்தை யினவியோனியைபரிணமிற்னாயுதமெ னுவார். *

எ-று. விரத்தனானவன்மாதர்பெயரையுமுரையாதவர்கள் வடிவையுமனதிற் கருதாதிருக்கையிழந்தவனின்சனவர்களுடன்கூடி ஞானிகளிற்பயப்பட்டக்குறம் போம்படிக்கு நல்லசிவதீர்த்தங்களிலுதயகாலத்தில் முழுகிபுபவசியாயத்திரத் தைநூறுருச்செபிக்க, சிக்கழிக்குமிடத்தாலுமம்முறையேசெய்க, சுருண்டமயிரினை யுடையமாதரைக்கூடவேணுமென்று நினைவிலுற்பகலில் வலியவீரியத்தைவிட்டா லுதிலறியமபத்தருஷின்றிவாமதேவத்ததை காணுருச்செபிக்க, வாமதேவத்தை ச்சொல்லியவேன்பதிருபாலுங்கூட்டிக்கொள்க, இராத்திரிபெதும்பைமுதலிய பருவத்தையுடையமாதரைக்கூடவேணுமென்றே கருதிவலியவீரியத்தைவிட்டாலு தில்வாமதேவத்தையிருநூறுருச்செபிக்க, சாதியிற்குழ்ந்தமாதரைக்கூடில் அகோ ரத்தைதப்பதினுயிரமுருச்செபிக்க எ-று. ஈனயோனியென்பதுவாழ்க்கைப்படுவ தன்முன் ✠ ஆசாரவைகல்யஞ்செய்தவள்யோனியையெனவும்பெறும். [டுஎ

நயிட்டிகப்பிரமசாரிபோகத்தில்விருப்பமுறிலந்த
விரதத்தைவிதிப்படியேமுடித்துவிவாகஞ்செய்யா
விடத்துக்குற்றமுணர்த்துகின்றார்.

புரிந்தனனேற்போகத்தைவிரதத்தைநூன்முறைபுகன்றமுறையுறவிறக்கிப் புனரிவைவையவிதியாற், றிருந்தமணஞ்செய்தனைகசெய்யாதிவ்வாறுநீண் டிபிடிற்பெரியவையனைத்தனை நகிறையுடலி, னிரந்தமாபிறனைத்தனைத்தும் வாருடமுறபக்கொடியநிரயத்தினழுந்திடுவனிற்றினனுவெனைத்தும், வருந் திடுவனவ்வனவவருடமுமுற்றிடவேமற்றிதற்குப்பரிகாரம்வாக்கியத்துளதி தே. ❋

எ-து. நயிட்டிகன்போகத்தின்கட்கருத்துற்றாலாகமங்களிற்சொல்லிய படியேயாசாரியனிடத்துச்சென்று எனக்குப்போகத்தினிச்சையென்றுசொல்லி யந்தவிரதத்துக்குண்டானவடையாளமாகிய சடைசிகாமணிமுதலானவற்றைப் பஞ்சாசனமென்று மண்டலமிட்டவர்சன்னிதியிலாகமத்திற்சொன்னபடியதனை யிறக்கிப்பின்பாசாரியனானவனவனைமுழுகச்சொல்லியவனுக்கிரண்டுவெள்ளைப்பு டைவையைக்கொடுத்துப்பதினுயிரமுருவகோரத்தைப்பரிகாரமாகச்செபிப்பித்து அவனையழைத்து நீகிரகஸ்தனாயிருவென்றனுமதிபண்ணவவனும்விவாகம்பண்ணி க்கூடுக, இப்படிவிரதத்தையிறக்காது மாதருடன்கூடுவனாகில்அந்தப்பிரமசாரியு டலில்வளர்ந்தஉரோமமெத்தனையுண்டத்தனைவருடமுமஃதல்லாமலவனுத்தானன

✠ ஆசாரவைகல்யம் - ஒழுக்கக்குறைவு

ம் பண்ணினதிருநீற்றிலணுவெத்தனையுண்டவ்வளவு வருடமுங்கோடிதாகியஞாள ரவமுதலானநாரகத்திற்கிடந்தமூர்தவனுரலா லீசுவையன்றிபிரதற்குவேறெருந்வ்வி யாகமங்களிற்பரிகாரமில்லை எ - று (யஅ)

பவுதிகப்பிரமசாரிபாதாரகெமனஞ்செய்யி
ற்பரிகாரமுணர்த்துகின்றார்.

பவுதிகனேமோகத்தாற்பரதாரந்தன்னைப்பரிசித்த நயக்கமறப்பார்த்தறி ந்துநெஞ்ச, முபவசியாயோங்காரமோரிலக்கமுறவேயுச்சரித்தாயாமவினை யினைப்புரிகவுணர்வா, லவடீனயேயறிந் நும்பின்னணைந்தானேயாகிலவனுக் குப்பரிகாரமாகமத்துமில்லைச், சுவையுறவேயவள்சொல்லைக்கேட்டானே யாகிற்றுயக்கமறவாமத்தைச்சொல்கவொருநூறே. *

எ - து பவுதிகப்பிரமசாரியானவன்சுகதுக்காதிகளிலுடையமோசத்தாலற வுமயங்கியொருவன்பெண்சாதியைத்தீண்டினானுகில் அக்குற்றநீங்கநம்முடையவ நிவிற்பொல்லாங்கினுலேயிப்படிவந்துவிட்டதென்றுமனதில்மிகவுஞ்சலித்துப்பர வசனுபவாசஞ்செய்துபிரணவத்தைநூறுயிரமுருச்செபித்துப்பிராணுயாமத்தை நூற்றெட்டுப்பண்ணில் அபுத்திபூருவமாகச்செய்தகுற்றம்போம், புத்திபூருவமா கவவளைப்பல நாட்கூடினானுகிலதற்குப்பரிகாரமாகமத்திலுமில்லை, விருப்பமுற விகாரத்தாலவள்சொல்லும்வார்த்தையைக்கேட்டிருந்தானுகிலக்குற்றம்போம்ப டிக்குவாமமந்திரத்தைநூறுருச்செபிக்க எ - று ஆகமத்தும்மென்றவும் மையால் வேதாதியிலுமெனவறிக. [யகூ]

புலைச்சிமேலோர்மனையிற்புகுந்தாலுமவள்கை
யாலருந்தினாலும்பரிகாரமுணர்த்துகின்றார்

புன்புலைச்சிமனைபுகுந்தாற்புத்தியிழப்பாகிற்போக்கிடுகமட்பாண்டமி ற்புனிதம்புரிக, வென்செய்கோமெனவிரங்கித்தற்புருடமெண்ணணிபியம்புக வையாயிரமுங்கிருச்சரத்தோடினி, தன்கையிலுலவியாதுதானெருநாள ருந்திற்றப்தகிருச்சரத்தயுதஞ்சாற்றிடுகவகோரம், அன்புடனேயாண்ந்து மமலனணிமுடியினுட்டியதுதனையருந்திற்புன்புலைபோயறுமே *

எ - து பொல்லாதபுலைச்சியானவள்ஒருவன்வீட்டிலேயவளின்னுளென்றறி யாதிருக்கப்புகுந்ததுண்டானுலக்குற்றம்போம்படிக்கு மண்பாண்டமானதெல்லா வற்றையும்புறம்பேயெடுத்தெறிப்போட்டுமுழுகிக்கிரகத்தைக்கோமயகோசலத்தாலே

சுத்திசெய்யுமுறைமையிற்சுத்திசெய்க, இக்குற்றத்தையெப்படிப் போக்கிக்கொள்வோமென்றிரங்கித்தற்புருடத்தைத்தியானித்து ஐயாயிரமுருச்செபித்து உடனே கிருச்சரத்தையுமியற்றிலக்குற்றநீங்கும், அந்தச்சண்டாளிகையாலேயபுத்திபூருவமாகவொருநாட்பொசிக்கிலப்புன்மைநீங்குதற்குத்தப்தகிருச்சரத்தையுமியற்றிஅகோரமந்திரத்தைப்பதினாயிரமுருச்செபித்துச்சிவனுக்குப்பஞ்சகெவ்வியத்தையாட்டிவித்தந்தச்சேடத்தைப்பொசித்துபவசியாயிருக்கிலக்குற்றம்போம் எ-று உய

இதுவுமது.

அறிந்துமொருநாளவள்கையருந்தினனேயாகிலவளைகையகிருச்சரமு
மியற்றிடுகவடைவே, சிறந்தவுருவாமத்தைச்சித்தத்தின்வைத்தேசெப்பிடு
கவபுதாமுறைவிரதமுஞ்செய்திடுக, வறிந்தவள்கையருந்தியதுமிரண்டுமூன்
றுகிலநிகமறிந்தியற்றிடுகவப்பாலுமருந்திற், பிறிந்திடுவதலப்புன்மைசண்
டாளனாகிப்பிறந்திடுவன்முன்னிலைமையருந்துமுறைபிழைத்தான். *

எ-து பறைச்சியென்றறிந்துமொருநாளவள்கையாலே பொசித்தானாகில் அக்குற்றம்போம்படிக்குச்சாந்திராயணம், பராகம்பிரசாபத்தியந்தப்தகிருச்சரம் அதிதபனம், எனக்கூறியபஞ்சகிருச்சரங்களையுமடைவேயியற்றிச் சிறப்பிலையுடையமாதர்வதனம்போன்றிருக்கிறவாம தேவமூர்த்தியைத்தியானஞ்செய்து பதினாயிரமுருச்செபிக்கசெபமுடிந்தவாறேவிரதத்தைமுடிக்க, இன்றுமென்றறிந்திருந்து இரண்டுமூன்றுநாளவள்கையாலே பொசித்தானுமின்முற்கூறியமுறைமையிலேசெபமுதலியவற்றையதிகஞ்செய்க,விப்படியனேகநாளருந்திற்கன்மசண்டாளனாய்ப்புலையருக்கொருகாலுமிந்தப் பாவம்விட்டுநீங்காது, ஆதலவன் பூருவசாதியுடன்கூடிவரினுமிவனிப்படியருந்துகிற முறைபிழைத்தவன் முன்னுள்ளசாதியைவிட்டுச்சண்டாளனாவன் எ-று விரதம்-பின்னர்க்கூறுகின்றார் (உ௭)

வண்ணாத்திமுதலாயினார் - மனையிற்புகுதல்முதலி
யவைக்குச்சுத்தியுணர்த்துகின்றார்

வத்திரத்தினிருந்துவினையாற்றிடுவாளிலவண்ணாத்திதோற்பணத்திவ
லகாமகாரி.. யெத்தொகைபயிற்றிகுலத்தாரறியாதுமனைபினிணங்கிடினே
மங்பாண்டமெறிந்திடுகமண்ணாற், சுத்திசெய்கவிரகத்தைக்கோமயகோச
லத்தாற்சொல்லுகரான்மூன்றையாயிரமயுதமகோர, மத்தத்தாலறியாதேய
ருந்தினவேலொருகாலதைகபதினாயிரமுமைந்துறுமாயிரமும். *

எ - து நாலுவன்னத்துள்ளமாதர், இருதுவானபுடைவையைச் சுத்திபண்ணும்வண்ணாத்தி நீலவண்ணாத்திதோற்பணத்திபன்னுதற்றுவல்லமையையுடைய முச்சியமாதரிவர் முதலியவிழிந்த சாதியிற்றோன்றினவர்களும், அறியாமல வீட்டிற்பிரவேசித்தாராகில் மண்பாண்டத்தையெடுத்துப் புறம்பேபோட்டுமுழுப்புற்றுமண்கோமயகோசலங்களாலுங்கிரகசுத்திசெய்க, மூன் று நா ள் ச த் தியோசாதத்தையையாயிரமையாயிரமுருச்செபிக்க, அவளைப்பரிசித்தானாகிற்பதினாயிரமுருவகோரஞ்செபிக்க, அவளின்னாளென்றறியாமலவள்கையாலொருகாலசனம்பண்ணினானாகில் அகோரதனைப் பதினாயிரமுருச்செபிக்கிலக்குற்றம்போம் எ - று (௨௨)

இதுவுமது

நான்முறைந் நிம்முறைநவிற்றிக்கௌவியத்தையருந்தநாளிரண்டேவிருகுணிதநவிற்றிடுகவுமிந்தே, யூனுடையாளிருகுணிதமொருநாளைக்கியற்றவுண்டநம்பன்றனாகிலுணவினைபுமொழிந்து, நாணிராற் சாந்திராயணவிரதந்தன்னைநவிற்றுகமற்றுகார தோடநவை நணினு, நீணிலவுசடையமலற்காணேந்துமாட்டிடுநிசிவேலைதனிலருந்தவவலமெலாநீங்கும். *

எ- து. இப்படிமூன்றுநாளும்பதினாயிரம்பதினாயிரமுருச்செபித்துமுடிவிற்பஞ்சகௌவியத்தைப் பொசித்திருக்க அபுத்திபூருவமாக வவள்கையாலேயிரண்டுநாட்பொசித்தானாகில்முப்பதினாயிரமுருவகோரத்தைச்செபித்துப்பஞ்சகௌவியத்தைப்பொசிக்க, அவள்கையாலேயறிந்தொருநாட்பொசித்தானாகில்முற்கூறியதினிருமடங்குசெபிக்க, அறிந்துபொசித்ததுவும் பலநாளாகிலதற்கேற்பியேற்றிச்செபமுஞ்செய்ததின் முடிவிலுடேனுஞ் சுத்தசெலத்தாற் சாந்திராயண விரதத்தையனுட்டிக்க, யாதானுமோரிடத்திலேபொசிப்பிலுண்டான குற்றம்போம்படிக்குப்பிரகாசத்தையுடையசந்திரனைச்சடாமகுடத்திற்றரியாநின்றசிவனுக்குப்பஞ்சகௌவியத்தையாட்டி யதனையிராத்திரி பொசித்துபவசியாயிருக்க வதிலுண்டாகியகுற்றமெல்லாம்போம். எ- று. [௨௩]

முதற்கட்டொகுத்துப்போந்தசாந்திராயணமுதலிய விரதவிதியை யுணர்த்துகின்றார்

முதற்பக்கமுவைந்துமொன்றிரண்டென்றேற்றி முகந்துவல க்கரத்தாலேநீரருந்திமுறையா, லதறகபர பக்கத்தெவ்வொன்றுகுறைத்தே யருந்

துதலிலேசாந்திராயணவிரதமாகும், பதத்துணவுந்ருணவுமின்றிப்பன்னிரு நாட்பட்டினியேபராகமின்பிரா சாபத்தியந்தா, னுநித்தபகன்மூன்றாண்ம ற்றயாசகமுமோருமுன்றுருமூன்றுநிசியூண்முப்பகலனிலனுமாலாம் ✽

எ-து. பூருவபக்கத்துப் பிரதமைமுதலாகப் பதினைந்துநாளுஞ்சௌலத்தைவல துகையாலேயொவ்வொருசிறங்கையாக நாடோறுமேற்றியேற்றிப்பொசித்துஅப ரபக்கத்துப்பிரதமைமுதனுடோறுமோவ்வொருசிறங்கையாகக்குறைத்துட்பான ம்பண்ணிமுடிக்கிறது சௌலசாந்திராயணவிரதமெனவறிக உதகோதனமென்னுமி ரண்டினையும்பொசியாமற் பன்னிரண்டுநாட் சுத்தப்பட்டினியே யிருக்கை பராக மென்னுங்கிருச்சரமாம், ஆதித்தியனுதியாநின்றபகலிலே மூன்றுநாண்மத்தியான மொருநேரம்பொசித்தலு மதற்கடுத்த மூன்றுநாளொன்றுந்தொடாமல் அயாசக மாய்வந்ததைப்பொசித்தலுமூன்றுநாளிராத்திரியொருநேரம்பொசித்தலு மூன்று நாள்வாயுவேயாகாரமாகப்பொசித்தலுமாகப் பன்னிரண்டுநாளுங்கடமத்தோடிரு த்தல்பிராசாபத்தியமென்னுங்கிருச்சரமாம். எ-று. (உ௪)

இதுவுமது.

அருந்துகவாரமுற்றேயமோர்மூன்றுபகலுளமுனிகழுமாவின்பாலரு ந்துகமுப்பகலு, மருந்திடுகவழனிகழுமானெய்முப்பகலுளருந்தாதேயா தேனுமாகபகன்மூன்றுள், வருந்துதலிம்முறைதன்னின்முன்னன்குநின முமநித்திடுகதத்தகிருச்சரமென்றேமதியோ, மருந்துதன்முப்பலப்பான் முனைந்தாறுநினமுமநித்தபனமரமென்றேயறிககரிசறுப்பார். ✽

எ-து தாஞ்செய்தபாவத்தைப்போக்கவேணுமென்றறிந்தவர்,வெந்நீர்மூன்று பகலுஞ்சுடுகிறபசுவின்பால்மூன்றுபகலுஞ்சுடுகிறபசுவினெய்யைமூன்றுபகலுமரு ந்துக வொன்றும்பொசியாமல்மூன்றுநாளுமிருக்க,இப்படியேவருத்தமுற்றுப்பன்னிர ண்டுநாளிருப்பதுதத்தகிருச்சரமெனவறிகஇருபத்தொருநாண்மூன்றுபலப்பசுவின் பாலைப்பொசிக்கிறதுதத்தபனமென்னுங்கிருச்சரத்தின்முறைமையென்றறிக எ-று

வியாதிமுதலியவற்றால்இதைநடாட்டித்தற்குஅசத்தராயிற்பிராசாபத்தியத்துக்கொ ருபசுவுஞ்சாந்தபனத்துக்கதிகிரட்டியமதிகிருச்சரம்பராகந் தத்தகிருச்சரமிதற் குமும்மூன்றுபசுவுஞ்சாந்திராயணத்துக்கெட்டுப் பசுவுங்கொடுக்க, தரித்திரனுகி லதற்குமூன்றுபசுக்கொடுக்க, பசுக்கொடுக்கமாட்டாதார்கோமூலியம் பன்னிரண் டுபணங்கொடுக்க, இம்முறையேகொடுக்கிலந்தந்தவிரதமனுட்டித்தபலத்தைக்கொ டுக்குமெனவறிக. (உரு)

திருவிழாமுதலியவற்றிற்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

தேவனதுதிருவிழவந் சேவிக்கயாருந் திரண்டதிரு வீதிதனிற் றீண் டார்தீண்டிடினும், பாவமில்லைப்பரமேசன்பதிவணங்கச்செல்லும் பரிசினுமா மகந்தனினும்பணிமொழிதன்பரணி, மேவியிடும்விவாகத்தும்வெண்பொடி ப்பூசிடுக விரிபுனலின்மூழ்கிடுக மற்றையன வேலைப், பாவியரைப்பார்த்தா னேலகோரசதாட்டகத்தைப்பகர்ந்திடுகபரிசித்தான்பகர்கபுனல்படிந்தே. ※

எ-து. சிவனது திருவிழாவிற்றிருவீதியின்க ணன்மாக்களை நெருங்கிச் சேவை செய்யுமிடத்துத் தன்சாதியாயினும் பிறசாதியாயினுந்தீண்டில்அக்காலம் பரிசன தோடமில்லை சிவஸ்தலதரிசனத்துக்குப்போகுங்காலத்தும்அக்கினிட்டோமமுதலி யயாகத்தின்கண்ணும் பார்ப்பார்முதலாயினூர் விவாகஞ்செய்யுங்காலத்துந்தீண்ட அருகரல்லர்தோர்தீண்டினக்குற்றம்போம்படிக்கு விபூதியுத்தூளனம்பண்ணுக, இ ங்ஙனங்கூறியகாலங்களின்றியொழிந்தகாலங்களிற்பரிசனமாகிற் றடாகமுதலிய வற்றின்மூழ்கிற்குற்றம்போம், அதிபாதகமுதலிய பாவங்களைச்செய்த பாவிகளைப் பார்த்தானாகில்கோரத்தைநூற்றெட்டுருச்செபிக்க, அவர்களைத் தீண்டினானாகில்மு ழுகியகோரத்தைநூற்றெட்டுருச்செபிக்க. எ- று. (௨௬)

அதிபாதகாதியரன்னமருந்திற்குற்றமுணர்த் துகின்றார்.

அருந்தினரேலக்கணமேபதிதரானவறிகவதிபாதகானமமரர்ப்பழிப்பா ரன்ன, மருந்தினரேலொருமாதமுறப்பதிதராவரபவாதர்பிசினர்பிறையற்று ளென்றிவர்சோ, றருந்தினரேல்வருடமுறப்பதிதரானவறிகவஞ்சாச்சூத் திரர்கரிசுக்களியில்லாவரையர், பொருந்தமணம்புணர்நாண்முன்புரிவார். புல்லரிவரொனுமிவர்தமன்னத்தைப்புசித்தார்கடாமும். ※

எ-து சிவநிந்தைபண்ணினவர்களன்னத்தைப்பொசித்தவர்களந்நேரமேபதிதரா வர்கள்தேவர்களைத்தூடணஞ்சொன்னவர்களன்னத்தையொருமாத மிடையறுது பொசித்தவருமந்நேரமேபதிதராவர்கள்,ஒருவர்சொல்லாத வார்த் தையைச்சொ ன்னான்றுபடுத்தூறாகச்சொன்னவர்களன்னமுமிராசகரத்துடனேகோட்சொல் லுகிறவரன்னமுமலடியன்னமுமொருவருடமிடையறுதுபொசித்தார்களாயிலவ ர்கள்பதிதரானவறிக,பாவத்துக்குப்பயப்படாதசூத்திருடமையையுமான்மாக்க ளிடத்திலிரக்கமில்லாதவிராசாக்களுடைமையையும்விவாகம்பண்ணுவதற்குமுன்

ளாசப்பிராமணர்மாயெசுரர்க்கென்றுசேர்த்தம்பண்ணின உடைமையையுமுயர்ந்தசா
தியாயிருந்திந்தசாதியாயிறம்பராயத்தில்லாதவர்களாயினவர்களுடைமையை
யும் ஒருவருடைமையையுமுதுபொசித்தவர்களும்பதிதராவர்கள். எ - று (உஎ)

இதுவுமது.

கன்னிகையைவிற்பார்கள்பரதாரந்தன்னைக்காமுறுவார் மனைவிதுறைக
ளாடறிந்துந்துறவார், பொன்வினைசெய்கொல்லர்மரக்கொல்லர்பொருட்
பெண்டிர்புலைவினைஞர்மதுவினைஞர்புரந்தாரைமறந்தார், தென்னனவேபா
டுமவராடுமவர்வாளாற்சேவிப்பார் பூவிற்பார்செக்கார்சொக்கிடுவார், சொன்
னமிவரெழுவாயரன்றுதியருந்தேவிழுக்கானவனமுளத்தையழுக்காக்கிவி
டுமே. ௸

எ - து உத்தமமாகியபிரமமுதலியவற்றிலொன்றும் கன்னிகையைத்தான
ஞ்செய்யாமற்பணம்வாங்கிவாழ்க்கைப்படுத்துமவரும் பரதாரங்களையிச்சிக்குமவருமனைவிபிறர்முகம்பார்க்கவவளைநீக்காதுவாஞ்சித்துக்கூடுமவரும் பொன்முதலியபஞ்சலோகங்களைப்பணிபண்ணுந்தட்டார்தச்சர்முதலாயினரும் பரத்தையரும் கூட்டுவாணியருங்கள்வாணியருஞ்செய்நன்றிகொன்றினவரும்பலரையுமழகாகப் பாடித்திரிகிறவருங்கழைக்கூத்தாடியரும் வாளாற்சேவகஞ்செய்கிறவருநந்தவனத்துப்பூவையெடுத்துமுடிபூவுக்குவிற்கும்பூவாணியருமெண்ணெய்வாணியருநித்திரையிற்சொக்குப்பொடிபோட்டுக்களவுசெய்பவருமாகியவிவர்கள்முதலாயினோரன்னமுதலியவற்றைவாங்கியொருக்காலும்பொசிக்கக்கடவனல்லஇவர்களன்னங்குற்றமுள்ளவாதலாலதனைப்பொசித்த வான்மாக்களுக்குச்சித்தசுத்தியைப்பண்ணுமற்பாவத்தையுண்டாக்கும். எ - று எழுவாயர் - எ - து - கன்னர் - கொல்லர் - வண்ணார் - குருவிக்குநினைசெய்வோர் - பாஷாண்டிமுதலாயினோரெனவறிக. (உஅ)

அதற்கோர்புறனடையுணர்த்துகின்றார்.

அழுக்குளமேபாவத்தையாக்குதற்குத் துணையுமவ்வினையாளரையத்
தினைழுங்கியழுந்துவரோ, யிழுக்கானமொழித்தவரோயிச்சிப்பார்சுகிர்தமே
ராடுவர்பரலோகமின்புறவேயிருப்பர், வழுக்காயமொழிக்கமனில்வந்துத
வம்புரிந்துமறந்திடுவர்பிறப்பினையுஞ்சிறந்திருப்பர்சிவன்றாள், சழக்கான
மனத்தாரோசடலத்தைப்பேணித்தமக்குவருந்துயரத்தைச்சாற்றினுந்தாங்
கேளார். ௸

எ - று நின்மலனாகியசிவன்றனது கிருபையினாலேயான்மாக்கள் செய்த பாவத்தைப்போக்கிமோக்ஷமடைதற்பொருட்டுத்தேவர்களுமசுரர்களுங்கூடியமு தங்கடைகிறகாலத்திற் பாற்கடலிற்றோன்றியான்மாக்கடுக்கத்தைப்போக்காநின் றபயோதரத்தையுடையமாதாவே நான்தருகிறபுல்லைநீகைக்கொள்வாயாகவென் றுவடமொழிப்பொருளைச்சொல்லுக, அம்மொழிக டெரியாரவ் வடமொழி மந்திர த்தைச்சொல்லியப்புல்லையருத்திடுக. நந்தைமுதலியபசுக்களின்பெயராலருக்கி யங்கொடுத்து மந்திரத்தாலருச்சித்துவலமாகவந்துவணக்கஞ்செய்து முற்கூறிய முறையேபான்முதலாயினகொண்டுபிரமகூர்ச்சந்தாபித்துஅதனைச்சிவனுக்கபிடே கஞ்செய்யிலவன்செய்தபாவமெல்லாம்போம் எ - று (அசு)

மனவாக்குகளால்வரும்பாவம்போம்படிபரிகாரமுணர்த்துகின்றார்.

சங்கரனைச்சதாசிவனைத்தரித்திதயமலரிற் றன்புனலுளாழ்ந்திருந்துவாயுயிரைத்தடுத்து, மங்கமறுதோடமெனச்சிவகாயத்திரியைமானதத்தாலட்டசதமுச்சரிக்கமாயும், பொங்கியபொல்லாங்கொன்றுவாக்கினதுபுன்மைபோமென்றுவாக்கடக்கப்பொறியழலையோம்பி, மங்கையொருபங்கனாமலர் சூட்டியென்றன்வாக்கியன்றதோடத்தைமாற்றிடுவாயெனவே ✽

எ - து இதயகமலத்தின்கட்சதாசிவமூர்த்தியைத்தியானஞ்செய்துவாயுவைமடித்துக்குளிர்ச்சியினையுடைய சலத்தின்கண் அகமருடணமாகமூழ்கியிருந்துச்சிவகாயத்திரியைநூற்றெட்டுருமானதமாக மூன்றுநாட்செபிக்கில்மனத்தாலன்னியமனையாட்டனையனையுமாதரவுகூரவென்றுமுன்னுருவதுபாவவியலிற்கூறிய நால்வகைக்குற்றத்திலொன்றுபோகும், மூன்றுநாளுமவுனியாய்ச்சிவபூசையோமத்தைப்பண்ணிச்செபமுமுற்கூறியமுறையேசெய்து சுவாமிநான்வாக்கினாற்செய்தகுற்றத்திலொன்றுபோக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளில் அழுகையுங்கோளும்பொய்யுமபலபவாதந்தானுமென்றுமுன்னுருவதுபாவவியலிற் கூறியநால்வகைக்குற்றத்திலொன்றுபோகும் எ - று (அஎ)

காயத்தினால்வரும்பாவமுந்தும்மல்முதலியவற்றால்வருங்குற்றமும்போம்படிபரிகாரமுணர்த்துகின்றார்.

கழிந்துவிடுங்காயத்திற்கரிசொன்றுவினையக்கட்டுணாக்கைநான்மூன்றுவிட்டுணாலுங்கடுக, வொழிந்தறலைச்சந்திதொறுமுண்டுமடவார்தோளொன்றுதேசிவனடியையொருப்பட்டேநினைக்கி, லிழிந்த விருமற்றும்மல்பொருமலிவையெழினேயேழுமூன்றோங்காரமுறவியற்றுகவாயாம, மொழிந்தவர்சூத்திரர்தம்மைச்சூத்திரரோமொழித்தேயுச்சரிக்கவைந்தெழுத்துமைம்முகமாமுயரியே. ✽

எ - து மூன்றுநாளுபவசியாய்ச் சந்தியாகாலங்கடோறுமூழ்கி நியமஞ்செய்து சலத்தைப்பொசித்துமவுனியாய்மாதர்கலவியைப் பொருந்தாமற்சிவனைத்தியானஞ்செய்துமுற்கூறியமந்திரத்தையுருதியாகச்செபஞ்செய்யின் ஆறுவதுபாவவியலில், அழுகையுங்கோளுமென்றகவியுள்மற்றையமனையாடோளைத்தழுவுதலாதியானகாயத்தினால்வருங்குற்றநாலிலொன்றுபோம், பொல்லாதெனறுசொன்னவிருமல்முதலாயினதுண்டாயினக்குற்றம்போம்படி யிருபத்தொருபிரகாரம் பிரணவத்தையுச்சரித்துப்பிராணாயாமஞ்செய்க, சூத்திரரானவர்கள்சதாசிவமூர்த்தியைத்தியானஞ்செய்து பிரணவநீக்கிப்பஞ்சாக்கரத்தையுச்சரித்துப் பிராணா

யாமஞ்செய்க. எ - று (அஅ)

மேற்கூறுகுத்துப்போந்தசதாசிவநாயனார்க்குத்தி யானமிரண்டுவிருத்தத்தாலுணர்த்துகின்றார்.

உச்சிமுகமீசானமொளிதெளியபளிங்கேயுத்தரபூருவதிசையைநோக்கியுறுமுகந்தே, நிச்சயித்தமுகத்தின்கீழ்ப்பூர்வதிசைநோக்கிநிகழுமுகந் தற்புருடங்கோங்கலர்போனிறமே, யச்சுறுத்துமகோரமுகமறக்கரிதுகராளமவிழ்தாடிவலத்தோளிற்றென்னோக்கியமருஞ், செச்சைநிறத்தெரிவைமுகமிடத்தோண்மேல்வாமஞ்சிறுபுறத்தின்முகஞ்சத்தியோசாதந்திகழ்பால். ௯

எ - து ஈசானமுஞ் சிறுபிள்ளைமுகம்போன்றுசுத்தப்படிகமயமாயனவரதமுமீசானதிகையைப்பார்த்துமேனோக்கினதாயிருக்கும்இங்ஙனங்கூறியமுகத்தின்கீழ் கோங்கம்பூநிறம்போன்றதற்புருடம்யௌவனத்தையுடையவர் கண்முகம்போன்றுகிழக்குமுகமாய்விளங்காநிற்குங் கண்டவர்களுக்குப்பயங்கரமுமாய்க்கீழ்நாலாநின்றதாடியையும்புறப்பட்டவெயிற்றினையு முடைத்தாய்க்கறுத்துவிருத்தர்முகம்போன்றவகோரமுகம்வலதுதோளின்மேல்தெற்குமுகமாகவிருக்கும்,வெட்சிப்பூநிறம்பெற்றுமாதர்வதனம்போல அவர்களாபரணத்தையுமுடைத்தாய்வாமதேவமுகமிடத்தொளின்மேல்விளங்காநிற்கும், பிடரியில்மேற்றிசையைப்பார்க்கவிருக்கிறசத்தியோசாதமுகம் இராசாக்கள்முகம்போன் றுபால்நிறம்பெற்றிருக்கும். எ - று சிறுபுறம் - பிடரி (அகூ)

திருவுருவந்தெளிபளிங்குசடாமகுடத் திகழ்சிறுபிறையு முவைந்து திருநயனம்வலப்பாற், கரதலத்திற்சத்தி யபையஞ்சூலமீண்ட கட்டங்கந்தமருகமுமற்றையிடக்கரத்தின், வரதமுமாதுளங்கபலம் போகிசெபமாலைமணமலிநீலோற்பலமுமுடையர்வயதிரெட், டுருவிரட்டியுறுப்பிரண்டுபதம்பதுமாதனந்தானுறவிருப்பர்சதாசிவர்தத்துவதவிசினுகந்தே.

எ- து. படிகம்போன்றதிருமேனியையுஞ்சடாமகுடத்திற்கொன்றைமாலையிளம்பிறையையும்பதினைந்துதிருநயனமும்வலப்புறத்துத்திருக்கரத்தில்வேல். அபயஞ். சூலம். மாத்திரைக்கோல். தமருகமிவைகளையுமிடப்புறத்துத்திருக்கரத்தில்வரதம். மாதுளம்பழம். பாம்பு. செபமாலை. நீலோற்பலம். இவைகளையுந்தரித்துப்பதினறுவயதையுமுப்பத்திரண்டுறுப்பையுமிரண்டுபாதத்தையுமுடைய சதாசிவதே

வாயவருக்குச் சதாசிவதத்துவத்திற் புத்திகாரியமாகத் தன்மஞ்ஞானமுதலிய சிங்கக் காலிணையு மாயிரந்தளத்தையு முடைய பத்மமேயாதனமாக வெழுந்தருளியிரு ப்பர். எ-று. (௧௰)

லயாங்கத்திற்சதாசிவத்தியானமுணர்த்திமேற்போகாங்கபூசைசெ
ய்தற்குப்பிரமாங்கங்கண்மூர்த்தியாதலையைந்துசெய்யுளாற்பிரித்து
ணர்த்துகின்றார்

திருவுருவந்தெளிபளிங்கு திரிநயனம்பிறையுஞ் செறிசடையர்வலக்கரத்திற் றிரிசூலம்வரதங், கருதுகமற்றைய கரத்திற் செபமாலை யபையங் காருணிகர்க்கிசானர்க்கவர்தமக்குத் தக்கனிட்டர், திருவுருவங்கோங்கினலர் திரிநயனங்கரமுன்செப்பியதே திருநாமந்தற்புருடதேவர், வரியரவு மிளம்பிறையுஞ்சடைமுடியின்வைத்தார்மலரடியைமறவாதார்வல்வினையைமாய்ப்பார். ✽

எ-து. தெளிவிபடிகம்போன்றுமூன்றுதிருநயனத்தையுமுடையராய்த்திருச் சடாபாரத்தில் ஞானசந்திரனையும்வலப்புறத்திற்சூலம். வரதம். இடப்புறத்திற்செ பமாலை. அபயம். இவைகளைத்தரித்துக்கிருபையையுடையராயீசானதேவரிருப்ப ர், அவர்க்குத்தாழ்ந்திருக்கிறதற்புருடதேவர்கோங்கம் பூப்போன்ற நிறத்தையுமூன் று திருநயனத்தையும் வலப்புறத்தில் சூலம். வரதம். இடப்புறத்திற். செபமாலை. ய பையம். திருச்சடாபாரத்திலிளம்பிறையையுந் தரித்திருப்பர். இந்தமூர்த்திகளைத்தி யானஞ்செய்தவர்களேவலிதானவினைகளைப்போக்கினவர். எ-று. (௧௧)

கரியவுருவெரியசடைகபாலநிரைமாலை கராளமுகங்கவிழ்தாடிகண்மூ ன்றுவட்டங், கரதலங்களொருநான்குங் கட்டுரைத்தபடியே காட்டின முன் னிருநான்குகரமுமுளவொன்றே, வெருவியிடமருவலனாவெருட்டியவுக்கிர த்துவிக்கிரகாகோரமெனவிளம்புபெயருடையார், திருபதமுமொருபொழு துமறவாதேயெத்தியென்றுமவரிடர்வினையைப்பிடிப்பார்களென்றும் ✽

எ-து. வெளி - எரியசடையென்றது அக்கினிச்சுவாலை போன்ற குஞ்சியை யுடையசடை. கபாலநிரைமாலையென்றது பிரமவிட்டுணுக்கள்கபாலத்தை யொழு க்காக்கிக்கோத்தமுழங்காலளவாகத்தரித்த மாலை முன் உடனாருபடவென்றும் என்றும் திருவிருத்தத்திலெட்டுப் புயமாகத்தியானங்கூறினதை உரைத்துமென்ற லென்றதுந்தியாவிருத்தியால் இத்திருவிருத்தத்திற்கூறினார் [௧௨]

நேமொழியாளுமையென்னத்திருமுகமுந்தோடுந்நிலத்துதற்சிறப்பு
மிருளளகவிதச்செறிவும், வாமமெனுந்தேவர்க்குவாய்த்தனவேசெம்மை
வடிவுமவர்காதலங்கண்ணுதிதனில்வகுப்பே, சேமவுருத்திகழ்சங்கற்செ
டாமுடியிற்பிறையுந்திரிநயனங்கரதலங்கள்செப்பியமுற்படியே, நாமம்நு
சத்தியோசாதமெனநவின்றநாதற்குநயந்தவனாவினைக்கவினைநாசம். ❀

எ - து வெளி - மாதர்முகம்போலவாமதேவமிருத்தலாற்றேமொழி யாளு
மையென்னச்சிறப்பித்தார், சேமம் - இன்பம் - இவ்வின்பந்தானே திருமேனி
யென்க. [௧௩]

திருவுருவமிரதயர்க்குத்தவளமெனத்தெளிகவ்சேடித்தவுறுப்பனைத் து
ஞ்செப்பியமுற்படியே, திருவுருவங்கனகமெனச்சிரத்தினுக்குத்தெளிக
சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே, திருவுருவஞ்சிந்தூரமென
த்தெளிகச்சிகைக்குச்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே, திரு
வுருவம்வண்டினிறங்கராளமுகங்கவசஞ்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பிய
முற்படியே. ❀

எ - து வெளி (௧௪)

ஒவ்வொன்றேதிருமுகமுநேத்திரங்கட்குணரிலுடலொளியுமிரவிமதி
யுதாசனனைபொக்கு,மிவ்விரண்டேகரதலமும்வரமபையமவையுமிவ்விரண்
டேவிழியுமெனவெண்ணிடுகவெழிலார், செவ்வரத்தந்திருவுருவங்கரதலநா
ன்குந்திருநயனமொருமூன்றுஞ்சினத்திடித்தகுரலு, மிவ்வகையெல்
லாமுடையரத்திரனென்றியம்புமிவரடியையிரதயத்தினிருத்தினிடரிலையே ❀

எ- து. நேத்திரமூன்றுக்கு மொவ்வொருதிருமுகத்தை யுடையராய் முச்சுடர்
போன்றநிறத்தையுமிவ்விரண்டுதிருநயனத்தையும்வரதமபையமாகியவிவ்விரண்டு
கரங்களையு முடையராய் நேத்திரதேவர்கள் விளங்கா நிற்பர்கள், பிரகாசத்தையு
டையசெவ்வரத்தம்பூப்போன்றநிறத்தையு மூன்றுதிருநயனத்தையுங்கோபத்தினு
லேயிடிபோன்றதிருவாக்கினையும்வலப்புறத்திற்கமண்டலம். வேல். சூலம். மழு.பி
ரமதண்டம். இடப்புறத்தில். வாள். கேடகம். நாராசம். வில். செபமாலை. யிவை
களைப்பத்துக்கரங்களிலுந்தரித்திருப்பனென்றுதிவ்வியாகமங்களில் அத்திரமூர்த்தி
த்தியானஞ்சொல்லுமிவ்வத்திரமூர்த்தியை யிருதயத்திற்றியானிக்கிலிடர்களில்லை.
எ- று. ஏகாரம். தேற்றம். சிலவாகமங்களில்வலப்புறத்திற்சூலஞ்செபமாலையென

வுமிடப்புறத்திற்போலமுங்கமண்டலமுமெனவும்பேதமாகக்கூறும். (௧௫)

அகளமாகியசிவன்றனேயான்மாக்கள் போகமோக்ஷமடைகையின்
பொருட்டுச்சகளீகரித்ததென் றுணர்த்துகின்றார்

வாக்குரையாலறிவரியன்வாக்குணர்ந்தமனத் தா மதிப்பரியவரிவனையிலி யனாதிமலமுத்த, னேக்கிமலநோயாளர் போகவிதநுகர்ந்து நோயற்றுத்த ன்மயத்தைநோக்காதேநோக்க, நீக்கமிலாப் பஞ்சவித நிறத்துருவி னிகழ்ந் தானிலனிறுமவனுருவே நீங்கினதெனிலத்து, மாக்கையிலா னாக்கை யினை யாதரித்தானனுக்கட்கழுக்கறுக்கவல்லதறிவாரவனையாரே. ✽

எ-து. வைகரிமுதலியவாக்கினாலுமவ்வாக்கினாலுண்டாகிய வாகமப்பிரமாண ங்களினாலுமறிதற்கரியவனாய்ச் சாத்திரத்தினாலறிந்த மனத்தாலு மளவிடுதற்கரிய வனாய்த்தனக்கொருவருமொப்பில்லாதவனுமாயனாதியே மலத்தினின்றும் விடப்ப ட்டவனுமாயிருக்கிறசிவன் ஞானமாகியவியாதிகளையுடைய வான்மாக்களுடோறு ந்தன்னைத்தியானஞ்செய்து அபரபோகம்பரபோகமாகியபோகபேதங்களைப்பொ சித்துக்கண்ணுக்குப்படலம்போனவாறேபதார்த்தங்கள்விளங்குமாறுபோலவாண வாதியின்வாதையில்லாததற்சொருபத்தைப்பாராமற்பார்த்திருக்கவே ஆன்மசொ ருபம்விளங்கித்தற்சொருபம்விளங்கப்பஞ்சவன்னசொருபமாகிய அஞ்சுதிருமுகத் தினையுடையசதாசிவமூர்த்தியையதிட்டித்துக்கொண் டதிலேவியாபித்திருந்தான் எனவேயிவனையவிடத்தும்வியாபிக்கவில்லையோவென்னில்நாதமுதற்பிருதிவியீறான தத்துவங்களெல்லாமவனுக்குத்திருமேனியேயிங்ஙனங்கூறிய நாதமுதற்பிருதிவியீ றானதத்துவங்களோடும்விடப்பட்டுநிற்காதிருக்கையினாலேதனக்கென்னவொருவ டிவில்லாதவச்சிவன்றிருமேனிக்கொண்டதுயாதுகாரணத்தாலென்னிற்றன்னைத்தி யானஞ்செய்யுமான்மாக்களுடையசெனனமரணமாகிய குற்றத்தைப் போக்குகை யின்பொருட்டன்றித் தனக்கொரு பிரயோசன நிமித்தமன்று. அவன் திருமேனிக் கொண்டுவேதாகமங்களையருளிச்செய்யாதபோது அவனுடையமகிமையையார்தா னறிவார்கள். எ-று. (௧௬)

முத்தியினையடையக்கருதுமவர்க்கோருபாயமுணர்த்துகின்றார்

சேர்ந்திடுகசதாசிவனற்றிருவெல்லைவட்டந்தீவினையுந்தீர்ந்துசதாசிவபு ரியைச்செறிவார், சார்ந்திடுகவப்புரியுட்டமையுணர்ந்தார்தாளைத் தாமறிவ ரெம்பிரானிபுமருந்துமெனத்தம்மு, ளோர்ந்தவர்தமேவலினுக்கொருப்படுக

விருப்பாலுயிர்க்குயிராய் நின்றசிவனுள்ளொருமையுணர்ந்தே, நிர்ந்திட வேபசுபாசமூலமலமநுவுந்தேசிகனையதிட்டித்துத்திருவருளாற்புரிவன். ௬

எ - து காசிமுதலியதிருப்படைவீட்டிலியன்றதொன்றையடைந்து அந்தத்த லத்தில்நித்தியகன்மமுடித்துச்சிவாலயச் சேவைபண்ணி யந்தத்தலத்திலிருக்கில வர்கள்கன்மவாதையின்றிச்சதாசிவபதத்திலுண்டாகியபோகத்தைப்பொசித்தி ருப்பர்கள், அந்தத்திருப்படைவீட்டில்வாசமாயெழுந்தருளியிருந்து தம்மையுணர் ந்தஞாதாக்களைச்சென்றடைந்துமாதாவானவள்குழந்தைக்குவியாதியின்னதென்ற றிந்துமருந்துகொடுக்குமாறுபோல இவர்நமக்குப்பக்குவத்துக்கீடாகஅனுக்கிர கஞ்செய்வரெனத்தன்மனத்திற்கருதிவிருப்பத்துடனேநாடோறுமவருடையஏவலை ச்செய்துவரினப்பொழுதுசருவான்மாக்களிடத்திலும்வியாபியாயிருக்கிற சிவனி ந்தமாணாக்கன் கபடமன்றியொருமைப்பாட்டாற் செய்யும்வழிபாட்டினையறிந்து ஞானாசாரியனையதிட்டித்துஆன்மாக்களுக்குஆணவமுதலியமலங்களைநீக்கிச்சிவா னந்தானுபூதியைஅநுபவிக்கும்பொருட்டு அநுக்கிரகம்பண்ணுவன் எ - று தீவினையுமென்றவும்மையால் - ஆணவாதியுமெனவதிக. (௧௭)

அவரனுக்கிரகம்பெறுமுறைமையுணர்த்துகின்றார்.

எழுதுகொடியிடைமடவாரிணைவிழிவேலெறியுமிளவுருவந்தளருருவு ம்வேறன்றென்றே, யழுததனைப்பரிப்பதனுக்கருவருத் தேயழுங்கியனு திமலமுத்தனழுக்கறுப்பானென்றடைந்தா, லொழுகுமவனவாய் தனுவனு டலினுதியாலொண்குரவனுபதேசத்துற்றதுலலோக, முழுதுலகுமொடுங் கிடுநாண்மூலமலந்தவிர்முத்தருமாயனுதிமலமுத்தனடிப்பிரியார். ௬

எ - து வல்லிசாத கக்கொடிபோன்றெழுதப்பட்டிருக்கிறவிடையினையுடை யமடவார்களது இரண்டுவிழியாகிய ஆயுதங்களினாலேவாதைப்பட்டிருக்கிற இள மையுமுதிர்மையும்வேறல்லஅவ்விரண்டினாலுஞ்சுகமில்லையெனக்கருதியிப்படிதள ர்கைவளர்கையாகியபரிணாமத்தினையுடையசரீரத்தைச்சுமக்குதற்குச்சிறைச்சாலை யிலிருக்கிறவனருவருக்குமாறுபோலவதனையருவருத்துஅழுதுசியென்றுதுக்கித்து இந்தக்குடம்பதனைப்போக்குவாராரென்றுதேடி யான்மாக்களுடைய வாணவாதி தோடத்தையனுதியேமலமில்லாதசிவனேபோக்குவனெனக்கருதியடைந்தவர்கள் நவத்துவாரத்தினையுடையசரீரத்தைப்பொருந்தார்கள் ஞானாசாரியருபதேசித்தமு றைமையிலேநின்றுசமாதியைப்புரிந்திருந்துஒப்பில்லாதநாதத்துவத்திலிருந்திராதி

புவனங்களைப்பொருந்தியாண்டுள்ளபோகங்களைப்பொசித்தத்தலைந்தவாறேமகாச ங்காரகாலத்திலநாதிமலமுத்தனாயிருக்கிற சிவனதுசீபாதகமலத்திற்சேர்ந்துமீளா திருப்பர்கள். எ - று (கூ௲)

நின்மலஞானமுள்ளார்சிறப்பினையுமஃதில்லாதார்தன்மையினை யுமுணர்த்துகின்றார்.

வாழ்க்கையினைமகிழ்ந்தாலும்வாழ்க்கையவமதித்துவனத்துவளாதனி ற்கனிகாய்மூலமிவைமாந்தி, யாக்கையினையொறுத்தாலுமாக் கையினையா க்கியளித் தழிக் குமமலனுளனவன்பெயரோதாயே, நீக்கமறவுயிர்க்குயிரா ய்நிற்பனவனெனவேநினைந்தொருமையுறநின்றார்மலமனைத்துநீங்க, நோக்க றவேநோக்குவர்களுளத்தொளித்துநின்றதன்னனியனையவரல்லாருடறேறு றழைவார் *

எ - று தருமமுதலியமனத்தினால்விவாகஞ்செய்துமகிழ்ச்சியுடனில்வாழ்க் கையிலிருக்கிறமிந்தயில்வாழ்க்கையைச்சியென்றுகருதிக்காடுமலையிலுண்டா கியகாய்-கனிகிழங்கு-முதலியவற்றைப்பொசித்தவானப்பிரத்தனாயிருந்தாக்கையி னையொறுக்கிறுஞ்சகலவான்மாக்களுக்கும்பிரகிருதிசம்பந்தமாகியதேகத்தையுண் டாக்கிச்சிருட்டிதிதிசங்காரமாகியதொழில்களைப்பண்ணுவானொருகத்தாவுளனெ ன்றுஅந்தக்கத்தாவின்திருநாமமேதாகிலுமுருக்கமாகக்கேட்டுச்சருவான்மாக்களி டத்துமந்தத்தன்மைவிட்டு நீங்காமல்வியாபித்துநிற்குமுறைமையினையறிந்து அந் த ஒருமைப்பாட்டுடனெப்போதுங்கருதிநின்றவர்கள், ஆணவமுதலியமலங்களி ன்வலிகெடவனுவுக்கணுவாய்நிற்கிறசிவனைநோக்காதேநோக்குவர்கள். இத்தன் மைவாராதவான்மாக்கள்பூட்டையும் நீரும்போலப்பிறந்து மிறந்துந்திரிவார்கள் எ - று எனவேகிரகத்தினிற்பிரமசாரியும் - வானப்பிரத்தனிற்சன்னியாசியுமடங் கிற்று (கூக)

தீவினைகட்குச்செய்யும்பரிகாரங்களுள் மேலானபரிகாரமீதென்று ணர்த்துகின்றார்.

பரிகாரந்தீவினைக்குப்பலவிதமேயவற்றுட் பரமானபரிகாரம் பரமசிவ ஞான, மிரவியொளியிருளறுக்கையெற்றற்றேபாவ மெனைத்தனைத்து மஃத றுக்கையிருண்மலத்தின்வலியு, மொருவுமதன்முன்பாவவிதமொழிகைவிய ப்போவுயிர்க்குயிராயிரண்டறவேயொருவாதேநிற்கும், பரமசிவன்பத்தினி யைப்பாராதேபார்க்கத்தன்பதிக்கும்பார்ப்பிக்கு மதுபரமஞானம். *

ள- து. ஆன்மாக்கள்செய்தபாவம்போம்படிக்குப் பரிகாரம்பலவிதமாயிருக்கும், அவற்றுள்மேலான பரிகாரஞ்சிவஞானமே யஃதெத்தன்மைத்தெனிற். பூதவிருளையாதித்தப்பிரகாசமெப்படிபோக்குமப்படியேபாவவிதங்க ளெத்தனையுண்டத்தனையுமிக்கன்மமட்டன்றுஅக்கினியைச்சேர்ந்தவித்தானதுயெப்படிதான்கெடாமற்றன்சத்திகெட்ட தோவதுபோல வக்கன்மத்துக்கு க்காரணமாகிய வாணவாதியுந்தான்கெடாமற்றன்சத்திகெட்டுநிற்குமாதலாலச்சிவஞானத்தின்முன்னேபாவங்கள்போமென்பததிசயமன்றேயாதலாற் சருவான்மாக்களிடத்திலுமெப்போதும்விட்டுநீங்காமனிற்குஞ்சிவசத்தியினது சீபாதகமலங்களை யூனதிட்டியினாற்பாராமல் ஞானதிட்டியினாற்பார்க்கில். அந்தச்சத்தியேதாரகமாய்த் தனக்குப் பதியாயிருக்கிறசிவனையனவரதமுமனுசந்தானம்பண்ணிவைக்கும் அதுவேபரமமானசிவஞானம் எ- று. பரிகாரம்பலவிதமாவன. கெங்கைமுதலாயினதீர்த்தத்தின்முழுகல். மந்திரஞ்செபித்தல். ஓமஞ்செய்யல். கிருச்சிரசாந்திராயணமுதலியவிரதமனுட்டித்தல் காசிமுதலிய திருப்படைவீட்டைச் சேவித்தல். தலங்களிற் சிவலிங்கப்பிரதிட்டை செய்தல். முதலியனவாம். (ஙா)

இப்பரிகாரஞ்செய்தற்குப் பக்குவரிவரொன்பதும் அபக்குவர்க்குணர்த்தின்வருங்குற்றமு முணர்த்துகின்றார்.

பரிகாரவியலிதனைப்பாவவினைக்கஞ்சிப் பழிக்குமஞ்சிவையிரண்டும் பாற்றிவிடப்பணிந்து, குருபாதமலர்தலையிற் கொண்டமூவான் குறிப்பைக் குறித்தறிந்தாண்டாமிரண்டிட் குரவனுளங்குழைந்தே, பரிவுறவேயவன்றனக்கேபகர்ந்திடுகவஞ்சாப்பாதகர்க்குப்பகரற்கபகர்ந்தானேயாகி, லெரிவாயநிரையத்திலிருவரும் வீழ்வாரோயெவராவர் துணையமலனுரையிலங்கித்தார்க்கே. *

எ – து இந்தப்பரிகாரவியலையுள்ளபடியாராய்ந்துபாவவினைக்கும்இம்மையிலின்னபாவத்தைச்செய்தானென்னும்பழிக்கும்பயந்தஞ்சிஅவ்விருவகையும்போகும்படியாசாரியனது சீபாதகமலத்தைத்தனதுதலையிற்சூடிக்கொண்டமூதத ண்டுபோலநமஸ்காரஞ்செய்யு மாணுக்கனுட்கருத்தையவ்வாசாரியன்விசாரித்துப்பின்னிரண்டுவருஷம்பரிச்சித்துஅறிந்து தீக்கைசெய்தவனுக்கு அக்குற்றம்போம்படிக்குக்கிருபைசெனித்துப்பரிகாரஞ்சொல்லுக, பாவத்துக்குப்பயப்படாதமாணுக்கற்குப்பரிகாரம்பகராதொழிக, அபக்குவர்களுக்குப்பரிகாரங் கூறிலக்கினிச்சுவாலைபோலவெரியாநிற்கிறநரகத்திலேயவ்விருவரும்வீழ்ந்துகிடப்பார்கள், பரமே

சுரனருளிச்செய்தவேதாகமங்களின்வழியே நடவாதுநிந்தித்தவான்மாக்களுக்கு யாவர் துணையாவார் ஒருவருந்துணையாகார்கள். எ - று ஏகாரந்தேற்றம் (௱௧) முடிந்ததுமுடித்தலென்றுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்.

வேறு.

என்றுபரிகாரவிதமாசறவிசைத்தான் *
நன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைநைய *
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே *

எ - று வெளி. [௱௨]

சிவஸ்துதி.

வேறு.

அன்னியம்பசுபாசமெனப்படுனையநாதியேமலமற்றவனப்பனே *
கன்னிபாகங்கலந்தகணவனேகருதுமெய்யடியார்தங்கணவனே *
முன்னமேபுரமூன்றையுமட்டனேமுத்தர்கண்டுமுகந்துணுமட்டனே *
தென்னன்றேவியுநின்கண்சிறப்பரோசெறிகிலார்கள்பிறந்துஞ்சிறப்பரோ *

எ - று பசுவுக்கும்பாசத்துக்குமிலக்கணமாயிருக்கப்படாநின்றசுவாமியே அநாதிகாலத்திலேயாணவமுதலியகுற்றமில்லாதஅழகனே, பார்வதியார்தவசுபன்னவந்தாளிற்றிருமேனியிலொருபாகங்கொடுத்துச்சேர்ந்தகண்போன்றவனே, மெய்யடியார்விரும்பப்பட்டநாயகனே, பூருவத்திலேமுப்புராதிகளையுமொருகணத்திலேசங்கரித்தவனே, முத்தான்மாக்கள்தெரிசித்துச்சிவானந்தானுபூதியையனுபவிக்கப்பட்டஅமிர்தசொருபனே, பாண்டிமாதேவியுமும்முடையதிருக்கணோக்கினவலோகனத்தினாலே முத்திபெற்றனளே, தேவரீர்சிபாதகமலத் தையடையாதவர்கள்பிறந்தும்நல்லகுணமில்லாதவர்கள் எ - று (௱௩)

இதவுமது.

நடலில்வாழ்வெனினைக்கியநம்பனே நயந்துபார்த்தற்கரிதத்சொன்னம்பனே, கடலிறைவிசுந்தரவேடனேசுரத்துநாய்புடைசூழச்செல்வேடனே, க

டலினஞ்சினையுண்டகளத்தனே கரிசர்நெஞ்சிற்றொளித்தகளத்தனே, யுடலி
ற்பூணெனப்பாம்புமுடையனேயுழையின்னுரித்தோலுமுடையனே. *

எ-து. துன்பவாழ்வினின்று நீக்கியநம்பனே, அருச்சுனற்குக் கிருபைசெய்து பாசுபதங்கொடுத்தபெரியசுவாமியே, ஆதிப்பிரமாவின்மயானத்திருநீற்றைத்தரித்தவெற்றிப்பாட்டைமிக்க அழகை யுடையவனே, அருச்சுனனிமித்தமாக வேதங்க ணாயாகிப்புடைசூழப்பாலைநிலத்தில் நடந்தவேடரூபனே, கடலின்கணெழுந்தநஞ்சினையுண்டகண்டத்தையுடையவனே, பாவிகளிதையத்திற்பிரகாசியாமலொளித்த கள்ளத்தையுடையவனே, திருமேனியின்கட் பாம்பாபரணத்தை யுடையவனே, புலித்தோலையுடையாகவுடையவனே. எ-று. (௱௪)

குமரன்றுதி.

வேறு

முருகனேயெனக் *
கருமுறைசறும் *
பருகுபாலினும் *
பெருகுமின்பமே *

எ-து. வெளி. (௱௫)

அகத்தியர்துதி.

பொதியமாமலைக் *
கதிபனேயெனக் *
கதியுமாமுடற் *
பொதியுமாயுமே *

எ-து. வெளி. (௱௬)

பதினோராவதுபரிகாரவியலுரை
முற்றும்.

பன்னிரண்டாவதுகோபுரவியல்

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனிற் பஞ்சகௌவியம் பாவத்தைக்கெடுத்துப்புண்ணியத்தைத் தருமெனமுற்கூறினார்அக்கௌவியத்தைத்தருநந்தைமுதலிய வாக்களிற்குமிடத்தின் றன்மைமுதலியவற்றைக்கூறுகையாற்கோபுரவியலென்னும் பெயர்த்து, இத்தலைச்செய்யுளென்னுதலிற்றோவெனிற் கந்தனை வினாத லுணர்த்திற்று.

ஆக்குவதுமழிப்பதுவுமறத்தினையுமறத்தினையு *
மாக்கடருமைந்தெனவேயறைந்தனை முன்னாறுமுகவ *
வாக்களவைநிலவுமெல்லையருள்விரியவெனக்குரிய *
வாக்கமுறவனைத்துயிர்க்குமவற்றுறுமலமறவே *

எ- து. வாராய்சண்முகதன்மத்தையுண்டாக்குவதும் பாவத்தைப்போக்குவதும்பசுக்களிடத்துண்டாகின்ற பஞ்சகௌவியமேயென்றுபரிகாரவியலில் முன்புகூறினை, அப்பசுக்களிற்குமெல்லையை யெனக்கு விளங்க வருள்செய்வாயாக, சருவான்மாக்களுமிப்பசுக்களின் சொருபத்தையுள்ளபடியறிந்ததனைப்பூசித்துஅதனிடத்துண்டான கௌவியத்தைப் பரமேசுரனுக்கபிடேகம்பண்ணியதனாலேயவர்களவர்கள்செய்தபாவங்களைப்போக்குகையின்பொருட்டு. எ- று. (க)

வினாதற்குத்தர முணர்த்துகின்றார்

என்றிசைத்தமுனிவரனுக்கெழிலுடையகுமரதரன் *
நன்றறைவமெனநவின்றுநாதனடித்தேசுடனே *
யொன்றிவிழித்துலகனைத்துமுணர்த்தவற்றுட்சிவபுரத்து *
னின்றிழிந்துநிலத்துறையுமெனுங்கதையுநிகழ்த்திடுவாம் *

எ- து. என்றுவிண்ணப்பஞ்செய்தவிசிட்டமானஅகத்தியனுக்குஅப்படியேயுனக்குநன்றாகச்சொல்வாமென்று குமாரசுவாமிதிருவுளஞ்செய்துபரமமானநிட்டையைப்புரிந்துவிழித்துப்பிருதிவியண்டத்திலுண்டானஅளவு கீழ்ப்பிரமாணங்களைச்சொல்லிஅந்தவண்டத்திலிருக்கிறசிவலோகத்திற்பரமேசுரன் சன்னிதிமுன்னிருக்கும்பிரஇடவத்தினதிடின்மான நந்தைமுதலியவைவந்துகோமாதாக்களும் பூமியின்கணிழிந்துவந்துநிற்குஞ்சொருபத்தையுமுனக்குச்சொல்வாம். எ- று. குமரதரன்வடமொழி. (உ)

அண்டப்பகுதியையறியப்புகில்அணுமுதலியபிரமாணமறியாவிடத்தறியப்படாவாதலால்அவ்வணுமுதலியவற்றைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

இன்னுழையுங்கதிரணுவெட்டெட்டிணங்கிற்கசாக்கிரகம் ✽
சொன்னவிதனிருநான்குமிலீகையெனத்துணிந்திடுக ✽
இன்னவிலீகையினயவிருநான்கேயூகையென ✽
வுன்னிடுயூகையினெட்டியவையெனவுன்னுகவே ✽

எ-று. கிரகத்திற்சாளரவாசலாதித்தகிரணத்தாலுண்டாகிய-துகள்-அணுஅது பதினாறுகொண்டதுசிறுபிள்ளைகள் மயிர்நுனியாகிய கசாக்கிரகம் அதுஎட்டுக்கொண்டது- இலீகை- அது-எட்டுக்கொண்டது- யூகை- அது எட்டுக்கொண்டது-யவை எ-று. இலீகை-ஈர்- யூகை- பேன்-யவை- நெல்- அணு- எட்டுக் கொண்டது-திரிசரேணுவென்க. (௩)

இன்னயவையிருநான்குமங்குலமென்றெண்ணிடுக ✽
சொன்னவிதமறுநான்குமுழமெனவேதுணிந்திடுக ✽
பன்னுமுழமொருநான்குந்தனுவெனவேபார்த்திடுக ✽
மன்னுதனுவிரண்டினையோர்தண்டெனவேமதிக்கவரோ ✽

எ - து இந்தநெல் குறுக்காக - எட்டுக்கொண்டது உத்தமமானமானுங்குலம், அது-இருபத் துநான்குகொண்டது-முழம், அது-நான்குகொண்டது - வில் - அது-இரண்டுகொண்டது-தண்டம் எ - று ஏழுநெற்கொண்டதுமத்திமாங்குலம்-ஆறுநெற்கொண்டது அதமாங்குலம்-இஃதன்றிநெல்லினீளத்தான்மூவிதமுழமென்க-முழமெனினும் அத்தமெனினுமொக்கும்-அரோ-அசை. [௪]

தெண்டமிரண்டாயிரத்தைக்குரோசமெனத்தெளிந்திடுக ✽
கொண்டவிருகுரோசத்தைக்கெவியூதியெனக்கொள்க ✽
மண்டியநாற்குரோசத்தையோசனையாமதிக்கமணி ✽
னண்டமொன்றிற்சதகோடியோசனைவித்தாரமுமே ✽

எ - து தண்டம்இரண்டாயிரங்கொண்டது-குரோசம்-அது-இரண்டுகொண்டது-கெவியூதி-அக்குரோசம்-நான்குகொண்டது-யோசனை-அந்தயோசனை நூறுகோடிகொண்டது-பிருதிவிதத்துவத்திலுண்டாகியவோரண்டத்தளவின் விரிவு எ - று வித்தாரமுமென்றவும்மையாலுயரமுநூறுகோடியெனவறிக, குரோசம்-

கூப்பிடுதூரம்-கெவியூதி-அவாக்காதம்.] (ரு)

பூமிமுதலாகவுள்ளமிருகவண்டங்கள்போகப்போகஅளவேற்றமென்பத
னைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

மண்டலக்காயிரகோடியண்டமுளவாரிக்கு ✽
மெண்டோகைபிற்பேதமில்லவிரிவுயர்ச்சியேயியுறு ✽
மண்டலிலுந்தசகுணிதம்வாரிக்குவாரியினு ✽
மொண்டழற்குமுளாத்தமுறைபிரகிருதிமுடிவுமுறும் ✽

எ - து பிருதிவிதத்துவத்துக்கு ஆயிரகோடியண்டமுண்டு - அப்பிருதிவிதத்துவத்தைப்பற்ற அப்புதத்துவம்பதின்மடங்குவிரிவுமுயர்ச் சியுமேற்றமுண்டு-அந்த அப்புதத்துவத்தைப்பற்றத்தேயுமுதல்பிரகிருதியீறுகஆண்டங்கள்பதின்மடங்குவிரிவுமுயர்ச்சியுமேறியுளம், எ - று (சா)

குணிதசதமிராகத்திற்கூடுமூனையநுதலினுங் ✽
குணிதசதம்வித்தைக்குக்கூடுமூனையராகத்துங் ✽
குணிதசதநியதிக்குக்கூடுமூனைவித்தையினுங் ✽
குணிதசதங்காலத்துநியதியினுங்கூடுமே ✽

எ - து முற்கூறியபிரகிருதியைப்பற்றஇராகம்நூறுமடங்குயரமும்விரிவு மேற்றமுள-அந்தஇராகத்தைப்பற்ற வித்தியாதத்துவநூறுமடங்குவிரிவுமுயர்ச்சியு மேற்றமுள, அந்தவித்தையைப்பற்றநியதிதத்துவநூறுமடங்குவிரிவுமுயர்ச்சியுமே ற்றமுள,அந்தநியதிதத்துவத்தைப்பற்றக்காலதத்துவநூறுமடங்குவிரிவுமுயர்ச்சியு மேற்றமுள எ று (எ)

குணிதநியுதாயுதமேகலைக்குமுளிற்கூடிடுங் ✽
குணிதமொருகோடியெனமாயைக்குங்கூடியிடுங் ✽
குணிதமாறுங்குத்தவித்தைகோடியுடனேரையுதங் ✽
குணிதவிதமிம்முறையினுநாந்தங்கூடுமே ✽

எ - து முற்கூறியகாலத்தைப்பற்றக்கலைதத்துவநூற்றிருபதினாயிரம்விரிவுமுயர்ச்சியுங்கூடுங்கலையைப்பற்றமாயைகோடிமடங்குகூடும், மாயையைப்பற்றச்சுத்தவித்தைகோடியேபதினாயிரமடங்குகூடும், சுத்தவித்தையைப்பற்ற இலக்ஷமதிகம் ஈசுரம் ஈசுரத்தைப்பற்றச்சாதாக்கியம் இலக்ஷமதிகம் அதனைப்பற்றவிந்து லக்ஷமதிகம்இப்படியேயொன்றுக்கொன்றுபோகப்போக,மேலசிதத்துவமிப்படிய

ளவுபட்டதன்று எ - று மேற்பட்டதவியாபகம் கீழ்ப்பட்டதுவியாப்பியமெனவுணர்க. (௫)

பிருதிவியண்டத்தின்வகையுணர்த்துகின்றார்.

மண்டனக்காயிரகோடியண்டமெனமதித்தவற்றே *
ரண்டமுறுமளவினைபுமதனுலகமனைத்தினையும் *
கண்டிடுகமுனிவரனேகழறிடுவங்கற்பார்க்கும் *
பண்டைவினைப்பாவமறப்பரலோகபதமுறவே *

எ - து வாராய்முனிவரனேபிருதிவியிலொருதட்டில்தேங்காய் விளாங்கனிபரப்பினாற்போலஆயிரகோடியண்டமுண்டென்றுபுத்திபண்ணியவற்றுளோரண்டத்துக்குண்டானஉயரவகலங்களின்பிரமாணங்களையுமதிலுண்டாயிருக்கிறபுவனங்களையும்யாஞ்சொல்வாமறிவாயாக, இதனாற்பிரயோசனம்யாதெனிலிந்தவண்டபேதங்களைச்சொல்லுமாகமத்தையதிகரித்தவர்க்குப்பூருவத்திலார்ச்சித்தகன்மாதிகள்க்ஷயம்பிறந்துசிவசாயுச்சியத்தையடைகையின்பொருட்டு எ று (௬)

மேலதனைத்தொகுத்திரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வேறு

தரைக்குக்கீழ்க்கோடிதானுறுமைம்பது *
தரைக்குமேற்கோடிதானுறுமைம்பது *
தரைக்குண்மேருத்தடவரைத்திக்கெலா *
முரைத்தவைம்பதுறுங்கடாகத்தொடும் *

எ - து கீழண்டவோடுதொடங்கிப்பூலோகம்வரையைம்பதுகோடியோசனையும் பூலோகத்துக்குமேலண்டகடாகவோடுவரையைம்பதுகோடியோசனையும் பூலோகத்தின்மத்தியிலிருக்குமகமேருவினடுவினின்றுங் கிழக்கு- மேற்கு - தெற்கு - வடக்கு - இந்தநான்குதிசைகளின் அண்டவோட்டின்கனமீறாகவைம்பதைம்பது கோடியோசனைதூரமும்பொருந்தும் எ -று (௭)

பொன்மயத்தகடாகப்புறத்திசை *
தன்னிற்சாரும்புனலஞ்சதமவை *

தன்னிநூற்றுவர்தங்குவரிசன்மே *
முன்னிலாறுபுரமிரண்டோர்கவே *

எ - து பொற்சொருபமாய்ப்பதினுயிரஞ்சூரியப்பிரகாசமாய்க்✠குக்குடாண்டம்போன்றிருக்கிறவண்டகடாகப்புறம்பேயிந்திரதிக்குமுதலியபத்துத்திக்கினுமிருக்கிறநூறுபுவனத்திலும் உருத்திரர்களுாற்றுவரிருப்பர்கள், அவர்கள்புவனத்துக்குமேற்காலாக்கினியுருத்திரர் முதலியர்புவனமாறு-அவைக்குமேற்புரமிரண்டுண்டவையுணர்வாயாக எ - று அவையாவையெனின் - இந்திரதிக்கில் - கபாலிசன் - அசன் - புத்தன் - வச்சிரதேகன் - பிரமத்தனன் - விபூதி - அவ்வியன் - சாத்தா-பினுகி - திரிசோதியன் - என்றவுருத்திரர்கள்- ய - அக்கினிதிக்கில் - உருத்திரன் - உதாசனன் - பிங்கலன் - காதகன் - அயன் - சுவலன் - தகனன் - வெப்புரு - பிரமாந்தகன் - க்ஷயாந்தகன் - என்றவுருத்திரர்கள் - ய - இயமதிக்கில் - யாமியன் - மிருத்தியு - அரன் - தாதா - விதாதா - கத்திரு - காலன் - தன்மன் - சங்யோத்தா - வியோகிருதன் - என்றவுருத்திரர்கள் - ய - நிருதிதிக்கில்- நிருதி மாரணன்-அரந்தா-குரூரதிருட்டி-பயாந்தகன்-ஊர்த்துவகாயன் - விருபாக்ஷன்-தூமிரு-லோகிதன்-தெங்கிட்டிருணன்-என்றவுருத்திரர்கள் - ய - வருணதிக்கில்-பெலன்-அதிபெலன்-பாசஅத்தன்-மகாபெலன்-சுவேதா-செயபத்திரன்-தீர்க்கவாகு-செலாந்தகன்-வடவாமுகன்-நிமான்-என்றவுருத்திரர்கள் - ய - வாயுதிக்கில் - சீக்கிரன்-லகு-வாயுவேகன்-தீக்ஷணன்-சூக்குமன்-க்ஷயாந்தகன் - பஞ்சாந்தகன்-பஞ்சசிகன்-கபர்த்தி-மேகவாகனன்-என்றவுருத்திரர்கள் - ய - குபேரதிக்கில்-நிதீசன்-ரூபவான்-தன்னியன்-சௌமியன்-சௌமியதேகன்-பிரமத்தனன் - சுப்பிரகடன்-பிரகாசன்-இலக்குமிவரன்-சோமேசன்-என்றவுருத்திரர்கள் - ய - ஈசானதிக்கில்-வியாத்தியாதிபன்-ஞானபுகன்-சருவன்-வேதபாரகன்- மாத்திருவிருத்தன்-பிங்கலாக்ஷன்-பூதபாலன்-பெலிப்பிரியன்-சருவவித்தியாதிபன்-தாதா-என்றவுருத்திரர்கள் - ய - அண்டகடாகவோட்டுக்குக்கிழேவிட்டுணுதிக்கில் - அனந்தன் - பாலகன்-வீரன்-பாதாளாதிபதி-விபு-இடபத்துவசன்-உக்கிரன்-சுப்பிரன்-உலோகிதன்-சருவன்-என்றவுருத்திரர்கள் - ய - அண்டகடாகத்தின்மேலே-பிரமதிக்கில்-சம்பு-விபு-சௌத்தியக்ஷன்-திரியக்ஷன்-திரிதேசகவாதகன்-சன்வாகன்-விவாகன் சபன்-லிபசு-விலக்ஷணன்-என்றவுருத்திரர்கள் - ய- ஆகியவிந்தநூற்றுவரும்-இந்திராதியரானவுலோகபாலகர்பெலத்தையுமடக்கியவர்களவர்களாற்பூசிக்கப்பட்டுக்கொண்டிருப்பர்கள், இவர்கள்புவனம் - ௬ - காலாக்கினி-கூர்மாண்டர்-ஆடகேசுர

✠ குக்குடாண்டம் - கோழிமுட்டை.

ர்-பிரமா-விட்டுணு-உருத்திரன்-இவர்கள்புவனம் -ங - அண்டகடாகத்துக்கு மே லேருக்குமப்பிருதிவியில்-பத்திரகாளி-வீரபத்திரர்கள்-இவர்கள்புவனம் - உ - ஆக ப்பிருதிவிதத்துவத்திற்புவனநூற்றெட்டென்க. (மக).

கீழ்அண்டகடாகத்தினளவுங்காலாக்கினியுருத்திரர்மனை முதலியதன்மையுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

அண்டகடாகக்கனமூண்டொருகோடியதனடியுட் *
கண்டிடுககாலாங்கியுருத்திரர்க்குக்கனகமனை *
யுண்டதற்குன்னதங்கோடியோசனையீனாங்கோடி *
மண்டியமெய்த்தழற்கொழுந்தைங்கோடியுறும்வளர்புகையும் *

எ - து - கீழண்டகடாகத்தினுடையகனமொருகோடியோசனை, அந்தவண்டகடா கத்தினுள்காலாக்கினியுருத்திரர்க்குகனகமயமானவாலயங்கோடியோசனை, அவ ருடையதிருமேனியிலக்கினிச்சுவாலை பத்துக்கோடியோசனை, அந்தச்சுவாலையிற்பு கையைந்துகோடியோசனையுண்டு. எ - று (மஉ)

யோசனையாயிரமனையுளரியணையினுயரந்தான் *
யோசனையீராயிரமென்றதன்விரிவைபுணர்ந்திடுக *
தேசுடையகாலாங்கியுருத்திரர்தந்திருமேனி *
யோசனையுமொண்டழலர்லயுதமெனவுன்னுகவே *

எ - து காலாக்கினியுருத்திரருடையவாலயத்தினிருக்குஞ்சிங்காதனத்தினு யரமாயிரம்யோசனை, அந்தச்சிங்காதனத் தின்வித்தாரமிரண்டாயிரம்யோசனை யெனவறிக, பிரகாசத்தையுடையவந்தக்காலாக்கினியுருத்திரநாயனார்திருமேனியி னுயரம்பதினாயிரம்யோசனையக்கினிசொரூபமாயிருக்குமென்றறிவாயாக. எ-று ()

தரித்துடையர்வலக்கரத்திற்றயங்கொளிவாட்சரத்தினையும் *
பரித்துடையிடக்கரத்திற்பலகையினைத்தனுவினையு *
முருத்திரர்களொருபதின்மருறைவரவருறையவர்போ *
லுருத்திரர்களொவ்வொருவர்க்கொருகோடிபரிச்சிதமே *

எ - து அந்தக்காலாக்கினியுருத்திரதேவநாயனார்வலக்கையின்மிகவும்பிரகா

சத்தையுடையவாளும் அம்பும் இடக்கையில்கட்கமும்வில்லுந்தரித்திருப்பர், இந்தக்காலாக்கினியுருத்திரதேவநாயகனைச்சூழ்ந்தவனைப்போலுருத்திரர்கள் பதின்மரிருப்பர்கள், அவரைச்சேவித்திருக்கிற பதின்மரையுமொவ்வொருவரையொவ்வொருகோடியுருத்திரர்கள்பரிவாரமாகச்சூழச்சேவித்திருப்பர்கள் எ - று

அண்டகடாகங்கூடக் காலாக்கினியுருத்திரர் புவனம் பதினேழுகோடியுண்டென்க. (௰௪)

அப்புவனத்தின்மேல்நரகங்களினளவைமூன்று
செய்யுளாலுணர்த்துகிறார்

இனையபுரிமிசைநிரயமெழுநான்குகோடியுறு *
நிரயவளவையெழுநான்குநிலமடமேயெனநிலவுந் *
துனியுறுவரவைதன்னிற்றுரிசரவற்பினுக்களவு *
முனிவிருநூறாயிரமுமுப்பஃதுகோடியுமே *

எ - து இந்தக்காலாக்கினியுருத்திரபுவனத்துக்குமேலேயிருபத்தெட்டுக்கோடிநரகமிருக்கும், இந்நரகபுவனத்தைவிசாரித்தறியுமிடத்துஒன்றின்மேலொன்றாக இருபத்தெட்டுத்தளமாகக்கட்டினமனைபோன்றிருக்கும், அதில்அதிபாதகமுதலிய்பாவங்களைப்புரிந்தவர்கள்கிடந்துவாதையுறுவர்கள், அந்நரகங்களினளவுவிசாரிக்குமிடத்துமுப்பதுகோடியேயிரண்டுநூறாயிரம்யோசனையுயரமெனவறிக எ-று

இடையிடையிற்படிகளைக்கும்படுகுழிக்குமிடைவெளிக்கும் *
படுமுயரமலவற்றடங்கும்படிகளைகட்களவதிக *
மிடையிடையிற்குழியாழமிலக்கமிடைவெளிதானும் *
புடையிரிவுமண்டகடாத்துடனேபொருந்திடுமே *

எ - து முற்கூறியமுப்பதுகோடியேயிரண்டுநூறாயிரம்யோசனையுயரத்துள் நடுவேநடுவேயிருக்கிறவிருப்பமாத்தாலுண்டாகியபுடங்களும்நரகக்குழிகளினுழுங்களுமவையவைகளின்மேலேயிருக்கிறவிடைவெளிகளினுயரமுமடங்கும், அவைகளினிடையிலிருக்கிற புடங்களுக்களவதிகமாயிருக்கும், இடையிடையினரக்குழிகளினாழம்நூறாயிரம்யோசனையாம், அந்தநதநரகக்குழிகளுக்குமேலேயிருக்கிறவொவ்வொருஇடைவெளியுயரமும் நூறாயிரம்யோசனையாம், அந்தந்தநரகங்களினபுடைவிரிவுகளைவிசாரிக்குமிடத்து நாலுதிக்குமண்டகடாகத்துடன்பொருந்தும். எ - று (௰௬)

புடமிருப்புமயமிருபத்தொன்பதுளபுடமோவ்வொன்
றடைவுமொருகோடிநூற்றைம்பதினாயிரந்தானு
மிடமுறுமெண்ணாயிரமுமறுநூறுமிருபஃது
மடியகன்றபுடத்துயர்ச்சியதிக்மிருபஃதாமே

எ - து முற்கூறியபுடங்களிருபத்தொன்பதிருப்புமயமாயிருக்கும், ஒவ்வொருபுடத்தினுயரங்கோடியேநூற்றைம்பத்தெண்ணாயிரத்தறுநூற்றிருபதுயோசனையெனவறிக, அப்புடங்களினுயரத்தைப்பற்றவெல்லாவற்றிற்குமடியிற்பொருந்தியபுடத்துயரமிருபதினாயிரம்யோசனையதிகமுளதென்வறிக. எ - று (௰எ)

அந்தநரகத்தின்மேலிடைவெளியுங்கூர்மாண்டர்புவனமும்
அவர்தன்மையுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

நிரையமிசைநிராலம்ப முப்பதினாயிரநிலவு
முரைசெய்தநிராலம்பத்துச்சிமிசையோரிலக்கம்
வரையவொருகோடியுறுமண்ணாவற்றுட்கீழ்பாகங்
கரியவிரும்பிடைப்பாகமேல்பாகங்கனகமயம்

எ - து இங்ஙனங்கூறியவெல்லாநரகத்துக்குமேல் வெளிமுப்பதினாயிரமுயரம், அந்தவெளிக்குமேல்நூறாயிரங்குறையக் கோடியோசனையுயரங்கூர் மாண்டர்புவனம், கீழ்பாகம்மண்ணாகியுநடுப்பாகமிரும்பாகியுமேற் பாகங்கனகமாகியும் பொருந்தும் எ - று (௰அ)

மேலயபாற்கனகபுரிவீற்றிருப்பர்கூர்மாண்டர்
காலவழலிரவியுருக்காளமுகமழுவுங்கை
கோலமுறுவட்டவிழிகொண்டுடையரவர்தம்மைப்
போலுமுருத்திரர்பலரும்புடையடைவர்போற்றிசைத்தே

எ - து மேலாயிருக்கிறகனகபூமியிலேநரகத்துக்கதிபராதியகூர்மாண்டதேவரானவர்பிரளயகாலாக்கினியும்பிரளயகாலாதித்தியனும்போன்றதிருவுருவுங்கறுப்பாகியமுகமும்மழுத்தங்கியகையும்அழகுபொருந்தி வட்டமாய்ச்சுழிந்திருக்கிற திருநயனமுமுடையராயெழுந்தருளியிருப்பர், அவரைச்சூழ்ந்தவரைபோன்றிருக்கிறவுருத்திரர்அநேகரவரைத்தோத்திரஞ்செய்துசேவித்திருப்பர். எ - று மழுவுமென்றவும்மையால்வலக்கைகளில்மழுவன்றி யம்பையுமிடக்கைகளில்வில்லையும்பலகையையும்பயங்கரமாய்த்தோன்றியவீரப்பல்லினையுமுடையரென்க (௰௯)

பிணைவிழியார் துணைமுலையார் பிடிநடையார் துடியிடையார் *
பிணையணதோளிணையிளையார் பலபரவப்பதமொழியாற் *
றிணைமுறுமாகண முறையிற்செறியவமர் கூர்மாண்டர் *
எணமுடையார்கணமடையாரிடர்நிரையத் திறையவரே *

எ - று பிணைவிழிமுதலியவுறுப்புக்களையுடையராகியகன்னியர்கள்பலவித்தையுடையவுரைகளாற்றோத்திரஞ்செய்யத்திண்ணமுற்ற பெரியகணங்கள்தாந்தாம்நிற்குமுறைமையிலேசெறிந்துநின்றுசேவிக்க, அந்தக்கூர்மாண்டதேவர்எண்ணமுடையாரைக்கணப்பொழுதுந்துயரத்தையடையாராகியந்நரகங்களுக் கதிபதியாயிருப்பர் எ - று (௨௦)

அந்தக்கூர்மாண்டபுவனத்துக்குமேலுள்ளவிடைவெளியும்
பாதாளங்களின்றன்மையுமாறுசெய்யுளாலுணர்த்துகின்றார்

உரைத்தபுரிமிசைவெளிதானென்பதினாயிரமாங் *
கெரித்ததன்மேலாபாதபாதாளநிர்க்கத்தைத் *
தரித்திடுகபத்திலக்கமெனவடிவந்தமரியமே *
பரித்தவிரிவயுதமிடைவெளிதானுமதன்படித்தே *

எ - று இங்ஙனஞ்சொல்லிய கூர்மாண்டபுவனத்துக்கு மேலிடை வெளியென்பதனாயிரம்யோசனையுயரம், இந்தவிடைவெளியின்மேற்பொன்மயமாயிருக்கிறதுபாதபாதாளத்தின்னுதத்தைப்பத்துநூறாயிரம்யோசனை யெனவறிகஇதற்குமேலிடைவெளியின்பரப்புப்பதினாயிரம்யோசனை யதனுயரமும்பதினாயிரம்யோசனை எ - று (௨௧)

பொருந்துமதுமுப்பாகம்பூருவத்திற்றயித்தியரோ *
யிருந்திடுவர்நாகேசரிடைப்பாலிற்பச்சிமத்தில் *
வரந்திகழும்வாளரக்கர்மற்றையபாதலந்தோறும் *
பரந்திடுமிப்படிபாகம்வெளியுயரம்பரப்பெல்லாம் *

எ- று. அந்தப்பாதாளம் மூன்றுகண்டமாயிருக்கும் அதில்கீழ்பாகத்திற். சங்குகருதியென்னும்பெயரையுடைய அசுரனிருப்பன், நடுப்பாகத்திற். குளிகனென்னும்பெயரையுடையநாகராசாவிருப்பன், மேற்பாகத்தில்விசிட்டமானபிரகாசத்தையுடையவிடனென்று மிராக்கதனிருப்பன், இப்படியே மற்றைப்பாதாளங்க

டோறும்மூன்றுபாகமுமதிலிருக்கிறவதிபதிகளுமப்பாதாளங்களின் விரிவுயரமும். எ- று. இனிபத்மதலபாதாளமுதலிய ஆறுபாதாளங்கடோறு மொவ்வொன்றில்மூன்றுகண்டத்திலிருப்பர்கள்யாவரெனில். பிரகலாதரன். சுபாலகன். கற்கந்துகன் பராக்கன். பிருதற்கெர்ப்பன். பெலி. எனத்தயித்தியர்க ளறுவர். வாசுகி. கம்பலன். கார்க்கோடகன். காளாங்கன். துர்த்தெரிசனன். தச்சகன். எனநாகராசாக்களறுவர். உலோகிதாக்ஷன். யமன் . விகடனன் . கராளன். நிருகாதன். பிங்கலன். எனஇராக்கதரறுவர், இந்தஅதிபதிகள்பதினெண்மருமம்முறையேயிருப்பர்களெனவறிக, இஃதன்றியொருகண்டத்துக்குமும்மூன்றுபெயராக மூன்றுகண்டத்துக்குமொன்பதின்மருண்டென்க, ஏனையவுமிவ்வாறுகாண்க. (உஉ)

அதன்மீதுபதுமவொளிபத்மதலமெனவறிக *
வதன்மீதிந்திர நிலநிதலதல்மெனவறிக *
வதன்மேற்புச்சியராகச்சுதல்தலமெனவறிக *
வதன்மீதுவெள்ளிமயமாதலமென்றறிகவரோ *

எ- து. அந்தப்பாதாளத்துக்குமேல்பத்மதலபாதாளம்பத்மாக்கிரம்போன்றிருக்கும், அதற்குமேல்நிதலதலமென்னும்பாதாளம் இந்திரநீலநிறம்போன்றிருக்கும், அதற்குமேல்சுதலதலமென்னும்பாதாளம்புட்பராக நிறம்போன்றிருக்கும்,அதற்குமேல்மாதலபாதாளம்வெள்ளிமயமாயிருக்குமெனவறிவாயாக. எ- று. (உ௩)

அதன்மீதுரசாதலத்தைமுத்தொளியென்றறிந்திடுக *
வதன்மீதுபாதாளநவமணிபோலெனவறிக *
வதன்முடிவுட்கன்னியர்களெண்ணூறுபிரவருள *
ரதன்மேலேபத்திலக்கங்ராலம்பமாயிடுமே *

எ- து. அதற்குமேல்ரசாதலபாதாளம்முத்தினதுபிரகாசம்போன்றிருக்கும், அதற்குமேல்பாதாளம்நவரத்னப்பிரபைபோன்றிருக்கும், அந்தப்பாதாளத்தின்முடிவிலெண்ணூறுபிர நாககன்னியர்களிருப்பர்கள், அப்பாதாளத்தின் மேலிருக்குமிடைவெளிபத்திலக்கம்யோசனையுண்டு. எ- று. (உச)

மயிலனையார்சாயலினன்மானனையார்விழியதனற் *
குயிலனையார்மொழியதனற்கொடியனையாரிடையதனற் *
சயிலனையார்முலையதனற்றளவனையாரிளநகையால் *
வெயிலனையாருடலொளியாற்பாதாளவிலாசினிமார் *

எ - து வெளி - சயிலம் எ - து - அம்கெட்டிசயிலென்றுமிற்று - தளவு முல்லையரும்பு. (௨௫)

சுரிகுழலாரரிகுழலார்சுவைமொழியார்நவைமொழியார ௬
வரிவளையாருருவளையார்மதர்விழியாரிதர்விழியார் ௬
உருவுடையார்குருவுடையாரொளிநகையார்தெளிநகையார் ௬
அருமிடையார்பருமிடையாராடகர்தாளலர்மருவே ௬

எ - து சுருண்டகுழலினையுடையார், அரிந்தகுழலோசைபோன்றவினிமையானமொழிகளையுடையார், குற்றங்களையொருகாலுஞ்சொல்லாதவர்; வரியாகிய வளையினையுடையார், உருவமொருகாலும்வளையாதவர், மதர்த்தவிழியினையுடையார், இதரபதார்த்தத்தைப்பாராதவர், அழகானவுருவத்தையுடையார், மிகுந்தபாரத்தக்குடையாதவர், ஒளியாகியநகையினையுடையார், ஊழியத்திற்றெள்ளிதாகியகையையுடையார், சுருங்கியவிடையினையுடையார், ஆடகேசுரர்பாதமலர்த்தேனைப்பருகுதற்கிடையாதவர், மேற்கூறியநாககன்னியர்களாகியபாதாளவிலாசினிமார். எ - று (௨௬)

ஆடகேசுரபுவனமுணர்த்துகின்றார்.

அதன்மேலேநவலக்கமாடகநாயகர்புரிதான் ௬
புதுமைதிகழ்மணிபொன்னால்யோசனையாயிரம்புகலிற் ௬
கதமுடையதைத்தியர்கள்கட்டரவர்வெட்டரக்கர் ௬
விதிமுறையிற்பதம்பணியவிற்றிருப்பாராடகரே ௬

எ - து அந்தப்பாதாளங்களுக்குமேலேயாடகேசுவரர்புவனமொன்பதுநூறாயிரம்யோசனை, அதிலாடகேசுரர்க்குப்புதுமையேகொடுக்குஞ்சொன்னமயமாயிருக்கிறவிந்தஆயிரம்யோசனையுயரமாயிருக்கும், அதில்கோபத்தையுடைய அசுரர்களாலும்விடத்தையுடையநாகர்களாலும்வெட்டிமையையுடையவரக்கர்களாலுமத்திமையாரமென்றுஞ்சுரபேதங்களாற்றோத்திரஞ்செய்துவிதிப்படிநமஸ்காரம்பண்ணவிற்றிருப்பாராடகேசுரர் எ - று (௨௭)

அதன்மேற்பூமியினளவுமுன்தொகுத்ததைப்பூமிவரைமுடித்து
முணர்த்துகின்றார்.

அப்புரியின்மிசைத்தாகவவனிகளோருகோடி ௬
யொப்பரியகடாகமொருகோடிமுதலாக ௬

விப்புவனியிருகவேழேழொன்றெனுங்கோடி *
தப்பறவேயோசனையின்றொகைமுறையிற்றரிக்கவரோ *

எ - து அந்தஆடகேசுரர்புவனத்துக்குமேற்பூமியினுடையகனங்கோடியோசனை, முற்கூறியஅண்டகடாகமுதலிந்தப்பூமியிருகத்தவறின்றித்தொகையினலடைவிலைம்பதுகோடியோசனையாம் எ - று.

அவைபாவன. அண்டகடாக வோட்டின் கனம், ஒருகோடி, அதற்குமேற்காலாக்கினியுருத்திரர்கனகமனையொருகோடி, அவருடையதிருமேனிச்சுவாலைபத்துக்கோடி, அச்சுவாலையின்புகை யைந்துகோடி, ஆகப்பதினேழுகோடி, அதற்குமேல் நரகமுப்பதுகோடியேயிரண்டுநூறாயிரம், அதற்குமே லிடைவெளியாகிய நிராலம்பமுப்பதினாயிரம், அதற்குமேற்கூர்மாண்டர்புவனந்தொண்ணூற்றென்பதுநூறாயிரம், அதற்குமேலிடைவெளிபொன்பதுநூறாயிரம், ஆகமுப்பத்தொரு கோடியேபத்துலக்ஷத்தெழுப்பதினாயிரம். அதற்குமேல் ஆபாதபாதாளம். பத்து லக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேற் பத்மவொளிபாதாளம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம்,அதற்குமேலிந்திரநீலநிதலதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேற் புட்பராகசுதலதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேல்வெள்ளிமயமகாதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம், அதற்குமேல் முத்தினொளி போன்றரசாதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேல்நவமணி போன்றபாதாளம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம், அதற்குமேல்நிராலம்பம். பத்துலக்ஷம், அதற்குமேல் ஆடகேசுரர்புரியொன்பது லக்ஷம், ஆகவெண்பத்தொன்பதுலக்ஷத்தெழுபதினாயிரம், அதற்குமேல்பூமியின்கனம்ஒருகோடி ஆகவண்டகடாகமுதலிந்தப்பூமிவரையைம்பதுகோடியென்க. (௨அ)

பாதாளவதிபதியும்பெலத்துவாரவளவுமுணர்த்துகின்றார்

பாதாளப்பெல்வழிக்கும்பாதாளமேழினுக்கு *
மாதாரமதிபதியுமாடகநாயகர்தாமே *
பாதாளப்பெலவகலம்யோசனையாயிரம்பகரிற் *
பாதாளமுதனிளாயவிறுதியினும்படர்ந்திடுமே *

எ- து. ஆடகேசுரநாயனார்பாதாளத்துக்கும்பெலத்துவாரத்துக்குமாதாரமாயு

திபதியுமாயெழுந்தருளியிருப்பர், அந்தப்பெலத்துவாரத்தின் வட்டமாகியஅகலத்தைச்சொல்லில்ஆயிரம்யோசனையாம், அந்தப்பெலத்துவாரம் பாதாளமுதல்நிரையமிருகவுஞ்செல்லும். எ- று. பொன்மயமாயிருக்கிற பாதாளத்துக்கதிபதியானையால்ஆடகேசுரனெனப்பெயர்கூறினார் (௨௯)

இனியிப்பூமியினளவு மேருவின் றன்மையும்ஐந்துசெய்யுளானுணர்த்துகின்றார்.

அறைந்தாஞ்சொன்முறையுறவேபிரமாண்டத்ததோபாகஞ் *
சிறந்தபெருவளையுடனுஞ் சேடித்தவுறுப்புடனு *
மறைந்திடுவாமமிக்கிடுகவவனிதலத்தகலமுமெண் *
ணிறைந்தசதகோடிநடுமேருவுறநிலவிடுமே. *

எ - து வாராய்முனிவரனேயிப்படிமேலேயிருக்கிறபூமிமுடிவாகப்பிரமாண்டத்தின்கீழ்பாகத்திலுடையசொரூபத்தையொழுங்குறச்சொன்னோம், இனியுனக்குச்சிறப்பையுடைத்தாயபூலோகத்தினடுவேயிருக்குமகாமேருவையுமட்டகுலபருவதங்களையுநவகண்டமுதலியவற்றையுஞ்சொல்வோமறிவாயாக, அந்தப்பூலோகமெவ்வளவகலமென்னின்னூறுகோடியோசனையாயிருக்கும். மக்கட்குநாபிநடுவானாற்போலவிந்தப்பூமிக்குநடுவேமகமேருநிற்கும் எ - று நூறுகோடியிற்குறைவில்லாமையாலெண்ணிறைந்ததெனச்சிறப்பித்தார் (௩௰)

பாதலத்தின்மிசைத்தாகிப்படுகடலைப்புடையுடுத்த *
பூதலத்தினடுநிலவும்பொன்னசலம்யோசனைதான் *
பாதலத்திற்பதினாறாயிரமுறவேபடிந்தழுந்தி *
மீதலத்துமவைகுறைந்தநியுதமுறவிளங்கிடுமே *

எ - து பொன்மயமானஅம்பிகமேருவானதுமுற்கூறியபாதாளத்துக்குமேலாகியேழுசமுத்திரங்களாலுஞ்சூழப்பட்டபூமியினடுவேபொருந்திப்பூமிக்குக்கீழ்ப்பதினாறாயிரம்யோசனையளவுபுதைந்தபூமிக்குமேல்,எண்பத்தினாலாயிரம்யோசனையுயரம்விளங்காநிற்கும். எ - று கீழ்முதல்மேல்வரைநூறாயிரம்யோசனையுயரமென்றறிக. (௩௧)

அடியகலம்பதினாறாயிரமாகுமவற்றிரட்டி *
முடியகலம்பதுமமலர்ப்பொகுட்டினைப்போன்முற்றியுறும் *

புடைபரந்தமேகலையுமிடைமூன்றுபொருந்தியிடும்
முடிவிடத்துமேகலையிற்பலசிகரமுளைத்துளவே

எ-து அம்மகாமேருவினடிவிரிவுபதினாறாயிரம்யோசனை, யதனுனிவிரிவுமுப்பத்திராயிரம்யோசனை, அஃதெவ்வாற்றானெனிற்றாமரைக்காய்போலடிசிறுத்துநுனிவிரிந்துமுடிவுபெறும், அதன்புடையிலொன்றுக்கொன்றுவிரிவுஅதிகமாய் மூன்றுமேகலைபொருந்தும், அவற்றுள்நுனிமேகலையில்பலகொடுமுடிமுளைத்துண்டாயின எ று அவைவருமாறு-மேருவினடியில்அந்தராளம் இருபத்தையாயிரம் யோசனையுயரம், அதற்குமேல்முதன்மேகலையினுயரமூவாயிரம்யோசனை, அதன் புடைவிரிவுபதினாயிரம்யோசனை, அதன்மேலிரண்டாம் அந்தராள மிருபத்தையாயிரம்யோசனையுயரம், அதன்மேலிரண்டாமேகலைமூவாயிரம்யோசனையுயரம், அதன்புடைவிரிவுபதினாலாயிரம், அதற்குமேல்மூன்றாம்அந்தராளமிருபத்தையாயிரம்யோசனையுயரம், அதற்குமேல்மூன்றுமேகலையுயரம்மூவாயிரம்யோசனை, அதன்புடைவிரிவுபதினெண்ணாயிரம்யோசனை, ஆகமேகலைமூன்றுக்குமந்தராளமூன்றுக்குமுயரமெண்பத்தினாலாயிரம்யோசனையுயரமெனவறிக, பலகொடுமுடிகளாவன கிழக்குமுதல்அமராபதிமுதலியவெட்டுக்கொடுமுடிகளுமவ்வெட்டுக்கொடுமுடிகளினிடையிடையில்தேவகன்னிகைகள்முதலாயினார்வசிக்குக்காமவதிமுதலியகொடுமுடிகளிருபத்திரண்டும்விளங்காநிற்குமென்க விரிக்கில் ஆயிரங்கொடுமுடியுண்டென்க. (௩௨)

இந்திரனைமுதலாயவெண்டிசைப்பாலருமவற்றிற் *
றந்தமக்குத்தக்கதிசைக்கொடுமுடியிற்றங்கிடுவ *
ரந்தவரையெட்டினுக்குநடுவாகவணியுறவே *
முந்திமுளைத்தெழுசிகரமூன்றுளவேமூவர்க்கும் *

எ-து இந்திரன்முதலிய வெட்டுத்திக்குப் பாலர்களுந் தத்தமக்கேற்ற திசைக்கொடுமுடிகளிலிருப்பர்கள், அந்தக்கொடுமுடியெட்டுக்குநடுவி லழகுபெறத்திருவிளையாட்டுநிமித்தமாகப்பிரமவிட்டுணுஉருத்திரர்கள்மூவர்க்குமாதியிற்றோன்றியமூன்றுகொடுமுடிகளுள. எ- று.

இதன்வகை கிழக்குமுதலாகஅமராபதியிலிந்திரனுந்,தேசோவதியி லக்கினியும்,சம்யமனியில்யமனும், கிருட்டிணாங்காரவதியில். நிருதியும், சுத்தவதியில் வருணனும், கெந்தவதியில்வாயுவும், மகோதயபுரியில்சோமனும், எசோவதியி லீசானனுமிருப்பர்களென்க. எண்டிசைப்பாலருமென்றவும்மையால்அமராவதிக்குத்தெற்குக்காம

வதியிற்றேவகன்னிகைகளும், அதற்குத்தெற்குசொன்னபுரியில்சித்த வதிகளும், அ தற்குத்தெற்குசம்சமதியில் ஆதித்தர் பன்னிருவர்களும், அதற்குமேற்கு சுமாவதி யில்சாத்தியசாதிகளு, முற்கூறியவக்கினிதிக்குக்குமேற்கு ரேவதியென்னும்புரியில் விசுவதன்மியர்களு முற்கூறிய சம்பமனிக்கு மேற்குமாதிருநந்தாபுரியிற் சத்தமா தாக்களும், அதற்குமேற்குரோகிதையென்னும்புரியி லுருத்திரர்களும், அதற்குமே ற்குகுணவதியென்னும்புரியில்யமதன்மராசனுக்குப்பரிவாரமான குலத்தைத்தரித் தசத்திகளும், அதற்குமேற்கு பிங்கலபுரியில். மகாதேவன். சிவோத்தமன். உருத்தி ரன். சங்கரன். நிலலோகிதன். ஈசானன். விசையன். பீமன். தேவதேவன் பவோற் பவன். கபாலீசன். ஆகியஏகாதசவுருத்திரர்களு.முற்கூறியநிருதிக்குவடக்குக்கிருட் டிணவதியில்பசாசுகளும், அதற்குவடக்குகைமையென்னும்புரியில்மித்திரதேவர்க ளும், அதற்குவடக்குசித்தவதியில்வித்தியாதரர்களும், அதற்குவடக்குசித்தபுரியில் கின்னரரும், வாயுவுக்குக்கிழக்குகாந்தரியென்னும்புரியில் சித்திர ரதனென்னுங் கெந்தருவரும், அதற்குக்கிழக்குசித்திவாயென்னும்புரியில் தும்புருநாரதரும், அத ற்குக்கிழக்குபிரமதையென்னும்புரியில் குய்யகசாதிகளும் சோமனுக்குக் கிழக்கு சித்திரவதியென்னும்புரியில் குபேரனும், அதற்குக்கிழக்கு குபையென்னும்புரியில் தன்மதேவர்களும், அதற்குக்கிழக்குசித்திபுவா வென்னும் புரியில். மாயனும், ஈசா னனுக்குத்தெற்குபற்மபுரியில்பிரமாவும், அதற்குத்தெற்கு காமசுகாவதியில் அசுவ னிதேவர்களும், அதற்குத்தெற்குமகாமேசபுரியில் விநாயகனு மிருப்பர்களென்க, இப்புரிகளிருபத்திரண்டு முற்கூறியஅமராவதிமுதலியபுரிகள். எட்டும். கூடிமுப்ப தாயின, கீழ்மேலிரண்டிலுள்ளுஞ்சித்திர கெந்தருவதேவர்க ளிருப்பர்களென் வறிக. (௩௩)

> தடவரையினடுவுச்சிதனின்மூவாத்தசிகரத்தின் *
> வடிவுடையமநோவதிதான்மலரயன்வாள்புரியதற்குக் *
> குடதிசையிற்கொடுமுடியில்வைகுண்டங்கோவிந்தன் *
> இடம்வடபாற்குணதிசையிலெசோவதிசங்கரர்தடமே *

எ- து. அந்தமகமேருவி னடுவே பதினாயிரம்யோசனை விரிவையுமுயரத்தையுமு டைத்தாய்ச்சருவரத்னங்களாலும் விளங்குவதாயெல்லாப்போகங்களுடனுங்கூடி யமநோவதியென்னுங்கொடுமுடியில் பிரமாவெழுந்தருளி யிருப்பர், அந்தமநோவ தியென்னும்புரிக்குமேற்குப்பதினாயிரம்யோசனை விரிவையு முயரத்தையுமுடை த்தாய்ச்சருவரத்னங்களாலும் விளங்குவதா யெல்லாப்போகங்க ளுடனும்வைகு ண்டமென்னுங் கொடுமுடியில் மகாவிட்டுணு விருப்பர், அந்தமநோவதிக் கீசானதி

ளைசயிலிருபதினாயிரம்யோசனைவிரிவையுமுயரத்தையுமுடைத்தாய் வெள்ளிமயமாய் எசோவதியென்னும்பெயர்பெற்றிருக்குங் கொடுமுடியில் ஸ்ரீ கண்டபரமேசுரரொழுந்தருளியிருப்பர், எ - று. எசோவதியெனினுஞ் சோதிகிரியெனினுமொக்கும். அச்சிகரத்தைச்சூழ நந்திமுதலிய ஆட்டகணங்களுஞ்சூழ்ந்திருப்பர்களென்க. (௩௪)

மேருவைச்சுற்றியதிசைநான்கினுமுள்ள மலைமுதலியவற்றைநான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்

இத்தகையதடவன்மாயின்டிவாரத்தெல்லைதனி
லத்திரிதான்பூருவத்தின்மந்தரமொன்றமுந்தியுறு
மத்திரித்தானுயர்கந்தமர்தனந்தென்றிசையமரு
மத்திரித்தான்பச்சிமத்தின்விபுலமுறும்குறவே

எ- று. இங்ஙனங் கூறியமகமேருவுடைய அடிவாரம் நான்குதிக்கிலும்அம்மகமேருவுக்குறுதிநிமித்தமாக விட்கம்பசயிலம்நாலுள. அவையாவன. கீழ்திசையிலே பதினாயிரம்யோசனையுயரமானமந்தரபருபதஞ் சுவேதநிறமாய்ப்பூமிக்குளெண்ணாயிரம்யோசனையும்மேலேநாற்பத்தீராயிரம்யோசனையுயரமுமுடைத்தாயிருக்கும், அந்தவளவுடன்தென்றிசையிற்கனகமயமான கந்தமாதனகிரிநிற்கும், அவ்வளவுடன்பொருந்திநீலநிறம்போன்றுமேற்றிசையில்விபுலகிரிநிற்கும். எ- று. (௩௫)

உத்தரத்திற்பாருசுவவத்திரியொன்றுற்றமுந்தும்
வைத்தவளமுறையுறவேமரமொருநான்கமருமவை
யுத்தமத்தகதம்பமுதலுயர்நாவலொளிர்போதி
மொய்த்துறுபத்திரமொளிருமுதுமரமென்மொழிப்பொருளே

எ - து முற்கூறியவளவுடன்வடதிசையில்மாதளைவித்துநிறம்போன்றுபாருசுவவத்திரியென்னுங்கிரிநிற்கும், அந்தகிரிநாலிலொவ்வொருகிரியின் அடியகலமெண்ணாயிரம்யோசனையுமேலகலம்பதினாயிரம்யோசனையுயரமுமாயிருக்கும், அம்மலையுச்சிகளின்நாலுதருக்களிற்கும்,அவையாவனகிழக்குமுதலுத்தமமாகியவுயர்ச்சியையுடைய-கடம்பு - நாவல் - அரசு - நெருங்கிப்பிரகாசத்தையுடைத்தாய்த்தளிர்த்தஆலமரம் எ - று அவைகளினுயரமொவ்வொன்றுக்கு ஆயிரம்யோசனை-அவைகளின்சாகைகளைஞ்ஞூறுயோசனையுயரம் - பூக்கள் - குடம்போலவு- பழம் - யானைபோலவும் பழுத்திராநிற்குமென்க. (௩௬)

குணதிசைசயிலருணமெனுங்குளநிலவுந்தடவரைக்கீழ் *
மணமருவியமானதமுந்தென்றிசையின்வாய்த்துளது *
தணமருவுஞ்சிதோதம்பச்சிமத்திற்றங்கியுறு *
முணவினியமாமடுவும்வடதிசையினுற்றிடுமே *

எ - து கிழக்குமந்தரமென்னுமலையடிவாரத்திலருணமென்னுங்குளம்பொருந்தும் - அதிற்கடப்பம்பழச்சாற்றினின்றும் - ஆறுகள்புறப்பட்டுக்கீழ்திசையிற்பாயும், தென்றிசைக்கந்தமாதனமென்னுமலையடிவாரத்திற் கந்தமலிந்துவிளங்காநின்றமானதசரசென்னுங்குளம்பொருந்தும் - அதில்நாவற்பழச்சாறுவிழுந்துதெற்கேமேருவைச்சூழப்பாயும், மேற்றிசைவிபுலமென்னுமலையடிவாரத்திற்குளிர்ச்சியைப்பொருந்தாநின்ற சிதோதமென்னுங்குளம்பொருந்தும் - அதில் - அரசமரம்பொருந்திநின்றுபால்முதலியபஞ்சதாரையாகப்பொருந்திமேற்றிசையிற்பாயும், வடதிசையிற்பாருசவமென்னுமலையடிவாரத்திற்பொசித்தற்கினிதாகியமகாமடுவென்னுங்குளம்பொருந்தும் - அதில் - ஆலமரத்தின்சாகையினின்றுமுண்டான- பால் - தயிர் - நெய் - தேன் - முதலியபொருந்திவடதிசையிற்பாயும், எ - று (௫௭)

சயித்திரக்காப்பூருவத்தினடிவாரந்தனிற்றழைக்கும் *
விசித்திரநந்தனவனமுந்தென்றிசையின்விளங்கியிடும் *
வசித்திடுநல்வைப்பிரசவனங்குடபான்மன்னியிடு *
முசித்ததிருதாக்கியமும்வடதிசையிலொடுங்கிடுமே *

எ-து கிழக்குமலையடிவாரத்திற்சயித்திரக்காவென்னும்பெயரையுடையநந்தனவனம்விளங்காநிற்குந், தெற்குமலையடிவாரத்தில்விசித்திரையென்னு நந்தனவனம்விளங்காநிற்கும், மேற்குமலையடிவாரத்தில் வசிக்கத்தகுந்தநல்லவைப்பிராசயென்னும்நந்தனவனம்பொருந்தியிடும், வடக்குமலையடிவாரத்தில் திருதாக்கியமென்னுநந்தனவனமுண்டாகாநிற்கும். எ - று

இந்தப்பூந்தோப்புகளினடுவேநான்குவோடைகளுள-அவையாவனகிழக்குசயித்திரக்காநடுவிலநேகந்தாமரைப்பூவுடனுங்கூடியதாகமென்னுமோடையுந்தெற்கில்விசித்திரக்காநடுவின் அநேகக்குமுதோற்பலங்களுடன்கூடியமான தசரசுவென்னுமோடையுமேற்குவைப்பிராசநடுவில்செந்தாமரைகளுடன்கூடிய விமலோதகமென்றுமோடையும்-வடக்குத்திருதாக்கியநடுவிலநேக நீலோற்பலங்களுடன்கூடிய மனோரதமென்னுமோடையும்என்கஇவைவந்ததுகொண்டுவாராததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாற்கூறியவெனவறிக. (௫௮)

முற்கூறியநாவல்மரத்தின், தன்மையையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

நறவனையகனியுதிருநன்னாவலெந்நாளு *
மூறுதியுறவுயிர்க்கெல்லாந்தென்கிரியிலோங்குதலாற் *
பெறுநவகண்டமும்பெரியநாவலந்தீவெனும்பெயரை *
மறுவறுமக்கனித்தீநீர்வளாயதனைவலம்வருமே *

எ - து தெற்குமலையில்நிற்கும் நாவல்அனவரதமுந்தேன்போன்ற வினிமையையுடையபழத்தைச்சொரிந்து தன்சாற்றைப்பருகினவான்மாக்களுக் கெல்லாம் பெலமுண்டாக்கிநிற்கையால்நவகண்டங்களு நாவலந்தீவெனப்பெயர்பெறும், குற்றமற்றவினிமையுடைய அக்கனியின்சாறுகனகமயமாய்மேருவை வலமாகவந்து அந்தநாவல்மூலத்திற்திரும்பவந்தடையாநிற்கும். எ - று

நன்னாவலெனச்சிறப்பித்தமையால் அதிலொவ்வொருபழத்துக்குப்பதினெங்கலச்சாறுண்டாயிருக்குமெனவறிக, அந்தச்சாறுநாற்றிசையும்வளையப்பெருகுகையால் நாவலந்தீவெனப்பெயர்பெற்றதென்க-மறுவறுமென்பதனாலச்சாறு கனகமயமென்பதனையறிவிப்பது. (நக)

மேருவினைவலமாகிமேவியிடுமந்நீரை *
யாருமவர்களகநிறமாவரயுதாயுளுறச் *
சாரவொருமூன்றுடனுந்தங்கியவாயிரந்தழைக்க *
வூருமுயிர்மற்றையவுமுண்டதனையொளியுறுமே *

எ - து மகமேருவைவலமாகவருகிற நாவற்பழச்சாற்றை யருந்தினவர்களெல்லோரும்பொன்னிறமாய்ப் பதின்மூவாயிரம்வயதுடனேபொருந்தியிருப்பார்கள்,அவர்கண்மட்டோஅன்றுஅதனைப்பானம்பண்ணின்-ஊர்வன-பறப்பன-நடப்பன-தத்துவன-தவழ்வன-கொடிசெடிமுதலியவுங்கனகமயமாயிருக்கும் எ-று ()

அட்டகுலபருப்பதத்தின், தன்மைகளையிரண்டுசெய்யுளாலுணர்த்துகிறார்,

தடவளாயின்றென்றிசையிற்றங்கியிடுமொருசயிலங் *
குடகடலைக்கூடவொருதலைகூடக்குணகடலை *
யிடமுடையவிதன்றென்பாலித்தகைத்தோர்வளாயிசையுந் *
திடமுறமுன்முறைதிகழுமிமையகிரியதன்றென்பால் *

எ - று மகம்மேருவுக்கடுத்ததெற்குப்பதுமராகநிறம்போன்ற நிடதபருப்ப தங்கிழக்குமேற்குஞ்சமுத்திரத்தையுறநூறுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அதற் குத்தெற்காகப்பொன்மயமான ஏமகூடபருப்பதமேற்குங்கிழக்குஞ்சமுத்திரத்தை யுறத்தொண்ணூறுயிரம் யோசனைநீளமாயிருக்கும், அதற்குத்தெற்காகக்கடினமா ய்ப் பனிநிறம்போன்றஇமையபருப்பதம்-எண்பதினுயிரம் யோசனைநீளமாயிருக் கும் எ - று (சக)

வடபாகத்தொருகிரிமுன்வகுத்தபடிவதியுமதன் ❊
வட்பாலுமொருகிரிமுன்வகுத்தபடிவதியுமதன் ❊
வடபாலுமொருகிரிமுன்வகுத்தபடிவதியுமினிக் ❊
குடபாலிற்குணபாலிலோவ்வொன்றுகுறுக்குறுமே ❊

எ - று மேருவுக்குவடக்குரத்னநிறம்போன்ற நீலகிரிகிழக்குமேற்குச்சமுத் திரத்தையுறநூறுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அந்தநீலகிரிக்குவடக்காகச்சந் திரப்பிரகாசம்போன்ற சுவேதகிரிகிழக்குமேற்குச்சமுத்திரத்தையுறத்தொண்ணூ றுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அந்தச்சுவேதகிரிக்குவடக்காகச்சந்திரகாந்தநி றம்போன்றசிருங்ககிரியெண்பதினுயிரம்யோசனைநீளமாயிருக்கும், இனிமகமேரு வுக்குமேற்காகவடக்கில் நீலகிரியையுந்தெற்கில் நிடதகிரியையுமுறத்தெற்குவடக் காகநீலநிறமான கெந்தமாதனகிரிமுப்பத்திரண்டாயிரம்யோசனைநீளமாயிருக்கும், மேருவுக்குக்கிழக்காகநீலகிரியையு நிடதகிரியையுமுறத்தெற்குவடக்காகப்பொன் னிறமானமாலியவானென்னுங்கிரிமுப்பத்திரண்டாயிரம்யோசனைநீளமாயிருக் கும் எ-று இவைகளினுயரமும்விரிவும்பின்னர்க்கூறுகின்றார். (சஉ)

நவகண்டத்துள்பாரதகண்டத்தின்றன்மையையாறுசெய்யு ளாலுணர்த்துகின்றார்.

அட்டகுலபருப்பதங்களமரவிடைநவகண்டம் ❊
பட்டபடிபார்க்கவிமகிரித்தென்பாற்பாரதத்தை ❊
யொட்டிமுதலுரைத்திடுவாமதனையொழிந்தனவெல்லாங் ❊
கட்டமறுமமருலகத்தினையெனவேகருதுகவே ❊

எ - று இங்ஙனங்கூறிய அட்டகுலப்பருப்பதங்களினுடையவிடையிடையி னுள்ளதேசங்களைநவகண்டமென்றுஅறிந்திடுக, இமயகிரிக்குத்தெற்காய்த்தென் சமுத்திரத்துக்குவடக்காய்நடுவாயிருக்கிறபாரதகண்டத்தைமுதலாகத்தொடுத்

துச்சொல்வாம்,அந்தப்பாரதகண்டமொன்றையுமொழிந்தவெட்டுக்கண்டங்களுந் துக்கமின்றிச்சுகத்தையுடைத்தாயிருக்கும், அஃதெங்ஙனமென்னிற்றேவலோகத் துக்குச்சமமானபோகங்களுடன்பொருந்துமெனக்கருதுக எ - று (சாட)

பாரதமூனவதீவபாகமூறுமவற்றுள்ளுஞ் *
சீரியதுகுமரியெனுந்தீவதனிற்சிறந்திருப்ப *
ராரியராமந்தணருமல்லாருமருமறையின் *
காரியமுமுறுமதனிலின்னுமுளகழறிடுவாம் *

எ- து. அப்பாரதகண்டம் இச்சிரதீவுமுதலான வொன்பதுதீவாகப்பிரியும், அவ்வொன்பதுதீவுள்ளுங்குமரித்தீவேசிறப்புடைத்து, அக்குமரித்தீவிற் பூச்சியராயிருக்கிறபிராமணரும்அவரல்லாதமற்றவர்களுஞ்சிறந்திருப்பர்கள், அஃதன்றியத்தீவில்வேதங்களின்காரியமானயாகாதிகளும்பொருந்தும்,அஃதன்றியின்றுமுள்ளவற்றைச்சொல்லிடுவாம். எ- று.

அந்தணருமென்றவும்மையாலொருவர்க்கொருவர்தாழ்ச்சியான அரசரும். வைசியருஞ்- சூத்திரருமென்க. அல்லாதாரொன்பது. அநுலோமர். பிரதிலோமர். விராத்தியர். அந்தராளரென்க. அவர்யாரெனின். சூ. பார்ப்பாரரசர்வணிகர்வேளாளர்நாற்குலத்தவரூஉந்தங்குநடையிடையினுமுயர்ந்தவாணினுமிழிந்தபெண்ணினும் வியந்தகூட்டத்தவரநுலோமர், இழிந்தவாணினு முயர்ந்தபெண்ணினும் பெயர்ந்தகூட்டத்தவர்பிரதிலோமர், அநுலோமர்குலத்தானினு மவ்வழி பிரதிலோமகுலப் பெண்ணினுமுயர்ந்தகூட்டத்தாரேயந்தராளர், பிரதிலோமகுலத்தானினும்பின்னிலையநுலோமகுலப் பெண்ணினும் வியந்தகூட்டத்தவரே விராத்தியராகும், ஒருமொழி யொழிதன்னினங்கொளற்குரித்தே. என்பதனல். இருக்குமுதலிய நான்குவேதமும். மந்திரமுதலியஆறங்கமும். மநுமுதலிய பதினெட்டுத்தரும சாத்திரமும். காமிகமுதலியவிருபத்தெட்டுஆகமங்களும். பிரமமுதலிய பதினெண்புராணமும். மகாபாரதமிதிகாசமுதலியவு நியாயவைசேடிகமுதலியசாத்திரங்களும் வழங்குமென்க. (சச)

கங்கைமுதனதிபலவுங்காசிமுதற்பதிபலவும் *
பொங்குமயேந்திரம்பொதியமுதன்மலையும்பொருந்தியிடு *
மங்கதற்குயோசனையோராயிரமுண்டெனவறிக *
வெங்கொடியமிலேச்சரிடமெட்டினுமெண்ணுயிரமே *

எ - று கங்கைமுதலிய அறுபத்துநான்குகோடிதீர்த்தமும் - காசிமுதலிய ஆயிரங்கோடி புண்ணியஸ்தலங்களும்விசிட்டமானமயேந்திரபருவதம்பொதியபருவதமுதலியசத்தகுலபருவதங்களும்பொருந்தும் - அந்தக்குமரித்தீவினுடைய விஸ்தாரம்ஆயிரம்யோசனையுண்டெனவறிக, மற்றவிந்திரதீவுமுதலியவெட்டுத்தீவுகளும்ஒவ்வொருதீவுக்காயிரம்யோசனையாகவெண்ணாயிரம்யோசனைபொருந்தும், அவைகளிற்கொடுமைகளையுடையமிலேச்சரிருப்பர் எ - று

இங்ஙனங்கூறியஅறுபத்துநான்குகோடிதீர்த்தங்களுள்ஐஞ்ஞூறுதீர்த்தஞ்சிறப்புடையன, ஆயிரங்கோடிபுண்ணியஸ்தலங்களுள்அறுபத்தெட்டுஸ்தலஞ்சிறப்புடையன. (சரு)

இந்திரமேசேருகமேதாமிரமேயெழிற்கெபத்தி *
சந்துமாநாகமதேசவுமியமேகாந்திருவ *
மந்தமலிவாருணமேயெனவெட்டுமதித்திடுக *
விந்தவளவெண்ணிலத்துங்கிரிகிரிவிராயிரமே *

எ - று இந்திரத்தீவு - சேருகத்தீவு - தாமிரத்தீவு - அழகையுடையகெபத்தித்தீவு - நாகத்தீவு - சவுமியத்தீவு - காந்திருவத்தீவு - வருணத்தீவுஆகவெட்டுத்தீவையுமறிக, ஆகவிந்தப்பாரதகண்டத்தளவுஒன்பதினாயிரமும் - ஒழிந்த- இரமியகண்டமுதலியவெட்டுக்கு மொவ்வொன்றுக்கு ஒன்பதினாயிரம்யோசனைவிரிவெனவறிக, இமவான்முதற்சிருங்ககிரி யிறுகக்கிரியாறுக்குமொவ்வொன்றுக்குயரமுமகலமுமிரண்டாயிரம்யோசனையும்கெந்தமாதனம்-மாலியவானிந்தவிரண்டுகிரிக்குமுயரமுமகலமுமாயிரம்யோசனையுமுள எ-று இமவான்முதலியகிரிகளினுயர்வகலத்தையாண்டுக்கூறுதிண்டுக்கூறியதென்னெனின்தல்லதுமாற்றமென்னுந்தந்திரவுத்தியாற்கூறியதெனவறிக. (சகூ)

உன்னதத்தென்மயேந்திரமேயுயர்மலையஞ்சையகிரி *
விண்ணவிழுஞ்சுத்திகமேயிருக்குமுயர்விந்தியமே *
பன்னுபுகழ்மிருபாரியாத்திரமேயெனப்பகர்ந்த *
வின்னகிரியேழுமுதற்குமரிதலத்திசைந்தனவே *

எ - று தெற்குமுதல்வடக்கிருகமிகவுமுயரத்தைப்பொருந்தியமயேந்திரகிரி, மிகவுமுயரத்தைப்பொருந்தியபொதியமாமலை, சையமால்வரை-சுத்திகாசலம், இருக்ககிரி-புயர்ந்தவிந்தியபருப்பதம்-மிகுந்தபுகழுடையதென்றுசொல்லப்பட்ட பாரியாத்திரபருப்பதம், இந்தவேழுங்குமரித்தீவிற்பொருந்தும் எ - று [சஎ

அங்கமெநிர்ங்ரனிறையாற்சமாக்கியமுமணிமலையுஞ் *
சங்கமுந்தண்குமுதமுநல்வாரமெனுந்தலந்தானுந் *
துங்கமலிபொதிதென்பாற்றுடர்ந்தவடிவாரத்தி *
னங்கனகவிலங்கையுமேழ்வளைச்சாரலடித்தேசம் *

எ - து வடக்கேதொடுத்துஎதிர்நிரைநிறையாகப்பாரியாத்திரமலையடிவாரத்தில்-அங்கமென்னுந்தேசமும், விந்தியகிரியடிவாரத்திற்சமாக்கியமென்னுந்தேசமும், இருக்கபருபதத்தின்அடிவாரத்தில்-அணிமலையென்னுந்தேசமும், சுத்திகாசலத்தடிவாரத்திற்சங்கமென்னுந்தேசமுஞ், சையமலையடிவாரத்திற்தண்மைபொருந்தியகுமுதமென்னுந்தேசமும், மலையபருவதத்தடிவாரத்தில்நன்மையினையுடையவராகமென்னுந்தேசமும், மிகவுமுயர்ந்திருக்கிறபொதியமலைக்குத்தெற்காகியமயேந்திரகிரியினடிவாரத்தழகியகனகமயமாகியஇலங்கையென்னுந்தேசமும் பொருந்தும். எ - று கனகமயமானவிலங்கையென்னுந்தேசம் ரத்னபூமியுடன்கூடியைஞ்ஞூறுயோசனைசமுத்திரத்துக்குட்புகுந்திருக்குமெனவறிக-அந்தவிலங்கையொழிந்ததேசமாறும்உபத்தியெனப்பெறும் [சஅ]

கயிலையின்சிறப்பிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

இமைபகிரிவடகுணபாலிமையவர்கடொழுதேத்த *
வுமையுடனேபசுபதிதானுறைவதொருகிரிமிசையிற் *
றமையுணர்ந்ததபோதனருந்தங்குவரச்சாரிலத்திற் *
கமையுடையாரதன்பெயரைக்கயிலையெனக்கழறுவரே *

எ - து மேற்கூறியவிமயகிரிக்கீசானத்திற்றேவர்கள்வணங்கியேத்தும்படிபார்வதியுடன்பசுபதியாகிய சிவபெருமானெழுந்தருளியிருப்பன் ஒப்பற்றமலையினிடத்து-அதிற்றம்மையறிந்ததபோதனர்கள்தங்கியிருப்பர், அம்மலையின்பெயரைப்பொறுமையையுடையபெரியோர்கள்கயிலைமலையென்றுசொல்லுவர் எ-று (சகூ)

ஆகமங்களனைத்தினையுமருமறைகளொருநான்கு *
மோகமறமுனிவர்க்குமொழிந்தருளவொழிந்தனவு *
மாகருமோமாலயனுமலர்தூவித்தலைவணங்க *
வேகனிறையதன்மிசையுமிருக்கவிரும்பினனினிதே *

எ - து இமயத்துக்குவடகிழக்காகக்கிம்புருடகண்டத்தில் வெள்ளிமயமாய் நானாவிதமானசிகரங்களுடனிருக்குமக்கயிலையின்கண்ணுந்தேவர்களும்-பிரமாவும் விட்டுணுவும்-மலராலருச்சித்துத்தலையால்வணங்கவேகனாகியசிவபெருமான் இனிதாகவெழுந்தருளவிரும்பினன், அஃதியாதுக்கெனிற்சனகர்முதலியமுனிவர்களுக்

குச்சாமிகாதியானவிருபத்தெட்டுத்திவ்வியாகமங்களையும்-இருக்குமுதலிய நான்கு வேதங்களையு மற்றவைகளையு முணர்த்தியாணவாதிமலங்களைப்போக்கிச்சிவசாயுச்சியத்தையடைவிக்கையின்பொருட்டு எ – று (௫௰)

நவகண்டங்களின்பெயர்களுமவைகளிருக்குமிடங்களு
மூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

இமகிரிக்குந்தென்கடற்குமிடைப்பாகம்பாரதமே ✽
யிமகிரிமற்றேமகிரியிடைப்பாகங்கிம்புருட ✽
மமைநிலவுநிசதகிரித்தென்பாகமரிவருட ✽
மிமையவருமிருந்தபெருவளாச்சாரலிளாவிரதம் ✽

எ – று தென்சமுத்திரத்துக்குமிமயகிரிக்கும்நடுபாரதகண்டம், இமகிரிக்குவடக்குமேமகிரிக்குத்தெற்குக்கிம்புருடகண்டம், ஏமகிரிக்குவடக்குநிடதகிரிக்குத்தெற்குப்பொதுமையைப்பொருந்தப் படாநின்றஅரிவருடகண்டம், மகாமேருவைச்சூழ்ந்ததேவர்களிருக்குமிடம்இளாவிரதகண்டமெனப்பெயர்பெறும் எ – று

இமையவருமென்றவும்மையாற்சித்தர்-கந்தருவர்-இராக்கதர்-வேதாளகணங்கண்முதலியனவறிக. (௫௧)

நிலகிரிவடதேசமிரமியமேயெனநினைக ✽
பாலனையகிரிவடபாலிரணியமேயெனப்பார்க்க ✽
மேலமுளார்சிருங்ககிரிவடபாலைத்தென்பாலை ✽
யோலமிடுமுததிக்குங்குருவெனவேயுன்னுகவே ✽

எ- று. மேருவுக்குவடக்காயிருக்கிறநீலகிரிக்குஞ்சுவேதகிரிக்கும்நடு இரமியகண்டம், சுவேதகிரிக்குவடக்குச்சிருங்ககிரிக்குத்தெற்குஇரணியகண்டம், சிருங்ககிரிக்குவடக்குமாரவாரத்தையுடையவடசமுத்திரத்துக்குத்தெற்கு நற்குணமேசுபாவமாகவுடையவர்களிருக்குங்குருகண்டமெனவறிக. எ- று. (௫௨)

குடகடற்குக்கிழக்கேதுமாலமெனக்குறித்திடுக ✽
மிடலுடையவியன்கந்தமாதனத்தின்மேற்கதுதா ✽
னிடமுடையமாலியவானெனுங்கிரிக்குக்கிழ்பாற்கிழ்க் ✽
கடலினுக்குமேல்பாகம்பத்திரமாக்கருதுகவே ✽

எ- று. மேற்சமுத்திரத்துக்குக் கிழக்குப்பெலத்தையுடைய கெந்தமாதனகிரிக்

குமேற்குகேதுமாலகண்டம், விரிவையுடையமாலியவான்கிரிக்குக்கிழக்குக்கிழக்குச்சமுத்திரத்துக்குமேற்குப்பத்திராசுவகண்டமெனப்பெயர்பெறும். எ- று. (ருந)

பாரதகண்டமொழிந்தவெட்டுக்கண்டத்திருப்பார் குணவுமுதலி
யவற்றையெட்டுச்செய்யுளாலுணர்த்துகின்றார்

உண்டிடுவர்கருங்குவளையுருவமதியனையராரி *
கண்டமதிற்கலந்திருப்பார்காலமுமோராயுதமுள *
கண்டமிப்பின்கனியுணவுகருங்குவளைநிறமாயு *
வண்டயுதமுயர்கேதுமாலத்தினுறைவார்க்கே *

எ- து. அந்தப்பத்திராசுவகண்டத்திருப்பவர்கள் செய்தற்பூவைப்பொசித்துச்சந்திரப்பிரகாசம்போன்றநிறத்தைப்பெற்றுப்பதினாயிரம்வயதையுடையராயிருப்பர்கள். கேதுமாலகண்டத்திலிருக்கிறவர்கள்வருக்கைப்பலாப்பழத்தைப்பொசித்துநீலநிறத்தையுடையராய்ப்பதினாயிரம்வயதுபொருந்தியிருப்பர்கள். எ- று. அரிகண்டமெனினும்பத்திராசுவகண்டமெனினுமொக்கும். (ருச)

ஆயுங்காற்குருகண்டத்தமர்வார்கடமக்கெல்லா *
மாயுவுமூவாயிரமுமயுதமும்வேண்டியகனியுண் *
டேயுமுடற்பச்சைநிறஞ்சிறுவருளரிருவரவ *
ராயுதரத்தொருபொழுதினாணைப்பெண்ணெனவமர்வார் *

எ- து. குருகண்டத்திலிருக்கிறவர்கள் சொருபத்தை விசாரிக்கிற்பதின்மூவாயிரம்வயதுடன்பொருந்தியெப்பொழுதுமெவ்வன்னராய்ப்பொற்கொன்றைநிறத்தையுடையராய்த்தமதுகருத்துக்குவேண்டினமரத்தின்பழத்தைப்பொசித்திருப்பர்கள், அவர்களுக்கொருபொழுதுக்குள்ளேகருப்பந்தரித்துஆண்பெண்ணெனவிரண்டுபிள்ளைகள்பிறந்திருப்பார்கள். எ- று. (ருரு)

அத்தகையகுருகண்டவடபாகமதுதன்னிற் *
சித்தரொடுமுனிவருஞ்சாரணருஞ்செறிந்திருப்பர் *
துய்ப்பதுவுமூலபலஞ்சோமனெனத்துளங்கொளியா *
ருத்தமத்தசந்திரதிவெனும்பெயருமுளததற்கே *

எ - து முற்கூறிய குருகண்டத்தில்வடக்குச்சமுத்திரத்துக்குள்ளே யெண்ணாயிரம்யோசனையுள்ளதீவிற்சித்தர்களுமுனிவர்களுந்திகம்பரர்களுநெருக்கியி

ருப்பர்கள், அவர்கள்பொசிக்கிறதுமிழங்குங்கனியும் அவர்கள்சந்திரனைப்போலும்விளங்காநின்றபிரகாசத்தையுடையார், அந்தத்தீவுஉத்தமமானசந்திரதீவெனப்பெயர்பெறும் எ - று (௫௬)

ஆயுவயுதத்துடன்மூவாயிரமுமவர்க்குண்டு *
வாயுதிசைதனிற்பத்திராகரமேவாய்த்தபெயர் *
தேயமுமுண்டதிற்றிகழ்வார்சித்தருநன்முனிகளுமு *
மாயுமியற்சாரணருங்கனிமூலமருந்துவரே *

எ - து அந்தச்சந்திரதீவிலிருப்பார்க்குப்பதின்மூவாயிரம்வயதுண்டு முற்கூறிய குருகண்டத்தின்வாயுதிக்கில்வடக்குச்சமுத்திரத்துக்குள்ளேநாலாயிரம் யோசனைக்கப்புறத்தில் பதினாயிரம்யோசனைவிரிவையுடையபத்திராகரதேசமெனவொரு தீவுண்டு-அதிற்சித்தர்களு மிருடிகளு-மியலையாராயப்படாநின்ற திகம்பரர்களுந் திவ்வியமானமரத்தின்கனிகளையுங்கிழங்குகளையும்பொசித்துக்கொண்டிருப்பார்கள். எ - று (௫௭)

செங்கமலநிறமுடையர்திகழ்மூவாயிரவயுதந் *
தங்கிடுவரிரணியத்தினிற்றங்குநர்நல்லிருசபல *
நுங்கிடுவர்மதியனையநிறமுடையர்நுவலுங்கா *
லங்கயுதமைஞ்ஞூறாயிரமுமவர்நிலையே *

எ - து முற்கூறியபத்திராகரத்தீவிலிருக்கிறவர்கள்செந்தாமரைபோன்றநிறத்தையுமுடையராய்ப்பதின்மூவாயிரம்வயதையும்பொருந்தியிருப்பர்கள், இரணியகண்டத்திலிருக்கிறவர்கள்நல்லஎலுமிச்சம்பழத்தைப்பொசித்திருப்பர்கள், அவர்களுடையநிறத்தைச்சொல்லுமிடத்துச்சந்திரப்பிரகாசம்போன்றிருப்பர்கள், அவர்களுக்குப்பன்னிராயிரத்தைஞ்ஞூறுவயதுண்டு எ - று (௫௮)

உற்றிடுவார்க்கிரமியத்திலொளிகரியகுவளைநிறந் *
நும்றுவதாலின்கனியேதொடர்வருடமவர்க்கயுத *
மற்றுமிரண்டாயிரமுண்டரிவருடமருவினர்க்குப் *
பற்றியமெய்யொளிவெள்ளிபானமுந்திங்கரும்பாமே *

எ - து இரமியகண்டத்திலிருக்கிறவர்களுக்கு நெய்தற்பூப்போன்றநிறம் அவர்களுக்குப்பொசிப்பு ஆலம்பழம்-அவர்களுக்குவயதுபன்னிராயிரம், அரிவருடகண்டத்தில்வசிக்குமவர்களுக்கும் பன்னிராயிரம்வயது-அவர்கள்தேகத்திற்பிரகாச

ம் வெள்ளிநிறம்போன்றிருக்கும்-அவர்கள்பொசிப்பு இனிய கருப்பஞ்சாறும். எ-று (ருக)

பொன்னுருவர்கிம்புருடர்புசிப்பிறவிப் புன்கனியே *
மன்னுமயுதாயுவுளர்மனக்கவலைதனையில்லார் *
கின்னமிலர்நரைதிரையுங்கிளருடலிற் பிணியினையு *
மின்னமுறைமற்றையவேழ்கண்டத்துமெண்ணுகவே *

எ- து. கிம்புருடகண்டத்திலிருக்கிறவர்கள் பொன்னிறமாயிருப்பர்கள், அவர்கள்பொசிப்பு. இத்திக்கனி அவர்களுக்கு நிலைபெற்றவயதுபதினாயிரம், அவர்கள்மனக்கவலையுமின்றியத்தியாத்மிகமுதலிய துக்கத்திரையங்களும் நரைதிரையுமின்றி மிகவுஞ்சந்தோஷத்துடனேகூடியிருப்பர்கள், அந்தக் கிம்புருடகண்டத்துக் குற்றபடிமற்றையேழுகண்டத்திலிருப்பார்களுக்கும்பொருந்துமெனக்கருதுகஎ- று(கூ௰)

ஈங்குரைத்தவிருநான்கு கண்டத்துளெல்லோர்க்கு *
மோங்கிவிடுங்கிருதயுகம்போலொழிந்தயுகமெல்லா *
நீங்கரியநன்மையினைநிறுத்திவிடுநிறையறிவு *
தாங்கிடுவரவருடலினுரமாதிதன்னையுமே *

எ- து. வெளி. (கூக)

பாரதகண்டத்திலிருக்கிறவர்கள் தன்மையை யிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

அறிவுவலியாயுளுருவாகாரமவையெல்லாஞ் *
செறியுமுகத்தினுக்கிசையப்பாரதத்துட்டிகழ்வார்கட் *
குறுமுணவுபுலத்துழலாலுழுவதுமின்றியுமுண்டு *
பெறுபலமுந்தைவிகமாதிய மூன்றிற்பிறழாவே *

எ- து. பாரதகண்டத்திலிருக்கிறவர்களுக்குஅறிவும்பெலமுஞ்சரீரமுங்கிருதயுகம்போலாதுமற்றையவுகங்கட்குத்தக்கபடிபேதமாகப்பொருந்தும், அவர்கட்குவயலுழவுமுதலியதொழிகளினாலுண்டாகியதேபொசிப்பு. அஃதன்றியுமுழுவினையாமற்றானேயுண்டாகியகுளச்செந்நெல்புல்லரிசி காட்டிலுள்ளகாய்கனிமுதலியபொசிப்புகளுமுண்டுஅவர்கள்அத்தியாத்மிகம். ஆதிதைவிகம். ஆதிபௌதிகம். எனக்கூறியதுக்கத்திரையங்களையுமொழியாமலனுபவிப்பார்கள். எ- று.

றக்கேற்றிரையமாவன தேவர்களால்வருந்துன்பம். ஆதிதைவிகம். பிருதிவிமுதலிய பூதங்களால்வருந் துன்பம் ஆதிபௌதிகம், இராசா. மிருகம். பசு. பக்ஷி. முதலியவற்றால்வருந்துன்பம். ஆத்தியாத்மிகம். என்னை: வெண்பா. கருவிற்றுயர்செனிக்குங் காலைத்துயர்மெய், திரைநரைமுப்பிற்றிலைத்துச்செத்து, நரகத்தின், ஆழுந் துயர்புவியையாளின்பமாதியெலாம், ஊழுதவுதைவிகமென்றேர் (௧)

பனியாலிடியாற்படர்வாடையிற், றனிதென்றலின்றுஞ்சுகமுந் - தனையனைய. தீரிறுமின்பின்னதுநெருப்பிருந்துயரின், போரிற்பவுதிக மாகும். (௨)

தன்றுற்பிறரற்றனக்குவருந்திக்குநல, மின்றுவிலங்கரவந்தேளெறும்பு, சென்முதனி - ரட்டையலவன்முதலினரவமாதியிறுந், கட்டமுமிங்காத்மிகமெகாண்டு (௩௨)

மற்றையநற்றலமெவற்றும்வாழ்வார்கள்பாரதத்தைப் *
பற்றிவினைபலம்பயின்றார்முற்பலத்திலெனப்பார்க்க *
முற்றியுறவினைபலவுறாத்ததலமிதுவதனுன் *
முற்றவினையினைவருமிவ்விடமதனுன்முயல்வாரே *

எ - து பாரதகண்டங்கன்மபூமியாகையான் முற்செனனங்களிலார்ச்சித்த கன்மபலத்தையாண்டநுபவித்துஅந்தக்கன்மபலத்தாலேகிம்புருடமுதலியவெட்டுக்கண்டங்களிலுண்டாகிய போகபேதங்களையாண்டாண்டு பொசித்திருப்பர்களெனவுரைக்க, ஒருகருமஞ்செய்தவன் அந்தத்தலத்திலேயிருந்து அந்தந்தப்பலத்தைப்பொசியாமல்வேறோர்தலத்திலேயப்பலம்பொசிக்குமாறுபோலவிந்தப்பாரதகண்டத்திலேகன்மபரிபாகமானவாறேமற்றக்கண்டங்களையடைந்திருந்துபோகங்களைப்பொசித்துத்தொலைத்தவாறேபின்பிந்தப் பாரதகண்டத்தைவந்தடைந்துஎல்லாருஞ்சற்கன்மங்களையேபண்ணுவர்கள் எ - று (௩௩)

நவகண்டத்தின்யோசனையளவையுணர்த்துகின்றார்

தென்றிசைப்பாரதமாதிசிறந்தபெருவரைவடபாற் *
குன்றமொராறுமன்றிறுக்குமப்பாலைக்குருவந்தத் *
தொன்றியிடும்யோசனையுமொருநூறாயிரமுண்டு *
நின்றகுணக்கொடுகுடக்குதமிவ்வாவேநிகழ்த்துங்கால் *

எ - து தெற்குப்பாரதகண்டமுதல்மேருவுக்குவடக்காயிருக்கிற நிலகிரிமுதலிய மூன்றுகிரிக்குமப்பாலாயிருக்கிற குருகண்டமீறுகப்பொருந்தப்பட்டயோசனைநூறுயிரமானவறிக,மற்றைக்கிழக்குமேற்குநூறுயிரம்யோசனைவிரிவுண்டு எ-று

அவைவருமாறு - பாரதகண்டம் - ஒன்பதினாயிரம்-கிம்புருடகண்டம்-ஒன்பதினாயிரம்-அரிவருடகண்டம் - ஒன்பதினாயிரம் -இளாவிரதகண்டம்-பதினெண்ணாயிரம்-மகமேரு-பதினாறாயிரம்-இரமியகண்டம்-ஒன்பதினாயிரம்-இரணியகண்டம்-ஒன்பதினாயிரம்-குருகண்டம்-ஒன்பதினாயிரம்-சிருங்ககிரிமுதலிமவானீறாகமலையாறுக்கும்-பன்னீராயிரம்-ஆகத்தெற்குவடக்குத்தொகையானேநூறாயிரம்யோசனை யெனவறிக, பத்திராசுவகண்டம்-முப்பத்தீராயிரம்-மாலியவான்கிரி-ஆயிரம்-இளாவிரதகண்டம்-பதினெண்ணாயிரம்-மகாமேரு-பதினாறாயிரம்-மேற்குக்கெந்தமாதனகிரி-ஆயிரம் கேதுமாலகண்டம்முப்பத்தீராயிரம்-ஆகக்கிழக்குமேற்கும்நூறாயிரம்யோசனையுண்டென்க (சுச)

நவகண்டத்தின்பெயர்க்காரணமுணர்த்துகின்றார்

மனுகுலத்துள்வருமங்கிநேத்திரனாமன்னவன்றன் *
றனையர்பரதனை முதலோர்சவுரியவொன்பதின்மருளர் *
இனையவர்களாண்டமையாலெய்தியபேரெனவிவற்றை *
நினைகபரதனுக்குரிமைபாரதமேநிகழ்த்துங்கால் *

எ - து. இந்தநாவலந்தீவில்மனுகுலத்தில்வரப்படாநின்றராசா அக்கினிநேத்திரன்-அவனுக்குப்பரதன்-கிம்புருடன்- அரி-இளாவிரதன்-பத்திராசுவன்-கேதுமாலி-இரமியன்-இரணியன்-குரு-எனவீரப்பாட்டையுடையபுத்திரரொன்பதின்மருளர், இந்தக்கண்டங்களை யொவ்வொருத்தராக வொன்பதின்மரும்பிரித்தாண்டமையாலவர்களவர்கள்பெயராலேயந்தக்கண்டங்களின்பெயராயிற்று, அதில்பரதனென்னு மரசனிக்கண்டத்தையுரிமையாகவாண்டமையால் பாரதகண்டமெனப்பெயராயிற்று எ - று

ஏகாரந்-தேற்றம்-அஃதென்போலென்னிற்பாண்டியன்-சோழன்-ஆண்டதேசத்தைப்பாண்டிமண்டலஞ் சோழமண்டலமென்றாற்போலென்க, சுவாயம்புவென்னுமனுவின்புதல்வன்பிரியாவிரதன்அந்தப்பிரியாவிரதன்புத்திரர்கள்-பதின்மருள்ர், அந்தப்பதின்மருள் -மேதா-அக்கினி-வாகு-என்னும்மூவரும் வயிராக்கியத்தாலே சன்னியாசமாயிருந்தார்கள், மற்றஅக்கினிநேத்திரன்முதலிய வெழுவருஞ் சம்புத்தீவுமுதலிய வேழுதீவையுமொவ்வொருத்தராகப் பிரித்தாண்டார்களெனவறிக. (சுரு)

ஏழுதீவினளவுமேழுகடலினளவுநான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்.

என்றுகயோசனையிலக்கமென்பினையாவலந்தீ *
வென்னிடுகவிதன்புடைசூழுவரிவிரிவிப்படியென் *
றெண்ணிடுகவிதற்கப்பாற்சாகமிரண்டிலக்கமெனக் *
கண்ணிடுகவதற்கப்பாற்பாற்கடலுமக்கணக்கால் *

எ - து இந்நாவலம் பெருந்தீவை நூறாயிரம்யோசனைநீளமென்று கருதுக இந்நாவலம்பெருந்தீவைச் சூழ்ந்தவுப்புக்கடல்நூறாயிரம்யோசனையென்று கருதுக, இந்தவுப்புச்சமுத்திரத்துக்கப்பாற்சாகத்தீவுஇரண்டுநூறாயிரம் யோசனை,அந்தச்சாகத்தீவுக்கப்பாற்பாற்கடலிரண்டு நூறாயிரம்யோசனைதூரம் எ - று

முற்காலத்திற்பருப்பதங்களெல்லாஞ்சிறகுடனேகூடப்பறந்தொருதேசத்திற்போயிருக்கிறபொழுததிலிருக்கிறபிராணிகளுக்குமிகவும்பீடைவருகையால்தேவர்களெல்லாருந்தாக்கித்த இந்திரனுக்குமுறையிடஅப்பொழுதிந்திரன் அப்பருப்பதங்களினுடையசிறகைச்சேதித்தபோது பயப்பட்டிலவணசமுத்திரத்திற்பன்னிரண்டுகிரிகள்பறந்துவந்துகிழக்குமுதலியதிக்குகளில்விழுந்தன - அவையாவன - கிழக்குச்சமுத்திரத்தில்இடபகிரி-துந்துபிகிரி-தூமிரகிரி-மூன்றும்-தெற்குச்சமுத்திரத்திற்-சக்கரகிரி-மைநாககிரி வலாககிரி-யெனமூன்றும்-மேலைச்சமுத்திரத்திற்சோமகிரி-வராககிரி-நந்தனகிரி-எனமூன்றும்,வடக்குச்சமுத்திரத்தில்-கங்ககிரி-சந்திரகிரி-துரோணகிரி-எனமூன்றுமாகப்பன்னிரண்டுமெனவறிக, அவற்றிற்சக்கரகிரிக்குமைநாககிரிக்கும்நடுவேகுதிரைமுகம்போன்றவடவாமுகாக்கினியெப்போதுஞ்சொலித்துக்கொண்டிருக்குமெனவறிக,இரண்டாவதாகியசாகத்தீவுக்குஇராசாமேதாதிதி-அந்தஇராசவுக்குப்புத்திரர்களெழுவருளர்-அவர்கள்யாவரெனிற்சாந்தன்-அபயன்-சிரமுகன்-அனந்தன்-சிவன்-க்ஷேமன்துருவனென எழுவரையும்அபிடேகம்பண்ணியவர்களவர்கள்பெயராலத்தீவையேழாகப்பிரித்துக்கொடுத்தான்-அந்தச்சாகத்தீவிற்கோமேதகம்-சந்திரசம்சயகம்-நாரதம்-மந்தரஞ்-சோமகம்-இடபம்-வைப்பிராசம்-என்றமலைகளேழுமுளஅம்மலைகளினின்றும்அகிருதைமுதலியநதிகளேழும்-புறப்பட்டுப்பாற்கடலிற்போய்விழும், அந்தத்தீவிலிருக்கிறபேயர்க்குப்பொசிப்புப்பால்-அவர்கள்நிறஞ்சந்திரப்பிரபைபோன்றிருப்பர்கள்,அந்தத்தீவில்சாகமென்றமரம்நிற்கையாற்சாகத்தீவெனப்பெயர்பெற்றதென்க,அந்தப்பாற்கடலில்வடக்கேவேதீவில்-நடுவேவைகுண்டம், அதில்அநேகங்கோபுரமும்பிராகாரமுமுளஅவ்விடத்திற்கமலையாருடன்கூடித்திருமாலாதிசேடன் மேல்சயனஞ்செய்வரெனவறிக. (௬௬)

எண்ணிடுகவதற்கப்பாற் குசைத்தல நான் கிலக்கமென ✽
வெண்ணிடுகவதற்கப்பாற்றதியுதநிமுனையிலக்கத் ✽
தெண்ணிடுகவதற்கப்பாற்கிரவுஞ்சமெட்டிலக்க ✽
மெண்ணிடுகவதற்க்ப்பாநெய்க்கடலுமெட்டெனவே ✽

எ - து முற்கூறியபாற்கடலுக்கப்பாற்குசைத்திவுநான்குநூறுபிரம்யோசனை, அந்தக்குசைத்தீவுக்கப்பாற்றயிரக்கடல்நான்குநூறுபிரம்யோசனை, அந்தத்தயிர்க்கடலுக்கப்பாற்கிரவுஞ்சத்திவுஎட்டுநூறு பிரம்யோசனை, அந்தக்கிரவுஞ்சத்திவுக்கப்பால்-நெய்க்கடலுமெட்டுநூறுயிரம்யோசனைவிரிவுண்டு. எ - று

அந்தக்குசைத்தீவிற்பொன்மயமான குசைநிற்கையா லப்பெயர்பெற்றது, அந்தக்குசைத்தீவுக்குஇராசா- வசு- அந்தவசுவென்னுமிராசாவுக்குப்புத்திரர்களெழுவர் அவர்யாவரொன்னில்சுவேதன். லோகிதன். சீமுதன். அரிதன். விபுத்தியுதன். மானசன். சுப்பிரதன். என்கஅவ்வெழுவர்களும் பிரித்தாண்டமையால். அவரவர்பெயராலத்திவு. ஏழுபிரிவாயிற்று, அவ்வேழுதீவுக்குமேழுகிரியுள. அவையாவனகுமுதகிரி, ஊநதகிரி. வராககிரி. துரோணகிரி. கங்ககிரி. மயிடகிரி. குமுதவானகிரி. என்க, அந்தக்கிரிகளினின்றுஞ்சுவேததோயநதிமுதலிய வேழுநதிகளும் புறப்பட்டுத்தயிர்க்கடலிற்போய்வீழும், அதிலிருப்பார்க்குப் பொசிப்புத்தயிர். அஃதன்றிபலங்களமிர்தமிகவயிற்றையும்பொசித்திருப்பார்கள், இனியக்கிரவுஞ்சத்திவுக்கு இராசா சோதிமான். அந்தஇராசாவுக்கு ஏழுபுத்திரர்களுளர், அவர்கள்யாவரொன்னில். உற்பிதன். வேணு. மண்டலன். இந்தகாரன். திருதிமான். சுப்பிரபாகன். கபிலன். என்கஅவ்வேழுபுதல்வர்களும்பிரித்தாண்டமையால் அவரவர் பெயராலத்திவுஏழுபிரிவாயிற்று, அவ்வேழுதீவுக்கு மேழுகிரியுள. அவையாவன. வித்துருமகிரி. ஏமநாமகிரி. திருதிகிரி. புட்பதெந்தகிரி. குசலகிரி. லோகிதகிரி. மந்தாகிரி. யென்க, அந்தவேழுகிரிகளினின்றும்மகிபாபாவென்னுநதிகள்முதலியவேழும்புறப்பட்டுநெய்க்கடலிற்போய்வீழும், அந்தத்தீவிலிருக்கிறவர்கள் நெய்மயமாயிருக்கிற அமிர்தபலசாரங்களைப்பொசித்திருப்பர்கள், அவர்களுக்கு நிறமுற்கூறியதே. அக்கிரவுஞ்சத்திவில். ஏமநாமகிரியில்கிரவுஞ்சனென்னுமசுரன்சிறிதுநாளாண்டுகொண்டிருந்து குமாரசுவாமியுடன் போர்செய்து மரிக்கையா லதுகிரவுஞ்சமெனப்பெயர்பெற்றதென்க (கூஎ)

எண்ணிடுகவதற்கப்பாற்சால்மலியெண்ணிரண்டிலக்க ✽
மெண்ணிடுகவதற்கப்பாலிக்கிரதமுற்படியே ✽

பெண்ணிடுகவதற்கப்பாற்கோமேதமென்றான்கென் *
றெண்ணிடுகவதற்கப்பான்மதுக்கடலு ழனையென்றால் *

எ- து. முற்கூறியநெய்க்கடலுக்கு அப்பாற் சான்மலித்தீவு பதினாறுநூறுயிரம் யோசனை, அந்தச்சான்மலித்தீவுக்கப்பாற் கருப்பஞ்சாற்றுக்கடல்பதினாறுநூறுயிரம்யோசனை, அந்தக்கருப்பஞ்சாற்றுக் கடலுக்கப்பாற் கோமேதத்தீவுமுப்பத்திரண்டுநூறுயிரம்யோசனை, அந்தக்கோமேதத்தீவுக்கப்பாற் சுராக்கடல்முப்பத்திரண்டுநூறுயிரம்யோசனைவிரிவு. எ- று.

அந்தச்சான்மலித்தீவுக்குஇராசா-கந்தமான்-அந்தஇராசாவுக்குப்புத்திரர்களெழுவர்-அவர்யாவரொன்னில்நமோதற்கன்-தனுசமான்-பாவகன்-அந்தகாரகன்-முனி-துந்துமி-குசலன்-என்க,அவ்வெழுவர்களும்பிறித்தாண்டமையாலவரவர்பெயராலத்தீவெழுபிறிவாயிற்று, அவற்றிற்கிரிகளேழாவன-கிரவுஞ்சகிரி-வாமனகிரி-அந்தகாரகிரி-திவாகிருதகிரி-திவிபிந்தகிரி-புண்டரீககிரி-துந்துபிகிரியென்க, அவைகளினின்றும்-புண்டரீகமுதலியநதிகளேழும்புறப்பட்டுக்கருப்பஞ்சாற்றுக்கடலிற்போய்வீழும், அதிலிருக்கிறவர்களுக்குப்போசிப்புகருப்பஞ்சாறு, அந்தத்தீவிலாயிரம்யோசனையுயரத்தையுமுடைத்தாய்க்கனகமயமானஆதித்தப்பிரபைபோன்றிருக்கிறஇலவமரநிற்கையாற்சான் மலித்தீவெனப்பெயர்பெற்றதென்க, இனிகோமேதத்திவுக்கு இராசாஅவ்வியவாகனன் அந்தவிராசாவுக்குப்புத்திரர்களெழுவர் அவர்யாவரொன்னில்-செலதன்-குமாரன்-சரித்தகன்-குமுதன்-கந்தனன்-மகாமத்திரன்-சுகுமாரன்-என்க-அவ்வெழுவர்களும்பிறித்தாண்டமையாலவரவர்பெயராலத்தீவெழுபிறிவாயிற்று, அவற்றிற்கிரிகளேழாவன கேசரகிரி சேடககிரி-சுரதவதகிரி-அம்பிகிரி-செயோபகிரி-மேககிரி-சிங்ககிரியென்க, அவைகளினின்றுங்கெபத்திமான்முதலியவேழுநதிகள்புறப்பட்டுமதுக்கடலிற்போய்வீழும், அந்ததீவிலிருக்கிறவர்களுக்குப்போசிப்புச்சுவாதுபலங்கள், கோமெதத்தீவெனப்பெயர்பெற்றதுயாதெனில், மனுகுலத்திற்கோபதியென்னும்பெயரையுடையவிராசாகோசலனென்னும்பெயரையுடையயாகநிமித்தமாகத்தேவேந்திரனுடையயாகத்துக்கதிபதியாயிருக்கிறபிருதுமகாவிருடியைவரிக்கையால்கௌதமர்இந்திரனுடையயாகத்துக்குவந்திருக்கிறவிவரைவரிக்கலாமோவென்றுஅந்தவிராசாவைக்கோபாக்கினியாற்சபிக்க-அந்தவிராசாவுமந்தயாகநிமித்தமாகவந்திருக்கிறபசுக்களும்நாசத்தையடைந்து அந்தப்பசுக்களுடையநிணமிருந்ததீவைமறைக்கையாலதற்குக்கோமேதத்தீவெனப்பெயராயிற்று. (௯௮)

என்றுகயோசனையெட்டெட்டிலக்கமெனவதற்கப்பா *
லன்னியபுட்கரணிதலத்தகலத்தையதற்கப்பா *

லண்ணியசுத்தோதகத்நிகலமுமுன்னறைந்தபடி *
திண்ணியமால்வரையுமினியிவற்றினுக்குத்தெரிப்பாமே *

எ- து. முற்கூறியசுரைக்கடலுக்கப்பாற் புட்கரணி தலத்தகலத்தை யறுபத்து நான்குநூறுயிரம்யோசனையெனக்கருதுக, அந்தப்புட்கரணித்தீவுக்கப்பால். நல்ல தண்ணீர்க்கடலினகல மறுபத்துநான்குநூறுயிரம்யோசனை, சாகமுதலியதீவிற்க டினமாய்ப்பருத்திருக்கிறமலைகளைத்தொகுத்துச்சொல்வாம். எ- று.

அந்தப்புட்கரணித்தீவுக்குஇராசா. அசன். அந்த விராசாவுக்குப் புத்திரர்களிருவர் அவர்யாவரென்னில். தாக்கியன். மத்தியனென்க, அவ்விருவரும் பிரித்தாண்டமை யாலவரவர்பெயராலத்தீவிரண்டுபிறிவாயிற்று, அவற்றிற் கிரிகளிரண்டாவன. மந் தரகிரி. உத்தரகிரியென்க, அந்தக்கிரிகளிரண்டுமென்பதுயோசனையுயரமு மிருபத்த ஞ்சுயோசனைவிரிவுமாயிருக்குமென்க. (சுகூ)

சாகத்தீவுமுதலியதீவின்மலைகளினதளவையுணர்த்துகின்றுர்

சாற்றிடுஞ்சாகமுதலைந்தினுக்குந்தடவரையு *
மூற்றமிகுமெவ்வேழுண்டொருகிரிசக்கரம்போல *
மாற்றறவேபுட்கரணிதலத்தைவலமாய்வதியுந் *
தேற்றுததிமுடிவிடத்துந்திகழுமொருவரையதுபோல் *

எ- து. சாகத்தீவுமுதலியவைந்துதீவினு மொவ்வொன்றுக் கெவ்வேழாகமுப்பத் தைந்துமலைகளுண்டு, அஃதன்றி. புட்கரணிதீவிலிருக்குமொப்பற்றமானதகிரி. யந் தத்திவைச்சக்கரம்போலயிடைவிடாமல்வலமாகச்சூழ்ந்திருக்கும்,அஃதன்றிச்சுத் தோதகசமுத்திரத்தைச்சூழவிடைவிடாமல்சக்கரவாளகிரிவிளங்கும். எ- று.

ஐந்திறுக்குமென்றவும்மையாற்புட்கரணித்தீவில்மலைகரளிண்டிருக்கின்றன, ஆகத் தீவு. ஆறுக்குக் குலபருப்பதங்கள் முப்பத்தேழெனவறிக, தடவரையு மென்றவும் மையாற்சாகமுதலியவைந்துதீவினுள்ளு முப்பத்தைந்துநதிகளுமுண்டென்க, புட் கரணித்தீவிலிருக்கு மானதகிரியிற் கிழக்குமுதலிய நான்குதிக்கினுமுலகபாலர்கள் நால்வர்க்குநான்குபுரியுள, அவையாவன. இந்திரனுக்கு விசுவோகசாநு வென்னும் புரியும் இயமனுக்குச்சங்யமனியென்னும்புரியும், வருணனுக்குச் சுத்தவதி யென்னு ம்புரியும், சோமனுக்கு விபாவதியென்னும் புரியுமென்க, தேவபூசை நிமித்தமாகச் சொன்னமயமானதாமரைப்பூ அத்தீவின்கணுண்டாயிருக்கையா லந்தத்திவுபுட்கர ணித்திவெனப்பெயர்பெற்றது, மலைகளையும் நதிகளையுமீண்டுக்கூறியிருக்க.ஆண்டுக் கூறியதென்னைடெனின். ஈண்டாசிரியர் தொகுத்தமையா லாண்டுஒப்பின் முடித்த

லென்றார்த்திரவுத்தியாற்கூறியதெனவறிக. (௭௰)

சாகமுதலியதீவிலிருப்பார்கள்தன்மையையுணர்த்துகின்றார்

சாகமுதலிருமூன்றிற்றங்குநர்கடமக்கெல்லாஞ் *
சோகமிலையெந்நாளுந்தூய்த்திருப்பர்சுகமவர்தம் *
மாகமநினைவுமில்லத்திரையுமயுதாயுளர் *
மோகமிலர்கலியுகத்துங்கிம்புருடர்முறைபெறுவார் *

எ - து சாகதீவுமுதலாறுதீவிலுமிருக்கிறவர்கள், சம்புத்தீவினுட்குமரிகண்டத்திலிருக்கிறவர்களைப்போலவெப்பொழுதுஞ்சுகதுக்கமுறாமல் சுகவாசியாய்நரைதிரைமூப்பின்றிநித்தியயௌவநராய்ப்பதினாயிரம்வயதுடையராயிருப்பர்கள் அந்நெறிக்கலியுகத்துமோகமில்லாதவராய்க்கிம்புருடகண்டத்திலிருக்கிறவர்களுக்கொத்திருப்பர் எ - று (௭௧)

பூலோகத்தைத்தொகுத்துணர்த்துகின்றார்

எழுதீவுமெழுகடலுமிமயமேருநிலனுங் *
தழல்போலுமொளியிப்பாற்றமமப்பாற்றருமலையுங் *
குழுவாயபேரிருளுமதற்கப்பாற்குளகடலு *
மழுகாயவண்டகடாகாந்தமும்பூதலமாமே *

எ - து சம்புத்தீவுமுதலியவேழுதீவும்-லவணசமுத்திரமுதலிய வேழுகடலும்-பொன்மயமானபூமியும் அக்கினியைப்போலுமொளிமுற்பாகத்திலும்இருள்பிற்பாகத்திலுமுடையலோகோலோக்கியமென்றும்பெயர்பெற்றசக்கரவாளகிரியுமந்தகாரபூமியுமாரபாகத்தையுடையபெரும் புறக்கடலுமண்டகடாகமுடிவுமாகிய விவையெல்லாம்பூலோகமெனப்பெறும் எ-று (௭௨)

சக்கரவாளகிரியின்றன்மையையுணர்த்துகின்றார்

இசைத்தவிதத்திருளொருபாலொளியொருபாலேய்ந்தகிரி *
வசிப்பர்முதற்பாகத்தின்வடிவியக்கரிராக்கதரும் *
பசுத்தவிராக்கதர்நாம்பைசாசர்திசைப்பாலகரு *
மிசைப்பரிதும்மின்னவர்பொன்னிலத்துவிளையாடுவரே *

எ - து இங்ஙனஞ்சொல்லப்பட்டநின்றவொளியொருபாலும் இருளொருபா

னுமிருக்கிறசக்கரவாளகிரியில் வடிவையுடையவியக்கருஞ்சந்திரனும் பசுமைநிறத்தையுடையவிராக்கதரும்பசாசுகளும்அட்டதிக்குப்பாலர்களும் மேலேயிருக்கப்படாநின்றதேவர்களும்வாசஞ்செய்வர்-அதுவன்றிமுற்புறமாகியகனகமயமான பூமியினிழிந்துசஞ்சரித்துவிளையாடிப்பின்புதங்கடங்களெல்லையையடைந்திருப்பர்கள் எ - று (௭௩)

சக்கரவாளகிரிக்கப்புறத்திருட்பூமியிலிருப்பாரையுணர்த்துகிறார்.

விதித்தவுணாமரணமலால்விபரீதமுறவிறக்கு ✽
வதைத்தவர்கடமைத்தாமேமையலுறவதிவார்கள் ✽
புதைத்தவிருளுலகத்துட்பொருளல்லாப்புல்லியரோ ✽
கதத்துமருந்துயரத்துந்தம்முடலைக்களைவாரோ ✽

எ - து சிவாகமத்திற்சொல்லியபடி மிகுந்தசிவகாரியங்குருகாரியஞ்சங்கமகாரியமாகத்தான்றன்னுடையதேகவெறுப்பாற்றன்புராணங்களிற்சொல்லியபிருகுப்பிரபாதமாதல்-கெங்கைமுதலியதீர்த்தத்திலாதல்தேகம்விடுதலன்றிச்சாத்திரத்துக்குவிரோதமாகத்தம்முடையவுடலைத்தாமேவிட்டவர்களிருட்பூமியாகியவுலகத்தின்பாகத்தைப்பொருந்திக்கிடப்பர்கள், ஆதலாலிப்படிப்பட்டமரணமாகாதென்றறியாமற்கோபத்தினாலும்வியாதிமுதலியபீடைகளினாலும்வலியவுயிரைவிட்டவர்கள்-ஒருபொருளிலுஞ்சேராதகீழ்மக்களாவர்கள் எ - று (௭௪)

அண்டகடாகமுதல்மகமேருநடுவளவாயிலும்ஐம்பதுகோடியோசனைதூரம் என்பதைமூன்றுசெய்யுளாலுணர்த்துகிறார்

அழகார்யகடாகத்துக்களவுகனமொருகோடி ✽
யெழுநூறாயிரத்துடனேயிருபதுநூறாயிரத்தைத் ✽
தழுவியுறுமொருகோடிசமுத்திரநாயகத்தளவு ✽
குழுவிருளுமேனைஞ்சுகோடியினுங்கூடிடுவாம் ✽

எ - து அழகியஅண்டகடாகவோட்டுக்கனமொருகோடியோசனை பெரும்புறக்கடலினகலங்கோடியேயிருபத்தேழுநூறாயிரம்யோசனை, முற்கூறியவந்தகாரபூமினகலம்பத்தைந்துகோடியோசனை, அஃதன்றியின்றுமதனுடையவளவையைச்சொல்வாம் எ - று (௭௫)

இருபதுநூறாயிரத்திறென்றானமிவற்றுடனே ✽
வருவதுதானூற்பதினாயிரமெனவேமதித்திடுக ✽

விருளொருபாலொளியொருபாலிசைந்தபெருவரைக்கயுத *
மொருபஃதுகோடியுறுங்கனகமயவொளிநிலனே *

எ - து முற்கூறியஅந்தகாரப்பூமியினளவுமுப்பத்தைந்துகோடியுடன்பத்தொன்பதுநூறாயிரத்துநாற்பதினாயிரம்யோசனையுண்டெனவறிக, ஒருபாற்பிரகாசமாயும்ஒருபாலிருளாயுமிருக்கிறபெருமையையுடைய சக்கரவாளகிரிபதினாயிரம்யோசனைவிரிவையுடைத்தாயிருக்கும், முற்கூறியகனகபூமிபத்துக்கோடியோசனைவிரிவுண்டு எ - று

அந்தச்சக்கரவாளகிரிநூறாயிரம்யோசனையுயரத்தையுடைத்தாயொருபாற்சூரியன்சஞ்சரிக்கையாலும்-ஒருபாற்சஞ்சரியாமையாலு மொருபாலொளியும்-ஒருபால்இருளுமாயிற்று, மண்ணிருமண்டத்துக்குநடுவேசூரியன்சஞ்சரிக்கையாலவனுக்குமார்த்தாண்டனென்னும்பெயராயிற்று, அந்தக்கிரியிலட்டதிக்குப்பாலகரிருந்துதந்தந்திக்கைக்காத்துக்கொண்டிருப்பர்கள் (எசு)

எழுநூறாயிரத்துடனேயிருபதுநூறாயிரத்தைத் *
தழுவியுறுமொருகோடிசத்தசமுத்திரவிரிவு *
மெழுநிலமுமைம்பதினாயிரங்குறையவிவ்வளவே *
குழுமியுறும்பஞ்சாசத்கோடிபெருங்குன்றிறுவாய் *

எ - து முற்கூறியசத்தசமுத்திரங்களின்விரிவு கோடியேயிருபத்தேழுநூறாயிரம்யோசனை, ஜம்புத்தீவில்மகமேருமுதலாகத்தெற்கேழுதீவுங்கோடியேயிருபத்தாறுநூறாயிரத்துஐம்பதினாயிரம்யோசனை யுண்டெனவறிக, மகமேருமுதலாகக் கடாகமீறுகத்தொகுத்தறியுமிடத்தைம்பதுகோடியோசனைவிரிவைப் பொருந்தும் எ - று

அதன்வகை-சத்தசமுத்திரமுஞ் சத்ததீவுமாக-இரண்டுகோடியேயைம்பத்துமூன்றுநூறாயிரத்தைம்பதினாயிரம்-அதற்குப்புறம்பே கனகமயமானபூமி பத்துக்கோடி-யதற்குப்புறம்பே ச்சக்கரவாளகிரிபதினாயிரம்-அதற்குப்புறம்பே யிருளுலகமுப்பத்தைந்துகோடியே பத்தொன்பதுநூறாயிரத்துநாற்பதினாயிரம்-அதற்குப்புறம்பெபெரும்புறக்கடல்கோடியேயிருபத்தேழுநூறாயிரம்-அதற்குப்புறம்பேயண்டகடாகக்கோடி-ஆகமகமேருநடுநின்றுந்தெற்குப்பாதியைம்பதுகோடியோசனைவிரிவுஞ்சரி, மற்றைத்திக்கிலுங்காண்க (எஎ)

அளவுக்கோர்புறனடையுணர்த்துகிறார்

தனாத்தலத்துக்கீழ்த்தலங்கள்பேதமுறச்சாற்றியிடு *
தனாத்தலத்துமேற்றலமுந்தவறுணையாசாத்திரமுங் *
தனாத்தலத்தும்பேதமுறச்சாற்றியிடுஞ்சாற்றிடினும் *
விருத்தமிலைச்சிருட்டிதொறும்பேதமுறற்பினைதவினால் *

எ - து இந்தப்பூமிக்குக்கீழானநாகபுவனங்களையாகமங்களிற்பேதமாகக்கூறும், பூமிக்குமேற்றலங்களையும்பேதித்துக்கூறும், அதுவொருபடித்தன்றிப்பலவாகப்பேதித்துச்சாத்திரஞ்சொல்லுமோவென்னிற்சிவன்சருவஞ்ஞனாகையாற்சாத்திரங்கள்பொய்சொல்லாது பூலோகத்தினிடத்தும் பேதமாகக்கூறும்; ஈசுரனெவ்வொருசிருட்டிகாலங்களிலாகமங்களைப்பேதித்துக்கூறினாலுங்கடைத்தொகையளவொத்திருக்குமாகையாலந்தநூலுக்குமிந்தநூலுக்கும்விரோதமில்லையாதலால்மாறுகொளக்கூறுங்குற்றமில்லை - எ - று

பேதம்யாதெனில், கீழ்முதலடுக்கில்-நரகம்பதின்மூன்று-இரண்டாமடுக்கு ஒன்றுக்குப்பத்து-மூன்றாமடுக்குஒன்றுக்கு-ஒன்பது-ஆக-அடுக்குமூன்றுக்கும்நரகம் முப்பத்திரண்டு-அதில்ரௌரவம்-கும்பீபாகம்-அவீசி-இந்த மூன்றுநரகமும்-இராசாதிராசநரகம்-இதிலொன்றைச்சூழ்ந்தவுபநரகம்ஒன்றுக்கொன்றெவ்வேழாகநரகமிருபத்தொன்று-நீக்கிநரகமிருபத்தொன்பதுமொவ்வொன்றைமூன்றுக்குச்சூழ்ந்தவுபநரகம்எண்பத்தேழு ஆகநரகம்நூற்றுநாற்பதென்றுஆகமங்களிற், பேதித்துக்கூறியவற்றையுணர்க. (௭௮)

அண்டங்களளவில்லையென்பதனையுவமைமுகத்தானுணர்த்துகின்றார்.

எண்ணரியவாருயிர்களண்டமுமிப்படிதானே *
யெண்ணரியவெனுமலமிலாதிறைவன்மற்றேரியதி *
னெண்ணரியவனளவிடுதலென்னையெனில்வினைவிதத்தாற் *
புண்ணியிவனண்டவிதஞ்சிருட்டிதொறும்பல்படியால் *

எ - து. எப்படியான்மாக்களளவிறந்தகோடியுண்டு அப்படியேயிந்தவண்டவிதமுமளவிறந்தகோடியெனவறிக, மலமில்லாதசிவனருளிச்செய்ததிவ்வியாகமங்களுமளவிறந்ததாகையாலளவிடுதற்கரிதாகுமல் அவனருளிச்செய்ததிவ்வியாகமங்களிற் காமிகம். பாரார்த்தம். யோகசம்இவைகள்நூறுயிரஞ்சுலோகமென்றுஅளவிட்டுக்கூ

றதலென்னையோவென்னிற்கேட்கிறவர்களுடைய புத்திதாரதன்மியத்துக்கீடாகப் பெருகவுஞ்சிறுகவுங்கூறினன், அவர்களுக்குப்புத்திபெருத்தஞ் சிறுத்து மிருப்பா னேனென்னில் ஆன்மாக்கள்செய்த கன்மானுகுணமாக அவர்களவர்கள் புத்தியை யேற்றக்குறைச்சலாகப்பிரகாசிப்பிப்பன், அதுபோலச் சிருட்டிதொறும்பலபல விதமாகவண்டங்களையருளிச்செய்வன். எ- று. [எக]

இந்நூல். இவ்வாகமத்துட்சேர்ந்ததென்பதனை யுணர்த்துகின்றார்

ஏகனருள் சிவதருமோத்தரமெனு நூலென்னுங்கா ர
லாகமத்துட்சருவோத்தத்துபபேதமதனாலே *
யாகமத்துட்படியிதனுளருகிவருமெனவுிக *
வாகமத்தின்படிமற்றையியலுள்ளுமடைந்துறுமே *

எ-று. தனக்கொப்பொருவருமில்லாதசிவனருளிச்செய்த சிவதருமோத்தரம்,மூ லாகமமோஉபாகமமோவென்னின்மூலாகமத்தி லிருபத்தைந்தாமாகமமாகியசரு வோத்தமென்னு மாகமத்தில். ஈசானம். சிவதன்மம். சிவதரு மோத்தரம். திவ்விய ப்புரோக்தம். குபேராக்கியம். எனப்பிரிந்தபேதமைந்துள், இந்தச்சிவதருமோத்த ரமும்உபாகமமாகையாலே மற்றாகமத்திற்கூறியபொருள்களு மிதனுளருகிவருமெ னவறிக, ஆதலாலிதுமிகைபடக்கூறலென்னுங் குற்றமன்று, அஃதன்றிச் சிவஞான யோகவியலிலும்பரிகாரவியலிலுங்கலந்தும்வரும். எ- று. (அமி)

இனிப்புவலோகமுதல்மேல்அண்டகடாகம்வரை யுள்ளவுலகங்களு ம்அவற்றினளவுமுதலியனவும்பத்துச்செய்யுளாலுணர்த்துகின்றார்

தளைத்தலமுமுனிவரனேதகைபெறவேதொகையாக்கி *
யுரைத்தனமேற்புவலோகமுதலாயவுலகினையுந் *
தரித்திடுகதொகைசெய்தேசாற்றிடுவாந்தவறறவே *
விரித்தவுரைவிளம்புமவர்வினைவிளையவிட்டிடவே *

எ- று. வாராய்முனிவரனேபூலோகத்தின்சொரூபத்தை முறையாகத்தொகுத்து ச்சொன்னேம், மேற்புவலோகமுதலியவுலகங்களை யைம்பதுகோடி யளவிற்குறை யாமற்றொகுத்துச்சொல்வாமதனையறிவாயாக, இங்ஙனந்தொகுத்துக்கூறுமதனைக் குற்றமின்றியாதொருவர்விரித்து வியாக்கியானஞ்செய்வார வர்கள்வினைசடுதிக்கு விட்டுப்போம்படிக்குச்சொல்வாம். எ- று. [அக]

வேறு

தனக்குமேற்புவலோகமதுதனி *
லருக்கன்சோமனெனுமிவராதிய *
ரிருப்பர்தத்தம்பலத்தினையெய்தியே *
பரித்தநீளம்பதினைந்திலக்கமே *

எ- து. இந்தப்பூமிக்குமேற் புவலோகம், அப்புவலோகத்தி லாதித்தியன். சந்திரன். ஆதியர் தத்தம் பதங்களிற் சஞ்சரித்திருப்பர்கள், இவைத்தரிக்க ப்பட்டபுவலோகம்பதினைந்துநூறுயிரம்யோசனையுயரமுண்டு. எ- று.

சஞ்சரித்தலெத்தன்மையெனில். ஆதித்தன்பதத்துக்குக்கிழாகப்பத்துவாயுவும். ஏழுமேகங்களுங்கூடிச்சஞ்சரிக்கும்வகையாவன. விதன்னுவான். பிரசேதகன். அக்கினிப்பிரசேதகன்- செசனி. - அவுத்தன் - வச்சிராங்கதன் - வயுத்தியுதன் - இாவதன்- சங்வர்த்தன். விசங்வர்த்தன். எனவாயுக்கள் பத்து, இவைகளுக்கு வியாபாரமாவன. விதன்றுவனென்னும் வாயுபூமிக்குமேலே பதினுயிரம்யோசனையளவாகச்சஞ்சரித்துஒஷதிகளுக்குப்பெலங்களையுமுண்டாக்கிக்கழுகுமுதலியபறவைகளுக்குப்பறப்பதற்காதாரமாயிருக்கும், பிரசேதனென்னும்வாயுஅதற்குமேலாகப்பதினுயிரம்யோசனையளவாகச்சஞ்சரித்துவிருக்ஷங்களையும்பயிர்களையுமந்தந்தக்காலங்களுக்கேற்றவாதையினையும்பண்ணிமுறிக்கும், அக்கினிப்பிரசேதனென்னும்வாயுப்பதினுயிரம்யோசனையளவாகவியாபித்துமுற்கூறியமரங்களையும்பயிர்களையுமுலர்த்திவீட்டையுஞ்சுட்டுச் சமுத்திரச்செலத்தினுலேய தனைச் சமிப்பிக்கும், இந்தமூன்றுவாயுமேகங்களைப்பொருந்தாமற்றனேசஞ்சரிக்கும், இனிச்செசனி யென்னும்வாயு சத்துகனென்னுமேகத்துடனேபொருந்தி. மீன். ஆமை. தவளை. முதலியவெல்லாம் துயருறப்பொல்லாமழையைப் பொழியும், அவுத்தனென்னும் வாயு. ரோதகனென்னுமேகத்துடனேபொருந்திப்பதினுயிரம்யோசனையளவாக வியாபித்துவிடமாகியமழைதனைப்பொழிந்துஅதனுலான்மாக்களை நாசம்பண்ணும், வச்சிராங்கதனென்னும்வாயு. உபலகனென்னுமேகத்தைப் பொருந்தி யிரத்தம்ஆலாங்கட்டி. கல்லுக்களையும்பொழியும், வயித்தியுதனென்னும் வாயு. வயித்தியுதனென்னும் மேகத்தைப்பொருந்திப்பதினுயிரம்யோசனையளவாக மேலேசஞ்சரித்து இடிமின்முதலியவற்றையுண்டாக்கும், இாவதனென்னும்வாயு. புட்டிவதனென்னுமேகத்தைப்பொருந்திப்பதினுயிரம்யோசனையளவுசஞ்சரித்துஆன்மாக்களுக்குபயோகமாகியநல்லம

தையப்பொழியும், சம்வாதனென்றும்வாயு. விரோதமென்றுமேகத்தைப்பொருத்திப்பதினாயிரம்யோசனையளவு வியாபித்து வியாதியையுண்டாக்கிற செலத்தைப் பொழியும், விசம்வாதனென்றும்வாயு. குரோதமென்றும் மேகத்தைப் பொருத்தி மேற் பதினாயிரம்யோசனையளவுசஞ்சரித்து உன்மாக்களுக்கு யுதிரத்தாரையும்வியாதிகளையுஞ்சஞ்சரிக்கிறமழையாகப்பொழியும், ஆகவாயுபயத்து மேகமேழும் பூமிக்குமேலேயொன்றுக்கொன்றுபதினாயிரம்யோசனையளவாகமேன்மேலாக ஆகத்தியபதமளவாகச்சஞ்சரிக்கும், அந்தமேகமேழுமோவ்வொரு மேகத்தை முப்பதினாயிரங்கோடிமேகஞ்சூழ்ந்துசேவித்திருக்கும், இதன்றுவான்முதலியவொன்பது வாயுக்கள்பதத்திலு மடைவே யிருப்பார்கள். யாவரென்னில். சித்தர்களும், சத்தமாதாக்களும், சித்தசாரணரும். நாராசஞ். சங்கமுதலிய ஆயுததேவதைகளும், அயிராவதம். புண்டரீகம். வாமனம் குமுதம். அஞ்சனம். புட்பதந்தம். சார்வபூமம். சுப்பிரதீபமென்றுமட்டதெசங்களும், பக்ஷிராசனுகிய கெருடனும். ஆகாசகெங்கையுந், தருமசொருபமாயிருக்கிறவிடபதேவரும், தக்ஷப்பிரசாபதியுமென்க. பத்தாம்வாயுவாகியபச்சவர்த்தனில்ஆதித்தர்பன்னிருவர். அசுவனிகளிருவர். உருத்திரர்பதினொருவர். என்வசுக்களாவார். ஆகியமுப்பத்துமூவர்களும் வசித்திருப்பார்கள். ஆதித்தர்பன்னிருவராவார். ஸவகர்த்தனன். விபச்சரன்.மாத்தாண்டன்-பாற்கரன். இரவி. உலோகப்பிரகாசன். உலோகசாக்ஷி. திரிவிக்கிரமன். ஆதித்தியன். சூரியன். அம்சுமாலி. திவாகரனென்க.

உருத்திரர்கள் பதினொருவராவார்- மகாதேவன்- அரன்- உருத்திரன்- சங்கரன்- நீலலோகிதன்- ஈசானன். விசையன்- பீமதேவன்- பவோற்பவன்- கபாலி- சௌமியன்- என்க- அட்டவசுக்களாவார்- அனலன். அனிலன்- ஆப்ச்சைவன்- சோமன் தரன்- துருவன்- பிரத்தியூசன்- பிரபாசன்- என்க- [அஉ]

ஓரிலக்கமருக்கனுலகமே *
லோரிலக்கமுடுபதிலோகமே *
லோரிலக்கமுடுக்கணுலகமே *
லீரிலக்கம்புதனுலகோமே *

எ-ம் முற்கூறியபத்தாம்வாயுவில் நாலுமிரம்யோசனையுயரத்தில்யாகமயமாயிருக்கிறசோமதீபமெனுமதிய மேழ்மயமாயிருக்கிற. லெமுபரிகளையும் நாகங்களையுடைத் தேயும் கருணைஉடைதேர்ப் பாகனையும் பெற்று அமிர்தத்திற்றோன்றித் திவ்வியமயமாயிருக்கிற தேரின்மேல்நாற்பதினாயிரம் யோசனையுயரத்ததய

ட்டயஆதித்தியர்களெழுந்தருளியிருந்து சிவனைத்தியானித்திருந்தொருதினைத்தனைவேண்டிமகமேருவைவலமாகவருவர், அந்நாலாதித்தியர்பன்னிருவர்களுமெக்காலத்துமோர்வொருவராகச்சஞ்சரிப்பர்களாவன்றிப் பன்னிருவருங்கூடிச்சஞ்சரிப்பர்களாவெனிற் சித்திரைமாத முதற் பன்னிரண்டுமாதமுங்கைவரைந்தனர் முதற்பன்னிருவருமத்தேரிலேறிச்சஞ்சரிப்பர்களெனவறிக, அந்தஆதித்தியபதத்துக்குமேலேயிருபத்தேழுநாளுக்குநாயகனாகியசோமனுலகும் நூறாயிரம்யோசனையுயரம் பொருந்தும், அந்தச்சோமனுலகுக்குமேலே நூறாயிரம்யோசனையுயரத்தில் நக்ஷத்திரமண்டலங்களுமிராசிமண்டலங்களும்பொருந்தும், அந்தநக்ஷத்திரமண்டலத்துமேலிரண்டுநூறாயிரம்யோசனையுயரத்திற்புதனுலகம்பொருந்தும் எ-று (அ௩)

ஈரிலக்கமொண்சுக்கிரனெல்லையே *
யீரிலக்கமங்காரகனெல்லையே *
யீரிலக்கஞ்சுரார்குருவெல்லையே *
யீரிலக்கஞ்சனியுலகேயுமே *

எ-து முற்கூறியபுதனுலகத்துக்குமேலிரண்டுநூறாயிரம்யோசனையுயரஞ்சுக்கிரனுலகம்பொருந்தும், அந்தச்சுக்கிரனுலகத்துக்குமேலிரண்டுநூறாயிரம்யோசனையுயரஞ்செவ்வாயுலகம்பொருந்தும், அந்தச்செவ்வாயினுலகத்துக்குமேலிரண்டுநூறாயிரம்யோசனையுயரந்தேவகுருவாகியவியாழபகவானுலகம்பொருந்தும், அந்தக் குருவுலகத்துக்குமேலிரண்டு நூறாயிரம்யோசனையுயரம் சனிபகவானுலகம் பொருந்தும் எ-று (அ௪)

ஓரிலக்கமேழ்மாதவரூர்மிசை *
போரிலக்கந்துருவனுலகுயர் *
பாரின்மீதுபதினைந்திலக்கமுஞ் *
சேருமேபுவலோகஞ்சிறக்குமே *

எ-து அந்தச் சனியுலகத்துக்குமேல்-அத்திரி-வசிட்டர்-புலத்தியர்- புலகர்பிருகு-அங்கிரா-மரீசிஆகியஇந்தவேழுவிருடிகளுமிருக்குமுலகம் நூறாயிரம்யோசனையுயரத்தைப் பொருந்தும், அந்தவிருடிகள்பதத்துக்குமேலாகத்துருவபதம்நூறாயிரம்யோசனையுயரத்தைப்பொருந்தும், அந்தத்துருவன் புதினாலுலகங்களுடன் கூடியிருப்பன்-முற்கூறியநக்ஷத்திரங்களெல்லாமிந்தத்துருவனாதாரமாகிக்கட்டப்பட்டுக்கொண்டிருந்துசஞ்சரிக்கும்-அவற்குத் துருவனென்றும்பெயர்பெற்றது எக்கார

னைத்தாலென்னிற்சிவசந்நியதிட்டித்தலையாமற்பண்ணுகையாலெனவறிக, ஆகப்பூமிக்குமேலேசிறப்பினையுடைய புவலோகம்பதினைந்நூறாயிரம்யோசனையுயரமென்றறிவாயாக எ - று (அரு)

அதற்குமேலமரேசனரும்புரி *
யதற்குநீளமசீதியுமைந்துமா *
மதற்குமேன்மகலோகமதுதனில் *
வசிப்பர்மாதவராதிமரீசியும் *

எ - து அந்தப்புவலோகத்துக்குமேற்சுவர்க்கலோகம் எண்பத்தஞ்சுநூறாயிரம்யோசனையுயரத்தைப்பொருந்தும், அதற்கு-அரசன்இந்திரன்-அவனைத்தேவர்களுமிருடிகளுந்தேவஸ்திரிகளுஞ்சேவித்திருப்பர்கள், அதிலக்கினிட்டோமமுதலிய யாகங்களைப்புரிந்தவர்களுந்தீர்த்தயாத்திரை பண்ணினவர்களுந்தானமாவிரதமுதலியவற்றைப்பண்ணினவர்களுமந்தலோகத்தையடைந்திருந்துஅதிலுண்டானபோகங்கள்பொசித்துத்தொலைந்தவாறேபூலோகத்தின்கண்வந்து நல்லமானுடராய் ப்பிறப்பர்கள்-அந்தச்சுவர்க்கத்துக்குமேல்மகலோகம், அதிலிருப்பார்-மரீசி-மார்க்கண்டர்-சித்தர்கள்முதலாயினோர் எ - று (அசு)

உயரந்தானிருகோடியுறுமதற் *
குயருமேலிலசெனதலமுன்னத *
முயருநாலிருகோடியென்றுன்னுக *
வுயருமாபிதிர்தேவருறைவரே *

எ - து முற்கூறியமகலோகம் இரண்டுகோடியோசனையுயரம் பொருந்தும் அந்தமகலோகத்துக்குமேல்சனலோகம்எட்டுக்கோடியோசனையுயரம்பொருந்துமென்றறிவாயாக, அதில்-கவ்வியவாகனர்-அனலர்-சோமர்-யமர்-அரியமனர்-அக்கினிவாக்கர்-பெரக்கிஷ்-ஆசியபர்-சோமபா-என்றுசொல்லப்பட்டபிதிர்தேவர் பதின்மரும்-சங்கரிஷணர் வாசுதேவர் பிரத்தியுமினர் நிருத்தர் இவர்நால்வரும் அத்தயேசாரமும்மதனமுதலாயினோருமிருப்பர்கள் எ - று (அஎ)

அதற்குமேற்றவலோகமருந்தவ *
ரதற்குள்வாழ்வர்சனகனையாதிய *

யதற்குநீளமுமாயிருகோடியா *
மதற்குமேலயன்றேசமென்றுய்கவே *

எ - து அந்தச்செனலோகத்துக்குமேற்றவலோகம் பன்னிரண்டுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும்,அதிலிருப்பார்கள் - சனகர்-சனந்தர்-சநாதர் - சனற்குமாரர்-சங்கு-திறிசங்கு-இரிபு-இந்தவிருடிகளெழுவரும் அரிதாகியதவசுகளைப்பண்ணியதைவந்தடைந்திருப்பர்கள், அந்தத்தவலோகத்துக்குமேற்சத்தியலோகமென்றறிவாயாக. எ- று (அஅ)

அதற்குநீளமுமாறுடன்பத்நுறு *
மதற்குமேலரிதேசமென்றுய்கவே *
யதற்குநீளநாற்கோடியென்றுய்கவே *
யதற்குமேற்சிவலோகமோராறும் *

எ - து அந்தச்சத்தியலோகம் பதினாறுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும்,அதினடுவேபிரமாவிருப்பர்-கிழக்கேயிந்திரநீலநிறம்போன்றவடிவையுடையஇருக்குவேதமிருக்கும்-வடக்கேபடிகநிறத்தையுடைய எசுர்வேதமிருக்கும்-மேற்கேபதுமராகநிறம்போன்றசாமவேதமிருக்குங் - தெற்கேமைநிறம்போன்றஅதர்வணவேதமிருக்கும் - மற்றுமுள்ளவிதிகாசபுராணமீமாங்கிசைமுதலியசாந்திரங்களுஞ்சாவித்திரியும்அங்கேயிருப்பர்கள், அந்தப்பிரமலோகத்துக்குமேல் அரியினுடையலோகமென்றறிக, அதுநாலுகோடியோசனையெனவறிக,அதில்மாயனிருந்துப்பிராணிகளைப்பரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பன், அதிலவனைவழிபட்டபத்தர்கள் அடைந்திருப்பர்கள், அந்தலோகத்துக்குமேற்சிவலோகம்ஆறுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும், அந்தச்சிவலோகத்தின்வளத்தைவிரித்துக்கூறுதற்கரிது-அதிற்பார்வதியாருடன்விட்டுணு-பிர்மா-முதலியதேவர்கள் சேவிக்க-உருத்திரமூர்த்தியெழுந்தருளியிருப்பர். எ - று (அகூ)

அதற்குமேலுறுமண்டகடாகமொய்ம் *
பதற்கனந்தனைக்கோடியென்றுய்கவே *
மதிக்கவைம்பதுகோடியும்வாய்த்தமை *
கதித்தவண்டமெலக்கடாகத்தொடும் *

எ - து அந்தச்சிவலோகத்தின்மேல்நெருங்கியஅண்டகடாகத்தினுயரங்கோ

டியோசனையெனவறிக, அசப்புமிக்குமேலுயர்ந்தவண்டகடாகம்வரையைம்பது கோடியோசனையுயரமெனமதிப்பாயாக எ-று அதன்வண்ணம்புவலோகம்பதினைந்தாயிரம், சுவலோகம்-எண்பத்தைந்தாயிரம்மகலோகம்-இரண்டுகோடி, செனலோகம்-எட்டுக்கோடி, தவலோகம்-பன்னிரண்டுகோடி, சத்தியலோகம்பதினறுகோடி, விட்டுணுலோகம்-எழுகோடி, உருத்திரலோகம்-ஆறுகோடி, அண்டகடாகக்கோடி ஆகவைம்பதுகோடியென்க. (௯௰)

கோபுரமிருக்குந்தலத்தையுணர்த்துகின்றார்.

வேறு.

உரைத்தவிதவுலகத் துளொப்பிலாப்புரத்தினையு ◆
மெரித்தவிறையெரியாகியிருவருமிகாணினையு ◆
மரித்தருள்செயமலனிலகந்தைமருதலந்தினையுந் ◆
தரித்தினையைத்தரியாததலமுடிவிற்றயங்கியதே ◆

எ-று இத்தன்மையாகச்சொல்லியசிவலோகத்தின்கண் ஒப்பிலாதவனுந்திரிபுரத்தையெரித்தவிறைவனும் அழலுருவாகியயனுமரியுந்தம்மிற்பொருந்துமாணவமாகியமாறுபாட்டைக்கெடுத்தவர்க்கருள்செய்புநின்மலனுமானசிவபெருமானுடையதிருக்கோயில்முடிவிடத்தில்ஈவைதமுதலியவைந்துபசுக்களையுந்தாங்கிப்பொற்பற்றகோபுரமானதுவிளங்காநின்றது எ-று கோபுரம்பசுப்புரை (௯௧)

சிவலோகத்தின்றன்மையைப்பதினெட்டுச்செய்யுளாலுணர்த்துகின்றார்.

ஒப்பரியன்புரிவனமுமுரைவிரிவிடங்காது ◆
செப்பரியவதன்வளத்திற்சிறிதுரைப்பஞ்சிந்தைசெய்க ◆
வெப்பொருளுந்தானேயாயாவையுந்தோயாத ◆
வப்பொருளையாழ்க்கொழியவகத்துணர்ந்தவருந்தவனே ◆

எ-று எல்லாப்பொருள்களுந்தானேயாகியவற்றிற்சேராதவச்சிவத்தைமும்மலமுங்கழிந்தவுள்ளத்திலுணர்ந்தவருந்தவனே, யொப்புச்சொல்லுதற்கருமையானவவனதுசிவலோகத்தின்வளங்களும்விரித்துச்சொல்லிற்றம்அடங்காது, ஆயி

னுஞ்சொல்லுதற்கரியவச்சிவலோகத்துவளங்களுட்சிறிதுசொல்லு வோஞ்சிந்தை செய்வாயாக. எ - று உம்மைவிகாரத்தாற்றொக்கது. (கூஉ

வேறு.

இரவியைநிகர்பலவிரதமுமொருபாலெழின்மடவரலியரியலிசையொ ருபாற், பரதமுமுறைமுறைபயிலுநரொருபாற்படகமுமுதலியபறையொலி யொருபான், மருமலர்விரவியமரநிரையொருபான்மறைபயில்விரதியர்வளவ னமொருபாற், புரிசைகள்பலபாற்பொருவிலிவரைவிலிம ருவியபுரமே. ௬

எ - து ஒப்பில்லாதவன்மேருவைவில்லாகவுடையவனெழுந்தருளியசிவலோ கத்திற்சூரியப்பிரகாசம்போன்றபலதேர்களொருபாலிலும், அழகியவரம்பையர்க ள்பாடுமியலிசைகளொருபாலிலும், பரதவிதிப்படி நடனஞ்செய்யுமரம்பையர்க ளொருபாலிலுந், தம்பட்டமுதலானவாச்சியத்தொலியொருபாலிலும் மணமருவி யமலர்களையுடையமரத்திரளொழுங்கொருபாலிலும், வேதங்களையோதும்விரதிசர் நிறைந்தவளத்தையுடையவனங்களொருபாலிலு, மலையையொத்துவிளங்கியமதி ல்கள். பலபாலிலும் விளங்கின. எ - று (கூங)

நிலையொருபதுசதநெடுமடமொருபானெடியனகொடிமணிநிகழொலி யொருபால், விலையிலநவமணிவிரிதிணையொருபால்விழைவினர்விழைவன விளைநிதியொருபா, லலைமலிபுனனதியணியுறலொருபாலளிமுரல்குவளை க ளலர்சுனையொருபாற், பொலன்முடியமரர்கள்பொதுளியதொருபாற்புலியு ரியணியினன்மருவியபுரமே. ௬

எ - து புலித்தோலுடுத்தவரையினனெழுந்தருளிய சிவலோகத்திலுன்னத மானவாயிரக்கான்மண்டப மொருபாலிலும், நீண்டகொடியின்கட்கட்டும்விளங்கி யமணியோசையொருபாலிலும், விலையில்லாதநவமணிகுயிற்றியதிண்ணைகளொரு பாலிலும், விருப்பினையுடையவர்கள்விரும்புவனவாகிய நவமணிகணிறைந்தசங்க நிதிபதுமநிதிகளொருபாலிலும், அலைமலிந்தபுனலையுடையநதியணிகளொருபாலி லும், வண்டுகண்முழங்கு நீலோற்பலம்விரிந்ததடாகங்களொருபாலிலும், பொன் முடிசூடியதேவர்கள்கூடுமிடங்களொருபாலிலும்-விளங்கின. எ - று (கூச)

புதுவிரைமலர்கொடுபுனைமனையொருபாற்பொறிமணியவைகொடுபுனை மனையொருபான், மதியெனவிதிவழிவனைமனையொருபான்மரகதவொளியி னவனைமனையொருபாற், கதிரவனொளிநிகர்கடிமனையொருபாற்கனகன்மய முறுகனமனையொருபாற், சதிவழிநடமிடுதகைமையனிமையோர்தலைமைய னிலவியதனிநிகர்தலமே. *

எ - து தாளவொத்தின்படிநடனஞ்செய்யும்பெருமையையுடையவனும்த் தேவர்கடேவனுகிய சிவபெருமானெழுந்தருளியதனக்குத்தானேயொப்பாகியசி வலோகத்தின்கண்மணந்தங்கியநாண்மலராலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொரு பாலிறுந், தீப்பொறிபோன்றமாணிக்கங்களாலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொ ருபாலிறுஞ், சிற்பநூல்விதிப்படிசெய்தசந்திரனைப்போன்றமாளிகைகளொருபா லிறும் ஒளியையுடையமரகதப்பச்சையாலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொருபா லிறுஞ், சூரியப்பிரகாசம்போன்றகாவலையுடையமாளிகைகளொருபா லினும்,மா ற்றுயர்ந்தபொன்மயமானபெரியமாளிகைகளொருபாலினும், விளங்கின எ- று ()

வேறு

ஒருபாலரிபோலுடலார்சிலரோ *
யொருபாலவரோபுலிபோலுடையா *
ரொருபாலுடையார்கரிபோலுடலே *
யொருபாற்பரிபோலவரோயுடையார் *

எ- து. அச்சிவலோகத்தின் கணொருபாற் சிங்கம் போன்ற வுருவத் தினையு டையசிலரோயொருபாற்புலியைப்போலவும் ஒருபால்யானையைப்போல வுருவத்தி னையுடையவரோயொருபாலிற்குதிரையைப்போலவும்விளங்கினர். எ- று (கசு)

ஒருபாலுடலானெனவேயுடையா *
ரொருபாலுழைபோலவரோயுடையா *
ரொருபான்மயில்போலுடையார்சிலரோ *
யொருபாலவரோகுயில்போலுடையார் *

எ- து அச்சிவலோகத்தின்கணொருபா லானைப்போல வுருவத்தை யுடையவவ ரோயொருபான்மானைப்போலவுருவத்தையுடையராயு மொருபால்மயில்போலுருவ த்தையுடையசிலரோ யொருபாற் குயில்போ லுருவத்தை யுடையராயும் விளங்கி னர். எ- று.
(கஎ)

சிலரோயொருவாண்முகமேசெறிவார் *
சிலரோபலமாமுகமேசெறிவார் *
சிலரோயொருதாளுடனேசெறிவார் *
சிலரோபலதாளுடனேசெறிவார் *

எ- து. அச்சிவலோகத்திற்சிலர்களொளிபொருந்தியவொருமுகங்களையேபொருந்துவர்கள். சிலர்கள்பலமுகங்களையே பொருந்துவர்கள். சிலர்கள் ஒருகாலுடனேபொருந்துவர்கள். சிலர்கள்பலகாலுடனே பொருந்து வர்கள். எ- று. ஏகாரங்கள் - இசை நிறை. (கஅ)

சிலரோசெவியும்பெரிதேசெறிவார் *
சிலர்பாலஃது மிலதேசிறிதுஞ் *
சிலரோபலவாமுருவஞ்செறிவார் *
சிலர்தாமியல்பாமுருவஞ்செறிவார் *

எ- து. சிலர்கள்பெரியகாதுகளையும் பொருந்துவர்கள். சிலரிடத்துச்சிறிதாயினுமக்காதுமிலதாயிற்று சிலர்கள்பலநிறம்பெறு முருவங்களைப் பொருந்துவர்கள் சிலர்களியல்பான வுருவங்களைப்பொருந்துவர்கள். எ- று. செவியுமென்னுமும்மைமற்றவங்கங்களுமென்க. (கக)

விதமேபலவேவிளையாடலினு *
விதமேயிதமேயிவர்பாலிவையு *
மதிமேதையரோயழியாதவரோ *
பதமேபணிவார்பரமேசனையே *

எ- து. பேரறிவினரா யொருகாலத்துங் கெடாதவராய்ப் பரமேசனது பதத்தைப்பணிபவராதலிற்பலவிதமான விவ்வுருவங்களியாவும் அப்பரமேசனதுதிருவிளையாட்டினுல்நன்மைகட்கெல்லாமேலானநன்மைகளாகவே யச்சிவலோகத்துள்ளாரிடத்துப்பொருந்தும். எ- று. (ஈ)

திணமேயுடையார்சிவனேவியதே *
யெணமேயுடையாரிடரோதுமிலார் *
கணமேயிவரோகரிசேதுமிலார் *
நணமேன்மையரோநலரோநலரோ *

எ-து. பத்திவயிராக்கியத்திறுதியையுடையார் சிவபெருமானருளியபணிவிடையிலிடத்தேகருத்தினையுடையார் மலநோய்சற்றுமில்லாதவர். ஒருகுற்றமுமில்லாதவர். யாவருஞ்சேரவிரும்பு மேன்மையினையுடையார். மிகுந்தநலத்தினையுடையாரிவரோகணங்களாவாரச்சிவலோகத்தின்கண். எ-று. (௯௧)

படிசேர்பலமேனியரோபடருஞ் ❊
சடைமாமுடியார்தகுநீறுடையார் ❊
புடையேபுயமுமொருநாலுடையா ❊
ரடியாரவரோகணநாயகரோ ❊

எ-து. நற்குணமமைந்தபலதிருவுருவங்களையுடையர். படர்ந்தபெரியசடைமுடியினையுடையர். தகுதியான திருநீற்றையுடையர். பக்கத்திற் சதுர்ப்புயங்களையுடையர். அடிமைத்தன்மையையுடையரவரோயச்சிவலோகத்திற்கணநாதராய்விளங்கினர். எ-று. (௯௨)

உடையார்விழியுமொருமூன்றினையு ❊
முடையார்புலியினுரியும்மரையி ❊
லுடையார்மழுவுமொளிர்வேலினையு ❊
மடியாரவரோகணநாயகரோ ❊

எ-து. மூன்றுகண்களையுமுடையர். அரையிற்புலித்தோலினையுமுடையர். மழுவினையுமொளிர்கின்றவேலினையுமுடையரவரோ யடியாராகியுங் கணநாதராகியுமச்சிவலோகத்துவிளங்கினர். எ-று. (௯௩)

வேறு

ஆதியுமந்தமுமிலனவனமரரு ❊
மோதியும்வேதமுமுணர்வரும்பெருமையன் ❊
போதகன்வேதகன்பொருவிலனிருமலன் ❊
பாதபங்கயமுறுமவர்பலம்பகர்வமே ❊

எ-து. முதலுமிறு மில்லாதவன் றேவருமெவ்வகைநூலும் வேதமுமறிதற்கருமையானபெருமையினையுடையன் தன்னடியருக்குத் தோன்றாத துணையாயிருந்துள்ளத்துணர்த்தும் போதகன் அவ்வடியர்களை மலத்தினின்றும் வேறுபடுத்துவோன்ஒப்பில்லாதவன்மலரகிதன் அவனதுபாததாமரையைச் சிந்திக்கும்பெரியவரது

பலத்தினைச்சொல்லுவாங்கேட்பாயாக. எ-று. (ாச)

உருவினுவமையுமொருவினார்மருவினர் *
திருவினுருருவினார்தெரிவைமார்செறியவே *
முரவமேமுதலவாமழலையுமுரலவே *
யிரவியாயிரமுநேரிரதமேசரதமே *

எ-து. சிவபெருமானதுபாதத்தைச்சிந்திக்குஞ் சிவகணங்கள் தங்களுருவத்தினுலொப்பற்றவராகித்திருமகளைப்போலு மழகினையுடையராகியதெய்வப்பெண்கள்தங்களிடத்துநெருங்கிப்பணிவிடைகள்செய்யவும் முரவமுதலிய வாச்சியங்கள் முழங்கவும் ஆயிரஞ்சூரியவுதையப்பிரகாசம்போன்றதேரினிடத்துமெய்ம்மையாகவேமருவிவாழ்ந்தனர். எ-று. மழலை- ஆகுபெயர். (ாரு)

கொத்துலாங்குழலினார்குழலினேர்மொழியினார் *
முத்துலாமுறுவலார்முகையுநேர்முலையினார் *
சித்தமுங்கவரவேசிலரவர்செயலுகந் *
தெத்தினுற்குறைவெமக்கெனவுமங்கிசைவரே *

எ-து. பூங்கொத்துலவுங் கூந்தலினை யுடையார். குழல்போலு மொழியினையுடையார். முத்தைப்போலொளிவிடு நகையினை யுடையார். அரும்புபோன்றமுலையினையுடையாராகியசிலவரம்பையர்களது சித்தத்தையுங் கவர்தலினு லச்செயலைவிரும்பியெமக்கொன்றினாலுங் குறைவில்லை யென்று அவர்கள்சொல்லவும் அச்சிவலோகத்துள்ளார் அங்ஙனம்பொருந்துவர். எ- று. (ாசு)

ஓதுவார்வேதமுஞ்சிலருணாக்குறுபய *
னீதெனவேதெனவேகமாய்மோகமுங் *
காதுவார்காதுவார்குழையினன்கழலுனும் *
போதமேபூதியாய்வேறுனார்போகமே *

எ-து காதின்கணொள்ளியகுண்டலத்தையுடையசிவபெருமானதுபாதங்களைக்கருதுமறிவேயனுபூதியாய்மற்றைப்போகங்களையுன்னாதவர்தனித்திருந்துமோகங்களைக்கெடுப்பார்வேதத்தினும்பொருந்தும்பயன்யாதெனக்கேட்குஞ்சிலர்வினாவிற்குப்பொருந்தும்பயனீதென்றும்விடைகூறுவார் எ-று (ாஎ)

முத்தனேமுதல்வனேமுடையுடற்பொறையறுத் *
தத்தனேசிவபுரத்தடியவர்ச்செறியெனத் *
துத்தியஞ்சொன்னமெய்த்தொண்டருந்துரிசறச் *
சித்தமுஞ்சிவமுறச்செறிவரங்கரிதெனே *

எ-து அடியார்க்குமுத்தியைக்கொடுப்பவனேயெப்பொருளுக்குமுதலாயுள் ளவனேபுலானுற்றத்தையுடையவுடற்பாரத்தைக்கெடுத்தஅத்தனே சிவலோகத்தி ன்கணடியார்களையிருத்தவாயென்றுதுதிசெய்யுமெய்யடி யார்களும் மலக்குற்ற ங்கவுஞ்சித்தமுஞ்சிவத்தைப்பொருந்தவுமந்தச்சிவலோகத்தில்வாழவர்கள் அவர் வர்களுக்கங்குஅரியதுயாது. எ - று (௱௮)

பொன்னிறமுடையரும்புயனிறமுடையரு *
மின்னிறமுடையரும்விரைமலர்க்கமலமு *
மென்னிறமுடையருமெரிநிறமுடையரும் *
பன்னிறமுடையரும்பவளமேனியருமே *

எ-து பொன்போன்றநிறத்தையுடையரும்-மேகம்போன்றநிறத்தையுடையரும் மின்போன்றநிறத்தையுடையரும்மணம்விரிந்தவெண்டாமரைசெந்தாமரைபோன் றநிறத்தையுடையரும்சூரியன்போன்றநிறத்தையுடையரும்-அக்கினிபோன்றநிறத் தையுடையரும்பலநிறத்தை யுடையரும்-பவளம்போன்ற நிறத்தையுடைய்ரும்-அச் சிவலோகத்தில்வாழ்வார்கள் எ - று என்னிறம்இருள்நிறமென்றுரைப்பினும்அமை யும் (௱௯)

அச்சிவலோகத்திற்சிவபெருமானெழுந்தருளுந்திருக்கோயிலி
ன்றன்மையையாறுசெய்யுளாலுணர்த்துகின்றார்·

வேறு.

இத்தகையவிதமுறவேயெழிலுடையசிவபுரிநள்ளெல்லைவட்டம் *
வித்தகற்குவிடையேறும்வேதியற்குமந்திரந்தான்வியந்ததுங்கஞ் *
சுத்தவொளிப்படிகமயஞ்சுடர்மணியாற்றமனியத்தாற்றோரணநி *
யெத்தகையவுறுப்பினையுமியற்றியிடவிசைந்தவெழிலியம்பலாமே *

எ - து இத்தன்மையானகுணங்கள்பொருந்து மழகையுடைய சிவலோகத் தவட்டமாகிய நடுவெல்லையின்ஞானமேதிருமேனியாகவுடையானுக்குஇடபமேறு ம்வேதியனுக்கு, யாவராலும்வியக்கப்பட்டவுயரமும் பரிசுத்தவொளியினையுடைய

பளிங்குமயமும்பெற வொள்ளியநவமணிகளாலும்பொன்னினாலுந் தோரணமாதியானவெல்லாவங்கங்களையுஞ்செய்திடல்தானேயமைந்ததிருக்கோயில்விளங்கிற்றதனழகுசொல்லுமளவன்று. எ - று (௱௰)

சுத்தவொளிப்படிகமயந்துளங்குமிளம்பிறைவிளங்கச்சூடிச்சூடு ✽
மத்தமலர்ச்சடைமுடியர்வரமுடையர்திரிநயனம்வாய்த்துளார்தங் ✽
கைத்தலங்களொருநான்கிற்கனன்மழுவுந்திரிசிகையுங்கதையும்வாளும் ✽
வைத்துடையகணநாதர்வரதனுக்குக்குணதிசைச்சன்னிதியின்வாய்த்தார் ✽

எ-து அச்சிவலோகத்தெழுந்தருளும்வரதனுக்குக்கீழ்த்திசைச்சன்னிதியின் கட்பரிசுத்தமானவொளியினையுடையபளிங்குமயமாய்விளங்கு மி ள ம் பி றை யை பொளிவிடச்சூடியூமத்தமலரையணிந்தசடைமுடியர், வரங்கொடுக்குந்தகைமையர் மூன்றுகண்களைப்பெற்றவர் திருக்கரநான்கினுங்கனல்போன்ற மழுவையுஞ்சூலத்தையுந்தண்டத்தையும்வாளினையுந்தரித்தவராகியகணநாதர்கள்வாழ்ந் து ப ணி செய்தனர் எ - று (௱௰௧)

பரமசிவமயமுணர்ந்தபாசுபதர்சைவர்காபாலர்பான்மை ✽
விரதியர்மெய்த்தவனொன்னுமவர்தாமுமேலுணர்த்தமேனிமேவி ✽
விரவுவரத்திசைதன்னில்வியன்கமலத்தயன்றென்பால்விரவமெய்மமைச் ✽
சரசுவதிமுனிவரர்க்குத்தலைமையவங்கிரரிவருஞ்சார்வரங்கே ✽

எ - து மேலானசிவபெருமான் றன்மையையுணர்ந்த பாசுபதருஞ்சைவருங் காபாலரும் முறைமையினையுடையமாவிரதியரும்மெய்ம்மையானதவத்தினையுடையருமானவவர்களுமுன்சொன்ன சொரூபத்தைப்பெற்று அந்தக்கீழ்த்திசைவாயிற் சன்னிதியிலிருந்துபணிசெய்வர், தென்றிசைவாயிற்சன்னிதியிற்பெரியதாமரையில் வாழும் பிரமாவிருந்துபணிசெய்யவவனுடனுண்மைச் சரசுவதியுமுனிவரர்க்குட்டலைமையானவங்கிராவுமத்திசையிலிருந்துபணிசெய்வர் எ - று (௱௰௨)

செப்பியவத்தென்றிசையிற்கபிலாதிசித்தருமோசெறிவர்யோக ✽
தற்பரநற்சனகசனந்தரரொழுவாயெழுவருமெய்த்தவருஞ்சார்வார் ✽
மெய்ப்பொருளுக்கொப்பாகிவேந்தருமாய்மாயைக்குவினையைவென்று ✽
பொய்ப்பொருளைமதியாதபூதேசராதியர்மேல்புடையிற்சார்வார் ✽

எ - து சொல்லியவத்தென்றிசையிற்கபிலராதியானசித்தர்களுங்கூடிப்பணிசெயவரஃதன்றிநன்மையானதற்பரயோகத்தையுடைய சனகர்சனந்தரராதியான

சத்தவிருடிகளுமுண்மையானதவத்தினரும்பணிசெய்வர். சாருபத்தைப்பெறலால் மெய்ம்மைப்பொருளுக்கொப்பாகி மாயாவினோதங்கட்கரசாகியிருவினையொப்புவந்தபொய்யாகியவுலகத்தைமதியாத பூதங்கட்கதிபரானவர்மேற்றிசைவாயிற்சன்னிதியிற்சார்ந்துபணிசெய்வர் எ - று (௱௰௩)

அத்திசையிற்பிராமிதனையாதியரேழணங்கினருமவர்களோடே *
பத்திரையைப்பார்ப்பதியையெழுவாயவெண்மருமோபடைக்கவல்ல *
சத்திதரிக்குஞ்சண்டப்பிரசண்டவயிரவர்கடாமேலோரு *
முத்தரத்திற்றிருமாலுமுருத்திரரும்பருதியருமுள்ளாரன்றே *

எ - து. அந்தமேற்றிசையிற்பிராமியாதியான சத்தமாதாக்களுமவர்களுடன் பத்திரைபார்ப்பதியாதியானவட்டகன்னியர்களுமெப்பொருளும்படைக்கவல்லசத்தியையுடைய சண்டப்பிரசண்டவயிரவராகிய மேலோரும்பணிசெய்வர். வடதிசைவாயிற்சன்னிதியிற் றிருமாலும், பதினொருகோடி யுருத்திரரும், பன்னிரண்டு கோடியாதித்தரும்பணிசெய்வர் எ - று (௱௰௪)

அத்திசையிலெண்வசுக்களமரமகளிர்காந்திருவரியக்கரல்லாச் *
சித்தரியல்வித்தைதரர்சிறப்புடையகுய்யரழற்சேடரொன்று *
மித்தொகையரோயிசைவாரின்றுமுளரிணையிலியையிறைவன்றன்னை *
யித்தகையுளத்திருத்திவிட்டாருந்தொட்டதுயர்வேட்கையெல்லாம் *

எ - து. அவ்வடதிசையிலட்டவசுக்களுந்தெய்வமகளிருங்கந்திருவர்களுமியக்கர்களுமவர்களல்லாத சித்தர்களுநல்லொழுக்கம்பெற்றவித்தியாதரர்களுஞ்சிறப்பினையுடையகுய்யகருமழல்போன்றசேடருமாகிய வித்தொகுதியரும்பொருந்திப்பணிசெய்வர். அவரன்றியொப்பில்லாதவனை யெப்பொருட்குமிறைவனை ஞானமூர்த்தியையுள்ளத்தின் கண்வைத்துத்தொன்றுதொட்டு வந்தசஞ்சிதமுதலியதன்பந்தவாசைகளெல்லாம்விட்டபெரியவருமவ்விடத்துளர் எ - று (௱௰௫)

சிவலோகத்திற் சிவபெருமானெழுந்தருளி யிருக்குந் தன்மையை ஐந்துசெய்யுளா லுணர்த்துகிறார்

இத்தகையோர்தொழுதேத்தவாயிரக்கான்மண்ட பத்துளிணையிலீசன்
முத்தனொருமுதலாகிமூவுலகாய்த்தழைத்தெழுந்துமூவாமூர்த்தி *

யத்தனரனணிகிளருமரிபரித்தவாதனத்தினலரின்மீதே *
வித்தகவேதகியுடனும்வீற்றிருப்பன்வினைப்பயனைவிளக்கவேதான் *

எ - து இப்பண்பினையுடையோர் வணங்கித்துதிக்கும்படி யாயிரக்கான்மண்டபத்து நடுவிலழகினையுடைய சிங்கங்டாங்குமாசனத்தாயிரமிதழை யுடைய தாமரைமலரின்மேன், முத்தனுகியுமொப்பற்றமுதன்மையாய் மூன்றுலகமாய்ந்தமைத்தெழுந்துகெடாத மூர்த்தியத்தனுகியும ரனுகியும் விளங்கிய வொப்பற்றபரமேசனடியவரைப்பக்குவப்படுத்துந்தன்மையையுடைய வேதகியாகியபெருமாட்டியுடனுமெழுந்தருளியிருப்பன் எவ்வுயிருமிருவினைப்பயனையனுபவிக்க எ - று ()

கண்டனுக்குக்காட்டாயகதிருதையமொருகோடிகலந்ததென்ன *
வெண்டனுக்குக்காட்டாயவெழிலுருவமிசைந்திலங்கவிளக்குநீரும் *
விண்டனுக்குவிளக்காயவெண்மதியும்விரவுசடைமுடிதன்மீதே *
பண்டனுக்குப்பாடல்பயில்பறவைபுறமிதழிமுதற்பரிக்கபாங்கால் *

எ - து கட்பொறிக்குவிடையமாகியவுருவமனைத்தினையுங்காட்டுங்கதிரவன் ஒருங்கொருகோடிகலந்துதையமானற் போலமேலுமேலுஞ் சொல்லுமெண்களுக்கெடுத்துக்காட்டாகிய வழகினையுடையதிருவுருவம் பொருத்தமாய் விளங்கவும்மணமாகியகங்கையுமாகாய விளக்காகியவெள்ளைமதியுங் கலந்த சடைமுடிதன்மேற்பண்களுக்கொத்தவிசைப்பாட்டைப் பாடாநின்றவண்டுகள்பொருந்துங்கொன்றைமுதலிய மலர்களைப்பாங்குடன்றரிக்கவும் எ - று (௱௰௭)

சுடர்மூன்றுங்கண்மூன்றாய்த்துடர்ந்திலங்கக்குழைதோடுதுலங்கக்காதி,
லிடர்மூன்றுமிழித்தருளுமிளமுறுவன்முகமலரினிலங்கவெய்திற் *
கடலுமிழும்விடமிடற்றிற்கலந்திலங்கமறிமழுவுங்கையில்வைத்த *
வடியடைவாரிடரகலவமைத்தகரம்வரதகரமமரவாங்கே *

எ - து பருதிமதிதீயாகியமுச்சுடருமுக்கண்ணாயமைந்து விளங்கவு ந்திருக்காதிற்குண்டலமுந்தோடும்விளங்கவுஞ்சஞ்சிதம்பிரார்த்தமாகாமியமாகிய மூவகைத்துயரத்தையுங்கெடுத்தருளுமிளமையான புன்சிரிப்புத் திருமுகத் தாமரையின் விளங்கவுங்கொடிதாய்க்கடலினின்றெழுமாலாலவிடந்திருக்கண்டத்திற் சேர்ந்துவிளங்கவுந்திருக்கரத்தின்மானு மழுவுமடியார்களுடைய பிறவிப்பிணி நீங்கவமைத்தவபையமும் வரதமும் பொருந்தவும் எ - று (௱௰௮)

குங்குமத்தின்சந்தனத்தின்குழம்பேயோதிருநீற்றின்கோலமல்கத் *
துங்கவரையிரண்டனையதோளகலத்தலர்குவளைத்தொடையலேயோ *
பங்கயத்திற்பயில்வானும்பாற்கடலிற்றுயில்வானும்பழுத்தநாளின் *
மங்கியிடவவரங்கமாலைகளுங்கண்டிகையும்மலியவாய்த்தே *

எ - று குங்குமத்தாலுஞ்சந்தனத்தாலுஞ்சமைத்தகுழம்புதானோ வென்னு ம்படித்திருநீற்றுக்காப்பினழகு பெருகவுமுயரியவிரண்டுமலையொத்ததோட்பரப்பி லணிந்தகுவளைப்பூமாலையோவென்னும்படி தாமரையிலிருக்கும்பிரமனும் பாற்கட லிற்பள்ளியமர்ந்த விட்டுணுவுந்தன்னுனியமித்தமுடித்தநாளிறுதியி லழிந்து விட அவர்முழுவெலும்பாகிய வங்கமாலைகளுங் கண்டிகைமாலைகளு மிகுந்து பெருக வும் எ - று (௯௰௧)

திருவரையிற்புலியதளுஞ்சிறந்திலங்கவுடைவாளுஞ்செறிந்தகச்சும் *
பரிபுரமுமிருவினையும்பறித்தருளென்றிருபதமும்பற்றியொற்றப் *
பொருகழலுந்திருவடியிற்பொலிந்திலங்கப்புடைதொழுவார்புலன்கடன்னை *
ப், பருகியவருளத்தரியபரமபலமளித்தொளித்துப்பாசமெல்லாம் *

எ - று திருவரையினிடத்துப்புலித்தோலுமுடைவாளுநெருங்கிய வீரக்கச் சுஞ்சிறந்துவிளங்கவு நின்பால்வணங்குவாரைம்புலன்களைத்தன்வசப்படுத்தியவரு ளைத்தரியனவென்றென்று மேலானபலத்தைக்கொடுத்தெல்லாப்பாசங்களையுங் கெடுத்திருவினையுநீக்கியருளென்றிரப்பனபோற்பரிபுரமும்பரல்கள்பொருகின்றவீ ரக்கழலும்இரண்டுபாதங்களினும் பற்றியொற்றவும் பொலிந்துவிளங்கவும் எ-று()

நந்தைமுதலிய பசுக்களின் றோற்றமுதலியவற்றை
யெட்டுசெய்யுளாலுணர்த்துகிறார்

விற்றிருக்கும்விமலனதுசன்னிதியில்வெள்விடையும்விளங்குமந்த *
வேற்றினயனந்தைமுதலினைந்துறையுமுயிர்க்கிரக்கமெய்தியீசன் *
றோற்றுவிக்கப்புதலத்திற்றோன்றியெழிற்பாற்கடலிற்றுயரந்தன்னை *
மாற்றிநிலன்வாழ்வார்க்கும்வரங்கொடுக்கும்பரமனருள்வழியினாலே *

எ - று எழுந்தருளியிற்றிருக்கும்விமலனாகிய சிவபெருமானது சன்னிதியி ல்வெள்ளியவிடையேறும்விளங்கியிருக்கும்,அவ்விடையேற்றின்பக்கத்தில் நந்தை

முதலிய பசுக்கள்விரும்பியிருக்கும், அவைகளைச்சிவபெருமான் சிற்றுயிர்க்கிரங்கி ப்பூமியிற்பிறக்கும்படிசெய்த லாலழகினையுடையபாற்கடலிற்பிறந்திவ் வுலகத்தில் வாழ்வார்க்குப் பரமன ருளினபடி துன்பங்களைக் கெடுத்துவரங் களைக்கொடுக் கும் எ - று (ஙஉக)

நந்தைசுபத்திரைசுரபி நற்சுசிலைசுமனையெனநவின்றநாம *
மைந்தினுக்குமுறிகநிறங்காபிலமேகரியவுருவணிகொள்வெண்மை *
சுந்தரத்த தூமிரமேதாமிரமேயெனத்துணிந்துநாமஞ்சொல்லி *
வந்தனைசெய்தவற்றுதித்தவிருமூன்றுமாட்டிடுகவரதற்கென்றும் *

எ - து மேற்கூறிய பசுக்களைந்துக்கு நந்தையென்றுஞ் சுபத்திரையென்று ஞ் சுரபியென்று நல்லசுசிலையென்றுஞ் சுமனையென்றுநாமத்தை யறிவாயாகஅவ ற்றுள் நந்தை கபிலநிறம் சுபத்திரை கருமைநிறம் சுரபி அழகியவெண்மை நிறம் சுசிலை சுந்தரமானதூமிரநிறம் சுமனை தாமிரநிறம் என்றுநிச்சயித்து அதனதநாம ங்களைச்சொல்லிப்பூசைசெய்தவற்றிலுண்டான பால்-தயிர்-நெய்-கோமயம்-கோ சலம் கோரோசனையாகியவாறு பொருளையும் வரதனாகிய சிவபெருமானுக்கென் றுமபிடேகஞ்செய்க எ - று [ஙஉஉ]

வேதாவுங்கரியவனுமாவினதுகோட்டடியின் விளங்கிவாழ்வர் *
கோதாவிமுதற்றீர்த்தங்கோட்டினுதிச்சராசரமுங்கூடிநிற்கு *
மீதானசிரத்தமலன் விமலையதனடுநெற்றிவிசாகனுசி *
மீதானந்தவனிலதனுண்ணுசிதனினுகேசர்விளங்குவாரே *

எ - து பிரமனுந்திருமாலுமப் பசுக்களினதுகொம்பினதடியின் விளங்கிவா ழ்வர் கோதாவிரிமுதலிய தீர்த்தங்களுஞ்சரவசரவுயிர்களுங்கொம்புநுனியிற்கூடி நிற்கும், மேலானசிரசிற்சிவபெருமானு நெற்றிநடுவிற் சத்தியுமூக்குநுனியிற் சண் முகனு மூக்குக்குளிந்திரன் முதலிய தேவர்களும்விளங்கிவாழ்வர் எ - று (ஙஉங)

ஆசகலவிருகன்னநாப்பணச்சுவினிதேவரமர்ந்துவாழ்வர் *
தேசுதுடையபருநிமதியெனத்திறந்தத்திற்செறியும்வாயு *
வோசைபுறுநாவதனில்வருணனுளாமகளோங்கூங்காரநெஞ்சி *
னேசமுறயமனியக்கர்கெண்டதலத்தெந்நாளுநிலவுவாரே *

எ - து குற்றநீங்கும்படி யிரண்டுகன்னநடுவிலச் சுவினிதேவர்கள் விரும்பி வாழ்வார்கள் இரண்டுகண்களிடத்தொளியினையுடைய பருதியுமதியுந் தந்தத்தில்

வாயுவும்பொருந்தும் ஒலிபொருந்துநாவில் வருணனும் முன்னதமாகிய வூங்காரத்தையுடைய நெஞ்சிற்கலைமகளுமணிகளிவிட்டிதிய மருமியக் கருமெக்காலமுமன்புடன்வாழ்வர் எ - று [ஙஉச]

ஒட்டத்திலுதையாத்தமனசந்தியிவையுறையுமுறைவன்கண்டத் *
திட்டுடையயிந்திரனேயிமியிருப்பாருக்கனெனவியம்புந்தேவர் *
வாட்டமிலாச்சாத்தியரேவாழ்வார்களுரமதனிலனிலவாயு *
நிட்டியதாளொருநான்பின்மருத்தென்பர்முழந்தாளினிலவுவாரே *

எ - து உதட்டிலுதையாத்தமனத்துக்குரிய சந்திதேவதைதங்கும், கழுத்தித்பெருமையுடையயிந்திரனிருப்பன் முரிப்பிலருக்கதேவரிருப்பர் மார்பிற்சோர்வில்லாத சாத்தியர்வாழ்வர் நிட்டாநின்றநான்குகாலிலனிலனுகியவாயுவு, முழந்தாளின் மருத்துவரும், வாழ்வர் எ - று [ஙஉரு]

குரத்தினுநிப்பன்னகரேகுடிகொள்வர்காந்திருவர்குரத்தினுப்ப *
